தொல். சொல். கல்., உரை

கழக வெளியீடு, ௧௧அ௪

தொல்காப்பியம் சொல்லதிகாரம்

கல்லாடனார் விருத்தியுரையும் பழைய உரையும்

பண்டித வித்துவான்
சைவப் புலவர் சித்தாந்த நன்மணி
கு சுந்தரமூர்த்தி அவர்கள்
எழுதிய விளக்கவுரையுடன்

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி-6. சென்னை-1.
1964

Ed 1 July 1964

P31,Dx1,13,6
K4

TOLKAPPIAM SOLLATHIKARAM

KALLAADANAR VIRUTTIURAI

&

PAZHAYA VURAI

Appar Achakam, Madras-1.

பதிப்புரை

நஞ்செந்தமிழ் முதுமொழியினமைந்த இலக்கணங்களிற் பழமையானது தொல்காப்பியம் ஒன்றே. இச்சீரிய தொல்காப்பியத்துக்கு உரை கண்டவர் எத்துணையர் என்பதை யாரறிவார்? ஏட்டில் வரைந்து சுவடிகளாக அடுக்கிப் போற்றிக் கற்றுவந்த காலம் அது. அச்சுப்பொறி வந்த பின்னர் அறிஞர் கையகப்பட்ட உரைகளே வெளிவந்தன. இஞ்ஞான்று தொல்காப்பிய வுரையெனத் தோன்றி அச்சிற் பதித்து வெளியிடப்பட்டவை இளம்பூரணம், நச்சினார்க்கினியம், சேனாவரையம், பேராசிரியம், தெய்வச்சிலையம், கல்லாடம் என்பவையே. இவற்றில் இளம்பூரணமே பழமையானது; நூல் முழுவதுக்கும் எழுதப்பட்டது; சிதையாமற் கிடைத்துள்ளது. நச்சினார்க்கினியனார் உரை எழுத்து, சொல், பொருளில் முன்னுள்ள ஐந்து (அகத்திணை, புறத்திணை, களவு, கற்பு, பொருள்) இயல்கள் ஆகிய பகுதிக்கே கிடைத்துள்ளது. எஞ்சிய பொருட்பகுதியாகிய நான்கு (மெய்ப்பாடு, உவமம், செய்யுள், மரபு) இயல்கட்குப் பேராசிரியருரையே கிடைத்துள்ளது. பேராசிரியர் இந்நான்கியல்களுக்குமட்டும் உரைவரைந்து மற்றைப் பகுதிகட்கு உரைவரையாது விடுப்பரோ? நமக்குக் கிடைத்திலது என்றுதான் எண்ண வேண்டும். நச்சினார்க்கினியமும் பேராசிரியமும் இயைந்து ஒருரையாகத் தொல்காப்பிய முழுமைக்கும் அமைந்துள்ளது. இளம்பூரணம், நச்சினார்க்கினியம், பேராசிரியம் என்ற வுரைகள் இங்ஙனம் நிற்க சேனாவரையம், தெய்வச்சிலையம், கல்லாடம் என்ற வுரைகள் காலும் தலையும் இன்றி நடுவடிவு அமைந்ததுபோல நடுநின்ற சொல்லதிகாரத்திற்கே யுரியவுரைப்பகுதிகள் மட்டுங் கிடைத்துள்ளன. ஒருநூலுக்கு உரைவரையும் உரையாசிரியர் முன்னும் பின்னும் விடுத்து நடுப்பகுதிக்குமட்டும் வரைவரோ? வரையார். வரைந்து பின்னர் மறைந்திருத்தல் வேண்டும் என்றே நாம் எண்ணவேண்டும். சிறந்த பகுதி எனச் சொல்லதிகாரத்தையெடுத்துக் கொண்டார் எனச் சிலர் கூறுவர்.

பொருளதிகாரம் செய்யுளியலுக்கு நச்சினார்க்கினியரும் உரைவரைந்துள்ளார். முன்னர் அது மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் வெளியிடப் பெற்றுள்ளது. அதனையும் வித்துவான் சைவப்புலவர் கு. சுந்தரமூர்த்தி அவர்கள் செப்பஞ்செய்து எழுதிய ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் அச்சிடுகின்றோம்.

தொல்காப்பியத்திற்குரிய வுரைகள் எல்லாவற்றையும் திருத்திப் புதுக்கி வெளியிட்டுப் பலரும் இலக்கண நூலறிவு பெறுமாறு செய்வதுடன் உரை வேறுபாடும் ஒற்றுமையும் புலவர் அறிந்து

வித்துவான் வகுப்பு, புலவர் வகுப்பு, மாணவர்கட்குக் கற்பிக்கு முறைக்குத் துணைசெய்ய வேண்டும் என்பது கழகத்தின் நோக்கம். அதற்கியைந்த முறையில் தொல்காப்பிய வுரைகளைத் தனித்தனி பிரித்து எழுத்ததிகாரம் இளம்பூரணம், சொல்லதிகாரம் இளம்பூரணம், பொருளதிகாரம் இளம்பூரணம்; எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியம், சொல்லதிகாரம் நச்சினார்க்கினியம் இவைபோன்ற பெயரிட்டு முறையே ஒவ்வொன்றாக வெளியிட்டு வந்தது வருகின்றது. அம்முறையில் இந்நாள் வெளிவருகின்றது சொல்லதிகாரம் கல்லாடம் என்பது. அக்கல்லாடருரையுடன் பின்னிணைப்பாகப் பழையவுரையொன்றும் இணைக்கப்பட்டுள்ளது. அப்பழையவுரை சொல்லதிகாரத்தின் முதல் மூன்றியல்கட்கே கிடைத்துள்ளது. அதிலும் வேற்றுமை மயங்கியலில் உள்ள இறுதிநூற்பா இரண்டுக்கும் உரை கிடைத்திலது. கல்லாடர் உரையும் உரியியலுக்கு மட்டும் இல்லை.

இக்கல்லாடனார் உரையையும் பின்னிணைத்துள்ள பழைய வுரையையும் பிழையறத்திருத்தியும் புதுக்கியும் தந்தவர் பண்டித, வித்துவான் ,சைவப் புலவர், சித்தாந்த நன்மணி கு. சுந்தரமூர்த்தியவர்களாவர். கல்லாடனார் உரைக்குமுன் ஆராய்ச்சி யுரையும் பழையவுரைக்குமுன் ஆராய்ச்சி யுரையும் வரைந்துதவியவரும் அப்பேராசிரியரே யாவர். ஆராய்ச்சியுரையில் மற்றை யுரைகளினியல்பும், ஒற்றுமையும் வேற்றுமையும், இயைபும் இயைபின்மையும் எடுத்துக்காட்டி விளக்கியிருப்பது மிகவும் பாராட்டத் தக்கதாம்.

கல்லாடனார் உரையும் பெயர்தோன்றாத பழையவுரையும் இயைந்த தொல்காப்பியம் சொல்லதிகாரம் இந்நாள் கழகவாயிலாக வெளியேறுகின்றது. இந்நாள்காறும் வெளிவந்திலவாத புதுமை நூல் இது. சொல்லதிகாரத்திற்குரிய இளம்பூரணம், நச்சினார்க்கினியம், சேனாவரையம், தெய்வச்சிலையம் என்னும் உரைகளோடு ஒப்புநோக்குதற்கும் உயர்வு காண்பதற்கும் இந்நூல் பெரிதும் துணை புரியும் என்பது ஒருதலை. மாணவர் ஆசிரியர் தமிழன்பர் பலரும் வாங்கி வாங்குவித்துக் கற்றுக் கற்பித்து இலக்கணக்கலை முன்னேற்றங் காண்க.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உள்ளுறை

(1)

முழுச்
சொல்லும்
பிழையும்

ஆராய்ச்சி முன்னுரை

சொல்டிஷத வித்துவான், சைவப் புலவர், சித்தாந்த நன்மணி,

கு. சுந்தரமூர்த்தி

பின் தமிழ்ப் பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

"கடையவ னேனைக் கருணையி னாற்கலந் தாண்டு கொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண் டாய்விறல் வேங்கையின்தோல்
உடையவ னேமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேன்எம் பிரான்என்னைத் தாங்கிக்கொள்ளே.

1. முன்னுரை

மொழி ஒரு பேராறு போன்றது. அப்பேராற்றின் கரை போல்வது அதன் இலக்கணம் ஆகும். கரை ஆற்றின் ஓட்டத்தைத் தடை செய்யாது; ஆனால் அவ் வாற்றினை வரம்பில் நிறுத்தி வழிய விடாது பாதுகாக்கும். அதனால் துய்ப்பாரும் இனிது துய்க்க இயலும். இது போன்றதே இலக்கண வரம்புமாகும். அது மொழியின் இனிய செலவைத் தடுக்காது; ஆனால் அதனை ஒரு வரம்பில் நிறுத்தி இயங்கச் செய்யும். இத்தகைய இலக்கண வளம் நிறைந்தது நமது தமிழ் மொழியாகும்.

"மண்ணிடைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ?"

என வீறு கொள்ளும் அளவிற்கு நம் தமிழ்மொழி இலக்கண வளம் பெற்றுள்ளது.

2. தொல்காப்பியம்

இலக்கணம் கூற வந்த நூல்கள் பலவேனும், செறிவும் செம்மையும் சேர்ந்து, அறிவும் அழகும் ஆர்ந்து விளங்கும் நூல் தொல்காப்பியமே ஆகும். இதனோடு ஒருங்கு வைத்து எண்ணுதற்குரிய இலக்கண நூல் இதுகாறும் எழுந்ததும் இல்லை; இனி எழப் போவதும் இல்லை. இத்தகைய சீர்மையும் நீர்மையும் நிறைந்து விளங்கும் நூல், தமிழர்தம் நாகரிகம், கலை, அறிவு இவற்றிற்குப் பெட்டகமாய் விளங்குவதாகும்.

இந்நூல் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று பகுப்பினை உடையது. ஒவ்வொரு பகுப்பும் ஒன்பது ஒன்பது இயல்களை

உடையன். இந்நூலுக்கு உரை எழுதியோர் பலர் எனத் இற்றைக்குக் காணும் பேற்றிற்கு இலக்காக இருப்ப உரைகளே யாகும். அவ்வுரைவருள்ளும் நூல் முழு கிடைக்கும் உரையாய் இருப்பது இளம்பூரணர் உரையே நச்சினார்க்கினியரும், கல்லாடரும் நூல் முழுமைக்கும் எழுதியிருப்பதாகத் தெரியினும் நச்சினார்க்கினியர் உரை பாட்டியல், உவம இயல், மரபியல் ஆகிய மூன்று இயல்களு கிடைத்திலது. கல்லாடர் உரை எழுத்ததிகாரம், பொருளதிகா சொல்லதிகாரத்தில் இடையியல் 13ஆம் நூற்பாவிற்கு மேலு உரியியல், எச்ச இயல்களுக்கும் கிடைத்திலது. சேனாவரையரும தெய்வச்சிலையாரும் சொல்லதிகாரத்திற்கு மட்டுமே உரை செய்துள்ளனர். இதுவன்றிப் பெயர் தெரியாத பழைய உரையாசிரியர் உரை ஒன்றும் உளது. பேராசிரியர் பொருளதி காரத்தில் உள்ள பின் நான்கு இயல்களுக்கு மட்டுமே உரை செய்துள்ளார். இவர் பொருளதிகார முற்பகுதிக்கும் உரை செய்திருக்கலாம் எனத் தெரிகிறது. ஆயினும் இதுகாறும் கிடைத்திலது.

3. சொல்லதிகாரத்திற்கு மட்டும் உரைகள் பல தோன்றியிருப்பது ஏன்?

இற்றைய நிலையில் சொல்லதிகாரத்திற்கு மட்டுமே அறுவர் உரைகள் உள்ளன. அவை வருமாறு:—

(1) இளம்பூரணர்
(2) சேனாவரையர்
(3) நச்சினார்க்கினியர்
(4) தெய்வச்சிலையார்
(5) கல்லாடர்
(6) பழைய உரை

இவர்களுள் இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் ஏனைய அதிகாரங் களுக்கும் உரை எழுதி உள்ளனர். கல்லாடர் ஏனைய அதிகாரங் களுக்கும் உரை எழுதியிருப்பதாகத் தெரியினும், அது கிடைத்திலது. சேனாவரையரும் தெய்வச்சிலையாரும் இவ்வதிகாரத் திற்கு மட்டுமே உரை எழுதியுள்ளனர். பெயர் தெரியாத பழைய உரைகாரரும் இவ்வதிகாரத்திற்கு மட்டுமே உரை செய்தனர் எனத் தெரிகிறது.

இங்ஙனம் சொல்லதிகாரத்திற்கு மட்டும் உரைகள் பல்கக் காரணம் என்னை? இதனையும் ஒரு சிறிது ஆராய்வாம்.

(1) மக்கள் முதல்முதல் பேசத் தொடங்கிய பொழுது முழுச் சொற்களையே பயன்படுத்தினர். பின்புதான் தாம் சொல்லும் சொல்லிற்கு உறுப்பாகிய எழுத்தினையும், அதன் இயல்பினையும் அறியலாயினர். எனவே முதலில் தோன்றியது சொல்லே.

(2) குழந்தைகள் இன்றும் சொல்லாக உச்சரித்துப் பழகிய பின்புதான், எழுத்தினை உணர முற்படுகின்றன.

(3) வட மொழியில் பொருள் இலக்கணம் இன்று. எழுத்தும், சொல்லுமே உள. அவற்றிலும் சொல்லிலக்கணத்தையே "வியாகரணம்" என வடமொழியாளர் கூறுகின்றனர். எனவே வடமொழியிலும் சொல்லிலக்கணமே சிறந்ததெனத் தெரிகிறது.

(4) "எழுத்தினால் ஆக்கப்படுவதே சொல் எனினும், சொல் போல எக்காலத்தும் எழுத்துத் தோன்றி நிற்றல் இன்மையின் சொல்லே சிறந்ததாம்" என்பர் நேமிநாத உரையாசிரியர்.

(5) எழுத்ததிகாரம் எழுத்துக்களின் பெயர், முறை, தொகை, சொற்கள் ஒன்றோடு ஒன்று புணரும் முறைமை ஆகிய இவற்றை ஆராய்கின்றது. பொருளதிகாரமோ, பண்டைக்கால அகப்புற வாழ்வினையும், அவ்வாழ்வில் நிகழும் உள்ளத்துணர்ச்சிகளைத் தெள்ளிதின் விளக்கும் மெய்ப்பாடுகளையும், செய்யுள் இலக்கணத்தையும் வழக்குச் செய்யுள் ஆகியவற்றின் மரபினையும் கூறுகின்றது. இவற்றில் எல்லாம் கருத்துவேறுபாடுகள் மிகுதியாக நிகழக் காரணம் இல்லை. ஆனால் சொல்லதிகாரத்திலோ, நான்கு வகைச் சொற்கள், அவற்றின் இலக்கணம், எழுவகை வழு, வழக்கு, செய்யுள் பற்றிய மரபு ஆகிய இவைகள் கூறப்படுகின்றன. மக்கள் தத்தம் கருத்தை ஒருவர்க்கொருவர் பரிமாறிக் கொள்ளுதற்குக் கருவியாக விளங்கும் இச்சொல் நடையிலேயே கருத்து வேற்றுமை மிக்கிருத்தல் இயல்பாம். ஆதலின் இவ்விலக்கணத்திற்கே பற்பல அறிஞர்களும் தத்தம் கருத்துக்களைத் தெரிவிக்க உரை எழுதினர் எனலாம்.

(6) அன்றியும் இன்றைய இலக்கண நூல்களில், நேமிநாதம், இலக்கணக் கொத்து, பிரயோக விவேகம் ஆகியனவும் இச்சொல் பற்றியே விரிவான இலக்கணத்தை இயம்பின.

இவ்வாற்றான் சொல்லிலக்கணமே சிறப்புடையது எனத் தெரியலாம். இதுபற்றியே இவ்வதிகாரத்திற்கு உரைகளும் பல வாயின போலும் எனக் கருத இடந்தருகின்றது.

4. கல்லாடர்

(க) இப்பெயருடையார் மூவர் உளர்.

முன்னவர் :—இவர்களுள் முன்னவர் கடைச்சங்க காலத்தினர். இவரைப் பற்றிய வரலாறு ஒன்றும் தெரிந்திலது. இவர் பாடிய செய்யுட்கள் வரலாற்றுக் குறிப்புடையன. இவர் இயற்றிய பாடல்கள் அகநானூற்றில் ஏழும், குறுந்தொகையில் இரண்டும், புறநானூற்றில் ஐந்தும், திருவள்ளுவ மாலையில் ஒன்றுமாக மொத்தம் பதினறு பாடல்களாகும்.

"இருடிகள் அல்லா ஏனையோராகிய மனத்தது பாடவும், சாவவும் கெடவும் பாடல் தரும் கபில பரண கல்லாட மாமூலப் பெருந்தலைச் சாத்தர் இத்தொடக்கத்தோராலும், பெருஞ்சித்திரனர் தொடக்கத்தோராலும் ஆரிடச்செய்யுள் போல மிகவும் குறையவும் பாடப்படுவன எனக் கொள்க" எனவரும் யாப்பருங்கல விருத்தி (93 நூற்பா வுரை)யில் குறிக்கப்படும் கல்லாடர் இவரே யாவர்.

அடுத்தவர் :—இவர் கல்லாடம் என்னும் அரிய அகப்பொருள் நூலைச் செய்தவர். இந்நூல் அகப்பொருள் துறை அமைந்த நூறு அகவற் பாக்களால் ஆகியது. இதனைக் "கல்லாடர் செய்பனுவல் கல்லாட நூறு நூல்" என்னும் வாக்காலும் நன்கறியலாம். இவர் இந்நூலின் தொடக்கத்தே செந்தமிழ்ப் பரமாசாரியனுகிய செந்திற் பெருமானையும், விநாயகப் பெருமானையும் வழிபட்டுத் தொடங்குதலானும், இந்நூலானும் இவர் சைவர் என்பதை நன்கறியலாம். இவர் துறவறத்தவராவர். இதனை,

" வாய்ந்தபொருட் கொருபொருளாய்க் கலைவாணிக்
கருள்கொழிக்கும் அன்பாய்ப் பாரின்
ஆய்ந்தமுது தமிழ்வடித்துக் கல்லாட
மெனஒருநூல் அருளி யிட்டார்
தேய்ந்தமதிச் சடைப்பரமர் கருணைபெறச்
சங்கமுது செல்வர் வாழ்த்தக்
காய்ந்தபுலன் அடக்கியுயர் பெருஞானம்
பழுத்தருள்கல் லாட னரே "

என்னும் பாடலால் நன்கறியலாம். பதினோராம் திருமுறையில் உள்ள "கண்ணப்பதேவர் திருமறம்" என்னும் நூலை அருளியவரும்

" சமயக் கணக்கர் மதிவழி கூறு(து)
உலகியல் கூறிப் பொருளிது வென்ற
வள்ளுவன்" (கல்-15)

எனத் திருவள்ளுவப் பெருந்தகையைப் பாராட்டியவரும் இவரே யாவர். இவரே தொல்காப்பியத்திற்கு உரை எழுதியவர் என்

பாரும் உளர். இவர் கி. பி. 6 அல்லது 8 ஆம் நூற்றாண்டினர் எனத் தெரிதலானும், தொல்காப்பிய உரையாசிரியர் ஆகிய கல்லாடர் கி. பி. 12 ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவர் ஆதலினானும் வேறாவர் என்பதே தெளிவாம்.

மூன்றாமவர் :—இவரே நம் உரையாசிரியர் ஆவர். இவரைப் பற்றிய வரலாறு ஒன்றும் தெரிந்திலது. கல்லாடம் என்பது ஓர் ஊர் என்றும், அங்கு இறைவன் உமையொரு பாகனாய் இனிதிருந்து அருளினன் என்றும் திருவாசகத்தால் அறிகின்றோம்.

"கல்லா டத்துக் கலந்தினி தருளி
நல்லா ளோடு நயப்புற எய்தியும்" (கீர்த்தித் திருஅகவல்-11-12)

என்பது அத்திருவாசகப் பகுதியாகும். இத்திருப்பதி பாண்டி நாட்டில் உள்ளது என்ப. இஃது ஒரு சிவத்தலம். இவ்வூரில் பிறந்தவராதல் பற்றி இவர் இப்பெயர் பெற்றனரோ? அன்றிக் கல்லாடர் என்னும் பெயருடையார் இருவர் இவருக்கு முன்னிருந்தனர் ஆதலானும், அவர்கள் இருவரும் புகழ்பட வாழ்ந்த பெருமக்கள் ஆதலானும், அவர்கள் நினைவாக இவருக்கும் இயற்பெயராகப் பெற்றோர்களால் இடப்பட்டதோ? அறியோம்.

(உ) நாடு :—"செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்" என்னும் நூற்பாவில் இளம்பூரணர் செப்பு வினா ஆகிய ஈரிலக்கணத்தினும் வழுவாது வந்தமைக்கு நும் நாடு யாது எனில் தமிழ்நாடு என்றல் என்ற எடுத்துக்காட்டினைக் காட்டினர். ஆனால் கல்லாடரோ இதே நூற்பாவில், செப்பு வினா என்றவற்றுள், செப்பு மறுத்தலும் உடன்படுதலும் என இருவகைப்படும் என்றும், 'நும் நாடு யாது? என்றாற்குப் பாண்டி நாடு' என்றாற் போல்வன இவ்விரண்டினுள் அடங்காது எனினும் ஒரு வகையான் அடக்கிக் கொள்ளப்படும் என்றும் கூறியுள்ளார். ஆதலின் இவர் பாண்டி நாட்டவரோ? என ஐயுற இடன் உள்ளது.

(௩) சமயம் :—"தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவி" என்னும் பகுதிக்கு இளம்பூரணர் எடுத்துக்காட்டியவாறே இவரும் 'வாசுதேவன் வந்தான், திருவினாள் வந்தாள்' எனக் காட்டுகின்றார். ஆனால் 'அக' ஆம் நூற்பாவில் 'நிலை' என்பதற்கு எடுத்துக்காட்டுத் தருங்கால், பிற உரையாசிரியரினின்றும் முற்றிலும் வேறுபட எடுத்துக்காட்டுகின்றார். 'நிலை என்பதற்குச் சாத்தனது நிலை' என இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் ஆகிய மூவரும் உதாரணம் காட்டினர். தெய்வச்சிலையார் 'நிலை என்பது அவரவர் நிலைமை குறித்து வருவது என்றும், அது சாத்தனது இல்வாழ்க்கை, சாத்தனது தவம் எனவரும்' என்றும் காட்டினார். ஆனால்

4. கல்லாடர்

(க) இப்பெயருடையார் மூவர் உளர்.

முன்னவர் :—இவர்களுள் முன்னவர் கடைச்சங்க காலத்தினர். இவரைப் பற்றிய வரலாறு ஒன்றும் தெரிந்திலது. இவர் பாடிய செய்யுட்கள் வரலாற்றுக் குறிப்புடையன. இவர் இயற்றிய பாடல்கள் அகநானூற்றில் ஏழும், குறுந்தொகையில் இரண்டும், புறநானூற்றில் ஐந்தும், திருவள்ளுவ மாலையில் ஒன்றுமாக மொத்தம் பதினைறு பாடல்களாகும்.

"இருடிகள் அல்லா ஏனையோராகிய மனத்தது பாடவும், சாவவும் கெடவும் பாடல் தரும் கபிலபரண கல்லாட மாமூலப் பெருந்தலைச் சாத்தர் இத்தொடக்கத்தோராலும், பெருஞ்சித்திரனர் தொடக்கத்தோராலும் ஆரிடச்செய்யுள் போல மிகவும் குறையவும் பாடப்படுவன எனக் கொள்க" எனவரும் யாப்பருங்கல விருத்தி (93 நூற்பா வுரை)யில் குறிக்கப்படும் கல்லாடர் இவரே யாவர்.

அடுத்தவர் :—இவர் கல்லாடம் என்னும் அரிய அகப்பொருள் நூலைச் செய்தவர். இந்நூல் அகப்பொருள் துறை அமைந்த நூறு அகவற் பாக்களால் ஆகியது. இதனைக் "கல்லாடர் செய்பனுவல் கல்லாட நூறு நூல்" என்னும் வாக்காலும் நன்கறியலாம். இவர் இந்நூலின் தொடக்கத்தே செந்தமிழ்ப் பரமாசாரியனுகிய செந்திற் பெருமானையும், விநாயகப் பெருமானையும் வழிபட்டுத் தொடங்குதலானும், இந்நூலானும் இவர் சைவர் என்பதை நன்கறியலாம். இவர் துறவறத்தவராவர். இதனை,

" வாய்ந்தபொருட் கொருபொருளாய்க் கலைவாணிக்
கருள்கொழிக்கும் அன்பாய்ப் பாரின்
ஆய்ந்தமுது தமிழ்வடித்துக் கல்லாட
மெனஒருநூல் அருளி யிட்டார்
தேய்ந்தமதிச் சடைப்பரமர் கருணைபெறச்
சங்கமுது செல்வர் வாழ்த்தக்
காய்ந்தபுலன் அடக்கியுயர் பெருஞானம்
பழுத்தருள்கல் லாட ஞரே "

என்னும் பாடலால் நன்கறியலாம். பதினோராம் திருமுறையில் உள்ள "கண்ணப்பதேவர் திருமறம்" என்னும் நூலை அருளியவரும்

" சமயக் கணக்கர் மதிவழி கூறு(து)
உலகியல் கூறிப் பொருளிது வென்ற
வள்ளுவன்" (கல்-15)

எனத் திருவள்ளுவப் பெருந்தகையைப் பாராட்டியவரும் இவரே யாவர். இவரே தொல்காப்பியத்திற்கு உரை எழுதியவர் என்

பாரும் உளர். இவர் கி. பி. 6 அல்லது 8 ஆம் நூற்றுண்டினர் எனத் தெரிதலானும், தொல்காப்பிய உரையாசிரியர் ஆகிய கல்லாடர் கி. பி. 12 ஆம் நூற்றுண்டுக்குப் பிற்பட்டவர் ஆதலினுனும் வேருவர் என்பதே தெளிவாம்.

மூன்றுமவர் :—இவரே நம் உரையாசிரியர் ஆவர். இவரைப் பற்றிய வரலாறு ஒன்றும் தெரிந்திலது. கல்லாடம் என்பது ஓர் ஊர் என்றும், அங்கு இறைவன் உமையொரு பாகனுய் இனிதிருந்து அருளினன் என்றும் திருவாசகத்தால் அறிகின்ருேம்.

"கல்லா டத்துக் கலந்தினி தருளி
நல்லா ளோடு நயப்புற எய்தியும்" (கீர்த்தித் திருஅகவல்-11-12)

என்பது அத்திருவாசகப் பகுதியாகும். இத்திருப்பதி பாண்டி நாட்டில் உள்ளது என்ப. இஃது ஒரு சிவத்தலம். இவ்வூரில் பிறந்தவராதல் பற்றி இவர் இப்பெயர் பெற்றனரோ? அன்றிக் கல்லாடர் என்னும் பெயருடையார் இருவர் இவருக்கு முன்னிருந்தனர் ஆதலானும், அவர்கள் இருவரும் புகழ்பட வாழ்ந்த பெருமக்கள் ஆதலானும், அவர்கள் நினைவாக இவருக்கும் இயற்பெயராகப் பெற்ருேர்களால் இடப்பட்டதோ? அறியோம்.

(உ) நாடு :—"செப்பும் வினவும் வழாஅல் ஓம்பல்" என்னும் நூற்பாவில் இளம்பூரணர் செப்பு வினு ஆகிய ஈரிலக்கணத்திலும் வழுவாது வந்தமைக்கு நும் நாடு யாது எனில் தமிழ்நாடு என்றல் என்ற எடுத்துக்காட்டினைக் காட்டினர். ஆனுல் கல்லாடரோ இதே நூற்பாவில், செப்பு வினு என்றவற்றுள், செப்பு மறுத்தலும் உடன்படுதலும் என இருவகைப்படும் என்றும், 'நும் நாடு யாது?' என்றற்குப் பாண்டி நாடு' என்றற் போல்வன இவ்விரண்டினுள் அடங்காது எனினும் ஒரு வகையான் அடக்கிக் கொள்ளப்படும் என்றும் கூறியுள்ளார். ஆதலின் இவர் பாண்டி நாட்டவரோ? என ஐயுற இடன் உள்ளது.

(ங) சமயம் :—"தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவி" என்னும் பகுதிக்கு இளம்பூரணர் எடுத்துக்காட்டியவாறே இவரும் 'வாசுதேவன் வந்தான், திருவினுள் வந்தாள்' எனக் காட்டுகின்ருர். ஆனுல் 'அக' ஆம் நூற்பாவில் 'நிலை' என்பதற்கு எடுத்துக்காட்டுத் தருங்கால், பிற உரையாசிரியரினின்றும் முற்றிலும் வேறுபட எடுத்துக்காட்டுகின்ருர். 'நிலை என்பதற்குச் சாத்தனது நிலை' என இளம்பூரணர், சேனுவரையர், நச்சினுர்க்கினியர் ஆகிய மூவரும் உதாரணம் காட்டினர். தெய்வச்சிலையார் 'நிலை என்பது அவரவர் நிலைமை குறித்து வருவது என்றும், அது சாத்தனது இல்வாழ்க்கை, சாத்தனது தவம் எனவரும்' என்றும் காட்டினுர். ஆனுல்

இவ்வுரையாசிரியரோ 'நிலை' என்பதற்குப் பெண்ணுகைத்துப் பெருஞ் சங்கரனுரது நிலை என்றும், இஃது ஒன்றிய தற்கிழமை' என்றும் உரைத்தனர். ஒன்றியதற்கிழமைக்கு இவ்வெடுத்துக்காட்டு மிகவும் பொருத்தமாகும். எனவே இவ்வெடுத்துக்காட்டின் மூலம் இவரைச் 'சைவர்' எனத்துணியின் இழுக்கில்லை.

(ச) காலம்:—இவர் தாம் உரைக்கும் உரைகளில் பல்வேறு இடங்களில் இளம்பூரணர் உரையைத் தழுவியும், பல்வேறு இடங் களில் நச்சினார்க்கினியர் உரையைத் தழுவியும் உரைக்கின்றார். இதனை யாம் விளக்கவுரையில் அவ்வந் நூற்பாக்களிலும் எடுத்துக் காட்டியுள்ளோம். ஆண்டுக் காண்க.

ஆதலின், இவர் நச்சினார்க்கினியருக்குப் பிற்பட்டவர் என நன்கு அறியலாம். அன்றியும் "ஒன்றாக நல்லது கொல்லாமை" என்ற திருக்குறளில் பரிமேலழகர் உரையில் 'முற்கூறியதிற் பிற்கூறி யது வலியுடைத் தாகலானும்' என்ற தொடர் காணப்படுகிறது. அதனை இவ்வுரைகாரர் கடுகூஆம் நூற்பாவுரையில் அப்படியே எடுத்தாளுகின்றார். இதனை விளக்கவுரையிலும் எடுத்துக்காட்டி யுள்ளோம். பரிமேலழகர் காலம் கி. பி. 13-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும். நச்சினார்க்கினியர் காலம் கி. பி. 13-ஆம் நூற் றாண்டின் இறுதி அல்லது 14 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாகும். எனவே இவர்களது காலத்திற்குப் பிற்பட்டவர் கல்லாடர் என்பதை நன்கறியலாம்.

சுப்பிரமணிய தீட்சிதர் தாம் இயற்றிய 'பிரயோக விவேகம்' என்னும் நூலில், 22 ஆம் நூற்பாவில், "மக்கட் சுட்டு என்பதனைக் கல்லாடரும் பின் மொழியாகு பெயராய் நின்ற இருபெயரொட்டுப் பண்புத் தொகை என்பர்" என இவ்வுரையாசிரியரைக் குறிக்கின்றார். இவரது காலம் கி. பி. 17 ஆம் நூற்றாண்டு ஆகும். ஆகவே இவரது காலத்திற்கும் முற்பட்டவர் என அறியலாம்.

எனவே இவரது காலம் கி. பி. 14 ஆம் நூற்றாண்டிற்கும் 17 ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலம் என அறியலாம். எனினும் இவரது காலம் மிகப் பிந்தியது எனக் கூறுதற்கில்லை. **ஆதலின் இவர் கி.பி. 14 அல்லது 15 ஆம் நூற்றாண்டினர் ஆகலாம்.**

தெய்வச்சிலையாரும், நச்சினார்க்கினியரை அடுத்து வாழ்ந்த வரே யாவர். எனினும் தெய்வச்சிலையாரும் கல்லாடரும் ஒருவர்க் கொருவர் பெயர் கூறி மறுத்தோ, அன்றித் தழுவியோ உரை செய் திலர். ஆதலின் அவ்விருவருள் முற்பட்டவர் யாவர் பிற்பட்டவர் யாவர்? எனத் தெரிதற்கில்லை.

(ரு) **தொல்காப்பியத்திற்கு உரை கண்டமை**:—இவர் தொல் காப்பியத்தையும், அதற்குள்ள இளம்பூரணர், சேனவரையர், நச்சினார்க்கினியர் ஆகியோரின் உரைகளையும் நன்றாகக் கற்றவர் ஆவர். அதனை இவர்தம் உரையால் நன்கறியலாம். இவர் தொல் காப்பியம் முழுமைக்கும் உரை எழுதியுள்ளார் எனத் தெரிகிறது.

> "ஒல்காப் பெருமைத் தொல்காப் பியத்திற்கு
> உரையிடை யிட்ட விரகர்கல் லாடர்"

எனவரும் தொடரால் இதனை நன்கறியலாம். எனினும் இது பொழுது இவர் உரை சொல்லதிகாரத்திற்கு மட்டுமே காணப்படு கிறது. அதிலும் இடையியல் 13 ஆம் நூற்பாவரையுமே உளது.

இதனினும் காலத்தால் முற்பட்ட உரைகளெல்லாம் இனிது இருக்கவும் இவ்வுரை மட்டும் இத்துணைச் சிதைந்துவிட்டமைக்குக் காரணம் தெரிந்திலது. இவ்வுரை முழுதும் கிடைத்தற்கியலாமல் போனது பெரிதும் வருந்தத்தக்கதாகும். இவ்வுரையைக் 'கல் லாடனார் விருத்தியுரை' எனவும் வழங்குவர்.

5. உரை நலன்

இவர்தம் உரை இளம்பூரணர், நச்சினார்க்கினியர் உரைகளைத் தழுவிச்செல்வது ஆதலின், நடையும் அவர்தம் நடையையே ஒட்டிச் செல்கின்றது. அவர்கள் உரையைப் பல்வேறிடங்களுள் தழுவிச் செல்லினும், அவ்விருவர் தம் உரையினும், சேனவரையர் உரையினும் காணப்படாத பல புதிய ஆய்வுரைகளும், விளக்கங்களும் இவர் உரையில் உள்ளன என்பதில் எத்துணையும் ஐயமின்று. அங்ஙனம் புதியனவாக உரைக்கும் உரைகளை மட்டும் ஈண்டுக் காட்டுதும்.

(அ) புதிய விளக்கங்கள்:

(1) "செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்" என்னும் நூற் பாவில் 'வழாஅல்' என்பதன் சொல் முடிபினை விளக்குகின்றார். அது வருமாறு:—

"'வழாஅல்' என்பது, வழுவி யென்னுஞ் செய்தென் எச்சத்து எதிர்மறையாகிய வழாமல் என்னுஞ் சொல், குறைக்கும் வழிக் குறைத்தல் என்பதனால் இடைநின்ற மகரம் குறைந்து நின்றதென வுணர்க."

(2) இந்நூற்பாவில் உற்றதுரைத்தல், உறுவது கூறல் என்று மட்டுமே பிறர்கூற, இவர் 'உறுகின்றது கூறல்' என்ற ஒன்றும் கூறி, அதுவும் உற்றதுரைத்தலுள் அடங்கும் என்றனர்.

(3) இயற் பெயரும், சுட்டுப் பெயரும் ஒருங்கு வரும்வழி இயற்பெயரின் பின்னரேயே சுட்டுப் பெயரைச் சொல்ல வேண்டும் என்றும், இது வழக்கிற்குப் பொருந்தும் என்றும், செய்யுளாயின் சுட்டுப்பெயர் முற்கிளக்கவும்படும் என்றும் கூறினர் தொல்காப்பியர். இதனை ௩௮, ௩௯ ஆம் நூற்பாக்களால் அறியலாம். செய்யுளில் சுட்டுப்பெயராயின் முற்கிளக்கவும்படும் என்பதற்குப் பிறஉரையாசிரியர்கள் எல்லாம் எடுத்துக்காட்டுக் காட்டி விளக்கினர். இவரும் அவ்வெடுத்துக்காட்டினையே கூறினர். எனினும் இவ்வுரையாசிரியர் மட்டுமே இங்ஙனம் செய்யுளாயின் முற்கூறினும் அமையும் என்றற்குக் காரணம் என்ன என்பதை ஆய்ந்து எழுதுகின்றார். அது வருமாறு:—

"இதனாற் சொல்லியது முற்கூறலாகாது எனப்பட்ட சுட்டுப்பெயர் மொழிமாற்றியும் பொருள் கொள்ளும் நயம் செய்யுட்கண் உண்மையான் அதனகத்தாயின் அமையும் என்று நேர்ந்தவாறாயிற்று."

இக் கருத்துப் பெரிதும் பாராட்டுதற்குரியதாகும்.

(4) வேற்றுமை மயங்கியலுள் கூறிய கருத்துக்களை ஒருங்கு தொகுத்துக் கூறும் சிறப்புப் பிறர் உரையில் காணாததாகும். அது வருமாறு:—

இவ்வோத்து என்ன பெயர்த்தோ எனின், உருபும் பொருளும் உடன் மயங்குதலும், ஒருவழி உருபே மயங்குதலும், ஒன்றற்குரியதனோடு ஒன்று மயங்குதலும், இரண்டு ஒத்து மயங்குதலும், ஒரு பொருண்மை ஒன்றற்கே உரியதாகாது பலவற்றோடு மயங்குதலும், ஓர் உருபு ஓர் உருபோடு மயங்குதலும், ஓர் உருபு பல உருபோடு மயங்குதலும் ஒன்றனது ஒரு பொருளோடு ஒன்று மயங்குதலும், ஒன்றனது பல பொருளோடு ஒன்று மயங்குதலும், ஒன்றற்குரிமை பூண்டு எடுத்தோதின பொருள்வழி மயங்குதலும், ஓதாத பொருள்வழி மயங்குதலும், ஒன்று தன் மரபாய் மயங்குதலும், இலக்கண வழக்குள்வழி மயங்குதலும், இலக்கணமில்வழி மயங்குதலும், மயக்க வகையான் மயங்குதலும், சொல்லுதல் வகையான் மயங்குதலும், ஒன்றனோடு பொருள் முடிந்து தொடர்ந்தடுக்கி மயங்குதலும், ஒன்றனோடு பொருள் முடியாது தொடர்ந்தடுக்கி மயங்குதலும், தொகையுள் மயங்குதலும், தொகையில் மயங்குதலும், உருபு வேற்றுமையாய் மயங்குதலும், உருபும் உருபும் மயங்குதலும், என்று இன்னோரன்ன வேற்றுமை மயக்கம் பல கூறலின் "வேற்றுமைமயங்கியல்" என்னும் பெயர்த்தாயிற்று.

(5) நான்கு சொற்கும் உரிய பொது இலக்கணத்தைக் கிளவியாக்கத்தில் கூறி, அடுத்து வேற்றுமை இயலில் பெயரது

இலக்கணத்தைக் கூறவந்த ஆசிரியர், இயைபுபட்டமையான் வேற்றுமை இலக்கணத்தையும், அதனது மயக்கத்தையும், சிறப்பில்லா விளி வேற்றுமையையும், முறையே வேற்றுமை இயல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு ஆகிய மூன்று இயல்களிலும் கூறி, அடுத்துப் பெயர், வினை, இடை, உரி ஆகியவற்றின் இலக்கணங்களை அவ்வவ் வியல்களிலும், அவற்றுள் உணர்த்தப்படாது எஞ்சி நின்றனவற்றை எச்சவியலிலும் கூறியுள்ளார் என்பர் இளம்பூரணர். கல்லாடரும் இக்கருத்தினையே தழுவினும், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு ஆகிய மூன்று இயல்களும், வேற்றுமையிலக்கணம் கூறவந்தன என்பதை விலக்கி அவையும் பெயரது இலக்கணமே கூறவந்தன என விளக்குகின்றார். அவர் உரைக்குமாறு :—

"மேலோத்தினோடு இவ்வோத்தியைபு என்னையோ எனின், மேல் ஒத்தினுள் நான்கு வகைப்பட்ட சொற்களையும் பொருள்கள் மேலாமாறு சொல்லிப் போந்தார். அவற்றுள் முதலது பெயர்ச்சொல்; அதற்கு இலக்கணம் உணர்த்திய எடுத்துக் கொண்டார் என்பது.

யாங்ஙனம் உணர்த்தினரோ எனின், எல்லாப் பெயர்களும் எழுவாயாகிப் பயனிலை கோடலும், ஒருவழி எழுவாயாகாது வேறோர் நிலைமையவாய் நிற்றலும், உருபேற்றலும், ஒருவழிச் சில் பெயர் உருபேலாது நிற்றலும், காலந் தோன்றாமை நிற்றலும், ஒருவழித் தொழிற் பொருளொடு கூறியக்கால் காலந் தோற்றி நிற்றலும், விளியேற்று நிற்றலும், சில பெயர் விளியாது நிற்றலும், இன்னோரன்ன பிறவும் பெயரது இலக்கணமென உணர்த்தினர் என்பது."

இந்நுண்மை பாராட்டுதற் குரியதாகும்.

(ஆ) முறைவைப்புக் கூறுவதில் அருமை :

இன்னும் இவர் முறைவைப்புக் கூறுவதில் மிகமிகச் சிறந்தவர் என்பதைப் பல்வேறு இடங்களில் அறியலாம். பிறர் கூறிய இடங்களில் இவரும் கூறி அவர்களினும் சிறப்புப் பெற்றதும் காணலாம்; பிறர் முறைவைப்பினைக் கூறாதொழிய இவர் மட்டுமே கூறிய இடங்களையும் காணலாம். இம்முறையில் இவர் கூறிய இடங்களை ஆராய்வோம்.

(1) "அஆ வஎன வரூஉம் இறுதி
அப்பால் மூன்றே பலவறி சொல்லே."

என்னும் நூற்பாவில், இவ் வீறுகளை இம் முறையே கூறுதற்குரிய காரணத்தைத் தொல்காப்பிய உரையாசிரியர்கள் எவரும் ஆய்ந்திலர். இவ்வுரையாசிரியர் மட்டுமே இதனை விளக்குகின்றார். அது வருமாறு:—

"அகரம் மூன்று காலமும் வினைக்குறிப்பும் கோடலின் முன் வைக்கப்பட்டது. ஆகாரம் எதிர்காலமாகிய ஒரு காலமே கோடலானும், எதிர்மறைவினைக்கண் அல்லது வாராமையானும் அதன்பின் வைக்கப்பட்டது. வகரமும் அகரமென அடங்குமேயெனினும் அவ் அகரம் போல மூன்று காலத்தும் வினைக்குறிப்பினும் வாராது உண்டல், தின்றல் இவை முதலாகிய தொழில் தொறும் உண்குவ, தின்குவ என எதிர்காலம் பற்றி வேறோர் வாய்பாட்டான் வருதலான் அவ்வகரத்தோடு அடங்கா நிலைமைச் சிறப்புடைய அகரத்தை முன்கூறி, இதனை அதன்பின் வைத்தார் என்பது."

(2) "செப்பும் வினவும் வழாஅல் ஓம்பல்." இந்நூற்பாவில், செப்பு வினா ஆகிய இவற்றில், செப்பினை முற்கூறியதற்குரிய காரணத்தை நச்சினார்க்கினியரும், தெய்வச்சிலையாரும் கூறினும், இவர் கூறுவதே விரிந்ததும் முடிந்ததும் ஆகும். அது வருமாறு:—

"செப்பு முற்கூறிய காரணம், செப்பு, ஆசிரியன் கண்ணதாகலானும், வினாவினை யறிவிப்பது அதுவாகலானும், வினா இன்றியும் அது நிகழுமாகலானும், வழூஉப் பன்மை அதன் கண்ணது ஆகலானும் முற்கூறப்பட்டது."

(3) விரவு வினையின் பெயரும், முறையும், தொகையும் கூறும் நூற்பாவாகிய,

"முன்னிலை வியங்கோள் வினையெஞ்சு கிளவி
இன்மை செப்பல் வேறென் கிளவி
செய்ம்மன செய்யும் செய்த என்னும்
அம்முறை நின்ற ஆயெண் கிளவியும்" (வினையியல்—24)

என்னும் நூற்பாவில் அவ் வெட்டுச் சொற்களும் அம்முறையே வைத்ததற்குரிய காரணத்தைச் சேனாவரையர் விளக்குவர். அம்முறை வைப்பினையே இவ்வுரையாசிரியர் தழுவியுரைப்பினும், இவர் கூறும் முறைவைப்பு அதனினும் சற்று விரிந்தும் சிறந்தும் உளதாதலை அவர் கூறும் முறைவைப்பினோடு, இவர் கூறும் முறை வைப்பினையும் ஒத்து நோக்குவார்க்கு நன்கு விளங்கும்.

(4) வினையெச்ச வாய்பாடுகள் கூறும்,

"செய்து செய்யூச் செய்பு செய்தெனச்
செய்யியர் செய்யிய செயின்செயச் செயற்கென
அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி" (வினையியல்-30)

என்னும் நூற்பாவில் அவ்வாய்பாடுகள் அம்முறையே வைத்தற்குரிய காரணத்தைப் பிற உரையாசிரியர்கள் எவரும் ஆய்ந்திலர். இவ்வுரையாசிரியர் மட்டும் தம் நுண்மாண் நுழைபுலத்தால் அதனைச் செவ்விதின் விளக்கியுள்ளனர்.

அது வருமாறு:—

"செய்தென்பது முதலாகச் செய்தென என்பது ஈறாக அந்நான்கும் இறந்த காலத்தவாகலான் முன்னே உடன் வைக்கப் பட்டன. அவற்றுள் செய்து என்பது பெருவழக்கிற்றாகலின் அவற்றுள்ளும் முன் வைக்கப்பட்டது. அவற்றுள் செய்தென என்பது அவற்றிற்கு எல்லாம் சிறு வழக்கிற்று ஆதலானும், பிற வினையும் கோடலானும் பின் வைக்கப்பட்டது. இனிச் செய்யியர் என்பது முதலாகச் செயற்கு என்பது ஈறாக ஐந்தும் எதிர்காலத்த வாகலானும், பிற வினையுங் கோடல் உண்மையானும், பிறவினையுங் கோடலுடைய 'செய்தென' வினையின் பின்னர் உடன் வைக்கப் பட்டன. அவ் வைந்தும் எதிர்காலத்தவேனும் செய்யியர் செய்யிய என்னும் இரண்டும் வாய்பாட்டு வேற்றுமையல்லது பொருள் வேற்றுமை இன்மையின் உடன் வைக்கப்பட்டன. செயின் என்பது வாய்பாட்டு வேற்றுமையோடு பொருள் வேற்றுமையும் உடைமையின் அவற்றின் பின்னர் வைக்கப்பட்டது. செய என்பது எதிர்காலத்ததே யன்றிப் பிறகாலத்துஞ் சிறுபான்மை வருதலான் அதன்பின் வைக்கப்பட்டது. செயற்கு என்பது அவைபோல வழக்குப் பயிற்சி இன்மையின் எல்லாவற்றினும் பின் வைக்கப் பட்டது."

(5) உருஉ ஆம் நூற்பாவில், புணரியல் நிலையிடைப் பொருள் நிலைக்குதந, வினை செயல் மருங்கின் காலமொடு வருந, வேற்றுமைப் பொருள்வயின், உருபாகுந ஆகிய இவற்றை முறையாகக் கூறுமைக்கும்; அசைநிலை, இசைநிறை, தத்தம் குறிப்பில் பொருள் செய்குந ஆகியவற்றில், தத்தம் குறிப்பில் பொருள் செய்குநவற்றை முற் கூறாது, அசை நிலை, இசை நிறைகளை முற்கூறியதற்கும் காரணம் என்னை? என வினவிக் கொண்டு இவ்வுரையாசிரியர் ஆராய்வதும் பிறர் உரையில் காணாத பெருஞ்சிறப்புடையனவாகும். இவற்றுள் பின்னைய ஆய்வு உரைப்பகுதி சிதைந்துள்ளமையின் நன்கு விளங்க வில்லை.

இன்னோரன்ன பெருஞ்சிறப்புக்களை உடையதாய் இவ்வுரை விளங்கினும், ஒருசாரார் இவ்வுரை அத்துணைச் சிறப்புடைத்தன்று என்பர். அங்ஙனம் கூறியதற்கு அவர்கள் காரணம் அல்லர். இவ்வுரை இதுகாறும் நன்கு பதிப்பிக்கப்பட்டு, வெளிவாராமையே யாகும். இனியேனும் இதன் உண்மை தெரிந்து மகிழ்வார்களாக.

(இ) போலும் என்பது :

இவர் பல ஆய்வுகளை எடுத்துக் கொண்டு ஆராய்கின்றார். அங்ஙனம் ஆராய்வுழி நன்கு துணிதற்கியலாதனவற்றைப் "போலும்" என்றுரைப்பது இவரது பெரு வழக்கமாகும். இங்ஙனம் இவர் ஏறத்தாழ 40 இடங்களில் கூறியுள்ளார். அவற்றுள் சில வற்றைக் கீழே தருகின்றோம்.

(1) "மக்கள் என்னுது சுட்டென்றது தான் உயர்திணையென இடுகின்ற குறியீட்டிற்குக் காரணம் இதுவென்பது விளக்கல் வேண்டிப் போலும்," (கிளவியாக்கம்—நூற்: 1)

(2) "முன்னும் ஏதுவின் பாகுபாடு ஓதிவைத்துப் பின்னும் ஏது என ஓதியது அவ்வாறொழிய வருவனவற்றைக் கருதிப் போலும்." (வேற்றுமையியல்—நூற்: 13)

(3) கிளவி யென்றது ஆகுபெயராற் பொருளினை ஆக்கமொடு புணர்ந்ததென்று விசேடித்துக் கூறினமையின் ஆக்கமல்லா ஏது ஒத்த கிழமைத்தன்று என்பது போலும் கருத்து.
(வேற்றுமை மயங்கியல்—நூற்: 9)

(4) "மற்று இஃது 'ஆனென் இறுதி இயற்கையாகும்' என்ற வழியே அடங்காதோ எனின், அளபெடுத்த ஆனென் இறுதியாக வின் வேறு கூறிற்றுப் போலும்." (விளிமரபு—நூற்: 18)

(5) "பிறவும் என்றதனுற் கொள்வன யாவை யெனின், குறவன், இறவுளன், குன்றுவன் எனவும்; காடன் காடி எனவும்; நாடன் நாடி என்வும்; துறைவன், சேர்ப்பன், தரையன், திரையன் எனவும் ஒருமைத்திணைப் பெயராய் வருவனவும், ஆண் பெண் என்பனவும் பிறவும் இன்னோரன்னவும் போலும்."
(பெயரியல்—நூற்: 20)

இங்ஙனமே இவர் : 22, 48, 51, 56, 57, 67, 69, 75, 81, 83, 94, 95, 99, 100, 138, 159, 177, 216, 222, 224, 226, 231, 238, 244, 251, 252, 257—என்ற நூற்பாக்களிலும் கூறிச் செல்லுதல் காண்க.

(ஈ) இரு கருத்துக்களைக் கூறி ஐயுறல் :

இவர் சில கருத்துக்களை ஆராய்வுழி, இரு கருத்துக்களைத் தந்து விட்டு, 'இரண்டனுள் நல்லது தெரிந்து உரைக்க' என்பதும் உண்டு. உ௧௦ ஆம் நூற்பா உரை காண்க.

(உ) ஆசிரியரின் வாய்மை:

இவர் ஒன்றற்குக் காரணம் கூற முற்படுங்கால், தமக்குத் தெரிந்த காரணத்தை மட்டும் சொல்லி, "பிறிது காரணம் உண்டாயி னும் அறிந்திலம்" என்று உரைப்பதும் உண்டு. உஉஉ ஆம் நூற்பா உரை காண்க.

6 பதிப்பு நலன்:

தொல்காப்பிய எழுத்ததிகாரத்திற்கு இளம்பூரணர் உரை, நச்சினார்க்கினியர் உரை ஆகிய இரண்டும் முன்னமேயே கழகவழி வெளிவந்துள்ளன.

சொல்லதிகாரத்திற்கு உரிய சேனாவரையர் உரை வித்து வான் ஆ. பூவராகம் பிள்ளையவர்கள் எழுதிய விளக்கவுரை யோடு பன்முறை கழகவழி வெளிவந்துள்ளது. நச்சினார்க்கினியர் உரையும் எமது விளக்கவுரை, நச்சினார்க்கினியர் உரைத்திறன் ஆகியவற்றுடன் 1962 ஆகஸ்டுத் திங்களில் முதன்முதலாகக் கழகவழி வெளிவந்துள்ளது. இளம்பூரணர் உரையும் எமது ஆராய்ச்சி முன்னுரை, விளக்கவுரைகளுடனும், அடிக்குறிப்பு, பாடபேதங்களுடன் திருந்திய பதிப்பாய் 1963 மேத்திங்களில் கழக வழி வெளிவந்துள்ளது. தெய்வச்சிலையார் உரையும் இளம்பூரணர் உரை போன்றே ஆராய்ச்சி முன்னுரை, விளக்க வுரைகளுடனும், தக்க அடிக் குறிப்பு, பாட பேதங்களுடனும் திருந்திய பதிப்பாய் 1963 திசம்பர்த் திங்களில் கழகவழி வெளி வந்துள்ளது. இக்கல்லாடர் உரையும் இங்ஙனமே தக்க அடிக் குறிப்பும் பாட பேதங்களும் குறிக்கப்பட்டும், நூற்பாக்களுக்கு அவற்றின் பொருள் விளங்கத் தலைப்பிட்டும், பிறர் உரைகளோடு ஒப்பிட்டு மகிழத்தக்க விளக்கவுரையுடன் இந் நாளில் கழகவழி வெளிவருகின்றது.

பொருளதிகாரத்திலும் செய்யுளியல் நச்சினார்க்கினியம் நீங்க லாக ஏனைய உரைகள் எல்லாம் நம் கழகவழி முன்னமேயே வெளி வந்துள்ளன. அச் செய்யுளியல் தாமும் இன்னுஞ் சின்னாளில் வெளி வர இருக்கின்றது. திருவருள் முன்னிற்பதாகுக.

இக் கல்லாடர் உரையைப் பதிப்பித்து வரும் பொழுது, எனது பேரன்பிற்குரியவர்களும், கழக ஆட்சியாளருமான உயர் திருவாளர், வ. சுப்பையா பிள்ளை அவர்கள் பல பிரதிகள் தந்து உதவினார்கள். அவற்றிற் கண்ட பிழை திருத்தங்கள், வேறுபாடுகள் ஆகிய வற்றைப் பிற் சேர்க்கையாகச் சேர்த்துள்ளேம்.

சொல்லதிகாரத்தைப் பொறுத்தமட்டில் இது ஐந்தாவது உரையாகும். இன்னும் இச் சொல்லதிகாரத்திற்கு ஊர், பெயர்

முதலியன தெரியாத உரையாசிரியர் உரை ஒன்றும் இருப்பதாகத் தெரிகிறது. அதுவும் இந்நூலோடு இணைத்துப் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

7. நன்றியுரை

இந்நூல் வெளிவருங்கால் அல்லும் பகலும் அயராது உதவியவரும், எனது பேரன்பிற்கு உரியவரும், திருப்பனந்தாள் ஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியருமான திருவாளர், புலவர். மா. விசுவநாதம் அவர்களின் ஊக்கமும் உணர்வும் பெரிதும் பாராட்டுதற்குரியவாகும். அவர்களுக்கு எனது மனங்கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வுரை நூலை அழகியதாக அச்சிட்டு வெளிப்படுத்தி பதிப்புத்துறையில் எனக்கு ஊக்கமூட்டிவரும் திரு. வ. சுப்பையா பிள்ளையவர்களுக்கும் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர்க்கும் எனது இதயம் ஒன்றிய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உ

திருச்சிற்றம்பலம்

தொல்காப்பியம்

சொல்லதிகாரம்

கல்லாடனார் விருத்தியுரை

க. கிளவியாக்கம்

திணை இரண்டு எனல்

க. உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை யென்மனார் அவரல பிறவே
ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே

என்பது சூத்திரம்.

இவ்வதிகாரம் என்னுதலியெடுத்துக்கொள்ளப்பட்டதோவெனின், அதிகார நுதலியதூஉம் அதிகாரத்தினது பெயருரைப்பவே விளங்கும். இவ் வதிகாரம் என்ன பெயர்த்தோவெனின் சொல்லதிகாரம் என்னும் பெயர்த்து. அஃது இடுகுறியோ காரணக்குறியோ வெனின், காரணக் குறி. என்னை காரணம் எனின், சொல்லுணர்த்தினமை காரணத்தின் என்பது. என்னை? கிளவியாக்கம் [1]எழுவாயாக, எச்சவியலிறுதியாகக் கிடந்த ஒன்பது ஒத்துக்களுள்ளும் சொல்லின்கட்கிடந்த விகற்பமெல்லாம் ஆராய்ந்தார் எனக்கொள்க.

அதிகாரம் என்றதன் பொருண்மை என்னையெனின் முறைமை. அவ் வோத்துக்களுள்ளும் எனைத்துவகையான் உணர்த்தினானோவெனின் எட்டுவகைப்பட்ட இலக்கணத்தான் உணர்த்தினான் என்பது. அவை யுணரச் சொல்லுணர்ந்தாரும்.

1. எழுவாயாக - முதலாக.

அவை யாவையெனின் இரண்டு திணை வகுத்து, அத்திணைக்கண் ஐந்துபால் வகுத்து, ஏழுவழு வகுத்து, எட்டுவேற்றுமை வகுத்து, ஆறு தொகை வகுத்து, மூன்று இடம் வகுத்து, மூன்று காலம் வகுத்து, இரண்டிடத்தான் ஆராய்ந்தானும் என்பது.

சொல்லிற்கிலக்கணமாமாறு என்னையோவெனின் [1]இன்மைமுகத்தானும் உண்மை முகத்தானும் அமைந்த இலக்கணமாமென்றுணர்க.

அவற்றுள் இரண்டு திணையாவன உயர்திணையும் அஃறிணையும் என இவை.

ஐந்துபாலாவன ஒருவன் ஒருத்தி பலர் ஒன்று பலவென இவை.

ஏழுவழு வாவன திணைவழூஉ, பால்வழூஉ, இடவழூஉ, காலவழூஉ, மரபு வழூஉ, செப்புவழூஉ, வினாவழூஉ என இவை.

வேற்றுமை எட்டாவன எழுவாய்வேற்றுமை முதலாக விளி வேற்றுமையீறாகக் கிடந்த இவை.

தொகையாறாவன வேற்றுமைத்தொகை, உவமத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகையென இவை.

மூன்றிடமாவன தன்மை, முன்னிலை, படர்க்கை என இவை.

மூன்றுகால மாவன இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என இவை.

இரண்டிடமாவன வழக்குஞ் செய்யுளுமாகிய இவை.

சொல்லிலக்கணங்கள் எட்டு என்றற்கு விதி உரையிற்கோடலென வுணர்க.

இனிப், பிறவிலக்கணமுண்டெனினும், இவை பெரும்பான்மைய வென்றுதல், அவையும் இவற்றுள் அடங்குமென்றுதல் கொள்ளப்படும் எஃக.

மற்றுச் சொல்லென்றதற்குப் பொருண்மை என்னையெனின், ஓசை யென்றவாறு. ஆறல் கடலொலியும், காரொலியும், விண்ணொலியும் சொல்லாம் பிறவெனின், அற்றன்று. ஓசையெனினும், அரவமெனினும், இசையெனினும், ஒலியெனினும், எழுத்தாமும் ஓசைக்கும் எழுத்தல் லோசைக்கும் பொது. கிளவியெனினும், மாற்ற மெனினும், மொழி

1. இன்மைமுகத்தான் அமைந்த இலக்கணமாவது "வினையெனப் படுவது வேற்றுமைகொள்ளாது" என்றாற்போல மறைவகையான் வருவன. உண்மைமுகத்தான் அமைந்தவாவன "நினையுங் காலைக் காலமொடு தோன்றும்" "பெயரெனப் படுபவை.........தோன்றலாறே" என்றாற் போல விதிமுகத்தான் அமைந்தவை.

யெனினும் இவையெல்லாம் எழுத்தொடு புணர்ந்து பொருளறிவுறுக்கும் ஓசைமேல் நிற்கும்.

எனவே, எழுத்தொடு புணராது பொருளறிவுறுக்கும் ஓசையும் உளவோ எனின், உள; அவை [1]முற்கும் வீளையும் இலதையும் அனுகரணமும் என்றித்தொடக்கத்தன. அவை சொல்லெனப்படா. பொருளறிவுறுக்கும் எழுத்தொடு புணராவோசைமேலதன்று ஆராய்ச்சி. எனவே எழுத்தல்லோசையும், எழுத்தொடுபுணராது பொருள் அறிவிக்கும் ஓசையும், எழுத்தொடு புணர்ந்து பொருளை அறிவிக்கும் ஓசையும், எழுத்தொடு புணர்ந்தே பொருளை அறிவுறுத்தாது இறிஞி மிறிஞி யென்றாற்போல வரும் ஓசையும் என ஓசை நான்கு வகைப்படும். அந்நான்கனுள் பின்னின்ற விரண்டும் இவ்வதிகாரத்து ஆராயப்படுகின்றன.

மேலதிகாரத்தோடு இவ்வதிகாரத்திடை இயைபு என்னையோ வெனின் மேற்பாயிரத்துள் எழுத்துஞ் சொல்லும் பொருளும் என நிறுத்தார். நிறுத்தமுறையானே எழுத்துணர்த்திச் சொல்லுணர்த்திய வெடுத்துக்கொண்டார் என்பது.

எழுத்தொடு சொல்லிடை வேற்றுமை என்னையெனின், தன்னை யுணர்த்திநின்றவழி எழுத்தெனப்படும்; தான் இடை நின்று பொருளுணர்த்தியவழிச் சொல்லெனப்படும்.

இம்முதலோத்து என்னுதலி யெடுத்துக் கொள்ளப்பட்டதோ வெனின், ஒத்து நுதலியதூஉம் ஒத்தினது பெயருரைப்பவே விளங்கும். இவ்வோத்தென்ன பெயர்த்தோவெனின், கிளவியாக்கமென்னும் பெயர்த்து.

கிளவி என்பது சொல்; ஆக்கம் என்பது சொற்கள் பொருள்கண் மேலாமாறு. சொற்கள் பொருள்கண் மேலாமாறு உணர்த்தினமையின் கிளவியாக்கமென்னும் பெயர்த்து. ஒருவன் மேலாமாறு இது, ஒருத்தி மேலாமாறு இது, பலவற்றின் மேலாமாறு இது, வழுவமையுமாறு இது எனப் பொருட்கண் மேலாமாறு உணர்த்தினமையின் கிளவியாக்கமென்னும் பெயர்த்தாயிற்று. மற்று, ஏனையோத்துக்களுள்ளும் பொருட்கண் மேலாமாறேயன்றே உணர்த்தினது; மாறுணர்த்தியதில்லை யெனின், ஏனையோத்துக்களுட் பொருட்கண்மேலாய் நின்றவற்றிலக்கணமுணர்த்தினார்; ஈண்டு அவைதம்மை யாமாறுணர்த்தினார் என்பது.

மற்றுப் பெயர்ச்சொல்லும், வினைச்சொல்லும், இடைச்சொல்லும், உரிச்சொல்லுமெனச் சொல்லும் நான்கேயாதலான் ஒத்தும் நான்கேயாகற்

1. முற்கு - முக்குதலின் ஒலி. வீளை - நாக்கைமடித்துச் செய்யப்படும் சீழ்க்கை என்னும் ஒலி. 'சிட்டி' என வழங்கும். இலதை - அடி நாவடியிற் காட்டப்பெறும் ஒலிக்குறிப்பு என்பர் இராமாநுச கவிராயர். அனுகரணம் - 'குளுகுளு' 'கடகட' என்றாற்போல ஒன்றன் ஒலிபோன்ற ஒலி.

பாலவெனின் ஆகா. என்னை? நான்கு வகைப்பட்ட சொல்லிற்குப் பொதுவிலக்கணம் இவ்வோத்தினுள் உணர்த்தினார். அவற்றுள் முதற்கண்ணது பெயர்ச்சொல்லாதற்கு இலக்கணம் வேற்றுமையோத்துள்ளும், வேற்றுமைமயங்கியலுள்ளும், விளிமரபினுள்ளு முணர்த்தினார். உணர்த்திய இலக்கணமுடைய பெயரைப் பெயரியலுள் உணர்த்தினார். உணர்த்தி, அதன்பின்னே கிடந்தவினையை வினையியலுள் உணர்த்தினார். உணர்த்தி, அதன் பின்னே கிடந்த இடைச்சொல்லை இடைச்சொல்லோத்தினுள் உணர்த்தினார். உணர்த்தி, அதன் பின்னே கிடந்த உரிச்சொல்லை உரிச்சொல்லோத்தினுள் உணர்த்தினார். பின்னை எல்லா வோத்தினுள்ளும் எஞ்சி நின்ற சொற்களை எச்சவியலுள் உணர்த்தினார். இவ்வகையான் எல்லாம் உணர்த்தினாராகலின் இவ்வோத்தெல்லாம் வேண்டியதூஉம், இம்முறையே கிடந்ததூஉமாயிற்று.

இதன் முதற் சூத்திரம் என்னுதலிற்றோவெனின் சொல்லும் பொருளும் வரையறுத்து உணர்த்துதல் நுதலிற்று. இனி,

(இ - ள்.) உயர்திணை யென்மனார் மக்கட்சுட்டே என்பது உயர்திணையென்று சொல்லுப ஆசிரியர் மக்களாகிய நன்கு மதிக்கப் படும் பொருளை என்றவாறு. அஃறிணை யென்மனார் அவரல பிறவே என்பது அஃறிணையென்று சொல்லுப ஆசிரியர் அவரினீங்கிய அல்லவாகிய பிறபொருளை என்றவாறு. ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே என்பது அவ்விரண்டு பொருளையும் உணர்த்துஞ் சொற்கள் என்றவாறு. எனவே உயர்திணைச்சொல்லும் உயர்திணைப்பொருளும், அஃறிணைச் சொல்லும் அஃறிணைப் பொருளும் எனச் சொல்லும் பொருளு மடங்கின.

உயர் என்னும் சொல்லின் முன்னர்த் திணை என்னுஞ் சொல்வந்து இயைந்தவாறு யாதோவெனின், ஒருசொல்முன் ஒருசொல் வருங்கால் தொகைநிலை வகையான் வருதலும், எண்ணுநிலை வகையான் வருதலும், பயனிலை வகையான் வருதலுமென இம் மூன்று வகையல்லதில்லை. இதற்கு விதி உரையிற்கோடல் என்னுந் தந்திரவுத்தி. அவற்றுள் தொகைநிலை வகையான் வந்தது யானைக்கோடென்பது. எண்ணுநிலை வகையான் வந்தது நிலனுநீருமென்பது. பயனிலை வகையான் வந்தது சாத்தனுண்டான் என்பது.

மற்று எச்சவகை அடுக்குவகை பொருள்கோள்வகை ஆக்கவகை இடைச்சொல்வகை உரிச்சொல்வகை யென்றாற்போலப் பிறவும் வகையுளவெனின், நால்வகைச் சொல்லினும் சிறப்புடைய பெயரினையும், வினையிற் சிறப்புடைய முற்றுச் சொல்லினையும் பற்றி, வழக்கிடத்தும் பெரும்பான்மையும் வருவன அவையேயாகலின் அம்மூன்றல்லது இல்லையென்றார் போலும்.

அவையாவன:-எச்சவகை: உண்டுவந்தான், உண்ட சாத்தன் என்றாற் போல்வன. அடுக்கு வகை: பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ என்றாற்போல்வன. பொருள்கோள்வகை: சுரையாழ அம்மிமிதப்ப என்றாற்போல்வன. ஆக்கவகை: சாத்தன் தலைவனாயினன் என்றாற் போல்வன. இடைச்சொல்வகை: 'யானோ தஞ்சம் பெரும' என்றாற்போல் வன. உரிச்சொல்வகை 'செய்யார் தேஎந் தெருமரல் கலிப்ப' என்பன.

அவற்றுள் இது தொகைநிலை வகையான் வந்தது. தொகைநிலைவகை யாறனுள்ளும் வினைத்தொகை. வினைத்தொகை மூன்றனுள்ளும் இறந்தகால வினைத்தொகை.

என்மனார் என்றது என்பவென்னும் முற்றுச் சொல்லினைக் 'குறைக்கும் வழி குறைத்தல்' என்பதனால் பகரங் குறைத்து, 'விரிக்கும் வழி விரித்தல்' என்பதனான் மன்னும் ஆரும் என்பன இரண்டு இடைச் சொற்பெய்து விரித்து என்மனாரென்றாராயிற்று.

இம் முற்றுச் சொற்கும், பெயராகிய ஆசிரியரென்பது செய்யுள் விகாரத்தாற் றொக்கது; இஃதெச்சவகை.

என்றாரெனற்பாலதனைக் காலமயக்கத்தால் என்மனார் என்றாரென உணர்க.

இனி, உயர்திணை யென்பதற்குமுன் என்ப என்னும் சொல் முதனூ லாசிரியனது கூற்றினைப் பின், தான் கூறுகிற மக்கட்சுட்டென்பதனோடு இயைவித்தற்குக் கொண்டுகூறு நிலைமைக்கண் வந்ததாகலின் உயர்திணை யென்னுஞ் சொல்லும், என்ப என்னுஞ் சொல்லும், பின்வருகிற "மக்கட் சுட்டு" என்னுஞ் சொல்லினோடு வேற்றுமைத் தொகையுள் இறுதியுருபுத் தொகைநிலை வகையான் வந்ததென்ப. பொருளியைபு கூறுவதல்லது தம்முட் சொல்லியைபு இலவென வுணர்க.

மக்கட் சுட்டென்பது மக்களாகிய சுட்டு; என்பதன் பொருள் நன்கு மதிப்பு. அஃதாகுபெயரான் மக்கண்மேனின்றது. மக்களென்றது சுட்டென்றது தான் உயர்திணையென இடுகின்ற குறியீட்டிற்குக் காரணம் இதுவென்பது விளக்கல்வேண்டிப்போலும்.

இனி, ஆசிரியரென்பதனோடு மக்கட்சுட்டு என்பதூஉம் பொருளியை பல்லது சொல்லியைபு இன்றென வுணர்க. ஏ என்பது ஈற்றசை.

அஃறிணை என்பது அல்லாததாகிய திணையெனக் குணப்பண்புபற்றி வந்த பண்புத்தொகை. உயர்திணை யல்லாததாகியதென மேலின்ற உயர்திணை என்னுஞ் சொல் வருவித்துக் கொள்க. உயர்திணை யென்ப தற்கு ஏற்ப, இழிதிணையென்று இல் என்னும் பொருளோக்கம்; என உணர்க.

முன்னின்ற சுட்டென்பதன் முன் அஃறிணை யெனவந்த சொல்லும் சூத்திரத்துட் பொருட்படை யென்னும் வினைமுடிவினிறுதிக்கண் வந்ததாகலின் பொருளியைபல்லது சொல்லியைபின்றென உணர்க,

ஈண்டும் என்மனுரென்பது மேற்சொல்லியவாறே நின்றதென வுணர்க.

அவரல வென்பது நீக்கப் பொருண்மைக்கண் தொக்க ஐந்தாம் வேற்றுமைத் தொகை. அலபிற என்பது அல்லவாகியபிற என இரு பெயரொட்டுப் பண்புத்தொகையென வுணர்க. பிறவற்றை என்னும் இரண்டாம் வேற்றுமை இறுதிக்கண் தொக்கு நின்றது.

அவரல்ல என்றது பிறஎன்றது அஃறிணை உயிருடையனவும் உயிரில்லனவும் என இருகூறாய், அவ்விரு கூறும் தத்தம் வகையானும் வேறுபட்டு நின்றமை விளக்கிய வென்பது. ஏ என்பது ஈற்றசை.

அ என்னும் சுட்டு "நீட வருதல் செய்யுளுள் உரித்தே" யென்பதனன் நீண்டு, பிறவும் வேண்டும் செய்கைப்பட்டு, ஆயிருதிணை யென நின்றது.

இருதிணை என்பதனோடு அவ்வென்பது பெயர்ப்பற்றிவந்த தத்தங் குறிப்பிற் பொருள் செய்யும் இடைச்சொல்லென்பது அல்லது மூவகையுட் சொல்லியைபு கூறப்படாது. இருதிணை என்பது இரண்டாகிய திணை யென இருபெய ரொட்டுப் பண்புத்தொகை.

பிற என்பதனோடு ஆயிருதிணை யென்பதூஉம் பொருட்படையாகிய வினைமுடிவின்கண் வந்ததாகலிற் சொல்லியைபு இன்றென்பது.

திணையென்பதனோடு இசைக்கும் என்பது தொகை நிலையான் வந்தது. தொகையுள் இரண்டாம் வேற்றுமைத்தொகை பொருள்நிற்ப வுருபு தொகுதலின் உருபுத்தொகை யெனப்படும்.

இனி 'பெயரும் தொழிலும்' என்றெழுந்த பொதுவிதியை இரண்டாவதற்கு விலக்கிச் 'சாரியை யுள்வழித் தன்னுருபு நிலையலும்' என்று சிறப்புவிதி யோதுதலின் செய்யுள் விகாரத்தாற் சாரியை நிற்ப, உருபு தொக்கது போலும். ஆயிருதிணையையும் என்னும் முற்றும்மையும் செய்யுள் விகாரத்தாற் றொக்கது.

இசைக்கும் என்பது செய்யுமென்னு முற்றுச்சொல். அது பின் நின்ற சொல்லென்பதனோடு பயனிலை வகையான் வந்தது.

[1]"இசைப்பு இசையாகும்" என்பதனன் இசைக்கும் என்பதன் பொருள் ஒலிக்குமென்பதே யாயினும், சொல்லிற்குப் பொருளுணர்த்தும் வழியல்லது ஒலித்தல் கூடாமையின், உணர்த்து மென்னும் தொழிலை இசைக்குமென்னும் தொழிலாற் கூறியவாறகக் கொள்க. இதுவுமோர் மரபுவழுவமைதி போலும்.

பொருளை உணர்த்துவான் ஒருசாத்தனேயெனினும் அவற்கது கருவியாக அல்லது உணர்த்தலாகாமையின் அக்கருவிமேல் தொழிலேற்றிச் சொல் உணர்த்தும் என்று கருவி கருத்தாவாகச் சொல்லிற்றக உணர்க.

1. உரியியல் ௬௨ ஆம் நூற்பா.

'மன' என்பதூஉம் வினைபற்றிய அசைநிலை இடைச்சொல்லாகலின் அதனொடியைபு கூறப்பட்டது. மன் என்று பாடமோதுவாரும் உளர்.[1]

இச்சூத்திரத்தாற் சொல்லிய பொருள் இவ்வதிகாரத்துச் சொல்லுகிற சொல்லது தொகைவரையறையும், அதனை வரையறுக்குங்கால், பொருளானல்லது வரையறையின்மையின் அப்பொருளது தொகைவரையறையும், பொருட்கு நூலகத்து ஆட்சி பெற்ற குறியீடும் உணர்த்தினவாருயிற்று. (௧)

உயர்திணை முப்பால் எனல்

௨. ஆடூஉ வறிசொல் மகடூஉ வறிசொல்
பல்லோ ரறியுஞ் சொல்லொடு சிவணி
அம்முப் பாற்சொல் உயர்திணை யவ்வே.

என் - எனின் மேல் திணை கூறுசெய்தார்; இனி அத்திணைக்கண் பால் கூறுசெய்தல் நுதலிற்று.

(இ - ள்.) ஆண்மகனை யறியுஞ் சொல்லும், மகளினை யறியுஞ் சொல்லும், பலரை யறியுஞ் சொல்லொடு கூடி, அம்மூன்று பாலினை உணர்த்துஞ் சொல்லும் உயர்திணையன (எ - று.)

அறிசொல் என்புழிச் சொல்லிற்கு அறிதல் கூடாமையின், சாத்தன் அறியுஞ்சொல் என ஒரு பெயர் வருவித்துக்கொள்க. ஏ : ஈற்றசை. அவ்வே என வகரஞ் செய்யுள் விகாரத்தான் வந்தது.

'சிவணி' என்பது பல்லோர் அறியுஞ் சொல்லொடு கூட என ஒரு தொகைப்பொருண்மை தோன்ற நின்றதோர் சொல்லென்று சொல்லுக. இவ்வாறன்றிச் சிவணி யென்பதைச் செய்தென்னும் வினையெச்சமாக்கி "உயர்திணைய" என்னும் ஆறும் வேற்றுமை வினைக் குறிப்புநீர்மையுமுடைமையின் அதனோடு முடிந்ததெனக் கூறுவாரும் உளர்.[2]

இதனாற் சொல்லியது, மேற்கூறிய உயர்திணை யென்பது, விரிவகையான் ஆண்பால் பெண்பால் பன்மைப்பாலென மூன்று கூறுபடும் என்பதூஉம், அப்பொருள் முக்கூறுபடுமெனவே தந்திரவுத்திவகையான் மேற்கூறிய உயர்திணைச்சொல் என்பது விரிவரையறையான் ஆண்பாற் சொல், பெண்பாற்சொல், பன்மைப்பாற் சொல்லென மூன்று கூறுபடும் என்பதூஉம் கூறியவாருயிற்று. (௨)

அஃறிணை இருபால் எனல்

௩. ஒன்றறி சொல்லே பலவறி சொல்லென்
றாயிரு பாற்சொல் லஃறிணை யவ்வே.

1. இளம்பூரணர், நச்சினார்க்கினியர்.
2. சேனாவரையர், நச்சினார்க்கினியர்.

என் - எனின் மேல் அஃறிணையென்றார்; அதனை இனைத்துப் பால்படுமென்று, அதுபடும் பால்விரித்தலை நுதலிற்று.

(இ - ள்.) ஒன்றனை யறியுஞ் சொல்லும், பலவற்றை யறியுஞ் சொல்லுமென்று சொல்லப்பட்ட அவ்விரண்டு பாலினையுமுணர்த்துஞ்சொல் அஃறிணையன (எ - று.)

இதனாற் சொல்லியது மேற்கூறிநின்ற அஃறிணைப் பொருளினையும், அஃறிணைச் சொல்லினையும் விரிவகையான் ஒருமை பன்மை யெனவும், ஒருமைச்சொல் பன்மைச்சொல் எனவும் இரண்டு கூறுபடும் என்பதூஉம் கூறியவாறாயிற்று. (௩)

பேடியும் தெய்வமும் உயர்திணைக்கண் அடங்கும் எனல்

௪. பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்
ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்
தெய்வஞ் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்
இவ்வென வறியும் அந்தந் தமக்கிலவே
உயர்திணை மருங்கிற் பால்பிரிந் திசைக்கும்.

என் - எனின் ஐயமறுத்தலை நுதலிற்று: என்னை? மேற்றொகையுள், ஒழிந்த தேவரும், நரகரும், மன்பதையு ளொழிந்த பேடியும் எவ்வாறுங் கொல் என்று ஐயுற்றாற்கு அவையும் இவ்வாறும் என்கின்றமையின்.

(இ - ள்.) உயர்திணையிடத்துப் பெண்மைத் தன்மையையெய்த வேண்டி, ஆண்மைத் தன்மையி னீங்கிய பேடியென்னும் பொருளும், தெய்வத் தன்மையைக் கருதிய தெய்வமென்னும் பொருளும் இவை யிரண்டும், இவையெனத் தம்மை வேறு பாலறிவிக்கும் ஈற்றெழுத்தினையுடைய சொற்களை யுடையவல்ல; மேற்கூறிய மக்களென்னும் உயர்திணையிடத்து முப்பாலினையும் உணர்த்துஞ் சொற்கள் அவ்விடத்தினின்று நீங்கி வந்து தம்மையுணர்த்தும் (எ - று.)

(எ - டு.) பேடி வந்தாள், பேடியர் வந்தார், வாசுதேவன் வந்தான், திருவினுள் வந்தாள், முப்பத்துமூவரும் வந்தார், சந்திராதித்தர் வந்தார் எனினும் அமையும்.

அந்தந் தமக்கிலவே என்றதனான், மக்களும் தேவருமல்லாத நிரயப்பாலரும் மக்களை யுணர்த்தும் முப்பாற் சொல்லானுஞ் சொல்லப்படுவரென்பது கொள்க.

(எ - டு.) நரகன் வந்தான், நரகி வந்தாள், நரகர் வந்தார் எனவரும்.

முன்னின்ற சுட்டிய வென்பது செய்யிய என்னும் வினையெச்சம். அதற்கு வினை 'திரிந்த' என்னும் பெயரெச்சம், பின்னின்ற சுட்டிய வென்பது செய்த என்னும் பெயரெச்சம்.

உயர்திணை மருங்கின் பெண்மை சுட்டிய ஆண்மை திரிந்த பெயர் நிலைக் கிளவியும் என மொழிமாற்றாகக் கொள்க. உயர்திணை மருங்கின் என்னும் ஏழாவதற்குப் பெயர்நிலைக்கிளவி என்பதனை முடிவாக்கி, இடைநின்ற சொல்லைப் பெயர் நிலைக்கிளவிக்கு அடையாக்கிப் பொருளு ரைத்துக் கொள்க.

இரண்டிடத்துப் பெயர்நிலைக்கிளவியுஞ் சொல்லினாற் பொருளறியப் படுதலின் பேடியுந் தெய்வமு மென்னும் பொருட்கு ஆகுபெயராய் நின்றவென வுணர்க. தெய்வமென்றது தெய்வத்தன்மையை.

இதனாற் சொல்லியது; முன் சொல்லிநின்ற பொருள்வரையறையுள் அடங்காது நின்ற பொருளினையும் ஒருவாற்றான் அடங்கக் கூறிய வாறாயிற்று.

எனவே உயர்திணைப்பொருள், பொருள்முகத்தான் மக்களுந் தேவரும் நரகருமென மூன்று கூறுபடும். சொல்முகத்தான் மக்களென்ற தன்மேற்பட்டு ஒன்றேயாம். உயர்திணைப்பாலாயிற் பொருள்முகத்தால் ஆண்பால், பெண்பால், ஆணலி, பெண்ணலி, பேடிப்பால், ஆண்பாற் பன்மை, பெண்பாற் பன்மை, ஆணலிப் பன்மை, பெண்ணலிப் பன்மை, பேடிப் பன்மை, ஆண்பாலோடு பெண்பால் கூடிய பன்மை, பெண் பாலோடு ஆண்பால் கூடிய பன்மை, ஆண்பாற் சிலர், பெண்பாற் சிலர் என விகற்பித்து நோக்கப் பலவகைப்படும். இப்பலவகையுஞ் சொல் வகை மூன்றல்லதின்மையின் மூன்றே யாயின. இவ்வாற்றானே தேவர், நரகர் என்பனவற்றது பாகுபாடும் அறிந்துகொள்க.

இனி, அஃறிணை உயிருடையதூஉம், உயிரில்லதூஉமென இரண் டாய் அவற்றுள் உயிருடையது ஆணும் பெண்ணும், ஆண் சிலவும் பெண் சிலவும், ஆண் பன்மையும், பெண் பன்மையும், அவ்விரண்டுந் தொக்க சிலவும், அவ்விரண்டுந் தொக்க பலவும், உயிரல்லவற்றது ஒரு மையும் சிலவும் பலவும் என இவ்வாற்றாற் பல பகுதிப் படுமேனுஞ் சொல்வகை நோக்க இரண்டல்லது இன்மையின் இரண்டேயாயின என்பது. இனி மக்கண் முதலியவற்றின் வேறுபாடும் அறிந்துகொள்க. (௪)

ஆண்பால் ஈறு

௫. னஃகான் ஒற்றே ஆடூஉ வறிசொல்.

என் - எனின் நிறுத்தமுறையானே மேற்கூறிய உயர்திணைச் சொல்லுள் ஆடூஉ அறிசொல்லாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஆடூஉ வறியுஞ் சொல்லாவது னகாரமாகிய ஒற்றினை யீறாகவுடைய சொல், (எ - று.)

(எ - டு.) உண்டான், உண்ணாநின்றான், உண்பான்: இவை தெரிநிலை வினை. கரியன், செய்யன்: இவை குறிப்புவினை.

சூத்திரம் 'னஃகா னொற்றே யாடூஉ வறிசொல்' எனப் பொதுப்பட நின்றமையின் புதன், குபேரன், உண்டேன், உண்மின் என்பனவும் ஆண்பா லுணர்த்துதற்குச் சென்றனவேனும், பொதுமைவிலக்கி மேற் சொல்லுகின்ற விதிகளாற் படர்க்கை யிடத்து முற்றுச் சொற்கேயல்லது வாராதெனக் கொள்க. இது மேற்கூறுவனவற்றிற்கும் ஒக்கும்.

உண்டான் என்புழி நான்கெழுத்துக்கூடி ஆண்பாலுணர்த்திற்றே யாயினும், பிறவெழுத்துக்கள் பிறபாலுணர்த்தும் வழியும் வருதலான் னகர ஒற்றையே தலைமைபற்றி ஆடூஉ அறிசொல் என்றார். (௫)

பெண்பால் ஈறு

௬. ளஃகான் ஒற்றே மகடூஉ வறிசொல்.

என் - எனின் மகடூஉவறிசொல்லாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மகடூஉவினை யறியும் சொல்லாவது ளகாரமாகிய ஒற்றினை யீறாகவுடைய சொல், (எ - று.)

(எ - டு.) உண்டாள், உண்ணாநின்றாள், உண்பாள்: இவை தெரிநிலை வினை. கரியள், செய்யள்: இவை குறிப்புவினை; வேறுபாடு அறிந்து கொள்க.

இனி முற்சூத்திரத்துரையில் விரித்தாங்கு 'னஃகா னொற்றே ஆடூஉ வறிசொல் எனச் சூத்திரம் பொதுப்பட நின்றமையின்' என்று தொடங்கி உரைத்தவைகளெல்லாம் ஈண்டும் விரித்துரைத்துக்கொள்க. (௬)

பலர்பால் ஈறு

௭. ரஃகான் ஒற்றும் பகர இறுதியும்
மாரைக் கிளவி [1]உளப்பட மூன்றும்
நேரத் தோன்றும் பலரறி சொல்லே.

என் - எனின் பலரை யறியுஞ் சொல்லாமாறுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ரஃகானாகிய ஒற்றும், பகரமாகிய விறுதியும், மாரென்னும் சொல்லுட்பட இம்மூன்றும் நிரம்பத்தோன்றும் பலரையறியும் சொற்கு, (எ - று.)

1. உட்பட என்பதும் பாடம்.

பலரையறியுஞ் சொல்லாவன ரகரம், பகரம், மார் என்பன வற்றை ஈறாகவுடைய சொற்கள், (எ - று.)

(எ - டு.) உண்டார், உண்ணாநின்றார், உண்பார், கரியர், செய்யர், உண்ப, தின்ப, ஆர்த்தார், கொண்மார், வந்தார்; பூக்குழாய் என்னையர்க ணில்லாக தீது எனவரும்.

ரகரவொற்று மூன்றுகாலமும் வினைக்குறிப்பும் பற்றி வருதலான் முன் வைக்கப்பட்டது. பகரம் எதிர்காலமாகிய ஒருகாலம் பற்றிவருதலான் உயிர்மெய்யெழுத்தேனும் அதன்பின் வைக்கப்பட்டது. மார் என்பதூஉம் எதிர்காலம்பற்றி வரினும் ஒற்றாய் வருதலானும் பெருவழக்கின்றாத லானும் பகரத்தின்பின் வைக்கப்பட்டது.

நேரத்தோன்றும் என்றதனான், உண்டனம், உண்ணா நின்றனம், உண்குவம், கரியம், செய்யம் என மகர ஈறுங் காட்டுவாருண்மையின் "யானுமென் னஃகமுஞ் சாறும்" என்புழி அம்மகரம் அஃறிணையும் உட் படுத்துத் திரிவுபட நிற்றலின் அம்மஃகான் திரிபுடையவிவையே திரி பில்லன என்பன கொள்ளப்பட்டது. சொற்கு என்பது சொல்லெனச் செய்யுள் விகாரத்தால் தொக்கதென உணர்க.

நான்காவது விரியாது நேரத்தோன்றும் பலரறிசொல் மாரைக் கிளவியுளப்பட மூன்றுமென எழுவாயும் பயனிலையுமாக்கிக்கொள்ளின், நேரத்தோன்றும் பலரறிசொல் இவையென நேரத்தோன்றதனவும் பலரறிசொல்லுளவென்ற கருத்து அருத்தாபத்திப்பட்டு அவையுந் தனக் குடன்பாடாய் மேற்கூறுவனபோல நிற்பதோர் சொன்னேக்கப்படுத லானும், தோன்றும் எனநின்ற செய்யும் என்றசொல் முற்றாசைப்பட்டு, பயனிலை வகையாதற் கியையாது நிற்றலானும் அவ்வாறு கூறலாகாதென வுணர்க.

மேல் ஈற்றின் நிசைக்கும் பதினேரெழுத்தும் என்று பொதுவாக ஈறென்று கூறுகின்றாராகலின் ஈண்டுப் பகரவிறுதி என்றுங் கூறியது என்னையெனின், ஆண்டுக் கூறுகின்றது மொழியது ஈறென்பதன்றே! ஈண்டகரம் உயர்திணைப்பன்மையை யுணர்த்துங்கால் தானே நின்றுணர்த் தாது பகரவொற்றின் மேலேறி அதன் பின்னின் றுணர்த்துமென்றற்குக் கூறியதென வுணர்க. இக்கருத்து மேற்கூறுவனவற்றிற்கும் பொருந்தும்.

பகரவிறுதி யென்பன இருபெயரொட்டுப் பண்புத்தொகை. அகரம் பகரவொற்றோடு புணர்ந்துநிற்றலாற் பகரமெனவும் பட்டது. அவ்வாறு நிற்புழி அதனிறுதி நிற்றலின் இறுதியெனவும் பட்டது. (எ)

ஒன்றன்பால் ஈறு

அ. ஒன்றறி கிளவி தறட வூர்ந்த
குன்றிய லுகரத் திறுதி யாகும்.

என் - எனின் உயர்திணைச் சொல்லாமாறுணர்த்தி, இனி அஃறிணைச் சொல்லாமாறுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஒன்றனை யறியுஞ் சொல்லாவது தறடக்க ளென்கிற வொற்றுக்களை யூர்ந்துவருகிற குற்றியலுகரமாகிய வெழுத்தினை யீறுகவுடைய சொற்கள், (எ - று.)

(எ - டு.) உண்டது, உண்ணாநின்றது, உண்பது, கரியது, செய்யது எனவரும். இவை தகரமூர்ந்துவந்த குற்றியலுகர ஈற்றவாம். கூயிற்று, தாயிற்று, கோடின்று, குளம்பின்று எனவரும்: இவை றகரமூர்ந்துவந்த குற்றியலுகர ஈற்றவாம். குண்டுகட்டு, கொடுந்தாட்டு எனவரும். இவை டகரமூர்ந்துவந்த குற்றியலுகர ஈற்றவாம்.

மற்று ட த ற என்று எழுத்துக் கிடக்கைமுறையாற் கூறுதது என்னை எனின், தகரம் மூன்றுகாலமும், வினைக்குறிப்புங் கோடலான் முன்வைக்கப்பட்டது. றகரம் இறந்தகாலமொன்றும், வினைக்குறிப்புங் கோடலான் அதன்பின் வைக்கப்பட்டது. டகரம் வினைக்குறிப்பல்லது கோடலின்மையின் அதன்பின் வைக்கப்பட்டது.

உகரத் திறுதி-உகரமாகியவிறுதி யெனப் பண்புத்தொகை. அத்து: அல்வழிச்சந்தி. உகரவீற்றுச்சொல்லிற்கு உகர விறுதி யென்பது இருபெயரொட்டுப் பண்புத்தொகை. குற்றியலுகரம் என்பது மெலிந்து நின்றது. (அ)

பலவின்பால் ஈறு

கூ. அ ஆ வவ்வென வருஉம் இறுதி
அப்பான் மூன்றே பலவறி சொல்லே.

என் - எனின் அஃறிணைக்கண் பலவறிசொல்லாமாறுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அ, ஆ, வ என்று சொல்லவருகிற இறுதிகளையுடைய அக்கூற்று மூன்று சொல்லும், பலவற்றை யறியுஞ் சொல், (எ - று.)

(எ - டு.) உண்டன, உண்ணாநின்றன, உண்பன, குறிய, கரிய, செய்ய என இவைகள் அகரவீற்றன. உண்ணா, தின்னா என இவை ஆகாரவீற்றன. உண்குவ தின்குவ என இவை வகரவீற்றன.

அகரம் மூன்று காலமும் வினைக்குறிப்பும் கோடலின் முன் வைக்கப்பட்டது. ஆகாரம் எதிர்காலமாகிய ஒரு காலமே கோடலானும், எதிர்மறை வினைக்கணல்லது வாராமையானும் அதன் பின் வைக்கப்பட்டது.

வகரமும் அகரமென அடங்குமே யெனினும் அவ் வகரம் போல மூன்று காலத்தும் வினைக்குறிப்பின் கண்ணும் வாராது உண்டல்,

தின்றல் இவை முதலாகிய தொழில் தொறும் - உண்குவ, தின்குவ என எதிர்காலம் பற்றி வேறோர் வாய்பாட்டான் வருதலான், அவ்வகரத்தோடு அடங்கா நிலைமைச் சிறப்புடைய அகரத்தை முன் கூறி இதனை அதன்பின் வைத்தார் என்பது. இக்கடா ஈற்றிற்கு மொக்கும்.

பலவறிசொல் என்னும் எழுவாய்க்கு இறுதி என்பது பயனிலையாகின் அப்பால் மூன்று என்பது நின்று வற்றுமாகலின், மூன்று என்பதையே பயனிலையாக்கி இறுதி என்பதனை இறுதியையுடைய மூன்று எனப் பயனிலைக்கு அடையாக்கி உரைக்க. (க)

இப்பதினோ ரீறுகளும் வினைக்கண் வரும்பொழுது பால் விளங்கும் எனல்

கo. இருதிணை மருங்கின் ஐம்பால் அறிய
ஈற்றினின் றிசைக்கும் பதினோ ரெழுத்தும்
தோற்றந் தாமே வினையொடு வருமே.

என் - எனின் மேல், பாலுணர்த்தும் என்னப்பட்ட எழுத்து இனைத்தென்பதூஉம், அவை வினைக்கண்ணின் றுணர்த்தும் என்பதூஉம், வினைக்கண்ணும் ஈற்றினின் றுணர்த்தும் என்பதூஉம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) இரண்டு திணையிடத்தும் உளவாகிய ஐந்து பாலினையும் அறியும்படி மொழியது ஈற்றுக்கண்ணே நின்றுணர்த்தும் மேற்சொல்லப்பட்ட பதினொரு வகை யெழுத்தும்; அவைதாம் பாலுணர்த்துதற்குப் புலப்படுமிடத்து வினைச்சொல்லோடு வந்து புலப்படும், (எ - று.)

பதினோரெழுத்துமாவன னஃகானொற்றும், ளஃகானொற்றும், ரஃகானொற்றும், பகரமும், மாரும், துவ்வும், றுவ்வும், டுவ்வும், அவ்வும், ஆவும், வவ்வும் என இவை. இசைக்கும் என்பது செய்யும் என்னும் முற்றுச் சொல் பெயரெச்சமாக, உணர்த்தும் என்னும் பொருள்படும்.

மேற்கூறிய திணையினையும், பாலினையும் ஈண்டு வரையறுத்து "இருதிணை மருங்கின் ஐம்பால்" எனக் கூறிய காரணம் என்னையெனின், உயர்திணைப் பொருள் தேவரும், நரகரும் எனவும் உயர்திணைப்பாலுள் பேடியும் அலியுமென விரிந்து நின்றனவும் பொருள்களுண்மையின் இப்பொருட்பகுதி யெல்லாஞ் சொற்பகுதி பிற இன்மையின் ஐந்தாய் அடங்கினவே யெனினும் அப்பொருட் பாகுபாடுபற்றி நூலகத்து வேறு திணையும் பாலுமாக விளங்கவுங் கூடும் கொல்லோ என்று மாணாக்கன் ஐயுறுவானாயினும் என்று 'இதையல்ல தில்லை' என 'விரித்துத் தொகுத்தல்' என்னும் இலக்கணத்தான் வரையறுத்து "இருதிணை யைம்பால்" என்றாராகக் கொள்க.

முதற் சூத்திரத்துட் கூறப்பட்ட சொல்லிலக்கணம் எட்டினுள்ளும் திணைபால் என்பனவற்றது இலக்கணமே இத்துணையுங் கூறியது என வுணர்க.

முன்னின்ற நான்கு சூத்திரமுந் திணையும் பாலும் சொல்லும் பொருளும் வரையறை யிலக்கணமும் கூறின எனவும், பின்னின்ற ஆறும் அத் திணையும் பாலும் உணர்த்துஞ் சொற்களின் இலக்கணங் கூறின எனவும் உணர்க. (கய)

பாலறி சொற்கள் தம்முள் மயங்கா எனல்

கக. வினையின் தோன்றும் பாலறி கிளவியும்
பெயரின் தோன்றும் பாலறி கிளவியும்
மயங்கல் கூடா தம்மர பினவே.

என் - எனின் வழுக்காத்தலை நுதலிற்று. வழுக்காக்கு மிடத்து வழுவற்க என்று காத்தலும், வழுவமைக என்று காத்தலும் என இரண்டாம். அவற்றுள் இது வழுவற்க என்று காத்தல்.

(இ - ள்.) வினைச்சொல்லா னடங்கும் பாலறியப்படும் பொருளும் பெயர்ச்சொல்லா னடங்கும் பாலறியப்படும் பொருளும் என இவ்விருவகைப் பொருளும் ஒன்றேடொன்றை மயங்கச் சொல்லுதல் பொருந்தா; தத்தம் இலக்கணத்தானே சொல்லுத லுடைய, (எ - று.)

(எ - டு.) உண்டான் அவன், உண்டாள் அவள், உண்டார் அவர், உண்டது அது, உண்டன அவை என வரும்: இவை வினை. அவன் உண்டான், அவள் உண்டாள், அவர் உண்டார், அது உண்டது, அவை உண்டன என வரும்: இவை பெயர்.

பாலறி கிளவி யென்றதனை ஈண்டும் பொருள்மேற் கொள்க. அவ்வாறு பொருள் மேற் கொள்ளவே பொருள் பற்றி நிகழும் வழுவெல்லாம் படாமற் கூறுக என்பதாம். அவ்வழுக்களது பெயரும், முறையும், தொகையும் ஓரிடத்துங் கூறிற்றிலரே யாயினும் உரையிற் கோடல் என்பதனுன் இச் சூத்திரத்து உரையுட் கொள்ளப்படும்.

அவையாவன: திணைவழூஉ, பால்வழூஉ, இடவழூஉ, காலவழூஉ, மரபுவழூஉ, செப்புவழூஉ, வினாவழூஉ என இவையாம்.

இவையெல்லாம் மரபுவழு என ஒன்றேயாகற்பால எனின் அவ்வாறு ஒன்றுயடங்குமே யெனினும் அம்மரபினைப் பகுத்துத் திணைபற்றிய மரபினைத் திணையென்றும், பால் பற்றிய மரபினைப் பாலென்றும், இடம் பற்றிய மரபினை இடமென்றும், காலம் பற்றிய மரபினைக் காலமென்றும் செப்பு பற்றிய மரபினைச் செப்பென்றும், வினாபற்றிய மரபினை வினா

வென்றும் பகுத்து இவ்வாறு ஒன்றனையும் பற்றாது வருவதனை மரபென ஒன்றாக்கி இலக்கணமும் வழுவுங் கூறினாரென்பது.

அவற்றுள் திணைவழூஉ: உயர்திணைப்பால் மூன்றும் அஃறிணைப்பால் இரண்டனோடு மயங்கி உயர்திணைவழூஉ மூவிரண்டாறும்; இனி அஃறிணைப்பாலிரண்டும் உயர்திணைப்பால் மூன்றனோடு மயங்கி அஃறிணைத்திணைவழூஉ இருமூன்று ஆறும். இவை பெயர் வினையென்னும் இரண்டனோடு உறழ இருபத்து நான்காம்.

(எ - டு.) அவன் வந்தது, அவன் வந்தன என்றாற் போல்வன பெயர்பற்றிய உயர்திணைத் திணைவழூஉ. அது வந்தான், அது வந்தாள், அது வந்தார் என்றாற் போல்வன பெயர்பற்றிய அஃறிணைத் திணைவழூஉ. இனி, வந்தான் அது, வந்தான் அவை என்றாற்போல்வன வினைபற்றிய அஃறிணைத் திணைவழூஉ.

இனிப் பெயரொடு பெயர்பற்றிய திணைவழூஉ, வினையொடு வினை பற்றிய திணைவழூஉ என விகற்பிக்கப் பலவுமாம்.

(எ - டு.) அவன் அது, அவன் அவை என்றாற் போல்வன பெயரொடு பெயர்பற்றிய திணைவழூஉ. உண்டான், தின்றான், ஓடினான் சாத்தன் என ஒருவன் மேற் பல வினை கூறுகின்றுழி உண்டான் தின்றான் ஓடினான் பாடினான் என்றாற்போல்வன வினையொடு வினைபற்றிய திணைவழூஉ.

இனிப் பால்வழூஉ: உயர்திணைப்பால் மூன்றும் ஒன்று இரண்டனோடு மயங்கி மூவிரண்டாறும். அஃறிணைப் பாலிரண்டும் ஒன்றனோடு ஒன்று மயங்கி ஓரிரண்டாயின. ஆகப் பால்வழூஉ எட்டுவகைப்படும் அவை வினை பெயர் என்னும் இரண்டனோடுறழப் பதினாறும்.

(எ - டு.) அவன் உண்டாள், அவன் உண்டார் என்பன உயர்திணைப் பெயர்பற்றிய பால்வழூஉ. அது வந்தன, அவை வந்தது என்பன அஃறிணைப் பெயர் பற்றிய பால்வழூஉ. உண்டான் அவள், உண்டான் அவர் என்பன உயர்திணை வினைபற்றிய பால்வழூஉ. வந்தது அவை, வந்தன அது என்பன அஃறிணை வினைபற்றிய பால்வழூஉ.

இனிப் பெயரொடு பெயரும் வினையொடு வினையும் பற்றிய வழூஉவாவனவும் உள.

(எ - டு.) அவன் யாவள், அது யாவை என இவை பெயரொடு பெயர் பற்றிய பால்வழூஉ. உண்டான், தின்றாள், ஓடினார், பாடினான் சாத்தன் எனவும், உண்டது, தின்றன, வந்தது, கிடந்தன ஒன்று எனவும் இவை வினையொடு வினை பற்றிய பால்வழூஉ.

இனி இடவழூஉ: தன்மை முன்னிலை படர்க்கையென்னும் மூன்றும் ஒன்று இரண்டனோடு மயங்கி மூவிரண்டாறும்.

(எ - டு.) யான் உண்டாய், யான் உண்டான் என்பன, பெயர் வினைகளைப்பற்றி வரும் விகற்பம் இவற்றிற்கு மொக்குமென உணர்க.

காலவழூஉ: இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற மூன்றும் ஒன்று இரண்டனோடு மயங்கி மூவிரண்டாகும்.

(எ - டு) செத்தானைச் சாகின்றான் எனவும், சாவான் எனவுங் கூறினாற்போல வருவன. இவையிற்றிற்கும் பெயர் வினைகளைப் பற்றி வரும் விகற்பங் கொள்க.

மரபுவழூஉ: ஒரு பொருட்குரிய மரபினை ஒரு பொருட்கு உரித்தாகச் சொல்லுதலாம்.

(எ - டு.) யானை மேய்ப்பானை இடையனென்றும், ஆடு மேய்ப்பானைப் பாகனென்றும், யானையுட் பெண்ணை ஆ என்றும், ஆவினுட் பெண்ணைப் பிடி என்றும் கூறினாற் போல்வன.

செப்பு வழுவிற்கும் வினாவழுவிற்கும் உதாரணம் மேல் வருகின்ற 'செப்பும் வினாவும்,' என்னுஞ் சூத்திரத்தாற் கொள்ளப்படும்.

எழுவகை வழுவும் இச்சூத்திரத்துள் 'மயங்கல்கூடா' என்றதனாற் பெறுது மெனின், மேல் "செப்பு வினாவும் வழாஅ லோம்பல்" எனச் செப்புவழுவும், வினாவழுவும் கூறலமையாதெனின், இதனுள் அடங்கின வற்றையே உலகத்துச் சொல்லெல்லாம் உயர்திணைச்சொல் அஃறிணைச் சொல் என வரையறையுநிற்போல் வினாவுரையும் செப்புரையுமென இரண்டாக வரையறைப்படுத்து ஓர் நிலைமை கண்டு அதனை உணர்த்துதற் பொருட்டு மீட்டும் விளங்கக் கூறினாரென்று சொல்லுப. எழுவகை வழுவிற்கும் இஃதோர் பொதுவிதி கூறிய தெனவும், சிறப்பு விதி வேறு வேறு கூறிற்றெனவும் உரைக்கப்படும்.

செப்புவினா ஒழிந்தவற்றிற்குச் சிறப்புவிதி யாதோவெனின் வினையியலுட் கடைக்கண் காலவழுவிற்கு விதிபெறுதும். மரபு வழுவிற்கு விதி பொருளதிகாரத்து மரபியலென்னும் ஒத்திடைக் கண்டு கொள்ளப்பெறுதும். ஒழிந்த திணைபாலிடங்கட்கு விதி 'னஃகா னொற்று' முதலிய சூத்திரங்களாற் கூறிற்றென வுணர்க. இவ்வாறு நூனயமாதல் இச்சூத்திரத் துரையினுட் கண்டு கொள்க.

இவ்வதிகாரத்துக் கூறப்படும் விதி மாணாக்கர் ஒரு பொருளினைக் கூறுந்திறன் அறியாது இடர்ப்படுதல் நோக்கி இன்ன பொருளை இன்ன வாறு கூறுக என்று அதனிலக்கணம் கூறுதலும், அதனை அவ்வாறொழிய வுங் கூறுதலும் ஆம் என்று கருதினும் கருதற்க என்று அதனை வழுவற்க என்று காத்தலும், அவ்வாறு வழுப்படக் கூறிய வழக்கினுட் சிலவற்றை அதனகத்து அவ்வாறு கூறுதற்கோர் பொருட் காரணங் கண்டாதல் அமைதி கூறுதலுமென மூவகை. அவற்றுள் இச்சூத்திரம் வழுவற்க என்னும் விதி கூறிற்றென வுணர்க. (கக)

பேடி என்பது பெண்பாலாய் இசைக்கும் எனல்

கஉ. ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி
ஆண்மை அறிசொற் காகிட னின்றே.

என் - எனின் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி யுணர்த்துதல் நுதலிற்று. மேல் 'பெண்மை சுட்டிய' (கிளவி-4) என்றதனுள் பேடியை முப்பாலானுஞ் சொல்லுக என்னும் விதியுள் ஒரு கூற்றை விலக்கியதென வுணர்க.

(இ - ள்.) உயர்திணை யிடத்துப் பெண்மையைக் கருத வேண்டி ஆண்மைத் தன்மை நீங்கிய பேடி யென்னும் பெயரால் சொல்லப்படும் பொருண்மை ஆண்மகனை யறியுஞ் சொல்லாற் சொல்லுதற்கு ஆமிடன் இல்லை என்றவாறு. எனவே பெண்பாலானும் பன்மைப்பாலானுஞ் சொல்லுக, (எ - று.)

(எ - டு.) பேடி வந்தாள், பேடியர் வந்தார் என இவை.

'இடன்' என்ற மிகுதியால் பேடிவந்தான் என்பதும் சிறுபான்மை அமையுமென்பது. அவ்வாறமையுமென விலக்கிப் பெற்றது என்னை யெனின், பெரும்பான்மை சிறுபான்மை யுணர்த்துதல் எனவுணர்க.

இதனைப் 'பெண்மை சுட்டிய' என்றதன்பின் வையாது, இத்துணையும் போதந்து மேற்கூறப்படுகின்ற வழுவமைதிகளோடு சொல்லிவைத்த முறையன்றிக் கூற்றினால் பெண்ணும் ஆணும் அல்லதனை அவ்வப்பாற் சொல்லாற் சொல்லுதலும் வழுவமைதி யென்பது பெறப்பட்டது.

வழுவமைதிகள்தாம் இலக்கணம் உள்வழிக் கூறும் வழுவமைதியும், இலக்கணம் இல்வழிக் கூறும் வழுவமைதியும் என இருவகைப்படும். அவற்றுள் இஃது இலக்கணமில்வழிக் கூறிய வழுவமைதி என உணர்க.

இது பால்பற்றிப் பிறந்ததோர் மரபு வழுவமைதி எனவுணர்க. (கஉ)

வினவுதலின் கண்ணும் விடையிறுத்தலின் கண்ணும் வழுவற்க எனல்

கங. செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்.

என் - எனின் செப்புவழுவும், வினாவழுவும் காத்தல் நுதலிற்று.

(இ - ள்.) செப்பினையும், வினாவினையும் வழுவாமல் ஓம்புக என்றது பரிகரித்துக் கூறுக, (எ - று.)

(எ - டு.) சாத்தா சோறுண்ணுயோ என்றாற்கு உண்பேன் என்றலும் உண்ணேன் என்றலும் எனக் கொள்க.

செப்பு வினா என்றவற்றுள் செப்பு மறுத்தலும், உடன்படுதலுமென இரண்டு வகைப்படும். நுங் நாடியாது என்றாற்குப் பாண்டி நாடு என்றாற் போல்வன இவ்விரண்டனுள் அடங்காதெனினும் ஒருவகையான் அடக்கிக்கொள்ளப்படும்.

இனி வினா ஐந்துவகைப்படும் அறியான் வினாதல், அறிவொப்புக் காண்டல், ஐயமறுத்தல், அவனறிவு தான்கோடல், மெய் அவற்குக் காட்டல் என. 'அறியான் வினாதல் அறிவொப்புக் காண்டல், ஐய மறுத்தல் அவனறிவு தான்கோடல், மெய் அவற்குக் காட்டலோடு ஐவகை வினாவே' என்பதுங் கண்டுகொள்க.

வழாஅல் ஓம்பலெனவே வழுவுதலும் உண்டென்பது பெறப் பட்டது. அவற்றுட் செப்புவழூஉ வினா வெதிர்வினாதலும், ஏவுதலும், உற்றது உரைத்தலும், உறுவது கூறலும், சொற்சொருக்கு இறுத்தலும், சொல்லாதிறுத்தலும், பிறிதொன்று கூறுதலும் என எழுவகைப்படும். உறுகின்றது கூறல் என்னும் ஒன்றுண்டேல் உற்றதுரைத்தலுள் அடங்கு மெனக் கொள்க. அவற்றுள் பிறிதொன்று கூறல் அமையாவழூஉ வெனப்படும். கருவூருக்கு வழி யாது எனப் பருநூல் பன்னிருதொடி என்றாற்போல்வன. மற்றைய ஆறும் அமையும் வழு எனப்படும்.

வினாவெதிர் வினாதல் 'வினாவுஞ் செப்பே' (கிளவி-கச) என்றவழிக் கொள்ளப்படும். ஏவலும், உற்றதுரைத்தலும் உறுவது கூறலும் என்ற மூன்றுஞ் 'செப்பே, வழீஇயினும்' (கிளவி-கரு)என்புழிக் கொள்ளப்படும். சொற்சொருக்கிறுத்தல் 'எப்பொருளாயினும்' (கிளவி-ருரு) என்புழியும், 'அப்பொருள்கூறின்'(கிளவி-ருசு) என்புழியும் கொள்ளப்படும். சொல்லா திறுத்தலாகிய 'பெருமா! *உலறினிரால்; என்றார்க்கு வாளாதே 'உலறி னேன்' என்றாற் போல்வன, அதிகாரப் புறனடையாகிய 'செய்யுள் மருங் கினும்' (எச்ச-சுக) என்புழிக் கொள்ளப்படும்.

வினாவழூஉ, தான் வினாவுகின்றதனைக் கேட்டான் இறுத்தற்கிடம் படாமல் வினாதல் என ஒன்றேயாம்.

(எ - டு.) ஒரு விரல்காட்டி இது நெடிதோ குறிதோ என்றாற் போல்வன.

வினாவிற்கமையாவழூவல்லது அமையும் வழூஉ வென்பதொன்றில்லை.

இனி 'வழாஅல்' என்பது, வழுவியென்னுஞ் செய்தெனெச்சத்து எதிர்மறையாகிய வழாமல் என்னுஞ்சொல் குறைக்கும்வழிக் குறைத்தல் என்பதனால் இடைநின்ற மகரம் குறைந்து நின்றதென வுணர்க.

* உலறுதல் - உரைதடுமாறல், 'அலறிட்டேன் உலறிட்டேன் ஆவிசோ ரேன்' திருவாசகம், பா. உசு

செப்பு ஆசிரியன் கண்ணதாகலானும், வினாவினை யறிவிப்பது அது வாகலானும், வினாவின்றியும் அது நிகழுமாகலானும், வழூஉப்பன்மை அதன் கண்ணது ஆகலானும் முற் கூறப்பட்டது.

வினாவுரையுஞ் செப்பு நிகழ்தலிற் செப்பென ஒன்றேயா யடங்காதோ எனின் அங்ஙனம் அடங்குமாயினும் ஒன்றனை யறியாதுகூறல் வினாவென்றும், ஒன்றனையறிவித்தற்குக் கூறல் செப்பென்றும் இரண்டாகப் பகுத்து ஆராய்ந்தாரென வுணர்க. (கங)

வினா செப்பாகவும் வரும் எனல்

கச. வினாவும் செப்பே வினாவெதிர் வரினே.

என் - எனின் செப்பு வழுவமைதி கூறுதல் நுதலிற்று.

(இ - ள்.) வினாவென்று சொல்லப்படுகின்றதும் ஒரோவழிச் செப்பென்று சொல்லப்படும்; ஒருவன் ஒன்றனை வினவத் தானும் அதற்கு எதிர் ஒன்றனை வினவி இறைப்பொருள் படுத்துமே யெனின். (எ - று.)

(எ - டு.) சாத்தா சோறு உண்ணாயோ? என்றற்கு உண்ணேனோ? என்பது.

இது வினா வழுவமைதியன்றோ எனின்? பிறிதோர் வினாவந்து வினாப் பொருள் பயவாது செப்புப்பொருள் பயப்பநிற்றலின், செப்பு வழுவமைதியென அடக்கினார். (கச)

செப்பு வழுவமைதி

கரு. செப்பே வழீஇயினும் வரைநிலை யின்றே
அப்பொருள் புணர்ந்த கிளவி யான.

என் - எனின் இதுவும் செப்பு வழுவமைதியாமாறு உணர்த்துதல் நுதலிற்று

(இ - ள்.) செப்பென்று சொல்லப்பட்டது வழுவி வரினும் வரைந்து மாற்றப்படாது; எவ்விடத்தெனின் வினாப்பொருண்மையோடு பொருந்திய சொல்லிடத்து, (எ - று.)

(எ - டு.) உறையூர்க்குச் செல்லாயோ சாத்தா என நீ செல் என்றல் ஏவுதல்; உறையூர்க்குச் செல்லாயோ சாத்தா என என் கால் முட்குத்திற்று என்றல் உற்றதுரைத்தல்: உறையூர்க்குச் செல்லாயோ சாத்தா என என்கடனுடையார் வளைப்பர், பகைவரெறிவர் என்றல் உறுவது கூறல்.

(செப்பே என்புழி ஏகாரம் பிரிநிலை. அதனைப் பிரித்து வழுவமைதி கூறினமையின், வினாவிற்கு வழுவமைதி இல்லையென்பது பெறப் பட்டது. வழீஇயினும் என்ற உம்மை இழிவுசிறப்பு.)

இம்மூன்று சூத்திரத்துள் முன்னையது வழுவற்க என்னும் விதி; பின்னைய இரண்டும் வழுவமைதி கூறியதென உணர்க. (௧௫)

செப்பு வினாவிற் குரியமரபு

௧௬. செப்பினும் வினாவினும் சினைமுதற் கிளவிக்கு
அப்பொரு ளாகும் உறழ்துணைப் பொருளே.

என் - எனின் செப்புவானொடு வினவுவானிடைக் கிடந்ததோர் மரபிலக்கணங் கூறுதல் நுதலிற்று.

(இ - ள்.) செப்பின்கண்ணும் வினாவின்கண்ணும் சினைக் கிளவிக்கும், முதற்கிளவிக்கும் அவ்வப்பொருளுக்கு அவ்வப் பொருளேயாம்; ஒன்றனோடொன்றைப் பொருவிக் கூறுமள விற்றாகிய பொருள், (எ - று.)

(எ - டு.) கொற்றன் மயிர் நல்லவோ சாத்தன்மயிர் நல்லவோ என வினாவினவிடத்துக் கொற்றன்மயிரிற் சாத்தன்மயிர் நல்ல, சாத்தன் மயிரிற் கொற்றன்மயிர் நல்ல என்று இறுக்க. பிறவுமன்ன. இது சினைக் கிளவி. கொற்றனல்லனோ சாத்தனல்லனோ என வினாவின விடத்துச் சாத்தனிற் கொற்றன் நல்லன், கொற்றனிற் சாத்தன் நல்லன் என இறுக்க. இது முதற்கிளவி.

சினையென்பது உறுப்பு. முதலென்பது அவ்வுறுப்பினை யுடையது. அப்பொருளாகு மென்றதற்குப் பொருள் சினைக்குச் சினையும், முதற்கு முதலும் என்பதன்றி அவ்வச்சினைக்கு அவ்வச்சினையும் அவ்வம் முதற்கு அவ்வம் முதலென்பது கொள்ளப்படும்.

சினை முற்கூறியவதனான் அவ்வச் சினைக்கு அவ்வச் சினை கூறாது முதலொடு கூறுதலும் உள என்பது கொள்ளப்படும்.

(எ - டு.) இவள் கண் நல்லவோ கயல் நல்லவோ என வரும்.

உறழ்பொருளொன்றது துணையென்றவதனால் உவமத்துக் கண்ணுஞ் சினைமுதல்கள் தம்மின் மயங்காமற் கூறுக என்பது கொள்ளப்படும். இன்னும் அதனானே அச் சினைமுதற்பொருள்களை யெண்ணுமிடத்தும் இனமொத்தனவே எண்ணுக என்பதூஉங் கொள்ளப்படும்.

உவமம், வினை பயன் மெய் உரு என நான்கு வகைப்படும்.

(எ - டு.) புலி பாய்ந்தாங்குப் பாய்ந்தான், மழைவண்கை, துடி போலும் இடை, பொன்போலு மேனி எனவரும்.

இவற்றுள் சினை முதல் மயங்கக் கூறின்வும் இவ்விலேசான் அமைத்துக் கொள்ளப்படும்.

இனி எண்; முத்தும், மணியும், பவளமும், பொன்னும் என எண்ணுக. இதற்கு அமைதியுண்டேனுங் கொள்க.

இச்சூத்திரத்தாற் சொல்லியது செப்பினையும் வினாவினையும்பற்றிப் பொருவின்கண்ணும், உவமத்தின்கண்ணும், எண்ணின்கண்ணும் பிறக்கும் மரபிலக்கணமும் மரபுவழூஉவமைதியும் என உணர்க.

பொருவென்பது ஒன்றை ஒன்றனோடு ஒக்குமென்பதன்றி அதனின் இது நன்று என மிகுத்துக் கூறுவது. உவமம் என்பது ஒப்புணர்த்தலென உணர்க. (கக)

தகுதியும் வழக்கும்பற்றிய மரபு

கஉ. தகுதியும் வழக்கும் தழீஇயின ஒழுகும்
பகுதிக் கிளவி வரைநிலை இலவே.

என் - எனின் மரபு வழீஇ யமையுமாறுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) தகுதியினையும் வழக்கினையும் பொருந்தி நடக்குமிலக்கணத்திற் பக்கச்சொல் நீக்கு நிலைமையுடைய அல்ல, (எ-று).

தகுதியென்பது மங்கல மரபினாற் கூறுதலும், இடக்கரடக்கிக் கூறுதலும், குழூவின்வந்த குறுநில வழக்கும் என மூன்று கூறுபடும்.

(எ - டு.) செத்தாரைத் துஞ்சினார் என்றலும், ஓலையைத் திருமுகம் என்றலும் மங்கலமரபு. கண்கழீஇ வருதும், கான்மேனீர் பெய்துவருதும், கைகுறியராயிருந்தார், பொறையுயிர்த்தார், புலிநின்றிறந்த நீரலீரத்து, கருமுகமந்தி செம்பினேற்றை என்பன இடக்கரடக்கிக் கூறல், பொற்கொல்லர் பொன்னைப் பறியென்றலும், வண்ணக்கர் காணத்தை நீலமென்றலும், யானைப்பாகர் ஆடையைக் காரை என்றலும் குழூவின்வந்த குறுநில வழக்கு.

வழக்காறு இலக்கணத்தொடு பொருந்திய மரூஉ வழக்கும், மரூஉ வழக்கும் என இருவகைப்படும்.

(எ - டு.) முன்றில், மீகண் என்பன இலக்கணத்தொடு பொருந்திய மரூஉவழக்கு. அருமருந்தன்னானை அருமருந்தன் என்றலும், நட்டுவியந்தானை நட்டுய்ந்தானென்றலும், பொதுவில் என்பதனைப் பொதியில் என்றலும், மலயமான் நாட்டை மலாடு என்றலும், சோழநாட்டைச் சோணாடு என்றலும் என இவை மரூஉவழக்கு.

இவ்வாறு சொற்சிதையச் சொல்லுவனவன்றிப் படுபொருள் சிதையச் சொல்லுவனவும் மரூஉவழக்கு என்று கொள்ளப்படும். கரியுமயிரினைச் சிறுவெள்வாய் என்றும், களமருட் கரியாரை வெண்களமர்

என்றும், புலைக்களமருட் செய்யாரைக் கருங்களமர் என்றும், நீரினையும் பாலினையும் ஒரோவழிச் சிலபல வென்றும், அடுப்பின் கீழ்ப்புடையை மீயடுப்பு என்றுங் கூறுவன.

இலக்கணவாய்பாடின்றி மருவிய வாய்பாடும் தாமே இலக்கணமாகக் கூறுவன இலக்கணத்தோடு பொருந்திய மரூஉ எனப்படும். இலக்கண வாய்பாடும் உள்வழிச் சொற்சிதையவும் வருவன மரூஉ வழக்கு எனப்படும்.

தகுதியென்பது பட்டாங்குச் சொல்லுதல் நீர்மையின்மை நோக்கி அவ்வாய்பாடுகளைந்து இவ்வாறு சொல்லுதும் என்று உடம்பட்டுச் சொல்லி வருவது.

வழக்காறென்பது வழங்கற்பாடே மேற்கொண்டு ஒருகாரணம் நோக்காது வாய்பாடு பகுத்துப், பயிலச் சொல்லி வருவது.

இச்சூத்திரத்தாற் சொல்லியது பரந்து பட்ட மரபு வழூஉக்களுள் சிலவற்றைப் பொருட்காரணம் பற்றியும், நன்மக்கள்தாம் பயிலவழங்குத லாகிய காரண வழக்குப்பற்றியும் வழுவமைத்தவாறு என வுணர்க.

இவற்றுள் தகுதியென்றது பொருள்பற்றி யமைந்தது. வழக்காறு வழங்குதல்பற்றி யமைந்தது. யானை, யாறு, யாடு என்னும் இன்னோரன்ன வற்றை ஆனை, ஆறு, ஆடு என்னும் இன்னோரன்னவாகக் கூறுதலும் வழக்காறென இதனுட் கொள்ளப்படும். பிறவுமன்ன. அவை சான்றோர் சொன்ன செய்யுளுட் பெரும்பான்மை காணப்படாமையின் இதனுட் கொள்ளாது 'கடிசொல் லில்லை காலத்துப் படினே' (எச்ச-கூ0) யென்புழிக் கொள்ளப்படும். (கஎ)

இனச்சுட்டில்லாப் பண்புகொள் பெயர் செய்யுட்கே எனல்

கஅ. இனச்சுட் டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை
வழக்கா றல்ல செய்யு ளாறே.

என் - எனின் இதுவும் வழக்கிற்குஞ் செய்யுட்கும் மரபுவழீஇ யமையுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) தமக்கு இனஞ் சுட்டுதலில்லாத பண்பு கொண்டு நின்ற பெயர்ச்சொற்கள் வழக்கினகத்து நெறியல்லாத, செய்யுட்கு நெறியாம், (எ - று.)

வழக்காறுவன பெருங்கொற்றன், பெருங்கூத்தன் என்றாற் போல்வன; இவை சிறியானொருவனை நோக்கி வந்தனவல்ல பண்பின் றி உயர்த்திச்சொல்லிய என்பது.

இனிச் செய்யுளாகுவன 'மாக்கடல் நிவந்தெழு செஞ்ஞாயிற்றுக் கவினைமாதோ' (புறம்-௪) எனவும், 'நெடுவெண் திங்களும் ஊர்கொண் டன்றே' (அகம்-உ) எனவும் *'வெண்கோட்டியானைச் சேரனொடு பாடியும்,' (குறு-) எனவும் வரும். கருஞாயிறும், குறுங்கருந் திங்களும், கருங் கோட்டி யானையும் உண்மை கண்டு சொல்லினனல்லன் என்பது.

வழக்கினுள் பண்புகொள்பெயர் வருங்கால் குணமின்றி விழுமிதாகச் சொல்லவந்து நிற்கும்; செய்யுளுள் வருங்கால் குணம் தன்கணுடைய வாய் வந்து நிற்கும்.

'இடுகு கவுண்மடப்பிடி' என்றும், 'நால்வாய் வேழம்' என்றும், 'மறப்புலி' என்றும், 'மடப்பிணை' என்றும், வடவேங்கடந் தென்குமரி என்றும் இனனில் பண்புகொள் பெயரேயன்றி, இனனில் தொழில்கொள் பெயரும் இனனில் பெயர்கொள் பெயருமாய் வருவன வுளவோவெனின் அவ்வாறு வருவனவற்றையும் ஒன்றினமுடித்தலென்பதனான் இதன் அகத்துச் செய்யுள் விதியாக அமைக்கப்படும்.

பண்புப்பெயரென்னாது பண்புகொள்பெயரென்றார்; கரியது, கரியன எனப் பண்பினைப் பிரியாது வருவன வொழியப் பண்பினைக்கொண்டு செஞ்ஞாயிறு எனவும், பண்பினைக்கொள்ளாது ஞாயிறு எனவும் வருவன வற்றின் மேற்று இவ்வாராய்ச்சியென்றறிக வென்பது.

இவ்வாறு பண்புகொள் பெயரென்று கூறவே குறுஞ்சூலி; குறுந் தகடி, குறுமூக்கி, செம்போத்து என்பன அப்பண்பினைப்பற்றி அச்சூலி, தகடி, மூக்கி, போத்து என்று வழங்குதலின்மையின் அது வாளாது பெயரெனப்படும்.

இதனாற் சொல்லியது வழக்கிடத்தும், செய்யுளிடத்தும், பண்பிட னாகப் பிறப்பதோர் வழுவமைதியும், பண்புபற்றிப் பிறக்கும் இனனில் விதப்பும் இனனுடைய விதப்பும் என்னும் இருவகைச் செய்யுள் விகாரமுஞ் சொல்லியதென உணர்க.

செஞ்ஞாயிறு என்புழிச், செம்மையென்னும் பண்பிற்கு, கருமை வெண்மை என இனமுளவே யெனினும் ஞாயிறோடு அடுத்தமையான் இனமின்றாய் இனனில் விதப்பாயிற்று. ஞாயிறு என்பது இனமில வேனும் செம்மையென்னும் பண்படுத்தமையின் கரியதும் ஒரு ஞாயி றுள்ளதுபோல இனமுடைத்தாய் இனனுடை விதப்பாயிற்று. (கஅ)

இப்பொருளில் மரபு வழாமை

கக. இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்.

என் - எனின் உலகத்துப் பொருளெல்லாம் இருவகைப்படும்; இயற்கைப்பொருளும், செயற்கைப்பொருளும் என. அவற்றுள் இயற்

*வெண்கோட்டியானைச் சோணைபடியும் என்பதும் பாடம்.

கைப்பொருண்மேல் மரபிலக்கணம் வழாமற்சொல் நிகழற்பாலவாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) இயற்கை யாகிய பொருளை இத்தன்மைத்தெனச் சொல்லுக, (எ - று.)

(எ - டு.) நிலம் வலிது, நீர் தண்ணிது, தீ வெய்து, வளியுளரும் எனவரும்.

இயற்கைப்பொருள் செயற்கைப்பொருளென்கிறது அவ்வியற்கை செயற்கையென்னும் பண்பினையோ அப்பண்படைந்த பொருளினையோ எனின், பண்படைந்த பொருளினை எனவுணர்க.

அஃதேயெனின், இயற்கைப்பொருள் இது, செயற்கைப் பொருள் இது என வேறுபட நில்லாது, நிலம் வலிது என்ற வழக்கத்தானே கல்லுமிட்டிகையும் பெய்து குற்றுச் செய்யப்பட்டவிடத்து, நீர் நிலமுஞ் சேற்று நிலமும் மிதித்து அவ்வயினின்றொருவன் அந்நிலமல்லாத நிலமிதித்தவிடத்து நிலம் வலிதாயிற்றென்றும் வருமாலெனின் ஒரு பொருடானே இயற்கையான பண்படுத்த விடத்து இயற்கை என்றும், செயற்கையான பண்படுத்தவிடத்துச் செயற்கையென்றும் பண்பால் வேறுபடுதலல்லது பொருளால் வேறல்ல என்று உணர்க.

முன், நீர் நிலம் மிதித்தான் கூறும் வழக்கினுள் பொருட்கு உண்மை வகையான் வன்மையின்றே யெனினும், அவன் மனக்குறிப்புப்பற்றி, அதுவும் வன்மையாயிற்று என உணர்க.

இவ்விலக்கணங் கூறிப் பயந்தது என்னையெனின், மேற்செயற்கைப் பொருளகத்து மரபுவழூஉ அமைத்தற் பொருட்டாய் உலகத்துப்பொருளை இயற்கை செயற்கை என இருபாகுபாடு செய்து அவற்றைக் கூறும் மரபிலக்கணம் அறிவித்தார் எனக் கொள்க. (கக)

செயற்கைப் பொருளில் மரபு வழாமை

உ௦. செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறல்.

என் - எனின் செயற்கைப்பொருண்மேல் மரபு இலக்கணம் வழாமற் சொல் நிகழற்பாலவாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்.) செயற்கையாகிய பொருளை ஆக்கம் என்னும் வாய்பாட்டோடு சொல்லுக, (எ - று.)

(எ - டு.) மயிர் நல்லவாயின, பைங்கூழ் நல்லவாயின எனவரும்.

மேற்கூறிய 'இற்றெனக் கிளத்தல்' (கிளவி-கக) இதற்கு அதிகாரத்தான் வருவித்துக்கொள்க. (உ௦)

மேலதற்கோர் புறனடை

உக. ஆக்கந் தானே காரண முதற்றே.

என் - எனின் மேலதற்கோர் புறனடையுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மேற்கூறிய ஆக்கச் சொற்றானே காரணச் சொல்லை முன்னாகவுடைத்து (எ - று.)

(எ - டு.) கடுவுங் கைபிழியெண்ணெயும் பெற்றமையான் மயிர் நல்லவாயின, எருப்பெய்து இளங்களை கட்டு நீர் கால்யாத்தமையாற் பைங்கூழ் நல்லவாயின எனவரும்.

ஆக்கம் முற்கூறிக் காரணம் பிற்கூறியும் வருமாலெனின் பெரும்பான்மையும் முற்கூறிக் கூறப்படுதலின் முதற்று என்றார்போலும். இனி முதல் என்பதனைக் காரணமாக்கிக் கூறுதலுமொன்று. (உக)

எய்தியது விலக்கல்

உஉ. ஆக்கக் கிளவி காரணம் இன்றியும்
போக்கின் றென்ப வழக்கி னுள்ளே.

என் - எனின் எய்தியது விலக்குதல் நுதலிற்று.

(இ - ள்.) மேற்கூறிய ஆக்கச் சொற்றான் காரணத்தை யொழியச் சொல்லுதலுங் குற்றமில்லையென்று சொல்லுப ஆசிரியர் வழக்கினிடத்து என்றவாறு. உம்மை யெதிர்மறையாகலான் காரணம்கொடுத்துக் கூறல் வலியுடைத்து.

(எ - டு.) மயிர் நல்லவாயின, பைங்கூழ் நல்லவாயின எனவரும்.

செய்யுள் விதியுள்வழிச் செய்யுளென்று கூறி, வாளாதேயோதுஞ் சூத்திரமெல்லாம் வழக்கே நோக்குதல் நூற்கிடையாகலின் 'வழக்கினுள்' என்பது மிகை; அதனாற் செயற்கைப்பொருள் காரணங்கொடுத்து ஆக்கங்கொடாதே சொல்லுதலும், காரணமும் ஆக்கமும் இரண்டுங் கொடாதே சொல்லுதலுங் கொள்ளப்படும்.

(எ - டு.) கடுவுங் கைபிழி யெண்ணெயும் பெற்றமையான் மயிர் நல்ல எனவும், பைங்கூழ்நல்ல எனவும் வரும்.

எனவே செயற்கைப்பொருள் காரணமும் ஆக்கமுங் கொடுத்தலும், காரணமொழிய ஆக்கங்கொடுத்தலும், ஆக்கமொழியக் காரணங்கொடுத்தலும், காரணமும் ஆக்கமும் இரண்டுங் கொடாதே சொல்லுதலும் என நான்குவகைத்து. இவற்றுள் முன்னையவிதியொன்றும் மரபிலக்கணம்; பின்னைய மூன்றும் மரபுவழுவமைதி.

அவற்றுள் இச்சூத்திரத்தாற் கூறியது பெரும்பான்மை, இலேசினாற் கூறிய இரண்டுஞ் சிறுபான்மை யென உணர்க. இவை யமைவதற்குக் காரணம் உணர்வா ருணர்வுவகைபற்றிப்போலும். (உஉ)

உயர்திணைப்பால் ஐயத்துக்கண்பால் வழுவி அமைதல்.

உங. பால்மயக் குற்ற ஐயக் கிளவி
தானறி பொருள்வயின் பன்மை கூறல்.

என் - எனின் இன்னும் உலகத்துப் பொருள்தான், ஐயுறும் பொருளுந் துணியும்பொருளும் என இரு வகைத்து. அவற்றுள் ஐயுறும் பொருட்கண் உயர்திணைப்பால் ஐயத்துக்கண் பால்வழீஇ அமையுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) திணையறிந்து பால் மயங்கலுற்ற ஐயச்சொல், தான் அறிந்த உயர்திணைப் பொருளிடத்துப் பன்மையாகக் கூறுக, (எ - று.)

(எ - டு.) ஒருவன் கொல்லோ? ஒருத்தி கொல்லோ? இதோ தோன்றுவார் என்பது.

இவ்வையம், கண்டவிடத்து ஐயமும், காணாவிடத்து ஐயமும் என இருவகைத்து. இனிக் காணாதவழி ஒருவனோ பலரோவென்று ஐயுறும் பான்மயக்கமுங் கொள்க. இது தானறியாதவதல்லது அப்பொருள் இருபாலுமாய் நிற்றலில்லை. பிறமற்றொன்றாகிய அப்பொருளைப் பன்மையாற் கூறுதல் வழூஉவன்று; வழூஉவே யெனினும் அமைக எனப் பால்வழூஉ அமைத்தவாறாயிற்று.

இவ் வையத்துக்கு இலக்கண வழக்கென வேறு காணாமையின் இது தான் இலக்கணமாகற்பாற்று எனின், வேறு வழக்கில்லை யெனினும், இது பொருள்வகை தொக்கவழூஉ வெனப்படும்.

ஒருவனோ ஒருத்தியோ தோன்றுகின்றார் எனப் பொதுவாகக் கூறல் இலக்கண வழக்காம் பிறவெனின், அவ்வாறு கூறுவாரின்மையானும், ஆர் என்பது ஆண்பாற் கல்லது ஏலாமையானும் ஆகாதென மறுக்க. (உங)

உச. *உருவென மொழியினு மஃறிணைப் பிரிப்பினும்
இருவீற்று முரித்தே சுட்டுங் காலை.

என் - எனின் திணை ஐயத்துக்கண்ணும், அஃறிணைப்பால் ஐயத்துக்கண்ணும் வழீஇயமையுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

---

* உருபென என்பது சேனாவரையர், தெய்வச் சிலையார் ஆகியோரது பாடம்.

(இ - ள்.) உருவெனச் சொல்லுமிடத்தும் அஃறிணைப் பிரிப் பின்கண்ணும், இவ்விரண்டு கூற்றின் கண்ணும், ஐயமுரித்துக் கருதுங்காலத்து (எ - று.)

என்றது திணையையந் தோன்றியவழி உருவு என்று சொல்லுக. அஃறிணைப்பாலையந் தோன்றியவழி அஃறிணை இயற் பெயராகிய பொதுப்பெயராற் சொல்லுக, (எ - று.)

ஒருமையும் பன்மையும் வினையாற் பிரிக்கப்படுதலின், ஆகுபெயரான் அஃறிணை இயற்பெயர் பிரிப்பு எனப்பட்டது.

ஐயமென்பது அதிகாரத்தான் வருவிக்க. திணையையம் அஃறிணைப் பால் ஐயம் என்பன சூத்திரத்துள் இல்லையாயினும், உருவென்றும், அஃறிணைப்பிரிப்பு என்றுங் கூறிய வாய்பாட்டான் உய்த்துணர்ந்து கொள்ளப்படும்.

(எ - டு.) குற்றிகொல்லோ? மகன்கொல்லோ? இதோ தோன்று கின்ற உரு என்பது,

ஒன்றின முடித்தல் என்பதனால் உருவேயன்றி வடிவு, பிழம்பு, பிண்டம் என்பனவற்றானுஞ் சொல்லுக. இதற்குக் காணுதவிடத்து ஐயமுங்கொள்க,

இனி, அஃறிணைப்பால் ஐயம் ஒன்றுகொல்லோ பல கொல்லோ செய்புக்க பெற்றம்? என்பது. இதற்குக் கண்டவிடத்து ஐயம் என்பதில்லை.

இதனுள் திணை ஐயத்துக் கூறிய உருவு என்னும் வழக்கு உடலுயிர் கூட்டப் பொருண்மையாகிய மகன் என்னும் நிலைமைக்கு ஏலாது அவ னுடலைப் பிரிய நின்று உணர்த்தினமையான் அதுவும் ஓர் திணைவழு வமைதி எனப்படும்.

அஃறிணைப்பால் ஐயத்துக் கூறிய இயற்பெயர் பொது வெனினும் சொல்லுதற்கண் ஒருபால்மேல் நிகழற் பாலது அவ்வாறு நில்லாது இரு பால்மேலும் நின்றமையின் இதுவும் ஓர் மரபுவழூஉவமைதி எனக் கொள்க. (உச)

துணிபொருட்கண் சொல்லும் மரபு

உரு. தன்மை சுட்டலும் உரித்தென மொழிப
அன்மைக் கிளவி வேறிடத் தான.

என் - எனின் துணிபொருட்கண் மரபிலக்கணங் கூறுதல் நுதலிற்று.

(இ - ள்.) தனது தன்மையாகிய அன்மைத்தன்மையைச் சொல்லுதலும் உரித்து என்று சொல்லுப ஆசிரியன்; அன்மைப் பொருள் எவ்விடத்தெனின் ஐயத்திற்கு மறுதலையாகிய துணிபிடத்து, (எ - று.)

தன்மை சுட்டல் என்புழி இன்னதன்மை என்பது இன்றேனும், மேல் அன்மைக்கிளவி என்றதனான் அன்மைத் தன்மை என்பது ஓர்ப்பிற் கொள்க. கிளவியென்பது பொருள்.

(எ - டு.) பெண்டாட்டி அல்லன் ஆண்மகன், ஆண்மகன் அல்லன் பெண்டாட்டி, குற்றி அல்லன் மகன், மகன் அன்று குற்றி, பல அன்று ஒன்று, ஒன்று அல்ல பல என்பன.

பெண்டாட்டியல்லன் ஆண்மகன் என்புழி ஆண்மகன் என்னும் பெயர் எழுவாயாய் அல்லன் என்னும் வினைக்குறிப்பினைப் பண்புகொள வருதல் என்னும் பயனிலையாக முன்னேகொண்டு நின்றமையின் பெண்டாட்டி என்னும் பெயர்க்கு முடிவு இல்லை யெனின், அதற்கு உருபுதொகையாக்கி நீக்கப்பொருட்கண் பெண்டாட்டியின் அல்லன் என ஐந்தாவதனை விரித்து முடிபுகொள்க.

இதனாற் சொல்லியது என்னையெனின், இருபொருள் ஐயுற்றுத் துணியும்வழி, அவ்வையுற்ற பொருட்டன்மை இத்துணி பொருளிடத்து இன்மையும், துணிபொருட்டன்மை அவ்வையப்பொருட்கண் இன்மையுங் காணுமன்றே! கண்டுழி, இஃதன்மை அதற்கும், அஃது அன்மை இதற்கும், அன்மை யாதானும் ஒன்றன்மேல் ஆக்கிக் கொடுப்பினும் அமையும் என்று கருதற்க. இஃது அன்மையதற்கும் உண்டேயெனினும் துணிந்த வழி உள்பொருளாய் நின்று காணப்பட்டது. அஃது அன்மையாதலின் இதன்மேலிருக்க என மரபிலக்கணங் கூறியவாறாயிற்று. (உகூ)

வண்ணச்சினைச் சொல்பற்றிய மரபு

உ௰. அடைசினை முதலென முறைமூன்று மயங்காமை.
நடைபெற் றியலும் வண்ணச் சினைச்சொல்.

என் - எனின் வண்ணஞ் சொல்வதோர் மரபு கூறுதல் நுதலிற்று.

(இ - ள்.) பண்பினை யுணர்த்துஞ் சொல்முன்னர்; பண்பினையுடைய சினைப்பொருளை யுணர்த்துஞ்சொல் அதற்பின்; அச்சினையையுடைய முதற் பொருளை யுணர்த்துஞ்சொல் அதன் பின் என்று கேட்டான் அடைவுகருதும்படி அம்மூன்றும் அம்முறைமையின் மயங்காமல் வழக்குப்பெற்று நடக்கும் வண்ணச் சினைச்சொல், (எ - று.)

(எ - டு.) பெருந்தலைச் சாத்தன், செங்கால் நாரை என வரும்.

பெரும்பலாக்கோடு, பெருவழுதுணங்காய் என மயங்கியும் வருமாலோவெனின், அவ்வாறு மயங்கிக் கூறுவன கண்டன்றே இவ்விலக்கணம் எழுந்தது. இதனால் அதனை அழிவழக்கென்று மறுக்க. பெருந்தலையானையுடையதும் வெறும்புல்லா நல்லேறும்? வேறுபொருள் கொண்டியையுமாவதும் எனின்; அவ்வாறு பொருள்கோடல் செய்யுட் கல்லது இன்றென்று மறுக்க.

முறை என்றவதனனே ஒரு முதற்பொருட்கண் இரண்டு பண்படுத்துவருவனவும் வழக்கினுள் உள என்று அமைத்துக் கொள்ளப்படும்.

(எ - டு.) இளம்பெருங் கூத்தன், சிறுகருஞ்சாத்தன் என வரும். 'இள' என்னுஞ் சொல் பெருமை யென்பதனேடும் இன்றுய்க் கூத்தன் என்பதனேடு இயைபு கோடல் மரபன்மையின் அமைக்கப்பட்டது.

இன்னும் இவ்விலேசானே சினைப்பொருட்கண் இரண்டு பண்படுத்து வருவனவும், செய்யுளுள் உள என்றும் அமைக்கப்படும்.

(எ - டு.) சிறுபைந்தூவி, செங்காற்பேடை என வரும்.

நடைபெற்று என்றதனல் அவ்வடை சினை முதல்கள் செய்யுட்கண் முறை மயங்கியும் வரப்பெறும் என்பது கொள்ளப்படும்.

(எ - டு.) பெருந்தோட் சிறுநுசுப்பிற் பேரமர்க்கட் பேதை என வரும்.

அடை சினை முதல் என்று, பின்பும் வண்ணச் சினைச்சொல் என்றது என்னையெனின், முற்கூறியது இலக்கண வாய்பாடாகலான் அவ் விலக்கண முடையது இதுவென வேண்டுதலின், அவ்விலக்கணத்தான் அவ்விலக்கண முடைய பொருட்குக் குறியிட்டார் என வுணர்க.

இதனற் சொல்லியது என்னையெனின் அடை சினை முதற் பொருள் களைக் கூறுங்கால் இன்னவாறு கூறுக என்று அவற்றது மரபிலக்கணமும் அவ்வழி மரபு வழுவமைதியும் கூறியவாருயிற்று. (உகூ)

பால் திணை, வழுவமைதி

உஎ. ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்
ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்
வழக்கி னகிய உயர்சொற் கிளவி
இலக்கண மருங்கிற் சொல்லா றல்ல.

என் - எனின் உயர்திணைப் பால்வழுவமைதியும், அஃறிணைத் திணை வழுவமைதியும் உடன் கூறுதல் நுதலிற்று.

(இ - ள்.) உயர்திணையிடத்து ஆண்பாலினையும், பெண் பாலினையும் அத்திணைப் பன்மைப்பாலாற் சொல்லுஞ் சொல்லும், அஃறிணையொன்றனை உயர்திணைப் பன்மையாற் சொல்லுஞ் சொல்லும் இவையிரண்டும் வழக்கின் கண்ணே யுளவாகி யுயர்த்துச் சொல்லும் பொருண்மைக்கண் வரும் சொல்லாம்; இலக்கணத்திடத்துச் சொல்லும் நெறியல்ல, (எ - று.)

(எ - டு.) தாம் வந்தார் என்பது.

இலக்கண மருங்கிற் சொல்லாறல்ல என்ற மிகையானே காதன் மிகுதியால் உயர்திணை அஃறிணையாகவும், அஃறிணை உயர்திணையாகவும் கூறுவனவும் அமைத்துக்கொள்க.

(எ - டு.) என் பாவை வந்தது; போயிற்று. என் யானை வந்தது; போயிற்று என இவை உயர்திணை அஃறிணையாயின.

இனி ஓர் ஆவினை எம் அன்னை வந்தாள், போயினாள் எனவும்; ஓர் எருத்தினை எந்தை வந்தான் போயினான் எனவும் கூறுவன அஃறிணை உயர்திணையான் வந்தனவாம்.

மற்று, இவை ஆகுபெயரன்றோ எனின், ஒப்புள்வழிச் சொல்வது ஆகுபெயர்; இது காதலுள்வழிக் கூறுவது என உணர்க.

இதனுள் உயர்திணை அஃறிணையான் வந்தன 'குடிமையாண்மை' என்பது சிறப்பென்புழிப்பட்டு அடங்குமாலோவெனின் அவை காதலின்றிச் சிறப்பித்துச் சொல்லுவன என வேற்றுமையுணர்க.

'வழக்கினாகிய' என்றதனான் பிறவும் உயர்திணைப் பெயர்களை அஃறிணைமேல் வைத்துச் சொல்லுவனவும் செய்யுட்கண் அமைத்துக் கொள்க.

(எ - டு.) கன்னி நறுஞாழல், கன்னி எயில், கதிர் மூக்காரல், கரிவளைகம் என்பன போல்வன.

இதனாற் சொல்லியது வழக்கின்கண்ணுஞ் செய்யுட்கண்ணும் ஓரோவோர் காரணங்களைப்பற்றிப் பாலினையுந் திணையினையும் மயங்கக் கூறுவன கண்டு அவற்றிற்கு அமைதி கூறியவாறாயிற்று. (உஎ)

இடம் உணர்த்தும் சொற்கள் பற்றிய மரபு

உஅ. *செலவினும் வரவினும் தரவினுங் கொடையினும்
நிலைபெறத் தோன்றும் அந்நாற் சொல்லும்
தன்மை முன்னிலை படர்க்கை யென்னும்
அம்மூ விடத்தும் உரிய வென்ப.

---

* இது முதல் மூன்று நூற்பாவினையும் ஒரே நூற்பாவாகக் கொள்வர் தெய்வச்சிலையார்.

என் - எனின் இடம்பற்றி நிகழுஞ் சொற்களுட் சிலவற்றிற்கு இலக்கணங்கூறுவான், அச்சொற்களது இடங்களது பெயரும் முறையுங் கூறியமுகத்தான் அவற்றிற்குப் பொதுவிலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) செலவுப் பொருண்மைக்கண்ணும், வரவுப் பொருண்மைக்கண்ணும், தரவுப் பொருண்மைக்கண்ணும், கொடைப் பொருண்மைக்கண்ணும், நிலைபெற்றுத் தோன்றுகின்ற செலவு, வரவு, தரவு, கொடையென்ற நான்கு சொல்லும், தன்மை முன்னிலை படர்க்கையென்று சொல்லப்பட்ட அம்மூன்றிடத்திற்கும் பொதுவகையான் உரிய, (எ - று.)

(எ - டு.) சிறப்புவகையாற் கூறும்வழிக் காட்டுதும். (உஅ)

தன்மை முன்னிலைக்குரிய சொற்கள்

உகூ. அவற்றுள்,
தருசொல் வருசொல் ஆயிரு கிளவியும்
தன்மை முன்னிலை ஆயீ ரிடத்த.

என் - எனின் மேற்கூறிய சொற்களுள் சிலவற்றிற்குச் சிறப்பு வகையான் இட இலக்கணங் கூறுதல் நுதலிற்று.

(இ - ள்.) மேற்கூறப்பட்ட நான்கு சொல்லுள்ளும், தரும் வரும் என்னுஞ் சொல்லிரண்டும் தன்மை முன்னிலைக்கும் ஆம்; படர்க்கைக்கு ஆகாது, (எ - று.)

(எ - டு.) எனக்குத் தருங் காணம். நினக்கு வருங் காணம் எனவரும்.

படர்க்கைக்குரிய சொற்கள்

௩0. ஏனை யிரண்டும் ஏனை யிடத்த.

என் - எனின் இதற்கும் விதி யொக்கும் என்றவாறு.

(இ - ள்.) ஒழிந்த செல்லும் கொடுக்கும் என்னுஞ் சொல் இரண்டும், ஒழிந்த படர்க்கையிடத்திற்கு உரிய; தன்மைக்கும் முன்னிலைக்கும் ஆகா, (எ - று.)

(எ - டு.) அவர்க்குச் செல்லுங் காணம், அவர்க்குக் கொடுக்குங் காணம் எனவரும்.

பொதுச்சூத்திரத்துள் தன்மைக்கும் முன்னிலைக்கும் உரிய தரவினையும் வரவினையும் தரவு வரவு என்று ஓதாது வரவினைச் செலவினோடு

இயைபு படுத்தியும், படர்க்கைக்குரிய கொடுக்கும் என்பதனோடு செல்லும் என்பதைக் கூறாது தரவென்பதனை இயையவைத்தும் கூறிய முறையன்றிக் கூற்றினாற் கொடைப்பொருட்கண் கொடுக்கும் என் பதனைத் தரும் என்றும், செல்லும் என்பதனை வரும் என்றும் கூறுவன வற்றை இடவழுவாக்கி யமைத்துக்கொள்ளப்படும் என்பது.

வரவு தரவு என்பன தம்முள் இயைபுபட நின்றனவாலெனின் தம் முள் இயைபுடைய எனினும் முன்கூறிய செலவினோடும் வரவுப் பொருளான் இயைபுபடுதலின் இத்தரவினோடு இயைபின்றாயிற்று என உணர்க.

'புனல்தரு பசுங்காய் தின்று' (குறுந்-௨௬௨) அவர்க்கு வருஉங் காணம் என்றாற்போல்வன கொடைத்தொழிலிடை மயக்கமாகக் கொள்க. இன்னும் வரவினோடு செலவு கூறிய முறையன்றிக் கூற்றால் அக் கொடைத் தொழிலல்லாச் செலவு வரவின்கண்ணும் இடமயக்கங் கூறுவன அமைத்துக்கொள்ளப்படும்.

(எ - டு.) 'தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது, (அகம்-௩௬) 'யானெய்த அம்பு நின்மேற் செல்லும்.'

அரிமலர்ந் தன்னகண் அம்மா கடைசி
திருமுகமுந் திங்களுஞ் செத்து-தெருமந்து
வையத்தும் வானத்துஞ் செல்லா தணங்காகி
ஐயத்து நின்ற தரா

இந்நிகரனவெல்லாங் கொள்க.

இந்நான்கு சொல்லுமே இடமயக்கம். ஆராய்ந்தது என்னை? எல்லாப் பெயர்களும் வினைகளும் இடத்தொடுபட்டால் வருவதெனின் வேற்றுமை யுண்டு. அவ்வாறு தத்தம் இடங்கள்மேல்நின்ற சொற்கள் ஒன்றனோடு ஒன்று சேருமியல்பு கூறுதல் இந்நான்கிற்கும் அல்லது இன்மையின் இவற்றையே கூறினார் என்பது.

செலவு முதலிய சொல் நான்கும் படர்க்கையே எனினும், வரும் தரும் என்னும் இரண்டு படர்க்கையும் தன்மை முன்னிலைகளோடு இயைபு பட்டும், செல்லும்கொடுக்கும் என்னும் இரண்டும் தமக்கேற்ற படர்க்கை யோடு இயைபுபட்டும் நின்றவாறு கண்டுகொள்க.

இவற்றாற் சொல்லியது ஓரிடத்துச் சொல் ஓரிடத்துச் சேருமிடத்துப் பிறக்கும் இட இலக்கணமும் இடவழுவமைதியும் என்பது. (௩௦)

அறியாப் பொருள்மேல் வரும்சொற்கள்

௩௧. யாதெவ னென்னும் ஆயிரு கிளவியும்
அறியாப் பொருள்வயின் செறியத் தோன்றும்.

என் - எனின் உலகத்துப் பொருள்தான் அறிந்த பொருளென்றும், அறியாப்பொருளென்றும் இரண்டு வகைத்து. அவற்றுள், அறியாப் பொருண்மேல் நிகழுஞ் சொல்லது இலக்கணங் கூறுதல் நுதலிற்று.

(இ - ள்.) யாது எவன் என்று சொல்லப்படும் அவ்விரண்டு சொல்லும் தன்னான் அறியப்படாத பொருளிடத்து வினைச் சொல்லாய் யாப்புறத்தோன்றும், (எ - று.)

(எ - டு.) நுங்நாடு யாது? இப்பண்டி யுள்ளது எவன்? என வரும்.

இவற்றுள் எவன் என்பது இக்காலத்து 'என்' என்றும், 'என்னை' என்றும் மருவிற்று.

செறிய என்றதனாற் பிறவும் அவ்வினைப் பொருளிடத்து வருவன கொள்ளப்படும்.

(எ - டு.) யாவன், யாவள், யாவர், யார், யாவை, யா, எப்பொருள் என இவை. எவன் என்பது அஃறிணை இருபாற்கும் உரியதொன்னே யெனினும் ஒருமைப் பான்மேல் வருவதே பெரும்பான்மை யென்பது உரையிற் கோடல் என்பதனாற் கொள்ளப்படும். (௩௧)

அவற்றுள் யாது என்னும் சொல்

௩௨. அவற்றுள்,
யாதென வரூஉம் வினாவின் கிளவி
அறிந்த பொருள்வயின் ஐயந் தீர்தற்குத்
தெரிந்த கிளவி யாதலும் உரித்தே.

என் - எனின், மேல் அறியாப் பொருண்மேல் நிகழும் என்ற மரபிலக்கணம் கூறிய சொற்களுள் ஒன்றற்குச் சிறிதறிந்தவழியும் வருமரபும் உண்டென்று அறிந்து அது காத்தல் நுதலிற்று.

(இ - ள்.) மேல்வினவப்பட்ட இரண்டனுள்ளும், யாது என்று சொல்ல வருகின்ற வினைப்பொருளை உணராநின்ற சொல், அறிந்த பொருளிடத்துண்டாகிய ஐயந்தீர்தற்கு ஆராய்ந்த சொல்லாதலும் உரித்து, (எ - று.)

(எ - டு.) ஒருவன் ஐந்து எருதுடையான், காப்பக் கொடுப்பவற்றுள் ஒன்று கெட்டதென்று காப்பானிடைச் சொல்லினவிடத்து எருதுடையான் வெள்ளை, காரி என்னும் ஐயம் தீர்தற்பொருட்டு அவற்றுள் யாதென்று வினாதல் என்பது.

மேற் சூத்திரத்துப் பின்தொடர்புடையது என்பதனைப் பின்வைக்கற்பாற்று என்பதனான் இத்தோடு இயைபுடைய யாதென்பதனை எவனின்

பின்வையாது, முன்வைத்த முறையன்றிக் கூற்றினன் அச்சூத்திரத்து எடுத்தோத்தானும், இலேசானும் அறியாப் பொருளிடத்து ஐயந்தீர்த் தற்கும் வருமெனக்கொள்க.

(எ - டு.) நமருள் யாவன் போயினன்? அவற்றுள் எவ்வெருது கோட்பட்டது என்றாற்போல்வன.

இச் சூத்திரத்தாற் கூறியது வழுவமைதியன்றோ எனின், முன்பு அறியாப்பொருள் என்றதும் ஒருவகையானும் அறியாமையென்பது இன்மையின், அதனைப் பார்க்க இது சிறுபான்மையென்பதல்லது வழு வென வாகாது என உணர்க.

இவற்றாற் சொல்லியது வினைப் பொருண்மேன் நிகழும் சொற்களது பெரும்பான்மை சிறுபான்மை மரபிலக்கணம் என உணர்க. (௩௨)

இனைத்தென அறிந்த சினைமுதற் சொல்லைச் சொல்லும் மரபு

௩௩. இனைத்தென அறிந்த சினைமுதற் கிளவிக்கு
வினைப்படு தொகுதியின் உம்மை வேண்டும்.

என் - எனின் இன்னும் உலகத்துப் பொருள்தான் வரையறை யுள்ளதாஉம் இல்லதாஉம் என இருவகைத்து; அவற்றுள் வரையறை யுள்ளது தொகை பெறும்வழிப் படுவதோர் மரபிலக்கணங் கூறுதல் நுதலிற்று.

(இ - ள்.) இத்துணையென்று வரையறுக்கப்பட்ட சினைக் கிளவியும், முதற்கிளவியும் தம்மை மேலொரு வினையொடு படுத்துச் சொல்லுவதாக அதற்குத் தொகை கொடுத்துக் கூறுமிடத்து அத் தொகைச்சொல் இறுதிக்கண் உம்மை கொடுத்துச் சொல்லுதலை வேண்டும், (எ - று.)

(எ - டு.) நம்பி கண்ணிரண்டும் நொந்தன, நங்கை முலையிரண்டும் வீங்கின: இது சினைக்கிளவி. தமிழ் நாட்டு மூவேந்தரும் வந்தார், முப்பத்து மூவரும் வந்தார்: இவை முதற்கிளவி.

வினைப்படு தொகுதி என்றமையான் தொகை கொடாத வினைப் பாட்டின்கண் உம்மையின்றியும், கண்நொந்தது கண்நொந்தன என வரும்.

'இரு தோள் தோழர்பற்ற' எனவும் 'ஒண்குழை யொன்றொல்கி' எனவும், உம்மையின்றி வந்தனவும் உளவாலெனின் அவை செய்யுள்: தொகுக்கும்வழித் தொகுத்தலென்பதனால் தொக்குநின்றன. இவ்வாறு வழக்கினுள் இல்லை யென்றுணர்க.

"இருதிணை மருங்கின் ஐம்பாலறிய' என்ற சூத்திரத்துள்ளும் உம்மை யின்றி வந்தன; உடம்பொடு புணர்த்த லென்பதனால் செய்யுளுள் உம்மையின்றி வருவனவும், உளவென்றலும் ஒன்று. இது சிறு பான்மை.

இனி வினைப்படாத பெயர்ப்பாட்டின்கண் தமிழ்நாட்டு மூவேந்தர் இவர் எனினும் அமையும் என்பது. (௬௩)

இல்லாப் பொருளைச் சொல்லும் மரபு

௬௪. மன்றைப் பொருளும் அன்ன இயற்றே.

என் - எனின் இன்னும் உலகத்துப் பொருள் இல்லதும் உள்ளதும் என இருவகைத்து; அவற்றுள் இல்லதன்மேற் பிறக்கும் மரபிலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) உலகத்து இல்லாப் பொருளும் மேலதனோடு ஒத்த இயல்பினையுடைத்து, (எ - று.)

அன்னவியல்பு என்பது மேலும் பிறபொருள் ஒழிந்தனவும் உளவெனப்படுதற்கு அஞ்சி முற்றும்மை கொடுக்க என்றான். அதுபோல யாண்டும் ஒழிவதஞ்சி எச்சவும்மை கொடுக்க என்பான் அன்னவியல் என்றான் என்பது.

(எ - டு.) முயற்கோடும் ஆமைமயிர்க் கம்பலமும் அம்மிப்பித்தும் துன்னூசிக் குடரும் சக்கிரவர்த்தி கோயிலுள்ளும் இல்லை யெனவரும்.

மேற் சூத்திரத்து முற்றும்மையோடு இச்சூத்திரத்தை மாட்டேற் றலின் முயற்கோடும் ஆமைமயிர்க் கம்பலமும் யாண்டும் இல்லை என்பது உதாரணமாகற்பாற் றெனின், யாண்டும் என்றது இல்லை யெனவும் வழக்கமைதலின் இதுவே பொருளன்மையை வாளாதே இல்லை யென்ப தன்றி ஓர் இடத்தொடுபடுத்து இல்லை யென்புழி எச்சவும்மை கொடாது விடிற் பிறவிடத் துண்மை சேறலின் மாட்டேற் றொருபுடைச் சேறல் என்பதாகக்கொண்டு மேற்காட்டிய உதாரணமாகற்பால என்பது. (௬௪)

இல்லாத பொருளைச் சொல்லும் மரபு

௬௫. எப்பொரு ளாயினும் அல்ல தில்லெனின்
அப்பொரு ளல்லாப் பிறிதுபொருள் கூறல்.

என் - எனின் சொற்றொகுத்து இறுத்தல் என்னுஞ் செப்பமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) எவ்வகைப்பட்ட பொருளாயினும் தன்னுழை யுள்ளதல்லதனை இல்லையெனலுறுமே யெனின், அவன் வினாவின பொருளல்லாத பிறிதுபொருள் கூறி இல்லையென்க, (எ - று.)

(எ - டு.) பயறுளவோ வணிகீர் என்றக்கால் உழுந்தல்லது இல்லை யென்க.

பயறுளவோ என்றால் அல்லதென்ப தொழியவும் பயறில்லை உழுந்துள என இருங்கரனவுஞ் சொல்லுப வாகலான் அல்லதென்பது வேண்டா

வெனின், அல்லதென்பது அஃறிணை யொருமைப்பாற்குரியதே எனினும் மற்றை நான்கு பாற்கண்ணும் பால்வழுவாயுந் திணைவழுவாயுஞ் சென்று மயங்கல் கண்டு, அதனைக் காத்தற் பொருட்டாகச் சொல்லினர் என்பது.

(எ - டு.) அவனல்லது, அவளல்லது, அவரல்லது, அதுவல்லது, அவையல்லது எனவரும்.

அவனல்லது என்புழி அல்லது என்பதனைப் பின் பிறன் இல்லை என்று வருவதனோடுபடுத்து வழுவாதல் அறிக.

அப்பொருளல்லா என்பது மிகை; அதனாற் பிறிது பொருள் கூறும் வழியும் அவன் வினையதற்கு இனமாயவற்றையே கூறுக என்றவாறு.

இதனாற் சொல்லியது செப்பின்கண் பிறப்பதோர் வழுக்கண்டு அதனை அமைத்தற்குக் கூறியவாறாயிற்று. இதனுள் வழுவென்பது என்னை யெனின், அவன் வினையதனை மறுப்பதன்றி, அவன் வினவாத பிறிதொன்றனையும் உடம்பட்டுக் கூறினமையின் என்பது. வழுவமைதியேற் பிறிதுபொருள் கூறுக என விதிக்கற்பாற்று அன்றெனின், அவ்வாறு கூறலாகாதென மறுத்து இவ்வாறு கூறுக என்பதோர் விதி நீர்மைத்தது என்பது. (கூ௫)

மேலதற்கோர் புறனடை

கூ௬. அப்பொருள் கூறின் சுட்டிக் கூறல்.

என் - எனின் இதுவும் மேலதற்கோர் புறனடையாயதோர் இறுத்தல் வகைமை கூறுதல் நுதலிற்று.

(இ - ள்.) அவன் வினவின பொருடன்னைச் சொல்லுமிடத்துச் சுட்டி இல்லையென்று சொல்லுக (எ - று.)

(எ - டு.) இப்பயறு அல்லது இல்லை. இவையல்லது பயறு இல்லை. (கூ௬)

இதுவுமது

கூஎ. பொருளொடு புணராச் சுட்டுப்பெய ராயினும்
பொருள் வேறுபடாஅ தொன்றா குமே.

என் - எனின் இஃது ஒருபொருண்மேல் இருபெயர் வழுக்காத்தல் நுதலிற்று. மேல் இவையல்லது பயறு இல்லை என்பதனைப்பற்றிப் பிறத்தலான் மேலதற்கே புறனடை யெனினும் அமையும்.

(இ - ள்.) பொருளொடு பொருந்தாச் சுட்டுப்பெயராயினும் பொருள்வேறுபடாது; ஒரு பொருளேயாகும், (எ - று.)

(எ - டு.) இவையல்லது பயறு இல்லை எனவரும்.

இவை யென்பது பயறே யெனினும் பயறென்பது பின்னுண்மையின் தன்மேற் செல்லாது பிறிதொன்றனைச் சொல்லியதுபோலும் நோக் குடைத்தே யெனினும் அமைக, (எ - று.)

இதனாற் சொல்லியது ஒருபொருண்மேல் இருபெயரும் பல பெயருங் கூறுதல் இலக்கணமே யெனினும் இயைபுபடக் கூறவேண்டுமென்று அவ்வழி இயைபில்லது கண்டு அம் மரபுவழுவினை அமைத்தவாறாயிற்று. (௧௭)

இயற்பெயரும் சுட்டுப்பெயரும் ஒருங்குவரின் அவற்றைச் சொல்லும் முறைமை

௧௮. இயற்பெயர்க் கிளவியுஞ் சுட்டுப்பெயர்க் கிளவியும்
வினைக்கொருங் கியலுங் காலந் தோன்றின்
சுட்டுப்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்
இயற்பெயர் வழிய என்மனார் புலவர்.

என் - எனின் இதுவும் ஒருபொருண்மேல் இருபெயர் வழுக்காத்தல் நுதலிற்று.

(இ - ள்.) இயற்பெயராகிய சொல்லும், சுட்டுப்பெயராகிய சொல்லும், வினைச்சொற்கண்ணே கூடவருங் காலந் தோன்றின் அவற்றுட் சுட்டுப்பெயர்க்கிளவியை முற்படச் சொல்லார்; இயற் பெயருக்குப் பின் வைத்துச் சொல்லுக என்று சொல்லுவர் ஆசிரியர், (எ - று.)

(எ - டு.) சாத்தன் வந்தான் அவற்குச் சோறு கொடுக்க; கொற்றி வந்தாள் அவட்குப் பூக்கொடுக்க என்றாற்போல்வன.

தன்னின முடித்தல் என்பதனானே விரவுப்பெயர்களின் இயற்பெய ரொழிந்தனவுங் கொள்ளப்படும்.

(எ - டு.) முடவன் வந்தான் அவற்குச் சோறுகொடுக்க என்றாற் போல்வன.

இயற்பெயர் வழிய என்ற மிகையான், உயர்திணைப் பெயர்க்கும் அஃறிணைப்பெயர்க்குஞ் சுட்டுப்பெயர் பிற் கூறுக என்பது கொள்ளப்படும்.

(எ - டு.) நம்பிவந்தான் அவற்குச் சோறு கொடுக்க; எருது வந்தது அதற்குப் புல் இடுக எனவரும்.

ஒருங்கியலும் என்ற மிகையான் இம்மூவகைப் பெயர்க்குஞ் சுட்டுப் பெயர் கூறும்வழி அகரச்சுட்டே கிளக்க என்பது கொள்ளப்படும்.

வினைக்கொருங்கியலும் என்று வினைக்கே கூறுதலாற் பெயர்க்கு யாது முற்கூறினும் அமையும் என்பது.

(எ - டு.) சாத்தன் அவன்; அவன் சாத்தன் எனவரும்.

இதனாற் சொல்லியது பொருட்பெயரோடு சுட்டுப்பெயர் கூறும்வழிப் பிற்கூறுது முற்கூறின் பிற பொருள் மேலே நோக்குப்படுகிற்பது கண்டு அவ்வாறு கூறற்க என மரபு வழுக் காத்தவாறு. (எ - று.) (கஅ)

எய்தியது விலக்கல்

கூகூ. முற்படக் கிளத்தல் செய்யுளுள் உரித்தே.

என் - எனின் எய்தியது விலக்குதல் நுதலிற்று,

(இ - ள்.) மூவகைப் பெயர்களுள் சுட்டுப்பெயரை முற்படச் சொல்லுதல் செய்யுளிடத்தாயின் அமையும், (எ - று.)

(எ - டு.) "அவனணங்கு நோய்செய்தான் ஆயிழாய் வேலன்,
விறன்மிகுதார்ச் சேந்தன்பேர் வாழ்த்தி - முகனமர்ந்
தன்னை யலர்கடப்பந் தாரணியி லெல்லைகொல்,
பின்னை யதன்கண் விளைவு"

என வரும். பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க.

இதனாற் சொல்லியது முற்கூறலாகாது என்னப்பட்ட சுட்டுப்பெயர் மொழிமாற்றியும் பொருள்கொள்ளும் நயம் செய்யுட்கண் உண்மையான் அதனகத்தாயின் அமையும் என்று நேர்ந்தவாறாயிற்று. (கூகூ)

சுட்டுமுதலாகிய காரணக்கிளவியைச் சொல்லும்முறை

சுo. சுட்டுமுத லாகிய காரணக் கிளவியும்
சுட்டுப்பெய ரியற்கையின் செறியத் தோன்றும்.

என் - எனின் இதுவுஞ் சுட்டுப்பெயர் ஆராய்ச்சியே கூறுதல் நுதலிற்று.

(இ - ள்.) சுட்டெழுத்தை முதலாகவுடைய காரணப்பொருளை உணரநின்ற சொல்லும் மேற்கூறிய சுட்டுப்பெயர் இயல்பு போலப் பெயர்ப்பின்னே யாப்புறத் தோன்றும், (எ - று.)

(எ - டு.) சாத்தன் கையெழுதுமாறு வல்லன் அதனால் தன் ஆசிரியன் உவக்கும்; சாத்தி சாந்தரைக்குமாறு வல்லள் அதனாற் கொண்டவன் உவக்கும் எனவரும். மேற்கூறிய வகைகளெல்லாம் இதற்கும் ஒக்கும்.

இதுவும் ஆண்டே யடங்காதோவெனின், ஆண்டுச் சுட்டுப்பொருள் வழி வந்தது, ஈண்டு அப்பொருளது குணத்துவழி வந்தது என உணர்க. (சுo)

இயற்பெயரும் சிறப்புப்பெயரும் ஒருங்குவரின் அவற்றைச் சொல்லும் முறைமை

௪௧. சிறப்பி னாகிய பெயர்நிலைக் கிளவிக்கும்
இயற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்.

என் - எனின் இதுவும் ஒருபொருண்மேல் இருபெயர் வழுக்காத்தலை நுதலிற்று.

(இ - ள்.) சிறப்பினாகிய பெயர்ச்சொற்கும் உம்மையாற் பிற பெயர்க்கும் இயற்பெயராகிய சொல்லை முற்படச் சொல்லார்; பிற்படச் சொல்லுவர் ஆசிரியர், (எ - று.)

(எ - டு.) ஏனாதி நல்லுதடன், வாயிலான் சாத்தன், படைத்தலைவன் கீரன் என இவை சிறப்புப்பெயர்.

பிறவும் என்றது குலத்தினான் ஆயபெயரும், கல்வியினான் ஆய பெயரும், தொழிலினான் ஆயபெயரும், பிறவும் என்பது.

(எ - டு.) சேரமான் சேரலாதன், சோழன் நலங்கிள்ளி, பாண்டியன் மாறன்: இவை குலப்பெயர். ஆசிரியன் சாத்தன் என்றாற்போல்வன கல்வியினா னாகிய பெயர். வண்ணாரச் சாத்தன், தச்சக் கொற்றன், நாவிதன் மாறன்: இவை தொழிலினானாகிய பெயர்.

இதனாற் சொல்லியது ஒருபொருட்கு இருபெயர் கூறும்வழி யாது முற்கூறினும் அமையும் என்று கூறலாகாது. மேற்றொட்டுங் கூறிவந்த மரபானே கூறுவிடின் அப்பொருண்மேற் செல்லாது பிறபொருண்மேல் நோக்குப்படுமென மரபு வழுவற்க என்றவாறாயிற்று. (௪௧)

ஒருபொருள்மேல் பலபெயர் வரின் அவற்றைச் சொல்லும் முறைமை

௪௨. ஒருபொருள் குறித்த வேறுபெயர்க் கிளவி
தொழில்வேறு கிளப்பின் ஒன்றிடன் இலவே.

என் - எனின் ஒருபொருள்மேற் பலபெயர் வழூஉக் காத்தல் நுதலிற்று.

(இ - ள்.) ஒரு பொருளைக் கருதிய வேறு வேறாகிய பெயர்ச் சொற் பெயர்க்கு வரும் வினையை வேறுபடச் சொல்லின் ஒரு பொருட்குப் பொருந்தும் இடமில்லை, அதனான் வரும்பெயரை யெல்லாஞ் சொல்லிப் பின் தொழில்சொல்லுக, (எ - று.)

(எ - டு.) ஆசிரியன் பேரூர்கிழான் செயிற்றியன் இளங்கண்ணன் சாத்தன் வந்தான் என வரும்.

இனி இரட்டுற மொழிதல் என்னும் ஞாபகத்தால் ஒரு பொருளைக் கருதிய வேறு வேறாகிய பெயர்ச் சொற்கள் வேற்றுத் தொழிலைப் பெயர் தோறுஞ் சொல்லின் ஒரு பொருட்குப் பொருந்தும் இடமில என வேறல்லாத ஒரு தொழிலைப் பெயர்தோறுஞ் சொல்லின் ஒரு பொருட்குப் பொருந்தும் இடனுடையதூஉங் கொள்ளப்படும்.

(எ - டு.) ஆசிரியன் வந்தான், பேரூர்கிழான் வந்தான், செயிற்றியன் வந்தான், இளங்கண்ணன் வந்தான், சாத்தன் வந்தான் எனவரும்.

இதனாற் சொல்லியது ஒரு பொருள்மேல் வரும் பல பெயர்க்கண் மரபிலக்கணமும் மரபு வழுவமைதியுங் கூறியவாறாயிற்று. ஞாபகத்தான் கொண்டது மரபு வழுவமைதி. அதனை வழூஉவென்றது என்னை யெனின் ஒருநிலைக்கண் அதுதானே பல பொருள்மேலுஞ் சேறலான் என்பது. (௪உ)

எண்ணின் கண் வரும் திணைவழுவமைதி

௪௩. தன்மைச் சொல்லே அஃறிணைக் கிளவியென்
றெண்ணுவழி மருங்கின் விரவுதல் வரையார்.

என் - எனின் எண்ணின்கண் திணைவழு வமையுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) தன்மையாகிய சொல்லினையும் அஃறிணையாகிய சொல்லினையும் விரவி யெண்ணுமிடத்து உண்டாகிய திணைவிராய் வருதலை நீக்கார் கொள்வர் ஆசிரியர், (எ - று.)

என்று என்றது எண்ணசை.

(எ - டு.) "யானும் என் னெஃகமுஞ் சாறும்" "அவனுடைய யானைக்குஞ் சேனைக்கும் போர்" என வரும்.

இதனுள் அவன் வந்தது என்றாற் போலும் திணை வழுவில்லை யெனின், அதுவேயல்ல, திணைவழூஉ எண்ணுமிடத்தும் இன மொத்தனவே எண்ணுக என முன் சொல்லினமையானும், திணைவழுவாவது பொருந்தாது விடுவது என்பதாகலானும், இதுவும் திணைவழூஉ எனப்படும். இவ்வாறு இடர்ப்படுகின்றது என்னை? இதனை மரபு வழுவமைதி என்று கூறுக எனின், 'வியங்கோ ளெண்ணுப்பெயர் திணைவிரவு வரையார்' என ஆசிரியர் மேற் கூறுகின்றமையின் இதற்கும் அதுவே கருத்து என்பது பெறுதும்.

இனிச் சொல்லொடு சொல் முடித்தலே திணைவழூ வெனினுஞ் 'சாறும்' என்னும் உயர்திணை முற்றுச் சொல்லே எஃகம் என்னும் அஃறிணையினையும் உளப்படுத்தமையின் வழுவும் இதன்கண் உண்டு என உணர்வது.

மருங்கின் என்ற மிகையான், முன்னிலையோடு அஃறிணை எண்ணுதலும், படர்க்கையொடு அஃறிணை எண்ணுதலும் கொள்க.

(எ - டு.) நீயும் நின்படைக்கலமுஞ் சாறிர், அவனும் தன் படைக்கலமும் சாறும் எனவரும்.

இவற்றுள், எண்ணுவழு வல்லது முடிபுவழுவில்லை. இதனாற் சொல்லியது எண்ணுப்பொருட்கண் திணைபற்றிப் பிறக்கும் மரபு வழுவமைதி யென உணர்க. சிறுபான்மை திணைவழூஉ வமைதியும் என வுணர்க. (௪௩)

ஒருவன் ஒருத்திப் பெயர் மேல் எண்ணில எனல்

௪௪. ஒருமையெண்ணின் பொதுப்பிரி பாற்சொல்
ஒருமைக் கல்லது எண்ணுமுறை நில்லாது.

என் - எனின் எண்ணும் வகையாற் சொல்லும் ஒருவகைச் சொல் நிகழ்ச்சி உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) ஒருமைப் பொருட்குரிய எண்ணைய், உயர்திணை இருபாற்கும் பொதுவாகிய ஒருவர் என்னுஞ் சொல்லினின்றும் பொதுமைகெடப் பிரித்துணரப்படும் ஒருவன் என்னுஞ் சொல்லாயினும் ஒருத்தி என்னுஞ் சொல்லாயினும் எண்ணுதபொழுது தன் ஒருமை விளங்குந்துணையல்லது, எண்ணுமுறைக்கண், முதலெண்ணுங் காலும் அவ்வாறே எண்ணுக.

(எ - டு.) ஆண்மக்கள் பலர் நின்றாரை எண்ணுங்காலும் ஒருவர் இருவர் நால்வர் என்று எண்ணுக; பெண்டிர் பலரை எண்ணுங்காலும் அவ்வாறே எண்ணுக.

ஒருவன் என்பதும் ஒருத்தி என்பதும் ஒருமையெண்ணே;. எண்ணுமுறைமைக்கண்ணும் ஆகாமை யென்னை யெனின், பொருளான் ஆகாமை இல்லை. ஒருவன் என்பதற்கேற்ப மேலும் இருவன் மூவன் என னகரவீற்றியைபு இன்மையானும், ஒருத்தி என்பதற்கு ஏற்ப இருத்தி முத்தியென இகரவீற்றியைபின்மையானும், மேல் வருகின்ற ரகரவீறோடு ஒருவர் என்பது சொல்லியைபுடைமையின் அதுவே கொள்ளப்பட்டது. இதனாற் சொல்லியது எண்ணின்கட் பிறக்கும் மரபிலக்கணம் என உணர்க. (௪௪)

வியங்கோள் எண்ணுப்பெயர்

௪௫. வியங்கோள் எண்ணுப்பெயர் திணைவிரவு
வரையார்.

என் - எனின் எண்ணின்கண் திணைவழுவமையுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) வியங்கோட்கண் எண்ணப்படும் பெயரைத் திணைவிராய்வரும் வரவினை நீக்கார் கொள்வர் ஆசிரியர், (எ - று.)

(எ - டு.) ஆவும் ஆயனுஞ் செல்க எனவரும்.

தன்னினமுடித்தல் என்பதனான், வியங்கோளல்லாத விரவுவினைக் கண்ணுஞ் சிறுபான்மை வருவன கொள்க. அவை ஆவும் ஆயனுஞ் சென்ற கானம் என்பன போல்வன.

இதனாற் கூறியது எண்ணின்கண் திணைபற்றிப் பிறக்கும் மரபுவழூஉ வமைதி என உணர்க. (சரு)

வேறுவினைப் பொதுச் சொற்களது மரபு

சசா. வேறுவினைப் பொதுச்சொல் ஒருவினை கிளவா.

என் - எனின் வேறுவினைப் பொதுச் சொற்களது மரபுவழுக் காத்தல் நுதலிற்று.

(இ - ள்.) வேறு வினையுடையவாகிய பல பொருளையும் பொதிந்துநின்ற பொதுச்சொல்லை ஒரு பொருளது வினையாற் சொல்லார் உலகத்தார்; அதனான் அவற்றிற் கெல்லாம் பொது வாகிய வினையானே சொல்லுக, (எ - று.)

(எ - டு.) அடிசில் கைதொட்டார், அயின்றார்; அணிகலம் அணிந்தார், மெய்ப்படுத்தார்: இயம் இயம்பினார், படுத்தார் எனவரும்.

இதனாற் சொல்லியது பலபொருட்குரிய பொதுப் பெயர்ச்சொல்லை எடுத்து மேலதன் வினைகூறும் வழி மரபு வழுவற்க என்றவாறு.

இஃதிலக்கணமாகப் பல பொருளும் ஒருசொல்லுதற்கண் அடங்கி நில்லாது வேறு வேறு அடிசில் எனவும், அணி எனவும் வரும் வரவும், ஒன்றன்வினை யொன்றற்கு வரும் வரவும் வழுவாக்கிச் "செய்யுண் மருங்கினும்" (எச்ச-சுக) என்னும் அதிகாரப் புறனடையான் அமைத்துக் கொள்க என்பது. (சசா)

இதுவுமது

சஎ. *எண்ணுங் காலும் அதுவதன் மரபே.

என் - எனின் இதுவும் அது.

(இ - ள்.) வேறுவினைப் பொதுச் சொற்களைப் பொதுமையிற் பிரித்து எண்ணுங்காலத்தும் ஒன்றன் வினையாற் கிளவாது பொது வினையாற் கிளத்தல் அதற்கிலக்கணம், (எ - று.)

* 'எண்ணுங் காலை' என்பது தெய்வச்சிலையார் பாடம்.

(எ - டு.) யாழுங் குழலும் பறையும் இயம்பினார் எனவரும்.

இதனாற் சொல்லியது அப் பொதுச் சொற்களைப் பிரித்தெண்ணும் வழியும் வினை முடிபின் மரபு வழுவாமற் சொல்லுக என்பதாயிற்று. (சஎ)

இரட்டைக்கிளவி

சஅ. *இரட்டைக் கிளவி இரட்டிற் பிரிந்திசையா.

என் - எனின் உரிச்சொற்கண் மரபு வழுக்காத்தல் நுதலிற்று.

(இ - ள்.) இரட்டித்துச் சொல்லப்படுஞ் சொற்கள் அவ்விரட்டித்துச் சொல்லுதலிற் பிரித்துச் சொல்லப்படா, (எ - று.)

அது இசை, குறிப்பு, பண்பென மூன்று வகைப்படும்.

(எ - டு.) சுருசுருத்தது, மொடு மொடுத்தது என இவை இசை பற்றி வந்தன. கொறு கொறுத்தன, மொறு மொறுத்தார் என்பன குறிப்புப் பற்றி வந்தன. குறுகுறுத்தார், கறுகறுத்தார் என்பன பண்பு பற்றிவந்தன.

இதனாற் சொல்லியது, ஒரு பொருட்கண் இரு சொல்லினை ஒரு பொருள் வேறுபாடு குறியாது கூறின் மரபல்ல எனினும், அவ்வாறு இரட்டிக் கூறலே அவற்றிற்கு அடிப்படையாகலின், இனி, அதனை மரபு வழுவற்க என மரபு கூறியவாறாயிற்று. இது மரபு வழுவமைதி போலும். (சஅ)

ஒருபெயர்ப் பொதுச்சொல்லைச் சொல்லும் முறைமை

சகூ. ஒருபெயர்ப் பொதுச்சொல் உள்பொருள் ஒழியத்
தெரிபுவேறு கிளத்தல் தலைமையும் பன்மையும்
†உயர்திணை மருங்கினும் அஃறிணை மருங்கினும்.

என் - எனின் ஒருபெயர்ப் பொதுச் சொற்கண் மரபுவழுக் காத்தல் நுதலிற்று.

(இ - ள்.) ஒரு பெயர்ப்பட நின்ற பொதுச் சொல்லை ஆண்டுள்ள பொருள் ஒழிய உயர்திணைக்கண்ணும் தெரிந்துகொண்டு வேறே கிளத்தற்குக் காரணம் அப்பொருட்கண் தலைமையும் பன்மையுமாம் என்றவாறு.

---

* இரட்டுப் பிரிந்திசையா என்பது இளம்பூரணர் பாடம்.

† இவ்வரியை அடுத்த நூற்பாவின் முதல் வரியாகச் சேர்த்துக் கொள்வர் தெய்வச் சிலையார்.

(எ - டு.) பார்ப்பனச்சேரி என்பது உயர்திணைக்கண் தலைமை பற்றி வந்தது. எயினர் நாடு என்பதும் குறிஞ்சி நாடு என்பதும் அத்திணைக் கண் பன்மை பற்றிய வழக்கு. கமுகந்தோட்டம் என்பதும் அஃறிணைக் கண் தலைமைபற்றி வந்தது. இது தானே பன்மை யுள்வழிப் பன்மை பற்றி வந்ததூஉமாம். ஒடுவங்காடு, காரைக்காடு என்பன பன்மைபற்றி வந்தன. சேரி என்பது பல குடியுஞ் சேர்ந்திருப்பது. தோட்டம் என் பது பலபொருளுந் தொக்கு நின்ற இடம். பிறவும் அன்ன.

இதனாற் சொல்லியது பல பொருளும் உள்வழிப் பிறப்பதோர் பெயர்ச்சொல்லினை அப் பல பொருளினையும் உடன் கூறியன்றே கூறற் பாலது; அவ்வாறன்றி அப் பொருட்டலைமையும் பன்மையும் பற்றிச் சொல் தொகுத்திறுத்தல் கண்டு அம் மரபுவழு அமைத்தற்குக் காரணம் கூறியவாறாயிற்று. (சக)

ஒன்றொழி பொதுச்சொல்

ருo. பெயரினுந் தொழிலினும் பிரிபவை யெல்லாம்
மயங்கல் கூடா வழக்குவழிப் பட்டன.

என் - எனின் ஆண் பெண் என்னும் இருபாற்கும் பொதுவாகிய பெயர்க்கண் வரும் மரபுவழுக் காத்தல் நுதலிற்று.

(இ - ள்.) பெயரினும் தொழிலினும் ஆண் பெண் என்னும் இருபாற்குமுரிய பொதுமையிற் பிரிந்து, ஒரு பாற்கண்ணே நடப் பன வெல்லாம் இலக்கண முறைமையின் மயங்கின என்று மாற்றல் கூடா; யாதோ காரணமெனின் அம்மயக்கம் வழக்கின் அடிப்பட்ட வதனான், (எ - று.)

அப்பொதுப்பெயர், உயர்திணை, அஃறிணை, ஆண்பால் பெண்பாலெ னவும் பெயர்வினையோடு வைத்துறழ எண்வகைப்படும். அவையாவன: உயர்திணைக்கண் பெயரிற்பிரிந்த பெண்ணொழி மிகுசொல்லும், ஆணொழி மிகுசொல்லும், தொழிலிற் பிரிந்த பெண்ணொழி மிகுசொல்லும், ஆணொழி மிகுசொல்லும், அஃறிணைக்கண் பெயரிற் பிரிந்த பெண்ணொழி மிகுசொல்லும், ஆணொழி மிகுசொல்லும், தொழிலிற் பிரிந்த பெண் ணொழி மிகுசொல்லும் ஆணொழி மிகுசொல்லும் என இவை.

(எ - டு.) வடுகரசர் ஆயிரவர் மக்களையுடையர், பெருந்தேவி பொறையுயிர்த்த கட்டிற்கீழ் நால்வர் மக்கள் உளர் எனவும், அரசனோடு ஆயிரவர் மக்கள் தாவடி போயினார், இன்று இவ்வூரார் எல்லாந் தைநீர் ஆடுப எனவும் உயர்திணைக்கட் பெயரினும் தொழிலினும் பிரிந்த பெண் ணொழி மிகுசொல்லும் ஆணொழி மிகுசொல்லும், நம் அரசன் ஆயிரம் யானையை யுடையன், நம்பி நூறு எருமை யுடையன் எனவும், இன்று இவ்வூர்ப் பெற்றமெல்லாம் உழவு ஒழிந்தன, இன்று இவ்வூர்ப் பெற்ற

மெல்லாம் அறத்திற்குக் கறக்கும் எனவும் இவை அஃறிணைக்கட் பெய ரினுந் தொழிலினும் பிரிந்த பெண்மொழி மிகுசொல்லும் ஆண்மொழி மிகு சொல்லுமாம்.

எல்லாம் என்றதனான் மேற்சூத்திரத்து ஒருபெயர்ப் பொதுச் சொலன்றித் தலைமை பற்றி வருவனவும் சிறுபான்மை பற்றி வருவனவும் கொள்க.

(எ - டு.) ஆதீண்டுகுற்றி, வயிரக்கடகம் என்னுந் தொடக்கத்தன.

இன்னும் அதனானே இனஞ் செப்பாது ஒரு தொழிற்கண் மிகை விளக்குதற் பொருட்டாக வருவனவும் அமைத்துக் கொள்க.

(எ - டு.) இவர் பெரிதும் சொல்லுமாறு வல்லர், இவர் பெரிதுங் கால் கொண்டோடுவர், இவ்வெருது புல்தின்னும் எனவரும்.

இதனாற் சொல்லியது இருதிணையிடத்தும் ஆண்பாற்கும் பெண் பாற்கும் சொல்லுதற்கண்ணே உரிய பெயர்கள் அப்பொதுமை யொழிய ஒரு பாற்கண்ணே யோடுதன் மரபன்று; மரபன்றாயினும் அமையுமென்று மரபுவழு அமைத்தவாறு. இலேசினாற் கொண்டனவும் மரபுவழுவமைதி என உணர்க. (௫0)

திணை விரவிய பெயர்கள் முடியுமாறு

௫க. பலவயி னானும் எண்ணுத்திணை விரவுப்பெயர்
அஃறிணை முடிபின செய்யு ளுள்ளே.

என் - எனின் செய்யுளகத்துத் திணைவழுவமையுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) பல விடத்தானுந் திணை விரவி யெண்ணப்படும் பெயர் அஃறிணை முடிபினவாம்; செய்யுளகத்து, (எ - று.)

(எ - டு.)
'வடுக ரருவாளர் வான்கரு நாடர்
சுடுகாடு பேயெருமை யென்றிவை யாறுங்
குறுகா ரறிவுடை யார்.'

எனவரும்.

பலவயினானும் என்றதனாற் சிலவயினான் திணை விரவாது உயர்திணை யான் எண்ணி அஃறிணையான் முடிவனவும் கொள்க என்பது.

(எ - டு.) "பாணன் பறையன் துடியன் கடம்பன் என்று, இந்நான் கல்லது குடியுமில்லை" எனவரும்.

சிலவயினான் திணை விரவி, எண்ணி உயர்திணையான் முடிவனவுங் கொள்ளாரோ வெனின், சான்றோர் செய்யுட்கு அவ்வாறு வருவனவா யின்மையிற் கொள்ளாம் என்பது.

'வடுகரருவாளர்' என்பதூஉம் சான்றோர்செய்யுள் அன்றாலெனின்,

* 'கடுஞ்சினத்த கொல்களிறுங்
கதழ்பரிய கலிமாவு,
நெடுங்கொடிய நிமிர்தேரும்
நெஞ்சுடைய புகன் மறவரும் என,
நான்குடன் மாண்டதாயினும்'

என்பதும் உண்மையின் அமையும் என்பது.

அஃதேல் 'திங்களுஞ் சான்றோரு மொப்பர்' (நாலடி-) எனவும். "வேந்தன் பெரும்பதி மண்ணுண் மாந்தர் ஈங்கிம்மூவர் இதற்குரியாரே" எனவுஞ் சான்றோர் செய்யுளுள்ளும் வருமாலெனின் திங்களும், பதியும் என்பன அஃறிணை முடிபினவெனினும் தாம் உயர்திணைப் பொருள வாகலின், அவை இந்நிகரனவல்ல. இவற்றின்கட் சிறுபான்மை வழுவினையும் இப்பலவயினானும் என்றதனாதல் அதிகாரப் புறனடையானாதல் அமைத்தும் என்பது.

இதனாற் சொல்லியது செய்யுட்கண் திணைவிரவி எண்ணியவழிப் பொதுவாக முடியாது ஒரு திணையான் முடிவது கண்டு அதனை அமைத்தவாறு.

இனிப் பொது முடிபிலவென்று அஃறிணை முடிபிற்றாதற்குக் காரணம் என்னையெனின் அவ்வாறெண்ணிய உயர்திணையும் பொருளென்னும் பொதுமையான் அஃறிணையின் அடங்கும். உயர்திணையுள் அஃறிணை அடங்காது என்பது போலும். (இக)

பலபொருள் ஒருசொல் இருவகை எனல்

நிஉ. வினைவேறு படூஉம் பலபொருள் ஒருசொல்
வினைவேறு படாஅப் பலபொருள் ஒருசொலென்
றாயிரு வகைய பலபொருள் ஒருசொல்.

என்-எனின் மேற் பல சொல்லான் வரும் ஒரு பொருளுணர்த்தினான்: இனி ஒரு சொல்லான் வரும் பல பொருளுணர்த்துவான் அவற்றது பெயரும் முறையும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) வினையினான் வேறுபடும் பலபொருள் ஒரு சொல்லும், வினையினான் வேறுபடாத பலபொருள் ஒரு சொல்லும் என இருவகைய பலபொருள் ஒருசொல், (எ - று.)

(எ - டு.) மா, வாள், கோல், கன்று, தளிர், பூ, காய், பழம் என்னுந் தொடக்கத்தன. இவற்றுள் மா என்பதே பலசாதியு முணர்த்திப்

* புறம். - 55 : 7—9.

பொதுவாய் நின்றது. அல்லன எல்லாம் ஒரு சாதியை உணர நிற்றலின் பொதுமையிலவால் எனின், அவ்வாறு பொதுமைப் படாதாயினும் விகற்பித்து நோக்கத் தம்முள்ளே சாதி மாறுபாடுடைய என உணர்க.

இவற்றான் உலகத்துப் பெயர்கள் எல்லாம் ஒரு பொருளோடும், ஓரிடத்தோடும், ஒரு காலத்தோடும், பண்போடும், தொழிலோடும், உறுப்போடும் படுத்துநோக்கப் பலபொருள் ஒருசொல் எனப்படும் போலும். (௫௨)

வினை வேறுபடூஉம் பலபொருளொரு சொல்

௫௩. அவற்றுள்,
வினைவேறு படூஉம் பலபொருள் ஒருசொல்
வேறுபடு வினையினும் இனத்தினும் சார்பினும்
தேறத் தோன்றும் பொருள்தெரி நிலையே.

என் - எனின் மேற்கூறிய பலபொருள் ஒரு சொல்லினுள் வினைவேறு படூஉம் பலபொருள் ஒரு சொல்லாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மேற் சொல்லப்பட்ட இரண்டனுள் வினை வேறு படும் பலபொருளொருசொல் வேறுபடுக்கும் வினையானும், வினையோடுவரும் இனத்தானும், சார்பினானும் இப்பொழுது இவன் கூறியது இப்பொருள் எனத் தெளியத் தோன்றும் பொருளாராய்ச்சிப்படும் நிலைமைக்கண், (எ - று.)

(எ - டு.) மாப் பூத்தது, காய்த்தது: இவை வேறுபடு வினை. மாவும் அரசும் புலம்படர்ந்தன, மாவும் மருதும் ஓங்கின: இவை இனம் பற்றி வந்தன. வில் பற்றி நின்று கோல் தா என்பதூஉம், தாம்பு பற்றி நின்று கோல் தா என்பதூஉம், பலகைபற்றி நின்று வாள் தா என்பதூஉம் சார்பு பற்றி நின்றன.

உரையிற்கோடல் என்பதனால் பல பொருளொரு சொல் வினை இனம் சார்புகளைப்பற்றிப் பலபொருளை ஒழித்து ஒருபொருண்மேல் நில்லாது, சிலபொருளொழித்துச் சிலபொருண்மேல் நிற்பதூஉங் கொள்ளப்படும்.

* 'கழிப்பூக் குற்றும் கானல் அல்கி' என்றாற் போலவரும்.

இனமுஞ் சார்பும் பற்றி வரும் அவையிற்றை வினைவேறுபடூஉம் பலபொருள் ஒருசொல் என்றது என்னை யெனின், அவ்வினமுஞ் சார்பும் அவ்வினைச் சொல்லை வேறுபடுக்கும்வழி அதனோடு கூடி நின்று வேறுபடுப்பின், அல்லது தாமாக நில்லாமை நோக்கி அவையிற்றையும் வினை வேறுபடூஉம் பலபொருள் ஒரு சொல்லென்ப.

* அகநானூறு ௩௩0.

பொதுச் சூத்திரத்துள் இரண்டையும் ஒன்றாக அடக்கி, ஈண்டு அதன் பாகுபாடு தோன்ற விரித்துக் கூறினவாறு போலும். அதனால் சூத்திரத்து இனமுஞ் சார்பும் என்பனவற்றை முன்னின்ற வினையோடு தொடர்புபடப் பொருள் உரைத்துக் கொள்க. (௫௩)

மேலதற்கோர் புறனடை

௫௪. *ஒன்றுவினை மருங்கின் ஒன்றித் தோன்றும்.

என் - எனின் மேற் சூத்திரத்திற்கோர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மேற்கூறிய வினை வேறுபடூஉம் பல பொருளொரு சொல், வினையான் வேறுபட நில்லாது பொதுவாகிய வினையோடு பொருந்திப் பொருட் பொதுமைப்பட நின்றுழியும், மேல் வினையான் வேறுபட்டாற் போல இன்னது இது வென வேறுபட நிற்றலும் வழக்கிடத்து உண்டு, (எ - று.)

(எ - டு.) மா வீழ்ந்தது என்பது, வீழ்தல் வினை எல்லா மாவிற்கும் பொதுவே யெனினும், இவ்விடத்து இக்காலத்து இவன் சொல்லுகிறது இம்மாவினை யென்று உணர நிற்கும் என்றவாறு. என்றது முன்கூறிய வினைவேறுபடாப் பலபொருளொருசொல்லும் ஒருநிலைமைக்கண் வினை வேறுபடூஉம் பல பொருள் ஒருசொற்போல உணர நிற்கும், (எ-று.)

அஃதேல் பல பொருள் ஒரு சொல்வினை இரண்டாக ஆக்கியது என்னை ஒன்றே ஆகற்பாற்றெனின், அவ்வாறு ஒன்றாயதனையே உணர்தல் வேற்றுமை நோக்கி இரண்டாகப் பகுத்தார் என உணர்க. (௫௪)

வினை வேறுபடாஅப் பலபொருளொருசொல்

௫௫. வினைவேறு படாஅப் பலபொருள் ஒருசொல்
நினையுங் காலைக் கிளந்தாங் கியலும்.

என் - எனின். வினை வேறுபடாப் பலபொருளொரு சொல் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) வினையினான் வேறுபடாத பல பொருள் ஒருசொல் ஆராயுங்காலத்து இன்னது இது எனக் கிளக்கப்பட்ட ஆராய்ச்சி யையுடைய இடத்து நடக்கும், (எ - று.)

(எ - டு.) கன்று நீர் ஊட்டுக என்புழிக் கேட்டான் இன்ன கன்றென்பது அறியானாமே யெனின், ஆன்கன்று, எருமைக்கன்று, பூங்கன்று எனக் கிளந்து சொல்லுக.

* இந் நூற்பாவினை அடுத்த நூற்பாவோடு இணைத்து ஒரே நூற்பா வாகக் கொள்வர் சேனாவரையர்.

'நினையுங்காலை' என்றதனான் கிளவாது கூறினால் கருமச்சிதை வுண்டெனிற் கிளந்து கூறுக; அல்வழி வேண்டியவாறு கூறுக என்பது பெறப்பட்டது. *'கன்றாற்றுப் படுத்த புன்தலைச் சிறார்' என்புழிக் கருமஞ் சிதைந்தது என்பதின்மையின் கிளவாது சொல்லவும் அமைந்தது என்பது.

எனவே பலபொருள் ஒருசொல் வேறுபடுவினையான் உணரப்பட்டு நிற்றலும், வேறுபடுவினையின்றிப் பொதுவினையான் உணரப்பட்டு நிற்றலும், பொதுவினையால் கருமச்சிதை வுள்வழிக் கிளந்து சொல்லப் பட்டு நிற்றலும், கருமச்சிதை வுள்வழிப் பொதுவினையாற் கிளவாது சொல்லப்பட்டு நிற்றலும் என நான்குபகுதிப்பட்டது என உணர்க. இச் சூத்திரங்களாற் கூறியது பலபொருள் ஒருசொல் வினைபற்றிப் பிறக்கும் மரபிலக்கணப் பாகுபாடு என உணர்க. (௫௪)

மரபு வழுக்காத்தல்

௫௫. குறித்தோன் கூற்றம் தெரித்துமொழி கிளவி.

என் - எனின், இதுவுமோர் செயற்கைப் பொருளின் மேல் மரபுவழுக் காத்தல் நுதலிற்று.

(இ - ள்.) உலகத் தொப்ப முடிந்த பொருளை ஒவ்வாமற் சொல்லக்குறித்தவன், சொல்லுஞ் சொல்லாதற்கு ஓர் காரணங் கூறிக் கூறுஞ்சொல்லாயிருக்கும், (எ - று.)

(எ - டு.)
பல்லார்தோ டோய்ந்து வருதலாற் †பூம்பொய்கை
நல்வய லூரநின் றார்புலால்-புல்லெருக்க
மாசின் மணிப்பூணெம் மைந்தன் மலைந்தமையால்
காதற்றாய் நாறு மெமக்கு.

இதனால் சொல்லியது, ஓர் இயற்கைப்பொருள் ஓர் இயற்கையாக ஓர் காரணங்கருதிக் கூறுமிடத்துத் தான் கருதிய காரணத்தினை விளங்கச் சொல்லுகவென ஓர் மரபாராய்ச்சி கூறியவாறு. இதுவும் ஓர் மரபு வழுவமைதிபோலும். (௫௫)

சில உயர்திணைப் பெயர் அஃறிணை முடிபு கோடல்

௫௭. குடிமை ஆண்மை இளமை மூப்பே
அடிமை வன்மை விருந்தே குழுவே
பெண்மை அரசே மகவே குழவி
தன்மை திரிபெயர் உறுப்பின் கிளவி
காதல் சிறப்பே செறற்சொல் விறற்சொ
[லென்(று)

* குறுந்தொகை 241.　　† பாய்புனல் என்பதும் பாடம்.

ஆவறு மூன்றும் உளப்படத் தொகைஇ
அன்ன பிறவும் அவற்றொடு சிவணி
முன்னத்தின் உணருங் கிளவி யெல்லாம்
உயர்திணை மருங்கின் நிலையின வாயினும்
அஃறிணை மருங்கின் கிளந்தாங் கியலும்.

என் - எனின், திணைவழுக்காத்தல் நுதலிற்று.

(இ - ள்.) குடிமை என்னும் சொல்லும், ஆண்மை யென்னும் சொல்லும், இளமை யென்னும் சொல்லும், மூப்பு என்னும் சொல்லும், அடிமையென்னும் சொல்லும், வன்மையென்னும் சொல்லும், விருந்து என்னும் சொல்லும், குழு என்னும் சொல்லும், பெண்மை யென்னும் சொல்லும், அரசு என்னும் சொல்லும், மகவு என்னும் சொல்லும், குழவி யென்னும் சொல்லும், தன்மை திரிந்ததனாற் பெற்ற பெயர்ச் சொல்லும், உறுப்பிற் பெயர்ச் சொல்லும், காதல் என்ற சொல்லும், சிறப்பித்துச் சொல்லும், செறுத்துச் சொல்லும் சொல்லும், விறல் என்னும் சொல்லும் என்று சொல்லப்பட்ட பதினெட்டுச் சொல்லும் உட்படவந்த தன்மையனவும், பிறவும் அவற்றொடு கூட்டித் தொக்கு இவ்வகையாகிய குறிப்பினான் உணரப்படுஞ் சொற்களெல்லாம் உயர்திணையிடத்தே நிலை பெற்றன வாயினும், அஃறிணையிடத்துச் சொல்லுமாறு போலச் சொல்லப்பட்டு நடக்கும், (எ - று.)

(எ - டு.) இவற்குக் குடிமை நன்று, தீது; ஆண்மை நன்று, தீது; இளமை நன்று, தீது; மூப்பு நன்று, தீது; அடிமை நன்று, தீது; வன்மை நன்று, தீது; விருந்து வந்தது, போயிற்று; குழு நன்று, பிரிந்தது என வரும். இவற்கு என்பதை ஏற்புழியொட்டிக்கொள்க. பெண்மை நன்று, தீது; அரசு வந்தது, போயிற்று; மகநன்று, தீது; குழவி எழுந்தது, கிடந்தது.

தன்மை திரிபெயர்; அலிவந்தது, போயிற்று. உறுப்பின் கிளவி: குருடு வந்தது, போயிற்று. காதல்: என் யானை வந்தது, போயிற்று. என் பாவை வந்தது, போயிற்று; சிறப்பு: கண்போலச் சிறந்தாரைக் கண்ணென்றலும், உயிர்போலச் சிறந்தாரை உயிரென்றலுமாம்; ஆதலின், அஃது "ஆலமர்செல்வன் அணிசால் பெருவிறல் - போலவரும் எம் உயிர், என் உயிர் வந்தது, போயிற்று; என் கண் வந்தது, போயிற்று எனவும் வரும். செறற்சொல்: கெழீஇயிலி வந்தது, போயிற்று; என் காதல் வந்தது, போயிற்று; பொறியறை வந்தது, போயிற்று. விறற்சொல்: பெருவிறல் வந்தது, போயிற்று எனவரும்.

'அன்ன பிறவும்' என்றதனால் பேடிவந்தது, பேடிகள் வந்தன, வேந்து வந்தது, வேள் வந்தது, குரிசில் வந்தது, ஒரு கூற்றம் வந்தது, புரோசு வந்தது, உலகு வந்தது என்னுந் தொடக்கத்தனவுங் கொள்க.

இவற்குக் குடிமைநன்று என்றதன்பொருள் இவற்குக் குடிமகன் நல்லன் என்னும் பொருண்மையாகக் கொள்க. பிறவும் இவ்வாறே உயர்திணையாக உணர்க. குடிமை என்பது குடியாண்மை எனவும், ஆண்மை என்பது ஆண்மகன் எனவும், இளமை என்பது இளவல் எனவும், மூப்பு என்பது முதுமை எனவும், அடிமை என்பது அடி எனவும், வன்மை என்பது வலி எனவும், விருந்து என்பது புதுமை எனவும், குழு என்பது கூட்டம் எனவும், திரள் எனவும், ஆயம் எனவும், அவை எனவும், பெண்மை யென்பது பெண் எனவும், குழவி என்பது பிள்ளை எனவும் மதலை எனவும் பிறவும் வாய்பாடுற்றமை அறிக.

இவற்றுள் ஆண்மை பெண்மை என்றாற்போல்வன விரவுப் பெயராய் நிற்கும். குடிமை அடிமை அரசு என்றாற்போல்வன உயர்திணைப் பெயராய் நிற்கும்; இவ்விகற்பமும் அறிந்து கொள்க.

இக்குடிமை முதலியன எல்லாம் உயர்திணைப்பண்பாகலான் அப்பண்புச்சொல் தன்பொருண்மேல் ஒரு ஞான்றும் நில்லாது தன்னையே யுடைய பொருண்மேலே தன்பொருளுந் தோன்றிப் பிரியாது நின்றமையின் உயர்திணையாயிற்று என்பது. அவையிற்றிற்கடிபண்பு என்பது போதல் வேண்டிக் குடிமையாண்மை யெனப் பண்பு வாய்பாடு படுத்துக் கூறினார் போலும்.

தன்பொருண்மேல் நில்லாது என்றது என்னை, இளமை, மூப்பென்றாற்போல்வன அவற்றிற்கு அப்பண்பு தன்மேலும் வழக்குண்டால் எனின், அவ்வாறு வருவனவுஞ் சிறுபான்மை உளவேனும் அடிமை, அரசு, மகவு, குருடு, கூன் என்றாற்போல்வன பொருண்மேலன்றிப் பண்பின் மேல் வழங்கலின்மையின் அவற்றிற் கெல்லாம் முன்கூறியதே நினை வென்பது.

இனி இவையெல்லாம் அப்பண்பின்மேல் எனவும், பண்புகொள வருதலென்னும் ஆகுபெயராற் பொருண்மேலே நின்றன எனவும், அவற்றுக்கண்ணது ஈண்டு ஆராய்ச்சி யெனவும், அவற்றுப் பண்புப்பொருண் மேல் வழக்கில்லனவற்றை இறந்த வழக்கென்று கூறியும் பிறவாறும் கூறுவாருமுளர். அதுவும் அறிந்து கொள்க.

இதனாற் சொல்லியது பண்புநிமித்தமாகப் பொருள் நிகழுஞ் சொற்கள் பலவுந் தம் பொருட்கேற்ப உயர் திணையாய் முடியாதுசொற்கேற்றவாற்றான் அஃறிணையான் முடிவனகண்டு அதனை ஈண்டு அமைத்தவாறு என உணர்க. (௧௭)

இதுவுமது

௫அ. காலம் உலகம் உயிரே உடம்பே
பால்வரை தெய்வம் வினையே பூதம்
ஞாயிறு திங்கள் சொல்லென வரூஉம்
ஆயீ ரைந்தொடு பிறவு மன்ன
ஆவயின் வரூஉங் கிளவி யெல்லாம்
பால்பிரிந் திசையா உயர்திணை மேன.

என் - எனின் இதுவுந் திணைவழுக்காத்தல் நுதலிற்று.

(இ - ள்.) காலமென்னுஞ் சொல்லும், உலகமென்னுஞ் சொல்லும், உயிர் என்னுஞ் சொல்லும், உடம்பு என்னுஞ் சொல்லும், இருவினையையும் யாவர்க்கும் வரைந்தூட்டுந் தெய்வத்தின் பேல் பால் எனவருஞ் சொல்லும், வினை என்னுஞ் சொல்லும், பூதம் என்னுஞ் சொல்லும், ஞாயிறு என்னுஞ் சொல்லும், திங்கள் என்னுஞ் சொல்லும், சொல் என்னுஞ் சொல்லும் என்று வருகிற பத்துச்சொல்லினோடு பிறவும் அத்தன்மையாகிய உயர்திணைப் பொருண்மேல் வருஞ் சொற்கள் எல்லாம் உயர்திணையிடத்துப் பால் உணர்த்துஞ் சொல்லால் பிரித்துச்சொல்லப்படா; அஃறிணைப்பாலால் சொல்லப்படும், (எ - று.)

(எ - டு.) இவற்குக் காலமாயிற்று; உலகு பசித்தது; உயிர் போயிற்று; உடம்பு நுணுகிற்று; இவர்க்குப் பாலாயிற்று; வினை நன்று, வினை தீது; இவனைப் பூதம் புடைத்தது; ஞாயிறு எழுந்தது, பட்டது; திங்கள் எழுந்தது, பட்டது; சொல் நன்று, தீது.

பிறவும் என்றதனால் செவ்வாய் எழுந்தது, பட்டது; வெள்ளி எழுந்தது, பட்டது என வரும்.

என்னை? இவை உயர்திணையாயினவாறு எனின், காலம் என்றது காலனை; உலகமென்றது உலகத்தாரை; உயிர் என்றது உயிர்க்கிழவனை; உடம்பு என்றது அஃது உடையானை; பால் என்பது இன்பத்துன்பங்களை வகுப்பதோர் தெய்வம்; வினையென்பது வினைத்தெய்வம்; பூதம் என்பது தெய்வப்பகுதி; ஞாயிறு, திங்கள் என்பன தெய்வம்; சொல் என்பது சொன்மடந்தையை.

ஆயின், இவற்றை மேலவற்றோடொன்றாக ஓதாதது என்னையெனின், அவையெல்லாம் பண்படியாகப் பொருள்மேல் நிகழ்தலின் அவற்றை 'முன்னத்தின் உணருங் கிளவி' என வேறொரு வகையால் கிளவாது வரும் பெயரினையும் வேறொருவகையாக்கிக் கூறினார் என உணர்க.

இவற்றுள் பூதம், ஞாயிறு, திங்கள் என்பன ஒழித்து அல்லன எல்லாம் ஆகுபெயரான் அஃறிணைப்பெயர் உயர்திணைமேல் நின்றன என உணர்க.

இதனாற் சொல்லியது, இவையும் சில உயர்திணைப் பெயர் தம்பொருட்டாகுபெயராய் அதற்கேற்ப முடியாது சொற்கேற்ப முடிவதனைக் கண்டு, அதனை அமைத்தவாறாயிற்று. (௫அ)

குடிமை ஆண்மை என்பனவற்றிற்குப் புறனடை

௫௯. நின்றாங் கிசைத்தல் இவணியல் பின்றே.

என் - எனின், குடிமை ஆண்மை என்றதற்கோர் புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) நின்ற வாய்பாட்டானே நின்று உயர்திணை முடிபு பெறுதல் இக் காலம், உலகம் என்னுந் தொடக்கத்தனவற்றிற்கு இயல்பன்று எனவே மேற்கூறிய ஆண்மை என்னுந் தொடக்கத்தனவற்றிற்கு இயல்பு, (எ - று.)

(எ - டு.) குடிமைநல்லன், வேந்துசெங்கோல்நல்லன் எனவரும். உயர்திணை முடிபிழந்து நின்றனவற்றை அம்முடிப்புடைய என்று எய்துவித்தவாறு.

இம்முடிபு இலக்கணமாதலின், இதுவே பெரும்பான்மை யாகற்பாற்று எனின், இலக்கணமே எனினும் வழக்குப் பயிற்சியான் அதுவே பெரும்பான்மை யாகற்பாற்று என உணர்வது.

இச்சொற்கள் ஈறு வேறுபட்டு குடிமகன், வேந்தன், ஆண்மகன் என நிற்பனவற்றிற்கு உயர்திணை முடிபே முடிபெனக் கொள்க.

இதனாற் சொல்லியது மேற்கூறிய இருவகைத் திணைவழுவினையும் ஒருவகைத் தன்மேல் முடிபுடையவாயும் வருவன கண்டு அவற்றின் உண்மையும், இவற்றின் இன்மையும் உடன்கொண்டு கூறியவாறாயிற்று. (௫௯)

காலம் உலகம் என்பனவற்றிற்குப் புறனடை

௬௦. *இசைத்தலும் உரிய வேறிடத் தான.

என்-எனின், 'காலமும் உலகமும்' என்பதற்கோர் புறனடையுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) காலமும் உலகமும் என்னுந் தொடக்கத்தன உயர்திணைமுடிபு பெறுதலும் உடைய; அவ்வோதிய வாய்பாடு ஒழிய வேறு வாய்பாடாயின விடத்து, (எ - று.)

* "வகுத்தான் வகுத்த வகையல்லால்" என்ற திருக்குறளில் இந் நூற்பாவினை மேற்கோளாக எடுத்தானுவர் பரிமேலழகர்.

(எ - டு.) காலம் என்பது மகரவீறு; காலன் என்னும் னகரவீறாய் நின்றழிக் காலன் கொண்டான் என முடியும். உலகத்தோர் பசித்தார், உயிர்க்கிழவன் போயினன் என்பனவும் அவை.

இதனாற் சொல்லியது மேல் 'நின்றாங்கிசைத்தல் இவணியல் பின்று' என்ற விலக்கு, இவண் எனக் காலமும் உலகமும் என்னும் வாய்பாட்டினையே நோக்கி விலக்காது, அப்பொருண்மேல் வரும் வாய்பாடுகளெல்லாம் விலக்குவதுபோலும் நோக்கப்பட நின்றது என்று கொள்ளினுங் கொள்ளற்க, என்று அவை வேறிடத்தாயின் இசைக்கும் எனவுங் கூறவேண்டிக் கூறினர் என்பது. (௬0)

எடுத்த மொழி இனம் செப்பலும் உண்டு என்றல்

௬௧. எடுத்த மொழிஇனம் செப்பலும் உரித்தே.

என் - எனின், இஃது அருத்தாபத்தி மேற்று.

(இ - ள்.) விதந்தமொழி தன்னினத்தைக் காட்டி நிற்றலும் உரித்து; உம்மையால் காட்டாது நிற்றலும் உரித்து, (எ - று.)

(எ - டு.) கீழ்ச்சேரிக் கோழி அலைத்தது என்புழி மேற்சேரிக் கோழி அலைப்புண்டது என்பது சொல்லாமையே முடிந்ததாம். குடங்கொண்டான் வீழ்ந்தான் எனக் குடம்வீழ்தலும் முடிந்தது. இவை இனஞ் செப்பின. ஆ வாழ்க, அந்தணர் வாழ்க என்பன இனஞ் செப்பாதன.

இவையும் இனம் செப்பின என்னுமோ எனின், சொல்லுவான் கருத்து அஃதன்மையானும், மறுதலை பல உள்வழி இனஞ் செப்பாமையானும் இனஞ்செப்பாவாயின என உணர்க. (௬௧)

பன்மை சுட்டிய பெயர்கள் முடியுமாறு

௬௨. கண்ணும் தோளும் முலையும் பிறவும்
பன்மை சுட்டிய சினைநிலைக் கிளவி
பன்மை கூறும் கடப்பா டிலவே
தம்வினைக் கியலும் எழுத்தலங் கடையே.

என் - எனின், திணைவழுக்காத்தல் நுதலிற்று.

(இ - ள்.) கண்ணும் தோளும் முலையும் பிறவும் ஆகிய பன்மைப் பொருளை உணர்த்திய சினைநிலைமை உணர நின்ற சொற்கள் தம் பன்மையால் கூறுதலையே இலக்கணமுறையாக உடைய அல்ல; அதிகாரத்தானும் உயர்திணையாய் முடிதலுடைய; எப்பொழுதுமோ எனின், அற்றன்று; தமது வினைக்கேற்ற எழுத்

தினன் சொல்ல நினையாது தம் முதல்வினையால் சொல்லக்கருதிய பொழுது, (எ - று.)

(எ - டு.) கண் நல்லள், தோள் நல்லள், முலை நல்லள் என்பன வாம்.

பிறவும் என்பதனல் புருவம் நல்லள், காது நல்லள் எனவும் வரும்.

திணைவழு அதிகாரம் கூறிவாராநின்றதன் இடையே "எடுத்த மொழி என்று" இயைபில்லது கூறிய அதனன் ஒருமைச்சினை உயர்திணையாய் முடிவனவுங் கொள்க.

(எ - டு.) மூக்கு நல்லள், கொப்பூழ் நல்லள் என வரும்.

இதனற் சொல்லியது உயர்திணைச் சினைப்பொருள் தனக்கேற்ற சினைவினை கொள்ளாது முதல்வினை கொண்டு முடிவன கண்டு அதனை அமைத்தவாறு என்க.

'வினையிற் றோன்றும் பாலறி கிளவி' முதலாக இத்துணையுஞ் சென்ற ஆராய்ச்சி எண்வகை இலக்கணத்துள்ளும் எழுவகை வழுவாராய்ச்சி என உணர்க		(௬௨)

கிளவியாக்கம் முற்றும்.

உ. வேற்றுமையியல்

வேற்றுமை இத்துணை எனல்

சுஎ. *வேற்றுமை தாமே ஏழென மொழிப.

என்பது சூத்திரம்.

இவ்வோத்து என்ன பெயர்த்தோ எனின், வேற்றுமை ஓத்து என்னும் பெயர்த்து. வேற்றுமை என்பன சில பொருளை உணர்த்தினமையால் காரணப்பெயராயிற்று.

மற்று, வேற்றுமை என்னும் பொருண்மை என்னையெனின், பொருள்களை வேற்றுமை செய்தலின் பெயர் முதலிய எட்டற்கும் வேற்றுமை என்னும் பெயராயிற்று.

யாதோ வேற்றுமை செய்தவாறெனின், ஒருபொருள் ஒருவழி ஒன்றனைச் செய்யும் வினைமுதலாகியும், ஒருவழி ஒன்று நிகழ்தற்கு ஏதுவாகியும், ஒருவழி ஒன்று செய்தற்குக் கருவியாகியும், ஒருவழி ஒன்று செய்தற்குச் செயப்படு பொருளாகியும், ஒருவழி ஒன்று கொடுப்பதனை ஏற்பதாகியும், ஒருவழி ஒன்றற்கு உவமமாகியும், ஒருவழி ஒன்று நீங்குதற்கு இடமாகியும், ஒருவழி ஒன்றற்கு எல்லையாகியும், ஒருவழி ஒன்றற்கு உடைமையாகியும், ஒருவழி ஒன்று செய்தற்கு இடமாகியும், ஒருவழி முன்னிலையாதற் பொருட்டு விளிக்கப்படுவதாகியும், இன்னோரன்ன பிறவுமாகிய பொதுப்பட நிற்றலுடைத்து.

அவ்வாறு நின்றதனைப் பெயர் முதலியன ஓரோ ஒன்றாகச் சென்று அப்பொதுமையின் வேற்றுமைப்படுத்தி ஒருபொருட்கு உரிமை செய்து நிற்றலின் வேற்றுமை எனப்பட்டது. இவ்வாறு எட்டற்கும் பொதுப்பட நின்றதோர் பொருணிலையல்லது பொதுப்பட நின்றதோர் சொன்னிலைமை வழக்கிடைக் காணுமால் எனின், அவ்வாறு வழக்கில்லை எனினும் சாத்தன், சாத்தனை, சாத்தனொடு, சாத்தற்கு, சாத்தனின், சாத்தனது, சாத்தன்கண், சாத்தா என ஒன்றன்வடிவோடு ஒன்றன் வடிவு ஒவ்வாது, இவ்வேற்றுமைகள் வரும் வழிச் சாத்தன் என்னும் வாய்பாடு எங்கும் நின்றமையின் பொதுநிலை என்பது உய்த்து உணரப்படும்.

எழுவாய் அதனோடு வேற்றுமைப்பட்டதோ எனின், சாத்தனை என்றது போல்வதோர் வாய்பாடு இல்லெனினும் அவ்வேழனோடும் ஒவ்வா நிலைமை உடைமையின் இதுவும் ஓர் வாய்பாடாயிற்று என உணர்க. அன்றியும் செயப்படுபொருள் முதலாயினவற்றின் வேறுபடுத்துப் பொருண்மாத்திரம் உணர்த்தலின், எழுவாய் வேற்றுமையாயிற்று என்

* இதனையும் அடுத்த நூற்பாவையும் இணைத்து ஒரே நூற்பாவாகக் கொள்வர் தெய்வச்சிலையார்.

பாரும் உளர். அல்லதூஉம், வேற்றுமை என்பது பன்மைபற்றிய வழக்கெனினும் அமையும்.

இவ்வேற்றுமை செய்யும்வழிப் பலசொல் ஒரு பொருளாகியும் பல பொருள் ஒரு சொல்லாகியும் வரும். இனிப் பலசொல் ஒருபொருளாகி வரும்வழி, பல வேற்றுமை பல சொல்லாகியும், ஒரு வேற்றுமை பல சொல்லாகியும் வரும். அவையாமாறு அறிந்துகொள்க.

மேலோத்திேைடு இவ்வோத்திையைபு என்னையோ எனின், மேல் ஓத்தினுள் நான்கு வகைப்பட்ட சொற்களையும் பொருள்கண் மேலாமாறு சொல்லிப் போந்தார். அவற்றுள் முதலது பெயர்ச்சொல்; அதற்கு இலக்கணம் உணர்த்திய எடுத்துக் கொண்டார் என்பது.

யாங்ஙனம் உணர்த்தினரோ எனின், எல்லாப் பெயர்களும் எழுவாயாகிப் பயனிலை கோடலும், ஒருவழி எழுவாயாகாது வேறாகி நிலைமையவாய் நிற்றலும், உருபேற்றலும், ஒருவழிச் சிலபெயர் உருபேலாது நிற்றலும், காலந் தோன்றாமை நிற்றலும், ஒருவழித் தொழிற்பொருளொடு கூறியக்கால் காலந்தோற்றி நிற்றலும், விளியேற்று நிற்றலும், சில பெயர் விளியாது நிற்றலும், இன்னோரன்ன பிறவும் பெயரது இலக்கணமென உணர்த்தினர் என்பது.

பொது இலக்கணமேயன்றி உருபிலக்கணம் உணர்த்தினரால் எனின், அவ்வாராய்ச்சி பெயரது இலக்கணமாய்விடுதல் உடைமையின் அமையும் என்பது.

மற்று இத்தலைச் சூத்திரம் என்னுதலிற்றோ எனின், தன்னால் உணர்த்தப்படும் பொருளை இனைத்தென்று வரையறுத்தல் நுதலிற்று.

(இ - ள்.) வேற்றுமை என்று சொல்லப்படுவனதாம் ஏழென்று சொல்லுவர் ஆசிரியர், (எ - று.)

*தாம் என்பது சந்தவின்பம். ஏ என்பது ஈற்றசையாம் என்க. (௧)

விளியொடு கூட்ட வேற்றுமை எட்டெனல்

௬௪. விளிகொள் வதன்கண் விளியோ டெட்டே.

என் - எனின், ஒழிந்தவேற்றுமை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) விளிகொள்வதன்கண் விளியோடு எட்டு வகைப்படும் வேற்றுமை என்றவாறு.

விளிகொள்வது என்பது, பெயரின்கண் விளி என்றவாறு.

விளியோடு எட்டு என்றது பெயர்க்கண் விளி என்றதனால் பெற்றது என்னையெனின், மற்றை வேற்றுமை போலப் பெயர்ப்புறத்துப் பிரிய

* தாம் என்பது கட்டுரைச்சுவை பட வந்தது என்பர் சேனாவரையர். கட்டுரைச் சுவை - சந்த இன்பம்.

வராது, அப்பொருளே ஈறுதிரிதல், முதலாய வடிவினதாகி வருதல் உணர்த்திய என்றவாறு.

'வேற்றுமை தாமே எட்டு' என ஒரு சூத்திர மாகக் கூறுதது என்னை யெனின், இஃது சிறப்பின்மை அறிவித்தற்கு வேறு கூறினர் என்பது. யாதோ சிறப்பின்மை எனின், விளியேலாப் பொருளுண்மையின் என்பது. அஃதேல் பயனில்லை கொள்ளாப் பெயரும் உளவெனின், அதனோடு இதனிடை வேற்றுமை உண்டு. அஃது ஒருவழிக் கொள்வது ஒருவழிக் கொள்ளாதாய் நிற்கும். அது தானுஞ் சிறுபான்மை. இஃது யாண்டுங் கொள்ளாவெனக் கொள்ளாவாயே நிற்கும் என்பது. (இவ்வாறன்றி எல்லாஞ் சொல்லான் என்பதும் ஒன்று.)

பல சொல்லும் உள எனினும், ஐ, ஒடு, கு. இன் அது, கண் என்பன பெருவழக்கின ஆகலின் உருபினுள் அவ்வாறனையுமே கொண்டு அவற்றோடு எழுவாயினையும் விளியினையுங் கூட்டி எட்டு என்றார் என்பது. (உ)

வேற்றுமைகளது பெயரும் முறையும்

௩. அவைதாம்,
பெயர் ஐ ஒடு கு
இன் அது கண்விளி என்னும் ஈற்ற.

என் - எனின், வேற்றுமைகளது பெயரும் முறையும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மேல் வேற்றுமை என்று சொல்லப்பட்டவைதாம் பெயர், ஐ, ஒடு, கு, இன், அது, கண், விளி இறுதியாக உடையன, (எ - று.)

அப்பெயர் பெயர். அம்முறை: எழுவாய் வேற்றுமை ஏனை வேற்றுமைக்கும் சார்பாதல் நோக்கி முன்வைக்கப்பட்டது. விளி வேற்றுமை, எல்லாவற்றினுஞ் சிறப்பின்மை நோக்கிப் பின் வைக்கப் பட்டது.

ஐயினை இரண்டாவதென்றும், ஒடுவினை மூன்றாவதென்றும், இவ்வாறே இவை கூறுதற்குக் காரணம் உண்டோ எனின், காரணமும் இல்லை; காரணம் இல்லையேல் வேண்டியவாறு கூறினும் அமையும் எனின், அமையாது; முன்னூலுள் ஓதிய முறை அது வென்பது. (௩)

எழுவாய் வேற்றுமை

௪. அவற்றுள்,
எழுவாய் வேற்றுமை பெயர்தோன்று நிலையே.

என் - எனின், நிறுத்த முறையானே முதற்கண் நின்ற பெயர்வேற்றுமை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மேற் சொல்லப்பட்ட வேற்றுமை எட்டனுள் முதல் வேற்றுமையாவது பெயர்ச் சொல், பயனிலைப்பாடு தோன்ற நிற்கும் நிலைமை, (எ - று.)

(எ - டு.) ஆ, மக்கள் எனவரும்.

விளியோடு இதனிடை வேற்றுமை என்னை யெனின், ஈறுதிரிதலும், ஈறுதிரியாமையும், ஈறுதிரியாதவழி ஒருவழிப் படர்க்கையாதலும், மூன்னிலை யாதலும் எனக் கொள்க. (சு)

எழுவாய் பயனிலை ஏற்குமாறு

சுஎ. பொருண்மை சுட்டல் வியங்கொள வருதல்
வினைநிலை உரைத்தல் வினுவிற் கேற்றல்
பண்புகொள வருதல் பெயர்கொள வருதலென்
றன்றி அனைத்தும் பெயர்ப்பய னிலையே.

என் - எனின், மேற் சொல்லப்பட்ட எழுவாய் வேற்றுமை என்பது, ஆறுவகைப்பட்ட பயனிலையும் ஏற்று நிற்பது என்றவாறு.

(இ - ள்.) பொருட்டன்மை கருதிவரும் வரவும், ஏவலைக் கொள்ள வரும் வரவும், தனது தொழிலினைச் சொல்ல வரும் வரவும், வினுவுதற் பொருண்மைக்கு ஏற்று வரும் வரவும், தனது பண்பினைக் கொள்ள வரும் வரவும், என்று சொல்லப்பட்டவை யனைத்தும் வரும் பெயர்ச்சொல்லது பயனுகிய நிலைமை, (எ - று.)

என்றது, முதல் வேற்றுமையாவது இவ் ஆறு பொருண்மையுந் தோன்ற நிற்பது என்றவாறு. அவ்வப் பொருண்மையை விளக்குவன பின் வருஞ் சொற்கள் என்றவாறு.

பெயர்ப் பயனிலை யென்றது பின் வருகின்ற சொற்களேயன்று, அவ்வச் சொல்லின் பொருண்மையினைக் குறித்த பெயர் நிற்கும் நிலைமை வேறுபாடுகளை, (எ-று.)

நிலை என்னுது பயனிலை என்றது அப்பெயர்களைக் கேட்பின் இப் பொழுது இப்பொருள் இன்ன நிலைமைத்து என உணரும் உணர்ச்சிக்குப் பயன் பட நிற்கும் நிலைமைய என்றற்கு என்பது.

(எ - டு.) பொருண்மைசுட்டல்: ஆ உண்டு என்பது. இதன் பண்பு முதலியவற்றைக் கருதாது பொருட்டன்மையைக் கருதி நிற்றலால் பொருண்மை சுட்டல் எனப்பட்டது. உண்மை என்பது பண்பன்றோ எனின், அன்று. அப்பொருட்டன்மை என்பது போலுங் கருத்து. ஆ இல்லை என்பதும் இதன்கட் பட்டடங்கும்.

வியங்கொள வருதல்: ஆ செல்க என்பது. இது மேற் சொல்லுகின்ற வினைநிலையுணர்த்தலுள் அடங்கும்; ஆயினும் வேறுபாடுண்டு. அது தன்கண் நிகழ்ந்ததொரு வினை. இது மேல் தன்கண் தொழில் நிகழ்வதாக ஒருவனால் ஏவப்பட்டு நிற்கும் நிலை என உணர்க.

வினைநிலையுரைத்தல்: ஆகிடந்தது என்பது.

வினாவிற் கேற்றல் ஆ யாது* என்பது.

பண்பு கொள வருதல்: ஆ கரிது என்பது. இதுவும் வினைநிலையுரைத்தலுள் அடங்காதோ எனின், அடங்கும் எனினும் வினைக் குறிப்பாகலான் வேறு கூறினார் என்பது.

பெயர் கொள வருதல்: ஆ பல, ஆ இது என்பது.

மேற் சூத்திரத்து எழுவாய் வேற்றுமை 'பெயர்' என்னாது 'தோன்று நிலை' என்றதனால் பெயர்கள் ஒரோவழி எழுவாயாகத் தான் பயனிலை கொள்ளாது மற்றோர் எழுவாயின் பயனிலையோடு தானும் பயனிலையாயும், ஒரோவழித் தானே பயனிலையாயும், ஒரோவழி எழுவாயோடு இயைபு படாது பயனிலைக்கு அடையாயும் பிறவாறும் வருவனவும் உள என்பது கொள்ளப்பட்டது.

(எ-டு.) தானும் பயனிலையாயது, ஆயன் சாத்தன் வந்தான் என்பது.

இது ஆயன் வந்தான் சாத்தன் வந்தான் என வினைப் பின்னும் நிற்கும் என்பது. சாத்தன் என்பது எழுவாய். ஆயன் என்பது முன்னே பயனிலையாய் நின்றதன்றாலோ எனின், அவ்வாறும் ஆம் எனினும் சொல்லுவான் கருத்து அன்னதன்று என்பது.

ஆயனாகிய சாத்தன் என்பது பண்புத்தொகையாமாலோ எனின், ஓசை பிளவுபட்டிசைத்தலான் ஆகாது என்பது.

தானே பயனிலையாயது, ஆ பல என்பது. பயனிலைக்கு அடையாயது, சாத்தன் தலைவனாயினான் என்பது.

பிறவாறாய் வருதல், ஆசிரியன் பேரூர்கிழான் செயிற்றியன் இளங்கண்ணன் சாத்தன் வந்தான் என்பது. ஒரு பெயர் எழுவாயாய் நில்லாது பல பெயரும் ஒருங்கே எழுவாயாய் நிற்பன எனக் கொள்க.

இன்னும் இவ்விலேசினான், பெயர்கள் எழுவாயாய்ப் பயனிலை கொண்டமைந்து முற்றி நில்லாது, எழுவாய் தானும் பயனிலையுங்கூடி ஒரு சொல்நீர்மைப்பட்டு மற்றோர் எழுவாய்க்குப் பயனிலையாய் வருவனவும் கொள்ளப்படும்.

---

* 'ஆவோ' என்ற எடுத்துக்காட்டும் ஈண்டுக் காணப்படுகின்றது. ஆ யாது என்புழி வினையும் வினை முதலுமாய் வினாவப்பட்டுள்ளது. ஆவோ என்புழி இடைச்சொல்லாய்ப் பெயரையடுத்து வருகின்றது. ஆதலின் அது ஈண்டைக்கேற்குமா? என்பது ஆய்தக்கது.

அவை சினையின் தொழிலை முதற் கேற்றிக் கூறலும், பண்பின் தொழிலை பண்படைந்த பொருட்கு ஏற்றிக் கூறலும், தொழிலின் வினையைத் தொழிலடைந்த பொருட்கு ஏற்றிக் கூறலும், இடத்து நிகழ் பொருளின் தொழிலை இடத்திற்கு ஏற்றிக் கூறலும் என இன்னோரன்ன பலவகைப்படும்.

(எ - டு.) சினை வினை முதற்கு ஏற்றிக் கூறல் சாத்தன் கண்நல்லன், இவ்யானை கோடு கூரிது என்பன போல்வன.

பண்பின் வினை பண்படைந்த பொருட்கு ஏற்றிக் கூறல் இம்மணி நிறம் நன்று, இம்மலர் நாற்றம் பெரிது என்பன.

தொழிலின் வினையைத் தொழிலடைந்த பொருட்கு ஏற்றிக் கூறல்: இக்குதிரை நடை நன்று, இத்தேர் செலவு கடிது என்பன.

இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்திற்கு ஏற்றிக்கூறல் இவ்வாறு நீர் ஒழுகும், இவ்வயல் நெல் விளையும் என்பன. பிறவும் வந்தவழிக் கண்டு கொள்க.

இன்னும் அவ்விலேசானே எழுவாய்க்குப் பயனிலையாய் வந்த பெயர், தானும் எழுவாயாய்ப் பயனிலை கொண்டும், உருபேற்றும் வருவனவுங் கொள்ளப்படும்.

(எ - டு.) இறைவன் அருளல் எம் உயிர் காக்கும், எனவும், இறைவன் அருளலின் யாம் உயிர் வாழ்தும் எனவும் வரும். இஃது ஆறுவதாம் எனினும் நோக்கு அஃதன்று என்பது.

பயனிலை முன்னும் பின்னும் நிற்றலும், பயனிலை சில சொல் இடை கிடப்ப வருதலும் ஈண்டே கொள்ளப்படும்.

ஆ செல்க, செல்க ஆ என முன்னும் பின்னும் நின்றது. ஆ சாத்தனுய்ப்ப, எருமைத் தன்கன்றினோடு மருங்காக, தானிவ்வூரினின்றும் அவ்வூரின்கட் செல்லும், இஃதிடை கிடந்த சொல்லொடு வந்தவாறு.

இறைவன் அருளல் என்பது எழுவாயொடு பொருளியைபு இன்றாயினும், வினை முதற் பொருள் தோன்ற வந்தமையின் பெயர் கொளவருதல் என வழங்கும் என்பது.

* "சிறுமை பெருமையிற் காணாது துணிந்தே"

எனவும்,

† "கோஒல் செம்மையிற் சான்றோர் பல்கி"

எனவும் வரும் பண்புகளும் பொருளியைபில எனினும் ஒருவாற்றான் பெயர் கொள்ள வந்ததன் மேற்பட்டு அடங்கும் என்பது.

எழுவாய் வேற்றுமையின் விகற்பங்கள் எல்லாம் வழக்கினகத்தறிந்து இவ்விலேசினகத்து அமைத்துக்கொள்க. (கு)

* நற்றிணை ருO. † புறம் ககஎ:கூ.

தொகைப் பெயரும் பயனிலை கொள்ளும் எனல்

௬அ. பெயரி னாகிய தொகையுமா ருளவே
அவ்வும் உரிய அப்பா லான.

என் - எனின், தனிப்பெயரேயன்றித் தொகைப் பெயர்களும் பயனிலை கொள்ளும் என்பது உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) இரண்டு பெயர்ச்சொல் முதலாக வுளவாகிய தொகைச் சொற்களும் உள, (எ - று.)

(எ - டு.) யானைக் கோடு உண்டு, செல்க, வீழ்ந்தது, பெரிது பல என வரும். இவை பெயரினாகிய தொகை.

கொல்யானை உண்டு, செல்க, வீழ்ந்தது. யாது பெரிது, பல என இவை வினையினாகிய தொகை.

தொகையும் பயனிலை கொள்ளும் என்கின்றமையின் இவையும் எழுவாயாகற்பால பிற; அதற்கு விதியாதோ எனின், எச்ச வியலுள் "எல்லாத் தொகையும்" என்னும் சூத்திரத்துக் கூறப்படும் என்பது. (௬)

பெயர்கள் அனைத்தும் பயனிலை கொண்டுவரும் என்றல்

௬௯. எவ்வயிற் பெயரும் வெளிப்படத் தோன்றி
அவ்வியல் நிலையல் செவ்வி தென்ப.

என் - எனின், பெயர் உருபேற்கும் வழிப்படுவதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) எவ்விடத்துப் பெயரும் விளங்கத்தோன்றி மேற் சொல்லப்பட்ட வேற்றுமையாய்ப் பயனிலைகொள்ளும் . இயல்பின் கண்ணே நிற்றல் செவ்விது என்று சொல்லுப ஆசிரியர் என்றவாறு.

மேற்காட்டின இவ்விதி *மேல்பெற்றுமன்றோ எனின், மேல் பெற்றதனையே ஈண்டும் தந்து வலியுறுத்தார் பிறிதொன்று விளக்கிய என்பது. அஃது யாதோ எனின், பயனிலை ஏற்றலிற் செவ்விது என, உருபேற்றலும் பெயர்க்கு இலக்கணமன்றே, அதனிற் செவ்விய ஆகாதனவும் உள என்பது.

நீயிர் என்பது பெயர். நீயிரை என உருபேலாது. இது நும் என்னும் பெயர் அவ்வழிப் புணர்ச்சித்திரிபு என்றது. உம்மை என உருபேற்குமால் எனின், பிற சந்தித்திரிபு போல நிலைமொழி நிலைதோற்ற நில்லாது திரிபின் பிறிதோர் பெயர் நிலைபட நிற்றலின் வேறோர் பெயர் என வேண்

* வேற்றுமையியல், ௫ ஆம் நூற்பா.

டியது போலும். இதனகத்து விகற்பமெல்லாம் உரையிற்கொள்க. இந் நிகரன ஒருருபும் ஏலாதன. அவ்வாய்க் கொண்டான் என்பது. அவ்வாய்க் கட் கொண்டா......விழா உருபேலாதது. இந்நிகரன பிற உருபேற்கு மேனும் அறிந்துகொள்க. (எ)

உருபு பெயரது இறுதியில் வரும் எனல்

எO. கூறிய முறையின் உருபுநிலை திரியாது
ஈறுபெயர்க் காகும் இயற்கைய என்ப.

என் - எனின், உருபேற்றலும் பெயர்க்கிலக்கணம் என்பது உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மேல் கூறப்பட்ட முறைமையினின்று நின்றுவருகிற ஐ முதலாகிய உருபும், தத்தம் வாய்பாட்டு நிலைமையின் வேறுகாது பெயர்க்கிறுய் வரும் இயல்பினையுடைய என்று சொல்லுவர் ஆசிரியர், (எ - று.)

(எ - டு.) சாத்தனை, சாத்தனொடு, சாத்தற்கு, சாத்தனின், சாத்தனது, சாத்தன்கண் எனவரும்.

*மேல் "கு ஐ ஆன் என வரூஉம் இறுதி" என்று செய்யுட்கண் உருபீறுதிரிபு கூறுகின்றார் ஆதலின், அஃதொழிய வழக்கினுள் திரிபில்லை என்றற்கு நிலைதிரியாது எனப்பட்டது என்க. (அ)

பெயர்ச்சொற்கள் காலங்காட்டா வெனல்

எக. பெயர்நிலைக் கிளவி காலம் தோன்றா
தொழில்நிலை ஒட்டும் ஒன்றலங் கடையே.

என் - எனின், இதுவும் பெயர்க்கு ஓர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) பெயராகிய நிலைமையுடைய சொற்கள் காலந் தோன்றா; யாண்டுமோ எனின், அன்று. காலந் தோன்றுதற்குப் பொருந்தும் ஒரு கூற்றுத் தொழிற் பெயரல்லாத விடத்து என்றவாறு.

என்றது பெயர்தாம் பெயர்ப்பெயரும், தொழிற் பெயரும் என இரு வகைப்படும். பெயர்ப் பெயராவன சாத்தன், கொற்றன் என ஒரு தொழிலாற் பெயரன்றி அவ்வப்பொருட்கு இடுகுறியாய் வருவன. இவை காலம் தோன்றா.

தொழிற்பெயராயின் தோன்றும்.— தொழிற்பெயர்தாமும் தொழிலின் மேல் நின்ற தொழிற்பெயரும், பொருள்மேல் நின்ற தொழிற்பெய

* வேற்றுமை மயங்கியல், உகூ ஆம் நூற்பா.

ரும் என இருவகைப்படும். அவற்றுள் தொழிலின்மேல் நின்றனவும் காலந் தோன்று; அவை உணல், தின்றல் எனப் பொருளது புடை பெயர்ச்சியை அறிவித்து நிற்கும் என்பது. இவற்றுள் பூசை, வேட்டை என்றாற்போல்வன வினைச்சொற்கு அடியாய்ப் புடை பெயர்ச்சியை விளக்காது பெயர்ப் பெயரேபோல் நிற்பனவும் உள என்பது.

இனிப் பொருண்மேல் நின்றனவும், வினைமுதற் பொருண்மேல் நிற்பனவும் செயப்படுபொருண்மேல் நிற்பனவும் என இருவகைப்படும். அவ்விருவகையும் காலந்தோன்றி நிற்கும் என்றவாறு. அவைதாமும் ஓசை வேற்றுமையான் ஒருவழி வினை எனப்பட்டு நிற்பனவும், வினையாகாது பெயரேயாய் நிற்பனவும் என இருவகைப்படும்.

(எ - டு.) உண்டான், தின்றான், உண்டது, தின்றது எனப் படுத்தலோசையால் வினையெனப்பட்டுக் காலந் தோன்றி நின்றன. உண்டவன், தின்றவன், உண்ணுமது, தின்னுமது என்பன ஓசை வேற்றுமையானன்றித் தானே பெயராய்க் காலங்காட்டி நின்றன. இவை வினைமுதற்கண் பாகுபாடு.

* "கொலைவர் கொடுமரந் தேய்த்தார்" "அவன் ஏறிற்று இக் குதிரை" என்றாற் போல்வன வினைப்பெயரே. அச்செயப்படுபொருட்கண் காலங் காட்டி நின்றன. யான் சொன்னவன், † 'உண்பவை நாழி உடுப்பவை இரண்டு' என்றாற் போல்வன தாமே செயப்படுபொருண் மேற் பெயராய்க் காலந்தோன்றி நின்றன. இவை செயப்படுபொருட் பாகுபாடு.

நிலமும் காலமும் கருவியும் பற்றிவரும் தொழிற் பெயர் விகற்பமுங் கொள்க.

(எ - டு.) ... ... உண்டது என்பது இத்தொழிற் பெயர்களின் காலவிகற்பம் என அறிக.

பெயர்ப்பெயர் காலந்தோன்றா என்பதற்கு விதி யாதோ எனின் இச் சூத்திரத்தான் எய்தவும் பெறும் என்பது. (க)

இரண்டாம் வேற்றுமை

எ௨. ‡இரண்டா குவதே,
ஐ எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
எவ்வழி வரினும் வினையே வினைக்குறிப்
பவ்விரு முதலின் தோன்றும் அதுவே.

---

* கலி கஉ: க-உ. † புறம் க௮க : ரு.

‡ இதனையும் அடுத்த நூற்பாவையும் இணைத்து ஒரே நூற்பாவாகக் கொள்வர், இளம் பூரணர். இவ்வுரையாசிரியர் இவ்விரு நூற்பாக்களுக்கும் உரையியைபு நோக்கி ஒன்றாகவே பொருளுரைத்துள்ளார். இங்ஙனமே ஏழாம் வேற்றுமைகாறும் இவ்வுரை செல்லும்.

அதற்குரிய சொற்கள்

எக. காப்பின் ஒப்பின் ஊர்தியின் இழையின்
ஒப்பின் புகழின் பழியின் என்று
பெறலின் இழவின் காதலின் வெகுளியின்
செறலின் உவத்தலின் கற்பின் என்று
அறுத்தலின் குறைத்தலின் தொகுத்தலின்
[பிரித்தலின்
நிறுத்தலின் அளவின் எண்ணின் என்று
ஆக்கலின் சார்தலின் செலவின் கன்றலின்
நோக்கலின் அஞ்சலின் சிதைப்பின் என்று
அன்ன பிறவும் அம்முதற் பொருள்
என்ன கிளவியும் அதன்பால என்மனார்.

என் - எனின், எழுவாய் வேற்றுமை அதிகாரம் உணர்த்தினார்; இனி அம் முறையானே இரண்டாம் வேற்றுமை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) இரண்டாம் எண்ணுமுறைக்கண்ணதாகிய ஐ என்னும் பெயரையுடைய வேற்றுமைச்சொல் யாதானும் ஓரிடத்து வரினும் வினையும் வினைக்குறிப்பும் என்று சொல்லப்படுகின்ற இரண்டும் அடியாக வரும். பொருள்பற்றிச் சொல்லின் காப்பு என்பது முதலாய்ச் சிதைப்பு ஈறாய் ஓதப்பட்ட இவையும், இவை போல்வன பிறவுமாகிய அவ்வவ்வினை வினைக்குறிப்பு என்னுகின்ற முதற்பொருளைப்பற்றி வருகின்ற எல்லாச் சொற்களும் இரண்டாவதன் கூற்றன என்று சொல்லுவர் புலவர், (எ - று.)

(எ - டு.) மரத்தைக் குறைத்தான் என்பது வினை. குழையையுடையன் என்பது வினைக்குறிப்பு.

காப்பு - ஊரைக் காக்கும்.
ஒப்பு - தாயை யொக்கும்.
ஊர்தி - யானையை ஊரும்.
இழை - எயிலை யிழைக்கும்.
ஒப்பு - கிளியை யோப்பும்;

(இவை வினை.)

புகழ் - ஊரைப் புகழும்.
பழி - நாட்டைப் பழிக்கும்.

பெறல் - ஊரைப் பெறும்.
இழவு - ஊரை இழக்கும்.
காதல் - மனைவியைக் காதலிக்கும்;
வெகுளி - படையை வெகுளும்.
செறல் - செற்றாரைச் செறும்.
உவத்தல் - தாயை யுவக்கும்;

இவை வினைக்குறிப்பு.)

கற்பு - நூலைக் கற்கும்.
அறுத்தல் - ஞாணை அறுக்கும்.
குறைத்தல் - மரத்தைக் குறைக்கும்.
தொகுத்தல் - நெல்லைத் தொகுக்கும்.
பிரித்தல் - வேலியைப் பிரிக்கும்.
நிறுத்தல் - பொன்னை நிறுக்கும்.
அளவு - அரிசியை அளக்கும்.
எண் - அடைக்காயை எண்ணும்.
ஆக்கல் - அறத்தை யாக்கும்.
சார்தல் - வாய்க்காலைச் சாரும்.
செலவு - நெறியைச் செல்லும்.
கன்றல் - சூதினைக் கன்றும்.
நோக்கல் - சேயை நோக்கும்.
அஞ்சல் - கள்ளரை அஞ்சும்.
சிதைப்பு - நாட்டைச் சிதைக்கும் எனவும் வரும்.

அன்ன பிறவும் என்றதனால் விரலை முடக்கும், நாவினை வணக்கும் என்றற்றொடக்கத்து வினையும், அறவினையுடையன், ஊரை இன்புறும் என்றற்றொடக்கத்து வினைக்குறிப்பும் கொள்க.

பிறவும் அன்ன.

காப்பின் என்பது முதலான இன்னெல்லாம் உருபும் அன்று, சாரியையும் அன்று, அசைநிலை எனக்கொள்க.

இடைநின்ற என்று என்பன எண்ணிடைச் சொற்களாம்.

மற்றைய வேற்றுமைபோல் இது படும் பொருண்மை உணர்த்தாது முடிபு உணர்த்தியது என்னை; இம்முடிபு ஏனை வேற்றுமைக்கும் உளவா லெனின், ஈண்டு முடிபு அன்று உணர்த்தியது; வினை வினைக்குறிப்பின் மேலிட்டு அது படுஞ் செயப்படுபொருளினை உணர்த்திற்றாக உரைக்கப் படும்.

செயப்படுபொருண்மையாவது என்னையோவெனின் ஒருவன் செய்யும் தொழிலினைத் தானுறுதல் எனக் கொள்க. அத்தொழிலினை உறு தலேயோ அத்தொழில் செய்வானுங் கருவியுஞ் செய்கின்ற காலமும்

இடனும் என இன்னோரன்னவும் அத் தொழிலுறு மாலோவெனின், அவை உறும் எனினும் பெரும்பான்மையும் இதன் கண்ணது என்பது கருத்து.

வினை என்றது வினைக்குறிப்பு என்றது என்னையோ எனின், மரங் குறைத்தான் என்புழிக் குறைக்கப்படுதல் என்பது போலாகாது, குழை யையுடையன் என்புழிக் குழையினுடைமைப்பாடு செயப்படுபொரு ளாய் விளங்கி நில்லாமையின் வேறு கூறினார் என்பது.

அச் செயப்படு பொருள்தான், இல்லதொன்றாய் உண்டாக்கப்படு வதும், உள்ளதொன்றாய் உடல் வேறுபடுக்கப்படுவதும், உள்ளதொன் றாய் ஒரு தொழில் உறுவிக்கப்படுவதும், உள்ளதொன்றாய் ஒன்றனை உறப் படுவதும் எனப் பலவகையாம்.

இல்லதொன்று உண்டாக்கல் - எயிலையிழைத்தான் என்பது.

உள்ளதொன்றனை உடல் வேறாக்கல் - மரத்தைக் குறைத்தான் என்பது.

உள்ள தொன்று ஓர் தொழிலுறுவித்தல் - கிளியை யோப்பும் என்பது.

உள்ளதொன்றனை யொன்றுறுதல் - நூல் நூற்றான் என்பது. பிறவும் அன்ன.

இன்னும் இச் செயப்படுபொருள்தான் தன்கண்ணும் ஓர் தொழில் நிகழ்ந்து செயப்படுபொருளாவனவும், தன்கண் தொழில் நிகழாது செயப் படுபொருளாவனவும் என இருவகைய.

தன்கண்ணும் தொழில் நிகழ்ந்தது-அறுத்தல், குறைத்தல் என்பன வாம்; அறுத்தல், குறைத்தல் மரமுதலாய தன் கண்ணும் நிகழ்ந்தன ஆத லின்.

தன் கண் நிகழாதது, வாய்க்காலைச் சாரும் என்றாற் போல்வன. பிறவும் அன்ன.

இன்னும் இரண்டாவதன் செயப்படுபொருள் தெரிநிலைச் செயப்படு பொருளும், தெரியாநிலைச் செயப்படுபொருளும் என இருவகைத்தாம்.

தெரிநிலை மரத்தைக் குறைத்தான் என்பது.

தெரியாநிலை சாத்தனால் மரம் குறைக்கப்பட்டது என்பது.

மற்றிஃது எழுவாயன்றோ எனின், சொல் நிலை அன்னதாயினும் சாத் தன் என நின்ற உருபினை நோக்கப் பொருணிலை அன்னது அன்று என உணர்க.

சோற்றை அட்டான் எனச் செய்வான் கருத்துள்வழிச் செயப்படு பொருளாதலும் சோற்றைக் குழைத்தான் எனக் கருத்தில்வழிச் செயப் படுபொருளாதலும் என இருவகைய.

இனிச் செய்வானும் செயப்படு பொருளும் என்னும் இரண்டும் ஒன்றேயாயும் வரும்.

(எ - டு.) சாத்தன் தன்னைக் குத்தினான் எனவரும்.

இனிச் செயப்படுபொருட்கேதுவாயதூஉம் செயப்படுபொருளாய் வரும். அவை கற்கப்படும் ஆசிரியர், கற்கப்படா ஆசிரியர் எனவரும்.

மற்றும் இதன் கருத்து விகற்பம் உரையிற்கொள்க. (௪0. ௧௧)

மூன்றாம் வேற்றுமை

எ௪. *மூன்றா குவதே
ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
வினைமுதல் கருவி அனைமுதற் றதுவே.

அதற்குரிய பொருண்மை

எ௫. அதனின் இயறல் அதற்றகு கிளவி
அதன்வினைப் படுதல் அதனி னாதல்
அதனிற் கோடல் அதனொடு மயங்கல்
அதனோ டியைந்த ஒருவினைக் கிளவி
அதனோ டியைந்த வேறுவினைக் கிளவி
அதனோ டியைந்த ஒப்பல் ஒப்புரை
இன்னான் ஏது ஈங்கென வரூஉம்
அன்ன பிறவும் அதன்பால என்மனார்.

என் - எனின், மேல் நிறுத்த முறையானே மூன்றாம் வேற்றுமையா மாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மூன்றாமெண்ணுமுறைக் கண்ணதாகிய ஒடு என்னும் பெயரையுடைய வேற்றுமைச் சொல் வினைமுதல் கருவியாகிய காரணங்களை உடைத்து. அஃது வருமாற்றைச் சொல்லின் ஒன்றனொலொன்று பண்ணப்படும் பொருண்மை, ஒன்றனொலொன்று தகுதல் என்னும் பொருண்மை, ஒன்றனொலொன்று தொழிலுறுதல் என்னும் பொருண்மை, ஒன்றனொலொன்று ஆதல் என்னும் பொருண்மை, ஒன்றனொலொன்றைக் கோடல் என்னும் பொருண்மை, ஒன்றனோடொன்று மயங்கல் என்னும் பொருண்மை,

* இதனையும் அடுத்த நூற்பாவையும் இணைத்து ஒரே நூற்பாவாகக் கொள்வர் இளம் பூரணர்.

ஒன்றனோடொன்றியைந்து ஒரு வினையாதல் என்னும் பொருண்மை, ஒன்றனோடொன்றியைந்து வேறுவினையாதல் என்னும் பொருண்மை, ஒன்றனோடொன்றியைந்து ஒப்பல்லா வொப்பினை யுரைத்தல் என்னும் பொருண்மை, இத்தன்மையான் என்னும் பொருண்மை, ஏதுப்பொருண்மை என்னும் இவையும், இப்பெற்றி யானே இதனிடத்து வருகின்ற அத்தன்மையான பிற பொருள் களும் அம்மூன்றுவதன் கூற்றன என்று சொல்லுவர் புலவர் (எ - று.)

மூன்றுவதற்கு உருபு ஒடுவும், ஆனும் என இருவகைத்து. ஆன் என்பது எடுத்தோதிற்றிலரெனினும் "அதனினியறல் அதற்றகு கிளவி" என் ஓதிய வாய்பாட்டான் பெறுதும் என்பது.

வினைமுதல் கருவி என்றோதிய பொருண்மை இவ்விரண்டுருபிற்கும் ஒக்கும் என்பது.

(எ - டு.) வினைமுதல் - கொடியொடு துவக்குண்டான். நாயாற் கோட்பட்டான்.

கருவி - ஊசியொடு குயின்ற தூசும் பட்டும், வேலானெறிந்தான் எனவரும்.

அதனினியறல் - தச்சன் செய்த சிறுமா வையம் என்பது.

அதற்றகு கிளவி - வாயாற்றக்கது வாய்ச்சி என்பது.

அதன் வினைப்படுதல் - நாயாற்கோட்பட்டான், சாத்தனான் முடியு மிக்கருமம் என்பன.

அதனினாதல் - வாணிகத்தானாயினான் என்பது.

அதனிற் கோடல் - காணத்தாற்கொண்ட அரிசி என்பது.

அதனொடு மயங்கல் - எண்ணொடுவிராய அரிசி என்பது.

அதனோ டியைந்த ஒருவினைக் கிளவி - சாத்தனொடு வந்தான் என்பது.

அதனோடியைந்த வேறுவினைக் கிளவி - மலையொடு பொருதமால் யானை, காவோடறக்குளந் தொட்டான் என்பன. வேறு வினை என்பது ஒன்றன்கண்ணே வினையாதல்.

அதனோடியைந்த வொப்பலொப்புரை - நூலொடு நார் இயைந்தது போலும், முத்தொடு பவழம் கோத்தது போலும் என்பன.

இன்னான் என்பது, இத்தன்மையான் என ஒருவன் பெற்றி கூறல்; அஃது கண்ணாற் கொத்தை, காலான் முடவன் என்பன.

ஏது - முயற்சியிற் பிறத்தலான் இசை நிலையாது என்பது.

அதனினியறல் முதலாக அதனிற்கோடல் ஈறாக ஓதிய பொருண்மை எல்லாம் சூத்திரத்துள் ஆனுருபின் சுவடுபட ஓதினமையின் பெரும் பான்மை ஆனுருபிற்கே உரியவாம். சிறுபான்மை ஒடுவுருபிற்கும் வருவன உளவேல் கொள்க.

இவற்றுள், அதனினியறல், அதன் வினைப்படுதல் என்றோதிய இரண்டும் வினைமுதற் பாகுபாடு. அதனிற் கோடல், கருவியின் பாகுபாடு போலும். அதற்கு கிளவியும் அதனினாதலும் ஏதுவின் பாகுபாடு. அதனொடு மயங்கல் முதலாக அதனோடியைந்த ஒப்பலொப்புரை ஈறாக ஓதின எல்லாம், ஒடுவுருபு கொடுத்தோதினமையின் பெரும்பான்மையும் ஒடு உருபிற்கே உரிய; சிறுபான்மை ஆனுருபிற்கும் வருவன உள வேற்கொள்க.

இன்னான் என்னும் பொருண்மையும், ஏது என்னும் பொருண்மையும் ஓருருபின் எடுத்தோதாமையின் வழக்கிற்கேற்றவாறு கொள்ளப்படும்.

மூன்னும் ஏதுவின் பாகுபாடோதிவைத்துப் பின்னும் ஏது என வோதியது அவ்வாறொழிய வருவனவற்றைக் கருதிப் போலும். அவ் வேது காரக ஏதுவும் ஞாபக ஏதுவும் என இருவகைத்து. முயற்சியிற் பிறத்தல் காரகம்; பிறத்தலான் இசைநிலையாது என்பது ஞாபகம். அஞ் ஞாபகத்தைப் போலும் ஈண்டு ஏது என ஓதியது.

அன்ன பிறவும் என்றது சூத்திரத்துள் எடுத்தோதின பாகுபாட்டினொழிந்தனவும் பிற பொருட்பாகுபாடுகளும் கருதிப் போலும். அவை யெல்லாம் வந்தவழிக் கண்டு கொள்க. (கஉ, கங)

நான்காம் வேற்றுமை

எசு. *நான்கா குவதே
கு எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
எப்பொரு ளாயினுங் கொள்ளும் அதுவே.

அதற்குரிய பொருண்மை

எஎ. அதற்குவினை உடைமையின் அதற்குடம் படுதலின்
அதற்குப்படு பொருளின் அதுவாகு கிளவியின்
அதற்கியாப் புடைமையின் அதற்பொருட் டாதலின்
நட்பின் பகையின் காதலின் சிறப்பினென்
றப்பொருட் கிளவியும் அதன்பால என்மனார்.

* இதனையும் அடுத்த நூற்பாவையும் இணைத்து ஒரே நூற்பாவாகக் கொள்வர் இளம்பூரணர்.

என் - எனின், நிறுத்த முறையானே நான்காம் வேற்றுமை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) நான்காமெண்ணு முறைமைக் கண்ணதாகிய குவ்வென்னும் பெயரையுடைய வேற்றுமைச் சொல் யாதொரு பொருளினை ஏற்பதாக உணர்த்திநிற்கும்; இன்னும், அது தான் வரும் பொருட்பாகுபாட்டினைச் சொல்லின் ஒன்றற்கொன்று பயன்படுதலென்னும் பொருண்மை, ஒன்றற்கொன்று பொருள் மேற்கொடுப்பதாக உடம்படுதலென்னும் பொருண்மை, ஒன்றற் கொருபொருளுரிமையுள்வழிக் கூறிடப்படுதலென்னும் பொருண்மை, அம்முதற் பொருட்டாகலான் என்னும் பொருண்மை, ஒன்றற்கொன்று பொருத்தமுடைத்தாதல் என்னும் பொருண்மை, ஒருபொருளினை மேற்பெறுதல் காரணமாக ஒருதொழில் நிகழ்தலென்னும் பொருண்மை, ஒன்றற்கொன்று நட்பாதலும், பகையாதலும் என்னும் பொருண்மை, ஒன்றற் கொன்று காதலுடைத்தாதல் என்னும் பொருண்மை, ஒன்றற் கொன்று சிறத்தல் என்னும் பொருண்மை என்று சொல்லப்பட்ட அப்பொருண்மேல் வரும் சொற்களும், நான்காம் உருபின் கூற்றன என்று கூறுவர் புலவர், (எ - று.)

எப்பொருளாயினும் என்றது, மூன்றிடத்துப் பொருள்களது பன்மை நோக்கி. சொற்கள் பொருள்களை உணர்த்துதல் உரிமை நோக்கிச் சொல் தன்மேல் வினைப்பட எப்பொருளாயினும் கொள்ளுமென்று கூறினரெனினும் கோடலையுணர்த்தும் என்றவாறாகக் கொள்க.

(எ - டு.) அதற்கு வினையுடைமை - சாத்தற்குச் சோறு கொடுத்தான், கரும்பிற்கு வேலி, மயிர்க்கு எண்ணெய் என்பன.

அதற் குடம்படுதல் - சாத்தற்கு மகளுடம்பட்டார் சான்றோர் என்பது.

அதற்குப் படுபொருள் - சாத்தற்குப் படுபொருள் கொற்றன் என்பது.

அதுவாகு கிளவி - கடிசூத்திரத்துக்குப் பொன் என்பது.

அதற்கு யாப்புடைமை - கைக்கு யாப்புடையது கடகம். கூழிற்குக் குற்றேவல் செய்யும் என அறிக.

நட்பு - நட்பு உடையன், அவற்குத் தமன் என்பன.

பகை - மக்கட்குப் பகை பாம்பு, அவற்குப் பகை மாற்றான் என்பன.

காதல் - நட்டார்க்குக் காதலன், தாய்க்குக் காதலன் என்பன.

சிறப்பு - வடுகரரசர்க்குச் சிறந்தோர் சோழிய அரசர், கற்பார்க்குச் சிறந்தது செவி என்பன.

அதற்கு வினையுடைமை முதலாகக் கூறப்பட்டன எல்லாம் முன் கூறிய கொடைப் பொருளின் பாகுபாடு அல்ல. பிறபொருளென அறிக. அவற்றுள், அதற் குடம்படுதல், அதற்குப் படுபொருள் என்னும் இரண்டும் கொடைநீர்மையும் சிறிதுடைய.

உம்மையால் பிறவும் அதன்பாலுள. பண்ணிற்குத் தக்கது பாட்டு, பூவிற்குத் தக்கது வண்டு என்பனபோல வரும்; பிறவும் அன்ன.

உம்மை இறந்ததுதழீஇய எச்சவும்மை யாகலான் இங்கிகரன கோடற்கு உடம்படாதா லெனின், இறந்தது தழீஇய அதனையே இரட்டுறமொழிதல் என்னும் ஞாபகத்தினான் எதிரது தழீஇயதூஉ மாக்கிக் கூறப்பட்டது எனக் கொள்க. (௧௪, ௧௫)

ஐந்தாம் வேற்றுமை

௭௮. *ஐந்தா குவதே
இன் எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
இதனின் இற்றிது என்னும் அதுவே.

அதற்குரிய பொருண்மை

௭௯. வண்ணம் வடிவே அளவே சுவையே
தண்மை வெம்மை அச்சம் என்று
நன்மை தீமை சிறுமை பெருமை
வன்மை மென்மை கடுமை என்று
முதுமை இளமை சிறத்தல் இழித்தல்
புதுமை பழமை ஆக்கம் என்று
இன்மை உடைமை நாற்றம் தீர்தல்
பன்மை சின்மை பற்று விடுதலென்
றன்ன பிறவும் அதன்பால என்மனார்.

என் - எனின், நிறுத்த முறையானே ஐந்தாம் வேற்றுமையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

---

* இதனையும் அடுத்த நூற்பாவையும் இணைத்து ஒரே நூற்பாவாகக் கொள்வர் இளம்பூரணர்.

(இ - ள்.) ஐந்தாம் முறைமைக்கண்ணதாகிய இன் என்னும் பெயரையுடைய வேற்றுமைச்சொல் இப்பொருளின் இத்தன்மைத்து இப்பொருள் என வரூஉம் பொரூஉப்பொருளினைத் தனக்குப் பொருளாக உடைத்து; அது வருமாற்றை விரிப்பின், வண்ணம் முதலாகப் பற்றுவிடுதல் ஈருகச் சொல்லப்பட்ட இப்பொருண்மைகளும் பிற பொருண்மைகளும் அவ்வைந்தாவதின் கூற்றன என்று சொல்லுவர் புலவர், (எ - று.)

இனி ஐந்தாவது பொரூஉப்பொருளும், நீக்கப்பொருளும், எல்லைப்பொருளும், ஏதுப்பொருளும் என நால்வகைய. அவற்றுள், பொரூஉப்பொருள் சிறப்புடைமையின் முன்னெடுத்து ஓதப்பட்டது. பொரூஉ என்பது ஒன்றை ஒன்றின் மிகுத்துக் கூறல். இதனின் ஒழிவாகிய உவமமும் இரட்டுறமொழிதல் என்னும் ஞாபகத்தான் ஈண்டே கொள்ளப்படும். நீக்கம் உதாரணப் பகுதி கூறுகின்றவழிக் கொள்ளவைத்தார் என்பது. எல்லையும் ஏதுவும் அன்ன பிறவால் கொள்ள வைத்தார் என்பது.

(எ - டு.) காக்கையிற்கரிது களம்பழம் என்றாற் போல்வன. இதனின் என்பது காக்கையின் என்பது. இற்று என்பது கரிது என்பது. இது என்பது களம் பழம் என்பது. என்றது காக்கையினுங் கரியது களம் பழம் என்று மிகுத்துக் கூறியவாறாயிற்று. உவமத்திற்கும் இதுவே உதாரணமாம். காக்கையைப் போலக் கரிது களம்பழம் என்றவாறும்.

இனி வண்ணமென்பது ஐந்து வகைப்படும்: கருமை முதலியன காக்கையிற் கரிது களம்பழம் என்றாற் போல்வன.

வடிவு என்பது முப்பத்திரண்டு வகைத்து. அவை வட்டஞ், சதுரம், கோணம் முதலியன. இதனின் வட்டமிது என்பது.

அளவு - நெடுமை, குறுமை, நீளம் எனப் பலவாம். இதனின் நெடிது இது என்பது.

சுவை - அறுவகைப்படும். அவை கைப்பு முதலியன. இதனின் தீவிது இது என்பது.

வெம்மை - இதனின் வெய்யது இது என்பது.

அச்சம் - கள்ளரின் அஞ்சும் என்பது. இஃது ஏதுவின்கண் வரும்.

நன்மை - இதனின் நன்று இது என்பது.

தீமை - இதனின் தீது இது என்பது.

சிறுமை - இதனின் சிறிது இது என்பது.

பெருமை - இதனிற் பெரிது இது என்பது. வன்மை - இதனின் வலிது இது என்பது.

மென்மை - இதனின் மெலிது இது என்பது.

கடுமை - இதனின் கடிது இது என்பது.

முதுமை - இதனின் மூத்தது இது என்பது.

இளமை - இவனின் இளையோன் இவன் என்பது.

சிறத்தல் - இவனிற் சிறந்தவன் இவன், இதனிற் சிறந்தது இது என்பன.

இழித்தல் - இவனின் இழிந்தவன் இவன், இதனின் இழிந்தது இது என்பன.

புதுமை - இவனிற் புதியன் இவன், இதனிற் புதிது இது என்பன.

பழமை - இவனிற் பழையன் இவன், இதனிற் பழையது இது என்பன.

ஆக்கம் - இவனின் ஆயினன், வாணிகத்தின் ஆயினன் இவன் என்பன. இது ஏதுப்பொருட்கண்ணும் வரும்.

இன்மை - இவனின் இலன் இவன் என்பது.

உடைமை - இவனின் உடையன் இவன் என்பது.

நாற்றம் - இதனின் நாறும் இது என்பது.

இவையெல்லாம் பொரூஉப் பொருளாம்.

தீர்தல் - ஊரிற்றீர்ந்தான் என்பது.

பன்மை - இவரிற் பலர் இவர், இதனிற் பல இவை என்பன.

சின்மை - இவரிற் சிலர் இவர், இதனிற் சில இவை என்பன.

இவையும் பொரூஉப் பொருளவாம்.

பற்றுவிடுதல் - ஊரிற் பற்றுவிட்டான், காமத்திற் பற்றுவிட்டான் என்பன.

இவை நீக்கம்.

மருஊரின் மேற்கு, கருஊரின் கிழக்கு என்பன எல்லைப்பொருளவாம். முயற்சியிற் பிறத்தலின் இசை நிலையாகாது என்பது ஏதுப் பொருளது.

அன்ன பிறவும் என்றது எடுத்தோதின பொரூஉப் பொருளின் பாகு பாட்டினும் நீக்கப்பொருளின் பாகுபாட்டினும், ஒழிந்தவற்றிற்கும், பிற பொருட் பாகுபாட்டிற்கும் புறனடை என உணர்க. (கசு, கஎ)

ஆறும் வேற்றுமை

௮௦. *ஆறு குவதே
அதுஎனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
தன்னினும் பிறிதினும் இதன திதுஎனும்
அன்ன கிளவிக் கிழமைத் ததுவே.

அதற்குரிய பொருட் பாகுபாடுகள்

௮௧. இயற்கையின் உடைமையின் முறைமையின் [கிழமையின்
செயற்கையின் முதுமையின் வினையின் என்று
கருவியின் துணையின் கலத்தின் முதலின்
ஒருவழி உறுப்பின் குழுவின் என்று
தெரிந்துமொழிச் செய்தியின் நிலையின் வாழ்ச்சியின்
திரிந்து வேறுபடூஉம் பிறவும் அன்ன
கூறிய மருங்கில் தோன்றுங் கிளவி
ஆறன் பால என்மனார் புலவர்.

என் - எனின், நிறுத்த முறையானே, ஆறும் வேற்றுமையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஆறும் எண்ணுமுறைக்கண்ணதாகிய அது என்னும் பெயரையுடைய வேற்றுமைச் சொல், தன்னோடு தொடர்ந்த தொரு பொருளையும் தன்னின் வேறாகியதொரு பொருளையும், இதனது இது என்னும் கிழமை செப்பிநிற்றலை இலக்கணமாக உடைத்து; வருமாற்றைச் சொல்லின், இயற்கை என்பது முதலாகத் திரிந்து வேறுபடுதல் ஈறாக ஓதப்பட்ட பொருட் பாகுபாடுகளும், பிறவும் 'அத்தன்மை தன்னினும் பிறிதினும்' என ஓதிய இருவகையிடத்து வரும் பாகுபாடுகளும் அவ் ஆறும்வேற்றுமைக் கூற்றன என்று சொல்லுவர் புலவர், (எ - று.)

'இதன திது என்னுங் கிளவி' என்றது 'அன்ன' என்றதனான் அஃறிணை யொருமை தோன்றவரும் அது என்பதன்றி அஃறிணைப் பன்மை தோன்றவருவதோர் அகரஉருபும் உண்டென்று கொள்ளப்படும். அஃ

* இதனையும் அடுத்த நூற்பாவையும் இணைத்து ஒரே நூற்பாவாகக் கொள்வர் இளம்பூரணர்.

தேல் அவை அஃறிணை இருபாற்கும் உரிய உருபாயின் அவ்வாறு போல, உயர்திணை முப்பாற்கும் உரியவுருபு கூறுரோ எனின், அவ்வாறு வரும் வழக்கின்மையின் கூறாராயினர் என்பது.

நமன், நமள், நமர் என்பனவற்றுள் அன், அள், அர் என்பன உயர் திணை உருபன்றோ எனின், பிறவுருபு போலத் தொகுத்தலும் விரித்தலும் இன்மையாலும், தற்கிழமையும் பிறிதின்கிழமையும் என்னும் இரண்டி டத்தும் வாராமையானும், மற்றைப் பெயரும் உருபும் ஆகக் கொள்ளாத ஆறும் வேற்றுமைத் தொகைச்சொற் போல இரு பொருணிலைமைத் தொரு சொல்லென எச்சவியலுள் கூறுகின்றார் என்பது. அஃதேல் உயர் திணைப் பொருளை யுடைமை செப்புமாறு என்னை எனின், அதற்கு *மேல் வருகின்ற ஒத்தினுள், 'அது என் வேற்றுமை' என்புழிக் கூறுவர் என்பது.

தன்னினும் என்புழிக் கிழமை ஐந்துவகைப்படும்; அவை ஒன்று பல குழீஇய தற்கிழமையும், வேறுபல குழீஇய தற்கிழமையும், ஒன்றிபற் கிழமையும், உறுப்பின் கிழமையும், மெய்திரிந்தாகிய தற்கிழமையும் என. பிறிதின் கிழமை இது போலப் பகுதிப்படாது என்க.

ஒன்று பல குழீஇயது - எட்குப்பை, எண்ணுகுப்பை என்றவாறு

வேறு பலகுழீ இயது - படைக்குழாம்.

ஒன்றியற் கிழமை - நிலத்ததகலம், சாத்தனதியற்கை.

உறுப்பின் கிழமை - யானையது கோடு, புலியது உகிர்.

மெய்திரிந்தாகியது - எட்சாந்து.

பிறிதின் கிழமை - சாத்தனது தோட்டம் என வரும். இனி அவ்விரு கிழமையும் ஒட்டுமாறு.

இயற்கை - சாத்தனதியற்கை. இது தற்கிழமையுள் ஒன்றியதற் கிழமை.

உடைமை - சாத்தனதுடைமை. இது பிறிதின் கிழமை; தற்கிழமை யும் படும்போலும்.

முறைமை - ஆவினது கன்று. இது பிறிதின்கிழமை.

கிழமை - சாத்தனது கிழமை.

செயற்கை - சாத்தனது செயற்கை: இவ்விரண்டும் தற்கிழமை ஆகு பெயராயவழிப் பிறிதின் கிழமையுமாம்.

முதுமை - அவனது முதுமை. இது தற்கிழமை.

வினை - சாத்தனது வினை. இதுவும் ஆகுபெயராயவழிப் பிறிதின் கிழமையுமாம்.

---

* வேற்றுமை மயங்கியல், 11 ஆம் நூற்பா.

கருவி - சாத்தனது வாள்: இதுபிறிதின் கிழமை.

துணை - சாத்தனது துணை; இதுவும் அது.

கலம் - சாத்தனது கலம்; கலம் என்பதனை யொற்றிக் கலத்தின் மேற் கொள்க. பிறகலத்தின்மேற் கொள்ளாமைக் காரணம் என்னை எனின், இஃதொரு பொருள் இருவற் குடைமையாக நிற்கும், வேறுபட்ட தாகலின் என்க. இஃது உரையிற் கோடல். இதுவும் அது.

முதல் - சாத்தனது முதல், இத்தோட்டம் என ஓர்க. இதுவும் ஓர் உடைமை வேறுபாடு எனக் கொள்க. இதுவும் அது.

ஒருவழி யுறுப்பு - யானையது கோடு. உறுப்பு என்னாது ஒருவழி யுறுப்பு என்றது ஒருறுப்பினையுடைமையாகக் கருதாது பலவற்றையுங் கருதி உரிமையாகாத பொருடானும் என்பது போலும். இது தற்கிழமை யுள் உறுப்பின் தற்கிழமை.

குழூவு - எட்குப்பை, படைக்குழாம் என்பன. இவை தற்கிழமையுள் ஒன்று பலகுழீஇயதூஉம் வேறுபல குழீஇயதூஉம் ஆம். குழு என்பது உடல் நோக்கிற்று.

தெரிந்துமொழிச் செய்தி - கபிலரது பாட்டு: இதுவும் பாரியது பாட்டு எனவும் நிற்றலின் இரு பொருட் குரிமையாம். கபிலரது என்புழி மெய்திரிந்தாகியதன் பாற்படும், பாரியது என நிற்புழிப் பிறிதின் கிழமை யாம்.

நிலை - பெண்ணாகத்துப் பெருஞ்சங்கரனாரது நிலை. இஃது ஒன்றிய தற்கிழமை.

வாழ்ச்சி - சாத்தனது வாழ்ச்சி; இது வாழ்தல் என்னும் தொழில் கருதினவழித் தற்கிழமை. வாழும் இடம் கருதியவழிப் பிறிதின் கிழமையாம்.

திரிந்து வேறு படுவன - எட்சாந்து, கோட்டு நூறு என்பன.

சாத்தனது சொல் என்பதும் பிறவும் ஒரு பொருள் முழுவதூஉம் திரியாதன. பரணரது பாட்டியல் என்றாற் போல வருவன எல்லாம் உதாரண வாய்பாடாக எடுத்தோதாது திரிந்து வேறுபடும் எனப் பொதுப்பட ஒரு பொருண்மையாக எடுத்தோதினமையிற் கொள்ளப் படும்.

பிறவும் என்றதனால் சாத்தனது வனப்பு, சாத்தனது ஆண்மை, சாத்தனது நடை, சாத்தனது புத்தகம் எனவரும். பிறவும் அன்ன.

(கஅ, கக)

ஏழாம் வேற்றுமை

அ௨. *ஏழா குவதே
கண்எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
வினைசெய் இடத்தின் நிலத்தின் காலத்தின்
அனைவகைக் குறிப்பின் தோன்றும் அதுவே.

அதற்குரிய உருபுகள்

அ௩. கண்கால் புறமகம் உள்உழை கீழ்மேல்
பின்சார் அயல்புடை தேவகை எனாஅ
முன்இடை கடைதலை வலமிடம் எனாஅ
அன்ன பிறவும் அதன்பால என்மனார்.

என் - எனின், நிறுத்த முறையானே ஏழாம் வேற்றுமையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஏழாம் எண்ணுமுறைக் கண்ணதாகிய கண் என்னும் பெயரையுடைய வேற்றுமைச் சொல் வினை செய்யிடமும், நிலமும், காலமுமாகிய மூன்று பொருட் கண்ணும் வரும். அதன் உருபு வரும் பாகுபாட்டைச் சொல்லின் கண் என்னும் உருபு முதலாய்ப் புடை என்னும் உருபு ஈறாக ஓதப்பட்ட உருபுகளும், இடையே தே. வகை என ஓதிய திசைக்கூற்றுப் பொருண்மையும், பின்னரும் முன் என்னும் உருபு முதலாக இடம் என்னும் உருபு ஈறாக எடுத்தோதப்பட்ட உருபுகளும் அத்தன்மைய பிற உருபுகளும் அவ்வேழாவதன் கூற்றன, (எ – று.)

வினைசெய்யிடம் - வினைசெய்யா நிற்றலாகிய இடம். வினைசெய் நிலம் - ஒரு தொழில் நிகழ்ந்து வரையறையுடையதோர் இடம். காலம் என்பது ஒரு தொழில் நிகழ்தற்கு இடமாய் வரையறைப்பட்டு நிற்பது. இம் மூன்றன் கண்ணும் ஏழாவது வருமிடத்து இடமும் இடத்துநிகழ் பொருளும் வேறுபட வருவனவும், வேறுபடாமல் வருவனவும் என இருவகைய.

(எ - டு.) வினைசெய்யிடம் - தட்டுப்புடையுள் வந்தான், தட்டுப் புடையுள் வலியுண்டு.

நிலம் - குன்றத்துக் கூகை, குன்றத்துக்கண் குவடு, ஆகாயத்துக்கண் பருந்து.

* இதனையும் அடுத்த நூற்பாவையும் இணைத்து ஒரே நூற்பாவாகக் கொள்வர் இளம்பூரணர்.

காலம் - மாரிக்கண் வந்தான், மாரிக்கண் நாள் என வரும்.

கண் - ஊர்க்கண் இருந்தான்.

கால் - ஊர்க்கால் இருந்தான்.

அகம் - மாடத்தகத்து இருந்தான்.

உள் - ஊருள் இருந்தான்.

உழை - சான்றோருழைச் சென்றான்.

கீழ் - மாடத்துக் கீழ் இருந்தான்.

மேல் - மாடத்து மேல் இருந்தான்.

பின் - ஏர்ப்பின் சென்றான்.

சார் - காட்டுச்சார் ஓடுங் களிறு.

அயல் - ஊரயல் இருந்தான்.

புடை - ஊர்ப்புடை இருந்தான்.

இவையெல்லாம் உருபு.

தேஎவகை என்பன திசைக்கூறு. இது பொருள்.

திசை என்பது ஆகாயம்போல் வரையறைப்படாது சொல்லுவான் குறிப்பினவாய் நிற்றலின் வேறு பொருளென்று, நிலமென்புழி அடங்காது, கொண்டுபோந்து கூறினார்போலும். வடக்கண் வேங்கடம், தென் கட்குமரி எனவரும்.

முன் - தேர் முன் சென்றான்.

இடை - சான்றோரிடை இருந்தான்.

கடை - கோயிற்கடைச் சென்றான்.

தலை - தந்தைதலைச் சென்றான்.

வலம் - கைவலத் துள்ளது கொடுக்கும்.

இடம் - கையிடத்துப்பொருள் என வரும்.

பிறவும் என்றதனால், கிழவோள்தே எத்து, கிழவி மாட்டு என்றாற் போல்வன கொள்க.

ஏனை வேற்றுமைபோலப் பொருட்பாகுபாடு அன்றி உருபின் பாகுபாடு உண்மையின் அதனை விரித்தோதினார் எனக் கொள்க. ஓதின உருபுகளெல்லாவற்றினும் கண் எனும் உருபு சிறந்தமையின் முன்வைத்தது என்பது.

மற்றும் புறம், அகம் என்பனபோல்வன எல்லாம் பெயராய், ஆருவதன் பொருண்மையாய் வருகின்றமையின் ஏழனுருபு ஆமாறு என்னை

யெனின், அகம் புறம் என்பன ஓரிடத்தினை வரையறுத்து உணர்த்தும் வழி ஆறாவதாம்; அவ்வாறன்றிக் கண் என்பது போல இடம் என முழு துணர்வு செல்லநின்றவழி ஏழாவதாம் எனக் கொள்க. இதுநோக்கிப் போலும் கண் கால் எனக் கண் என்பதனை இருகாலாவது கூறியது என்பது.

இவ்வாறன்றிக் கண் என்பது ஓரிடத்தினை வரையறாது முழுவதும் உணரநிற்கும் உருபு எனவும், அல்லது ஓரிடப் பொருள் உணர்த்திநிற்கும் உருபு எனவும் கூறுவதோர் நயமுண்டுபோலும். (உ௰, உக)

ஆறுருபிற்கும் பொதுவிலக்கணம்

அசு. வேற்றுமைப் பொருளை விரிக்குங் காலை
ஈற்றுநின் றியலுந் தொகைவயிற் பிரிந்தே.*

என் - எனின், ஐ முதலிய ஆறுருபிற்கும் பொதுவாய இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) வேற்றுமைச் சொல்லினது பொருளை விரித் துணர்த்துங்காலத்து, அவ்வேற்றுமைப் பொருள்கள் பெயரது ஈற்றின் கண்ணே நின்று நடக்கும், தொக்க விடத்து நின்று, (எ - று.)

(எ - டு.) மரம் குறைத்தான் என்பது மரத்தைக் குறைத்தான் என இறுதிக்கண் விரிந்து நின்றது. தாய் மூவர் என்பது தாயோடு மூவர் என விரிந்தது. பிறவும் அன்ன.

இது "கூறிய முறையின்"† என்றதனால் அடங்காதோ எனின் அஃது உருபுநிற்கும் இடம் கூறியது; அங்ஙனம் நின்ற உருபு விகாரப் பட்டுத் தொக்குநின்று பின் விரியும் வழியும் பிறண்டு விரியாது முன் கூறிய அதனையே திரிபுபடுவழிக் கூறியது எனக்கொள்க. (உஉ)

உருபு நோக்கிவரும் சொற்களின் இலக்கணம்

அரு. பல்லா றாகப் பொருள்புணர்ந் திசைக்கும்
எல்லாச் சொல்லும் உரிய என்ப.

என் - எனின், உருபு நோக்கிவரும் சொற்களின் இலக்கணம் உணர்த் துதல் நுதலிற்று.

---

* இதனையும் அடுத்த நூற்பாவையும் ஒன்றாகக் கூறுவர் சேனாவரை யரும், நச்சினார்க்கினியரும் தெய்வச்சிலையாரும். இளம்பூரணர் இவர் கொண்டவாறே கொள்வர்.

† தொல் - சொல் - எ௰.

(இ - ள்.) பல நெறியாக அவ்வவ் வேற்றுமையின் பொருளோடு பொருந்தி ஒலிக்கும் எவ்வகைப்பட்ட சொல்லும் வேற்றுமைபோலப் பிரியாது இறுதிக்கண் விரிந்து நிற்றற்குரிய, (எ - று.)

விரித்தற்குரிய என்பது, முன்னின்ற அதிகாரத்தால் கொள்க. இனித் தொகுத்தலும் உரிய என்பது, ஒன்றெனமுடித்தல் என்பதனால் கொள்க.

(எ - டு.) படைக்கை என்பது படையினைப் பிடித்த கை என விரிந்தது. குதிரைத் தேர் என்பது குதிரையாற் பூட்டப்பட்ட தேர் என விரிந்தது. பிறவும் அன்ன. ஆறுவதற்குப் பொருள்விரிதல் இல்லை.

உருபுகள் தொகுத்தலும் விரிதலும் கூறியவழியே அவ்வுருபுநோக்கி வரும் சொற்கள் தொகுத்தலும் விரித்தலும் அடங்குமால் எனின், அவ்வுருபு தொக்குழித் தொக்கும், விரிந்துழி விரிந்தும் நிற்றல் ஒருதலையன்மையின், அதற்கும் வேறு கூறவேண்டும் என்பது.

மரம் குறைத்தான், குழையை உடையன்; உருபு தொக்குழித் தொகாதாயிற்று எனக் கொள்க. (உஙு)

வேற்றுமையியல் முற்றும்.

௩. வேற்றுமை மயங்கியல்

இரண்டாவது ஏழாவதனொடு மயங்கல்

௮௬. கருமம் அல்லாச் சார்பென் கிளவிக்(கு)
உரிமையும் உடைத்தே கண்என் வேற்றுமை.

என்பது சூத்திரம்.

இனி, இவ்வோத்து என்ன பெயர்த்தோ எனின், உருபும் பொருளும் உடன் மயங்குதலும், ஒருவழி உருபே மயங்குதலும், ஒன்றற்குரியதனோடு ஒன்று மயங்குதலும், இரண்டும் ஒத்து மயங்குதலும், ஒரு பொருண்மை ஒன்றற்கே உரியதாகாது பலவற்றோடு மயங்குதலும், ஒன்றனது ஒரு பொருளோடு ஒன்று மயங்குதலும், ஒன்றனது பல பொருளோடு ஒன்று மயங்குதலும், ஒன்றற்குரிமை பூண்டு எடுத்தோதின பொருள்வழி மயங்குதலும், ஓதாதபொருள்வழி மயங்குதலும், ஒன்று தன் மரபாய் மயங்குதலும், இலக்கண வழக்குள்வழி மயங்குதலும், இலக்கணமில்வழி மயங்குதலும், மயக்கவகையான் மயங்குதலும், ஒன்றனோடு பொருள் முடிந்து தொடர்ந்தடுக்கி மயங்குதலும், ஒன்றனோடு பொருண் முடியாது தொடர்ந்தடுக்கி மயங்குதலும், தொகையுள் மயங்குதலும், தொகையில் மயங்குதலும், உருபு வேற்றுமையாய் மயங்குதலும், உருபும் உருபும் மயங்குதலும், என்றின்னோரன்ன வேற்றுமை மயக்கம் பல கூறலின் வேற்றுமைமயங்கியல் என்னும் பெயர்த்தாயிற்று.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ எனின், நிறுத்த முறையானே இரண்டாவது, அதிகாரத்தானே நின்ற ஏழாவதனோடும் மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) கருமச்சார்ச்சியல்லாத சார்தல் என்னும் பொருண்மைக்கு உரித்தாதலையுடைத்துக் கண் என்னும் வாய்பாட்டதாகிய ஏழாம் வேற்றுமை, (எ - று.)

(எ - டு.) அரசரைச் சார்ந்தார், அரசர்கட் சார்ந்தார் எனவரும்.

கருமச்சார்ச்சிக்கண் அரசர்கண் சார்ந்தார் எனின், அரசர் இடமாக, சாரப்பட்டது பிறிதாவான் செல்லலின் கருமமல்லாச் சார்பு என்று ஓதப் பட்டது. (௧)

இதுவுமது

௮௭. சினைநிலைக் கிளவிக் கையும் கண்ணும்
வினைநிலை ஒக்கும் என்மனார் புலவர்.

என் - எனின். இதுவும் அவ்விரண்டன் மயக்கமே உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) சினையாகிய நிலைமையையுடைய பொருண்மைக்கு இரண்டாவதும் ஏழாவதும் அதன் வினைக்கூறு நிலைமைக்கண் ஒத்த பொருள் என்று கூறுவர் புலவர், (எ - று.)

(எ - டு.) கண்ணைக்குத்தினான், கண்ணின்கண் குத்தினான் என வரும்.

சினைக்கண் இவ்விரண்டும் வரும் என்றது என்னை, பிறவும் வருமால் எனின், முன் இடப்பொருட்கண்வரும் என்ற ஏழாவது, மற்றொரு வேற்றுமையோடு தொடர்ந்து கூறும்வழிச் செயப்படுபொருட்கண் வருதலும் கண்டு அது கூறியவாறு எனக் கொள்க. தொடர்ந்து கூறும் வழியாமாறு உணரச் சொல்லுகின்றார். வினைநிலை என்றது இரண்டாவதற்கு ஓதிய வினை, வினைக்குறிப்பு என உணர்க. (ஏ)

இதுவுமது

அஅ. கன்றலும் செலவும் ஒன்றுமார் வினையே.

என் - எனின், இதுவும் அவ்விரண்டன் மயக்கமே உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மேற்கூறிய இரண்டாவதற்கும் ஏழாவதற்கும் கன்றல் என்னும் பொருண்மையும், செலவு என்னும் பொருண்மையும் பொருந்திவரும் அவ்வுருபுகளது வினை கூறுமிடத்து, (எ - று.)

(எ - டு.) சூதினைக் கன்றினான், சூதின்கண் கன்றினான்; நெறியைச் சென்றான், நெறிக்கண் சென்றான் என வரும். (அ)

முதல் சினைப் பெயர்களில் வரும் உருபுகள்

அகூ. *முதல்சினைக் கிளவிக் கதுஎன் வேற்றுமை
முதற்கண் வரினே சினைக்கை வருமே.

என் - எனின், வேற்றுமைக்கண்ணதோர் சொல்லுதல் வகைமை உணர்த்துதல் நுதலிற்று. மேற்கூறிய சினைநிலைக்கிளவி என்பதற்குப் புறனடை எனினும் அமையும். முதற்பொருட்கும் முதலோடு தொடர்ந்த சினைப்பொருட்கும் உருபுகள் வருமாறு கூறினாராம்.

(இ - ள்.) அது என் வேற்றுமை முதற்கண் வரின் அதன் சினைக்கு இரண்டாம் வேற்றுமை வரும், (எ - று.)

---

* இதனையும் அடுத்த நூற்பாவையும் ஒரே நூற்பாவாகக் கொள்வர் தெய்வச்சிலையார்.

(எ - டு.) யானையது கோட்டைக் குறைத்தான்; சாத்தனது கண்ணைக் குத்தினான் என வரும். (௯)

இதுவுமது

௯௦. முதன்முன் ஐவரின் கண்ணென் வேற்றுமை
சினைமுன் வருதல் தெள்ளி தென்ப.

என் - எனின், இதற்கும் அக்கருத்து ஒக்கும்.

(இ - ள்.) முதற்கண்ணே இரண்டாம் வேற்றுமை வரின் ஏழாம் வேற்றுமை சினைக்கண்ணே வருதல் விளங்கிற்று என்று சொல்லுவர் புலவர், (எ - று.)

(எ - டு.) யானையைக் கோட்டின்கண் குறைத்தான், சாத்தனைக் கண்ணின்கண் குத்தினான் எனவரும்.

தெள்ளிது என்றதனால் சிறுபான்மை இரண்டாவது தானேயும் வரப்பெறும். அஃது யானையைக் கோட்டைக் குறைத்தான், சாத்தனைக் கண்ணைக் குத்தினான் எனக் கொள்க.

இவற்றுள் முதல் சினைப் பொருட்குக் கண்ணுருபினைத் தொடர்ந்து கூறும்வழி இரண்டாவதனோடு ஒப்பச் செய்யப்படுபொருட்கண் ஏழாவது வந்தவாறு கண்டு கொள்க.

மணியது நிறத்தைக் கெடுத்தான், மணியை நிறத்தைக் கெடுத்தான்; இது பண்பு. தலைமகனது செலவை அழுங்குவித்தல், தலைமகனைச் செலவின்கண் அழுங்குவித்தல், தலைமகனைச் செலவை அழுங்குவித்தல். இது தொழில். பிறவும் அன்ன.

இவ்வாறு மூன்று மூன்றுருபு வாராது, ஒரு பொருளது இரண்டாவதன் தொடர்ச்சிபற்றி இரண்டாவது தானே வருவனவும் கொள்க.

(எ - டு.) சாத்தனை நூலை ஓதுவித்தல். யாற்றை நீரை விலக்கினான் என்பனபோல்வன. பிறவும் அன்ன. (௰)

முதலும் சினையும் சொல்லுவான் குறிப்பினவாதல்

௯௧. முதலும் சினையும் பொருள்வேறு படாஅ
நுவலுங் காலைச் சொற்குறிப் பினவே.

என் - எனின், முதல் சினை என்னும் பொருண்மை அதிகாரப்பட்டமை கண்டு அப்பொருளை ஆராய்தல் நுதலிற்று.

(இ - ள்.) முதல் என்றும் சினை என்றும் சொல்லப்படுகின்ற பொருள்கள் இது முதல் இது சினை எனத் தம்மின் வேறுபட

நில்லாது, ஒருவன் சொல்லும் காலத்து அவன் சொல்லும் கருத்தின்கண் இது முதல் இது சினை என வேறுபாடு உணரநிற்கும், (எ - று.)

(எ - டு.) கோட்டது நுனியைக் குறைத்தான், கோட்டை நுனிக்கண் குறைத்தான், கோட்டை நுனியைக் குறைத்தான்; இது சினை முதலாய் வந்தவாறு.

படை யென்பதனை முதலாகப் பார்க்கும்வழிப் படையினது யானை எனச் சினையேபோலே நிற்கும் என்பது. (சு)

பிண்டப்பொருளும் அவ்வியல்பினவாதல்

௬௨. பிண்டப் பெயரும் ஆயியல் திரியா
பண்டியல் மருங்கின் மரீஇய மரபே.

என்-எனின், மேலதன் முடிபு முடிதலுடையது பிறிதும் உண்டென்பது உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) திரட்சி என்னும் பொருளினை யுணர நின்ற பெயர்களும் மேற்கூறிய சினைமுதல்களது இயல்பின. அவை கோடற்குக் காரணம் என்னை எனின் முற்காலத்து நடந்த கூற்றேதுவாகப் பிற்காலத்து நடந்து மருவின முறைமையுடையன அவையாகலான், (எ - று.)

ஆயியல் திரியா என்றது மேல், சினை முதலாய் முதல் சினையாய் வந்தவாறு போலப் பிண்டமே பொருளாய் அப்பொருளே பிண்டமாய் வருமென்றவாறு. அன்றி, பொருணிலைமை சொல்லுவான் குறிப்பினவாருயின் அவ்வாறு போலப் பொருளின் வேறு பிண்டம் என்பதொன்றுளதாகல், அச்சொல்லுவான் குறிப்பின் பாலது என்றவாறு.

(எ - டு.) அப்பிண்டந்தான் ஒன்று பல குழீஇயதும் வேறு பல குழீஇயதும் ஆம். ஒன்றுபல குழீஇயது எள்குப்பை. எள்ளின் வேறு குப்பை என்று உண்மை வகையின் இல்லையென்றவாறு. வேறு பல குழீஇயது படைக்குழாம்.

முதல் சினை எனவும், பொருள் பிண்டம் எனவும், இவை யாராய நின்றமையின் மற்றொன்று விரித்தல் என்னுங் குற்றமாம், பிறவெனின், அதற்கோர் அதிகாரப்பட்டு நின்றதாகலானும் பொருள் ஆராய்ச்சியும் இச் சொல்லாராய்ச்சிக்குப் பயன் படும் நிலைமைத்தாகலானும் அமையும் என்பது. (எ)

ஒடு உருபு உயர் பொருளுணர்த்தும் பெயர்வழி வரும் எனல்

௬௩. ஒருவினை ஒடுச்சொல் உயர்பின் வழித்தே.

என் - எனின், மூன்றும் வேற்றுமைப் பொருட் கண்ணதோர் சொல்லுதல் வகைமை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஒருவினை கொண்டு முடிதலுடைய ஒடு என்னும் சொல் அவ் வொருவினையையுடைய இரு பொருளினுமாய் அதன் பின் வருமோ எனின், அது கூறுவான் அப் பொருளின் அப் பொழுது உயர்ந்ததாகக் கருதியதன் பின் வரும், (எ - று.)

(எ - டு.) அரசரொடு வந்தார் சேவகர் என்பதைச் சேவகரொடு வந்தார் அரசர் என்னற்க.

இனி அவ்வுயர்புதாம் குலத்தான் உயர்தலும், தவத்தான் உயர்தலும், நிலைமையான் உயர்தலும், உபகாரத்தான் உயர்தலும் எனப் பலவகைய.

இழிந்தவழி ஒடுவைத்துச் சொல்லுவது அந்நேரத்து அவற்றுய தொழின்மைச் சிறப்பு நோக்கி என உணர்க. அவை, நம்பி நாயொடு வந்தான் என்றாற் போல்வன. (அ)

மூன்றினும் ஐந்தினும் ஏதுப்பொருள் வரும் எனல்

கூச. மூன்றனும் ஐந்தனும் தோன்றக் கூறிய
ஆக்கமொடு புணர்ந்த ஏதுக் கிளவி
நோக்கோ ரனைய என்மனார் புலவர்.

என் - எனின், மூன்றாம் வேற்றுமையும், ஐந்தாம் வேற்றுமையும் ஏதுப்பொருண்மைக்கு ஒத்த கிழமைய என்பது உணர்த்துதல் நுதலிற்று.

(இ—ள்.) மூன்றாவதனினும், ஐந்தாவதனினும் விளங்கச் சொல்லப்பட்ட ஆக்கப் பொருண்மையோடு கூடிய ஏது என்னும் பொருண்மை அவ்வுருபுகளால் அப்பொருள் விளங்குமிடத்து *அஃதில்லை, இரண்டும் ஒருதன்மைய, (எ - று.)

(எ - டு.) வாணிகத்தான் ஆயினான், வாணிகத்தின் ஆயினான் என்பன.

கிளவி யென்றதற்குப் பெயராற் பொருளினை ஆக்கமொடு புணர்ந்த தென்று விசேடித்துக் கூறினமையின் ஆக்கமல்லா ஏது ஒத்தகிழமைத் தன்று என்பது போலும் கருத்து. (க)

இரண்டாவதன் பொருளில் மூன்றும் ஐந்தும் வந்து மயங்கல்

கூடு. இரண்டன் மருங்கின் நோக்கல் நோக்கவ்
இரண்டன் மருங்கின் ஏதுவும் ஆகும்.

* அஃதென்றது மூன்றாவதும் ஐந்தாவதுமாகிய உருபுவேறுபாட்டை.

என் - எனின், இரண்டாவது மூன்றாவதனோடும், ஐந்தாவதனோடும் மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) இரண்டாம் வேற்றுமையிடத்து, பெற்றியான் நோக்கப்படுதலன்றி மனத்தான் நோக்கப்படும் நோக்கும் என மூன்றாவதன்கண்ணும், ஐந்தாவதன் கண்ணும் ஒத்தகிழமைய வென்றோதிய ஏதுப்பொருள்படும், (எ - று.)

(எ - டு.) வானோக்கி வாழும் என்பது, வானைநோக்கி வாழும், வானானுய பயன் நோக்கி வாழும், வானினுய பயன் நோக்கி வாழும் எனவரும். ஏதுவுமாகும் என்ற உம்மையான் தன்பொருட்பாடே சிறந்தது.

இனி ஏதுவாம்வழிச் செயப்படுபொருள்படுதற்கு உரிய நோக்கி என் பதனை ஒழிய, வானை வாழும் என்றாற்போல நிற்க வேண்டும் எனின், செயப்படு பொருள் ஒழிய, ஏதுப்பொருட் குறிப்போடு செயப்படு பொருளாய் நிற்கும் என்பது போலும் கருத்து. (கo)

ஆறாவதன் பொருளில் வரும் உயர்திணைத் தொகையில் நான்கனுருபு விரிதல்

கக. *அதுஎன் வேற்றுமை உயர்திணைத் [தொகைவயின்
அதுஎன் உருபுகெடக் குகரம் வருமே.

என் - எனின், ஆறாவது நான்காவதனோடும் மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அது என்னும் வாய்பாட்டையுடைய ஆறும் வேற்றுமை, உயர்திணைத் தொகைவயின் அது என்னும் வாய்பாடு கெட நான்காவதாய் வரும், (எ-று.)

(எ - டு.) நம்பி மகன், நம்பிக்கு மகன் என்பது இலக்கண மில்வழி மயங்கல். நம்பியது மகன் என்பது இன்மையினென்க.

இச்சூத்திரத்தானே இவ் வுருபோடொத்துத் தம் பொருள்பட நில்லாது பெயர்போல் ஆறாவது பால் தோன்றி நிற்கும் என்பது பெற்றாம். இந் நயத்தானே வினைக்குறிப்பு உரிமைப்படா நிற்கும் வழியுண்டேனும் கொள்க. (கக)

* இந்நூற்பாவினைத் தெய்வச்சிலையார் கoஉ ஆம் நூற்பாவை அடுத்து வைத்துள்ளார்.

தடுமாறு தொழிற் பெயரில் இரண்டும் மூன்றும் வரும் எனல்

கள. தடுமாறு தொழிற்பெயர்க்கு இரண்டும் மூன்றும்
கடிநிலை இலவே பொருள்வயி னான.

என் - எனின், இரண்டாவதும் மூன்றாவதும் மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) தடுமாறு தொழிற்பெயர்க்கு... பொருள்வயினான

வினையுடைய பெயர்க்கண் இரண்டாவதும், மூன்றாவதும் நீக்கும் நிலைமையில; பொருள்படுமிடத்து, (எ - று.)

(எ - டு.) புலி கொல் யானை என்பது, ஒருகால் புலியைக் கொன்ற யானை எனவும், ஒருகால் புலியாற் கொல்லப்பட்ட யானை எனவும் கொல் லுதல் தொழில் இரண்டிற்குஞ் சென்றுவருதலில் தடுமாறு தொழிற் பெயர் என்னப்பட்டது. புலியால் என்புழி வினை யாதோ எனின், ஆண்டும் வினை கொன்ற என்பது. அஃதேல் புலி கருவியாக யானைதான் பிறிதொன்றனைக் கொன்றது என்பது பொருளாமாறு என் எனின், 'செயப்படு பொருளைச் செய்தது போல'* என்பதனால் கொல்லப்பட்ட என்பது பொருளாக நோக்க அவ்வாறாகும் என்பது.

செயப்படு பொருட்கண் வினைதொகுமால் எனின், செய்குன்று, உறைபதி எனப் பிறபொருட்கண்ணுந் தொகும் என்பது. (கஉ)

மேலதற்கோர் புறனடை

கஅ. ஈற்றுப்பெயர் முன்னர் மெய்யறி பனுவலின்
வேற்றுமை தெரிப உணரு மோரே.

என் - எனின், மேலதற்கோர் புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) இறுதிப் பெயர் முன்னர்ப் பொருளறிய வருஞ் சொல்லான், இன்ன வேற்றுமை யென அறிக; அத்தொகைச் சொல்லது பொருளினை உணர்வார், (எ - று.)

(எ - டு.) புலி கொல் யானை ஓடுகின்றது, புலி கொல் யானைக் கோடு வந்தது என வரும்.

மெய்யறிபனுவல் என்றதனால் பொருள் இயைய வாராதனவும் உள; புலி கொல் யானை கிடந்தது என்றாற் போல்வன. ஆண்டுச் சொல்லுவான் குறிப்பினான் அறிக. (கங)

* வினையியல் சஅ ஆம் நூற்பா.

ஓம்படைப் பொருளில் இரண்டாவதும் மூன்றாவதும் மயங்கல்

கூகூ. *ஓம்படைக் கிளவிக் கையும் ஆனும்
தாம்பிரி விலவே †தொகவரு காலை.

என் - எனின், இதுவும் இரண்டாவதும் மூன்றாவதும் ஒத்தவுரிமைய தொகைக்கண் வரும் காலத்து, (எ-று.)

(எ - டு.) புலிபோற்றிவா, வாழியைய என்பன. இவை புலியைப் போற்றிவா எனவும், புலியால் போற்றிவா எனவும் விரியும் என்பது. புலி என்றது புலியான் வரும் ஏதத்தினை.

ஓம்படை யென்பது போற்றுதல். ஈண்டும் இரண்டாவது செயப்படுபொருளோடு ஏதுப்பொருள் படுகின்றது போலும்.

தொகவருகாலை என்றதனுல் இவ்வேற்றுமை மயக்கமெல்லாம் தொக்குழியே மயங்கு மென்பது கொள்ளப்பட்டது.

முன்னே ஆனுருபினேடு இன்னுருபும் ஏதுப் பொருட்டாகும் என்றேதப் பட்டமையின், ஒன்றின முடித்தல் என்பதனுன் புலியிற் போற்றிவா என ஐந்தாவதும் கொள்க. (கசு)

வாழ்ச்சிக் கிழமையில் ஆருவதும் ஏழாவதும் மயங்கல்

கoo. ஆறன் மருங்கின் வாழ்ச்சிக் கிழமைக்(கு)
ஏழும் ஆகும் உறைநிலத் தான.

என் - எனின், ஆருவதனேடு ஏழாவதும் மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஆருவதனிடத்து வாழ்ச்சி யென்னும் உரிமைக்கு ஏழாவதும் ஆகும். யாண்டோ எனின், ஆண்டு அஃதுறைநிலத்துக்கண், (எ - று.)

(எ - டு.) காட்டு யானை, காட்டது யானை, காட்டின்கண் யானை என விரியும்.

உறை நிலத்தான என்றதனுல் உறையா நில மாயக்கால் ஆருவதன்கண் வந்ததாகாது ஏழாவதுதானே யாம் என்றவாறு. அஃது ஊருள் யானையாய்க் காட்டுள் மேய விட்டதனைக் காட்டு யானை யென்னும் வழிக் கொள்க.

* இந்நூற்பாவிற்குப் பொருள் காணப்படவில்லை.

† 'தொகை வருகாலை' என்பது இளம்பூரணர், சேனவரையர், தெய்வச்சிலையார் ஆகியோரது பாடம். இவரது பாடமும் நச்சினர்க்கினியரது பாடமும் ஒன்றே.

மற்று இஃது வாழ்ச்சியும் ஆறன் மருங்கின் வாழ்ச்சியாயினவாறு என்னை? அஃது யானைக்காடு என்பதன்றே; ஆண்டு யானையுட்காடு என ஆகாதால் எனின்; யானை காட்டின்கண் வாழ்தலால் உடைமையாயிற் றன்றே. அதனால் காட்டியானையென அக்காட்டிற்கு யானையை உறுப்பாகக் கூறும்வழி வாழ்தலடியாக நின்றதாகலின், அதனையும் வாழ்ச்சிக் கிழமை யென்று கூறியவாறு போலும். அதனாற் போலுமென்றது சிறுபான்மை, (எ-று.) (௧௭)

கொடைப் பொருளில் நான்காவதும் ஆறாவதும் மயங்கல்

௧0௧. குத்தொக வரூஉம் கொடையெதிர் கிளவி
அப்பொருள் ஆறற் குரித்து மாகும்.

என் - எனின், நான்காவதன்பொருள் ஆறாவதன்கண் செல்லுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) கு என்னும் வாய்பாடு தொக்கு வருகின்ற கொடைத் தொழிலினை யேற்றுக் கொண்டு நின்ற சொல் மயங்குமாறு கூறின், அப்பொருண்மை, ஆறாவது உடைமைப் பொருளாதற்கு உரித்துமாம், (எ - று.)

(எ - டு.) நாகர்பலி என்பது நாகர்க்குப் பலி, நாகரது பலி என விரியும்.

கொடைக்கிளவி என்னாது எதிர்கிளவி என்றதனால் இவ்வாறு மயங்குவது எதிர்கிளவி அல்லாக்கால் மயங்காது என்பது. எதிர்தல் என்பது விழுப்பமுடையாரை நுதலியக்காற் கொண்டு வைத்து விரும்பிக் கொடுப்பது.

மற்றிது நிகழ்தலின்மையின் நான்காவது ஆயவாறு என்னை யெனின், நிகழ்ந்ததேயன்று கொடை நிகழ்கின்றது நிகழ்வதும் பொருண்மை வகையாற் கொடையெனப்படும் என்பது. (௧௮)

அச்சப்பொருளில் ஐந்தாவதும் இரண்டாவதும் மயங்கல்

௧0௨. அச்சக் கிளவிக் கைந்தும் இரண்டும்
எச்சம் இலவே பொருள்வயி னான.

என் - எனின், ஐந்தாவதும் இரண்டாவதும் மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அஞ்சுதல் என்னும் பொருண்மைக்கு ஐந்தாவதும், இரண்டாவதும் தம்மில் ஒத்த நிலைமையவாம் பொருள்படுமிடத்து என்றவாறு.

(எ - டு.) புலி அஞ்சும் என்பது புலியை யஞ்சும் என விரியும். அவ் வச்சம் கள்ளரின் அஞ்சும் என்னும் வழக்கிற் பொருள்படு நிலைமையும் உண்டு; ஈண்டு அது கொள்ளற்க.

ஓம்படை என்றதற்கண் கூறியவற்றால் புலியான் அஞ்சும் என மூன்றாவதன் வரவும் கொள்க. (௧௭)

வேற்றுமை மயக்கத்திற்குப் புறனடை

௧௦௫. அன்ன பிறவும் தொன்னெறி பிழையாது
உருபினும் பொருளினும் மெய்தடு மாறி
இருவயின் நிலையும் வேற்றுமை எல்லாம்
திரிபிடன் இலவே தெரியு மோர்க்கே.

என் - எனின், வேற்றுமை மயக்கத்திற்கும் புறனடையுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மேல் எடுத்தோதப்பட்ட அத்தன்மையன பிறவு மாகிய, பழையதாகிய நெறிமுறையினைப் பிழையாது, உருபானும் பொருளானும் தத்தம் வடிவு தடுமாறி, தனக்குரிய இடம் பிறிதின் இடமாகிய அவ்விரண்டிடத்தும் நிலைபெறுகின்ற வேற்றுமையுள் எல்லாம் அமையா வழுவென்று கழிக்கப்படுதலைத் தன்னிடத்து உடையவல்ல ஆராய்வார்க்கு, (எ - று.)

இதனாற் சொல்லியது வேற்றுமையோத்தின்கண் இன்ன பொருட்கு இன்னது உரித்தென எடுத்தோதப்பட்ட வேற்றுமைகள் அவ்வப் பொருட்கு, உரியவாகிய நில்லாது பிறபொருட்கண்ணும் சென்று மயங்குதலுண்மைகண்டு இவை வழுவன்றோ என்று வினவிய மாணாக்கற்கு, அவை மேற்றொட்டுப் பிறபொருண்மேலும் வழங்கு முடிவினை ஆராய்ந்த முதனூலாசிரியர்களும் வழங்கி வருதலான் வேற்றுமைவழு என்று புறத்திட்டாரல்லர். அதனானே, யானும் அம்முடிபே நேர்ந்தேன் என்பது கூறிய வாறு. இதுவும் மரபு வழுவமைதி.

அன்ன பிறவும் என்றதனால் கொண்டவற்றிற்கு உதாரணம், முறைக்குத்துக் குத்தினான் என்பதோர் தொகை, முறையாற் குத்தினான் என ஐந்தாவதும், ஏதுப் பொருட்கண் மயங்கி விரிந்தது.

இனித் தொகையன்றி நின்று, கடலொடு காடு ஒட்டாது என்னும் வழக்கின்கண் கடலைக் காடு ஒட்டாது என இரண்டாவது மயங்கி வந்தது.

இன்னுந் தொகையல்லாத தந்தையொடு சூளுற்றான் என்னும் வழக்கின்கண் தந்தையைச் சூளுற்றான் என இரண்டாவது மயங்கி வந்தது. பிறவும் அன்ன. (௧௮)

பலஉருபு தொடர்ந் தடுக்கியவழிப் படுவதோர் இலக்கணம்

க0௪. உருபுதொடர்ந் தடுக்கிய வேற்றுமைக் கிளவி
ஒருசொல் நடைய பொருள்செல் மருங்கே.

என் - எனின், பல உருபு தொடர்ந்தடுக்கியவழிப் படுவதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஐ முதலிய அறுவகை யுருபும் தம் பொருள் தொடர்ச்சிபட அடுக்கிவருகின்ற அவ்வேற்றுமைப் பொருண்மை யினையுடைய சொற்கள், அவ்வடுக்கின் கடைக்கண்நின்ற வேற்று மைச் சொல்லிற்கு முடிபாகிய சொல்லினையே தமக்கு முடிபாக வுடைய, பொருள்படும் இடத்து, (எ - று.)

(எ - டு.) யானையது கோட்டை நுனிக்கண் குறைத்தான். யானையது என்பது கோடு என்பதனோடு தற்கிழமைப்பட்டு ஆண்டே முடிந்தது. நுனிக்கண் என்னும் ஏழாவது குறைத்தான் என்பதனோடு முடிந்தது.

இடைக்கண்நின்ற கோடு என்னும் இரண்டாவது முடிபு இன்றி நின்றது. அவ்வாறு தனக்குரியதோர் முடிபின்றே எனினும் ஏழாவதன் முடிபோடு முடிந்ததாகக் கொள்ளப்படும் அவ்வாறு பொருள்பட நின்றமையான் என்பது.

தினையிற் கிளியைக் கடியும் என்பது தினையின் என்னும் ஐந்தாவது கிளியை என்னும் இரண்டாவதன் வினையொடு முடிந்தது. பிறவுமன்ன.

அதிகாரத்தான் இதுவும் ஓர் மரபு வழுவமைதி என உணர்க. (கக)

உருபு நிற்குமிடம் இவைஎனல்

க0ரு. இறுதியும் இடையும் எல்லா உருபும்
நெறிபடு பொருள்வயின் நிலவுதல் வரையார்.

என் - எனின், உருபு நிற்குமிடம் கூறுதல் நுதலிற்று.

(இ - ள்.) இருபொருளின் இறுதிக்கண்ணும் அவ் விரு பொருளின் இடையின்கண்ணும் அறுவகை வேற்றுமையுருபு வழக்குப்படும் பொருளிடத்து நிலைபெறுதலை நீக்கார் ஆசிரியர், (எ - று.)

(எ - டு.) கடந்தான் நிலத்தை, வந்தான் சாத்தனொடு, கொடுத்தான் சாத்தற்கு, வலியன் சாத்தனின், ஆடை சாத்தனது, இருந்தான் குன்றத்துக்கண் : இவை இறுதிக்கண்வந்தன.

நிலத்தைக் கடந்தான், சாத்தனொடு வந்தான், சாத்தற்குக் கொடுத்தான், சாத்தனின் வலியன், சாத்தனது ஆடை, குன்றத்துக்கண் இருந்தான் : இவை இடையின் கண்வந்தன.

மற்று இது "பெயர்க்காகும்" (70) என்றவழி அடங்கிற்று பிற எனின், அஃது ஒருகண் சொற்கண் ஒருபு நிற்குமாற்றிற்குச் சொல்லியது. இஃது இருகண் உருபு நிற்குமாற்றிற்குச் சொல்லியதென உணர்க.

அஃதேல் அவ்வொருசொற்கணின்ற உருபினை அதன் முடிபாகி வரும் சொல்லொடுபடுத்து நோக்க, இருசொற்கண் வந்ததாம் என்பது சொல்லாமையும் அமையவும் பெறு மன்றே எனின், அவ்வாறு உய்த்துணர்வதனையே இனிது உணர்தற்பொருட்டாகவும், உருபுநோக்கி வரும் சொல் அவ்வுருபின் முன்னில்லாது பின்னிற்றல் மயக்க நீர்மைத்து எனற் பொருட்டாகவும் ஈண்டுக் கூறினார் என உணர்க.

"வரையார்" எனவே வழுவுடைத்து என்பது போந்தது.

"நெறிபடுபொருள்" என்றதனால், இவ்வாறு இடையும் இறுதியும் உருபுநிற்பது, உருபேற்று வழங்கும் பெயர்க்கண்ணே; வழங்காத பெயர்க்கண் நில்லா என்பது.

(எ - டு.) அவ்வழிக்கொண்டான் என்பது, அவ்வழிக்கட் கொண்டான் எனவும், கொண்டான் அவ்வழிக்கண் எனவும் அவ்வாறு வழங்குவாரின்மை இல்லாதாயிற்று. வழங்குவாருண்மையின் அவ்விடமென்னும் பெயர்க்கண் அவ்விடத்துக்கண் கொண்டான் எனவும், கொண்டான் அவ்விடத்துப்பொருள் எனவும் நின்றதென உணர்க.

மற்றிஃது, *"எவ்வயிற் பெயரும்" என்புழி அடங்கிற்றன்றே எனின், இதுவும் அவ்விருசொற்கண் வருமாற்றிற்குக் கூறினார் என்பது. (உ0)

ஆறனுருபிலக்கணமும், எல்லாவுருபிற்கும் பொதுவிலக்கணமும்,

கoசு. பிறிதுபிறி தேற்றலும் உருபுதொக வருதலும்
நெறிபட வழங்கிய வழிமருங் கென்ப.

என் - எனின், விசேடவகையான் உருபிற்கு உரியதோர் இலக்கணமும், எல்லா உருபிற்கும் பொதுவாயதோர் இலக்கணமும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஓர் உருபு ஒருருபினை ஏற்று நிற்றலும் எல்லா உருபுகளும் தொக்கு வருதலும் இவை இரண்டு முறைமைப்பட வியலும் வழக்கின்கண்ணேயுள என்று சொல்லுவர் ஆசிரியர், (எ - று.)

* வேற்றுமையியல் 7ஆம் நூற்பா.

(எ - டு.) பிறிது பிறிதேற்றற்கு உதாரணம்: சாத்தனதனை, சாத்தனதனொடு என ஏழாவதன்காறும் ஒட்டுக. சாத்தனது அது எனத் தன்னுருபு தன்னை ஏலாது, பிறிது பிறிதேற்கும் என ஏற்பது ஆறுவதென அதனையொழிய ஏற்குமென்பதூஉம் பெறுமாறு என்னை எனின், முன்னர் உருபேற்பது பெயரென்று கூறினமையின் பிறிதென எய்துப அல்லாதென்பது பெற்றும்.

அஃதேயெனின் பிறசொற்களும் பிறிதெனப்படுமால்...... கோடலென்பதனுன் இது வயிற்றென்பது, பிறிதேற்றலெனவே தன்னை யேலாதென்பது பெற்றும்.

இனி "ஒன்றின முடித்தல்" என்பதனுல் சாத்தனது நன்று எனப் பயனிலைகோடலும் சாத்தன்...... விளியேற்றலும் உடைத்து என்பது கொள்ளப்படும்.

உருபு தொக்குவருவதற்கு உதாரணம்: நிலங்கடந்தான், தாய்மூவர், கருப்புவேலி, வரைவீழருவி, சாத்தன் ஆடை, குன்றக்கூகை எனவரும்.

இவ்வுருபுகள் தொகுமிடத்து உருபும் பொருளும் உடன்தொகலும், ஒருவழி உருபே தொகலும் என இருவகைய.

அவ் ஆறு உருபினுள்ளும் ஆறுவது உருபே தொகுவது, அல்லன எல்லாம் இவ்வாறு தொகும் எனக் கொள்க. படைக்கை என்பது உருபும் பொருளும் உடன் தொக்கது. நிலங்கடந்தான் என்பது உருபு தொக்கது. பிறவும் அன்ன.

இதனுல் சொல்லியது உருபு தன்னிலக்கணமாறிப் பெயரிலக்கணம் எய்துதலும், தன்பொருள்வழித் தான் இல்லாதாகலும், வழுவே எனினும் முற்கொண்டமைந்த வழக்காதலான் களையலாவன அல்ல என மரபு வழுவமைதி கூறியவாறு. (உ௪)

எய்தியது விலக்குவது

**௧0எ. ஐயும் கண்ணும் அல்லாப் பொருள்வயின்
மெய்யுருபு தொகா இறுதி யான.**

என் - எனின், மேல் உருபுகள் தொக்குவரும் என்புழித் தொக்கு வருவனவற்றது நிலை ஒவ்வாமை கண்டு அஃது உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) இரண்டாவதன் பொருண்மையும், ஏழாவதன் பொருண்மையும் அல்லாத பொருள்களிடத்து வருகின்ற உருபுகள் தமக்கு உண்மையாகிய வடிவு தொகா இருமொழியின் இறுதிக் கண், (எ - று.)

(எ - டு.) கடந்தான் நிலம், இருந்தான் குன்றத்து எனவரும். வந்தான் சாத்தனொடு என்பது வந்தான் சாத்தன் என உருபு தொக்குழி

அப்பொருள் விளங்காமையின் அஃறிணை இறுதிக்கண் தொகாவாயின. "நாணிலமன்ற" (35) என்னும் குறுந்தொகையுள் "பிரிந்திசினோர்க்கு அழல்" என ஆனிறுதிக்கண் தொக்குநின்றதால் எனின் அஃறிணை வழக்கினுள் இன்மையின் செய்யுள் விகாரம் என்க. (௨௨)

உருபுகள் ஒரோவழித் தம் பொருண்மையின்றி மயங்குமெனல்

௧0௮. யாதன் உருபின் கூறிற் றாயினும்
பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும்.*

என் - எனின், உருபுகள் ஒரோவழித் தம் பொருண்மையின்றி மயங்குதலுடைய என்பது உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஒருபொருண்மை யாதானும் ஓர் உருபினால் கூறப்பட்டதாயினும் அப்பொருண்மை அவ்வுருபினதாகாது அப்பொருள் செல்லும் கூற்றினையுடைய வேற்றுமை ஆண்டுவந்து சார்ந்த அப்பொருளினைக்கொள்ளும், (எ - று.)

(எ - டு) "கிளையரி நாணற் கிழங்குமணற் கீன்ற, முளையோ ரன்ன முள்ளெயிற்றுத் துவர்வாய்" (அகம் 212) என்னும் பாட்டினுள், மணலுள் ஈன்ற என்பது மணற்கீன்ற என்றாயிற்று.

இவ்வாறு பொருளன்றியும் மயங்கும் என்றதால் வேண்டிய வாறெல்லாம் வரப்பெறும் என்றவாறும் பிற எனின், அதுவன்று; வழக்குள்வழிய தம்முடிபு எனக் கொள்க. (௨௩)

எதிர்மறைக் கண்ணும் வேற்றுமை தம் பொருள் திரியா எனல்

௧0௯. எதிர்மறுத்து மொழியினுந் தத்தம் மரபின்
பொருள்நிலை திரியா வேற்றுமைச் சொல்லே.

என் - எனின், அவ்வேற்றுமைகள் தம் பொருள் மாறுபட நின்ற வழியும், தம் பொருள் என்பது உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஐ முதலிய ஐவகை உருபிற்கும் செயப்படு பொருள் முதலாக ஓதப்பட்ட பொருண்மைகளை எதிர் மறைபடச் சொல்லினும் தமக்குரிய மரபாகிய அப்பொருள் நிலைமையில் திரியா அவ்வேற்றுமைச் சொற்கள் (எ - று.)

(எ - டு.) மரத்தைக் குறையான், சாத்தனொடு வாரான் எனவரும், பிறவும் அன்ன. (௨௪)

* இந்நூற்பாவினை நன்னூலார் அப்படியே கொண்டெடுத்து மொழிந்துள்ளார் (நன் - பெயரியல்—60)

உருபுகளுட் சில செய்யுளுள் திரியுமெனல்

ககO. கு ஐ ஆன் என வரூஉம் இறுதி
அவ்வொடும் சிவணும் செய்யு ளுள்ளே.

என் - எனின், அவ்வுருபுகள் ஒருசாரன செய்யுளுள் திரிபுபட நிற்றலுடைமை கண்டு அஃது உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) கு என்றும், ஐ என்றும், ஆன் என்றும் சொல்ல வருகின்ற உருபு ஈறுகள் அகரத்தோடு பொருந்தி ஈறுதிரிந்து நிற்றலும் உடைய, செய்யுளிடத்து என்றவாறு. அவைகளை முன்னர்ச் சொல்லுதும். (உரு)

எய்தியது விலக்கல்

ககக. அவற்றுள்,
அனனப் பிறத்தல் அஃறிணை மருங்கின்
குவ்வும் ஐயும் இல்லென மொழிப.

என் - எனின், எய்தியது விலக்குதல் நுதலிற்று.

(இ - ள்.) அ என ஈறு திரிந்து நிற்றல், அஃறிணை இடத்துக் கு என்னும் உருபும், ஐ என்னும் உருபும் நில்லாமை யுடைய, (எ - று.)

எனவே உயர்திணையிடத்து மூன்றுருபும் திரியும் என்பதூஉம், அஃறிணைக்கண் ஆன் என்னும் உருபு ஒன்றுமே திரியும் என்பதூஉம் பெற்றாம்.

(எ - டு) "கடிநிலை யின்றே யாசிரியர்க்க" ஆசிரியர்க்கு எனற்பாலது ஆசிரியர்க்க என்றாயிற்று. "காவலோனக் களிறஞ்சும்மே"-காவலோனை எனற்பாலது காவலோன என்றாயிற்று. புலவரான் என்பது புலவரான என்றாயிற்று. இவை உயர்திணைக்கண் திரிந்தவாறு. புள்ளினான் என்பது புள்ளினான என்றாயிற்று. இஃது அஃறிணைக்கண் திரிந்தவாறு.

அவ்வொடும் என்ற உம்மை எதிர்மறையாகலான் ஈறு திரியாமல் நிற்றல் பெரும்பான்மை. இவை இடைச்சொல்லாதலின்* 'தம்மீறு திரிதல்' என்புழி அடங்காவோ எனின், வழக்கினுள் இவ்வாறு வாராமையின் அடங்கா என்பது. (உசு)

நான்காவது ஏனையுருபுகளின் பொருளொடு மயங்கல்

ககஉ. இதன திதுவிற் றென்னுங் கிளவியும்
அதனைக் கொள்ளும் பொருள்வயி னானும்

* இடையியல் ௬ ஆம் நூற்பா.

அதனாற் செயற்படற் கொத்த கிளவியும்
முறைக்கொண் டெழுந்த பெயர்ச்சொற் கிளவியும்
பால்வரை கிளவியும் பண்பின் ஆக்கமும்
காலத்தின் அறியும் வேற்றுமைக் கிளவியும்
பற்றுவிடு கிளவியும் தீர்ந்துமொழிக் கிளவியும்
அன்ன பிறவும் நான்கன் உருபில்
தொன்னெறி மரபின தோன்ற லாறே.

என் - எனின், நான்காம் வேற்றுமை, ஏனைய வேற்றுமைக் கண்ணெல்லாம் சென்று மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) இப் பொருளினுடையது தான் இத் தன்மைத்து என்று சொல்லப்படும் ஆறாவதன் பொருண்மையும், ஒன்றனை யொன்று கொண்டிருக்கும் என்று சொல்லப்படும் இரண்டாவதன் பொருண்மையும், ஒன்றான் ஒன்று செயப்பாடுடைத்தாதற்குப் பொருந்துதல் என்னும் மூன்றாவதன் பொருண்மையும், முறைமையைக் கொண்டெழுந்த ஆறாவதன் பெயர்ச்சொல்லாகிய சொல்லின் பொருண்மையும், எல்லைப்பொருண்மையை வரைந்து உணர்த்தலுடைய ஐந்தாம் வேற்றுமைப் பொருண்மையும், பண்பினாகி வருகின்ற ஐந்தாவதன் பொரூஉப் பொருண்மையும், காலப்பொருண்மையான் அறியப்படுகின்ற ஏழாம் வேற்றுமைப் பொருண்மையும், பற்றுவிடுதலாகிய ஐந்தாவதன் நீக்கப்பொருண்மையும், தீர்தல் என்னும் வாய்பாட்டதாகிய ஐந்தாவதன் நீக்கப்பொருண்மையும் அத்தன்மையன பிறவேற்றுமைப் பொருளிடத்து நான்கனுருபில் அடைத்துக் கூறுதலைப் பழையநெறி முறையாகவுடைய; அவை தோன்றும் நெறிக்கண், (எ - று.)

(எ - டு.) யானையது கோடு கூரிது என்புழி யானைக்குக் கோடு கூரிது என்றாயிற்று. இவனைக் கொள்ளும் இவ்வணி என்புழி இவனுக்குக் கொள்ளும் இவ்வணி என்றாயிற்று. வாயாற்றக்கது வாய்ச்சி என்புழி வாய்க்குத்தக்கது வாய்ச்சி என்றாயிற்று. ஆவினது கன்று என்புழி ஆவிற்குக் கன்று என்றாயிற்று. கருவூரின் கிழக்கு என்புழி கருவூர்க்குக் கிழக்கு என்றாயிற்று. சாத்தனின் நெடியன் என்புழிச் சாத்தற்கு நெடியன் என்றாயிற்று. மாரியுள்வந்தான் என்புழி மாரிக்கு வந்தான் என்றாயிற்று. ஊரிற்பற்று விட்டான் என்புழி ஊர்க்குப் பற்று விட்டான் என்றாயிற்று. ஊரில் தீர்ந்தான் என்புழி ஊர்க்குத்தீர்ந்தான் என்றாயிற்று.

இனி, அன்னபிறவும் என்றதனால் ஊரிற்சேயன் என்புழி, ஊர்க்குச் சேயன் என்றாயிற்று. காட்டிற்கணியன் என்பதும் அது. இவையெல்லாம் உருபும் பொருளும் உடன் மயங்கின எனக்கொள்க.

மற்று இம் மயக்கம் 'அன்ன பிறவும்' என்புழி அதிகாரத்தானே அடங்காதோ எனின், அஃது ஒன்றனோடு ஒன்று பரிமாறும் அதிகாரத்தது; இஃது ஒன்று பலவற்றோடு சென்று மயங்கும் அதிகாரத்தது; ஆகலின் அதனுள் அடங்காது என்ப. (உஎ)

மற்றையுருபுகளும் தம்முள் மயங்குமெனல்

கககூ. ஏனை உருபும் அன்ன மரபின
*மானம் இலவே சொல்முறை யான.

என் - எனின், நான்காவ தொழித்து ஒழிந்த வேற்றுமை மயங்கு மாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) நான்காவது ஒழிந்த உருபுகள் ஐந்தும், நான்காவது போலப் பல வேற்றுமைப் பொருட்கண்ணும் சென்று மயங்கு மிடத்துக் குற்றம் இல்லை. அவ்வாறு சொல்லிவரும் வழக்குமுறைமைக்கண், (எ - று.)

வழக்கினுளவேல் கண்டுகொள்க என்பன காணாமையின் காட்டா மரபினவாம். (உஅ)

வினைச் சொல்லிலக்கணம்

ககச. வினையே செய்வது செயப்படு பொருளே
நிலனே காலம் கருவி என்றா
இன்னதற் கிதுபய னாக என்னும்
அன்ன மரபின் இரண்டொடுந் தொகைஇ
ஆயெட் டென்ப தொழில்முதல் நிலையே.

என் - எனின், வினைச்சொல்லிலக்கணம் உணர்த்தல் நுதலிற்று.

(இ - ள்.) தொழிலினையும், தொழில் நிகழ்த்தும் கருத்தா வினையும், அவனால் செய்யப்படு பொருளினையும், அவன் தொழில் நிகழ்த்தற்கு இடமாகிய நிலத்தினையும், அதற்கு இனமாகிய

* மானம் - குற்றம் என்றே உரை கொண்டனர் அனைவரும். ஆனால், 'ஆனம்' என்ற சொல்லிற்கே குற்றம் என்ற பொருள் உண்டு என்றும், எனவே மானம் என்பது 'ஆனம்' என்றிருத்தல் வேண்டும் என்றும் கூறுவர் திரு. பி. சா. சு. அவர்கள்.

காலத்தினையும், அதற்குத் துணையாகிய கருவியினையும், இன்னோற்கு இவன் என்று சொல்லப்படுகின்ற அப்பொருளினையும், இவனை ஏற்றுக் கொண்டவதனால் பயமாகச் சொல்லப்படுகின்ற அப்பொருண்மையினையும் தொகை செய்து அவ்வெட்டும் என்று சொல்லும் ஆசிரியன், வினைச்சொல் பிறத்தற்கு இடமாகிய பொருளது நிலைமையை, (எ - று.)

(எ - டு.) வனைந்தான் என்பது. இதனுள் எட்டும் வந்தவாறு: வனைந்தானென வனைதல் தொழின்மை விளங்கிற்று. வனைந்தான் என ஒருவனும், வனையப்பட்ட குடம் முதலாய செயப்படுபொருளும் விளங்கின. வனைந்ததோரிடம் அகமானும் புறமானும் விளங்கிற்று. கோலும் திகிரியும் முதலாகிய கருவியும் விளங்கிற்று. வனைவித்துக்கொண்டானும் விளங்கி, வனைந்தான் பெற்றதொரு பயனும் மரபானும் பொருளானும் விளங்கிற்று. பிறவும் அன்ன.

வினையது இலக்கணம் வினையியலுள் கூறற்பாலது. அதனை, ஈண்டுக் கூறியது என்னை எனின், வேற்றுமைகளைப் பெயர்க்கே உரிமைசெய்து கூறினமையின் வினையோடு என்றும் இயல்பில என்பது பட்டு நின்றமையின் அவ்வினை வருங்காலும் வேற்றுமைகளோடு வருவது என்பது அறிவித்தற்கு ஈண்டுக் கூறப்பட்டது.

கூறிய எட்டிலக்கணங்களுள் வினை என்பது பொருட் குறிப்பால் இரண்டாவதாய்ச் சேர்ந்தது. செய்வது எழுவாயாச் சேர்ந்தது. செயப்படுபொருள் இரண்டாவதாய்ச் சேர்ந்தது. நிலமும் காலமும் ஏழாவதாய்ச் சேர்ந்தது. கருவி மூன்றாவதாய்ச் சேர்ந்தது. இன்னதற்கு இது பயனாக என்னும் இவ்விரண்டும் நான்காவதாய்ச் சேர்ந்தன. இவ்வாறு ஆறாவதும் விளியும் ஒழிய மற்றைய ஆறும் வந்தவாறு கண்டுகொள்க. (௨௯)

மேலதற்கோர் புறனடை

௧௧௫. அவைதாம்,
வழங்கியல் மருங்கின் குன்றுவ குன்றும்

என் - எனின், மேலதற்கோர் புறனடையுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மேற் சொல்லப்பட்ட எண்வகை இலக்கணமும் வழக்கு நடத்துமிடத்துக் குறைவன குறைந்துவரும், (எ - று.)

(எ - டு.) கொடி ஆடிற்று என்பது.

செயப்படுபொருளும் இன்னார்க்கு என்பதும் இது பயனாக என்பதும் இல்லை. இஞ்சும் என்புழியும் குன்றின உள. பிறவும் அன்ன. (௩௦)

ஆகுபெயரது இயல்பு

௧௧௫. முதலிற் கூறும் சினையறி கிளவியும்
சினையிற் கூறும் முதலறி கிளவியும்
பிறந்தவழிக் கூறலும் பண்புகொள் பெயரும்
இயன்றது மொழிதலும் இருபெய ரொட்டும்
வினைமுத லுரைக்கும் கிளவியொடு தொகைஇ
*அனைமர பினவே ஆகுபெயர்க் கிளவி.

என் - எனின், ஆகுபெயராமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) முதற்பொருள் ஏதுவாகக் கூறப்படும் சினைப் பொருளை அறியுஞ்சொல்லும், சினைப்பொருள் ஏதுவாகக் கூறப் படும் முதற்பொருளை அறியுஞ் சொல்லும், ஒருபொருள் பிறந்த இடத்தினைச் சொல்ல அவ்விடத்திறைல் பிறந்த பொருளை உணர நிற்கும் சொல்லும், ஒரு பண்பினைச் சொல்ல அப்பண்படைந்த பொருளினை விளங்க நிற்குஞ்சொல்லும், ஒரு தொழிலினைச் சொல்ல அத்தொழில் நிகழ்ச்சியான் அதனை உணர நிற்குஞ் சொல்லும், ஒரு பொருள்மேல் இரண்டு பொருளினை ஒட்டிச் சொல்ல அஃது பொருளினை ஒழிய அதனையுடைய வேறோர் பொருளினை உணர நிற்குஞ் சொல்லும், ஒரு வினையை நிகழ்த்திய கருத்தாவினைச் சொல்ல அதனான் நிகழ்த்தப்பட்டதனை உணர நிற்குஞ் சொல்லும், இவை எழுந்த அம்மரபில் தொக்க தம்பெயர் கூறியவழிக் காரணமாய் நின்றவற்றையே தம் இலக்கணமாக வுடைய சொற்கள் ஆகுபெயர்ச் சொல்லாம், (எ - று.)

(எ - டு.) முதலிற்கூறும் சினையறிகிளவி: கடுத்தின்றான், தெங்கு தின்றான் என்பன.

சினையிற்கூறும் முதலறிகிளவி: இலைநட்டு வாழும், பூநட்டு வாழும் என்பன.

பிறந்த வழிக்கூறல்: குழிப்பாடி.

பண்புகொள் பெயர்: நீலம் என்பன.

இயன்றது மொழிதல்: ஏறு, குத்து.

இருபெயரொட்டு: பொற்றொடி.

* 'அனைய மரபினவே' என்பது தெய்வச்சிலையார் சேனாவரையர் நச் சினார்க்கினியர் ஆகியோரது பாடம். 'அனைமரபினவே' என்பது இவ் வுரையாசிரியருக்கும் இளம்பூரணருக்கும் பாடம்.

இஃது அன்மொழித் தொகையன்றோ எனின், படுத்தலோசைபட்ட வழி அன்மொழித்தொகையாம்; எடுத்தலோசைபட்ட வழி ஆகுபெயரா கும் என்பது.

வினைமுதலுரைக்குங் கிளவி: தொல்காப்பியம், கபிலம். (௬௧)

இதுவுமது

௧௧௪. அவைதாம்,
தத்தம் பொருள்வயின் தம்மொடு சிவணலும்
ஒப்பில் வழியால் பிறிதுபொருள் சுட்டலும்
அப்பண் பினவே நுவலுங் காலே.

என் - எனின், இதுவும் ஆகுபெயர்க்கண்ணே படுத்ததோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) முற்கூறிய ஆகுபெயர்கள் தத்தம் பொருட்கண் ஆங்கால் தாம் முன்பு உணர்த்தி நின்ற பொருட்கு வேறன்றி அதனோடு தொடர்ந்த பொருளோடு பொருந்தி நிற்றலும், அம் முதற் பொருளோடு பொருத்தமில்லாத கூற்றினான் நின்று பிறிது பொருள் உணர்த்தலும் என்று சொல்லப்படுகின்ற அவ்விரு வகை இலக்கணத்தினையும் உடைய சொல்லுங்காலத்து, (எ-று.)

(எ - டு.) தத்தம் பொருள்வயின் தம்மொடு சிவணல்; தெங்கு, கடு என்னும் தொடக்கத்தன. ஒப்பில்வழியால் பிறிது பொருள் சுட்டல்: குழிப்பாடி, பொற்றொடி என்பன.

இதனாற் சொல்லியது ஒன்றனது பெயரை ஒன்றற்கு இடுங்கால், அம்முதற் பொருளோடு தொடர்பு உள்வழியே இட வேண்டும் என்று கருதின் அது வேண்டுவ தில்லை. அம்முதற் பொருளோடு தொடராது பிறவற்றானும் இயைபுள் வழியும் இடலாம் என்பது கூறியவாறாயிற்று.

அஃதேல் இச் சூத்திரப் பொருண்மை மேல் சூத்திரத்து ஓதியவாற் றானே பெற்றாமன்றோ எனின், பெற்று நின்றதனையே இவ்வாறு ஒப்பில் வழியும் ஆம் என மாணாக்கனை நன்கு தெளிவித்தற் பொருட்டுக் கூறினார் என்பது. (௬௨)

இதுவுமது

௧௧௫. *வேற்றுமை மருங்கில் போற்றல் வேண்டும்.

* இவ்வுரையாசிரியரும், இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் இதனைத் தனி நூற்பாவாகக் கொள்ள, சேனாவரையரும் தெய்வச் சிலையாரும் இதற்கு முன்னுள்ள நூற்பாவோடு இணைத்து ஒரே நூற்பாவாகக் கொண்டனர்.

இதுவும் ஆகுபெயர்க்கண்ணே கிடந்ததோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அவ்வாகுபெயர்களை ஐ முதலிய ஆறு வேற்றுமைப் பொருண்மையிடத்தினும் இயைபுடைமையைப் பாதுகாத்து அறியல் வேண்டும் ஆசிரியன், (எ - று.)

(எ - டு.) பொற்றொடி ஆகுபெயர், பொற்றொடியைத் தொட்டான்: பொற்றொடியை என இரண்டாவதன் பொருண்மைத்து.

தொல்காப்பியம் என்பது தொல்காப்பியனால் செய்யப்பட்டதென மூன்றாவதன் பொருண்மைத்து.

தண்டூண் என்னும் ஆகுபெயர் தண்டூணுதற்குக் கிடந்தது என நான்காவதன் பொருண்மைத்து.

பாவை என்னும் ஆகுபெயர் பாவையினும் அழகியாள் என ஐந்தாவதன் பொருண்மைத்து.

கடு என்னும் ஆகுபெயர் கடுவினது காய் என ஆறாவதன் பொருண்மைத்து.

குழிப்பாடி என்னும் ஆகுபெயர் குழிப்பாடியுள் தோன்றியது என ஏழாவதன் பொருண்மைத்து. பிறவும் அன்ன.

இதனாற் சொல்லியது முன் ஒப்பில் வழியால் பிறிது பொருள் சுட்டலுமாம் என்றமையின் அப்பிறிது பொருள் சுட்டியவாறு பாகுபாடு பெறுங்கொல்லோ எனின், இவ்வாறு வேற்றுமைப்பொருள் உள்வழியே பெயராவது; பிறவழி யாகாது என்று கூறியவாறு. (௩௩)

அளவும் நிறையும் ஆகுபெயர் எனல்

௧௧௬. அளவும் நிறையும் அவற்றொடு கொள்வழி
உளவென மொழிப உணர்ந்திசி னோரே.

என் - எனின், இன்னொருசார் ஆகுபெயர் உணர்த்தல் நுதலிற்று.

(இ - ள்.) அளவுப் பெயரினையும் நிறைப்பெயரினையும் மேற் கூறிய ஆகுபெயரோடு கொள்ளுமிடங்கள் உள என்று சொல்லுவர் உணர்வுடையோர், (எ - று)

(எ - டு.) நாழி உழக்கு என இவை அளவுப்பெயர். ஈண்டு இதன் பொருள் அதற்காயிற்றோ எனின், அளக்கப்பட்ட பொருட்கண் கிடந்த வரையறைக்கண் அப்பெயர் பொருட்காயிற்று; எனக்கொள்க. தொடி, துலாம் என்பன நிறைப்பெயர்: ஈண்டு வரையறைக் குணர்த்தினான், பெயர் பொருட்காயிற்று என உணர்க.

மற்றிவை *"கிளந்தவல்ல" என்னும் புறனடையுள் அடங்காவோ எனின், இவற்றை உலகத்தார்க்கும் பெயர்க் குறிப்பு என்று கொள்ளாது அப்பொருட்குப் பெயர்போலக் கொண்டமையின் வேறு கூறினார் எனக் கொள்க. (௩௪)

ஆகுபெயர்க்குப் புறனடை

௧௨௦. கிளந்த அல்ல வேறுபிற தோன்றினும்
கிளந்தவற் றியலான் உணர்ந்தனர் கொளலே.

என் - எனின், மேற்கூறிய ஆகுபெயர்க்கண் மேல் எடுத்தோதின வல்லாதன வேறு பல தோன்றினும் அவ்வெடுத்தோதப்பட்டவற்றின் இயல்பினானே உணர்ந்து கொள்க (எ - று.)

(எ - டு.) யாழ்கேட்டான், குழல் கேட்டான் என அவற்றினாகிய ஓசைமேல் நின்றன. பசுப்போல்வானைப் பசு என்ப, பாவைபோல் வாளைப் பாவை என்ப.

இனி ஒன்று, பத்து, நூறு, ஆயிரம் என்னும் எண்ணுப் பெயர்களும் வரையறைப் பண்பின் பேர் பெற்ற ஆகு பெயர் எனக்கொள்க. அவ்வெண்ணுப்பெயரின் அறிகுறியாகிய அலகுநிலைத் தானங்களும் அப்பெயரவாயின எனக் கொள்க.

இனி அகரமுதலாகிய எழுத்துக்களை உணர்த்துதற்குக் கருவியாகிய வரிவடிவுகளும் அப்பெயரவாம். தாழ்குழல், திரிதாடி என்பன இருபெயரொட்டு இன்மையின் ஈண்டே கொள்க. மண்ணானாய கலத்தை மண் என்றும், பொன்னானாய கலத்தைப் பொன் என்றும் இவ்வாறே காரணத்தின் பெயரினைக் காரியத்துக்கு இட்டும் கடி சூத்திரத்திற்காக இருந்த பொன்னைக் கடிசூத்திரம் என்றும் தண்டுணைதற்குக் கிடந்த மரத்தினைத் தண்டுண் என்றும் இவ்வாறே காரியத்தின் பெயரினைக் காரணத்திற்கு இட்டும் வருவன எல்லாம் கொள்க.

இனி எழுத்து எனவும் சொல் எனவும் கூறிய இலக்கணங்களைக் கூறிய நூல்மேல் ஆகுபெயராய் வருவனவும் ஈண்டே கொள்க. வேறு என்றதனான் அவ் வாகுபெயர்கள் தொல்காப்பியம், வில்லி, வாளி என ஈறுதிரிந்தனவும் ஈண்டே கொள்க. இவ்வாகுபெயரை இவ் வோத்தினுள் [illegible]துவும் எழுவாய் வேற்றுமை மயக்கமாகலின் ஈண்டே கூறினார் என்பது. (௩௫)

வேற்றுமை மயங்கியல் முற்றும்

* வேற்றுமை மயங்கியல், 35 ஆம் நூற்பா.

௭. விளிமரபு

விளிவேற்றுமையது பொதுவிலக்கணம்

கஉக., விளிஎனப் படுப கொள்ளும் பெயரொடு
தெளியத் தோன்றும் இயற்கைய என்ப.

இவ் வோத்து என்ன பெயர்த்தோ எனின், விளிமரபு என்னும் பெயர்த்து. மேலோத்திேைடு இவ் வோத்திடை இயைபு என்னோ எனின், மேல் "வேற்றுமை விளியோடு எட்டே" (சொல்-௬௪) என நிறுத்தார்; அந்நிறுத்த முறையானே விளியொழித்து அவ்வேழும் உணர்த்தி இனி ஒழிந்துநின்ற விளியை உணர்த்துகின்றார் என்பது.

இம்முதற்சூத்திரம் என்னுதலிற்றோ எனின் விளி வேற்றுமையது பொது இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று (எ - று.)

(இ - ள்.) விளி என்று சொல்லப்படுவன தம்மை ஏற்கும் பெயரோடு யாப்புறத் தோன்றும் தன்மைய என்று சொல்லுவர் புலவர், (எ - று.)

படுப எனப் பன்மை கூறிய அதனான், அவ்விளிதான் ஈறு திரிதலும் ஈற்றயல் நீடலும், பிறிது வந்தடைதலும் இயல்பாதலும் என நான்கு வகைப்படும் என்பது பெறப்பட்டது.

தெளிய என்றதனான் விளிதன்னை எழுவாயின் வேறுபாடதன்றி வேறோர் வேற்றுமை என்பாரும் உளர் என்பதூஉம், இவ்வாறு ஓர் வேற்றுமையாக நேர்ந்தார் என்பதூஉம் பெறப்பட்டது. (க)

இஃது அப் பெயர்களைக் கூறுவல் எனல்

கஉஉ. அவ்வே,
இவ்வென அறிதற்கு மெய்பெறக் கிளப்ப.

என் - எனின், மேற்சொல்லப்பட்டவற்றை இனிச் சொல்லுப என்பது உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மேல் விளி யேற்பனவும் ஏலாதனவும் எனச் சொல்லப்பட்டவற்றை இவை என அறியும்படி வழக்குக்குத் தழுவ எடுத்தோதுப ஆசிரியர். அதனான் யானும் அம்முடிபே கூறுவல் என்பது.

இது மொழிவாம் என்னும் தந்திரவுத்தி;

மற்றஃதாமாறு என்னை, கிளப்பல் என்னாது, கிளப்ப என்றமையின், முதனூலுள் அவ்வாறு கூறும் என்பதன்றே பெறுவது எனின், சொற்

கிடையாது எனினும் ஆண்டுக் கூறியவாறு போல யாணும் ஈண்டுக் கூறுவல் என்பது கருத்தாகக் கொள்க. இனிக் கிளப்ப என்பதனைப் பெயர்ப்படுத்துக் கூறலும் ஒன்று. (உ)

உயர்திணையில் விளியேற்கும் ஈறுகள்

கஉகூ. அவைதாம்,
இ உ ஐ ஓ என்னும் இறுதி
அப்பால் நான்கே உயர்திணை மருங்கின்
மெய்ப்பொருள் சுட்டிய விளிகொள் பெயரே.

என் - எனின், உயிரீற்று உயர்திணைப் பெயருள் விளியேற்பன இவை என்பது உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மேல் விளியேற்கும் எனப்பட்டவை தாம் இ, உ, ஐ, ஓ, என்று சொல்லப்பட்ட ஈறுகளையுடைய அக்கூற்று நான்கு பெயரே உயர்திணையிடத்து மெய்ப் பொருளினைச் சுட்டிய விளியினைக் கொள்ளும் பெயராவன, (எ - று.)

உயிரீற்று உயர்திணைப் பெயர்களுள் விளியேற்பன இந்நான்கும் எனவே ஒழிந்த உயிரீறு விளியேலா என்பதூஉம் இதனாற் பெற்றாம். உயிரீறு பன்னிரண்டும் உயர்திணைப் பெயர்க்கு ஈறாமோ எனின் அஃது ஈண்டு ஆராய்ச்சி யன்று; ஈறாவனவற்றுள் விளியேற்பன இவை என்றவாறு.

மக என்னும் அகரவீறும், ஆடூஉ மகடூஉ என்னும் ஊகரவீறும் இந்நிகரன விளியேலாதன எனக் கொள்க.

மெய்ப்பொருள் சுட்டிய என்றதனான், இவ்வீற்று அஃறிணைப் பெயர்களும் இவ்வுயர்திணைபோல விளியேற்பன என்பது கொள்ளப்படும்.

✓ அவை தும்பி தும்பீ எனவும், மூலை மூலாய் எனவும் வரும். (கூ)

இகர ஐகார ஈறுகள் விளியேற்குமாறு

கஉச. அவற்றுள்,
இஈ யாகும் ஐஆய் ஆகும்.

என் - எனின், மேற்சொல்லப்பட்ட நான்கனுள்ளும் இகரவீறும் ஐகாரவீறும் விளியேற்குமாறு உணர்த்தல் நுதலிற்று.

* 'அவற்றுள்' என்பது தெய்வச்சிலையார் பாடம்.

(இ - ள்.) மேற்சொல்லப்பட்ட நான்கிற்றுப் பெயருள்ளும் இகரஈற்றுப் பெயர் ஈகாரமாய் விளியேற்கும்; ஐகார ஈற்றுப்பெயர் ஆயாய் விளியேற்கும், (எ - று.)

(எ - டு.) நம்பி - நம்பீ, நங்கை - நங்காய் எனவரும்.

இவை ஈறுதிரிதல். (௪)

ஓகாரமும் உகரமும் விளியேற்குமாறு

௧௨௫. *ஓவும் உவ்வும் ஏயொடு சிவணும்.

என் - எனின், ஒழிந்த இரண்டு ஈறும் விளி ஏற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஓகார ஈற்றுப் பெயரும் உகர ஈற்றுப் பெயரும் ஏகாரத்தோடு பொருந்தி விளியேற்கும், (எ - று.)

(எ - டு.) கோ - கோவே எனவும், வேந்து - வேந்தே எனவும் வரும்.

இவை பிறிது வந்தடைதல். (௫)

மேற்கூறிய உகரம்குற்றிய லுகரமெனல்

௧௨௬. உகரந் தானே குற்றிய லுகரம்.

என் - எனின், ஐயமறுத்தல் நுதலிற்று; என்னை †மேல் இ உ ஐ ஓ என்புழி இன்ன உகரம் என்றுதெரித்துக் கூறுமையானும், உடன் ஓதப்பட்ட எழுத்துக்கள் முற்று இயல்பினவாதலும், இன்ன உகரம் என்பது அறியாது ஐயுற்றான் ஐயந்தீர்த்தமையின் என்பது.

(இ - ள்.) மேற் கூறப்பட்ட உகரந்தான் முற்றியலுகரம் அன்று; குற்றியலுகரமாம், (எ - று.) (௬)

ஏனைய உயிர் உயர்திணையில் விளியேலா எனல்

௧௨௭. ஏனை உயிரே உயர்திணை மருங்கில்
தாம்விளி கொள்ளா என்மனார் புலவர்.

என் - எனின், வேண்டாகூறி வேண்டியது முடித்தலை உணர்த்தல் நுதலிற்று.

---

* இதனையும் அடுத்த நூற்பாவையும் இணைத்து ஒரே நூற்பாவாகக் கொள்வர் தெய்வச்சிலையார்.

† விளிமரபு 3ஆம் நூற்பா.

என்னை, வேண்டா கூறியவாறு எனின் அவைதாம் இ உ ஐ ஓ என்புழி இந்நான்கு ஈறும் விளியேற்கும் ஒழிந்த உயிரீறு விளியேலா என்பது பெற்றமையின் என்பது. இனி வேண்டியது முடித்தவாறு என்னை யெனின், ஒழிந்த உயிரீறு வேற்றுமை ஏலா என்று இன்னும் மேற் சொல்லிய உயிரீறு விளியேற்கும் என்றமையின்.

(இ - ள்.) மேற்கூறிய நான்கு உயிரீறே யன்றி ஒழிந்த உயிரீறுகள் உயர்திணைப் பெயரிடத்துத் தாம் விளித்தலைக் கொள்ளா என்று சொல்லுவர் புலவர், (எ - று.)

இவ்விதி மேலே பெற்றுமன்றோ எனின், மேற் கூறியவாறன்றி விளியேற்கும் என்பது கருத்தெனக் கொள்க.

கணி - கணியே என இகரஈறு ஏகாரம் பெற்றது. பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க. (எ)

இகரஈற்று அளபெடைப் பெயர் விளியேற்குமாறு

கஉஅ. அளபெடை மிகூஉம் இகர இறுபெயர்
இயற்கைய வாகும் செயற்கைய என்ப.

என் - எனின், எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று; என்னை? ஈகாரமாதல் விலக்கி இயல்பாய் விளியேற்கும் என்றமையின்.

(இ - ள்.) அளபெடுத்தலான் மிகுகின்ற இகரமாய இறுதியையுடைய பெயர் இயல்பாய் விளியேற்கும் செய்தியையுடைய, (எ - று.)

(எ - டு.) *தொழீஇஇ, தொழீஇ என்பது பெயர். விளியும் அஃதே எனக் கொள்க.

இஃது இயல்பு

இயற்கைய என்று பன்மை கூறிய அதனான் இவ்வளபெடை மூன்று மாத்திரையில் நிமிர்ந்து நிற்கும் என்று கொள்ளப்படும். செயற்கைய என்றதனான் இவ்வளபெடைப் பெயர் எழுதும்வழி ஐந்தெழுத்திட்டு எழுதுக என்று கொள்ளப்பட்டது. (அ)

முறைப்பெயரில் 'ஐ' ஈறு ஆ வாகவும்வருதல்

கஉகூ. முறைப்பெயர் மருங்கின் ஐயென் இறுதி
ஆவொடு வருதற் குரியவும் உளவே.

---

*தொழீஇஇ - காண்டற்றொழிலை யுடையவளே, கலி, 108. 40 வரி, நச். உரை.

என் - எனின், மேற்சிறப்புவிதி வகுத்தலை நுதலிற்று; முறைப் பெயரிடத்து ஐகாரவீறு ஆயாய் விளியுருபேற்று வருதலே அன்றி 'ஆ' வாயும் விளியேற்கின்றமையின்.

(இ - ள்.) முறைப் பெயரிடத்து ஐ என்னும் ஈறு ஆயொடு வருதலேயன்றி ஆவொடு வருதற்கு உரியனவும் உள, (எ - று.)

(எ - டு.) அன்னை - அன்னா என்றும், அத்தை - அத்தா என்றும் வரும்.

உம்மை எதிர்மறை. அதனான் ஆவாதலே பெரும்பான்மைத்து.

மற்றிவை விரவுப் பெயர்களை உயர்திணைப் பெயர்களோடு மாட்டெறியும் ஆதலானும் அம்மாட்டேற்றிற்கு ஏற்ப உயர்திணைப் பெயர்களுள் இவ்வாறு விளியேற்பன இன்மையானும் ஆண்டுக் கூறற்பாலதனை ஈண்டுக் கூறியது எனக் கொள்க. (௯)

அண்மைவிளி இயல்பாதல்

கருo. அண்மைச் சொல்லே இயற்கை யாகும்.

என் - எனின், எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று; மேற்கூறியவாறன்றி இன்னுழி இயல்பாம் என்கின்றமையின்.

(இ - ள்.) மேற்கூறிய உயிரீறு நான்கினையுமுடைய அணி யாரைக் கூவும் சொற்கள் மேற் கூறியவாறன்றி இயல்பாய் விளியேற்கும், (எ - று.)

(எ - டு.) நம்பி வாழி, நங்கை வாழி, வேந்து வாழி, கோ வாழி எனவரும். (கo)

உயர்திணையில் விளியேற்கும் புள்ளியீறுகள்

கருக. னரலள என்னும் அந்நான் கென்ப
புள்ளி இறுதி விளிகொள் பெயரே.

என் - எனின், உயர்திணைக்கண் உயிரீறு விளியேற்பன இவை என்பது உணர்த்தி இனி இவ்வுயர் திணைக்கண் புள்ளி ஈறு விளியேற்பன இவை என்பது உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ன ர ல ள என்று சொல்லப்பட்ட அந் நான்கு ஈற்றுப் பெயரும் என்று சொல்லுப ஆசிரியன், புள்ளியீற்றினை உடைய விளித்தலைக்கொள்ளும் உயர்திணைப் பெயராவன, (எ - று.)

புள்ளியீற்றுள் இவை கொள்ளும் எனவே ஒழிந்தன விளிகொள்ளா என்பதூஉம் பெற்றும்.

(எ - டு.) பொருந, பாண எனவும் எல்லாரும் எனவும் இவை முதலாயின விளி ஏலாதன எனக்கொள்க. (௧௧)

புள்ளி யீற்றுள் விளிஏலாதன

௧௩௨. ஏனைப் புள்ளி ஈறுவிளி கொள்ளா.

என் - எனின், வேண்டா கூறி வேண்டியது முடித்தலை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மேற் சொல்லப்பட்ட நான்கும் அல்லாத புள்ளியீறு உயர்திணையிடத்து விளித்தலைக் கொள்ளா, (எ- று.)

மற்று இவ்விதி மேலே பெற்றும் அன்றோ எனின், மேற் சொல்லிய நான்கு புள்ளியீறும் இனிக் கூறுமாறு போலாது விளியேற்றலும் உடைய என்றற்கு மிகைபடக் கூறப்பட்டது எனக் கொள்க.

(எ - டு) னகர ஈற்றுள் மேலோதுகின்ற அன்னீறும் ஆனீறும் அல்லாத னகர வீறு தம்முன்-தம்முன்னே எனவும், நம்முன்-நம்முன்னே எனவும் விளியேற்றது. ரகர ஈற்றுள் ஓதுகின்ற அர்ஈறும் ஆரீறும் அல்லாத இர் ஈறு பெண்டிர், பெண்டீரே என ஏகாரம் பெற்றும் கேளிர், கேளீர் என இயல்பாயும் விளி ஏற்றது. பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க.

இன்னும் இம்மிகை யானே ஏனைய புள்ளியுள்ளும் சிறுபான்மையா வன வுள *'விளங்கு மணிக்கொடும் பூண் ஆஅய்' என யகர ஈறு இயல்பாய் விளி ஏற்றது. பிறவும் வந்தவழிக் கண்டு கொள்க. (௧௨)

னகர ஈறு விளி ஏற்குமாறு

௧௩௩. அவற்றுள்,
அன் என் இறுதி ஆவா குமே.

என் - எனின், மேல் நிறுத்த முறையானே, னகர ஈறு விளியேற்குமாறு உணர்த்தல் நுதலிற்று.

(இ - ள்.) அந்நான்கு புள்ளியுள்ளும் னகர ஈற்று அன் என்னும் பெயரின் இறுதி ஆவாய் விளியேற்கும், (எ - று.)

(எ - டு.) சோழன்-சோழா, சேர்ப்பன் - சேர்ப்பா எனவரும். (௧௩)

* புறம். 130: 1.

னகர ஈறு அண்மை விளியில் அகரமாதல்

௧௩௪. அண்மைச் சொல்லிற் ககரம் ஆகும்.

என் - எனின், எய்தியது விலக்கிப் பிறிது விதிவகுத்தல் நுதலிற்று.

(இ - ள்.) அவற்றுள் அன் ஈறு அணியாரை விளிக்குஞ் சொல்லிடத்து அகரமாகும், (எ - று.)

(எ - டு.) சோழன் - சோழ, சேர்ப்பன் - சேர்ப்ப எனவரும். (௧௪)

ஆனென் இறுதி விளி யேற்குமாறு

௧௩௫. ஆனென் இறுதி இயற்கை யாகும்.

என் - எனின், னகர ஈற்றுள் ஒருசாரன விளி ஏற்குமாறு நுதலிற்று.

(இ - ள்.) ஆன் என்னும் னகர இறுதிப் பெயர் இயல்பாய் விளியேற்கும், (எ - று.)

(எ - டு.) சேரமான், மலையமான் எனவரும். (௧௫)

எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல்

௧௩௬. தொழிலிற் கூறும் ஆனென் இறுதி
ஆயா கும்மே விளிவயி னான.

என் - எனின், எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

(இ - ள்.) ஒருவன் செய்யும் தொழில் ஏதுவாகக் கூறப்படுகின்ற ஆன் என்னிறுதிப்பெயர் விளியேற்கு மிடத்து ஆயாகும், (எ - று.)

(எ - டு.) உண்டான் - உண்டாய். நின்றான் - நின்றாய் எனவரும். (௧௬)

இதுவுமது

௧௩௭. பண்புகொள் பெயரும் அதனோ ரற்றே.

என் - எனின், இதுவும் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

(இ - ள்.) அவற்றுள் பண்பு தனக்குப் பொருண்மையாக் கொண்ட பெயரும் மேற்கூறிய தொழிற்பெயரோடு ஒருதன்மைத்து, (எ - று.)

(எ - டு.) கரியான்-கரியாய், செய்யான் - செய்யாய் எனவரும். (௧௭)

ஆனீற்று அளபெடைப்பெயர் விளி யேற்குமாறு

கஙஅ. அளபெடைப் பெயரே அளபெடை இயல.

என் - எனின். எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

(இ - ள்.) ஆனீற்று அளபெடைப் பெயர் *மேற்கூறிய இகரவீற்று அளபெடைப் பெயர்போல இயல்பாய் விளியேற்கும், (எ - று.)

(எ - டு.) அழாஅஅன், புழாஅஅன் என வரும்.

மற்று இஃது 'ஆனென் இறுதி இயற்கை யாகும்' என்றவழியே அடங்காதோ எனின் அளபெடுத்த ஆனென் இறுதியாகலின் வேறு கூறிற்றுப்போலும். (கஅ)

னகார ஈற்று முறைப்பெயர் விளி ஏற்குமாறு

கஙகூ. முறைப்பெயர்க் கிளவி ஏயொடு வருமே.

என் - எனின், இதுவும் எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

(இ - ள்.) னகார ஈற்று முறைப்பெயராகிய சொல், ஏகாரம் பெற்று விளியேற்கும், (எ - று.)

(எ - டு.) மகன் - மகனே, மருமகன் - மருமகனே எனவரும்.

மற்று இது விரவுப்பெயரன்றோ எனின், †மேல் ஐகார வீற்றுள் கூறியவாறே கூறுக. (கக)

னகார ஈற்றுள் விளி ஏலாதன

கசo. தானென் பெயரும் சுட்டுமுதற் பெயரும்
யானென் பெயரும் வினாவின் பெயரும்
அன்றி அனைத்தும் விளிகோள் இலவே.

என் - எனின், னகார வீற்றுள் விளி ஏற்பன எல்லாம் உணர்த்தி இனி விளிஏலாதன கூறுகின்றது.

(இ - ள்.) தான் என்னும் ஆனீற்றுப் பெயரும் சுட்டெழுத்தை முதலாகவுடைய அன்னீற்றுப் பெயர்களும் யான், யாவன் என்ற அவ்வனைத்துப்பெயர்களும் மேற்கூறியவாற்றானயினும் பிறவாற்றானயினும் விளிகோடல் இல, (எ - று.)

---

* கஉஅ ஆம் நூற்பா. † கஉக ஆம் நூற்பா உரை.

தான், யான் என்பன ஆனீறே எனினும் விளியேலா எனக்கொள்க. அவன், இவன், உவன் என்னும் சுட்டுப்பெயரும் யாவன் என்னும் வினுப் பெயரும் அன்னீறே எனினும் விளியேலா என்றவாறு.

மற்றுத் தான் என்பதன்றோ எனின், விரவுப் பெயர்களை உயர் திணைப்பெயர்களோடு மாட்டெறியும் வழி விலக்கற்பாடு மாட்டெறிதற் கொப்பன இன்மையின் ஈண்டே கூறினர் என்பது. (௨௦)

ரகார ஈற்றுப்பெயர் விளி யேற்குமாறு

கசக. ஆரும் அருவும் ஈரொடு சிவணும்.

என் - எனின், நிறுத்த முறையானே ரகாரவீறு விளியேற்குமாறு உணர்த்தல் நுதலிற்று.

(இ - ள்.) ஆர் என்னும் ஈறும், அர் என்னும் ஈறும், ஈர் என்னும் வாய்பாட்டோடு பொருந்தி விளியேற்கும், (எ - று.)

(எ - டு.) பார்ப்பார் - பார்ப்பீர், கூத்தர் - கூத்திர் எனவரும். (௨௧)

எய்தியதன்மேற் சிறப்பு விதி

கச௨. தொழிற்பெய ராயின் ஏகாரம் வருதலும்
வழுக்கின் றென்மனார் வயங்கி யோரே.

என் - எனின், இஃது, எய்தியதன் மேல் சிறப்புவிதி வகுத்தல் நுதலிற்று.

(இ - ள்.) மேற்கூறிய இரண்டு ஈறும் தொழிற் பெயர்க்கு ஈருய்வரின் மேற்கூறிய ஈரோடு ஏகாரம் பெற்று வருதலும் குற்ற மின்று என்று சொல்லுவார் விளங்கிய அறிவினையுடையார், (எ - று.)

(எ - டு.) உண்டார் - உண்டீரே, தின்றார் - தின்றீரே எனவரும். அர் ஈறு வந்தவழிக் கண்டு கொள்க.

வழுக்கின்று என்றதனால், தொழிற்பெயரல்லனவும் ஈரொடு ஏகாரம் பெறுதல் கொள்க.

(எ - டு.) நம்பீரே, கணியீரே எனவரும். (௨௨)

இதுவுமது

கச௩. பண்புகொள் பெயரும் அதனோ ரற்றே.

என் - எனின். இதுவும் எய்தியதன்மேல் சிறப்பு விதி வகுத்தல் நுதலிற்று.

(இ - ள்.) அவ்விரண்டு ஈற்றுப் பண்புகொள் பெயரும் அத்தொழிற்பெயரோடு ஒரு தன்மைத்து, (எ - று.)

(எ - டு.) கரியீரே; செய்யீரே எனவரும். ஈண்டும் ஆர்ஈறு வந்தவழிக் கண்டுகொள்க. (உ௩)

எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல்

கசச. அளபெடைப் பெயரே அளபெடை இயல.

என் - எனின், எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

(இ - ள்.) ரகார ஈற்று அளபெடைப்பெயர் *னகார ஈற்று அளபெடைப் பெயர்போல இயல்பாய் விளியேற்கும், (எ - று.) (உச)

(எ - டு.) மகாஅஅர், சிறாஅஅர் எனவரும்.

ரகார ஈற்றுப் பெயர்களுள் விளி ஏலாதன

கசரு. சுட்டுமுதற் பெயரே முற்கிளந் தன்ன.

என் - எனின்: ரகார ஈற்றுப் பெயர்களுள் விளி ஏலாதன கூறு கின்றது.

(இ - ள்.) ரகார ஈற்றுச் சுட்டெழுத்தினை முதலாகவுடைய பெயர்கள்† னகார ஈற்றுச் சுட்டுமுதற்பெயர் போல விளியேலாதாயிற்று, (எ - று.) (உரு)

இதுவுமது

கசசா. நும்மின் திரிபெயர் வினாவின் பெயரென் றம்முறை இரண்டும் அவற்றியல் பியலும்.

என் - எனின், இதுவும் விளியேலாதன கூறுதல் நுதலிற்று.

(இ - ள்.) நும் என்னும் சொல்லினது திரிபாகிய [நீயிர் என்னும் சொல்லும், வினாப்பொருளை உணர நின்ற சொல்லாகிய யாவர் என்னும் சொல்லும் என்று சொல்லப்பட்ட அம் முறையினையுடைய சொல் இரண்டும் மேல் விளியேலாது என்று சொல்லப்பட்ட சுட்டுப்பெயர் போலத் தாமும் விளியேலா, (எ - று.)

நீயிர் என்பது இர் ஈறுகலின், ஈண்டு எய்திய தின்மையின் விலக்கல் வேண்டா எனின், 'ஏனைப்புள்ளி' (132) என்பதனுள் இர் ஈறுங் கொள்ளப்பட்டமையின் வேண்டும் என்பது. (உ௬)

* கநஅ ஆம் நூற்பா. † கசO ஆம் நூற்பா.

லகார ளகார ஈற்றுப் பெயர்கள் விளி ஏற்குமாறு

கஃஎ. எஞ்சிய இரண்டின் இறுதிப் பெயரே
நின்ற ஈற்றயல் நீட்டம் வேண்டும்.

என் - எனின், நிறுத்த முறையானே லகார ஈறும் ளகார ஈறும் விளி யேற்குமாறு உணர்த்தல் நுதலிற்று.

(இ - ள்.) லகார ளகாரம் என எஞ்சிய இரண்டெழுத்தினை யும் இறுதியாகவுடைய பெயர்கள் ஈற்றினின்ற எழுத்திற்கு அய லெழுத்து நீண்டு விளியேற்றல் வேண்டும், (எ - று.)

(எ - டு.) குரிசில் - குரிசீல், தோன்றல் - தோன்றால், மக்கள் - மக்காள் எனவரும், (உஎ)

எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல்

க௪அ. அயல்நெடி தாயின் இயற்கை யாகும்.

என் - எனின், எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

(இ - ள்.) அவ்விரண்டு ஈற்றுப்பெயரும் ஈற்றயலெழுத்து நீண்ட நிலைமையவாயின் இயல்பாய் விளியேற்கும், (எ - று.)

(எ - டு.) ஆண்பால், பெண்பால், ஏமாள், கோமாள் எனவரும். (உஅ)

இதுவுமது

க௪கூ. வினையினும் பண்பினும்
நினையத் தோன்றும் ஆள்என் இறுதி
ஆயா கும்மே விளிவயி னான.

என் - எனின், அவ்விரண்டீற்றுள் ளகார ஈற்றிற்கு எய்தியது விலக் கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

(இ - ள்.) வினையினானும், பண்பினானும் ஆராயத் தோன் றும் ஆள் என்னும் இறுதி விளிக்குமிடத்து ஆயாய் விளியேற் கும், (எ - று.)

(எ - டு.) உண்டாள் - உண்டாய் எனவும், கரியாள் - கரியாய் எனவும் வரும். (உகூ)

இதுவுமது

கரு௦. முறைபெயர்க் கிளவி முறைப்பெய ரியல.

என் - எனின். இதுவும் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தல் நுதலிற்று.

(இ - ள்.) ளகார ஈற்றுப்பெயர் ஙகாரஈற்று முறைப் பெயர் போல* ஏகாரம் பெற்று விளியேற்கும், (எ - று.)

(எ - டு.) மகள் - மகளே; மருமகள் - மருமகளே எனவரும்.

மற்று இதுவும் விரவுப்பெயரன்றே எனின் †மேற்கூறியவாறே கொள்க. (௯0)

ளகார ஈற்றுள் விளி ஏலாதன

௧௫௧. சுட்டுமுதற் பெயரும் வினாவின் பெயரும்
முற்கிளந் தன்ன என்மனார் புலவர்.

என் - எனின், இஃது ளகார ஈற்றுள் விளியேலாதன உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ளகார வீற்றுச் சுட்டெழுத்தினை முதலாகவுடைய அவள், இவள், உவள் என்னும் பெயர்களும், வினாப்பொருண்மை யுடைய யாவள் என்னும் பெயரும், ணகார ஈற்றுச் சுட்டெழுத்து முதற்பெயரும் வினாவின் பெயரும் போல விளியேலா என்று சொல்லுவர் புலவர், (எ - று.) (௯௧)

லகார ளகார ஈற்று அளபெடைப் பெயர்கள் விளி ஏற்குமாறு

௧௫௨. அளபெடைப் பெயரே அளபெடை இயல.

என் - எனின், லகார ளகார ஈற்றுப் பெயர் இரண்டற்கும் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

(இ - ள்.) ‡லகார ஈற்று அளபெடைப் பெயரும் ளகார ஈற்று அளபெடைப் பெயரும் §ணகார ஈற்றுப் பெயர்போல இயல்பாய் விளியேற்கும், (எ - று.)

(எ - டு.) மாஅஅல், கோஒஒள் எனவரும்.

அதிகாரத்தான் இவ்விதிகளுள் ளகாரஈற்று விளியேலாதனவுங் கூறி இது கூறுகின்றமையின் அதிகார மாறிற்று என உணர்க. (௯௨)

விரவுப்பெயர் விளி ஏற்குமாறு

௧௫௩. கிளந்த இறுதி அஃறிணை விரவுப்பெயர்
விளம்பிய நெறிய விளிக்குங் காலை.

* ௧௩௧ ஆம் நூற்பா.　　† ௧௨௧ ஆம் நூற்பா உரை.
‡ ௧௪0 ஆம் நூற்பா.　　§ ௧௩அ ஆம் நூற்பா.

என் - எனின், விரவுப் பெயர் விளியேற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

மேல் உயர்திணைப் பெயர்க்கண் விளியேற்கும் எனப்பட்ட உயிரீறு நான்கினையும் புள்ளியீறு நான்கினையுமே தமக்கு ஈருகவுடைய உயர்திணைப் பெயரோடு அஃறிணை விரவி வரும் பெயர்கள் அவ்வீறுகளில் எடுத்தோதின முறைமையையுடைய விளிக்குங் காலத்து (எ - று.)

(எ - டு.) சாத்தி - சாத்தீ; தந்தை - தந்தாய்; பூண்டு - பூண்டே என வரும்.

ஓகாரவீற்று விரவுப்பெயர் கண்டதில்லை. இவை உயிர் ஈறு. இனிப் புள்ளியீறு, சாத்தன் - சாத்தா, கூந்தல் - கூந்தால் என வரும். ரகார, ளகார ஈறுய் வரும் விரவுப்பெயர் கண்டதில்லை. (கடு)

அஃறிணைப் பெயர்கள் விளி ஏற்குமாறு

கருச. புள்ளியும் உயிரும் இறுதி யாகிய
அஃறிணை மருங்கின் எல்லாப் பெயரும்
விளிநிலை பெறூஉங் காலந் தோன்றின்
தெளிநிலை உடைய ஏகாரம் வரலே.

என் - எனின், உயர்திணைப்பெயரும் விரவுப்பெயரும் விளியேற்குமாறு உணர்த்தி, இனி அஃறிணைப் பெயர் விளியேற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) புள்ளியெழுத்தினையும் உயிரெழுத்தினையும் ஈருகவுடைய அஃறிணையிடத்து எல்லாப்பெயர்களும் விளிக்கு நிலைமை பெறுங்கால முண்டாயின் அவ்விடத்து ஏகாரம் வருதலைத் தெளியப்படுநிலையை யுடையன. (எ - று.)

(எ - டு.) நரி - நரியே; புலி - புலியே; அணில் - அணிலே; மரம் - மரமே என வரும்.

"வருந்தினை வாழி நெஞ்சம்" எனவும் "காட்டுச் சாரோடுங் குறுமுயால்" எனவும் பிறவாறும் விளியேற்று வந்தனவால் எனின், அவ்வாறு வருவன வழக்கினகத்து இன்மையின் அவை செய்யுள் விகாரமெனக் கொள்க.

"விளிநிலை பெறூஉங் காலந்தோன்றின்" என்றது அவை விளியேற்கு நிலைமை சிறுபான்மை யென்றது என உணர்க. தெளிநிலையுடைய என்றது அவ்வேகாரம் பற்றி................க் கூறியதாகக் கொள்க. (கசு)

விளி ஏற்கும் பெயர்கள் சேய்மையில் அளபிறந்து ஒலிக்கும் எனல்

கடுரு. உளவெனப் பட்ட எல்லாப் பெயரும்
*அளபிறந் தனவே விளிக்குங் காலைச்
சேய்மையின் இசைக்கும் வழக்கத் தான.

என் - எனின், மேற்கூறிய மூவகைப் பெயர்க்கும் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

(இ - ள்.) மேல் விளியேற்றற்குரியனவாக எடுத்தோதப் பட்ட எல்லாப் பெயர்களும் தத்தம் மாத்திரையின் மிக்கிசைக்கும் விளிக்குங் காலத்து; யாண்டுமோ எனின், அற்றன்று, சேய்மைக் கண் இசைக்கும் வழக்கிடத்து, (எ - று.)

(எ - டு.) நம்பீஇ, சாத்தாஅ எனவரும்.

வரையறை இன்மையின் வேண்டியவாறு அளபெழும் எனக்கொள்க. ஆயின், உயிர் பன்னிரண்டு மாத்திரையும், ஒற்றுப் பதினொரு மாத்திரையும் எனக் கொள்க. (டுஇ)

அம்மா என்னும் சொல் விளி ஏற்குமாறு

கடுசு. அம்ம என்னும் அசைச்சொல் நீட்டம்
அம்முறைப் பெயரொடு சிவணா தாயினும்
விளியொடு கொள்ப தெளியு மோரே.

என் - எனின், இதுவும் விளித்திறத்தொடு படுவதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அம்ம என்று சொல்லப்படுகின்ற அகர வீற்று அசைச்சொல் ஆகாரமாகி நீண்டு நிற்றல் அவ்விளியேற்கு முறைமையையுடைய பெயர்களோடு பொருந்தாதாயினும் பெயர் விளிகளோடு இதனையும் ஓர் விளிநிலைமைத்தாகக் கொள்வர் தெளிந்த அறிவினையுடையார், (எ - று.)

(எ - டு.) அம்மா கொற்ற எனவரும். (டுக)

உயர்திணைப் பெயருள் விளி ஏலாதன

கடுஎ. தநநு எஎன அவைமுத லாகித்
தன்மை குறித்த னரவெ னிறுதியும்

* 'அளவிறந்தனவே' என்பது தெய்வச்சிலையார் பாடம்.

அன்ன பிறவும் பெயர் நிலை வரினே
இன்மை வேண்டும் விளியொடு கொளலே.

என் - எனின் இதுவும் உயர்திணைப்பெயருள் விளியேலாதன கூறுதல் நுதலிற்று.

(இ - ள்.) த, ந, நு, எ என்று சொல்லப்பட்ட அவ்வெழுத்துக்களை முதலாகவுடையவாகிய, ஓர் தொடர்ச்சித் தன்மையைக் குறித்த ன, ள, ர என்னும் ஈற்றெழுத்தினையுடைய பெயர்களும் அத்தன்மையான பிறபெயர்களுமாயுள்ள பெயராகிய நிலைமையையுடையசொற்கள் வரின், மேல் விளியேற்கும் எனப்பட்ட பெயரொடு விளிகோடல் இல்லாமையை வேண்டும் ஆசிரியர், (எ - று.)

(எ - டு.) தமன், தமள், தமர்; நமன், நமள், நமர்; நுமன், நுமள், நுமர்; எமன், எமள், எமர்; எனவும், பிறவும் என்றதனால், மற்றையான், மற்றையாள், மற்றையார்; பிறன், பிறள், பிறர்; எனவும் வரும.

இவற்றை உயர்திணைப் பெயர்களோடு கூறாது ஈண்டுக் கூறியது என்னை எனின், இவை ஓரினத்துட்பட்டு இயைந்து வருதலான் ஈண்டுப் போதந்து உடன் கூறினர் எனக் கொள்க. (கஎ)

விளிமரபு முற்றும்.

ரு. பெயரியல்

நால்வகைச் சொற்கும் பொது விலக்கணம்

கருஅ. எல்லாச் செல்லும் பொருள்குறித் தனவே.

என்பது சூத்திரம்.

இவ்வோத்து என்னை பெயர்த்தோ வெனின் பெயரிலக்கணம் உணர்த்தினமையின் பெயரியல் என்னும் பெயர்த்து. மேலோத்தினோடு இதற்கியைபு என்னோ எனின் பெயரிலக்கணம் உணர்த்தி அவ்விலக்கண முடைய அவ்வியற்பெயர் இவை யென்றவற்றது பகுதி யுணர்த்திய எடுத்துக்கொண்டார் என்பது.

இனி, இம்முதற்சூத்திரம் என்னுதலிற்றோ எனின் நான்கு வகைப் பட்ட சொல்லிற்கும் பொதுவாயதோர் இலக்கணம் உணர்த்துதல் நுத லிற்று.

(இ - ள்.) தமிழ்ச் சொல்லெல்லாம் ஒரு பொருள் உணர்த்து தலைக் கருதியே நடக்கும்; பொருளுணர்த்துதலைக் கருதாது நடப்பன இல்லை, (எ - று.)

(எ - டு.) சாத்தன், கொற்றன் என அவ்வப்பெயர்கள் அவ்வப் பொருள்களை உணர்த்தின. உண்டான் தின்றான் என அவ்வவ் வினைச் சொற்கள் அவ்வவ் வினையை உணர்த்தின. அதுமன் உறுகால் எனவும், செல்மதி தவச்சேய்நாட்டார் எனவும் வருமிவை அவ் விடையும் உரியும் அவ்வப் பெயர்வினைகளை யடுத்து நின்று ஒருபொருளை உணர்த்தின.

மற்று, இஃது "ஆயிரு திணையின் இசைக்குமன சொல்" (சொல்-1) என்புழி அடங்கிற்றுப் பிற எனின், ஆண்டு எல்லாச் சொல்லும் ஒருதலை யாகப் பொருளுணர்த்தும் என்னும் துணிபு விதியின்மையின் ஈண்டுக் கூறினார் என்பது.

மற்று அசைநிலை இடைச்சொற்கள் பொருள் உணர்த்தாவால் எனின், அவையும் ஒருவாற்றான் சிறுபான்மை பொருளுணர்த்துமென உணர்க. அல்லதூஉம் இது பெரும்பான்மையெனினும் அமையும் என்பது.

முயற்கோடு என்னும் தொடக்கத்தன பொருள் உணர்த்தாவால் எனின், இவை நன்மக்கள் வழக்கின்கண் பொருண்மை திரிந்து முயற் கோடு இல்லை யெனப் பின்வருஞ் சொல்லோடு படுத்து நோக்க அவற் றது இன்மைவிளக்க வந்தனவாம். இனி இறிஞி, மிறிஞி, என்னும் தொடக் தன பொருள் விளக்காவாலெனின், அவை நன்மக்களது வழக்கில் இன் மையின் ஈண்டு ஆராயப்படாது என்பது. (க)

சொல் பொருளையும் தன்னையும் உணர்த்தும் எனல்

௧௫௯. பொருண்மை தெரிதலும் சொன்மை [தெரிதலும்

சொல்லி னாகும் என்மனார் புலவர்.

என் - எனின், இதுவும் அச்சொற்கள் பொருள் உணர்த்தும்வழிக் கிடந்ததோர் இலக்கணம் உணர்த்தல் நுதலிற்று.

(இ - ள்.) பொருள் தெரிய நிற்றலும் அப்பொருளை அறியப் படாது சொற்கள் தெரிய நிற்றலும் என்னும் இவையிரண்டும் சொற்கள் ஏதுவாக உளவாகும் என்று சொல்லுவர் புலவர் (எ - று.)

பொருண்மை தெரிதற்கு உதாரணம் மேற் காட்டினவே. சொன்மை தெரிதற்கு உதாரணம் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், பெயரெச்சம், வினையெச்சம், முற்றுச்சொல் என. இவை அவ்வச் சொற்களையே பொருளாக உணர்த்தின எனக் கொள்க.

மற்றிதும் பொருண்மை தெரிதலேயாம் பிற எனின் தாம் பொருண்மை யுணர்த்தும்வழிச் சொல்லென வேறுபட்டு நிற்குமாகலின் இதனை வேறு கூறினார் என்பது.

மற்று ஒருசொல் தன்னின் வேறாயதோர் சொல்லைப் பொருண்மை யாக உணர்த்தாது வேறென்கிளவி யென்றாற்போல அச்சொல் தன்னையே உணரநிற்றலும் உண்டாமென்ன அதுவுஞ் சொன்மைதெரிதல் என அடங்கிற்றுப் போலும்.

மற்றும் மேல் எய்திய பொருண்மைதெரிதல் ஈண்டுக் கூறல் வேண்டா எனின் *முற்கூறியதில் பிற்கூறியது வலியுடைத்து ஆகலின் அஃது விலக்குண்ணும் என உம்மை கொடுத்தாயினும் ஓதற்பாலாவ தான நன்குணர்தற் பொருட்டு உடனோதினார் என உணர்க. (௨)

சொல் இருவகையால் பொருளுணர்த்தும் எனல்

௧௬0. தெரிபுவேறு நிலையலும் குறிப்பிற் றோன்றலும்
இருபாற் றென்ப பொருண்மை நிலையே.

என் - எனின், இதற்கும் அக்கருத்து ஒக்கும்.

(இ - ள்.) இச் சொல்லினது பொருள் இது எனத் தெரிந்து வேறு நிற்றலும், அவ்வாறன்றிச் சொல்லுவான் குறிப்பி

* இவ்வாக்கியம் பிழைபட வுள்ளது. விளக்கம் விளக்கவுரையிற் காண்க.

னுன் இச்சொல்லினது பொருள் இது என அறிய நிற்றலும் என இருபகுதித்து என்று சொல்லுவர் ஆசிரியர், (எ - று.)

(எ - டு.) இடர், திடர் என்பன தெரிபு வேறு நிலையல். சோறுண்ணு கின்றான், கற்கறித்து நன்கு அட்டாய் என்றல் குறிப்பிற்றோன்றல். (ங)

நால்வகைச் சொற்களில் சிறப்புடையன இவை எனல்

ககூக. *சொல்லெனப் படுப பெயரே வினையென் றாயிரண் டென்ப அறிந்திசி னோரே.

என் - எனின், மேற் பொருளுணர்த்து மெனப்பட்ட சொல்லிற்குப் பெயரும் முறையும் தொகையும் உணர்த்தல் நுதலிற்று.

(இ - ள்.) சொல்லென்று சிறப்பித்துச் சொல்லப்படுவன பெயர்ச்சொல் லென்றும், வினைச்சொல் லென்றும் அவை யிரண்டு மென்று சொல்லுப இலக்கணம் அறிந்த ஆசிரியர், (எ - று.)

பெயர்ச்சொல் பொருளை உணர்த்துதலின் முற் கூறப்பட்டது. வினை பொருளது புடைபெயர்ச்சியாகிய தொழிலினை உணர்த்தலின், சிறப்பினவல்ல என்று பிற்கூறப்பட்டது.

என சிறப்பின்கண் வந்தது. (ச)

இடைச்சொல்லும் உரிச்சொல்லும்

ககூஉ. இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும் அவற்றுவழி மருங்கின் தோன்றும் என்ப.

என் - எனின், இறந்ததுகாத்தலை நுதலிற்று.

(இ - ள்.) இடைச்சொல்லாகிய சொல்லும் உரிச் சொல்லாகிய சொல்லும் பெயர்வினைகட்கு இடமாகிய இடத்தே தோன்றும்; தாமாகத் தோன்றா, (எ - று.)

இடைச்சொல் முற்கூறிய காரணம் என்னை எனின் எழுகூற்றதாகிய வழக்குப்பயிற்சி நோக்கி என்க.

மருங்கு என்றதனான் அவ்விடை யுரிகள் பெயர் வினைகளை அடைந்து தோன்றுங்கால் தம்மருங்கினால் தோன்றுதலும் பெயரதும் வினையதும் மருங்கினால் தோன்றுதலும் என இருவகை என்பது கொள்ளப்படும்.

அதுமன், உறுகால் என்பன தம்மருங்கிற் றோன்றின. அவன், அவள், உண்டான், உண்டாள் என்பது அவற்றுமருங்கிற்றோன்றின.

* 'சொல்லெனப்படுவ' என்பதும் பாடம்.

இத்துணையுங் கூறியன நான்கு சொல்லிற்கும் பொதுவிலக்கணம்; மேற்கூறுகின்றது பெயரதிலக்கணம் என உணர்க. (இ)

பெயரது இலக்கணம்

கசுந. அவற்றுள்,
பெயரெனப் படுபவை தெரியுங் காலை
உயர்திணைக் குரிமையும் அஃறிணைக் குரிமை
ஆயிரு திணைக்குமோ ரன்ன உரிமையும் [யும்
*அம்மூ உருபின தோன்ற லாறே.

என் - எனின், நிறுத்த முறையானே பெயர்ச் சொற்களது பெயரும் முறையும் தொகையும் உணர்த்தல் நுதலிற்று.

(இ - ள்.) மேற் சொல்லப்பட்ட நான்கு சொல்லுள்ளும் பெயர்ச்சொல்லென்று சொல்லப்படுவனவற்றை ஆராயுங்காலத்து உயர்திணைக்கு உரிமையும், அஃறிணைக்கு உரிமையும், அவ்விரு திணைக்கும் ஒத்த உரிமையுடையனவும் என அம்மூன்று கூற்றன அவை தோன்று நெறிக்கண், (எ - று.)

அப்பெயர் பெயர்; அம்முறைமுறை; அத்தொகை தொகை என உணர்க. (க)

இதுவுமது

கசுச. இருதிணைப் பிரிந்த ஐம்பாற் கிளவிக்கும்
உரியவை உரிய பெயர்வயி னான.

என் - எனின், இதுவும் பெயர்க்கண்ணே கிடந்ததோர் இலக்கணம் உணர்த்தல் நுதலிற்று.

(இ - ள்.) இருதிணையினின்றும் பிரிந்த ஐம்பாற் பொருட்கும் ஒருபாற்குரிய தொழில்கள் ஏனைப்பாற்கும் உரியவாம். இவ்வாறு உரியவாவது எச்சொல்லிடத்தோ எனின், வினைச்சொல்லிடத்தாகாது பெயர்ச் சொல்லிடத்தேயாம் (எ - று.)

நஞ்சுண்டான் சாம், நஞ்சுண்டாள் சாம், நஞ்சுண்டார் சாவர், நஞ்சுண்டது சாம், நஞ்சுண்டன சாம் என்பது. மற்று அவ்வாண்பான்மேற் கூறற்குரிய சாதலென்னும்வினை மற்றை நான்கு பாற்கண்ணும் தனித் தனி கூறுமல் சென்றதென உணர்க. உண்டான் என்பதனைப் படுத்தலோசையாற் பெயராக்கிக் கொள்க.

* 'அம்மூவுருபின' என்பது நச்சினார்க்கினியர் பாடம்.

பார்ப்பான் கள்ளுண்ணான் என்பது கள்ளுண்டல் அதற்கு இன்மை யின் அஃறிணைப்பான்மேற் செல்லாதாயிற்று. (எ)

உயர்திணைப் பெயர்கள்

கசரு. அவ்வழி,
அவன்இவன் உவன்என வருஉம் பெயரும்
அவள்இவள் உவள்என வருஉம் பெயரும்
அவர்இவர் உவர்என வருஉம் பெயரும்
யான்யாம் நாம்என வருஉம் பெயரும்
யாவன் யாவள் யாவர் என்னும்
ஆவயின் மூன்றொ டப்பதி னைந்தும்
பாலறி வந்த உயர்திணைப் பெயரே.

என் - எனின், நிறுத்த முறையானே உயர்திணைப் பெயர் உணர்த்து தல் நுதலிற்று.

(இ - ள்.) அவ்வாறு மூன்று கூற்றவாய் நின்ற பெயர்க ளிடத்து அவன் என்பது முதலாக உவர்என்பது ஈறாக ஓதப்பட்ட சுட்டுப்பெயர் மும்மூன்று என்பதும், யான் என்னுந் தனித்தன் மைப் பெயர் ஒன்றும், யாம் என்னும் படர்க்கையுளப்பாட்டுத் தன் மைப் பெயர் ஒன்றும், நாம் என்னும் முன்னிலை யுளப்பாட்டுத் தன்மைப்பெயர் ஒன்றும், யாவன் யாவர் யாவள் என்று சொல்லப் படுகின்ற அவ்வினவிடத்துப் பெயர் மூன்றுமாகப் பதினைந்தும் ஒருவன் ஒருத்தி எனப் பாலறிய வந்த உயர்திணைப் பெயராம் (எ - று.) (அ)

இதுவுமது

கசசு. ஆண்மை அடுத்த மகனென் கிளவியும்
பெண்மை அடுத்த மகளென் கிளவியும்
பெண்மை அடுத்த இகர விறுதியும்
நம்மூர்ந்து வருஉம் இகர ஐகாரமும்
முறைமை சுட்டா மகனும் மகளும்
மாந்தர் மக்கள் என்னும் பெயரும்
ஆடூஉ மகடூஉ ஆயிரு கிளவியும்
சுட்டு முதலாகிய அன்னும் ஆனும்

அவைமுத லாகிய *பெண்டிடன் கிளவியும்
ஒப்பொடு வரூஉம் கிளவியொடு தொகைஇ
அப்பதி னைந்தும் அவற்றோ ரன்ன.

என் - எனின், இதுவும் உயர்திணைப்பெயர் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஆண்மை என்னுஞ் சொல்லை முன்னடுத்த ஆண்மகன் என்னும் பெயர்ச்சொல்லும், பெண்மை என்னும் சொல்லை முன்னடுத்த பெண்மகள் என்னும் பெயர்ச் சொல்லும், பெண்மை என்னும் சொல்லை முன்னடுத்த பெண்டாட்டி என்னுஞ் சொல்லும், நம் என்பதை அடுத்துவருகின்ற இகர ஐகாரஈற்று நம்பி, நங்கை என்னும் பெயர்ச்சொற்களும், முறைப் பொருண்மையைக் கருதாத மகன் மகள் என்னும் பெயர்ச்சொற்களும், மாந்தர் மக்கள் என்னும் பெயர்ச்சொற்களும், ஆடூஉ, மகடூஉ வாகிய அவ்விருவகைச்சொற்களும், சுட்டெழுத்தாகிய அகரத்தை முதலாகவுடைய அவ்வாளன், இவ்வாளன், உவ்வாளன் என்னும் அன்னீற்றுப் பெயர்ச்சொல்லும், அம்மாட்டான், இம்மாட்டான், உம்மாட்டான் என்னும் ஆனீற்றுப் பெயர்ச்சொல்லும், இன்னும் அச்சுட்டெழுத்தை முதலாகவுடைய அவ்வாட்டி, இவ்வாட்டி, உவ்வாட்டி எனப் பெண்டாட்டி யென்னும் பொருண்மை உணரவரும் பெயர்ச்சொல்லும், பொன்னன்னன், பொன் னன்னள், பொன்னன்னர் என ஒப்புப்பொருண்மையோடு வரும் பெயர்ச்சொல்லோடு தொக்க பதினைந்துசொல்லும் மேற்கூறிய பெயரே போலப் பாலறிவந்த உயர்திணைப் பெயராம், (எ - று.) (க)

இதுவுமது

கசுஎ. எல்லாரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும்
எல்லீரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும்
பெண்மை அடுத்த மகனென் கிளவியும்
அன்ன இயல என்மனார் புலவர்.

* 'பெண்டன் கிளவி என்ற பாடமும் இருப்பதாகச் சேனாவரையர் உரையிலிருந்து தெரிகிறது. 'ஊரார் பெண்டென மொழிப (ஐங்-118,) 'என்னைநின், பெண்டெனப் பிறர் கூறும் பழிமாறப் பெறு கற்பின்' (கலி - 77) எனச் சான்றோர் கூறலின் 'பெண்டு' என்பதே பாடம் என்பர் நச்சினார்க்கினியர்.

என் - எனின், இதுவும் உயர்திணை யொருசார்பெயர்களை உணர்த்தல் நுதலிற்று.

(இ - ள்.) எல்லாரும் என்று சொல்லப்படுகின்ற படர்க்கைப் பெயர்ச்சொல்லும், எல்லீரும் என்று சொல்லப்படுகின்ற முன்னிலைப் பெயர்ச்சொல்லும், பெண்மை என்னும் சொல்லை முன்னடுத்த பெண்மகன் என்னும் பெயர்ச்சொல்லும் இவை மூன்றும் அவைபோலப் பாலறியவந்த உயர்திணைப் பெயராம், (எ - று.)

நானுவரை யிறந்தாள் தன்மையளாகிப் புறத்துப் போய் விளையாடும் பெண்மகளைப் பெண்மகன் என்பது முற்காலத்து வழக்கம். அதனை இப்பொழுது மாரோக்கத்தார் வழங்குவர். மாரோக்கம் என்பது கொற்கை சூழ்ந்த நாடு. (கo)

இதுவுமது

ககஅ. நிலைப்பெயர் குடிப்பெயர் குழுவின் பெயரே
வினைப்பெயர் உடைப்பெயர் பண்புகொள் [பெயரே
பல்லோர்க் குறித்த முறைநிலைப் பெயரே
பல்லோர்க் குறித்த சினைநிலைப் பெயரே
பல்லோர்க் குறித்த திணைநிலைப் பெயரே
கூடிவரு வழக்கின் ஆடியற் பெயரே
இன்றிவர் என்னும் எண்ணியற் பெயரோ
டன்றி அனைத்தும் அவற்றியல் பினவே.

என் - எனின், இது உயர்திணையொருசார்ப் பெயர்களை உணர்த்தல் நுதலிற்று.

(இ - ள்.) அருவாளன் சோழியன் என்றாற்போல ஒருவன் தான் பிறந்த நிலத்தினாற் பெற்ற பெயர்களும், மலையமான் சேரமான் பார்ப்பான் அரசன் என்றாற்போல அவன் தான் பிறந்தகுடியாற்பெற்ற பெயர்களும், அவையத்தார் அத்திகோசத்தார் வணிகக்கிராமத்தார் என்றாற்போலத் தாம் திரண்ட திரண்ட திரட்சியினாற்பெற்ற பெயர்களும், உண்டார் என்றாற்போல அவன் தான் செய்யும் தொழிலாற் பெற்ற பெயர்களும், அம்பர் கிழான் அம்பருடையான் என்றாற் போல அவன் தனது உடைமையாற் பெற்ற

பெயர்களும், கரியான் செய்யான் என்றாற்போலத் தனது பண்பி னால் பெற்ற பெயர்களும், தந்தையர் தாயர் என்றாற்போலப் பல் லோரைக் கருதின தமது முறையால் பெற்ற பெயர்களும், பெருங் காலர் பெருந்தோளர் பெருங்கண்ணர் என்றாற்போலப் பல்லோ ரைக் கருதின தமது சினைநிலைமையாற் பெற்ற பெயர்களும், குறவர் ஆயர் வேட்டுவர் என்றாற்போலப் பல்லோரைக் கருதின குறிஞ்சி முதலிய திணைகளாற் பெற்ற பெயர்களும், இளந்துணைமகார் தம் மிற் கூடிவரும் வழக்கின்கண் அவர் தமது விளையாட்டுவகையான் தாமே தமக்கு அப்போதைக்குப் பட்டிபுத்திரர் கங்கைமாத்திரர் என்றாற்போலப் படைத்திட்டுக்கொண்ட பெயர்களும், ஒருவர் இருவர் மூவர் நால்வர் என்றாற்போல இத்துணையர் எனத் தமது வரையறையுணர நிற்கும் எண்ணியல்பினாற் பெற்ற பெயர்களும் மேற்கூறிய பெயர்கள் போலப் பாலறியவந்த உயர்திணைப் பெயராம், (எ - று.) (கக)

உயர்திணைப் பெயர்க்குப் புறனடை

கசுசு. அன்ன பிறவும் உயர்திணை மருங்கில்
பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
என்ன பெயரும் அத்திணை யவ்வே.

என் - எனின், இதுவும் உயர்திணைப் பெயருக்குப் புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மேற்கூறிய அத்தன்மை பிறவுமாயுள்ள உயர் திணையிடத்துப் பன்மையும் ஒருமையுமாகிய பால்களை அறியவந்த எல்லாப் பெயர்களும் அவ் வுயர்திணைக்குரிய பெயர்களாம், (எ - று.)

(எ - டு.) ஏனாதி, வாயிலான், வண்ணத்தான், சுண்ணத்தான், பிறன், பிறள், பிறர், தமன், தமள், தமர், நுமன், நுமள், நுமர், மற்றை யான், மற்றையாள், மற்றையார் எனவரும். பிறவும் அன்ன. (கஉ)

அஃறிணைப் பெயர்கள்

கஎo. அதுஇது உதுஎன வரூஉம் பெயரும்
அவைமுத லாகிய ஆய்தப் பெயரும்
அவைஇவை உவைஎன வரூஉம் பெயரும்

அவைமுத லாகிய வகரப் பெயரும்
யாதுயா யாவை என்னும் பெயரும்
ஆவயின் மூன்றோ டப்பதி னைந்தும்
பாலறி வந்த அஃறிணைப் பெயரே.

என் - எனின், சிறுத்த முறையானே அஃறிணைப் பெயராமாறு உணர்த்தல் நுதலிற்று.

(இ - ள்.) அது, இது, உது என்று சொல்லபபடுகின்ற சுட்டு முதற் பெயர்களும், சுட்டெழுத்தினை முதலாகவுடைய அஃது, இஃது, உஃது என்னும் ஆய்தத் தொடர்மொழிக் குற்றியலுகரப் பெயர்களும், அவை, இவை, உவை என்று சொல்ல வருகின்ற சுட்டுமுதற் பெயர்களும், அச் சுட்டெழுத்தினை முதலாகவுடைய அவ், உவ், இவ் என்னும் வகர வீற்றுப் பெயர்களும், யாது யா, யாவை என்று சொல்ல வருகின்ற அவ் வினாப் பொருளிடத்து வரும் மூன்று பெயருமாக வரூஉம் பதினைந்து பெயர்களும், ஒருமை பன்மைப்பால் அறியவந்த அஃறிணைப் பெயராம், (எ - று.) (கசு)

இதுவுமது

கஎக. பல்ல பலசில என்னும் பெயரும்
உள்ள இல்ல என்னும் பெயரும்
வினைப்பெயர்க் கிளவியும் பண்புகொள் பெயரும்
இனைத்தெனக் கிளக்கும் எண்ணுக்குறிப் பெயரும்
ஒப்பி னாகிய பெயர் நிலை உளப்பட
அப்பால் ஒன்பதும் அவற்றோ ரன்ன.

என் - எனின், இதுவும் அஃறிணை யொருசாரப் பெயர்களை நுதலிற்று.

(இ - ள்.) பல்ல பல சில என்று சொல்லப்படுகின்ற பெயர்களும், உள்ள இல்ல என்னும் பெயர்களும், உண்டது உண்டன என்றாற் போலவரும் வினைப்பெயர்களும், கரியது கரியன என்றாற் போலவரும் பண்பினைக் கொண்ட பெயர்ச்சொற்களும், ஒன்று பத்து நூறு ஆயிரம் என்றாற்போலச் சொல்லப்படுகின்ற இத்துணையென வரையறை உணர்த்தும் எண்ணுக்குறிப்பாற் பெற்ற

பெயர்ச் சொற்களும், பொன்னன்னது பொன்னன்ன என்றாற் போல உவமத்தினாற் பெற்ற பெயர்ச் சொற்களும், உட்பட அக் கூற்றென்பதும் மேற்கூறிய பெயர்போலப் பாலறிய வரும் அஃறிணைப் பெயர்களாம், (எ - று.) (கச)

அஃறிணை இயற்பெயர்

கஎ௨. கள்ளொடு சிவணும் அவ்வியற் பெயரே
கொள்வழி உடைய பலவறி சொற்கே.

என் - எனின், இதுவும் பாலறிய வரும் அஃறிணை யொருசார்ப்பெயர் களையுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) கள் என்னும் வாய்பாட்டோடு பொருந்தும் அவ் வஃறிணையியற் பெயர்கள் பலவறி சொல்லாதற்குக் கொள்ளும் இடமுடைய, (எ - று.)

கள்ளொடு சிவணின இயற்பெயர் பலவறி சொல்லாகக் கொள்ளு மிட முடைய எனவே, கள்ளொடு சிவணாத பெயர்கள் பலவறி சொல் லாகக் கொள்ளப்படாது; ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவாய் நிற்கும் என்றவாறு.

(எ - டு.) நாய்கள், ஆக்கள் எனப் பன்மை யுணர நின்றன; நாய், ஆ எனக் கள்ளொடு சிவணாமையிற் பொதுவாய் நின்றவை எனக் கொள்க. (கரு)

அஃறிணைப் பெயர்க்குப் புறனடை

கஎ௩. அன்ன பிறவும் அஃறிணை மருங்கின்
பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
என்ன பெயரும் அத்திணை யவ்வே.

என் - எனின், இஃது அஃறிணைப்பெயர்க்குப் புறனடை உணர்த்தல் நுதலிற்று.

(இ - ள்.) அத்தன்மையன பிறவுமாகிய அஃறிணையிடத்துப் பன்மையும் ஒருமையுமாகிய பால்களை அறிய வந்த எல்லாப் பெயர்களும் அவ்வஃறிணைக்குரிய பெயர்களாம், (எ - று.)

(எ - டு.) ஆ, நாய், கழுதை, ஒட்டகம், புலி, புல்வாய் எனச் சாதி பற்றி வருவன வெல்லாங் கொள்க. நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் என்பன அவற்றின்பாற்படும். உண்டல், தின்றல் எனப் பால்காட்டாத தொழிற் பெயரும், கருமை செம்மை யெனப் பால்காட்டாத பண்புப்

பெயரும், மற்றும் அவற்றுப்பாலே படும் எனக் கொள்க. மற்றையது, மற்றையன, பிறிது, பிற என்பனவுங் கொள்க. பிறவும் அன்ன. (கக)

அஃறிணை இயற்பெயர் பாலுணருமாறு

கஎச. தெரிநிலை யுடைய அஃறிணை இயற்பெயர்
ஒருமையும் பன்மையும் வினையொடு வரினே.

என் - எனின், மேற் புறனடையுள் பால் அறிய வருவனவற்றோடு ஒன்றாக ஓதப்பட்ட இயற்பெயர்கள் பாலறிய வருமாறு உணர்த்தல் நுதலிற்று.

(இ - ள்.) அஃறிணையிடத்து ஒருமையும் பன்மையுமாகிய பால்கள் எப்பொழுது தெரிவதெனின் பால் காட்டும் வினையொடு வரும்பொழுது, (எ - று).

(எ - டு.) ஆ வந்தது, ஆ வந்தன எனவும் வினையால் பாலறிய வந்தவாறு கண்டுகொள்க. (கஎ)

விரவுப்பெயர்

கஎரு. இருதிணைச் சொற்குமோ ரன்ன உரிமையின்
திரிபுவேறு படூஉம் எல்லாப் பெயரும்
நினையுங் காலைத் தத்தம் மரபின்
வினையோ டல்லது பால்தெரி பிலவே.

என் - எனின், நிறுத்த முறையானே விரவுப் பெயராமாறு உணர்த்தல் நுதலிற்று.

(இ - ள்.) இருதிணைப் பொருட்கும் ஒன்று போன்ற உரிமை காரணமாக அவ்வத்திணைக்கண் செலவு வரவுடைத்தாய் உயர்திணைக்கண் சென்றகாலத்து உயர்திணைப் பெயராயும் அஃறிணைக்கண் சென்ற காலத்து அஃறிணைப்பெயராயும் வேறுபடுகின்ற விரவுப் பெயர்களெல்லாம் ஆராயுங் காலத்து அவ்வத் திணையை யுணர்த்துதற்குரிய முறைமையினையுடைய வினைச் சொற்களான் அல்லது, திணைதெரிதல் இல, (எ - று.)

(எ - டு.) சாத்தன் வந்தான், சாத்தன் வந்தது எனவரும்.

வினையானேயன்றித் தத்தம் மரபிற் பெயராலும் திணையறியப்படும் என்பது.

(எ - டு.) சாத்தன் ஒருவன், சாத்தன் ஒன்று என வரும்.

இன்னும் அவ்விலேசானே *மேற்கூறிய அஃறிணையுடைய பெயர்களும், வினையானே யன்றிப் பெயரானும் பால் அறியப்படுமெனக் கொள்க. ஆ ஒன்று, ஆ பல எனவரும். (கஅ)

விரவுப்பெயர் விரவுவினையானும் திணையறியப்படும் எனல்

கௌசூ. நிகழூஉ நின்ற †பலர்வரை கிளவியின்
உயர்திணை ஒருமை தோன்றலும் உரித்தே
அன்ன மரபின் வினைவயி னான.

என் - எனின், அவ்விரவுப்பெயர் தத்தம் மரபின் வினையானன்றி, விரவு வினையானும் திணையறியப்படும் என எய்தியதன்மேற் சிறப்புவிதி வகுத்தல் நுதலிற்று.

(இ - ள்.) நிகழ்காலத்தை யுடைத்தாய்நின்ற பலரை யுணர்த்தும் என்று வரைந்தோதப்பட்ட செய்யும் என்னும் சொல் காரணமாக அவ்விரவுப்பெயர் உயர்திணை யொருமைப்பாலென்பது தோன்ற நிற்றலும் உரித்து; யாண்டுமோ எனின்; அன்று, அத்தன்மைத்தான முறைமையினையுடைய சில செய்யும் என்னும் வினைச்சொல்லிடத்து, (எ - று.)

(எ - டு.) சாத்தன் யாழெழூஉம், குழலூதும், பாடும் எனவும், சாத்தி சாந்தரைக்கும், பூத்தொடுக்கும் எனவும் வரும்.

சாத்தனொடுங் கிடக்கும் என்பன, அன்னமரபின் வினையன்மையின் திணை தெரியாவாயின.

இனி வினையியலுள் வியங்கோளின் பின்னர்ச் செய்யும் என்பதனை இயைபின்றி வைத்து ஆராய்ந்ததனுன் வியங்கோள் வினையினானும் உயர் திணையொருமை தோன்றும் என்றும் கொள்ளப்படும்.

(எ - டு.) சாத்தன் யாழெழூஉக, குழலூதுக எனவரும்.

இத்துணையுங் கூறியது விரவுப்பெயரது பொது விலக்கணம் என உணர்க. (கக)

---

* 172 ஆம் நூற்பா.

† 'பால்வரை கிளவி' என்பது இளம்பூரணர், நச்சினார்க்கினியர் பாடம். பலர் வரை கிளவி என்பது பலர் பாலை வரைந்து உணர்த்தும் சொல் எனப் பொருள்படும். அஃது அன்னதாதலை 229 ஆம் நூற்பாவான் அறிக. எனவே பலர் வரைகிளவி என்ற பாடமே சிறப்புடைத்தாம்.

விரவுப் பெயரது பெயரும் முறையும் தொகையும்

௧எஎ. இயற்பெயர் சினைப்பெயர் சினைமுதற் பெயரே
முறைப்பெயர்க் கிளவி தாமே தானே
எல்லாம் *நீயிர் நீஎனக் கிளந்து
சொல்லிய வல்ல பிறவும் ஆஅங்
கன்னவை தோன்றின் அவற்றொடுங் கொளலே.

என் - எனின், விரவுப்பெயர்க்குப் பெயரும் முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) இருதிணைக் கண்ணும் வாளாது இயன்று வருதலான் இயற்பெயரெனவும், ஓர் சினைக்காரணத்தாற் பெற்றமையிற் சினைப்பெயர் எனவும், சினையோடு தொடர்ந்த முதலை யுணர்த்தினமையிற் சினைமுதற் பெயரெனவும், முறைமையாற் பெற்றமையின் முறைப் பெயராகிய சொல்லெனவும், ஓர் காரணம் இன்மையின் வாளாது தானெனவும், எல்லாமெனவும், நீயிரெனவும், நீ எனவும் ஆசிரியனால் விதந்தோதப்பட்டன வல்லாத பிறவுமாகிய பெயர்களிடத்து இருதிணையிலும் விரவும் அத்தன்மையன தோன்றுமாயின் அவற்றோடுங்கூட ஆசிரியன் விதந்தோதின பெயர்களை விரவுப் பெயராம் எனக் கொள்க, (எ - று.)

அப்பெயர் பெயர்; அம்முறை முறை; அத்தொகை தொகை என்பதாம்.

இயற் பெயர் முதலாக முறைப் பெயர் ஈறாக ஓதினவெல்லாம் பலவெனினும், ஞாபக வகையான் ஒன்றெனப் பட்டன.

பிறவும் என்றதனாற் கொள்வன யாவை யெனின், குறவன் இறவுளன் குன்றுவன் எனவும், காடன் காடி எனவும், நாடன் நாடி எனவும், துறைவன் சேர்ப்பன் தரையன் திரையன் எனவும் ஒருமைத் திணைப்பெயராய் வருவனவும், ஆண் பெண் என்பனவும் பிறவும் இன்னோரன்னவும் போலும். (உ0)

விரவுப் பெயரின் விரி

௧எஅ. அவற்றுள்,
நான்கே இயற்பெயர் நான்கே சினைப்பெயர்
நான்கென மொழிமனார் சினைமுதற் பெயரே

* 'நீர்' என்பது தெய்வச்சிலையார் பாடம்.

முறைப்பெயர்க் கிளவி இரண்டா கும்மே
ஏனைப் பெயரே தத்தம் மரபின.

என் - எனின், மேல் தொகுத்தோதின விரவுப் பெயர்களை விரித்தோதுதல் நுதலிற்று.

(இ-ள்.) மேல் ஓதப்பட்டவற்றுள் இயற்பெயரெனப்பட்டது நான்கு வகைப்படும். சினைப்பெயர் எனப்பட்டது நான்கு வகைப்படும். சினைமுதற் பெயரினையும் நான்கு வகைப்படும் என்று கூறுவர் ஆசிரியர். முறைப் பெயர்க் கிளவி எனப்பட்டது இரண்டு வகைப்படும். இவ்வாறு இவை வகைப்பட்டமையின் ஏனையவும் அவ்வகைப்படுங்கொல் என்று ஐயுறின், அவ்வகைப் படாது ஒழிந்த பெயர்கள் ஐந்தும் அவ்வோதிய வாய்பாடேயாகும் மரபினையுடைய, (எ - று.)

மேல் தொகையான் ஒன்பது எனப்பட்ட விரவுப்பெயர் இவ்விரிநிலையால் பத்தொன்பதாயின எனக் கொள்க. (௨௧)

இயற்பெயர் நான்கு எனல்

கஎக. அவைதாம்,
பெண்மை இயற்பெயர் ஆண்மை இயற்பெயர்
பன்மை இயற்பெயர் ஒருமை இயற்பெயரென்
றந்நான் கென்ப இயற்பெயர் நிலையே.

என் - எனின், மேல் இயற்பெயர் நான்கு என்றமையின் அவற்றது பெயரும் முறையும் உணர்த்தல் நுதலிற்று.

(இ - ள்.) அவ்வாறு வகுக்கப்பட்டனதாம் யாவை எனின் பெண்மை இயற்பெயரும், ஆண்மை இயற்பெயரும், பன்மை இயற்பெயரும், ஒருமை இயற்பெயரும் என்று சொல்லப்பட்ட அந்நான்கும் என்ப இயற்பெயரது நிலைமையை, (எ - று.) (௨௨)

சினைப்பெயர் நான்கு எனல்

கஎ௰. பெண்மைச் சினைப்பெயர் ஆண்மைச் சினைப்பெயர்
பன்மைச் சினைப்பெயர் ஒருமைச் சினைப்பெயரென்
றந்நான் கென்ப சினைப்பெயர் நிலையே.

என் - எனின், சினைப்பெயர் நான்கு என்றமையின் அவற்றது பெய ரும் முறையும் உணர்த்தல் நுதலிற்று.

(இ - ள்.) பெண்மைச் சினைப்பெயரும், ஆண்மைச் சினைப் பெயரும், பன்மைச் சினைப்பெயரும், ஒருமைச் சினைப்பெயரும் எனப்பட்ட அந்நான்கும் என்று சொல்லுப சினைப்பெயரது நிலை மையை, (எ - று.) (உ௩)

சினை முதற்பெயர் நான்கு எனல்

கஅக. பெண்மை சுட்டிய சினைமுதற் பெயரே
ஆண்மை சுட்டிய சினைமுதற் பெயரே
பன்மை சுட்டிய சினைமுதற் பெயரே
ஒருமை சுட்டிய சினைமுதற் பெயரென்
றந்நான் கென்ப சினைமுதற் பெயரே.

என் - எனின், சினைமுதற் பெயரும் நான்கு என்றமையின் அவற்றது பெயரும் முறையும் உணர்த்தல் நுதலிற்று.

(இ - ள்.) பெண்மை சுட்டிய சினைமுதற் பெயரும், ஆண்மை சுட்டிய சினைமுதற்பெயரும், பன்மை சுட்டிய சினைமுதற் பெயரும், ஒருமை சுட்டிய சினைமுதற் பெயரும் எனப்பட்ட அந்நான்கும் என்று சொல்லுப சினைமுதற்பெயர், (எ - று.) (உ௪)

முறைப் பெயர் இரண்டு எனல்

கஅஉ. பெண்மை முறைப்பெயர் ஆண்மை முறைப் [பெயரென்
றாயிரண் டென்ப முறைப்பெயர் நிலையே.

என் - எனின், முறைப்பெயரும் இரண்டுவகைப்படும் என்றமையின் அவற்றது பெயரும் முறையும் உணர்த்தல் நுதலிற்று.

(இ - ள்.) பெண்மை முறைப்பெயரும், ஆண்மை முறைப் பெயரும் எனப்பட்ட அவ்விரண்டும் என்று சொல்லுப முறைப் பெயரது நிலைமையை, (எ - று.) (உ௫)

பெண்மை சுட்டிய பெயர்

கஅ௩. பெண்மை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றற்கும் ஒருத்திக்கும் ஒன்றிய நிலையே.

என் - எனின், மேல் விரித்தவற்றுள் பெண்மைப் பெயரெல்லா வற்றையும் தொகுத்துத் திணைக்கு உரியவாமாறு உணர்த்தல் நுதலிற்று.

(இ - ள்.) மேல் விரித்தோதினவற்றுள் பெண்மையைக் கருதின எல்லாப் பெயரும் அஃறிணையுள் பெண்ணொன்றற்கும் உயர்திணையுள் ஒருத்திக்கும் நிற்றல் பொருந்தின; (எ - று.)

பெண்மை சுட்டிய பெயர் பெண்மை இயற்பெயர் எனவும், பெண்மைச் சினைப்பெயர் எனவும், பெண்மைச் சினைமுதற்பெயர் எனவும், பெண்மை முறைப்பெயர் எனவும் நான்கு வகைப்படும்.

(எ - டு.) பெண்மையியற்பெயர் - சாத்தி வந்தது, சாத்தி வந்தாள் எனவரும்.

பெண்மைச் சினைப்பெயர் - முடத்தி வந்தது, முடத்தி வந்தாள் என வரும். குறளி என்பதும் அப்பாற்படும்.

பெண்மைச் சினைமுதற்பெயர் - முடக்கொற்றி வந்தது, முடக்கொற்றி வந்தாள் எனவரும்.

பெண்மை முறைப்பெயர் - தாய் வந்தது, தாய் வந்தாள் எனவரும், ஆய் என்பதும் அது.

யாய் என்பதோ எனின், தன்மையோடு அடுத்தமையின் முறைப் பெயரேனும் உயர்திணை எனப்படும். (௨௪)

ஆண்மை சுட்டிய பெயர்

௧௮௪. ஆண்மை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றற்கும் ஒருவற்கும் ஒன்றிய நிலையே.

என் - எனின், ஆண்மைப்பெயர் எல்லாவற்றையும் தொகுத்துத் திணைக்குரியவாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஆண்மையைக் கருதின பெயர்களெல்லாம் அஃறிணையுள் ஆண் ஒன்றற்கும் உயர்திணையுள் ஒருவற்கும் நிற்றல் பொருந்தின, (எ - று.)

அவை ஆண்மை இயற்பெயர் எனவும், ஆண்மைச் சினைப்பெயர் எனவும், ஆண்மைச் சினைமுதற் பெயர் எனவும், ஆண்மை முறைப் பெயர் எனவும் நான்கு வகைப்படும்.

(எ - டு.) ஆண்மையியற்பெயர் - சாத்தன் வந்தது, சாத்தன் வந்தான் எனவரும்.

ஆண்மைச் சினைப்பெயர் - முடவன் வந்தது, முடவன் வந்தான் என வரும்.

ஆண்மைச் சினைமுதற் பெயர் - முடக்கொற்றன் வந்தது, முடக்கொற்றன் வந்தான் எனவரும்.

ஆண்மை முறைப்பெயர் - தந்தை வந்தது, தந்தை வந்தான் என வரும். நுந்தை யென்பதும் அது.

எந்தை என்பது தன்மை யடுத்தமையின் உயர்திணைப் பெயராம். (உஎ)

பன்மை சுட்டிய பெயர்

கஅரு. பன்மை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றே பலவே ஒருவர் என்னும்
என்றிப் பாற்கும் ஓரன் னவ்வே.

என் - எனின், பன்மைப் பெயரெல்லாவற்றையும் தொகுத்துத் திணைக்கு உரியவாமாறு உணர்த்தல் நுதலிற்று.

(**இ - ள்.**) பன்மையைக் கருதிய எல்லாப் பெயர்களும் அஃறிணைக்கண் ஒன்றும் பலவும், உயர்திணைக்கண் ஆண்பாலும் பெண்பாலும் என்று சொல்லப்படும் நான்கு பாற்கும் ஒரு தன்மைய, (எ - று.)

பன்மை சுட்டிய பெயர் பன்மை இயற்பெயரும், பன்மைச் சினைப் பெயரும், பன்மைச் சினைமுதற்பெயரும் என மூன்று என்று உணரப் படும்.

ஈண்டுப் பன்மை என்றது இருதிணைப் பன்மையும் அன்று; பலபால் மேலும் வருதலின் பன்மை என்றாராகக் கொள்க.

(எ - டு.) பன்மை யியற்பெயர் - யானை வந்தது, யானை வந்தன, யானை வந்தான், யானை வந்தாள் எனவரும்.

பன்மைச்சினைப்பெயர்-நெடுங் கழுத்தல் வந்தது, வந்தன, வந்தான், வந்தாள் எனவரும்.

பன்மைச் சினைமுதற் பெயர் - பெருங்கால் யானை வந்தது, வந்தன, வந்தான், வந்தாள் எனவரும்.

ஈண்டு ஒன்றே என்றதனை அஃறிணை ஆண் ஒன்றினையும் பெண் ஒன்றினையுமாகக் கொள்க. பன்மைக்கும் அஃதொக்கும். உயிரில் ஒன்றும் பலவும் கொள்ளற்க. ஒருவர் என்பதனை உயர்திணை இருபால் மேலும் கொள்க. (உஅ)

ஒருமை சுட்டிய பெயர்

கஅசு. ஒருமை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றற்கும் ஒருவற்கும் ஒன்றிய நிலையே.

என் - எனின், ஒருமைப்பெயர் எல்லாவற்றையும் தொகுத்துத் திணைக்குரியவாமாறுணர்த்தல் நுதலிற்று.

(இ - ள்.) ஒருமையைக் கருதின எல்லாப் பெயரும் அஃறிணையுள் ஒன்றற்கும் உயர்திணையுள் ஒருவற்கும் நிற்றல் பொருந்தின, (எ - று.)

ஒருமைப்பெயர் ஒருமை யியற்பெயரும், ஒருமைச் சினைப்பெயரும், ஒருமைச் சினை முதற் பெயரும் என மூன்று வகைப்படும்.

(எ - டு.) ஒருமை யியற்பெயர் - கோதை வந்தது, வந்தான், வந்தாள் எனவரும்.

ஒருமைச் சினைப்பெயர் - செவியிலி வந்தது, வந்தான், வந்தாள் என வரும்.

ஒருமைச் சினை முதற்பெயர் - கொடும் புறமருதி வந்தது, வந்தான், வந்தாள் எனவரும். (உக)

தாம் என்னும் விரவுப்பெயர்

கஅஎ. தாமென் கிளவி பன்மைக் குரித்தே.

என் - எனின், தாம் என்பது திணைக்குரித்தாமாறு உணர்த்தல் நுதலிற்று.

(இ - ள்.) தாம் என்பது இருதிணைப் பன்மைக்கும் உரித்து, (எ - று.)

(எ - டு.) தாம் வந்தார், தாம் வந்தன எனவரும்.

வாளாது பன்மை என்றமையின் ஆண் பன்மையும் பெண்பன்மையும் எனக் கொள்க. (நூo)

தான் என்னும் விரவுப்பெயர்

கஅஅ. தானென் கிளவி ஒருமைக் குரித்தே.

என் - எனின், தான் என்னும் சொல் திணைக்குரித்தாமாறு உணர்த்தல் நுதலிற்று.

(இ - ள்.) தான் என்னும் சொல் இருதிணை ஒருமைக்கும் உரித்து, (எ - று.)

(எ - டு.) தான் வந்தது, தான் வந்தான், தான் வந்தாள் எனவரும்.

வாளாதே ஒருமை என்றமையின் பெண்பால் மேலும், ஆண்பால் மேலும் கொள்க. (நூக)

எல்லாம் என்னும் விரவுப்பெயர்

கஅகூ. *எல்லாம் என்னும் பெயர் நிலைக் கிளவி
பல்வழி நுதலிய நிலைத்தா கும்மே.

என் - எனின், எல்லாம் என்னும் சொல் திணைக்குரித்தாமாறு உணர்த்தல் நுதலிற்று.

(இ - ள்.) எல்லாம் என்று சொல்லப்படும் பெயராகிய நிலைமையையுடைய சொல் இருதிணைப் பன்மையிடத்தையும் கருதிய நிலைமைத்தாகும், (எ - று.)

(எ - டு.) (எல்லாம் வந்தார், எல்லாம் வந்தீர்,) எல்லாம் வந்தன, எல்லாம் வந்தேம் எனவரும்.

வாளா பன்மை என்றமையின் இரண்டிடத்தும் ஆண் பன்மையும் பெண் பன்மையும் கொள்க. (கூஉ)

மேலதற்கு எய்தியது ஒருமருங்கு மறுத்தல்

ககூ௦. தன்னுள் ளுறுத்த பன்மைக் கல்லது
உயர்திணை மருங்கின் ஆக்கம் இல்லை.

என் - எனின், எய்தியது ஒரு மருங்கு மறுத்தல் நுதலிற்று.

(இ - ள்.) மூன்றிடத்தும் இருதிணைமேலும் சென்றமையின் தன்மையிடத்து அஃறிணைக்கண் ஆகாது என்றமையான், எல்லாம் என்னும் சொல் சொல்லுவான் தன்னை உள்ளுறுத்து அஃது அஃறிணை மொழி கூறுமையின் அஃறிணைத் தன்மைப் பன்மைக்கு உயர்திணை யிடத்தல்லது அஃறிணையிடத்து ஆகுதல் இல்லை, (எ - று.)

உயர்திணை மருங்கின் அல்லது என மொழி மாற்றிக் கொள்க.

(எ - டு.) எல்லாம் உண்டும் என்பது.

மற்று இஃது அஃறிணை மொழி கூறுமையின் அஃறிணைத் தன்மை இல்லை என்பது பெறுதுமாகலின் இது கூறல் வேண்டா எனின், மேல் "பல்வழி நுதலிய நிலைத்தாகும்" என அதற்கு விதி சென்றமையின் அது விலக்கல் வேண்டும் என்பது.

மற்று எல்லாம் உண்டும் என்ற தன்மைக்கண் வருகின்ற வரவினை உயர்திணைப் பெயராக வேறோதற்பாற்று எனின், எல்லாம் என்பது

* இதனையும் அடுத்த நூற்பாவையும் இணைத்து ஒரே நூற்பாவாகக் கொள்வர் தெய்வச்சிலையார்.

போல உயர்திணைக்கே உரித்தானது முன்னிலைக் கண்ணும் படர்க்கைக் கண்ணும் விரவா நிற்றலின் சண்டேயோத இன்னுழிவிரவின்றி உயர்திணைப் பெயராம், எ - று. (௩௩)

நீயிர், நீ என்பன திணைதெரியாமை

ககக. நீயிர் நீயென வரூஉம் கிளவி
பால்தெரி பிலவே உடன்மொழிப் பொருள.

என் - எனின், நீயிர் நீ என்பனவற்றைத் திணைக்குரித்தாமாறு உணர்த்தல் நுதலிற்று.

(இ - ள்.) நீயிர் எனவும் நீ எனவும் வரூஉம் சொற்கள் திணை தெரிபில, உயர்திணையாயும் அஃறிணையாயும் உடனுணர்த்தலைப் பொருண்மையாக வுடைய, (எ - று.)

மற்றுத் திணை தெரியாமையின் அன்றே விரவுப் பெயராயது; இது சொல்லவேண்டுமோ எனின், மேல் விரவுப் பெயர்களைத் "தத்தம் வினையோடல்லது பால் தெரிபில" என்றமையின், இவையும். தத்தம் மரபின் திணையான் உணரற்பாடு சென்றமைகண்டு இவை முன்னிலைப் பெயராக லின் இவற்றுக்கு வரும் முன்னிலை வினையும் விரவாவாகலான் எய்தியது விலக்குதற்குக் கூறினர் என்பது.

(எ - டு.) நீயிர் வந்தீர், நீ வந்தாய் என்பன; திணை கண்டு கொள்க. (௩௪)

நீ என்பது ஒருமைக்குரித்தாதல்

ககஉ. *அவற்றுள்,
நீஎன் கிளவி ஒருமைக் குரித்தே.

என் - எனின், நீ என்னும் சொல் பாற்குரித்தாமாறு உணர்த்தல் நுதலிற்று.

(இ - ள்.) இவ்விரண்டனுள்ளும் நீ என்னும் சொல் இருதிணை முன்னிலை ஒருமைக்குரித்தாம், (எ - று.)

(எ - டு.) நீ வந்தாய் எனவரும்.

இது இருபாற்கும் உரித்தாயவாறு கண்டுகொள்க. அஃறிணைக்கண்ணும் பெண் ஒருமைக்கண்ணும் ஆண் ஒருமைக்கண்ணும் கொள்க. (௩௫)

நீயிர் என்பது பன்மைக் குரித்தாதல்

ககங. ஏனைக் கிளவி பன்மைக் குரித்தே.

* இதனையும் அடுத்த நூற்பாவையும் இணைத்து ஒரே நூற்பாவாகக் கொள்வர் தெய்வச்சிலையார்.

என் - எனின், நீயிர் என்னும் சொல் இருதிணைப் பன்மைக்கும் உரித்தாமாறு உணர்த்தல் நுதலிற்று.

(இ - ள்.) எஞ்சிநின்ற நீயிர் என்னும் சொல், இருதிணைப் பன்மைக்கும் உரித்தாம், (எ - று.)

(எ - டு.) நீயிர் வந்தீர் என உயர்திணைப்பலர்மேலும் அஃறிணைப் பலவற்றின் மேலும் வந்தவாறு கண்டு கொள்க.

ஈண்டும் அஃறிணைப் பெண்பன்மையினையும் ஆண்பன்மையினையும் உயர்திணைப் பெண்பன்மையினையும் ஆண்பன்மையினையும் கொள்க...... பெயர் ஆராய்ச்சி யெனக் கொள்க. (கூ_சு)

உயர்திணை அதிகாரத்து ஒழிபு
ஒருவர் என்பது உயரிருபாற்கும் பொது எனல்

ககூச. ஒருவர் என்னும் பெயர்நிலைக் கிளவி
இருபாற்கும் உரித்தே தெரியுங் காலை.

என் - எனின், உயர்திணை அதிகாரத்தின் ஒழிபு உணர்த்தல் நுதலிற்று.

(இ - ள்.) ஒருவர் என்று சொல்லப்படுகின்ற பெயர்நிலையுடைய சொல் உயர்திணை ஆண்பாலும் பெண்பாலுமாகிய இருபாற்கும் உரிமையையுடைத்து ஆராயுங்காலத்து, (எ - று.)

(எ - டு.) ஒருவர் வந்தார் என்றால் இருபாற்கும் உரித்தெனக் கொள்க.

இருபாற்கும் உரித்து என்பது ஒரு சொல்லதன்கண்ணேயோ எனின், ஒன்று சொல்லுதற்கண்ணே எனக் கொள்க. மற்று இருவரைக் கூறும் பன்மைக்கிளவி எனவும் பிறவும் இருபாலினையும் ஒருகாலே தழுவியும் வருமால் எனின், ஆண்டுச் சொல்லிற்படுவது ஒருபாலே: மற்றைப் பால்..........பாற் பெறப்படுகின்றது எனக்கொள்க. மற்று இருபாலென்றால் பன்மை ஒழிந்த இருபாலும் என்பது யாங்ஙனம் பெறுதும் என்னின், ஒருவர் என நின்ற ஒருமை வாய்பாட்டால் பன்மை நீங்கிற்று எனக் கொள்க.

பாலதிகாரத்தே சொல்லாது ஈண்டுச் சொல்லியது என்னை எனின், ஒருபாற் குரித்தாகாது விரவி வருகின்ற நீர்மையால் ஈண்டுப் போந்தது எனக் கொள்க (கூ_எ)

மேலதற்கு முடிபு

ககூரு. தன்மை சுட்டிற் பன்மைக் கேற்கும்.

என் - எனின், இஃது ஒருவர் என்னும் சொற்கு முடிபு கூறுதல் நுத லிற்று.

(இ - ள்.) முற்கூறிய ஒருவர் என்னும் சொல்லினது சொல் முடியுந்தன்மையைக் கருதில் தான் காட்டுகின்ற பொருண்மைக்கு ஏற்ப ஒருமைச் சொல்லொடு முடியாது ஒருவர் என ரகர ஈற்றதாய் நின்ற அச்சொல்தன்மைக்கு ஏற்பப் பன்மைச்சொல் கொண்டு முடியும், (எ - று.)

(எ - டு.) ஒருவர் வந்தார் எனவரும்.

இதுவும் ஓர் பால்பற்றிய மரபு வழுவமைதி எனக் கொள்க. (கடு அ)

மேற்கூறிய மூன்று பெயர்களும் குறிப்பால் பால் உணர்த்தும் எனல்

கசகூ. இன்ன பெயரே இவையெனல் வேண்டின்
முன்னஞ் சேர்த்தி முறையின் உணர்தல்.

என் - எனின், இவ்வொருவர் என்னும் சொற்கும். மேற்கூறிய நீயிர் நீ என்னுஞ் சொற்கட்கும் எய்திய தோர் இலக்கணம் உணர்த்தல் நுத லிற்று.

(இ - ள்.) நீயிர், நீ என்னும் இவை இரண்டும், உயர்திணைக் குரித்து, அஃறிணைக் குரித்தென்றும், ஒருவர் என்பது ஆண்பாற் குரித்து, பெண்பாற் குரித்து என்றும் பால்தெரிய நில்லாமையின் அவை ஈண்டு இன்ன பெயர் என்பது அறியல் வேண்டின் அச் சொற்களைக் கூறுவான் கருத்தினை அச்சொற்களோடு சேர்த்தி நீயிர், நீ எனவும், ஒருவர் எனவும் மேலோதிய முறையானே திணை யும் பாலும் உணர்ந்துகொள்க, (எ - று.)

விலங்கு வருதற்பாலதல்லதோர் வழியிருந்து நீயிர் வந்திர் என்று னும், நீ வந்தாய் என்றானும் கூறின், ஈண்டு உயர்திணை எனவும், இனி, மக்களில்வழி யிருந்து அவை கூறின் அஃறிணை எனவும், இனிக் காட்டுக் கண் புகுதல் போகாநின்றுழி ஒருவர் புகுந்தார் எனில் ஆண்பாலெனவும் ஆண்மக்கள் புகுதற்பாலதல்வழி ஒருவர் இருந்தார் எனில் பெண்பால் எனவும், இடமும் காலமுமாகிய முன்னத்தான் உணர்ந்தவாறு கண்டு கொள்க.

மற்று, இஃது அதிகாரந்தான் ஒருவர் என்னும் சொற்கே கூறிய தன்றே நீயிர் நீ என்பதனையும் உடன்கூட்டி யுரைத்தவாறு என்னை எனின், பன்மை கூறிய அதனானும் ஏற்புழிக் கோடல் என்பதனானும் இம் மூன்றற்குங் கொள்ளப்பட்டது. (கக)

பெண்மகன் என்னும் சொற்குமுடிபு கூறல்

ககூஎ. மகடூஉ மருங்கில் *பால்திரி கிளவி
மகடூஉ இயற்கை தொழில்வயி னான.

என்-எனின், இதுவும் உயர்திணையொழிபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) பெண்பாற்குரிய ஈற்றதாய் நில்லாப் பெண்மகனெனப் பெண்பால் ஆண்பாலாகத் திரிந்து நின்ற சொல் சொற்குமுடிபாக அதன் தொழில் கூறுமிடத்து அப்பெண்பாற் பொருண்மையின் இயல்பிற்று, (எ - று.)

(எ - டு.) பெண்மகன் வந்தாள் எனவரும்.

இதுவும் ஓர் மரபு வழுவமைதி எனக் கொள்க. இதுவும் அந் நீர்மைத்தாகலின் ஈண்டுப் போந்தது எனக்கொள்க. (சo)

செய்யுட்கண் வரும் ஆகார ஈறு ஓகாரம் ஆதல்

ககூஅ. ஆஓ ஆகும் பெயருமா ருளவே
ஆயிடன் அறிதல் செய்யு ளுள்ளே.

என் - எனின், இது பெயரீறு செய்யுளுள் திரியும் என்பது உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஆகாரம் ஓகாரமாகி நிற்கும் பெயரும் உள; அவ்விடங்களை அறிக செய்யுளிடத்து, (எ - று.)

(எ-டு.) வில்லோன் காலன கழலே எனவும், தொடியோள் மெல்லடி மேலவுஞ் சிலம்பே எனவும் வரும்.

ஆயிடனறிதல் என்றதனல் ஆகாரமாதற்கு ஏலாத வழியே ஓகாரம் ஆவது இயல்பு எனக் கொள்க.

இனிக் கிழவோன் என்பது ஆகாரமாக வழக்கின்மையின் அது செய்யுள் விகாரம் அன்று; இயல்பாகிய ஈறு எனக் கொள்க.

இதுவும் செய்யுள் மரபு வழுவமைதி எனக் கொள்க. (சக)

விரவுப் பெயர் செய்யுளுள் வரும் முறைமை

ககூகூ. இறைச்சிப் பொருள்வயின் செய்யுளுட் கிளக்கும்
இயற்பெயர்க் கிளவி உயர்திணை சுட்டா
நிலத்துவழி மருங்கில் தோன்ற லான.

* 'பால் தெரி' என்பதும் பாடம்.

என் - எனின், செய்யுள் இடத்து விரவுப் பெயர் வருவது ஓர் முறைமை கூறுதல் நுதலிற்று.

(இ - ள்.) அச் செய்யுட்களில் கருப்பொருள் கூறும் வழி கிளக்கப்படும் இயற்பெயராகிய விரவுப்பெயர் உயர்திணை யுணர்த் தாது அஃறிணைப் பொருள் உணர்த்தும். அதற்குக் காரணம் என்னை எனின், அவ்வந் நிலங்களி னிடமாகிய இடத்து அவற் றுக்கு உறுப்பாய்த் தோன்றுதலான், (எ - று.)

(எ - டு.) "கடுவன் முதுமகன் கல்லா மூலர்க்கு வதுவை யயர்ந்த வன்பறழ்க் குமரி" என வரும். இவை அஃறிணையை நோக்கி நின்றன எனக் கொள்க.

மற்று இவ்விரவுப் பெயர்கள் கருப் பொருள்களுள் அந்நிலத்து மக்கட் பெயராய் உயர்திணை மேல்வரின் என்னை குற்றம் என்றார்க்கு அவ் வம்மக்களை இவ்விரவுப் பெயர்களால் கூறுதல் சான்றோர் செய்யுட்கண் கண்டிலாமையின் அது மரபு அன்று என்றாரெனக் கொள்க. (சஉ)

எய்தியது விலக்கல்

உ௦௦. திணையொடு பழகிய பெயரலங் கடையே.

என் - எனின், எய்தியது விலக்குதல் நுதலிற்று.

(இ - ள்.) செய்யுளுள் உயர்திணை யுணர்த்தாது நிற்பது இவ்வைந்திணையோடும் அடிப்பட்டு அவ்வைந்திணை உடையானது உடைமைக் கிழமை உணர்த்தி நிற்கும் பெயர் அல்லாத இடத்துக் கண்ணே; ஆண்டாயின் உயர்திணையை உணர்த்தும், (எ - று.)

'கழனி ஊரன்' என்பது போல்வன செய்யுட்கண் இறைச்சிப் பொருட்டாய் வந்தும் உயர்திணையை நோக்கியவாறு கண்டு கொள்க.

மேல் உயர்திணை சுட்டா என்றது விரவுப் பெயர்க்கு அன்றே இவை உயர்திணைப் பெயர் ஆயினமையின் எய்தியது வில...திணை சுட்டா என்று ஒழிவதன்றி நிலத்துவழி மருங்கிற் றோன்றலான என்று காரணம் கூறினமையின் உயர்திணை பெயரானவற்றிற்கும் இவ்விதி எய்தும் கொல்லோ என்று மாணாக்கள் ஐயுறுவா...று போலும். (சங)

ஐந்தாவது பெயரியல் முற்றிற்று.

௬. வினையியல்

வினைச் சொற்குப் பொது இலக்கணம்

உ0௧. வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்.

இவ்வோத்து என்ன பெயர்த்தோ எனின், வினையது இலக்கணம் உணர்த்திலமையின் வினையியல் என்னும் பெயர்த்து.

மேல் ஓத்தினோடு இவ்வோத்திடை இயைபு என்னையோ வெனின், முன்னைப் பெயரியலுள் நிறுத்த முறையானே பெயர் உணர்த்தி அதன் பின்னர் வினை உணர்த்திய தொடங்கினுர் என்பது.

இதன் தலைச்சூத்திரம் என் நுதலிற்றோ எனின், வினைச் சொற்கெல்லாம் பொதுவாயதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) வினைச்சொல் என்று சொல்லப்படுவது அறுவகை உருபினையு மேலாதே ஆராயும் கால், காலத்தொடு புலப்படும், (எ - று.)

(எ - டு.) உண்டான் என்பது வேற்றுமை கொள்ளாது எனல் வேண்டியது.

மேல், "கூறிய முறையின்" *என்ற சூத்தி...னின்றது பெயர்க்குயாதும் ஆகாது என்பதே யன்றி வினைக்காயின் முதலும் இடையும் எல்லாம் ஆம் என்பதும் கொள்ளக் கிடந்தமையின் அது விலக்கிய என்பது.

'நினையுங்காலை' என்றதனுன் காலம் தன்னை மூன்று என்பாரும், தொழிலாவது பொருளினது புடை பெயர்ச்சியாகலின், அஃது ஒருகணம் நிற்பதல்லது இரண்டு கணம் நில்லாமையின் நிகழ்ச்சி என்பதொன்று இல்லை ஆதலின் இறப்பும் எதிர்வும் எனக் காலம் இரண்டே என்பாரும், நிகழ்காலம் என்ற ஒன்றுமே உண்டு என்பாரும் எனப் பல மதம் உண்டு என்பது அறிவிக்கப்பட்டது. (௧)

காலம் மூன்று எனல்

உ0உ. காலந் தானே மூன்றென மொழிப.

என் - எனின், மேற்காலமோடு தோன்றும் என்றுர் அக்காலத்தை இனைத்தென்பது உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) காலம் எனப்படுவனதாம் மூன்று என்று சொல்லுப ஆசிரியர், (எ - று.) (உ)

---

* வேற்றுமையியல் ௩அ.

காலத்தின் பெயரும் முறையும் தொகையும்

௨௦௫. இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றா
அம்முக் காலமுங் குறிப்பொடுங் கொள்ளும்
மெய்ந்நிலை யுடைய தோன்ற லாறே.

என் - எனின், மேல் தொகை கூறப்பட்ட காலத்திற்குப் பெயரும் முறையும் தொகையும் கூறி அதுதான் வினைக்குறிப்பிற்கும் வினைச்சொற்கும் உண்டு என்பதூஉம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) இறப்பும் நிகழ்வும் எதிர்வும் என்று சொல்லப்படுகின்ற அம்முக்காலமும் வினைக்குறிப்பொடும் கொள்ளப்படும் உண்மை நிலையினையுடைய அவை தோன்றுமிடத்து, (எ - று.)

இறப்பு நிகழ்வு எதிர்வு என்பன பெயர் முறை கிடந்த முறையே.

(எ - டு.) கரியன் செய்யன் என்பன. இவை ஆசிரியற்கே காலம் புலப்பட நின்றமையின் மேலைச் சூத்திரத்து அடங்காது என்று வேறு கூறப்பட்டது என்பது.

மெய்ந்நிலை என்பது வினைக்குறிப்புக் காலத்தைத் தெற்றென விளக்கிக் காட்டாமையான் வினையல்ல என்று கருதினும் கருதற்க; இதுவும் வினையது இலக்கணம் மெய்ம்மையாக உடையது எ - று. (ரு)

வினைச்சொற்களின் பாகுபாடு

௨௦௬. குறிப்பினும் வினையினும் நெறிப்படத் தோன்றிக்
காலமொடு வரூஉம் வினைச்சொல் எல்லாம்
உயர்திணைக் குரிமையும் அஃறிணைக் குரிமையும்
ஆயிரு திணைக்கும் ஓரன்ன உரிமையும்
அம்மூ வுருபின தோன்ற லாறே.

என் - எனின், வினைச்சொற்களது பாகுபாடு கூறுதல் நுதலிற்று.

(இ - ள்.) குறிப்புவினைத் தன்மையானும், தெரிநிலை வினைத் தன்மையானும், முறைமைப்படத் தோன்றிக் காலத்தொடு வருகின்ற வினைச்சொற்கள் எல்லாம் உயர்திணைக்கு உரியனவும் அஃறிணைக்கு உரியனவும் அவ்விரு திணைக்கும் ஒன்று போன்ற உரிமை உடையனவும் என அம் மூன்று கூற்றை உடைய தோன்று நெறிக்கண், (எ - று.)

மேல் 'குறிப்பொடுங்கொள்ளும்' (சொல்-203) எனக் குறிப்பு இயைபுபற்றி நிற்றலிற் குறிப்பு முன் கூறப்பட்டது.

வினைக் குறிப்பிற்கும் காலம் உண்டே என்பது வலியுறுத்தற்குப் பின்னும் காலமொடு தோன்றும் என உடன் கூறப்பட்டது. (௪)

உயர்திணைத் தன்மைப்பன்மை வினைமுற்று

உ0ரு. *அவைதாம்,
அம் ஆம் எம்ஏம் என்னும் கிளவியும்
உம்மொடு வரூஉம் கடதற என்னும்
அந்நாற் கிளவியொ டாயெண் கிளவியும்
பன்மை யுரைக்கும் தன்மைச் சொல்லே.

என் - எனின், மேல் நிறுத்த முறையானே உயர்திணை யுணர்த்துதல் நுதலிற்று.

உயர்திணை வினைதாம், தெரிநிலை வினையும் குறிப்பு வினையும் என இருவகைய; அவற்றுள், தெரிநிலை வினை முன்னுணர்த்திய வெடுத்துக் கொண்டார். அதுதானும் தன்மை வினையும் படர்க்கை வினையும் என இருவகைத்து. அவற்றுள் தன்மை முன் உணர்த்திய தொடங்கினன். தன்மைதானும் உளப்பாட்டுத் தன்மை தனித்தன்மை என இருவகைத்து. அவற்றுள் உளப்பாட்டுத் தன்மை முன் உணர்த்திய தொடங்கினன் என உணர்க.

(இ - ள்.) மேற் பகுக்கப்பட்ட வினையின் முப்பாகுபாடும் ஆகிய அவையாமாறு இனிச் சொல்லுவல்; அம் ஆம் எம் ஏம் என்னும் ஈற்றையுடைய நான்குவகைச் சொற்களும், உம்மொடு வருகின்ற கும், டும், தும், றும் எனப்படுகின்ற அந்நான்கு ஈற்றுச் சொல்லுமாகிய அவ்வெட்டுச் சொல்லும், அவன் தன்னோடு பிறனையும் கூட்டிப் பன்மையினைச் சொல்லும் தன்மைக்கு உரிய சொல்லாம், (எ - று.)

[†'அம்—தாய்வரும்.']

(எ - டு.) அம்:—உண்டனம், உண்டிலம்; உண்ணாநின்றனம், உண்கின்றனம்; உண்ணாநின்றிலம், உண்கின்றிலம்; உண்பம், உண்குவம், உண்ணலம் எனவரும்.

இவற்றுள் நிகழ்காலம் நிற்கின்...........னம் என்றாற்போல வரும் வாய்பாட்டு விகற்பமும் அறிக.

---

* 'அவைதாம்' என்னும் சொல் தெய்வச்சிலையார் உரையில் இல்லை.
† இப்பகுதி சிதைந்துள்ளது.

இனி அம்மறை ஒருவாய் பாட்டதாய்ச் சொல் தன்றனே உண்டிலம் என்றாற்போல மறுத்து வருதலே அன்றி உண்டனம் அல்லம்........... வாய்பாட்டான் மறுத்து.............,..

ஆம்:—உண்ணாநின்றும், உண்டாம், உண்டிலாம், உண்கின்றும், உண்ணாநின்றிலாம்; உண்பாம், உண்குவாம், உண்ணும் என வரும்.

எம்:—உண்டேம், உண்டிலெம்; உண்ணாநின்றெம், உண்கின்றெம்; உண்ணாநின்றிலெம், உண்கின்றிலெம்; உண்பெம், உண்குவெம்; உண்ணெம் என வரும்.

ஏம்:—உண்டனேம், உண்டிலேம்; உண்ணாநின்றேம், உண்கின்றேம்; உண்ணாநின்றிலேம்; உண்பேம், உண்குவேம், உண்ணேம் எனவரும்.

இவற்றிற்கும் உண்டாமல்லெம், உண்டாமல்லேம்.........விகற்பமும் அறிக.

இனி, உம்மொடு வரூஉங் கடதறக்கள், உண்கும், உண்டும், வருதும், சேறும் என எதிர்காலம் ஒன்றுமே பற்றி வரும் எனக் கொள்க.

இவற்றுள் மறைவாய்பா.........ந் நாற்கிளவியும் என்பான் எண்ணும் மையினைத் தொகுத்து ஒடு விரித்தார் எனக் கொள்க. (௬)

தன்மை ஒருமை வினைமுற்று

௨௦௬ கடதற என்னும்,
அந்நான் கூர்ந்த குற்றிய லுகரமொ(டு)
என்ஏன் அல்என வரூஉம் ஏழும்
தன்வினை உரைக்குந் தன்மைச் சொல்லே.

என் - எனின், தனித்தன்மை ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) கடதற என்று சொல்லப்பட்ட அந்நான்கு ஒற்றினையும் ஊர்ந்த குற்றியலுகர ஈற்றுச் சொற்கள் நான்கும் என் ஏன் அல் என்னும் மூன்று ஈற்றுச்சொல்லும் எனச் சொல்ல வருகின்ற அவ்வேழு சொல்லும் தன்மைப் பன்மைச் சொல்போலச் சொல்லுவான் தன்னோடு பிறன் வினையையும் உணர்த்தாது தன் வினையையே உணர்த்தும் தன்மைச் சொல்லாம், (எ - று.)

ஒடு, எண்ணொடு. இவற்றுள் முன்னைய நான்கும் எதிர்காலம் ஒன்றுமே பற்றி வரும்.

(எ - டு.) உண்கு, உண்டு, வருது, சேறு, உரிஞுகு, திருமுகு என வரும்.

இவற்றுள் தகர உகரம்; "கழிந்து பொழிந்தென வான்கண் மாறினுந், தொல்லது விளைந்தென நிலம் வளங்கரப்பினும்" *என்னும் புறப்

* புறம். 203

பாட்டினுள் பொழிந்து எனவும், விளைந்து எனவும் இறந்தகாலம் பற்றி வந்தன. சிறுபான்மை நிகழ்காலமும் உண்டேனும் அறிந்து கொள்க.

இனிக் ககர உகரத்திற்கு: "அமுராஅற்கோ வினியே நோய்நொந் துறைவி"* என்னும் குறுந்தொகைப் பாட்டினுள் அமுது என்னும் உடன்பாட்டிற்கு அமுராஅற்கு எனஎதிர்மறை வந்தது. ஒழிந்தஎதிர்மறை வாய்பாடும் உளவேல் அறிக.

இனி என் ஏன் என்பன இரண்டு ஈறும் முக்காலத்தும் உடன் பாட்டினும் மறையினும் வரும் எனக் கண்டு கொள்க.

(எ - டு.) உண்டனென், உண்டிலென்; உண்ணாநின்றனென், உண் கின்றனென்; உண்ணாநின்றிலன், உண்கின்றிலன்; உண்பென், உண்கு வென், உண்ணலென் எனவரும். இவை என்.

இனி ஏன்; உண்டேன், உண்டிலேன்; உண்ணாநின்றேன், உண்கின் றேன்; உண்ணாநின்றிலேன், உண்கின்றிலேன்; உண்பேன், உண்குவேன், உண்ணேன் எனவரும்.

உண்டனன், உண்டேனல்லேன் எனவரும் மறைவிகற்பமும் அறிக.

இவ்விரண்டீறும் மூன்று காலத்தும் வருதலால் முன் வைக்கற்பாற்று எனின், முன் சூத்திரத்துக் கடதறக்கள் கடைக்கண் நின்ற அதிகாரம் பற்றி அவற்றை முற்கூறினன் எனவு.........

அல்ஈறு உண்பல், தின்பல் எதிர்காலம் ஒன்றுமே பற்றி வரும். உண்ணாநிற்பல் எனச் சிறுபான்மை நிகழ்காலம் பற்றியும் வரும். ஒழிவல், தவிர்வல் எனச் சில வினைக்கண் மறைவாய்பாடும் அறிக.

அல்லாதவற்றிற்கும் உண்ணு தொழிவல் என்று......வாய்பாடு தானே மறையாய்ச் சொல்லுமாறு அறிக. (௬)

செய்கு என்னும் வினை வினையொடு முடிதல்

உ0எ. அவற்றுள்

செய்கென் கிளவி வினையொடு முடியினும்
அவ்வியல் திரியா தென்மனார் புலவர்.

என் - எனின், அவ்வேழனுள் ககர உகர ஈற்றிற்கு முடிபு வேற்றுமை கூறுதல் நுதலிற்று.

(இ - ள்.) மேற் சொல்லப்பட்ட ஏழனுள்ளும் செய்கு என்னும் சொல் பெயரொடு முடியாதே வினையொடு முடியினும் பெயரொடு முடிந்தன போல அம்முற்றுச் சொல்லாகல் இயல்பின் திரியாது, (எ - று)

* குறுந். 192

(எ - டு.) உண்கு வந்தேன் என்பது.

இனி ஒன்றென முடித்தல் என்பதனான் உண்கும் என்பதும் இவ்வாறே வினையோடு முடியும்.

(எ - டு.) உண்கும் வந்தோம் என்பது.

வினையெச்ச முற்றாய் அமையாதோ எனின், முன்முற்றாய்ப் பெயர்கொண்டு நின்று, பின் வினையெச்ச முற்றாய் வந்தன அன்மையின், இவ்வாறு ஓதினார்.

உண்கோ யான் என்னப் பெயரோடு முடிந்ததால் எனின், அவ்வாறு வருவன உளவேனும் சிறுபான்மை; வினைகோடலே பெரும்பான்மை என உணர்க. (எ)

உயர்திணைப் படர்க்கை ஒருமை வினைமுற்று

உ0அ. அன் ஆன் அள் ஆள் என்னு நான்கும்
ஒருவர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே.

என் - எனின், உயர்திணைத் தன்மை வினை உணர்த்தி அத்திணைப் படர்க்கை வினை உணர்த்துவான் எடுத்துக் கொண்டார் என்பது. அப் படர்க்கை வினைதான் ஒருமை வினையும் பன்மை வினையும் என இரு வகைத்து. அவற்றுள் ஒருமை வினைதான் ஆண்பால் ஒருமையும் பெண் பால் ஒருமையும் என இருவகைத்து. அவ்விருவகை ஒருமையும் இதனாற் கூறுகின்றது என உணர்க.

(இ - ள்.) அன், ஆன், அள், ஆள் என்று சொல்லப்பட்ட நான்கு ஈற்றுச் சொல்லும், ஒருவன் ஒருத்தி என்னும் ஒருமைப் பாலிடத்தில் படர்க்கையை உணர்த்தும் சொல்லாம், (எ - று.)

முக்காலத்தும் உடன்பாடும் மறையும் என இரு வகையாய் வரும்.

அவற்றுள் அன்; உண்டனன், உண்டிலன்; உண்ணாநின்றனன், உண்கின்றனன்; உண்ணாநின்றிலன், உண்கின்றிலன்; உண்பன், உண்குவன் உண்ணலன் என வரும்.

இனி ஆன்; உண்டான், உண்டிலான்; உண்ணாநின்றான், உண்கின்றான்; உண்ணாநின்றிலான், உண்கின்றிலான்; உண்பான், உண்குவான், உண்ணான் என வரும்.

இவை ஆண்பால் ஒருமை.

இனி அள்; உண்டனள், உண்டிலள்; உண்ணாநின்றனள், உண்கின்றனள், உண்ணாநின்றிலள், உண்கின்றிலள்; உண்பள், உண்குவள், உண்ணலள் என வரும்.

இனி ஆள்; உண்டாள், உண்டிலாள்; உண்ணாநின்றாள், உண்கின்றாள்; உண்ணாநின்றிலாள், உண்கின்றிலாள்; உண்பாள், உண்குவாள், உண்ணாள் என வரும்.

இவை பெண்பா லொருமை.

இவற்றிற்கு உண்டனளல்லள், உண்டனளல்லாள்; உண்டனளல்லள், உண்டனளல்லாள் எனப் பிற வாய்பாட்டால் வரும் மறையும் அறிக. (அ)

உயர்திணைப் படர்க்கைப் பன்மை வினைமுற்று

உ0கூ. அர்ஆர் பஎன வரூஉ மூன்றும்
பல்லோர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே.

என் - எனின், உயர்திணைப் பன்மை படர்க்கை வினை ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அர் ஆர் ப என்று சொல்ல வருகின்ற மூன்று ஈற்றுச் சொல்லும் பல்லோர் இடத்துப் படர்க்கை உணர்த்தும் சொல்லாம் என்றவாறு.

இவற்றுள் முன்னைய இரண்டும் மூன்று காலத்தும் வரும்.

(எ - டு.) அர் :— உண்டனர், உண்டிலர்; உண்ணாநின்றனர், உண்கின்றனர்; உண்ணாநின்றிலர், உண்கின்றிலர்; உண்பர், உண்குவர், உண்ணலர் என வரும்.

ஆர் :— உண்டார், உண்டிலார்; உண்ணாநின்றார், உண்கின்றார்; உண்ணாநின்றிலார், உண்கின்றிலார்; உண்பார், உண்குவார், உண்ணார் என வரும்.

இவற்றிற்கு உண்டனரல்லர், உண்டனரல்லார் என வரும் மறை விகற்பமும் அறிக.

இனிப் பகரம் எதிர்காலம் ஒன்றுமே பற்றி வரும்.

(எ - டு.) உண்ப, உண்குப என வரும்.

இஃது உண்ணாநிற்ப என நிகழ்காலத்தும் வரும்.

இதற்கு எதிர்மறை வாய்பாடும் உண்டேல் அறிக.

இனி ஒழிப, தவிர்ப எனச் சில வினைக்கண் மறை வாய்பாடும் உண்மை அறிக. உண்ணாதொழிப என்னும் மறை தானே ஏனையவற்றிற்கு மறை ஆமாறும் அறிக. (க)

மார் என்பது வினையொடு முடிதல்

உகo. மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கை
காலக் கிளவியொடு முடியும் என்ப.

என் - எனின், இதுவும் படர்க்கைக்கு உரியது ஓர் ஈறும் அதன் முடிபு வேற்றுமையும் கூறுதல் நுதலிற்று.

(இ - ள்.) மார் என்னும் சொல்லை ஈறாகவுடைய சொல்லும் பல்லோரை உணர்த்தும் படர்க்கைச் சொல்லாம். அது தான் பிற முற்றுச் சொற்போற் பெயரொடு முடியாது காலத்தை உணர்த்தும் சொல்லாகிய வினைச் சொல்லோடு முடியும். அவ்வாறு முடிந்ததாயினும் முற்றும் இயல்பில் திரிபின்று என்று சொல்லுவர் ஆசிரியர், (எ - று.)

மார் எதிர்காலம் ஒன்றுமே பற்றி வரும்.

(எ - டு.) 'ஆர்த்தார் கொண்மார் வந்தார்' என வரும். உண்மார் தின்மார் என நிகழ்காலம் உண்டேலும் அறிக.

இதுவும் வினையெச்ச முற்றாய் அடங்காதோ எனின், மேற்கூறிய வாறே கூறுக.

உண்ணன்மார் என எதிர்காலம் உண்டேலும் அறிக.

இனி 'நிலவன்மாரோ புரவலர்'* என்றும், 'பாடின் மன்னரைப் பாடன்மார் எமரே'† என்றும், 'நோய்மலி வருத்தங் காணன்மார் எமரே'‡ என்றும், பெயர் கொண்டு முடிந்தனவால் எனின் அவை நிலவுக, பாடுக, காண்க எனவரும் வியங்கோளிற்கு எதிர்மறை.

இதன் மறை அல்ல என்று போகலும் ஒன்று. வினை கொள்ளும் என்பது பெரும்பான்மை. சிறுபான்மை பெயர் வரும் என்பதும் ஒன்று. இரண்டனுள் நல்லது தெரிந்து உரைக்க. (கo)

உயர்திணை வினைமுற்றின் தொகை

உகக. பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
அந்நா லைந்தும் மூன்று தலையிட்ட
முன்னுறக் [1]கிளந்தன உயர்திணை யவ்வே.

என் - எனின், விரித்துத் தொகுத்தல் என்னும் இலக்கணத்தான் இவை உயர்திணைக்கு உரிய எனத் தெரிநிலை வினையைத் தொகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

---

* புறம். 375. † புறம். 375. ‡ நற்றிணை 64.

1. 'கிளந்த உயர்திணை' என்பது பிற உரையாசிரியர்கள் கொண்ட பாடம்.

(இ - ள்.) பன்மையும் ஒருமையுமாகிய பால்களை அறிய வந்த மூன்றனை முடியிலே உடைய இருபதும் மேற் கிளவியாக்கத்து முன்னுறச் சொல்லப்பட்ட உயர்திணையன ஆம், (எ - று.)

மூன்று தலையிட்ட அந்நாலைந்து எனக் கொள்க. மூன்று தலையிட்டு என்றும் ஓர்......டு.

உதாரணம் மேற்காட்டினவே கொள்க.

அவ்விருபத்து மூன்றனுள் பன்மைக்கு உரிய ஈறு உளப்பாட்டுப் பன்மை ஈறு எட்டும், படர்க்கைப் பன்மை ஈறும் மாரும் உட்பட நான்கும் எனப் பன்னிரண்டாம்.

இவற்றுள் உளப்பாட்டுத் தன்மை ஈறு எட்டும் சொல்லுவான் பிற வினையும் உள்ளிட்ட மாத்திரமேயாய்த் தன்வினை கூறும் தன்மையன ஆகலிற் படர்க்கைப் பன்மை நான்கும் போலப் பன்மை சிறப்பின்மை அறிக.

ஒருமை ஈறு:— தனித்தன்மை ஈறு ஏழும், படர்க்கை யொருமை ஈறு நான்கும் ஆகப் பதினொன்றும். இப்பதினொன்றுள் அன் ஆன் என்னும் இரண்டும் ஆண்பாற்கே உரிய ஒருமை. அள் ஆள் என்னும் இரண்டும் பெண்பாற்கே உரிய ஒருமை. தனித்தன்மை ஏழும் இருபாற்கும் உரிய ஒருமை. ஆகலின் முன்னையனபோல ஒருமைச்சிறப்பில எனக் கொள்க.

மேற் கூறுகின்ற மார் என்பதனோடு கூட உயர்திணை ஈறு இருபத்து நான்காம் எனக் கொள்க.

இவ்வுயர்திணை ஈறு இருபத்து நான்கும் இவ்வீற்று வினைச்சொற்கட்கு முடிபாய் வரும்.

பெயர்க்கும், ஒன்றென முடித்தல் என்பதனால் ஈறாய் அவ்விடமும் பாலும் உணர்த்தும் என்பது கொள்ளப்படும்.

இவற்றைப் பெயர்ச்சொற்கும் ஈறாகப் பெயரியலுள் ஓதாதது என்னையெனின், இவையே அன்றிப் பிறவும் ஈறு உண்மையின் ஓதார் ஆயினார் போலும்.

அஃதேற் பிறவற்றையும் சுட்டி வரையறை செய்க எனின், அப் பிற ஈறுகள் நம்பி என ஆண்பால் மேனின்ற இகர ஈறு, அவ்வாட்டி எனப் பெண்பால் மேல்நின்றும்; நங்கை என நின்ற ஐகாரம் தந்தை என ஆண்பால் மேல் நின்றும்; ஆடூஉ என ஆண்பால் மேல்நின்ற ஊகாரம் மகடூஉ எனப் பெண்பால் மேல்நின்றும்; அவன் என ஆண்பால் மேல் நின்ற னகரம் சாத்தன் என விரவின் மேல் நின்றும்; அவள் என நின்ற ளகரம் மக்கள் எனப் பன்மை மேல்நின்றும், அவ்வாறு மயங்கி வருதலின் வரையறுக்கப்படா என்றொழிந்தான் போலும். (கக)

உளப்பாட்டுத்தன்மை வினைமுற்றின் திரிபு

உகஉ. அவற்றுள்,
பன்மை உரைக்கும் தன்மைக் கிளவி
எண்ணியல் மருங்கின் திரிபவை உளவே.

என் - எனின், உளப்பாட்டுத்தன்மைத்திரிபு கூறுதல் நுதலிற்று.

(இ - ள்.) முற்கூறியவற்றுள் உளப்பாட்டுத் தன்மைச் சொற்கள் எண்ணும்போது அஃறிணையையும் உளப்படுத்தித் திரிவன உள (எ - று.)

திரிபவை என்னுந் தொழிற்பெயர்...திரிபென்னுந் தொழிலின் மேலது பொருணிலையாக்கித் திரிபுகள் உளவென எட்டன் மேலும் ஏற்றுக.

இனித் திரிபவை என்னுஞ் சொல்லினைத் திரிபாகிய அவை என இரண்டாக்கி அவை என்பதுந் தங்கு......ளையாக்கியும் உரைக்க.

இனி அவை திரி.........அம், ஆம் என்னும் இரண்டும் தன்னோடு முன்னின்றானை உளப்படுக்கும். எம் ஏம் என்னும் இரண்டும் தன்னோடு படர்க்கையானை உளப்படுக்கும். உம்மொடு வரூஉம் கடதறக்கள் நான் கும் அவ்விருவரையும் உளப்படுக்கும் எனக் கொள்க.

இச்சூத்திரத்து வேறுபாடுள என்றது அல்லது இவ்வகை விளங்கக் கூறாமையின் இதனை உரையிற் கொள்ளப்படும்.

(எ - டு.) யானும் நீயும் உண்டனம், யானும் நீயும் உண்டாம்; யானும் அவனும் உண்டனெம், யானும் அவனும் உண்டேம்; யானும் நீயும் உண்டும், உண்கும், வருதும், சேறும்; யானும் அவனும் உண்கும், உண்டும், வருதும், சேறும் என ஒட்டிக்கொள்க. (கஉ)

யார் என்பது உயர்திணை முப்பாற்கும் உரித்தாதல்

உகஙூ. யாஅர் என்னும் வினாவின் கிளவி
அத்திணை மருங்கின் முப்பாற்கும் உரித்தே.

என் - எனின், உயர்திணைத் தெரிநிலை வினை உணர்த்தி, அதன் வினைக்குறிப்பினுள் ஒன்றனை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) யார் என்று சொல்லப்படுகின்ற வினாப்பொருளை உணர நின்ற சொல் மேற்சொல்லப்பட்ட உயர்திணையிடத்து முப் பாற்கும் உரித்து, (எ - று.)

(எ - டு.) யார் அவன், யார் அவள், யார் அவர் எனவரும்.

மேல் வினைக்குறிப்புக் கூறுழிக் கூறுக எனின், ஆண்டுக் கூறுவன போலாது இஃது ஈறுதிரியாது தானென்றே மூன்றுபாற்கும் உரித்தாயின மையின் வேறு கூறினார் எனக்கொள்க. (கரு)

செய்யுட்கண் சில வினையீறுகள் ஓகாரமாதல்

உகசு. பாலறி மரபின் அம்மூ வீற்றும்
ஆவோ ஆகும் செய்யு ளுள்ளே.

என் - எனின், அவ்விருபத்து மூன்று ஈற்றுள்ளும் மூன்றற்குச் செய்யுளகத்துப் பிறப்பதோர் திரிபு கூறுதல் நுதலிற்று.

(இ - ள்.) பால் அறியப்படும் மரபினையுடைய அம்மூன்றிற் றின் கண்ணும் ஆகாரம் ஓகாரமாம் செய்யுளிடத்து, (எ - று.)

அம்மூன்றுவன, மேல் 'ஆ ஓ ஆகும்' என்றமையால் ஆன், ஆள், ஆர் எனக் கொள்க.

(எ - டு.) "வினவி நிற்றந்தோனே", "நல்லை மன்னென நகூஉப் பெயர்ந்தோளே", "சென்றோ ரன்பிலர் தோழி" எனவரும்.

இம் மூன்றும் படுத்தலோசையால் தொழிற்பெயராயவழி ஆவோ வாதல் பெயரியலுட் *கொள்ளப்படும். (கசு)

ஆய்என் கிளவியிலுள்ள ஆகார ஈறும் ஓகாரமாகும் எனல்

உகரு. ஆயென் கிளவியும் †அவற்றோ ரன்ன.

என் - எனின், இஃது மேலதன் முடிபு முடிதலுடையது பிறிதும் உண்டென்பதும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஆய் என்னும் ஈற்றுச் சொல்லும் மேற்சொல்லப் பட்ட மூன்றிற்றினோடும் ஆகாரம் ஓகாரமாதல் கொள்ளப்படும், (எ - று.)

(எ - டு.) "வந்தோய் மன்ற தெண்கடற் சேர்ப்ப" எனவரும்.

இது விரவு வினையுள் உள்ளதாகலான், ஈண்டுக் கூறியது என்னை யெனின், விரவே எனினும் இவ்வாறு திரிவது உயர்திணையின்மேல் வந்த தாகலானும், ஆ ஓ ஆதல் அதிகாரப்பட்டமையானும் எனக்கொள்க. (கசு)

---

* பெயரியல்-11 ஆம் நூற்பா.

† 'அவற்றொடு கொள்ளும்' என்பது பிற உரையாசிரியர்கள் கொண்ட பாடம். சில ஏடுகளில் கல்லாடருக்கும் இதுவே பாடமாகக் காணப்படு கின்றது.

உயர்திணைக் குறிப்பு வினை

உகஙு. *அதுச்சொல் வேற்றுமை உடைமை யானும்
கண்ணென் வேற்றுமை நிலத்தி னானும்
ஒப்பி னானும் பண்பி னானுமென்
றப்பாற் காலங் குறிப்பொடு தோன்றும்
அன்மையின் இன்மையின் உண்மையின் வன்மையின்
அன்ன பிறவும் குறிப்பொடு கொள்ளும்
என்ன கிளவியும் குறிப்பே காலம்.

என் - எனின், நிறுத்த முறையானே உயர்திணைத் தெரிநிலைவினை உணர்த்தி அதன் குறிப்புவினை உணர்த்திய எடுத்துக் கொண்டார் என்பது.

(இ - ள்.) ஆறும் வேற்றுமையது உடைமைப் பொருட் பெயர்க்கண்ணும் ஏழாம் வேற்றுமையது நிலப்பொருட்பெயர்க் கண்ணும், உவமப்பொருட்பெயர்க்கண்ணும், கருமை முதலிய நிறப் பண்புப் பெயர்க்கண்ணும் என்று சொல்லப்பட்ட அந்நான்கு கூற்றுப் பெயர்க்கண்ணும் வருகின்ற வினைச்சொல், வினைக்குறிப் பாய்த் தோன்றும்; அவையேயன்றி, அன்மை என்னும் பண்புப் பெயரடியாக வருவதும், இன்மை என்னும் பண்புப் பெயரடியாக வருவதும், உண்மை என்னும் பண்புப் பெயரடியாக வருவதும், வன்மை என்னும் பண்புப் பெயரடியாக வருவதும், அத்தன்மை யினையுடைய பிற பண்புப் பெயர்களும், பிற பெயர்களும் அடியாக வருவனவுமாயுள்ளதைக் குறித்துக் கொள்ளப்படும் எல்லாச் சொல்லும் குறிப்பு வினைச்சொல்லாம், (எ - று.)

அப்பால் காலம் என்பது ஆகுபெயரால் காலமுடைய வினைச்சொல் லினைக் குறிப்பாய்த் தோற்றும் என்பான் 'குறிப்பொடு தோன்றும்,' என்றாராகக் கொள்க.

இனி, அக்கூற்றுக் காலங் குறித்துக்கொள்ளப்படுமெனக் காலந்தன் மேலதாயும் படும்.

'குறிப்பே காலம்' என்றது முன் குறிப்பொடு தோன்றும் என்ற காரணத்தான் அச் சொற்கட்குக் குறிப்புவினை யெனப் பெயரிட்ட வாறாகக் கொள்க.

---

*இவ்வுரையாசிரியரும் இளம்பூரணரும் நீங்கலாக ஏனைய உரையாசி ரியர்கள் அனைவரும் இதனை இரு நூற்பாவாகக் கொண்டுள்ளார்கள்.

ஈண்டுங் காலம் என்றது ஆகுபெயரான் வினை வினைக் குறிப்பு என்பதனோடும் குறிப்புவினை என்பதனோடும் வேற்றுமை இல்லை என வுணர்க.

இதனாற் சொல்லியது ஒரு பொருட்கு உடைமையாகிய உடைமைப் பெயரும், ஒரு பொருள் நிகழ்தற்கு இடமாகிய இடப்பெயரும், ஒரு பொருளது குணமாகிய ஒப்புமைப்பண்பும் நிறப்பண்பும் குணப்பண்பு மாகிய பண்புப் பெயரும், இன்னும் ஒரு பொருள் நிகழ்வதற் கிடமாகிய காலப்பெயரும், ஒரு பொருளது புடைபெயர்ச்சியாகிய தொழிற் பெயரும், ஒரு பொருளது உறுப்பாகிய சினைப்பெயரும் என இவ்வறு வகைப் பெயரும் அடியாக இவற்றொடு பாலும் காலமும் காலங்காட்டும் இடைச்சொற்களைக் கூட்டக் காலமும் குறித்துக் கொள்ளும் நீர்மையாய் வருவன எல்லாம் வினைக்குறிப்பு என்பான் பெரும்பான்மையனவற்றை எடுத்தோதி அல்லனவற்றை அன்ன பிறவும் என்றதனாற் கொள்க என்றான் என உணர்க.

ஒப்புமைப்பண்பு குணப்பண்பினுள் அடங்காதோ எனின், அஃது ஒருபொருட்கண்ணே கிடப்பதன்றி அவ்விருபாற் பொருட்கண்ணும் கிடத்தலின் வேறு ஆயிற்றுப் போலும்.

பண்பென ஒன்றாக ஓதியதனை ஒப்புமைப் பண்பு, நிறப்பண்பு, குணப்பண்பு எனப் பிரிக்கின்றது என்னையெனின், நிறப்பண்பு கட்புலம்; மற்றையன பிறபுலம் என்பது கருதிப் போலும்.

குணப்பண்பு என ஒன்றாக ஓதாது அன்மை இன்மை எனப் பிரித்தோதியது என்னை எனின், இவை ஒரு பொருட்குப் பெயர் ஆகி நின்றுழி நன்மை தீமை என்பனவற்றோடு வேறுபாடுடைய என்றதனால் இவற்றின் மேல் வரவு பெரும்பான்மை என்றுதல் பிறவாதல் கருதிப் போலும்.

உடைமை என்றும் நிலம் என்றும் ஓதாது, வேற்றுமைப்பொருள்களை எடுத்து ஓதியது என்னை எனின், அப் பெயரடியாக வினைக்குறிப்பு வந்த வழி அவ் வேற்றுமைப்பொருளுணர்ச்சி உண்டு என்பது கருதிப் போலும்.

......கலத்தோனெனப் பொருள் பற்றி வந்த தெரிநிலைவினையுடையவனென இரண்டாவதன் பொருண்மையன்றோ எனின், அன்று; சொன் முடிந்து நின்றவழி உணர்ச்சி அவ்வாறாயினும் உடைமைக்கு அடியாயுள்ளது ஆறுவது என்பது கருதிப்போலும்.

அறுவகைப் பெயராவன—பண்புப் பெயர், இடப்பெயர், காலப் பெயர், தொழிற் பெயர், சினைப் பெயர், உடைமைப் பெயர் என இவை.

இவற்றிற் கெல்லாம் உதாரணம் இதன் ஈறு கூறுகின்ற மேலைச் சூத்திரத்துள் காட்டுதும். (கக)

உயர்திணை வினைக்குரிய ஈறு

உகஎ. பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
அன்ன மரபிற் குறிப்பொடு வரூஉம்
காலக் கிளவி உயர்திணை மருங்கின்
மேலைக் கிளவியொடு வேறுபா டிலவே.

என் - எனின், மேற்கூறிய வினை, வினைக்குறிப்பிற்கு ஈறுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) பன்மையும் ஒருமையும் ஆகிய பால்களை அறிய வந்த அத்தன்மைத்தான மரபினையுடைய காலங் குறித்துக் கோடலொடு வரும் வினைச்சொற்கள் உயர்திணையிடத்து மேற்கூறிய தெரிநிலைவினை யீறுகளோடு ஈறு வேறுபாடில, (எ - று.)

என்றது, இவற்றிற்கென ஈறு வேறில்லை மேற்கூறிய இருபத்து மூன்று ஈறுமே இவற்றிற்கும் ஈறுவது என்றவாறு.

இருபத்து மூன்று ஈறுதல் சென்றதேனும் இதுபொழுது காண்கின்றது உளப்பாட்டுத் தன்மையுள் அம் முதலிய நான்கும், அத்தன்மையுள் என் ஏன் என்னுமிரண்டும், படர்க்கையுள் அன் முதலிய ஒருமை நான்கும், அர் ஆர் என்னும் பன்மையிரண்டும். அல்லனவும் உளவேற் கொள்க.

(எ - டு.) உடையம், உடையாம்; உடையெம், உடையேம்; உடையென், உடையேன்; உடையன், உடையான்; உடையள், உடையாள்; உடையர், உடையார் என அதுச்சொல்வேற்றுமையுடைமை வந்தவாறு.

இவற்றுள் ரகாரம் முதலாகிய ஈறுகள் பெயர் நோக்கொழிய வினை நோக்குள் வழிக் கொள்க.

இனிப் பொருளுடையன், பொருளையுடையான்; வில்லுடையன், வில்லையுடையான் என்றாற்போல இருசொல்லாய் வாராது பொருளன், வில்லன் என்றாற்போல, ஒரு சொல்லாய் வருதலும், அது பல பொருளன், வல்வில்லன் என்றாற்போல்வன அடையடுத்து வருதலுங் கொள்க.

நிலத்தம், நிலத்தாம்; நிலத்தெம், நிலத்தேம்; நிலத்தினென், நிலத்தினேன்; நிலத்தன், நிலத்தான்; நிலத்தள், நிலத்தாள்; நிலத்தர், நிலத்தார் எனக் கண்ணென்னும் வேற்றுமை வந்தவாறு. இவற்றின் விகற்பமும் அறிக.

பொன்னன்னம், பொன்னன்னாம்; பொன்னன்னெம், பொன்னன்னேம்; பொன்னன்னென், பொன்னன்னேன்; பொன்னன்னன், பொன்னன்னான்; பொன்னன்னள், பொன்னன்னாள்; பொன்னன்னர், பொன்னன்னார் என இவை ஒப்புவந்தவாறு. இவற்றின் விகற்பமும் அறிக.

கரியம், கரியாம்; கரியெம், கரியேம்; கரியென், கரியேன்; கரியன், கரியான்; கரியள், கரியாள்; கரியர், கரியார் என இவை பண்பு வந்தவாறு. இவை ஒழியச் செம்மை முதலிய பண்பொடும் இவ்வாறு ஒட்டுக. இவற்றின் விகற்பமும் அறிக.

அல்லம், அல்லாம்; அல்லெம், அல்லேம்; அல்லென், அல்லேன்; அல்லன், அல்லான்; அல்லள், அல்லாள்; அல்லர், அல்லார் என இவை அன்மை வந்தவாறு. இன்மை முதலியனவும் இவ்வாறொட்டுக. இவற்றின் விகற்பமும் அறிக.

வன்மை என்பதனை இரட்டுற மொழிதலாகக் கொண்டு வன்மையும் வலிமையும் ஆக்கி வல்லம் வலியம் என இருவாற்றானுமொட்டுக. நல்லம், தீயம், சேயம், அணியம் எனப் பிற பண்போடும் எல்லாவீற்றையும் ஒட்டுக. இவற்றின் விகற்பமும் அறிக.

ஓராட்டையம், ஒரு திங்களம், ஒரு நாளம் என எல்லாக் காலத்தோடும் எல்லா ஈற்றோடும் ஒட்டுக. ஊணம், தினம், செலவினம், வரவினம் என எல்லாவற்றோடும், எல்லா ஈற்றோடும் ஒட்டுக. முடவன், குருடன், செவிடன் என எல்லாச் சினையோடும் எல்லா வீற்றையும் ஒட்டுக. இவற்றின் வாய்பாட்டு விகற்பமும் அறிக.

உடைமைப் பெயரும், பண்புப் பெயரும், காலப் பெயரும், தொழிற் பெயரும், சினைப் பெயரும் வந்தவாறு. (கஎ)

அஃறிணைப்பன்மைத் தெரிநிலை வினைமுற்று

உகஅ. அஆ வஎன வரூஉம் இறுதி
அப்பான் மூன்றே பலவற்றுப் படர்க்கை.

என் - எனின், நிறுத்த முறையானே உயர்திணை வினையும் வினைக் குறிப்பும் உணர்த்தி அஃறிணை வினை உணர்த்துதல் நுதலிற்று.

அஃறிணை வினைதான் ஒருமை வினையும் பன்மை வினையும் என இரு வகைத்து; அவற்றுள் பன்மைவினை உணர்த்திய தொடங்கினர் என்பது.

ஒருமையன்றே முன்னையதெனின், யாண்டும் ஒருமையை முன்கூறின் அதற்கோர் சிறப்புண்டுகொல் என்பதுபடும் என்று முந்துமொழிந்ததன் தலைதடுமாற்று என்பதோர் தந்திரவுத்தியும் உண்டாதலான் இவ்வாறு கூறினான் என்க.

(இ - ள்.) அ, ஆ, வ என்று சொல்ல வருகின்ற ஈறுகளையுடைய அக்கூற்று மூன்று சொல்லும் பலவற்றை உணர்த்தும் படர்க்கைச் சொல்லாம், (எ - று.)

(எ - டு.) உண்டன, உண்டில, உண்ணாநின்றன, உண்ணாநின்றில, உண்கின்றன, உண்கின்றில, உண்பன, உண்ணல, என அகரம் வந்தவாறு.

இவ்வகரம் வருங்கால் உடன்பாட்டின்கண் னகர ஒற்றோடு கூடியும், மறைக்கண் லகர ஒற்றோடு கூடியும் அல்லது வாராதுபோலும்.

உண்ட, தின்ற, வந்த, போய என வருமால் எனின், அவை எல்லாக் காலங்களினும் வாராமையான் அங்ஙிகரனவற்றின் னகரம் செய்யுள் விகாரத்தால் குறைந்தது என்க. உண்ணு, தின்னு என ஆகாரம் வந்தவாறு. இதற்கு உடம்பாடு, எக்காலத்தும் இல்லையெனக் கொள்க.

இதற்கு எதிர்காலமே உள்ளது, இதற்கு மறை உண்ணல என அகரத்தின் மறை எனக் கொள்க. உண்டன அல்ல, உண்டன இல்லை எனப் பிறவாய்பாட்டு மறையும் அறிக். (கஅ)

அஃறிணை ஒருமைத் தெரிநிலை வினைமுற்று

உகக. ஒன்றன் படர்க்கை *தறட ஊர்ந்த
குன்றிய லுகரத் திறுதி யாகும்.

என் - எனின், ஒருமைப் படர்க்கைபாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஒன்றனை உணர்த்தும் படர்க்கைச்சொல் தறடக்களை ஊர்ந்த குற்றியலுகரமாகிய ஈற்றெழுத்தினையுடைய சொற்களாம், (எ - று.)

(எ - டு.) வந்தது, வந்திலது, வாராநின்றது, வாராநின்றிலது; வருகின்றது, வருகின்றிலது; வருவது, வாராது எனத் தகரம் வந்தவாறு. கூறிற்று, தாயிற்று என றகரம் இறந்த காலம்பற்றி வந்தவாறு. இது உண்டல், தின்றல் என்னும் எல்லாத்தொழிலொடும் ஓடாமையும் அறிக. தனக்கு என ஏற்ற மறையின்மையும் அறிக. குண்டுகட்டு கொடுந்தாட்டு என்பன டகரம். இது வினைக் குறிப்பின்கண் வருவதெனக் கொள்க.

மற்று இது வினைக்குறிப்பு ஓதும்வழி ஓதாதது என்னை எனின், மேல் குறிப்பினைத் தெரிநிலை வினையினோடு மாட்டெடுறியுமாகலான் இத்தெரிநிலையுள் அடங்கா உகரமில்லது கண்டு, ஆண்டு மாட்டேலாது என ஈண்டே கூறினாரென வுணர்க.

இவ்வாறு பன்மையும் ஒருமையும் அறிவிக்கும் ஈறுகள் ஊவியாக்கத்துள்ளே ஓதினர் அன்றோ எனின், ஆண்டு இடவரையறையின்மையின்

---

* இளம்பூரணர் உரையில் 'தடற' என்ற பாடம் உள்ளது. சில ஏடுகளில் கல்லாடர்க்கும் இதுவே பாடமாகக் காணப்படுகின்றது.

ஈண்டு அவற்றிற்கு இடம் வரையறுத்தவாறாகக் கொள்க. இக்கடாவும் விடையும் உயர்திணைப்படர்க்கை வினைக்கும் ஒக்கும் எனக் கொள்க.

அவற்றுள் பாலுணர்த்தும் என்ற னகரவீறு தனித்தன்மைக்கண் என்னென்புழி இருபாற்கும் பொதுவாய் நின்றதால் எனின், ஆண்டும் ஒருமையு மென்னுந் துணையும் உணர்த்தியது எனக் கொள்க. அக்குறை பாடுகளான் அன்றே அவ்வெழுத்துப் பதினொன்றற்கும் படர்க்கைவினை யென இடம் வரையறுத்ததெனக் கொள்க. (கக)

அஃறிணை வினைமுற்றின் தொகை

உஉo. பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
அம்மூ விரண்டும் அஃறிணை யவ்வே.

என் - எனின், மேல் விரித்தனவற்றை எல்லாம் தொகுத்து, இன்ன திணைக்குரிய என்பது உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) பன்மையும் ஒருமையும் ஆகிய பால்களை யறிய வந்த அவ்வாறும் அஃறிணையுடையன, (எ - று.)

ஆறாவன, அகர ஆகார வகரங்களும், தகர றகர டகரங்களை யூர்ந்த குற்றியலுகரம் மூன்றும் எனக் கொள்க.

ஒன்றென முடித்தலென்பதனான் இவ்வீறு பெயர்க்கும் ஈறுதல் கொள்க. (உ0)

எவன் என்பது அஃறிணை இருபாற்கும் உரித்து எனல்

உஉக. அத்திணை மருங்கின் இருபாற் கிளவிக்கும்
ஒக்கும் என்ப எவனென் வினவே.

என் - எனின், அஃறிணைத் தெரிநிலை வினை உணர்த்தி, அதன் வினைக்குறிப்புக் கூறுவான் இருபாற்கும் உரியதோர் குறிப்புணர்த்து கின்றாரென்பது.

(இ - ள்.) மேற்சொல்லப்பட்ட அஃறிணையிடத்து ஒருமை பன்மையாகிய இருபாற் பொருண்மைக்கு மிகுதி குறைவின்றி யொக்கும் என்று சொல்லுவர் ஆசிரியர்; அது யாது எனில் எவ னென்று சொல்லப்படும் வினாப்பொருண்மையுடைய சொல்லினை, (எ - று.)

(எ - டு.) எவன் அது, எவன் அவை.

இதனை மேற் கூறுகின்ற வினைக்குறிப்பொடு கூறாதது என்னை யெனின், இஃது ஈறுதிரியாது இருபாற்கும் ஏற்பது ஒன்றாகலின் வேறு கூறினார் என்பது.

தெரிநிலைவினை யீறுகளே குறிப்பிற்கும் ஈறும் என்று மாட்டேற்று தற்கேலாதால் எனின், அவ்வாறு ஏலாமையினன்றே இது வேறு கூறியது என்க. இதனோடு அஃறிணை ஈறு ஏழென்பது பெற்றும்.

இவ்வாறு லகரம் அஃறிணைப்பான்மேல் நிற்றலான் "னஃகா னொற்றே ஆடூஉ வறிசொல்" என்றவழிப் படர்க்கையிடத்து முற்றுச் சொற்கு ஈறுயவழித் திரிபின்றியுணர்த்தும் என்று ரகாரம் யாரென்னும் வினாவின்கண் ஒருமைக்கும் உரித்தாய் நின்றதன்றோ எனின், அவையா கின்றவாறறிந்தது. (உக)

அஃறிணை வினைக்குறிப்பு

உஉஉ. *இன்றில உடைய என்னும் கிளவியும்
அன்றுடைத் தல்ல என்னும் கிளவியும்
பண்புகொள் கிளவியும் உளஎன் கிளவியும்
பண்பி னாகிய சினைமுதற் கிளவியும்
ஒப்பொடு வரூஉம் கிளவியொடு தொகைஇ
அப்பாற் பத்தும் குறிப்பொடு கொள்ளும்.

என் - எனின், அஃறிணை வினைக்குறிப்புணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) இன்று, இல, உடைய என்னும் சொற்களும், அன்று உடைத்து அல்ல என்னும் சொற்களும், நிறப்பண்புப் பெயரினைத் தனக்கடியாகக் கொண்ட சொல்லும், உள என் சொல் லும், நிறப்பண்பும் குணப்பண்பும் எனப்பட்ட இருவகைப் பண்புப் பெயரும் காரணமாக உளதாகிய அப்பண்படைந்த சினையொடு முதலை உணர்த்தும் சொல்லும், உவமப்பெயரைத் தனக்கு அடி யாகக் கொண்டுவரும் சொல்லொடு தொக்க அக்கூற்றுப் பத்துச் சொல்லும் காலங் குறித்துக் கோடலொடு வரும் வினைச்சொல் லாகக் கொள்ளப்படும், (எ - று.)

(எ - டு.) இன்று :— இவ்வெருது கோடின்று.

இல :— இவ்வெருது கோடில.

கோட்டினது இன்மை முதற்கு ஏற்றிக் கூறும் வழி இவ்வாறாய், இனி அக்கோடு தனக்கே இன்மை கூறும் வழி இவ்வெருதிற்குக் கோடின்று என ஒரு பொருள் முதற் கூறியானும், இவ்விடத்துக்

* இதனையும் அடுத்த நூற்பாவையும் இணைத்து ஒரே நூற்பாவாகக் கொள்வர் இளம்பூரணர்.

கோடின்று என ஓரிடம் கூறியானும், இக்காலத்துக் கோடின்று என ஒரு காலம் கூறியானும் வரும்.

உடைய :— இவ்வெருதுகள் கோடுடைய.

அன்று :— நாய் அன்று நரி.

உடைத்து :— இவ்வெருது கோடுடைத்து.

அல்ல :— உழுந்தல்ல பயறு.

பண்புகொள் கிளவி:—செய்து, செய்ய. இது பொதுவாக ஓதிநோரா தவின் எல்லா நிறப் பண்பினோடும் ஒருமை பன்மைப்பட ஒட்டிக் கொள்க.

உள:—உழுந்துளவெனக் குறிப்புணர்த்தியும் வரும்.

பண்பினாகிய சினைமுதற்கிளவி:—குறுங்கோட்டது,குறுங்கோட்டன; வெண்கோட்டது, வெண்கோட்டன என இருவகைப் பண்பும் பற்றி வரும்.

ஒப்பொடு வருஉங் கிளவி:—பொன்னன்னது பொன்னன்ன எனவரும்.

(உடைமைப் பொருட்பெயர் முதலாய் அறுவகைப் பெயரினும் உடைமைப் பொருட்பெயர் ... ... என்ற வாய்பாட்டால் கொள்ளப்பட்டது.) அவ்வுடைமைதான் தற்கிழமையும் பிறிதின் கிழமையும் என்னும் இருவகையினும் வரும். இப்பொழுது மணியுடைத்து எனப் பிறிதின்கிழமை வந்தவாறு.

இனி உண்டு உள என்றும், இன்று இல என்றும் ஒருபொருள் தனது உண்மையும் இன்மையும் கூறும்வழி அன்றி, அப்பொருளினைப் பிறிதொரு பொருட்கண் உண்மையும் இன்மையுங் கூறிய வழி அது உடைமையாய் விடுமாகலால் இவற்றானும் உடைமைப் பொருள் பற்றி வருதல் கூறப்பட்டதாம்.

பண்புப்பெயருள் நிறப்பண்பு பற்றி வருதல் 'பண்புகொள் கிளவியும்' என்றதனால் பெறப்பட்டது.

இனிக் குணப்பண்புப் பெயர் அன்று அல்ல என்பவற்றானும், ஒரு பொருள் தனது உண்மையும் இன்மையும் உணர்த்திவரும் உண்டு உள இன்று இல என்பனவற்றானுங் கொள்ளப்பட்டது.

உள என்று பன்மை வாய்பாடோதிய வதனால் அதன் ஒருமையாகிய உண்டு என்பதனையும் தன்னின முடித்தல் என்பதனால் கொள்க.

நன்று, தீது, சேய்த்து, அணித்து என்னும் பிற பண்புகளை 'இன்றில' என வேறோதிய வாற்றானே 'ஒன்றென முடித்தல்' என்பதனால் கொள்க. இவற்றுள் உண்டு உள என்பவற்றிற்கும், உடைத்து உடைய என்பவற்றிற்கும், இன்று இல என்பனவற்றை எதிர்மறையாகக் கொள்க.

இவைதம்மைச் சேரவைத்து ஓதாஞயது செய்யுள்நோக்கிப்போலும்.

ஒப்புமைப் பண்புப்பெயர் 'ஒப்பினுனும்' என்பதனுல் கொள்ளப் பட்டது.

சினைப்பெயர் 'பண்பினுகிய சினைமுதற் பெயரும்' என்பதனுல் கொள்ளப்பட்டது.

இனியிவண் ஈண்டுக்கூறுதன இடப்பெயரும் காலப்பெயரும் தொழிற்பெயரும் என மூன்றுமே; அவற்றை உயர்திணை வினைக்குறிப்பு ஓதியவழி *'அன்னபிறவும்' என்று வைத்து, அதன் பின்னர்ச் சூத்திரத் தும்† 'அன்னமரபின்' என்றோதினதால் கொள்ளப்படுமென் றுணர்க. வடாதுவேங்கடம், மூவாட்டையது, செலவிற்று எனவரும். இவற்றின் உதாரண வாய்பாட்டு விகற்பங்களும் அறிந்துகொள்க.

இதன் பொருட்பெயர் முதல் அறுவகைப்பெயரினும் வரும் வர வினைத் தொகுத்தானும், விரித்தானும் ஓதாது, சிலவற்றை விரித்தும், சிலவற்றைத் தொகுத்தும், சிலவற்றைக் கூறுதும் 'அப்பாற்பத்தும் குறிப்பு' என்று விட்ட கருத்து என்னை எனின், இவை பெரும்பான் மையன என்றவாறு. பிறிது காரணம் உண்டாயினும் அறிந்திலம். (உஉ)

அஃறிணை வினைக்குறிப்பிற்குரிய ஈறு

உஉரு. பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
அன்ன மரபிற் குறிப்பொடு வரூஉம்
காலக் கிளவி அஃறிணை மருங்கின்
மேலைக் கிளவியொடு வேறுபா டிலவே.

என் - எனின், மேற்கூறிய வினைக்குறிப்பிற்கு ஈறு ஆமாறு உணர்த் துதல் நுதலிற்று.

(இ - ள்.) பன்மையும் ஒருமையுமான பால்களை அறிய வந்த அத்தன்மைத்தான மரபினையுடைய காலம்குறிப்பாய்வரும் வினைச் சொற்கள், அஃறிணையிடத்து மேற்கூறிய தெரிநிலைவினை ஈறுக ளோடு ஈறு வேறு பாடில, (எ - று.)

‡மேற்கூறிய அறுவகை ஈற்றுள் டகரவுகரம் ஈண்டு மாட்டேற்றிற் கேலாமையின் ஆண்டே கூறப்பட்டது. அஃது ஒழிந்த ஐந்து ஈறும் மேல் எடுத்தோத்தாலும் இலேசானும் வந்தவற்றிற்கு ஈருயவாறு கண்டு கொள்க.

---

* வினையியல்-16 ஆம் நூற்பா.

† ,, 17 ,,

‡ வினையியல்-16 ,,

உடைத்து எனவும், சிறிது எனவும், கருங்கோட்டது எனவும், குறுங்கோட்டது எனவும், பொன்னன்னது எனவும், வடாது எனவும், மூவாட்டையது எனவும், உண்டிலது எனவும் தகரவுகரம் வந்தது.

செம்மற்று எனவும், அன்று எனவும், குறுங்கோட்டிற்று எனவும், மேற்று எனவும், வைகற்று எனவும், செலவிற்று எனவும் றகரவுகரம் வந்தது.

பொருள எனவும், அல்ல எனவும், கரிய எனவும், கோட்ட எனவும், பொன்னன்ன எனவும், வடக்கண்ண எனவும், மூவாட்டையன எனவும், செலவின எனவும் அகரம் ஈறாய் வந்தது.

இனி ஆகாரம்: இம்மணி நல்ல என்னும் உடம்பாட்டுக்குறிப்பிற்கு மறையாக இம்மணி பொல்லா என வந்தவாறு கண்டு கொள்க.

"கதவவாற் றக்கதோ காழ்கொண்ட இளமூலை" என்புழிக் கதவ என்பது கதத்திணையுடைய என்னும் பொருண்மைக்கண் வகரம் ஈறாய் வந்தவாறு கண்டுகொள்க.

மேல் தெரிநிலைவினைக்கண் கூறிய டகரவுகரம் பூணை உடைத்து என்னும் பொருண்மைக்கண் பூட்டு எனவும், இடத்து என்னும் பொருண்மைக்கண் 'வகைதெரிவான் கட்டேயுலகு' எனவும், எந்நாளிடத்து என்னும் பொருண்மைக்கண் 'எந்நாட்டாகும் நும்போரே' எனவும், உண்மையை உடைத்து என்னும் பொருண்மைக்கண் உண்டு எனவும், விளையுளை யுடைத்து என்னும் பொருண்மைக்கண் 'வேலியாயிரம் விளையுட்டு ஆக' எனவும், குழிந்த கண்ணையுடைத்து என்னும் பொருண்மைக்கண் 'குண்டுகட்டு' எனவும் பொருள் இடம் காலம் பண்பு தொழில் உறுப்பு என்னும் அறுவகைப் பெயரும் அடியாக வந்தவாறுகண்டுகொள்க. (உ௩)

விரவுவினையின் பெயரும் முறையும், தொகையும்

உஉச. முன்னிலை வியங்கோள் வினையெஞ்சு கிளவி
இன்மை செப்பல் வேறென் கிளவி
செய்ம்மன செய்யும் செய்த என்னும்
அம்முறை நின்ற ஆயெண் கிளவியும்
*பிரிபுவேறு படூஉம் செய்திய வாகி
இருதிணைச் சொற்கும் ஓரன்ன உரிமைய.

என் - எனின், மேல் நிறுத்த முறையானே விரவுவினை யுணர்த்துவான் தொடங்கி, அவற்றது பெயரும் முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

---

* 'திரிபு வேறுபடூஉம்' என்பது சேனாவரையர் பாடம்.

(இ - ள்.) முன்னிலையிடத்தினைத் தனக்குப்பொருண்மையாக உணர்த்துஞ் சொல்லும், ஏவலைத் தனக்குப் பொருண்மையாகக் கொண்ட சொல்லும், வினைச்சொல்லை ஒழிபாகவுடைய சொல்லும் இன்மை என்னும் பண்பினை உணர்த்துதலுடைய சொல்லும், வேறு என்னும் சொல்லும், செய்ம்மன என்னும் சொல்லும், செய்யும் என்னும் சொல்லும், செய்த என்னும் சொல்லும் என்று சொல்லப்படுகின்ற அவ்வடைவின்கண் நின்ற அவ்வெட்டுச்சொல்லும் ஒருகால் உயர்திணைக்கண்ணும், ஒருகால் அஃறிணைக்கண்ணும் பொதுமையிற் பிரிந்து வேறுபட்டு நிற்கும் தொழிலினையுடையவாகிய இருதிணையாகிய பொருட்கும் ஒன்று போன்ற உரிமையுடைய, (எ - று.)

முன்னிலை யென்பது முன் உயர்திணைக்கண்ணும், அஃறிணைக்கண்ணும் தன்மையும் படர்க்கையும் கூறிய இடங்களுள் கூறுதுநின்றது ஆகலானும், தான் பல ஈற்றுல் பயின்று வருவதாகிய வழக்குப்பயிற்சியுடைமையானும், முற்றுச்சொல்லாதலானும் முன்வைக்கப்பட்டது. இனி, அதன்பின்னர் வியங்கோள் முற்றுச்சொல்லுமாய்ப் பெரும்பான்மை வரவு படர்க்கை என ஓரிடமாய்ப் பலவழக்கிற்று ஆகலான் வைக்கப்பட்டது. இவை இரண்டும் அவற்றுப் பொருண்மையால் பல வீற்றை ஒன்றாக அடக்கப்பட்டன. அவற்றின் பின்னர் அவைபோல வழக்குப்பயிற்சி யுடைமையான் வினையெச்சம் வைக்கப்பட்டது. இஃது அச்சொல்லும் முடிபிலக்கணத்தான் ஒன்றாக அடக்கி ஓதப்பட்டது. இன்மை செப்பலும், வேறென் கிளவியும் முன்னிலையும் வியங்கோளும் போல முற்றே யெனினும் வினையெல்லாம் போலாது சிறுவரவின ஆகலானும், வினைக்குறிப்பின் பன்மையானும் வினையெச்சத்தின் பின் வைக்கப்பட்டன. அவற்றின் பின்னர்ச் செய்ம்மன என்பது தெரிநிலைமுற்றே எனினும் பலவாய்பாட்டதாயினும் வழங்குவாரின்மையின் பின் வைக்கப்பட்டது. அதன் பின்னர் செய்யும் என்பது ஒருவழி முற்றும் நிலைமையும் உடைத்தாகலின் அதன்பின் வைக்கப்பட்டது. அதன் பின்னர் அதனோடு ஒத்த பெயரெச்சம் ஆகலின் செய்த என்பது வைக்கப்பட்டது.

இன்மை செப்பல் முதல் ஐந்தும் அச்சொற்கள் தம்மையே ஓதின எனினும் வேறு என்பதொன்றும் ஒழிய மற்றையன எல்லாம் பல வாய்பாட்டன என்று கொள்க.

அஃதென்னையாமாறு எனின், இல்லை என்றது இன்மை செப்பல் என்றதனுல், இல்லை என்பதும் இல் என்பதும் என இரண்டாயிற்று.

செய்ம்மன, செய்யும், செய்த என்பன உண்மன, தின்மன எனவும்; உண்ணும் தின்னும் எனவும், உண்ட தின்ற எனவும், பல வாய்பாட்டவாயின.

செய்ம்மன என்றால் உண்மன தின்மன பெறுமாறு என்னை எனின், அச்சொற்களின் பொருண்மையும் ஒருவழிச் செய்ம்மன என்பதனாற் சொல்லப்படுதலின், இஃது அவற்றிற்கெல்லாம் பொதுவாய்பாட்டது என்பது.

அஃதேல் அவ்வாறுவது பொருளுணரநின்றவழியன்றே; இஃது அச் சொல் தன்னை உணர நின்றவிடமால் எனின், அஃதொக்கும் பொருண்மையால் பொதுமையுடைய சொல்லினைக் கூறவே அதனுள்வகையாகிய சொற்களும் "தன்னின முடித்தல்" என்னும் தந்திரவுத்தியான் அடங்கும் என்பது போலும் கருத்து. (௨௪)

முன்னிலை ஒருமைக்குரிய ஈறுகள்

௨௨௫. அவற்றுள்,
முன்னிலைக் கிளவி,
இஐ ஆயென வரூஉம் மூன்றும்
ஒப்பத் தோன்றும் *ஒருவற்கும் ஒன்றற்கும்.

என் - எனின். மேல் நிறுத்தமுறையானே முன்னிலைவினை உணர்த்து வான், அவற்றுள் ஒருமையுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) இ, ஐ, ஆய் என்று சொல்லவருகின்ற மூன்று ஈற்றுச் சொல்லும் உயர்திணை ஆண்பாலும் பெண்பாலுமாகிய ஒருமைப்பாற்கும் அஃறிணை ஒருமைப்பாற்கும் மிகுதி குறைவின்றி ஒப்பத்தோன்றும், (எ - று.)

ஒன்று என்றாரே எனினும் உயிருடைய ஒன்றன் மேலது பெரும் பான்மை என உணர்க.

(எ - டு.) உண்டி என இகரவீறு எதிர்காலமே பற்றி வரும். உண்ணாநிற்றி எனச் சிறுபான்மை நிகழ்காலவரவு உண்டேனுங்கொள்க. இவ்வீற்று வினைக்குறிப்பு உண்டேனும் அறிக.

ஐ - உண்டனை, உண்ணாநின்றனை, உண்குவை, உண்பை, கரியை எனவரும்.

ஆய் - உண்டாய் உண்ணாநின்றாய் உண்பாய் எனவும், கரியாய் செய் யாய் பொல்லாய் எனவும் வரும்.

உண்ணாதி எனவும், உண்டிலை உண்ணாநின்றிலை உண்ணலை எனவும், உண்டிலாய், உண்ணாநின்றிலாய், உண்ணலாய் எனவும் வரும் மறை வாய்பாடும் அறிக. (௨௫)

* ஒருவர்க்கும், என்பது சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச் சிலையார் ஆகியோரது பாடம்.

முன்னிலைப் பன்மைக்குரிய ஈறுகள்

உஉசு. இர்ஈர் மின்என வரூஉம் மூன்றும்
பல்லோர் மருங்கினும் பலவற்று மருங்கினும்
சொல்லோ ரனைய என்மனார் புலவர்.

என் - எனின் முன்னிலைப் பன்மை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) இர், ஈர், மின் என்று சொல்ல வருகிற மூன்று ஈற்றுச்சொல்லும் உயர்திணைக்கண் பல்லோரிடத்தும் அஃறிணைக்கண் பலவற்றினிடத்தும் சொல்லுதலை ஒருதன்மையாக வுடைய என்று சொல்லுவர் ஆசிரியர், (எ - று.)

(எ - டு.) இர் - உண்டிர் உண்ணாநின்றிர் உண்பிர் எனவும், கரியிர் எனவும் வரும்.

ஈர்:—உண்டீர், உண்ணாநின்றீர் உண்பீர் எனவும், கரியீர் எனவும் வரும்.

மின்:—உண்மின் தின்மின் என எதிர்காலமே பற்றிவரும். உண்ணாநின்மின் என நிகழ்காலவரவு உண்டேனும் கொள்க. இவ்வீறு ஏவற்கண்ணே வருவது எனக் கொள்க.

உண்டிலிர் உண்ணாநின்றிலிர், உண்ணலிர் எனவும்; உண்டிலீர், உண்ணாநின்றிலீர், உண்ணீர் எனவும்; உண்ணன்மின் எனவும் வரும் மறையும் அறிக.

மேலைச் சூத்திரத்து எதிர்காலமொன்றினும் வரும் இகரம் முற்கூறினமையால் ஒழிந்தமுன்னிலையீறும் கொள்ளப்படும்.

அவையாவன:—மொழிக்கீறும் எனப்பட்ட இருபத்துநான் கீற்றுள்ளும் எடுத்தோதியவையொழித்து ஒழிந்தன எனக்கொள்க.

(எ - டு.) நட, வா, விரி, ஈ, கொடு, கூ, மே, கை, நொ, போ, வௌ என இவை உயிரீறுள் எடுத்தோதாதன. இவை முன்னிலை ஏவலொருமை.

எடுத்தோதின இகர ஐகார வீற்றுள்ளும் அறியெனவும் உரையெனவும் ஏவற்கண் வருவனவும் அறிந்துகொள்க.

உரிஞ், உண், பொருந், திரும், தின், தேய், பார், செல், தெவ், தாழ், கொள்என இவை புள்ளியிறு பதினொன்றும் வந்தவாறு.

கூட்டு என்பது குற்றியலுகரவீறு. இதுவும் ஏவலொருமை.

*ஆய் எனவும், இர், ஈர் எனவும், மின் எனவும் ஓதினமையின் யகர னகரங்களில் ஐகாரங்கொள்ளவெண் ... ... னின் அவை அவ்

* இப்பகுதி சிதைந்துள்ளது.

வெழுத்தீறன்றிச் சொல்வாய்பாடாய் வேறு வருதலின் இவை வேறாகக் கொள்ளப்பட்டன எனக் கொள்க.

உண்ணும், தின்னும் எனப் பன்மைக்கண் உம்மீறு மகரவீற்றின் வேறுபாடாகக் கொள்க.

லகரவீறு மறைக்கண் உண்ணல் என வரும். அல்லீறும், ஆலீறும் அழேல் என வரும் ஏலீறுங் கொள்க.

ணகரவீற்றுள் உண்டுகாண், சொல்லிக்காண், வருங்காண் என்னும் காணீறும் கொள்க.

உண்டுபார் என்பதோ எனின், அஃது ஒரு சொல்லாதலன்றி அத் தொழிலைச் செய்து அதன் வினைவை மேற்பார் என்னும் ஒருமை தோன்ற நிற்றலின் வேறு சொல் என்க. உண்டுகாண் என்பதும், இவ்வாற்றான் வேறன்றோ எனின், அது சொல்லுவான் கருத்தன்று என்க.

அவன் வருவன்காண் என்பதோ எனின், ஆண்டு காண்டற்றொழில் கருத்தன்மையின் அசைநிலையாகல் தத்தம் குறிப்பானே வேறொரு பொருள் உடைத்தாகலான் எனக்கொள்க.

உண்கிடு உண்கிடா என்பனவோ எனின் அவை சான்றோர் செய்யுட் கண் இன்மையிற் "கடிசொல் இல்லை காலத்துப் படினே" (சொல் - 442) என்பதனாற் கொள்ளப்படும். அது முன்னிலையாயவாறு என்னை எனின், இவற்றுள் உண்கிடு நீ எனப் பிற முன்னிலை போல் முற்றாய், முன்னிலைப் பெயர் கொள்வதன்றி, அவனுண்கிடு என்றானும், யான் உண்கிடு என்றானும் பிற பெயர் வந்த பிற தொழிலினை நீ உடம்படு என்று முன்னிலை நீர்மை தோன்றநிற்றலின் முன்னிலை யாயிற்றுப்போலும்.

இவற்றுள் உண்கிட என்பதொருவழி நீயுண்கிடா என முன்னிலைப் பெயர் கொண்டு நிற்றலும் உண்டு.

இனி உண்ணுங்கோள் என்பதோ எனின், அது உண்ணுங்கள் எனக் கள்ளொடு, உண்ணும் என்பது அசைநிலையடுத்து உம் ஈறு மரீஇயவா றெனக் கொள்க.

முன்னிலை ஈற்றுவகையெல்லாம் தொகுத்து நோக்க எழுத்துவகை யான் இருபத்து நான்கீறும், சொல்வகையால் யகரவீற்றுள் ஆய் என்ப தும், ரகரவீற்றுள் இர் ஈர் என்பனவும், னகரவீற்று மின் என்பதும், ணகர வீற்றுக் காண் என்பதும், மகரவீற்று உம் என்பதும், லகரவீற் றுள் அல், ஆல், ஏல் என்பனவும் ஆக முப்பத்து மூன்றாயின. பிறவாறு உளவேனும் அறிக. (உசு)

முன்னிலை ஒழிந்த வினைகள்

உஉஎ. எஞ்சிய கிளவி இடத்தொடு சிவணி
ஐம்பாற்கும் உரிய தோன்ற லாறே.

என் - எனின், விரவுவினை யெட்டனுள்ளும் முன்னிலைவினை யொழித்து ஒழிந்தனவற்றிற்கு எய்தியதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) முன்னிலையொழித்து எஞ்சிய சொற்கள் ஏழும் மூன்றிடத்தும் பொருந்தி ஐந்துபாற்கும் உரியவாம், அவை தோன்றும் நெறிக்கண், (எ - று.)

அவ்வேழனுள்ளும் மேற் சிறப்புவிதியுடைய வியங்கோளும், வினையெச்சமும், செய்யும், செய்த என்பனவும் ஒழித்து, ஒழிந்தன இன்மை செப்பலும் வேறென்கிளவியும் செய்ம்மனவும் என்னும் மூன்றற்கும் ஈண்டு உதாரணம் காட்டுதும்.

(எ - டு.) யானில்லை, யானும் நீயுமில்லை, யானுமவனுமில்லை, யானு நீயுமவனுமில்லை, யாம் இல்லை, நாமில்லை, நீயில்லை, நீயிரில்லை, அவனில்லை, அவளில்லை, அவரில்லை, அதுவில்லை, அவையில்லை என இன்மைசெப்பல் வந்தவாறு.

யான்வேறு, யானுநீயும்வேறு, யானுமவனும்வேறு, யானு நீயுமவனும்வேறு, நாம்வேறு, யாம்வேறு, நீவேறு, நீயிர்வேறு, அவன்வேறு, அவள்வேறு, அவர்வேறு, அதுவேறு, அவைவேறு என வேறென் கிளவி வந்தவாறு.

யான் செய்ம்மன, யானுநீயும் செய்ம்மன, யானுமவனுஞ்செய்ம்மன, யானும் நீயு மவனுஞ் செய்ம்மன, நாம் செய்ம்மன, யான்செய்ம்மன, நீ செய்ம்மன, நீயிர் செய்ம்மன, அவன் செய்ம்மன, அவள்செய்ம்மன, அவர் செய்ம்மன, அது செய்ம்மன, அவை செய்ம்மன, எனச் செய்ம்மன வந்தவாறு.

செய்ம்மன என அகரவீற்றதே எனினும், யான் செய்ம்மன என்புழி யான்செய்வேன் என்றும், நீ செய்ம்மன என்புழி நீ செய்வை என்றும், அவன் செய்ம்மன என்புழி அவன் செய்வன் என்றும் முற்றுச்சொல் நீர்மைத் தாய்ப் பால் காட்டும் என்பது. இஃது இக் காலத்து இறந்த வழக்கிற்று.

இடத்தொடு என வாளா ஓதினமையின் மூன்று இடமும் கொள்ளப் பட்டது. (உஎ)

வியங்கோள்வினை முன்னிலை தன்மைகளில் வாராது எனல்

உஉஅ. அவற்றுள்,
முன்னிலை தன்மை ஆயீ ரிடத்தொடு
மன்னா தாகும் வியங்கோட் கிளவி.

என் - எனின், எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தல் நுதலிற்று.

(இ - ள்.) முன்னிலை தன்மை என்று சொல்லப்பட்ட அவ் விரண்டிடத்தொடு நிலைபெறுதாகும், ஏவற்பொருண்மையை உணர்த்துஞ்சொல், (எ - று.)

(எ - டு.) அவன் செல்க, அவள் செல்க, அவர் செல்க, அது செல்க, அவை செல்க என வரும்.

தன்மை முன்னிலை என்னுது முன்னிலை தன்மை என்றதனுற் சிறு பான்மை முன்னிலைத் தன்மைக் கண்ணும் வருமெனக்கொள்க.

(எ - டு.) "கடாவுக பாக நின் கால்வல் நெடுந்தேர்", யான் செல்க காட்டிற்கு என வரும்.

மற்று, இவ்வியங்கோள் ஏவல்கண்ணியதும் ஏவல் கண்ணுததும் என இருவகைத்து. ஏவல்கண்ணியதாவது உயர்ந்தான் இழிந்தானை இன்னது செய்க என விதித்தல். ஏவல் கண்ணுததாவது இழிந்தான் உயர்ந்தானை இன்னது செய்யப்பெற வேண்டிக்கோடல்.

மற்று அது பெரும்பான்மையும் "உணர்க" என்றுற்போலக் ககரங் கிடைத்து வருமே எனினும், வாழியர் என அர் ஈறும், வாழிய என யகரவீறும் "இயற்கைப்பொருளை யிற்றெனக் கிளத்தல்" (சொல்-19) என அல் ஈறும், "மறைக்குங் காலை மரீஇய தொரால்" (சொல்-443) என ஆல் ஈறும், "காணன்மார் எமர்" என மாரீறும், 'அஞ்சாமை யஞ்சுவதொன்றின்' என ஐகார வீறும் வரும்.

இவற்றுள் அஞ்சாமை என்பது தொழிற்பெயர் மறையன்றோ எனின் தொழிற்பெயர் மறையும் உண்டெனினும் அஞ்சுவென்பும்.... ....தொழிற்பெயர் வாய்பாடும் ஒருவழி வியங்கோளாமாகலின் மறையும் அங்கிகர்த்ததாம் என்பது.

மற்று உண்ணற்க, உண்ணேற்க, உண்ணுற்க என்பவோ எனின் அவை அப்பத்திடை வேறுபாடல்லது முன்கூறிய ககரவீற்றவாகல் ஒக்கும்.　(உஅ)

செய்யும் என்னும் சொல் பொருந்தாத இடம்

உஉகூ. பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை
அவ்வயின் மூன்றும் நிகழுங் காலத்துச்
செய்யும் என்னும் கிளவியொடு கொள்ளா.

என் - எனின், இதற்கும் அக்கருத்தொக்கும்.

(இ - ள்.) பலரது படர்க்கையும் முன்னிலையும் தன்மையும் ஆகிய அவ்வயின் என்று சொல்லப்பட்ட மூன்றும் நிகழ் காலத்தைத் தமக்குக் காலமாக உடைய செய்யும் என்னும் சொல்லோடு

வருவனவாகக் கொள்ளப்படா என்றவாறு. எனவே படர்க்கையிற் பல்லோர் படர்க்கை ஒழித்து ஒழிந்த நான்கு படர்க்கைக் கண்ணும் வரும் என்பதாம்.

(எ - டு.) அவன் உண்ணும், அவள் உண்ணும், அது உண்ணும், அவை உண்ணும் என வரும். அஃதேதல்,

"ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
யாஅதும் என்னு மவர்".

எனவும்,

"என் குறை சொல்ல வேண்டுமா லலவ" எனவும், "யான் போகல் வேண்டும்" எனவும் ஒழிந்த இடத்தும் வந்ததால் எனின், வாராது; அவற்றிற் கெல்லாம் சொன்னிலை வேறாகப் பொருள் உரைக்கப்படும் என்பது.

நிகழும் காலம் என்றது என்னை? அவன் உண்ணும் என எதிர் காலத்தும் வருமால் எனின், அது கால மயக்கம் எனக் கொள்க.

நிகழ் கால வரவு இக்காலத்து இல்லையால் எனின் உண்டு. அவன் என் செய்யும் என்றார்க்கு அவன் இப்பொழுது ஓதும் என்றாற் போல்வன நிகழ்காலத்தது எனக் கொள்க.

செய்யும் என்னும் சொல்தான் முற்றும் எச்சமும்என இருவகைத்து, அவற்றுள் முற்று விலக்கியது ஈண்டை விலக்கு எனக் கொள்க. முற்றிற்கும் என்பதோர் ஈறாகக் கொள்க.

இதனோடு முன்கூறிய முற்று ஈறெல்லாம் தொகுத்து நோக்க, உயர்திணை ஈறு இருபத்து நான்கும், அஃறிணை ஈறு ஏழும். இவி விரவு, வினையெச்சமும் பெயரெச்சமும் முற்றும் என மூவகைத்து.

அவற்றுள் மூன்று ஈறாகிய முன்னிலையும், வியங்கோளும், இன்மை செப்பலும், வேறென் கிளவியும், செய்ம்மனவும் ஆகிய ஐந்தனுள்ளும் முன்னிலை ஈறு முப்பத்து மூன்றும் வியங்கோள் ஈறு ஏழும், இன்மை செப்பல் ஈறு இரண்டும், வேறு என் கிளவியது ஈறு ஒன்றும், செய்ம்மன என்பதன் ஈறு ஒன்றும் ஆக நாற்பத்து நாலாம்; பிறவுமாம். மேலும் அறிக. (உக)

வினையெச்ச வாய்பாடுகள்

உஙO. செய்து செய்யூச் செய்பு செய்தெனச்
செய்யியர் செய்யிய செயின்செயச் செயற்கென
அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி.

என் - எனின், இதுவும் மேல் எஞ்சியகிளவி என்று ஓதிய பொது விதியுட்பட்ட வினையெச்சம் என்பதற்கு வாய்பாட்டு வேற்றுமையும்

முடிபு வேற்றுமையும் கூறுவான் தொடங்கி, அவ்வினையெச்சங்களுள் சிறப்புடைய வாய்பாடுகளைத் தொகுத்துணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) செய்து என்பது முதலாகச் செயற்கு என்பது ஈறாக ஓதப்பட்ட அக்கூற்று ஒன்பது வாய்பாட்டதாம் முன் வினையெஞ்சுகிளவி என்றோதப்பட்டது, (எ - று.)

அவற்றுள் செய்தென்பது முதலாகச் செய்தென என்பதீறாக அந் நான்கும் இறந்தகாலத்தவாகலான் முன்னே உடன் வைக்கப்பட்டன. அவற்றுள் செய்தென்பது பெருவழக்கிற்றாகலின் அவற்றுள்ளும் முன் வைக்கப்பட்டது. அவற்றுள் செய்தென என்பது அவற்றிற்கு எல்லாம் சிறு வழக்கிற்று ஆதலானும், பிறவினையும் கோடலானும் பின்வைக்கப் பட்டது. இனிச் செய்யியர் என்பது முதலாகச் செயற்கு என்பது ஈறாக ஐந்தும் எதிர்காலத்தவாகலானும், பிறவினையுங் கோடலுண்மையானும், பிறவினை கோடலுமுடைய செய்தென வினையின் பின்னர் உடன்வைக் கப்பட்டன. அவ்வைந்தும் எதிர்காலத்தவேனும் செய்யியர் செய்யிய என்னும் இரண்டும் வாய்பாட்டு வேற்றுமையல்லது பொருள் வேற்றுமை யின்மையின் உடன்வைக்கப்பட்டன. செயின் என்பது வாய்பாட்டு வேற்றுமையோடு பொருள் வேற்றுமையும் உடைமையின் அவற்றின் பின்னர் வைக்கப்பட்டது. செய என்பது எதிர்காலத்ததே யன்றிப் பிற காலத்துஞ் சிறுபான்மை வருதலான் அதன்பின் வைக்கப்பட்டது. செயற்கு என்பது அவைபோல வழக்குப்பயிற்சி யின்மையின் எல்லாவற் றினும் பின்வைக்கப்பட்டது.

இதன்முன் செய்தென்றோதிய வாய்பாடு குற்றியலுகரத்தால் ஆராயப்பட்ட கடதற என்னும் நான்கீறும், இகரவீறும், யகரவீறும் என அறுவகைப்பட்டது. அவ்வறுவகையுஞ் செய்தெனப் பொருண்மையால் ஒன்றாக வைக்கப்பட்டது.

அஃதேல் செய்யூ, செய்பு, செய்தென என்பனவும் இதனுள் அடங் காவோ எனின், அவ்வாறு அடங்குமேனும் இவற்றிற்கு வேறுபாடு உண் டென்று அறிவித்தற்கு வேறோதினர் என்பது. யாதோ வேற்றுமை எனின், செய்தென்றதன் ஈறு செய்தல் என்னும் தொழிற்கண்ணே செய்து எனத் தகரவுகர வீறும், உண்டல் என்னுந் தொழிற்கண்ணே உண்டு என டகரவுகரவீறும், தின்றல் என்னும் தொழிற்கண்ணே தின்று என றகரவுகரவீறும், புகுதல் என்னுந் தொழிற்கண்ணே புக்கு எனக் ககரவுகரவீறும், ஓடல் என்னுந் தொழிற்கண்ணே ஓடி என இகரவீறு யும், தூவுதல் என்னும் தொழிற்கண்ணே தூய் என யகரவீறும் ஒரு தொழிற்கண்ணே வேறுபட வந்தவாறு.

ஒரு தொழிற்கண்ணே வேறுபட வாராமையுடைய அத்தொழில் எல்லாவற்றினும் உழூஉ எனவும், உழுபு எனவும், உழுதென எனவும்;

உண்ணூஉ எனவும், உண்குபு எனவும், உண்டென எனவும்; தின்னூஉ எனவும்; தின்குபு எனவும்; தின்றென எனவும்; புகூஉ, புகுபு, புக்கென எனவும்; ஓடூஉ, ஓடுபு, ஓட்டென எனவும்; தூஉ, தூபு, தூய் எனவும் வேறுபடாது வருதலுடைமையின் வேறுகூறினார் என்பது,

செய்யூ என்பதற்குச் செய்யா என்பதூஉம் ஓர் வாய்பாடு. அதுவும் ஒன்றென முடித்தல் என்பதனாற் கொள்ளப்படும். இதனை இறந்தகால விரைவுப்பொருட்டு என்பாரும் உளர்.

செய்து என்பதற்குச் செய்யாநின்று என்பதூஉம் ஓர் நிகழ்கால வாய்பாடு. அதுவும் ஒன்றெனமுடித்தல் என்பதனால் கொள்ளப்படும்.

இனிச் செய்யியர் எல்பது மழை பெய்யியர் எழுந்தது என்பது.

செய்யிய என்பது மழை பெய்யிய எழுந்தது என்பது.

செயின் என்பது மழைபெய்யிற் குளம் நிறையும் என்பது. இது நிகழின் அது நிகழும் என்னுங் காரணப்பொருள் பற்றி வரும். இதற்கு மழைபெய்தாற் குளம் நிறையும் என ஆல் என்பதும் ஓர் வாய்பாடு. அதுவும் ஒன்றென முடித்தல் என்பதனாற்கொள்க.

'நனவிற் புணர்ச்சி நடக்கலும்' (கலி - 39 : 35) என உம் ஈறுதலும் கொள்க. இதுவும் ஒன்றென முடித்தல் என்பதனாற்கொள்க.

மழை பெய்தக்கால் என்பதோ எனின் அது பின்னேதுகின்ற கால் என்னும் வாய்பாடெனக் கொள்க.

மழை பெய்யுமேலும் மழை பெய்யுமேனும் என வரும் ஏல் ஏன் என்பனவோ எனின் அவற்றையும் இதன் குறிப்பென்று கோடலும் ஒன்று. அன்றியும் இவ்வெச்சப் பொருள்படுவன சில இடைச் சொல்லென்று கோடலும் ஒன்று.

'ஒன்றானும் தீச்சொல்' (குறள் - 258) என்புழி ஆனே எனின், அதுவும் அப்பால் ஓரிடைச் சொல் என்றலும் ஒன்று. ஆயினும் எல்லுஞ் சொல் ஆனும் என இடைக்குறைந்து நின்றது என்றலும் ஒன்று.

'நுணங்கிய கேள்வியரல்லால்' (குறள். 419) என்புழி அல்லால் என்பதோ எனின் அன்றி என்னுஞ் செய்தெனெச்சக் குறிப்பிற்கு அதுவுமோர் வாய்பாடு என்பது. அல்லவாயினென்பது பொருளாக்கி இதன் குறிப்பு என்பாரும் உளர்.

இனிச் செய என்பது மழைபெய எழுந்தது என்பது. மழைபெய்யக் குளம் நிறைந்தது என இறந்த காலத்துக்கண்ணும் வரும். மழை பெய்யக் குளம்நிறையும் என நிகழ்காலத்துஞ் சிறுபான்மை வரும்.

இவ்வெச்சந்தான் ஒருவழி மழை பெயக் குளம் நிறைந்தது எனக் காரணப்பொருளாயும், குளம் நிறைய மழை பெய்ததெனக் காரியப் பொருளாயும், மழைபெய எழுந்ததென அதற் பொருட்டென்னும்

பொருட்டாயும், மழை பெய்யச் சாத்தன் வந்தான் என உடனிகழ்ச்சியாய் நிகழ்த்தற்கண் இடப்பொருட்டாயும் பிறவாற்றுயும் வரும் என்பது.

இனி, 'துன்னிப் பெரிய வோதினுஞ் சிறிய வுணரா' (புறம் - 375) என்புழிப் பெரிய சிறிய என்பன பெருமை, சிறுமைப் பண்படியாக வந்தமையின் இவ்வெச்சத்தின் குறிப்பு என்றலும் ஒன்று. இவ்வெச்சப் பொருள் உரிச்சொல் என்றலும் ஒன்று.

இனிச் செவ்வன் தெரிகிற்பான் எனவும், புதுவதினியன்ற அணியன் எனவும், புதுவது புனைந்த வெண்கை யாப்பு எனவும், பொய்கைப்பூப் புதிதீன் எனவும், பெருங்கையற்ற வென்புலம்பு எனவும், சிறுநனி நீ துஞ்சியேற்பினும் எனவும், ஒல்லைக்கொண்டான் எனவும், பிறவும் அகரவீறன்றிப் பிறவீருய் வருவனவும் அவ்வாறே உரைக்கப்படும்.

இனிச் செயற்கு என்பது உணற்கு வந்தான் என்பது. இஃது அதற் பொருட்டென்னும் பொருள்பற்றி வரும். இது உணல் என்னும் தொழிற் பெயர் நான்காம் உருபு ஏற்றவாறன்றே எனின், அதுவுமோர் வழக்குண்டு. பெயர்ப்பொருண்மை நோக்கியவழி அதுவாகவும், காலம் நோக்கியவழி வினையெச்சமாகவும் கொள்க. எற்றுக்கு என்பது இதன் குறிப்பு வாய்பாடாகக் கொள்க. (௬௦)

இதுவுமது

உ௬௧. பின்முன் கால்கடை வழியிடத் தென்னும்
அன்ன மரபிற் காலங் கண்ணிய
என்ன கிளவியும் அவற்றியல் பினவே.

என் - எனின், இதுவும் ஒரு வினையெச்ச மாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) பின் என்பது முதலாக இடத்தென்பதிறுக ஓதப்பட்ட அத்தன்மைத்தான வாய்பாட்டு முறைமையினையுடைய காலத்தைக் குறித்த எல்லாச் சொல்லும் மேற்சொல்லிய ஒன்பதும் போல வினையெச்சத்துக்கு வாய்பாடாம் இயல்பினையுடைய, (எ - று.)

(எ - டு.) பின்:—

* "இளமையுந் தருவதோ இறந்த பின்னே"

என வரும்.

முன் :—

† "வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை"

என வரும்.

* கலி. 15 : 26. † குறள், 435.

பின் என்பது பின்னரென்றும், பின்னை என்றும் வரும். முன் என்பது முன்னரென்றும் முன்னை என்றும் வரும். இனிப் பின் என்பதும் முன் என்பதும் ஒருவினையிடத்து வாராது பிற்கொண்டான், முற்கொண்டான் எனத் தாமேயும் வரும்.

கால் :—

* "வலனாக வினையென்று வணங்கிநாம் விடுத்தக்கால்"

எனவரும்.

கடை:—

† "தொடர் கூரத் துவ்வாமை வந்தக்கடை"

எனவரும்.

வழி :—

‡ "படுசுடர் மாலையொடு பைதலேனு யுழப்பானைக்
குடிபுறங் காத்தோம்புஞ் செங்கோலான் வியன்றானை
விடுவழி விடுவழிச் சென்றாங் கவர்
தொடுவழித் தொடுவழி நீங்கின்றாற் பசப்பே"

எனவரும்.

இடத்து :—

§ "களையுநர் கைகொல்லுங் காழ்த்த விடத்து"

எனவரும்.

இவை காலம் விளக்கி நில்லாது குறிப்பாதலிற்போலுங் 'காலங்கண்ணிய' என்றது. இவையிற் குறிப்புப் போலாது ஓரோர் காலங்களைக் குறித்துக்கொள்ள நிற்கும் என்பது. விடுத்தக்கால் என்பது விடுத்து என இறந்தகாலக் குறிப்பாயிற்று. "வாரி வளங்குன்றிக்கால்" (குறள்-14) என்பது குன்றின் என எதிர்காலக் குறிப்பாயிற்று.

முன் செய்து, செய்யூ என்ற வாய்பாடு தம்மையே ஓதினவாறு போலன்றி ஈண்டு அன், ஆள், அர், ஆர் என்றாற்போல அவற்றை ஈறு பற்றி ஓதினார் எனக் கொள்க.

மற்று இக்காட்டிய உதாரணங்களெல்லாம் பெயரெச்சமும் பெயருமாகற்பால எனின், அவற்றின் பொருள் நோக்குஞ் சொல்நிலையுஞ் சந்தி நிலைமையும் அன்னவன்மையின் இவ்வாறு வருவனவற்றை வினையெச்சமென்கின்றார்போலும். ஆயினும் இவை செய்த செய்யாநின்ற செய்யும் என்னும் பெயரெச்சங்களும் இவற்றின் மறைகளும் இவற்றின் தொகையாகிய வாய்பாடும் போலும் வாய்பாடுகளை யடைந்தல்லது வாரா வென்பது.

* கலி. 35: 15.	† கலி. 22: 21
‡ கலி. 130: 18-22	§ குறள், 879.

என்ன கிளவியும் என்றதனால் பான், பாக்கு, வான், வாக்கு எனவும் பிறவாறும் வருவன கொள்க.

(எ - டு.) உண்பான் வந்தான், உண்பாக்கு வந்தான், கொள்வான் வந்தான், கொள்வாக்கு வந்தான் எனவரும்; பிறவுமன்ன.

ஆக வினையெச்சவாய்பாடு எடுத்தோத்து வகையான் பதினைந்தும், தந்திரவுத்தி வகையானும் இலேசானும் நோக்கப் பலவகையாயும் முடிந்தது. இலேசு என்பது... ... ...யந்து கூறல். குறிப்பான் வெளிப்படுப்பது. (௨க)

வினைமுதல் கொண்டு முடியும் வினையெச்சங்கள்

௨௩௨. அவற்றுள்,
முதனிலை மூன்றும் வினைமுதன் முடிபின.

என் - எனின், அக்கூறப்பட்ட எச்சங்களுள் முதற்கணின்ற மூன்றற்கும் முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ — ள்.) மேற்கூறப்பட்ட வினையெச்ச வாய்பாடுகளுள் முதற்கண் எடுத்தோதப்பட்ட செய்து, செய்யூ, செய்பு என்னும் மூன்றும் அவ்வெச்சவினையை நிகழ்த்தின கருத்தாவினது வினையை யுணர்த்துஞ் சொல்லினையே பின்பு முடிபாகக் கொண்டு முடியும், (எ - று.)

(எ - டு.) உண்டுவந்தான், உண்ணூஉ வந்தான், உண்குபு வந்தான் எனவரும்.

செய்தெனெச்சத்தின் குறிப்பாகிய இன்றி, அன்றி யென்பனவும் 'தம்மின் றமையா நந்நயந் தருளி' (நற்-1) எனவும், 'தொல்லெழில் வரைத்தன்றி வயவுநோய் நலிதலின்' (கலி-19), எனவும் வினைமுதல் வினையாய் முடிந்தவாறு கண்டுகொள்க. (௯௨)

செய்து, செய்யூ, செய்பு என்பனவற்றிற்கு முடிபு

௨௩௩. அம்முக் கிளவியும் சினைவினை தோன்றின்
சினையொடு முடியா முதலொடு முடியினும்
வினையோ ரனைய என்மனார் புலவர்.

என் - எனின், இதுவும் அம் மூன்றன் திறத்துப்படுவதோர் முடிபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அம் மூன்று சொல்லும் சினைப்பொருளிடத்து வினையெச்சமாய்த் தோன்றின் முன் கூறின விதிக்கேற்பச் சினை

வினையான் முடியாது அச்சினையையுடைய முதல் வினையோடு ஒன்றாய் முடியினும், பிறவாற்றான் முடியினும் முன் கூறிய வினையோடு ஒன்றுதற்றன்மையை உடைய என்று சொல்லுவர் ஆசிரியர், (எ - று.)

(எ - டு.) கையிற்று வீழ்ந்தான், கையிறாஉ வீழ்ந்தான், கையிறுபு வீழ்ந்தான் எனவரும்.

மற்றிது கையிற வீழ்ந்தான் எனச் செயவெனெச்சத்திரிபாகற் பாற்றெனின், அவ்வாறாவது இறுதற்றொழில் கையதும் வீழ்தற்றொழில் முதலதுமாயின் அன்றே; இறுதலும், வீழ்தலும் கையதாகக் கூறுகின்றதாயின் அதனுள் அடங்காது என்பது. அதன் பொருள் கையிற்று வீழ்ந்தவாறாகக் கொள்க. காலமுறி வீழ்ந்தான் என்பதும் அது.

கையிற்றான், காலமுறினான் என்பன ஈண்டைக்கு உதாரணமாமோ எனின் அவை வினையெச்சமன்மையிற் "கண்ணுந் தோளும் முலையும் பிறவும்" (சொல்.௫௯) என்று ஆண்டைக்கே உதாரணமாமெனக் கொள்க. மற்று, கையிற்று வீழ்ந்தான், காலமுறி வீழ்ந்தான் என்பனவும் ஆண்டைத் திணை வழுவமைதிக்கு உதாரணமாதலின் ஈண்டைக் கூறவேண்டா எனின்; திணைவழுவுக்கு அன்று ஈண்டுக் கூறுகின்றது; அதற்கு விதி கண்ணுந்தோளும் என்பதே; ஈண்டு மேல் தன்வினையான் முடியும் என்று கூறியன ஒருவழித் தன்னோடு தொடர்ந்த பிறவினையானும் முடியும் என்பதாயிற்று.

"சினையொடு முடியா முதலொடு முடியினும் வினையோ ரனைய" என்பதனால் இதுவுமோர் மரபு வழுவமைதி எனக் கொள்க. குரங்கு கையிற்று வீழ்ந்ததென இம் முடிபு அஃறிணை வினைக்குங் கொள்க.

ஈண்டுச் சினை வினை முதல்வினையொடு முடியும் என்பதே சொல்லியதெனின், சாத்தனது கையிற்று வீழ்ந்தது என வினைமுடிபுள்ள வழியும் சாத்தனது கையிற்று வீழ்ந்தான் எனவுமாம் பிறவெனின், ஆகாது. அம்முதல் தானும் எழுவாயாகியவழியது இம்முடிபெனக் கொள்க.(௬௨)

ஒழிந்த வினையெச்சங்கள் இருவினையும் கொண்டு முடியும் என்பது

உ௩௪. ஏனை எச்சம் வினைமுத லானும்
ஆன்வந் தியையும் வினைநிலை யானும்
தாமியல் மருங்கின் முடியும் என்ப.

என் - எனின், ஒழிந்த எச்சங்கட்கு முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ - ள்.) முதனிலை மூன்றும் ஒழித்து, ஒழிந்த வினையெச்சங்களெல்லாம் அவ்வினைமுதல் வினையானும் அவ்விடத்து வந்து

பொருந்தும் பிறவினையானும் தாம் நடக்குமிடத்து முடிபுபெறும் என்று சொல்லுவர் ஆசிரியர், (எ - று.)

(எ - டு.) மழைபெய்தென வளம்பெற்றது, மழை பெய்தென உலக மார்ந்தது.

மழைபெய்யிய எழுந்தது, மழைபெய்யிய மாதவர் அருளினர்.

மழைபெய்யியர் எழுந்தது, மழைபெய்யியர் மாதவர் அருளினர்.

மழைபெய்யின் அறம் பெருகும், மழைபெய்யின் குளம் நிறையும்.

மழைபெய்ய எழுந்தது, மழைபெய்யக் குளம் நிறைந்தது.

மழைபெயற்கு எழுந்தது, மழைபெயற்கு மாதவர் அருளினர்.

சாத்தன் தான் உண்டபின் வந்தான், சாத்தன் உண்டபின் கொற்றன் வந்தான்.

சாத்தன்தான் உண்ணுமுன் வந்தான், சாத்தன் உண்ணுமுன் கொற்றன் வந்தான்.

சாத்தன்தான் உண்டக்கால் வரும், சாத்தன் உண்டக்கால் கொற்றன் வரும்.

சாத்தன் தான் உண்டக்கடை வரும், சாத்தன் உண்டக்கடை வரும் கொற்றன்.

சாத்தன் தான் உண்டவழிவரும், சாத்தன் உண்டவழிக் கொற்றன் வரும்.

சாத்தன் தான் உண்டவிடத்து வரும், சாத்தன்தான் உண்டவிடத்துக் கொற்றன் வரும்.

என இருவழியும் ஒட்டுக.

எடுத்தோதாத பிற வாய்பாட்டிற்கும் உண்பான் வந்தான், சாத்தன் உண்பான், கொற்றன் வந்தான் என்றாற்போல ஒட்டுக.

இவ்வெச்சங்களுள் குறிப்புள்ளவற்றிற்கும் இவ்வாறு கொள்க. (௩௪)

வினையெச்சங்கள் அடுக்கியபோது முடியுமாறு

உ௩௫. பன்முறை யானும் வினையெஞ்சு கிளவி
சொன்முறை முடியா தடுக்குந வரினும்
முன்னது முடிய முடியுமன் பொருளே.

என் - எனின், இவ்வெச்சங்களுள் எடுத்தடுக்கியவழிப் படுவதோர் முறைமை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) பலவாற்றானும் வினையெச்சமாகிய சொற்கள் ஒரு சொல்லொடு ஒரு சொல்லாய் முறை முடியாதே பலவாயடுக்கி வரினும், முன்னின்ற எச்சம் முடியவே அல்லாதனவும் பொருள் முடிந்தனவாம், (எ - று.)

(எ - டு.) உழுது உண்டு தின்று ஓடிப்பாடி வந்தான் எனவரும் உண்ணூஉ தின்னூஉ ஓடூஉப் பாடூஉ வந்தான் எனப் பிற எச்சங்களும் அடுக்கி வருவன கொள்க.

'பன்முறையானும்' என்றதனான் ஓரினத்து எச்சமே அன்றி, பல வினத்து எச்சங்களும் மயங்கி அடுக்குதலும் கொள்க.

(எ - டு.) உழுதுகிழுதண்பான், ஓடூஉ, பாடூஉ வந்தான் என்பன.

இனிச் சொல்முறை முடியாது அடுக்கிவரினும் என்று சொற்கண் முறை முடித்தடுக்கலும் உண்டு என்பது போதரக் கூறிய அதனான் சொற்கண் முறை முடித்தடுக்கி வரினும் முன்னது முடியவே முடியும்; முடியாக்கால் முடிந்தனவும் முடிந்திலவாம் என்பது கொள்க.

(எ - டு.) உழுது வந்தான் கிழுதுவந்தான், ஓடி வந்தான் பாடி வந்தான் என நின்றவழி முடியாதவாறு அறிந்துகொள்க.

ஒன்றென முடித்தல் என்பதனால் பெயரெச்சம் அடுக்கிய வழியும் முன்னது முடிய முடியும் என்பது கொள்க.

(எ - டு.) "நெல்லரியும் இருந்தொழுவர்" (புறம்-24) என்னும் புறப்பாட்டினுள் பாயுந்து எனவும், தூங்குந்து எனவும், தருஉந்து எனவும், பாயும் எனவும், கெழீஇய எனவும், அடுக்கிநின்ற பெயரெச்சம் எல்லாம் 'மிழலை' என்னும் பெயர்கொண்டு முடிந்ததாம் என்று உணர்க. (௩௭)

பெயரெச்சம்

௨௩௮. நிலனும் பொருளுங் காலமுங் கருவியும்
வினைமுதற் கிளவியும் வினையும் உளப்பட
அவ்வறு பொருட்குமோ ரன்ன உரிமைய
செய்யும்செய்த என்னும் சொல்லே.

என் - எனின், எஞ்சியகிளவி என்று எடுத்தவற்றுள் வினையெச்சம் உணர்த்திப் பெயரெச்சமாகிய செய்யும் செய்த என்பனவற்றிற்கு முடி புணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) நிலப்பொருட்பெயரும், செயப்படுபொருட்பெயரும் காலப்பொருட்பெயரும், கருவிப்பொருட்பெயரும், வினைமுதற்

பொருட்பெயரும், வினைப்பொருட்பெயருமாகச் சொல்லப்பட்ட அவ்வறுவகைப் பொருட்பெயர்க்கு ஒரு தன்மையான உரிமையினை யுடைய செய்யும், செய்த என்னும் இருவகைப்பட்ட சொல்லும், (எ - று.)

(எ - டு.) நிலம்: அவன் உண்ணும் இல்லம், அவள் உண்ணும் இல்லம், அவர் உண்ணும் இல்லம், அது உண்ணும் இல்லம், அவை உண்ணும் இல்லம் எனவரும்.

பொருள்: அவனுண்ணும் சோறு, அவளுண்ணும் சோறு, அவருண்ணும் சோறு, அது உண்ணும் சோறு, அவை உண்ணும் சோறு என வரும்.

காலம்: அவனுண்ணுங்காலை, அவளுண்ணுங்காலை, அவருண்ணுங் காலை, அதுவுண்ணுங்காலை, அவை யுண்ணுங் காலை எனவரும்.

கருவி: அவனெறியுங் கல், அவளெறியுங் கல், அவரெறியுங் கல், அது எறியும் கல், அவையெறியுங் கல் எனவரும்.

வினைமுதல்: உண்ணுமவன், உண்ணுமவள், உண்ணுமவர் உண்ணு, மது, உண்ணுமவை எனவரும்.

வினை: அவனுண்ணுமூண், அவளுண்ணுமூண், அவருண்ணுமூண் அதுவுண்ணுமூண், அவையுண்ணுமூண் எனவரும்.

இனி, செய்த என்பதற்கும் இவ்வாறே யான் உண்ட இல்லம், நீ உண்ட இல்லம், அவன் உண்ட இல்லம் என்றாற்போல மூன்று இடத்திற்கும் இவ்விடத்து வாய்பாட்டு விகற்பங்களும் அறிந்து ஒட்டிக்கொள்க.

ஈண்டுச் செய்யும் என்பது முற்றும் எச்சமும் என இருவீற்றதாகும் சிறப்புடைமையின் முற்கூறப்பட்டது.

மற்றுச் செய்யும் என்பது 'பல்லோர் படர்க்கை' என்புழிக் கூறிற்றாகலின் ஈண்டுக் கூறவேண்டா எனின், ஆண்டு முற்றாய நிலைமைக்குக் கூறியது; ஈண்டு அஃது எச்சமாகிய நிலைமைக்குக் கூறியது எனக் கொள்க. மற்று அது அவ்விருநிலைமையும் பெயரொடு முடிய மேல் அவ்வேறுபாடறியுமாறு என்னை எனின், முற்றாய்ப் பெயர்கொண்ட வழி மற்றோர் சொல் நோக்காது செப்பு முடியக்காற்போல அமைதருமாறும். எச்சமாய்ப் பெயர் கொண்டக்கால் அமையாது மற்றுமோர் சொல் நோக்கிற்றுப் போல நிற்கும் என்பது.

இனி முற்றாயவழி உண்ணும் என ஊன்றிநிற்போல நவிந்து சொல்லப்படும் என்றும், எச்சமாயவழி ஊன்றாது நெகிழ முடிபு சொல்லப்படும் என்றுங் கொள்க.

அஃதேல் "பல்லோர் படர்க்கை" என்புழிக் கூறியது முற்றிற்கு என்றும், ஈண்டுக் கூறியது எச்சத்திற்கு என்றும் பெறுமாறு என்னை எனின், ஈண்டுச் செய்த என்பதனோடு படுத்து முடிபு கூறினமையானும்,

ஆண்டு முற்றுயவழிக் கொள்ளாதனபற்றி விலக்கினமையானும் பெறுதும் என்பது.

மற்று, இம் முற்று நிலைமையையும் எச்சநிலைமையையும் இரண்டிரண்டாகப் பகுத்தோதாதது என்னை எனின், பொருள் வேற்றுமையல்லது வாய்பாட்டு வேற்றுமையின் மையின் கூறாராயினர் என்பது.

இவ் வறுவகைப் பெயருள்ளும் வினைமுதற்பெயரொழித்து ஒழிந்தவற்றிற்கெல்லாம் வினைமுதற்பெயர் முன்வந்தல்லது பொருள்முற்றாது என்பதூஉம், வினைமுதற்பெயர் வருவழிப் பின்னின்ற எச்சத்தோடு எழுவாயாய் இயைகின்றதோ, பிறவேற்றுமையா யியைகின்றதோ என்னும் விகற்பமும், ஈண்டு வினைமுதற்பெயரேயன்றிப் பிறபெயரோடு முடிபாதற்குக் காரணம் 'வினையே செய்வது' என வினையிலக்கணம் கூறியவழி வினைச்சொற் குறிப்பாய்ப் பிற பெயரும் புக்கமையாது என்பதூஉம், அவ்வெட்டனுள் கடைக்கண் இரண்டும் ஒழிய மற்றை ஆறும் ஈண்டோதப்பட்டன என்பதூஉம் அறிந்து கொள்க.

யான் ஆடை ஒலிக்கும் இல்லம், ஆடை ஒலித்த கூலி என்றாற்போல்வன முடியுமாறு என்னை எனின், அவ்வினையிலக்கணத்துள் இன்வதற்கு இது பயன் என்னும் அவ்விரண்டெனப் பெயர் வகையாகலின் தன்னின முடித்தல் என்பதனாற் கொள்ளப்படும் என்பது.

"மற்றிந்நோய் தீரும் மருந்தருளாய் ஒண்டொடீ" எனவும், "நின் முகங் காணு மருந்தினேன் என்னுமால்" (கலித் 60) எனவும் வருவன வாமாறு என்னை எனின், தீரும் மருந்து என்பது தீர்தற்குக் காரணமாகிய மருந்து என்றவாறு. காண்டல் காரணமாக அதன் காரியமாகப் பிறந்த மருந்தாதற்றன்மைய என்றவாறு.

இவ்வாறு காரணப்பெயருங் காரியப் பெயருமாய் வருவன அவ்விலக்கணம் எட்டனுள்ளும் அடங்காமையின் ஒன்றென முடித்தல் என்பதனாற் கொள்ளப்படும்.

யான் செல்லும் ஊர், யான் போந்த ஊர் என்பன நிலப்பெயருள் அடங்கும்.

'ஊர்களிறு மிதித்த நீர்' எனவும், 'நூலாக் கலிங்கம்' எனவும், 'என்னாட்டின எண்ணெய்' எனவும், உண்ட எச்சில் எனவும் வருவன செயப்படுபொருளின் விகற்பமாக்கி அதனுள் அடக்கிக்கொள்க.

இவ்வாறு வரும் பிறபெயர் விகற்பங்களும் அறிந்து அடக்கிக் கொள்க.

அவையாவன தேரோடும் புறம், 'குண்டுசுனை பூத்த வண்டுபடு கண்ணி' (திருமுரு:199) என்றாற்போல்வன.

இனிச் செய்யும் என்பது செய்யா நிற்கும் எனவும், செய்த என்பது செய்யாநின்ற எனவும் வரும் வாய்பாட்டு வேற்றுமையும் தன்னினமுடித்தல் என்பதனாற்கொள்க.

இனிச் செய்த என்பதன் குறிப்பாய் இன்ன அன்ன என்ன எனவும் கரியசெய்ய எனவும் வரும்; இவையும் அதனாற்கொள்க. (௩௬)

செய்யும் என்பதற்கு ஓர் முடிபு

உ௩எ. அவற்றொடு வருவழிச் *செய்யுமென் கிளவி
முதற்கண் வரைந்த மூவீற் றும் உரித்தே.

என் - எனின், செய்யும் என்பதற்கு இன்னும் முடிபு வேற்றுமை கூறுதல் நுதலிற்று.

(இ - ள்.) மேற்கூறிய அறுவகைப் பெயரோடு முடிந்துவருமிடத்துச் செய்யும் என்னும் சொல் முன் "பல்லோர் படர்க்கை" (சொல் - 229) என்றதற்கண் வரையப்பட்ட மூன்று கூற்றின் கண்ணும் உரிமையுடைத்து, (எ - று.)

மூன்று கூற்றாவன பல்லோர் படர்க்கையும், முன்னிலையும் தன்மையும்.

அவையாவன : அவருண்ணும் இல்லம், அவருண்ணும் சோறு, அவர் ஓதுங்காலை, அவர் எறியுங் கல், உண்ணுமவர் வந்தார், அவருண்ணும் ஊண் - இவை பல்லோர் படர்க்கை.

நீ யுண்ணும் இல்லம், நீயிர் உண்ணும் இல்லம், நீ உண்ணும் சோறு, நீயிர் உண்ணும் சோறு, நீ ஓதுங் காலை, நீயிர் ஓதுங் காலை, நீ எறியுங் கல், நீயிர் எறியுங் கல், உண்ணும் நீ வந்தாய், உண்ணு நீயிர் வந்தீர், நீ உண்ணுமூண், நீயிர் உண்ணுமூண் - இவை முன்னிலை.

யானுண்ணும் இல்லம், யாமுண்ணும் இல்லம், நாம் உண்ணும் இல்லம், யானுண்ணும் சோறு, யாம் உண்ணும் சோறு, நாம் உண்ணும் சோறு, யானுண்ணுங்காலை, யாமுண்ணுங்காலை, நாமுண்ணுங்காலை, யானெறியுங் கல், யாமெறியுங் கல், நாமெறியுங் கல், உண்ணும்யான் வந்தேன், உண்ணும்யாம் வந்தோம், உண்ணும் நாம் வந்தோம், யானுண்ணுமூண், யாமுண்ணுமூண், நாமுண்ணுமூண் - இவை தன்மை.

யானும் நீயும் உண்ணுமில்லம், யானுமவனும் உண்ணுமில்லம், யானும் நீயும் அவனும் உண்ணுமில்லம் என்றாற்போல வரும் வாய்பாடும் ஒட்டிக்கொள்க.

இதனாற் சொல்லியது, செய்யும் என்பதற்கு முற்றாயவழி விலக்கிய இடங்கள் எச்சமாயவழி வரும் என இறந்தது காத்ததாயிற்று. (௩எ)

* 'செய்யும் கிளவி' என்பது தெய்வச்சிலையார் பாடம்.

இவ்விருகை எச்சமும் எதிர்மறுத்து மொழியினும் பொருள்நிலை திரியா எனல்

உகஅ. பெயரெஞ்சு கிளவியும் வினையெஞ்சு கிளவியும்
எதிர்மறுத்து மொழியினும் பொருணிலை
[திரியா.

என் - எனின், பெயரெச்சமும் வினையெச்சமும் தனித்தனி முடியு மாறு கூறிவிட்டு, இனி அவ்விரண்டற்கும் உடனெய்துவது ஓரிலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) பெயரெச்சமாகிய சொல்லும், வினையெச்சமாகிய சொல்லும் தொழிலினை எதிர்மறுத்துச் சொன்னவிடத்தும் அவ்வச் சொல்லாதற்பொருண்மை நிலையில் வேறுபடா, (எ - று.)

(எ - டு.) உண்ணும் சாத்தன் என்பது உண்ணாச் சாத்தன் என வரும். செய்த என்பதற்கு இதுவே மறை. கரியசாத்தற்குச் செய்ய சாத்தன் எனவும், நல்ல சாத்தற்குப் பொல்லாச் சாத்தன் எனவும், தீய சாத்தன் எனவும் வரும். பெயரெச்சக் குறிப்பு மறைவிகற்பமும் அறிக. இம்மறைக்கண் உண்ணாச்சாத்தன் என ஆகார ஈறுயே நிற்கும். இவை பெயரெச்சம்.

இனி, வினையெச்சம் உண்டுவந்தான் என்பது, உண்ணாது வந்தான் எனவரும். இவ்வெச்சம் சோறு உண்டாயிருந்தது எனவும், சோறு ஆவதாயிருந்தது எனவும் ஓர் சொல்லடுத்தபோது சோறின்றி எனவும் வேறு குறிப்பு வாய்பாட்டதாம் எனக் கொள்க. செய்யூ, செய்பு என்பன வற்றிற்கும் இதுவே மறை.

இனிச் செய்தென என்பது முதல்வினையோடு முடிந்தவழி இம்மறை யானே வரும். மழை பெய்தென மரங்குழைத்தது எனப் பிறவினையாய வழிச் செய்தென் எச்சத்து எதிர்மறையே தனக்கு மறையாய், மழைபெய் யாமல் மரங்குழையாதாயிற்று எனவரும்.

இனிச் செய்யியர் செய்யிய என்பன இரண்டற்கு மறைபடுவழித் தன்வினை பிறவினை என்னும் இரு வழியுஞ் செயவென்னெச்சத்தின் மறையானே முடியும். மழைபெய்யாமல் எழுந்தது, மழைபெய்யாமல் மரம் குழையாதாயிற்று. இனிச் செய்யிய என்பதற்கும் இவ்வாறே கொள்க.

செயின் என்பதற்குச் சொற்றன்றன் மறையின்றி மழை பெய்யா விடின் அறம்பெறாது, மழைபெய்யாவிடின் மரங் குழையாது எனப் பிற சொல்லானே மறையாய் வரும் போலும்.

உண்ண என்பதற்கு உண்ணுமல் எனவும், உண்ணுமை எனவும், அல்லும் ஐயும் என இரு ஈற்றதாம். உண்ணுமே என்பதோ எனின், அதுவும் மரூஉ என்க. இனிப் பெரிய ஓதினும் என்பதற்குச் சிறிய ஓதினும் எனவரும் குறிப்பு மறை விகற்பமும் அறிக. செயற்கு என்ப தற்கு உணற்கு வந்தான், உண்ணுமல் வந்தான் என இதன் மறையே மறையெனக் கொள்க. உண்ணுதொழிவான் எனப் பிற வாய்பா டாயும் வரும்.

இனிப் பின் என்பது உண்ணுதபின் என வரும். முன் என்பது உண் ணுதமுன் எனவரும்.

கால் என்பது உண்ணுக்கால் எனவரும்.

கடை என்பது உண்ணுக்கடை எனவும், வழி என்பது உண்ணுதவழி எனவும், இடத்து என்பது உண்ணுதவிடத்து எனவும் வரும்.

பான், பாக்கு என்ருற்போல்வன உண்ணுதொழிவான் என்ருற் போல வேறுவாய்பாட்டாய் வரும். மற்று மறை விகற்பமுள்ளனவும் அறிந்துகொள்க.

இதனுல் சொல்லியது இவ்வாறு பெயரெச்சமும் வினையெச்சமும் எதிர்மறுத்துவரும் என்பது போதரக் கூறினமையின் அதனுள் அடங்கிற் றென்பது .... வழியும் பெயரெச்சம் எனப்படுதலும் பெயரோடு முடிதலுடைய என்ருயிற்று.

அஃதேல் முற்றுச்சொன் மறுத்தவழியும் முற்றென்பது எற்ருற் பெறுதும் எனின், வேற்றுமையிலக்கணத்துள் 'எதிர்மறுத்து மொழி யினும்' என்பதனுள் அவ்வேற்றுமையினை எதிர்மறுத்துவரும் என்பது போதரக்கூறினமையின் அடங்கிற்றென்பது. மற்று இவ்வெச்சமும் அதன்பால் அடங்காதோ எனின், எடுத்தோத் தில்வழியது இலேசும் உத்தியும் என்க.

அஃறிணை வினையுள் 'அ ஆ' என்று ஆகாரவீற்றை ஓதினமையானும் மறையுமாம் என்பது பெறுதும்.

முற்றுச்சொல் எதிர்மறுத்தவழி உண்டான் என்பதற்கு உண்ணுன் என ஈறு வேறுபடாது வருதலானும் உண்ணுமுன் என்பதற்கு உண்ணுத முன் என்றும், உண்ண என்பதற்கு உண்ணுமல் என்றும் எச்சங்கள் ஈறு வேறுபட்டுவருதலானும் அவை இயல்பு என்று விகாரமுடைமையின் இவ்வெச்சங்களை எடுத்து ஓதினர் என்றலும் ஒன்று. முற்றுச்சொன் மறைவிகற்பமெல்லாம் அவ்விற்றுள்ளே காட்டியவாறு கண்டுகொள்க.

இனிச் செய்யும் என்பது முற்றுயவழி அதன் எதிர்மறை ஆண்டுக் கூறும் உயர்திணை அஃறிணைப்பன்மைமேல் வினையாய் உண்ணும் அவன் என்பதற்கு உண்ணுவவன் எனவும், உண்ணும் அது என்பதற்கு உண்ணு தது எனவும் வரும் என்று அறிக.

மற்று இவ்விரவுவினை வினைமுற்றாய் அவற்றில் தனக்கேற்ற வினையில்லன ஆண்டுணர்த்தும் உயர்திணை அஃறிணை வினையான் மறைபடுமாறறிந்துகொள்க. (கஅ)

இடைப்பிறவரல்

உகக. தத்தம் எச்சமொடு சிவணுங் குறிப்பின்
எச்சொல் லாயினும் இடைநிலை வரையார்.

என் - எனின், இதுவும் அவ்வெச்சங்களிடை நிகழும் முடிபு வேற்றுமை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) முன் கூறிய பெயரெச்சமும் வினையெச்சமும் தத்தம் எச்சமாகிய பெயரொடும் வினையொடும் பொருள் இயையும் கருத்தினையுடைய பெயர் முதலிய எவ்வகைச் சொல்லாயினும் அம் முடிதற்கு இடை நிற்றலை நீக்கார் ஆசிரியர் எனவே கொள்வர் என்றவாறு.

வரையார் என்றமையின் இதுவும் ஓர் மரபு வழுவமைதி நீர்மைத்து என்பது போந்தது.

சிவணுங் குறிப்பு என்றமையின் சிவணாக்குறிப்பின வரையப்படும் என்பது.

(எ - டு.) அடுஞ்செந்நெற்சோறு அட்டசெந்நெற்சோறு எனவரும். இவை பெயரெச்சம்.

"உப்பின்று புற்கையுண்கமா, கொற்கை யோனே" என்பது வினையெச்சம்.

சிவணாக்குறிப்பினது வல்லமெறிந்த நல்லிளங் கோசர் தந்தை மல்லல் யானைப் பெருவழுதி என்பது.

இனி ஒன்றெனமுடித்தல் என்பதனான் உண்டான் பசித்த சாத்தன் என்றாற் போல வரும் முற்று இடைக் கிடப்புங்கொள்க. (கக)

செய்யும் என்னும் சொல் ஈறு கெடுமாறு

உசய. அவற்றுள்,
செய்யும் என்னும் பெயரெஞ்சு கிளவிக்கு
மெய்யொடும் கெடுமே ஈற்றுமிசை உகரம்
அவ்விடன் அறிதல் என்மனார் புலவர்.

என் - எனின், இவ்வெச்சங்களுள் செய்யும் என்னும் பெயரெச்சத்திற்கு ஈறு வேறுபட்டுக் கெடுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மேற்கூறிய எச்சங்களுள் செய்யுமென்னும் பெயரெச்சத்திற்கு ஈற்றின்மேல் நின்ற உகரம் தன்னால் பற்றப்பட்ட மெய்யொடும் கெட்டு முடியும். அவ்வாறு கெடும் இடங்களை அறிக என்று சொல்லுவர் புலவர், (எ - று.)

(எ - டு.) வாவும் புரவி வழுதி, யான் போகும் புழை என்பன வாம்புரவி, போம்புழை எனவரும்.

இனி உருவு திரை என்றாற்போல ஈறுதான் கெடுவனவும் உளவா லெனின், அது வினைத்தொகை என மறுக்க.

''சாரல்நாட என் தோழியுங் கலுழ்மே'' என அவ்வுகரந் தானேறிய மெய்யொழியக் கெட்டவிடம் உளவால் எனின், 'அவ்விடனறிதல்' என்ற மிகைவாய்பாட்டான் ஓரோவழி மெய்யொழியக் கெடுதலும் உண்டு என்பது கொள்ளப்படும்.

இனிச் 'செய்யும் என்னும் பெயரெஞ்சு கிளவிக்கு' என்றாரன்றே; மற்று அது, 'அம்பலூரும் அவனொடு மொழிமே' (அகம் - 51) என முற்றாயவழியும் வந்ததாலெனின் அதனையும் இவ்விலேசினாற்கோடலும் ஒன்று. இதனையும் உதாரணமாகக் கூறியது உரையிற் கோடலால் என்றலும் ஒன்று.

இனி வாவும் புரவி என உகரங் கெடாது வருதற்கு விதி யாதெனின் ''மெய்யொடுங் கெடும்'' என்ற உம்மை எதிர்மறையாகலான் மெய்யொடுங் கெடாது நிற்றல் பெரும்பான்மை என்பதூஉம் பெறப்படும். ஏற்புழிக் கோடல் என்பதனான் ஆடுநாகம் என்றாற்போல்வுழிக் கெடாமையும் கொள்க. (சo)

செய்தென்னும் வினையெச்சத்துக்கண் வரும் காலமயக்கம்

உசக. செய்தென் எச்சத் திறந்த காலம்
எய்திடன் உடைத்தே வாராக் காலம்.

என் - எனின், செய்தென்னும் வினையெச்சத்துக் காலமயக்கம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) இறந்தகாலத்தையுடைய செய்தென்னும் வினையெச்சம் தன்னிறந்தகாலத்தினை நோக்க வாராதனவாகிய இயல்பினையுடைய எதிர்காலத்தினையும் நிகழ்காலத்தினையும் பொருந்தும் கூற்றினையுடையது, (எ - று.)

இறந்தகாலத்துச் செய்தெனெச்சம் என மொழிமாற்றிக் கொள்க. *கிடந்தவாறும் வாராக்காலம் என நிகழ்காலமும் அடங்கிற்று.

* இத்தொடர் சிதைந்துள்ளது.

(எ - டு.) உழுது வருவான் சாத்தன் என்பது. இது வருவான் என்னும் எதிர்காலவினை கொண்டமையான் முன் உழுது என நின்ற இறந்தகாலம் உழுவது மேல் என எதிர்காலத்தாயிற்று. கொடியாடித் தோன்றும் என்பது அத்தோற்றமும் ஆட்டமும் உடனிகழ்தலான் நிகழ்காலமாயிற்று.

ஒன்றென முடித்தல் என்பதனான் செய்யூ, செய்பு என்பனவற்றிற்கும் இவ்வாறே மயக்கங் கொள்க. மற்றும் அவ்வினையெச்சவாய்பாடுள்ளும் காலம் மயங்குவன உளவேல் அவையும் இவ்வாற்றானே கொள்க.

இச்சூத்திரம் காலவழுவமைதி. இது ஒரு சொன்மயக்கம். (சக)

நிகழ்காலச்சொல் ஏனைக்காலங்களையும் உணர்த்தல்

உசஉ. முந்நிலைக் காலமுந் தோன்றும் இயற்கை
எம்முறைச் சொல்லும் நிகழும் காலத்து
மெய்ந்நிலைப் பொதுச்சொல் கிளத்தல் [வேண்டும்.

என் - எனின், எல்லாவினைச்சொற்களும் பொருளது உண்மையியற்கை கூறும்வழிச் செய்யும் என்னும் வினைச்சொல்லொடு காலம் மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மூன்றுவகைப்பட்ட நிலைமையினையுடைய காலத்தும் தோன்றும் இயல்பினையுடைய எவ்வகைப்பட்ட பொருளையும் நிகழ்காலத்தினைத் தனக்குக் காலமாகவுடைய பிறகாலத்தினையும் பொதியும் பொருள் நிலைமையினையுடைய செய்யும் என்னும் சொல்லினால் சொல்லுதலை விரும்பும் ஆசிரியன், (எ - று.)

(எ - டு.) மலை நிற்கும், யாறு ஒழுகும், தீச்சுடும் என்னும் இவை.

தீ எத்தன்மைத்தென்றால் அதன்றன்மை எக்காலத்தும் உளவாதலிற் பண்டு சுட்டது இன்றுஞ் சுடுகின்றது மேலுஞ் சுடுவது என மூன்று காலத்தானும் கூறவேண்டுவதனை நிகழ்காலத்தால் சொல்ல அவையெல்லாம் கூறியவாறாயிற்று எனக்கொள்க.

"முந்நிலைக் காலமும் தோன்றுமியற்கை எம்முறைச்சொல்" என்றமையான் ஒருபொருள் ஒருகாலத்தொழிலன்றி எக்காலத்தும் நிகழும் தொழிலியல்பு கூறும் வழியது இம்மயக்கம் எனக் கொள்க.

சொல் என்றதற்குப் பெயர்ப்பொருளை என்க. இனிச் சொல்லெனினும் படும். மெய்ந்நிலை என்றதனாற் பின் நிகழ்காலச் சொல்லோடு ஒவ்வாது மூன்று காலத்தையும் பொதியும் நிலைமையது இச்செய்யுமென்னும் சொல் என்பது பெறப்பட்டது. இதுவும் காலமயக்கவமைதி.

ஈண்டு மயங்கியது எச்சொல்லோ எனின், நெருப்புச்சுடும் என்றவழி சுட்டது, சுடாநின்றது, சுடுவது என்று மூன்றுகாலச் சொல்லும் செய்யும் என்பதனுல் சொல்லப்படுதலின் அவை மயங்கின எனப்படும். இச்சுடு மென்ற சொற்றானும் தன் நிகழ்காலத்ததாய் நிற்றலைவிட்டு ஒரு சொல்லு தற்கண்ணே மூன்று காலமும் பட நிற்றலின் அதுவும் மயங்கிற்று எனப் படும். இஃது ஒரு சொன்மயக்கம். (சஉ)

விரைவுப்பொருளில் காலம் மயங்கல்

உசங. வாராக் காலத்தும் நிகழுங் காலத்தும்
ஓராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி
இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்
விரைந்த பொருள என்மனார் புலவர்.*

என் - எனின், வினைச்சொல் எல்லாவற்றானும் விரைவுப்பொருட்கண் எதிர்காலமும் நிகழ்காலமும் இறந்தகாலத்தொடு மயங்குமாறு உணர்த்து தல் நுதலிற்று.

(இ - ள்.) எதிர்காலத்தும் நிகழ்காலத்தும் ஒருபடியாக வருகின்ற வினைச்சொல்லாகிய சொல்லின் பொருண்மையை இறந்த காலமாகக் கருதிக் கூறுதல் விரைவுப் பொருண்மை உடைய என்று சொல்லுவர் புலவர், (எ - று.)

(எ - டு.) ஒருவனை ஒருவன் ஓர் குறைபொருட்டால் இன்னும் உண்டிலையோ போதாயோ என்புழி, உண்பேன், போதுவேன் எனற் பாலதனை, உண்டேன் போந்தேன் என்னும். இனி உண்கின்றானைக் கேட்பினும் உண்ணாநின்றேன் போதுவல் என்னாது உண்டேன், போந் தேன் என்னும்.

இவை அமைதற்குக் காரணம் செய்யாததனைச் செய்ததாக்கித் தன் விரைவு தோன்றக் கூறும் கருத்தினன் ஆதலின் என்பது. இதுவும் சொல் லொடு சொன்மயக்கம். இஃது எல்லாச்சொன்மேலும் கொள்க. (சங)

சிறப்புப் பொருட்கண் காலம் மயங்கல்

உசச. மிக்கதன் மருங்கின் வினைச்சொற் சுட்டி
அப்பண்பு குறித்த வினைமுதற் கிளவி
செய்வ தில்வழி நிகழும் காலத்து
மெய்பெறத் தோன்றும் பொருட்டா கும்மே.

---

* 'மலர்மிசை ஏகினான்' என்னும் திருக்குறளில் இந் நூற்பாவினை இலக்கணமாக எடுத்துக்காட்டுவர் பரிமேலழகர்.

என் - எனின், வினைச்சொல் எல்லாவற்றினும் நன்மையானும் தீமை யானும் மிக்கதோர் பொருட்கண் ஒருவன் செய்தி கூறுமிடத்து எதிர் காலம் இறந்த காலத்தொடும் நிகழ்காலத்தொடும் மயங்குமாறு உணர்த் துதல் நுதலிற்று.

(இ - ள்.) உலகத்து ஒருவழி நன்மையானும் ஒருவழித் தீமையானும் தவஞ்செய்தல், தாய்க்கொலை என்பன மிக்க தொழி லிடத்துவரும் தவஞ்செய்வான், தாயைக் கொல்வான் என்னும் வினைப்பெயர்ச்சொல்லால் ஒருவன் தன்னை வேறுகூறுதலைக் குறித்த வினைப்பெயர்க்கு முடிபாக அம்மிக்க வினைப்பயனாகிய சுவர்க்கம் புகுதலும், நிரயம் புகுதலும் என்னும் பண்பினை மேல் வரும் சுவர்க்கம் புகுவன், நிரயம் புகுவன் என்னும் சொற்களால் தன்னைச் சொல்லுதலையும் குறித்த அவ்வினை முதலாகிய பொருள் தான் மிக அத்தொழிலினைச் செய்யா திருந்த நிலைமைக்கண்ணே அத்தொழிலைச் செய்து தன்பயனை உறுகின்றானைக் கண்டான் போல ஒருவன் தவஞ்செய்தான் சுவர்க்கம் புகும், தாயைக் கொன் றான் நிரயம் புகும் எனச் சொல்ல நிகழ்காலத்தின்கண்ணே உண்மை பெறத் தோன்றும் பொருண்மையினை யுடைத்தாம், (எ - று.)

(எ - டு.) தவஞ்செய்தான் சுவர்க்கம் புகும், தாயைக் கொன்றான் நிரயம் புகும் என முன் கண்ணழிவுள் வந்தனவே எனக்கொள்க.

இதனாற் சொல்லியது இவ்வினை செய்வான் மேல் இவ்வினை எய்தும் என்னும் பொருண்மை. இவ்வினை செய்து, பின்னை இவ்வினை செய்கின் றான் எனக் காலம் மயங்கவரும் என்பது கூறக் கருதினான் கூறியவாறாக்கி இதற்கேற்பச் சொன்னிலை யறிந்து பகுத்துக் கொள்க.

ஒன்றென முடித்தல் என்பதனால் அறஞ் செய்தான் சுவர்க்கம்புக் கான் என இரண்டுவினையும் இறந்தகாலத்தாற் கூறுதலும், அறஞ் செய்யாநிற்கும் அவன் சுவர்க்கம் புகுவன் என நிகழ்காலம் ஒன்றனையும் மயங்கக்கூறுதலும் மற்றுள்ளதுங்கொள்க.

'நிகழுங்காலத்து மெய்பெறத் தோன்றும்' என்றதனால் சுவர்க்கம் புகுவான் என்றது சுவர்க்கம் புகும் என்பதன்றி அறஞ்செய்வான் என்பதனை அறஞ்செய்தான் எனக் கூறுதல் சூத்திரத்துப் பெற்றிலமால் எனின், அது முன்னின்ற சூத்திரத்துள் அப்பொருளினைக் கூறும் இலக் கண வாய்பாடு இது என நிறுத்தின அதிகாரவாற்றலாற் பெறவைத்தார் போலும்.

மற்றும், முன் இவ்வினை செய்வான் இவ்வினை செய்யும் என்பது படச் செய்த தில்லாமை தோன்றக் கூறிவைத்துப் பின்னையும் செய்வதில் வழி என்றது என்னை எனின், அங்ஙனம் செய்வானாய் முன்னின்றவன்

பின்னையதனைச் செய்தவழிக் கூறுதலும் ஒன்றுண்டாதலின் அதுநீக்கிய கூறினார் போலும். அதுவும் சொல்லொடு சொன்மயக்கம். (சச)

ஒருவினை இருபொருள் படுமாறு

உசரு. இதுசெயல் வேண்டும் என்னுங் கிளவி
இருவயி னிலையும் பொருட்டா கும்மே
தன்பா லானும் பிறன்பா லானும்.

என் - எனின், இது வினைமுற்றுச் சொல்லது பொருள் படுநிலைமை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) இக்காரியத்தினைச் செய்தல் வேண்டும் என்று சொல்லப்படும் முற்றுச்சொல் இரண்டிடத்து நிலைபெறும் பொருண்மை உடைத்தாகும். அவை இரண்டிடமும் யாவை யெனின் அக்காரியத்தைச் செய்வான் தன்னிடத்தும் அவன் செய்தலை வேண்டியிருப்பான் பிறனொருவனிடத்தும், (எ - று.)

(எ - டு.) சாத்தன் ஓதல்வேண்டும் என்பது.

இதனுள் வேண்டும் என்னும் முற்றுச்சொல் ஒருவழிச் சாத்தன் என்பது எழுவாயாய், வேண்டும் என்னும் பயனிலையோடு முடிந்தவழி அது வேண்டுதல் சாத்தனதாயும், சாத்தன் என்னும் எழுவாய் ஓதலென் னும் சொல்லோடு முடிந்தவழி, இவன் ஓதவேண்டியிருக்கும் தந்தை யெனப் பிறர்மேலதாயும் நின்றவாறு அறிந்துகொள்க.

இதனாற் சொல்லியது சொற்பொருள் உணர்த்தும்வழி இயல்பால் தானுணர்த்துவதனை யொழிய அடைசொற்களாற் பிறவழியும் நோக்கும் எனக் காலவழுவமைதிக்கிடையே இதுவும் ஓர் மரபு வழுவமைதி என்பது கூறியவாறாயிற்று. (சரு)

வற்புறுத்தற்கு வரும் வினாச்சொல் எதிர்மறைப்பொருளும் படல்

உசசு. வன்புற வரூஉம் வினாவுடை வினைச்சொல்
எதிர்மறுத் துணர்த்துதற் குரிமையும்
[உடைத்தே.

என் - எனின், இதுவும் வினைச்சொல்லது பொருள்படும் வேற்றுமை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஒருவன் ஒரு தொழிலினைச் செய்தானாகத் தன்னை ஒருவன் மனங் கொண்டிருந்தவழி தான் அது செய்யாமை அவன் மனத்து வலியுற வேண்டி அது செய்திலேன் என எதிர்மறைப்

பொருட்கண் வருகின்ற விஞவினையுடைய வினைச்சொல், அவ்வாறு தான் அது செய்யாமை உணர்த்துதற்கு நின்ற நிலைமை எதிர்மறுத்துத் தான் அது செய்தானுக உடன்பட்டமை அவற்கு உணர்த்துதற்கு உரிமையினையும் உடைத்து, (எ - று.)

(எ - டு.) கதத்தானுதல் களியானுதல் மயங்கி இன்னுங் குரைத்துப் பின் தெருண்டவழி, அவ்வின்னுங்கு உரைக்கப்பட்டான், 'நீ என்னை வைதாய்' என்றக்கால், 'யான் வைதேனோ' எனத் தான் வையாமையை வலியுறுத்தற்குக் கூறி அதுதானே 'அப்பொழுது வைதேன் ; நோகாதே' என்று நேர்ந்தமை பட நிற்கும் என்பது.

உம்மை எதிர்மறையாகலான் மறுத்தல் பெரும்பான்மை; நேர்தல் சிறுபான்மையெனக் கொள்க.

இவ்வாறு பொருளுணர்த்துகின்ற தொடர்க்கண் விஞ விடைச் சொல்லாகலான் அஃதாண்டைக்காராய்ச்சி யன்றோ எனின், அச்சொல் லெடுப்பானே வைதேன் என்னும் உடன்பாட்டு வினைச்சொல் வைதேனோ என ஒருவழி வைதிலேன் என்னும் எதிர்மறைப் பொருள் பெரும் பான்மையாயும், ஒருவழி அம்மறைநிலையை விட்டுத் தன்னுடம்பாட்டுப் பொருண்மை சிறுபான்மையாயும் நின்றமையான் ஈண்டைக்கும் ஒரு வழுஉவமைதி ஆராய்ச்சித்தாயிற்று என்பது. (௪௬)

இயற்கையிலும் தெளிவிலும் காலம் மயங்கல்

௨௪௭. வாராக் காலத்து வினைச்சொற் கிளவி
இறப்பினும் நிகழ்வினும் சிறப்பத் தோன்றும்
இயற்கையும் தெளிவும் கிளக்கும் காலை.

என் - எனின், இயற்கை தெளிவு என்னும் பொருட்கண் எதிர் காலம், இறந்தகாலத்தோடும் நிகழ்காலத்தோடும் மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) வாராக்காலமாகிய எதிர்காலத்துப் பிறக்கும் வினைச்சொல்லாகிய சொல்லின் பொருண்மை இறப்புக்காலச் சொல்லானும் நிகழ்காலச் சொல்லானும் மிகத் தோன்றும்; யாண்டு எனின், ஒன்றனது இயற்கையினையும் ஒன்றனது தெளிவினையும் ஒருவன் சொல்லுங்காலத்து, (எ - று.)

இயற்கை என்பது, வழங்குங்கால் தான் ஒன்றனை இஃது இப்பெற்றியதாகும் என்று அறிந்திருந்த இயல்பு, (எ - று.)

தெளிவு என்பது, ஒரு நூல்நெறியான் இது நிகழும் எனக் கண்டு வைத்துத் துணிதல், (எ - று.)

(எ - டு.) இக்காட்டுள்போகின் கூறை கோட்படுவான் என்றது, இக்காட்டில் புகின் கூறை கோட்பட்டான் எனவும், கூறை கோட்படுகிறான் எனவும் கூறுதல்; இஃது இயற்கை.

எறும்பு முட்டைகொண்டு தெற்றி ஏறுவது கண்டுழி மழை பெய்வதாம் என்றது பெய்தது எனவும், பெய்கின்றது எனவும் கூறுதல்; இது தெளிவு.

இதுவுஞ் சொல்லொடு சொன்மயக்கம். (சஎ)

செயப்படுபொருளைச் செய்ததாகக் கூறுதல்

உசஅ. செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கியன் மரபே.*

என் - எனின், இதுவும் வினைச்சொற்கண் நிகழும் மரபு வழூஉ வமைதி கூறுதல் நுதலிற்று.

(இ - ள்.) பிறிதொன்றனான் ஒருதொழில் செய்யப்படுவதாகிய பொருளினைத் தான் அத்தொழிலினைச் செய்ததுபோல அத்தொழில் அதன்மேற்படக் கூறுதலும் வழக்கின்கண்ணே நடக்கும் முறைமை உடையதாம், (எ - று.)

(எ - டு.) இல்லம் மெழுகிற்று, சோறு அட்டது எனவரும்.

இனி ஒன்றெனமுடித்தல் என்பதனால் இவ்வாள் எறியும், இச்சுரிகை குத்தும் எனச் செய்தற்கு உடனாகிய கருவியைத் தான் செய்ததாகச் சொல்லுவதும், அரசன் எடுத்த ஆலயம் என்றாற்போல ஏவினானைக் கருத்தாவாகச் சொல்லுவதும் அமைத்துக்கொள்ளப்படும். எனவே, கருத்தாக் கருத்தாவும், ஏதுக் கருத்தாவும், கருவிக் கருத்தாவும், கரும கருத்தாவும் என நான்கு வகைப்படூஉம் என்பதும், அவற்றுள் இது கரும கருத்தா என்பதும் பெறப்பட்டது.

இன்னும் இதனானே உண்டல், தின்றல் என்னுந்தொழில் தன்னையும் உண்டது, தின்றது என்று கருத்தாவினைப்போலக் கூறும் வாய்பாடும் கொள்க. (சஅ)

இறந்த காலம் எதிர்காலத்தோடு மயங்கல்

உசகூ. இறப்பே எதிர்வே ஆயிரு காலமும்
சிறப்பத் தோன்றும் மயங்குமொழிக் கிளவி.

* "செயப்படுபொருளைச் செய்தது போலத், தொழிற்படக் கிளத்தலும் வழக்கினுள் உரித்தே" (பொது - 49) என்பது இதனைத் தழுவிய நன்னூற் சூத்திரம்.

என் - எனின், மேற்கூறிய கால மயக்கம் போல ஒரு பொருண்மையைக் குறியாது பல பொருட்கண்ணும் மயங்குவனவற்றுள், இறந்த காலம் எதிர்காலத்தோடு மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) இறப்பும் எதிர்வும் என்று சொல்லப்பட்ட அவ்விருகாலமும் மயங்குஞ் சொல்லாகிய சொற்களிடத்து மயக்கமாய்த் தோன்றும், (எ - று.)

(எ - டு.) யாம் பண்டு விளையாடுவது இக்கா; யாம் பண்டு சூது பொருவது இக்கழகம் எனவரும். (௪௯)

நிகழ்காலம் இறந்த காலத்தோடு மயங்கல்

௨௫௦. வினைக் காலமும் மயங்குதல் வரையார்.

என் - எனின், இதுவும் அப்பொருட்கண் இறந்ததனோடு நிகழ்வது மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஒழிந்த நிகழ்காலம் இறந்ததனோடு மயங்குதலை நீக்கார் ஆசிரியர், (எ - று.)

(எ - டு.) யாம் பண்டு விளையாடுங் கா எனவரும்.

இனி ஒன்றென முடித்தல் என்பதனால் இறந்ததனோடு எதிர்வதும் நிகழ்வதும் மயங்கியவாறுபோல நிகழ்வதனோடு இறந்ததுவும், எதிர்வும், எதிரதனோடு இறந்ததுவும் நிகழ்வதும் மயங்குமாறு கொள்க.

யாம் இன்று விளையாடா நின்றது இக்கா என்புழி விளையாடிற்று எனவும் விளையாடுவது எனவுங் கூறுதல் நிகழ்கால மயக்கம். யாம் நாளை விளையாடுவது இக்கா என்புழி விளையாடிற்று எனவும், விளையாடா நின்றது எனவுங் கூறுதல் எதிர்கால மயக்கம்.

இவை இதுபொழுதை வழக்கினுள் ஏலா எனினும், இவ்வாறு மயங்குதற்கு இலக்கணம் உண்மையானும், க ச த ப முதலிய என்புழிச் சொல்லுமுறை என்பதனைச் சொல்லிய முறைமை என்றமையானும் அமையும் எனக் கொள்க. (௫௦)

ஆறாவது வினையியல் முற்றும்.

ஏ. இடையியல்

இடைச்சொற்குரிய பொது விலக்கணம்

உருக. *இடையெனப் படுப பெயரொடும் வினையொடும்
நடைபெற் றியலும் தமக்கியல் பிலவே.

இவ்வோத்து என்னை பெயர்த்தோ எனின், இடைச்சொல்லிலக்கணம் உணர்த்துதலான் இடைச்சொல்லோத்து என்னும் பெயர்த்து.

இடைச்சொல் என்னும் பொருண்மை என்னை யெனின், பெயர் வினைகள் உணர்த்தும் பொருட்குத் தான் இடமாக நிற்றலான் இடைச்சொல்லாயிற்று.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ எனின், இடைச் சொற்கெல்லாம் பொதுவாயதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) இடைச்சொல் என்று சொல்லப்படுவன பெயர்ச் சொல்லோடும் வினைச்சொல்லோடும் வழக்குப்பெற்று நடக்கும்; அவ்வாறு அவற்றோடு நடத்தலல்லது தாமாக நடக்கும் இயல்பில, (எ - று.)

(எ - டு.) அது மன், வருகதில் அம்ம எனவரும்.

தமக்கியல்பில என்றதனான் பெயரொடும் வினையொடும் அவ்விடைச் சொற்கள் வருவழிச் சொற்புறத்துவழி வருதலும், அச் சொல்வழி வருதலும் என இருவகைத் தென்பது பெறப்பட்டது.

(எ - டு.) வருகதில், உண்டான் எனவரும்: இவை வினை. அதுமன் மற்றையது எனவரும்: இவை பெயர்.

மற்று இச்சூத்திரத்தின் பொருண்மையும், இலேசின் பொருண்மையும் "இடைச்சொல் கிளவியும், உரிச்சொல் கிளவியும்" என்ற சூத்திரத்துள்ளும் அதன் இலேசினுள்ளும் அடங்குமால் எனின், அது நிரனிறை வாய்பாட்டதாகலாற் பெயரெனப்பட்டு வருமென்றும் வினையோடு உரிவருமென்றும் கொள்ளக் கிடந்தமையின், இடையும் இரண்டோடும் வருமென்றற்குக் கூறினர் என்பது.

இனி அவ்விலேசு நிரனிறைச் சூத்திரத்ததாகலாற் புறத்துவழி வருதல் இடைச் சொற்காகவும், உள்வழி வருதல் உரிச்சொற்காகவுங் கொள்ளக்கிடக்கும் என்பது கருதி, ஈண்டும் இருவகையானும் இடை வரும் என்பதற்கு இலேசு கூறினர் போலும். (க)

* 'இடையெனப்படுவ' என்பது தெய்வச்சிலையார், சேனாவரையர் பாடம்.

இடைச் சொற்களின் பாகுபாடு

௨௫௨. அவைதாம்;

புணரியல் நிலையிடைப் பொருணிலைக் குதநவும்
வினைசெயல் மருங்கின் காலமொடு வருநவும்
வேற்றுமைப் பொருள்வயின் உருபா குநவும்
அசைநிலைக் கிளவி யாகி வருநவும்
இசைநிறைக் கிளவி யாகி வருநவும்
தத்தங் குறிப்பிற் பொருள்செய் குநவும்
ஒப்பில் வழியால் பொருள்செய் குநவுமென்(று)
அப்பண் பினவே நுவலுங் காலை.

என் - எனின், அவ்விடைச் சொற்களின் பாகுபாடாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மேல் இடைச்சொல் என்று சொல்லப்பட்டவை தாம் இருமொழி தம்மிற் புணர்தலியன்ற நிலைமைக்கண் அவற்றின பொருணிலைமைக்குதவிசெய்து வருவனவும், வினைச்சொற்களை முடிக்குமிடத்துக் காலங்காட்டும் இடைச்சொற்களொடு கூடித் தாம் பால்காட்டுஞ் சொற்களாய் வருவனவும், வேறுபாடு செய்த பொருண்மையிடத்து வேற்றுமையுருபாய் வருவனவும், வழக்கின்கண் தமக்கு ஓர் பொருளின்றித் தாம் அடைந்த பெயர் வினைகளை அசையப்பண்ணி நிற்கும் நிலைமையவாய் வருவனவும், பெயர்ப் பொருளிடத்துப் பொருளின்றி ஓரோர் அசையை நிறைத் தற்பொருண்மையவாய் வருவனவும், பெயர் வினைகள்போல விளங்கப் பொருளுணர்த்தாத சொற்கள் தத்தம் குறிப்பானே ஒரு பொருளை உணர்த்தி வருவனவும், ஒத்த என்னும் வாய்பாடு தன்கண் நில்லாத கூற்றானே நின்ற ஒப்புமைப் பொருண்மையை உணர்த்தி வருவனவும் என்று சொல்லப்பட்ட அவ்விலக்கணங்களை உடையனவாம், அவற்றைச் சொல்லுங்காலத்து, (எ - று.)

புணர்ச்சிக்கண் வருவன எழுத்தோத்தினுள் 'இன்னேவற்றே' யென்னும் சூத்திரத்தான் ஓதப்பட்டன.

இனித் தன்வினைமுடித்தல் என்பதனான் காரம், கரம், கான் என்னும் எழுத்துச் சாரியையுங் கொள்ளப்படும்.

வினைச்சொற்கள் பால்காட்டி வருவன வினையியலுள், 'அம் ஆம் முதலாக' ஈறுபற்றி ஓதினவெல்லாம் எனக் கொள்க.

இனி அவ்வினைச் சொற்கள் 'காலமொடு வருநவும்' என்றதனால் காலங்காட்டி வருவன உண்டான் என்புழி இடைக்கண் டகரமும், உண்ணாநின்றான் என்புழி ஆநின்றும், உண்பான் என்புழிப் பகரமும் அத் தன்மைய பிறவும் எனக்கொள்க. காலம் உணர்த்தி வருதலான் அவை காலம் எனப்பட்டன. உண்டான் என்புழிக் காலங்காட்டும் டகரத் துடனே பால் காட்டும் ஆன் வந்தவாறு அறிக.

இவ்வாறு பாலும் காலமும் காட்டுவன வினைக்கென்றோதினும் அதனைப் பெரும்பான்மையாக்கி உண்டவன் என்றாற்போலப் பெயர்க்குங் கொள்க.

இனி ஒன்றெனமுடித்தல் என்பதனால் வினைச்சொற்கண் பாலுணர்த் துவனவேயன்றிப் பெயர்க்கே உரிய வாய்பாட்டால் உணர்த்துவனவுங் கொள்ளப்படும். அவை நம்பி, நங்கை என்னும் இகர ஐகார ஈறுபோல் வன எனக் கொள்க.

வேற்றுமை யுருபாய் வருவன வேற்றுமை யோத்தினுள் 'அவைதாம் பெயர் ஐ ஒடு கு' என்னும் சூத்திரத்துப் பெயர் ஒழிந்த ஏழும் எனக் கொள்க. இவற்றை ஓத்து அடைவுபற்றி முன் கூறுதது, வினைக்கண் வருவன பெரும்பான்மையாகல் பற்றிப் போலும்.

மற்றை அசைநிலையும், இசைநிறையும், குறிப்பிற் பொருள்செய்கு நவும் இவ்வோத்தினுள் தத்தம் சிறப்புச் சூத்திரத்துள்ளே உதாரணங் காட்டப்படும்.

ஒப்பில் வழியாற் பொருள் செய்குநவற்றிற்கு உதாரணம் இதன் பின்னதிகாரத்து உவமையியலுள் காணப்படும்.

இச்சூத்திரத்து முன்னைய மூன்றும் முன்னர் ஓதிப் போந்தனவாக லான் முன் வைக்கப்பட்டன. பின்னையது பின்னதிகாரத்துக் கூறலால் பின் வைக்கப்பட்டது. இடையன இவ்வோத்தினுள் கூறப்படுதலான் இடைநின்றன.

ஆயின் இடைக்கணின்ற மூன்றனுள்ளும் பொருள் செய்வதனை முன் சொல்லாது அசைநிலை இசைநிறைகளை முன் சொல்லியது என்னை எனின், இவை இரண்டும் ஒழிய ஈற்றின் முன்னும் பின்னும் நின்றவையெல்லாம் பெரும்பான்மையினவாய் நிற்றலானும், அவைதாம் இவையாய் நிற்ற லானும், இவைதாம் அவையாய் நிற்றல் சிறுபான்மையாகலானும் என்பது. (உ)

இடைச்சொற்காவதோர் இலக்கணம்

உ௫௩. அவைதாம்,
முன்னும் பின்னும் மொழியடுத்து வருதலும்
தம்மீறு திரிதலும் பிறிதவண் நிலையலும்
அன்னவை எல்லாம் உரிய என்ப.

என் - எனின், இன்னும் அவற்றிற்காவதோர் விதியுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மேல் வகுக்கப்பட்டவைதாம் முன்னிடத்தும் பின்னிடத்தும் பெயர்வினையாகிய மொழிகளை அடைந்து வருதலும், அச்சொற்கள் தம்மீறு ஒருவழி எழுத்து வேறுபட்டு வருதலும், மற்றோர் இடைச்சொல் தான் நிற்குமிடத்தே நிற்றலுமாகிய அத்தன்மையை யுடைய இலக்கணம் எல்லாவற்றிற்கும் இலக்கணமாதற்குரிய, (எ - று.)

(எ - டு.) முன்னடுத்தது: அதுமன், கேண்மியா என்பன. பின்னடுத்தது: கொன்னூர், ஓஒதந்தார் என்பன. ஈறுதிரிந்தது: மன்னைக் காஞ்சி, இஃதொத்தன் என்பன. பிறிதவணிலையல்: மகவினை, மடவை மன்றம்ம என்பன.

மன்னைச் சொல், தில்லைச்சொல் என்பனவோ எனின், அவை பொருளுணர்த்தாது சொல் தம்மை உணர நின்றவாகலான் ஈண்டைக்கு ஆகா என்பது. மற்றென்னை திரிபு பெறுமாறு எனின், உடம்பொடு புணர்த்தல் என்பதனான் அவற்றை இவ்வாறு ஓதிய சூத்திரங்களால் பெறுதும் என்பது. (௩)

'மன்' என்னுஞ் சொல்

உ௫௪. கழிவே ஆக்கம் ஒழியிசைக் கிளவியென்(று)
அம்மூன் றென்ப மன்னைச் சொல்லே.

என் - எனின், இது தத்தங்குறிப்பிற் பொருள்செய்குநவற்றுள் ஒன்றன் பொருட்பாகுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) கழிவுப் பொருண்மைக்கண் வரும் மன்னும், ஆக்கப் பொருண்மைக்கண் வரும் மன்னும், ஒழியிசைப் பொருண்மைக்கண்வரும் மன்னும் என மூன்று கூற்றதாம் என்ப மன்னென்னும் சொல்லது பொருட்பாகுபாட்டு வேற்றுமை, (எ - று.)

இவ்வாறு பொருளுணர்த்தலும் அவ்விடைச் சொற்காவதோர் இலக்கணம் என்பது. அவ்வுதாரணம் உரையிற் கொள்ளப்படும்.

(எ - டு.) 'சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே' (புறம். 235) இது கழிவு.

பண்டு காடுமன்; இஃது ஆக்கம். பண்டு காடு என்பதன்றோ இன்று நாடு என்று ஆக்கமுணர்த்துகின்றது எனின், அதன் பொருளை இதுவுங் கூடிநின்று உணர்த்திற்று என உணர்க.

பண்டு கூரியதோர் வாண்மன்: இஃது ஒழியிசை. இன்றோர் குறைபாடுடைத்தாயிற்று என்னுஞ் சொல் ஒழிந்தமை தோற்றுவித்து நின்றமை காண்க. (ச)

'தில்' என்னுஞ் சொல்

உருரு. விழைவே காலம் ஒழியிசைக் கிளவியென்(று)
அம்மூன் றென்ப தில்லைச் சொல்லே.

என் - எனின், இதுவும் அது.

(இ - ள்.) விழைவின் கண்ணதும், காலத்தின் கண்ணதும், ஒழியிசைக்கண்ணதும் என மூன்று கூற்றதாம் என்ப 'தில்' என்னும் இடைச்சொல், (எ - று.)

(எ - டு.) "வார்ந்திலங்கு வையெயிற்றுச் சின்மொழி, யரிவையைப் பெறுகதில் லம்ம யானே" (குறுந் - 14) இது விழைவு.

"பெற்றாங் கறிகதில் லம்மஇவ் வூரே" என்பது காலம். "வருகதில் அம்மவெஞ்சேரி சேர" என்பது ஒழியிசை. (ரு)

'கொன்' என்னுஞ் சொல்

உருசு. அச்சம் பயமிலி காலம் பெருமையென்(று)
அப்பால் நான்கே கொன்னைச் சொல்லே.

என் - எனின், இதுவும் அது.

(இ - ள்.) அச்சத்தின்கண்ணும், பயனின்மைக்கண்ணும், காலத்தின்கண்ணும், பெருமைக்கண்ணும் என அக்கூறு நான்காம் கொன்னைச் சொல், (எ - று.)

(எ - டு.) 'கொன்முனையிரவூர்' (குறுந் - 91) என்பது அச்சம். கொன்னே வந்தான் என்பது பயனின்மை. "கொன்வரல்வாடை நினதெனக்கொண்டேனோ" என்பது காலம். 'கொன்னூர் துஞ்சினும்' (குறுந் - 138) என்பது பெருமை. (சு)

'உம்' என்னுஞ் சொல்

உருஎ. எச்சஞ் சிறப்பே ஐயம் எதிர்மறை
முற்றே எண்ணே தெரிநிலை ஆக்கமென்(று)
அப்பா லெட்டே உம்மைச் சொல்லே.

என் - எனின், இதுவும் அது.

(இ - ள்.) எச்சத்தின்கண்ணதும், சிறப்பின்கண்ணதும், ஐயத்தின்கண்ணதும், எதிர்மறைக்கண்ணதும், முற்றின் கண்ணதும், எண்ணின்கண்ணதும், தெரிநிலைக்கண்ணதும், ஆக்கத்தின் கண்ணதும் என அக்கூறு எட்டாம் 'உம்' என்னுஞ்சொல், (எ - று.)

எச்சம் இறந்தது தழீஇயதும், எதிரது தழீஇயதும் என இரு வகைத்து. அவையாவன :- யான் கருவூர்க்குச் செல்வேன் என்றாற்கு யானும் அவ்வூர்க்குப் போதுவல் என்பதும், அவ்வாறு கூறினார்க்கு யானும் உறையூர்க்குப் போதுவன் என்பதூஉம் என இவை.

இனிச்சிறப்பு - உயர்வுச் சிறப்பும், இழிவுச்சிறப்பும் என இரு வகைத்து.

உயர்வு-தேவர்க்கும் வேம்பு கைக்கும் என்பது; ஊர்க்கும் அணித்தே பொய்கை என்பதும் அது.

இழிபு - அவ்வூர்ப் பூசையும் புலால் தின்னாது எனவரும்.

ஐயம் - பத்தும் எட்டும் உள என்பது.

எதிர்மறை - கொற்றன் வருதற்கும் உரியன் என்பது. இவ்வெதிர் மறை "அஃறிணை விரவுப்பெய ரியல்புமா ருளவே" எனப் பண்பு பற்றி யும் வரும்.

எச்சத்தோடு இதனிடை வேற்றுமை யென்னையெனின், அது பிறி தோர் பொருளினைத் தழுவும், இஃது அப்பொருட்கானும் ஒரு கூற்றைத் தழுவும் என்பது.

இனி முற்று - தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தார் என்பது. யாதும் ஊரே, நாளுமன்னன், புகழுமன்னை என்பனவும் முற்றும்மை.

இனி எண் - நிலனு நீருந் தீயும் வளியும் ஆகாயமுமெனப் பூதமைந்து என்பது.

இனித் தெரிநிலை - நன்றுமன்று தீதுமன்று, என்பது "இடை நிகர்த்தது" என்றோர் பொருண்மை தெரிவித்து நிற்றலால் தெரிநிலை என்றாயிற்று.

இனி ஆக்கம் - நெடியனும் வலியனுமாயினன் என்பது. இஃது எண்ணன்றோவெனின், ஒருபொருடன்னையே சொல்லுதலின் அன்றாயிற்றுப் போலும்.

மற்றும் இதனகத்து விகற்பமெல்லாம் அறிந்துகொள்க. (எ)

'ஓ' என்னும் இடைச்சொல்லின் பொருள்

உ௫அ. பிரி நிலை வினாவே யெதிர்மறை ஒழியிசை
தெரி நிலைக் கிளவி சிறப்பொடு தொகைஇ
இருமூன் றென்ப ஓகா ரம்மே.

என் - எனின், இதுவும் அது.

(இ - ள்.) பிரிநிலைப்பொருண்மை, வினாப்பொருண்மை, எதிர்மறைப் பொருண்மை, ஒழியிசைப் பொருண்மை, தெரிநிலைப் பொருண்மை என இவற்றைச் சிறப்புப் பொருண்மையோடு தொகுத்து ஆறு என்று சொல்லுப ஆசிரியர் ஓகாரத்துப் பொருண்மை, (எ - று.)

(எ - டு.) பிரிநிலை - அவனோ கொண்டான் என்பது. இஃது இப் போது வினாவாய் நடக்கின்றதென உணர்க.

இனி வினா - அவனோ அல்லனோ.

இனி எதிர்மறை - யானோகொள்வேன் என்பது.

இனி ஒழியிசை - கொளலோ கொண்டான் என்பது.

இனித் தெரிநிலை - நன்றோவன்று தீதோவன்று என்பது.

இனிச் சிறப்பு - ஓஒபெரிது என்பது. (அ)

'ஏ' என்னும் இடைச்சொல்லின் பொருள்

உ௫கூ. தேற்றம் வினாவே பிரி நிலை எண்ணே
ஈற்றசை யிவ்வைந் தேகா ரம்மே.

என் - எனின், இது பெரும்பான்மை பொருள் படுமாறும் சிறு பான்மை யசைநிலையாமாறும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) தேற்றப் பொருண்மை, வினாப்பொருண்மை, பிரிநிலைப் பொருண்மை, எண்ணுப் பொருண்மை, ஈற்றசையாதல் என இவ்வைந்து வகைப்படும் ஏகாரம், (எ - று.)

(எ - டு.) தேற்றம் - அவனே கொண்டான்.

,, இனி வினு - நீயே கொண்டாய்.

,, இனிப் பிரிநிலை - அவனே கொண்டான்.

,, இனி எண் - நிலனே நீரே தீயே வளியே.

இனி ஈற்றசை - கடல் போல் தோன்றல காடிறந்தோரே. ஈற்றசை என்றமையான் மொழி முதற்கண் அசையாகாது என்பது. (கூ)

'என' என்னும் இடைச் சொல்லின் பொருள்

உகூ0. வினையே குறிப்பே யிசையே பண்பே
எண்ணே பெயரோ டவ்வறு கிளவியுங்
கண்ணிய *நிலைத்தே யெனவென் கிளவி.

என் - எனின், இது பொருள்படுவதொன்றுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) முன்னின்ற வினைச்சொல்லைப் பின்வரும் வினைச் சொல்லோடு இயைவித்தலென்னும் பொருண்மையும், குறிப்புப் பொருண்மைக்கண் வரும் உரிச்சொல்லினைப் பின்வரும் சொல்லோடு இயைவித்தலென்னும் பொருண்மையும், இசைப்பொருட் கண் வரும் உரிச்சொல்லினைப் பின்வரும் சொல்லோடு இயை வித்தலென்னும் பொருண்மையும், பண்புப்பொருட்கண் வரும் உரிச்சொல்லினைப் பின்வரும் சொல்லோடு இயைவித்தலென்னும் பொருண்மையும்................ (க0)

ஏழாவது இடையியல் முற்றும்

தொல்காப்பியம் சொல்லதிகாரம்

கல்லாடனார் உரை

முற்றும்.

* "நிலத்தே" என்பது சேனாவரையர் மட்டும் கொண்ட பாடம்.

சூத்திர முதற்குறிப்பு அகரவரிசை

[எண் : சூத்திர எண்]

பிற்சேர்க்கை

பின்னர்க் கிடைத்த ஏடுகளினால் எய்திய திருத்தங்கள், வேறு பாடுகள், பிழை திருத்தங்கள் முதலியன.

குறிப்பு :—இப்பிற்சேர்க்கையிற் காணும் வரி அல்லது வரிகளின் குறிப்புக்கள், அச்சுப் பதிப்பிலுள்ள அவ்வவ்வரிகளிற் காணும் சிற்சில சொற்களை முன்னும் பின்னும் அடையாளமாகக் கொண்டு எழுதப் பட்டன.

வரி எண் பக்கம் ௨

6. இவற்றுள் வழு என்பது அமையாச் சொல்லிற்கு இலக்கணமாமாறு என்னையோவெனின் இன்மை முகத்தான் இலக்கணமாம் என்று உணர்க

22. இவ்வாறு சொல்லிலக்கணங்கள்

பக்கம் ௩

27. பலர் மேலாமாறு இது, பலவற்றின் மேலாமாறு,இது வழுவாமாறு இது, வழுவமையுமாறு இது

30. பொருட்கண் மேலாமாறேயன்றோ உணர்த்தினது; பொருளல்லவற்றின் மேலாமாறுணர்த்தியதில்லை யெனின்

பக்கம் ௪

15. (இ-ள்.) இனி, உயர்திணை யென்மனார்

22. அவ்விரண்டு பொருளையும் உரைக்கும் சொற்கள்

பக்கம் ௫

7. 'செய்யார் தேளங் தெருமரல் கலிப்ப'

8. இது தொகைநிலைவகையான் வந்த தொகைநிலை

17. காலமயக்கத்தால் என்ப என்றுரெல உணர்க

24. வகையான் வந்தது எனப் பொருளியைபு

26. மக்கட் சுட்டென்பது மக்களாகிய சுட்டு; இரு பெயரொட்டுப் பண்புத் தொகை. சுட்டுஎன்பதன்

32. அல்லதாகிய திணையெனக் குணப்பண்பு

33. அல்லதாகிய தென

35. இழிதிணை என்றிலனேனும் பொருள் நோக்கும் என உணர்க

பக்கம் ௬

5. அல்ல பிற என்பது

14. அ என்பது பெயர் பற்றி

20. தொகைநிலை வகையான்

21. வேற்றுமைத் தொகைப் பொருள் சிறப்ப

26. ஆயிரு திணையினையும்

35. அவனுக்கு அது கருவியாக

பக்கம் ௭

15. (இ-ள்.) உயர்திணை என்பது ஆண்மகனை யறியுஞ்

18. ஒரு சாத்தன்

23. சிவணி என்பது செய்தென்னும் வினையெச்சமாகி

24. ஆறும் வேற்றுமை ஒரு வினைக் குறிப்பு

25. முடிந்ததென முடிப்பாரும் உளர்

26. உயர்திணை யென்பது விரி வரையறையான்

பக்கம் ௮

9. ஒருமைச் சொல் பன்மைச் சொல் எனவும் கூறியவாறாயிற்று

17. ஐயமறுத்தல் நுதலிற்று
18. வகையுள் ஒழிந்த பேடியும்

பக்கம் ௯

12. நின்றது என வுணர்க
23. இப்பலவகையுஞ் செய்வகை

பக்கம் ௧௦

12. எனினும்,பிறவெழுத்துக்கள்
19. (எடு.) உண்டாள், உண்ணா நின்றாள், உண்பாள்; கரியள், செய்யள் என வரும்

பக்கம் ௧௧

10. பெருவழக்கிற்று அன்று ஆதலானும்
14. "யானும் என் எஃகமுஞ் சாறும்"
15. திரிவுபட நிற்றலின் அங்ஙிக ரன திரிபுடைய, இவையே திரிபில்லன என்பது
17. தொக்கதென உணர்வது
19. எழுவாய் பயனிலையும் ஆக்கிக் கொள்ளின்
21. பலரறி சொல்லுள எனக் கருத்து
22. மேற்கூறுவான் போல
23, செய்யும் என் சொல்

பக்கம் ௧௨

3. நுதலிற்று என்பது
7. கரிது, சேயது
8-11. என இவை தகரமூர்ந்து வந்த குற்றியலுகரம். கூயிற்று, தாயிற்று, கோடின்று, குளம்பின்று என இவை றகரமூர்ந்து வந்த குற்றியலுகரம். குண்டுகட்டு, கொடுந் தாட்டு என வருமிவை டகரமூர்ந்து வந்த குற்றியலுகரம்
19. பண்புத் தொகை நிலைக்களமாய் நின்றது
24. என் எனின், பலவறி சொல் ஆமாறு உணர்த்துதல்

29-31. உண்டன, உண்ணா நின்றன, உண்பன; கரிய, செய்ய; உண்டு, தின்று; உண்குவ, தின்குவ என வரும்
35. அவ் அகரம் போல
36. வினைக் குறிப்பினும் வாராது

பக்கம் ௧௩

3. வேறோர் வாய்பாடாய் வருதலான்
5. இக்கடா அவற்றிற்கும் ஒக்கும்
27. பெயரெச்சம் என்னும் பொருள்படும்
34. திணையும் பாலுமாக வழங்கவும் கூடும்

பக்கம் ௧௪

13. வழூக்காத்தல் நுதலிற்று
21. உண்டனர் அவர்
22. உண்டன அவை. இவைவினை
24, அவை உண்டன. இவை பெயர்
28. கூறிற்றிலனே எனினும் உரையிற் கோடல்
31. வினாவழூஉ என இவை
36. செப்புப் பற்றிய மரபினை

பக்கம் ௧௫

13. வினைபற்றிய உயர்திணைத் திணைவழூஉ. உண்டது அவன், உண்டது அவள், உண்டது அவர் என்றாற் போல்வன வினை பற்றிய அஃறிணைத் திணை வழூஉ
17. ஓடினான், பாடினான் என ஒருவன் மேற்பல

பக்கம் ௧௬

10. உரித்தாகச் சொல்லுதல்
27. மரபியலென்னும் ஓத்தினுள் பெறுதும்
36. அதனகத்து அவ்வாறு கூறுதற்கோர் பொருட்காரணங் கண்டாதல், அது அன்றிப் பலரும் பயில வழங்குதல் கண்டாதல் அமைந்து கூறுதலுமென மூவகை

பக்கம் கரு

3. நும் நாடு யாது?
6-10. இனிவினா ஐந்து வகைப்படும் "அறியான் வினாதல் அறிவொப்புக் காண்டல், ஐயம் அறுத்தல், அவனறிவு தான்கோடல், மெய்யவற்குக்காட்டலோ டைவகை வினாவே" என இவை.
15. கூறல் என்றும் ஒன்றுண்டேல்
17. கருவூர்க்கு வழியாது ?
19. அவற்றுள் வினாவெதிர் வினாதல்
20. கூறலும் என்னும் மூன்றும்
24. என்றாற்கு வாளாதே
32. 'வழாஅல்' என்பது

பக்கம் கசு

2. செப்பு, முற்கூறிய காரணம், செப்பு ஆசிரியன்
3-4. யறிவிப்பது செப்பாகலானும், வினா இன்றியும் செப்பு நிகழுமாகலானும், வழூஉப்பன்மை செப்பின் கண்ணது ஆகலானும்
5. வினாவுரையுஞ் செப்ப நிகழ்தலிற் செப்பென
6. எனின், அடங்கினும் ஒன்றனை யறியாது கூறல்
17. இது வினா எதிர் வினாதல் என்னும் வழுவமைதியன்றோ எனின்? வினாவே எனினும், பிறிதோர்
28. நீ செல் என்பது ஏவுதல்
29. என்கால்முடங்கிற்று என்றல்

பக்கம் உ0

25. அவ்வம் முதலும் என்பது
35. துடிபோலும் நடு, பொன்போலும் மேனி

பக்கம் உக

9. பொரூஉ வென்பது
22. சைக்குறியராய் இருந்தார்
26. குறிநிலை வழக்கு

30. அருமருந்தன்னானை அருமருந்தான் என்றலும்
31. நட்டு வியந்தானை நட்டியந்தான் என்றலும், பொதுவில் என்பதனைப் பொதியில் என்றலும்
34. சொல்லுவன வன்றிப் பொருள்
35. அளக்கரிய மயிரினை

பக்கம் உஉ

10. உடன்பட்டுச் சொல்லி
12. வழக்காறென்பது மேற்கொண்டு
13. வாய்பாடு படுத்துப் பயிலச் சொல்லி
19. இன்றேல் நன்னவற்றையும் ஆனை
32. (எ - டு.) வழக்காறுவன:—

பக்கம் உங

2. சிவந்தெழுதரு செஞ்ஞாயிற்றுக் கவினை மாதோ
8. வருங்கால் அக்குணம்
13. வருவன உளவால் எனின்
20. குறுஞ்சூலி, குறுந்தடி, குறுமூக்கி
31. இனமில தேனும் செம்மையெனினும்

பக்கம் உச

23. பொருட்டாக உலகத்துப் பொருளை
33. இதற்கும் அதிகாரத்தான்

பக்கம் உரு

8. இளங்களை கட்டமையான் நீர்கால்
12. கூறலும் ஒன்று
28. மயிர் நல்ல; பைங்கூழ் நல்ல எனவரும்

பக்கம் உசா

2. இவை அவற்றுள்
12-14. (இ - ள்.) ஒரு சாத்தன் திணையறிந்து பால் மயங்கலுற்ற ஐயச் சொல் எனப்படும் சொல்தான் அறிந்த உயர் திணைப் பொருளிடத்தும்

பன்மையாகக் கூறும்
கூற்று என்றவாறு
18. இருவகைத்து. காணு
விடத்து ஐயமும் இவ்
வாறு கொள்க. இனிக்
காணாத வழி ஒருவனோ,
ஒருத்தியோ என்பதன்றி,
ஒருவனோ பலரோ
வென்று ஐயுறும்
20. இருபாலுமாய் நிற்றலின்லை
பிற. மற்று ஒன்றாகிய
21. கூறுதல் வழூஉமன். வழூ
உவே யெனினும்
24. வேறு வழக்கில்லையே எனி
னும்

பக்கம் உஎ

16. ஒன்றென முடித்தல்

பக்கம் உஅ

3. அது அன்மைப் பொருள்
15. பெயர்க்கு முடிபு இல்லை
16. நீக்கப் பொருட்கண் ஐந்தா
வதனை பெண்டாட்டியின்
அல்லன் என விரித்து
முடிபு கொள்க
20. துணிபொருட்கண் தன்மை
22. ஒன்றன்மேல் அன்மை
கொடுப்பினும்
25. இதன் மேலிறுக்க என
29. என் - எனின், வண்ணச்
சொல்லதோர் மரபு
30. சொல் முன்னது ; பண்பினை
31. சொல் அதன் பின்னது; அச்
சினையையுடைய
32. அதன் பின்னது என்று கேட்
டான்
34. நடக்கும் யாது அது வண்
ணச் சினைச்சொல்

பக்கம் உகூ

4. வருமாலோவெனின், அவை
சொல்லுவான் கருத்து
வேறு; பெரும்பலா, பெரு
வழுதுணை எனப்பெருமை
முதன் மேலே நோக்கி
நின்றமையின். பெருந்
தலைப் புல்லா நல்லேறு
எனவும், நெட்டிலை விளா
வின் கட்டெங்கு எனவும்,
மயங்கியும் வருமாலோ
எனின், அவ்வாறு மயங்
கிக் கூறுவன
5-7. பெருந்தலையினை உடையதும்
வேறு ; புல்லா நல்லேறும்
வேறு; பொருள் கொண்டு
இயையுமால் அதுவும்
எனின் ; அவ்வாறு
12. 'இளமை' என்னுஞ் சொல்
பெருமை யென்பதனோடு
இயைபு இன்றாய்க் கூத்
தன்
21. முதல் என்ற பின்பும்
27. மரபு வழூஉ வமைதியும்
33. பால் வழூஉ வமைதியும்
34. வழூஉ அமைதியும்

பக்கம் ௩0

4. உயர்திணைப் பன்மைப்
பாலாற்சொல்லுஞ் சொல்
லும்
6. யுளவாகிய உயர்த்துச்சொல்
லுதற் பொருண்மைக்
கண் வருசொல் இலக்க
ணத்திடத்து
9. என்ற மிகையால்
16. உயர்திணையான் வந்தன
20. குடிமையாண்மை என்புழிச்
சிறப்பு என்புழிப்பட்டு
அடங்குமால் எனின்
28. ஓரோர்

பக்கம் ௩க

3. அச்சொற்களதும் இடங்க
ளதும் பெயரும்
9. கொடை எள்ளும் அந்நான்கு
சொல்லும்
22. (எ - டு.) எனக்குத் தருங்
காணம், நினக்குத் தருங்
காணம், எனக்கு வருங்
காணம், நினக்கு வருங்
காணம் எனவரும்

பக்கம் ௩உ

2. இயைபு படுத்திக் கூறியும்
3. செல்லும் என்பது கூறுது

4. இயைய வைத்துக் கூறிய முறைமையன்றிக் கூற்றி ஞல்

பக்கம் ௬உ

7-8. (இ - ள்) இரண்டு பெயர்ச் சொல் முதலாக வளவா கிய தொகைச் சொற்க ளும் உள. உம்மையால் ஒரு வினையும் பெயரும் முதலாக உளவாகிய தொகைச் சொல்லும் உண்டு. அவ்விரு திறத் துத் தொகைச்சொல்லும் மேற் சொல்லப்பட்ட பயனிலைக் கூற்றின்கண் உரிய (எ - று.)

9. யாது பெரிது, பல
12. இது வினையிறுகிய தொகை
25. உதாரணம் மேற்காட்டின
26. ஈண்டும் விதந்து வலியுறுத் தார்
31. பெயரது அல்வழிப் புணர்ச் சித்திரிபு என்பது
33. திரிந்தபின் பிறிதோர் பெயர் நிலைமைபட

பக்கம் ௬௩

4. கொண்டான் என ஏழாம் உருபேலாதது
11-13. முறைமையினிடை நின்ற அறுவகை உருபும்தத்தம் வாய்பாட்டு நிலைமையின் திரியாது பெயர்க்கீறாய்
18. கூறுகின்ருர் ஆகலின்
25. தோன்ரு; யாவை எனின், தொழிலாகிய நிலைமை யுடைய தொழிற்பெயர் கள்; யாண்டுமோ எனின், அன்று. காலந் தோன் றுதல் தன்மை பொருந் தும்
31. காலம் தோன்ருத் தொழிற் பெயர் ஆயின் தோன்றும்
32. தொழில் மேல் நின்ற

பக்கம் ௬௪

3. அவை உண்டல், தின்றல்
6. நிற்பன உள என்பது
19. காலங் காட்டி நின்றது
24. விகற்பமும் அறிக
26. கால விகற்பமும் அறிக
28. சூத்திரத்தானே அதுவும் பெறுதும் என்பது

பக்கம் ௬௫

15. என்னும் முறைமைக் கண் ணதாகிய
18. அவ் இரண்டும் அடியாக அது வரும் பொருண் பகுதி சொல்லின்
21. எல்லாச் சொற்களும் அவ் இரண்டாவதன்

பக்கம் ௬௬

4. காதல்—தாயைக் காதலன்
8. இது வினைக் குறிப்பு
14. நிறுத்தல்—தூணை நிறுக்கும்
15. அளவு—அரிசியை அளக்கும்
17. ஆக்கல்— ஊரை யாக்கும்
24-26. நாவினை வணக்கும். இவை வினை. அறவினை யுடை யன், ஊரை இல்புறம். இவை வினைக் குறிப்பு
28. என்பது முதலாக நின்ற இன்னெல்லாம்
30. எண்ணிடைச் சொல்
38. செய்கின்ற காலமும்

பக்கம் ௬௭

2. அத்தொழிலுறுமால் எனின்
7. குழையை யுடையன் என் புழி
12. எனப் பலவகைய
23-25. அறுத்தல், குறைத்தல் என்று தன் கண்ணும் நிகழ்ந்தன
29. என இருவகைத்து
31. தெரியாநிலை: சாத்தன் மரம்
36. கருத்தில்வழி ஆதலும் என இருவகைய

பக்கம் ௬அ

7. இதன் அகத்து விகற்பம்
23. மூன்ருமென்னு முறை மைக் கண்ணதாகிய
25. அது வருமாற்றைச் சொல் லின்

26. ஒன்றனொடொன்று தகுதல் என்னும்

பக்கம் ௬௯

8. அம் மூன்றுருவதன் கூறன என்று
21. அதன்வினைப்படுதல் நாயாற் கோட்பட்டான் என்பது
29. தொட்டான் என்பது

பக்கம் ௭௰

21. பொருட் பாகுபாடுங் கருதிப் போலும்

பக்கம் ௭௧

5. யாதொருபொருளையாயினும் ஒரு பொருள் ஈவதோர் பொருளினை ஏற்பதாக
10. அம்முதற் பொருட்டாய் ஆகலான்
14. ஒன்றற்கொன்று நட்பாதல் (என்னும் பொருண்மை, ஒன்றற் கொன்று) •பகையாதல் என்னும்
20. நோக்கிச் சொற்கள்
23. (எ - டு.) அதற்கு வினையுடைமை — கரும்பிற்கு வேலி, மயிர்க்கு எண்ணெய் என்பது
30. அதற்கு யாப்புடைமை — கைக்கு யாப்புடையது கடகம். அதற் பொருட்டாதல்-வரிசைக்கு உழும்; கூழிற்குக் குற்றேவல் செய்யும் என்று இத் தொடக்கத்தன
32. நட்பு-நாய்க்கு நட்புடையன்
33. பகை-மக்கட்குப் பகை மரபு

பக்கம் ௭௨

2. காதல்—தாய்க்குக் காதலன்
3. சிறப்பு — வடுகரசர்க்குச் சிறந்ததோர் சோழிய அரசர்
5. முதலாகச் சொல்லப்பட்டன எல்லாம்
6. பிற பொருளென உணர்க
10. வண்டு எனவரும்
12. கோடற்கு இடம்படாதால் எனின்

பக்கம் ௭௩

3. இப்பொருளினும் இத்தன்மைத்து
11. முன்னர் எடுத்து ஓதினான்
17. (எ - டு.) காக்கையிற் கரிது களாம்பழம். இதனின் என்பது
39. இது என்பது களாம் பழம் என்பது. என்றது காக்கையினுங் கரியது களாம் பழம் என்று
21. கரிது களாம் பழம்
23. கரிது களாம் பழம்
25. முதலியன. (எ - டு.) இதனின் வட்டமிது என்பது
26. குறுமை, நிகர்மை எனப்பலவாம். (எ-டு.) இதனின் நெடிது இது என்பது
28. கைப்பு முதலாயின. (எ-டு.) இதனின் தீவிது இது என்பது தண்மை—இதனின் தண்ணிது இது என்பது. வெம்மை
31. இஃது ஏதுவின்கண்ணும் வரும்

பக்கம் ௭௪

6. முதுமை—இவனின் மூத்தான் என்பது
7. இளமை—இவனின் இளையான் என்பது
8. சிறத்தல்—இவனின் சிறந்தான் இவன் என்பது
10. இழித்தல்—இவனின் இழிந்தான் இவன் என்பது
12. புதுமை—இவனின் புதியன் இவன் என்பது
13. பழமை—இவனின் பழையன் இவன் என்பது
15. ஆக்கம்—இவனின் ஆயினான் என்பது. இது ஏதுப்பொருட்கண்ணும் வரும்
17. இன்மை—இவனின் இலன் என்பது
18. உடைமை—இவனின் உடையன் என்பது

19. நாற்றம்—இதனின் நாறும் என்பது
21. தீர்தல் — ஊரிற்றீர்ந்தான் என்பது. இது நீக்கம்
22. பன்மை—இவரிற் பலர் என்பது
23. சின்மை—இவரிற் சிலர் என்பது
24. இவையும் பொருஉ
25. பற்றுவிடுதல்-ஊரிற் பற்றுவிட்டான் என்பது
27. இது நீக்கம்
28 மருவூரின் மேற்கு, கருவூரின் கிழக்கு என்பது எல்லை. முயற்சியிற் பிறத்தலின் இசை நிலையாகாது என்பது ஏது
30. அன்ன பிறவும் என்பது எடுத்தோதின

பக்கம் ௭௫

18. எண்ணு முறைமைக்கண்ணதாகிய
28. அது என்பதன்றி அஃறிணைப் பன்மை

பக்கம் ௭௬

2. உரிய உருபாயினவாறுபோல
11. உயர்திணைப் பொருட்கு உயர்திணைப் பொருளை யுடைமை செப்புமாறு
13. எட்குப்பை, எள்ளினது குப்பை என்றவாறு
20—21. ஒன்றியற் கிழமை — நிலத்ததகலம்; உறுப்பின் கிழமை-யானையது கோடு; மெய்திரிந்தாகியது
25. இது தற்கிழமையுள் ஒன்றியற் கிழமை

பக்கம் ௭௭

5. கொள்ளாமைக்குக் காரணம்
6. இருவர்க்குடைமையாக
12. உரிமை யாகாதப் பொருள் தாமும்
14-16. குழுவு-எட்குப்பை, படைக்குழாம்; இது தற்கிழமையுள் ஒன்றுபல குழீஇயதூஉம், வேறுபல குழீஇயதூஉம் குழுவென உடனேக்கிற்று
21. நிலை — பெண்ணாடகத்துப் பெருஞ்சங்கரனாரது நிலை
25. பிறிதின கிழமை

பக்கம் ௭௮

14. எண்ணு முறைமைக்கண்ணதாகிய
17. வ்ரும் பாகுபாட்டினைச் சொல்லின்
23-24. வினை செய்யிடம் — ஒரு தொழில் நிகழும் இடம். நிலம் என்பது ஒரு தொழில் நிகழாது
31. குன்றத்துக்கண் கூகை

பக்கம் ௭௯

4-5. கால் — ஊர்க்கால் இருந்தான். புறம் — ஊர்ப் புறத்திருந்தான். அகம்-- மாடத்தினகத்திருந்தான்
25. இடம் — கையிடத்து இருந்தான்
26. கிழவோரேடத்து கிழவோன் மாட்டு என்றாற் போல்வன
30. கண் என்னும் உருபு

பக்கம் ௮௦

4. முழுதுணர்வு செலவின்றவழி
8. உணர நிற்கும் உருபு என்றும், அல்லன ஓர் இடங்களையும் வரையறுத்துக் கொண்டு இடப்பொருள் உணர்த்தி நிற்கும்
17. தொக்கவிடத்து நின்று நீங்கி (எ - று.)
24. விகாரப்பட்டுத் தொக்கு நின்று
25. முன்கூறிய ஈற்றின்கண்ணே விரியும் என முற்கூறிய அதனையே
29. சொற்களதோர் இலக்கணம்

பக்கம் ௮௧

15. குழை உடையன் என இவை உருபு

17. இரண்டாவது வேற்றுமை யியல் முற்றும்

பக்கம் ௫உ

9. பலவற்றேடு மயங்குதலும், ஓர் உருபு ஓர் உருபோடு மயங்குதலும், ஓர் உருபு பல உருபோடு மயங்குதலும் ஒன்றனது ஒரு
14. மயக்க வகையான் மயங்குதலும், சொல்லுதல் வகையான் மயங்குதலும் ஒன்றனேடு பொருள்
18. என்றின்னேரன்ன பல மயக்கம் கூறலின்
28. பிறிதாவான் சேறலின் கரும மல்லாச் சார்பு

பக்கம் ௫௩

5. கண்ணுட் குத்தினன்

பக்கம் ௫௪

12. கண்ணுள் குத்தினன்
18. வந்தவாறு கண்டு கொள்க. 'தெள்ளிது' என்றதனல் முதற்சினைப் பொருட்கண்ணே அன்றிப் பிற பொருட்கண்ணும் இவ்வுருபுகளை இவ்வாறு கொடுத்துச் சொல்லுதல் கொள்ளப்படும் எனக் கொள்க
19. மணியது நிறத்தைக் கெடுத்தான், மணியை நிறத்தின்கண் கெடுத்தான், மணியை நிறத்தைக் கெடுத்தான்

பக்கம் ௫௫

8-9. படையின் யானை என முதல் சினையாயே நிற்கும் என்பது
12. மரீஇய பண்பே
16. இயல்பின் திரியா. அவை கோடற்குக் காரணம்
20. என்ற மேல், சினையே முதலாய்
21. பிண்டமே அப்பொருளாய் அப்பொருளே பிண்டமாய்
22. அன்றிப் பொருள் நிலைமை சொல்லுவான் குறிப்பின வாறு ஆயினவாறுபோலப் பொருளின் வேறு
26. குறீஇயதும் ஆக இரு வகைத்து. ஒன்று பல குறீஇயது

பக்கம் ௫௬

5. சொல் அவ் இருவினையை யுடைய
8. சேவகர் என்பது; சேவகரோடு
21. (இ-ள்.) மூன்றுவதன் ஆனும் ஐந்தாவதன் இன்னும்
22. பொருண்மையொடு கூடிப் பொருந்திய ஏது
23. பொருண்மைய. அவ்வுருபுகளால் அப்பொருள் விளங்குமிடத்துப் பெரும்பான்மை உள என்று ஆராயுமிடத்துஅஃதில்லை
27. கிளவி யென்றது ஆகுபெயராற் பொருளினை
31. இரண்டின் மருங்கின்

பக்கம் ௫௭

4. வேற்றுமையிடத்து பொறியான் நோக்கப் படுதலின்றி
5. நோக்கப்படும் நோக்கும், மேல் மூன்றுவதன்கண்ணும்
13. செயப்படு பொருள் ஒழிய ஏதுப் பொருள்படும் என்பது அன்றுகருத்து.ஏதுப் பொருட் குறிப்போடு
22. வேற்றுமை, உயர்திணைக் கண் தொக்க தொகையிடத்து அவ் அது என்னும் வாய்பாடு
25. இன்மையின் என்பது
26. இச்சூத்திர நயத்தானே இவ்வுருபு போலத் தம் பொருள்பட
28. வினைக்குறிப்பு நீர்மைப்பட நிற்கும்

பக்கம் ௮௮

7-8. (இ - ள்.) வினையினையுடைய பெயர்க்கண்

15. என்பது பொருளாமால் எனின்

17. நோக்க அவ்வாறாகாது என்பது

25. இன்ன வேற்றுமையென அறிய அத் தொகைச் சொல்லது

பக்கம் ௮௯

4. தாம் பிரி விலவே தொகை வரு காலை

7. வாழியைய ஒலிகூந்தல் நின்னல்லதியாரும் இலள். இவை

14. ஏதுப் பொருட்கும் ஒக்கும் என்றோதப்பட்டமையின்

பக்கம் ௯௦

2. மற்று இஃது ஆறன் மருங்கின்

4. யானையுட் காடு என வாராதால் எனின்

7. அதனாற் போலும் ஆறுவது சிறுபான்மை

16. ஆறுவதன் உடைமைப் பொருளாதற்கு

20. மயங்குவது எதிர்கிளவியாயக்கால்; அல்லாக்கால்

23. மற்றிது கொடை நிகழ்த்திலமையின் நான்காவது

24. நிகழ்கின்றதும் நிகழ்வதும்

32. ஒத்த நிலைமைய பொருள் படுமிடத்து

பக்கம் ௯௧

2. என்பது புலியின் அஞ்சும், புலியை அஞ்சும்

5. ஓம்படை என்பதற்கண் கூறிய நயத்தாற் புலியான்

12. மயக்கத்திற்குப் புறனடை

14. அத்தன்மையனவும் பிறவுமாகிய

15. நெறி முறைமையினைப் பிழையாது

16. தடுமாறித் தனக்குரிய

24-25. பிறபொருள்மேலும் வழங்கி வருதலான் வழக்கு முடிவினை ஆராய்ந்த முதல் நூலாசிரியர்களும் வேற்றுமை வழு

28. என்றதனால் கொள்வனவற்றிற்கு உதாரணம்:—

29. முறையாற் குத்தினான், முறையிற் குத்தினான் என மூன்றாவதும் ஐந்தாவதும், ஏதுப் பொருட்கண்

பக்கம் ௯௨

16. இடைக்கண் நின்ற கோட்டை என்னும்

பக்கம் ௯௩

6. அஃது ஒருசொற்கண் உருபு

7. இஃது இருசொற்கண் உருபு

13. மயக்க நீர்மைத்து என்பது அறிதற்பொருட்டாகவும்

21. வழங்குவாரின்மையின் நில்லாதாயிற்று

பக்கம் ௯௪

3. சாத்தனதுவது எனத் தன்னுருபு

5. ஆறுவதென்பதூஉம் அதனையொழிய

6. பிறிதெனவே அது அல்லாதென்பது

8-9. பிறிதெனப்படுமால் எனின், உரையிற் கோடல் என்பதனான் இதுவே யாயிற்றென்பது

18. ஆறுவது ஒன்றும் உருபே தொகுவது

23. தான் நில்லாதாகலும்

29. என்புழித் தொக வருவன வற்றது

33. உண்மையாகிய வடிவு தொக் குநில்லா இருமொழியின்

36. சாத்தன் என ஒடுத் தொக் குழி

பக்கம் ௯௫

5. செய்யுள் விகாரம் எனக் கொள்க

18. மயங்கும் என்பதேல், வேண் டியவாறெல்லாம்

25. தம் பொருள என்பது

பக்கம் ௯௬

9. அவை முன்னர்ச் சொல்லு தும்

23. காவலோன என்றாயிற்று. புலவரினுன் என்பது புல வரினுன என்றாயிற்று.

பக்கம் ௯௭

27. இவனைக் கொள்ளும் இவ் வணி என்புழி இவனுக் குக் கொள்ளும்

34. என்றாயிற்று; என இவை

பக்கம் ௯௮

2. அன்ன பிறவும் என்றதற்கு உதாரணம்: — ஊரிற் சேயன்

16. குற்றம் இல. அவ்வாறு

18. (எ - டு.) வழக்கினுளவேல் கண்டு கொள்க. காணு மையின் காட்டாமாயினும்

பக்கம் ௯௯

3. இன்றைக்கு இவன் இது செய் யப்படுகின்றான் என்று சொல்லப்படுகின்ற

4. இவனை ஏற்றுக்கொண்ட அதனால் பயமாகச் செய் யப்படுகின்ற அப்பொ ருண்மையினையும்

10. ஒருவனும் விளங்கினான் வனையப்பட்ட குடம் முத லாய செயப்படுபொரு ளும் விளங்கிற்று

13. விளங்கிற்று. வனைந்தான் பெற்றதொரு பயனும் அறமாலும் பொருளா லும் விளங்கிற்று.

17. வினையோடு என்னும் இயல் பில

18. அவ்வினை வருங்காலம்

20. இது கூறிய எட்டிலக்கணங் களுள்

21. எழுவாயாய்ச் சேர்ந்தது

பக்கம் ௧௦௦

13. அவ்விடத்தினுள் பிறந்த

16. அத்தொழில் நிகழ்ச்சியின் ஆயதனை உணர

18. அஃது அப்பொருளினை

19. வேறோர் பொருளை உணர

21. இவை ஏழும் அம் மரபில் தொக்க

23. ஆகுபெயர்ச் சொல்லாவன (எ - று.)

24. (எ - டு.) முதலிற் கூறல்: கடுத்தின்றான், தெங்கு தின்றான் என்பன

26. சினையிற் கூறல்: இலைநட்டு வாழும், பூநட்டு வாழும் என்பன

28. குழிப்பாடி என்பது

29. நீலம் என்பது

30. ஏறு, குத்து என்பது

31. பொற்றொடி என்பது

பக்கம் ௧௦௧

3. வழி ஈண்டு ஆகுபெயராகும்

5. கபிலம் என்பன

17. பொருளை உணர்த்தலும்

19. (எ-டு.) தம்மொடு சிவணல்; தெங்கு, கடு என்னும் தொடக்கத்தன

20. ஒப்பில் வழியாய் நின்றன, பிறிது பொருள் சுட்டல்
25. பிறவாற்றானும்
26. மேலைச் சூத்திரத்து ஓதிய வாற்றானே

பக்கம் ௧௦௨

6. பாதுகாத்து ஒழுகுதலைவேண்டும் ஆசிரியன் (எ - று.)
7-8. பெற்றொடியைத் தொட்டாள் என இரண்டாவதன் பொருண்மைத்து
11. ஆகுபெயர் தன்றுணிற்குக் கிடந்தது என
21-22. இவ் ஆறு வேற்றுமைப் பொருள் இயைபு உள் வழியே ஆவது; பிறவழி
34. பெயர்ப் பொருட்காயிற்று எனக் கொள்க

பக்கம் ௧௦௩

3. உலகத்தார்க்குப் பெயர்க் குறிப்பு
9. என் - எனின், மேற் கூறிய ஆகுபெயர்க்குப் புறனடை உணர்த்துதல் நுதலிற்று. (இ - ள்.) ஆகு பெயர்க்கண் மேல்
17. பெயரினை அறிகுறியாக
20. திரிதாடி என்பனவற்றையும் இரு பெயரொட்டு
23. காரணத்தின் பேரினை
25. காரியத்தின் பேரினை
27. சொல் எனவும் பொருள் எனவும் கூறிய நூல்மேல் ஆகு பெயராய்
33. மூன்றாவதுவேற்றுமை மயங்கியல் முற்றிற்று

பக்கம் ௧௦௪

6. இவ்வோத்தினிடை இயைபு
8. நிறுத்தார்; நிறுத்த முறையானே
9. ஒழிந்து நின்ற விளி உணர்த்துகின்றார் என்பது
32. முன் நூலுள் அவ்வாறு கூறும்

பக்கம் ௧௦௫

2. சொற்கிடை அது எனினும்
12. விளியேற்கும் என்னப்பட்டவை
16. விளியேற்பன இந்நான்குமே எனவே
24. இவ்வுயர்திணைப் பெயர் போல

பக்கம் ௧௦௬

19. இன்ன உகரம் எனத் தெரித்துக் கூறாமையானும்
20. இயல்பினவாதலானும்
21. ஐயுற்றானை ஐயந்தீர்த்தமையின்
23. குற்றியலுகரம் (எ - று.)
27. உணர்த்துதல் நுதலிற்று

பக்கம் ௧௦௭

10. மேற் கூறியவாறு விளியேற்கும்
17-18. நுதலிற்று; ஈகாரமாதல் விலக்கி
22. (எ - டு.) தொழீஇஇ (தொழீஇ) என்பது பெயர்
26. நிற்கும் என்பது கொள்ளப்படும்
28. எழுதுக என்றவாறு கொள்ளப்பட்டது

பக்கம் ௧௦௮

2. நுதலிற்று; ஐகாரவீறு.
5-6. ஆயோடு வருதலேயன்றி ஆவோடு
9. அதனான் ஆயாதலே பெரும்பான்மைத்து
10. மற்றிவை விரவுப் பெயர் அன்றோ எனின், விரவுப் பெயர்களை

25. இனி அவ்வுயர்திணைக்கண்
31. ஆசிரியர் புள்ளியீற்றினை

பக்கம் ௧௦௯

8-9. முடித்தலை நுதலிற்று
18. ரகர ஒற்றுள் ஓதுகின்ற
19. கேளிர், கேளிர் என இயல்
பாயும்
21. இன்னும் இம் மிகுதியானே
29. அன் என்னும் இறுதி பெயர்
இறுதி ஆவாய்

பக்கம் ௧௧௦

20. என்னிறுதிப் பெயர் விளிக்கு
மிடத்து

பக்கம் ௧௧௧

5. (இ - ள்.) அவ் ஆனீற்று
15. (இ - ள்.) னகர ஈற்று
24. என்-எனின், னகர வீற்றுள்
25. கூறுகின்றது நுதலிற்று
27-28. யான் என்னும் ஆன் ஈற்
றுப் பெயரும், வினைப்
பொருண்மை உணர்த்தும்
அன் ஈற்றுப் பெயரும்,
அவ்வனைத்துப் பெயரும்,
மேற் கூறியவாற்றானேயி
னும்
29. விளி கோடலை இல (எ-று.)

பக்கம் ௧௧௨

5. மற்றுத் தான் என்பது விர
வுப் பெயர் அன்றோ
எனின், விரவுப்பெயர்களை
10-11. ரகர வீறு விளியேற்கு
மாறு உணர்த்துதல்
14. கூத்திர் எனவரும். இஃது ஈற்
றயல் நீண்டது
21. மேற் கூறிய ஈறோடு
22. சொல்லுவர் விளங்கிய
அறிவையுடையார்
26. தொழிற் பெயரல்லனவும்
ஈரோடு

பக்கம் ௧௧௩

10. (இ - ள்.) ரகர ஈற்று அள
பெடைப் பெயர் ளகர
ஈற்று
12. (எ - டு.) மகாஅர், சிறாஅர்
என வரும்
15. என் - எனின் : ரகர ஈற்றுப்
பெயர் விளி ஏலாதன
17. (இ - ள்.) ரகர ஈற்றுச் சுட்
டெழுத்தினை
18-19. ளகர ஈற்றுச் சுட்டு முதற்
பெயர் போல விளியே
லாது என்னுதல் நுத
லிற்று. அவர், இவர், உவர்
என்பன அர் ஈறே எனி
னும் விளி ஏலா (எ - று.)
27. மேல் விளியேலா எனச்
சொல்லப்பட்ட

பக்கம் ௧௧௪

6. உணர்த்துதல்
9. விளியேற்றலை வேண்டும்
(எ - று.)
16. ஈற்றுப் பெயரும் அயலெ
ழுத்து நீண்ட
18. (எ - டு.) பெண்பால், ஆண்
பால், ஏமாள், கோமான்
என வரும்
23. ளகர ஈற்றிற்கு
26. ஆள் என் இறுதி

பக்கம் ௧௧௫

3. (இ-ள்.) ளகர ஈற்றுப்பெயர்
11. என்-எனின், ளகர ஈற்றுள்
15. னகர ஈற்றுச் சுட்டு முதற்
பெயரும்
20. என் - எனின், லகர ளகர
ஈற்றுப் பெயர்
22. (இ - ள்.) லகார ஈற்று அள
பெடைப் பெயரும் னகர
ஈற்றுப் பெயர்போல
இயல்பாய் விளியேற்கும்
(எ - று.)
25. (எ - டு.) மாஅல், கோஒள்
என வரும்

26. அதிகாரத்தான் இவ்விதி ளகர ஈற்றின்மேல் ஆகாதோ எனின், லகார ஈற்று விளியேலாதனவுங் கூறி

பக்கம் ௧௧௬

2. என் - எனின், உயர்திணைப் பெயர் விளியேற்குமாறு கூறி, விரவுப்பெயர் விளியேற்குமாறு

5. (இ - ள்.) மேல் உயர்திணைப் பெயர்க்கண்

7. விளக்குங்காலத்து (எ - று.)

27. வருந்தினை வாழியென் னெஞ்சமே எனவும்

29-30. இன்மையின் அங்கீகரன செய்யுள் விகாரம் எனக் கொள்க. புள்ளி ஈருகலின் புள்ளி ஈறு முற்கூறினான் எனக் கொள்க

33. அவ்வேகாரப் பெற்றி...... த்தற்குக் கூறியவாறு ஆகக் கொள்க

பக்கம் ௧௧எ

6. என் - எனின், இது மேற் கூறிய

8. விளியேற்றற்கு உள என எடுத்தோதப்பட்ட

10. விளக்குங் காலத்து

26. அறிவினையுடையவர் (எறு.)

பக்கம் ௧௧அ

7. முதலாகவுடையவாகி, ஓர்

11. விளிகோடலை இல்லாமையை

18. ஈண்டுப் போந்து உடன்

19. நான்காவது விளிமரபு முற்றும்

பக்கம் ௧௧௯

7. என்னோ எனின் மேற் பெயரிலக்கணம்

16. என அவ்வப் பெயர் அவ்வம் மக்களை உணர்த்தின!

19. எனவும் இவை அவ்விடையும்

20. யடுத்து ஒரு பொருளை

பக்கம் ௧௨௦

6. உணர்த்துதல்

7. பொருள்கள் தெரிய

13. இடைச் சொல், உரிச்சொல், பெயரெச்சம்

15. மற்றிதுவும்

25. கொடுத்தாயினும் ஓதற்பால அதனை நன்கு

பக்கம் ௧௨௧

3. இரு பகுதிற்று என்றுசொல்லுவர் ஆசிரியர் சொற்கள் உணர்த்தும் பொருளது நிலைமையை என்றவாறு

4. (எ-டு) இடர், திடர் என்பன

10. உணர்த்துதல்

17. பிற்கூறப்பட்டது எனப் படுப சிறப்பின்கண் வந்தது

24. தாமாகத் தோன்று (எ - று.) மற்றுச் சொல் நான்கு என ஒன்றாக ஓதாதது என்னையெனின், இடை உரிகள், பெயர் வினைகளை அடைந்து நின்றல்லது பொருள் உணர்த்தாச் சிறப்பின்மை நோக்கிப் பிற் கூறினான். இடைச் சொல்

26. வழக்குப் பயிற்சி நோக்கி முற்கூறினான் என்பது

29. இருவகைய என்பன

31. உண்டாள் எவ்பது

பக்கம் ௧௨௨

2. இத்துணையுங் கூறினா, நான்கு

9. அம்மூ உருவின

31. தனியே கூறாமல்

பக்கம் ௧௨௩

17. மும்மூன்று ஒன்பதும்

20. யாவன் யாவள் யாவர்

21. பதினைந்து பெயரும் ஒருவன்

31. ஆயிரு பெயரும்

பக்கம் கஉச

16. முன்னடுத்த இகர ஈற்றுப் பெண்டாட்டி
11. நம் என்ற சொல்லை ஊர்ந்து வருகின்ற
12. முறைமைப் பொருண்மையைக் கருதாத
15. அவ்விருவகைப் பெயர்ச் சொற்களும், சுட்டெழுத்தை முதலாகவுடைய
23. பாலறிய வந்த

பக்கம் கஉரு

2. உணர்த்துதல்
10. காணுவரை இறந்து ஆண் தன்மையளாகி
12. மாரோகத்தார் இவ்வாறு வழங்குவர் எனக்கொள்க. மாரோகம் என்பது
23. இதுவும் உயர்திணை யொருசார்ப் பெயர்களை உணர்த்துதல்
25. என்றாற் போல்வன ஒருவன்
27. என்றாற் போல்வன தான்
29. அவனிக் கிராமத்தார் என்றாற் போல்வன தாம் திரண்ட திரட்சியினாற் பெற்ற
30. பெயர்களும், உண்டவன் என்றாற் போல்வன தான் செய்யும்
32. என்றாற் போல்வன தனது

பக்கம் கஉசு

2. என்றாற் போல்வன தனக்கு ஓர் பண்பினால்
3. தந்தையார். தாயார் என்றாற் போல்வன பல்லோரை
4. முறைமையால்
5. என்றாற் போல்வன பல்லோரை
7. குறவர், இறவுளர், குன்றவர் என்றாற் போல்வன
8. குறிஞ்சி முதலாகிய ஐந்திணை நிலைமையாற்பெற்ற பெயர்களும், இளந்துணை மகாஅர்
11. என்றாற் போல்வன
12. என்றாற் போல்வன இத்துணைவர்
13. பெற்ற பெயர்களுமாய் உள்ள அனைத்துப் பெயர்களும், மேற்கூறிய பெயர்கள் போல
20. பெயர்க்குப் புறனடை
22. அத்தன்மையன பிறவுமாயுள்ள

பக்கம் கஉஎ

8. உது என்று சொல்லவருகின்ற சுட்டு முதற்பெயர்களும்
10. உஃது என்னும் ஆய்தத் தொடர்மொழி
13. அவ், இவ், உவ், என்னும்
25. யொருசார் பெயர்களை உணர்த்துதல் நுதலிற்று
27. என்று சொல்லப்படுகின்ற
29. வரும் வினைப்பெயரும், கரியது
30. கொண்ட பெயர்ச் சொல்லும், ஒன்று

பக்கம் கஉஅ

2. பெயர்ச் சொல்லும், பொன்னனது, பொன்னன என்றாற் போல
3. பெயர்ச் சொல்லும், உட்பட
5. அஃறிணைப் பெயராம் (எ - று.)
14. பலவறி சொல்லாகக் கொள்வழி உடைய எனக் கள்ளொடு சிவணாத
25. இஃது அவ் அஃறிணை
27. (இ - ள்.) மேற்கூறிய அத்தன்மையன
29. பெயராம் (எ - று.)

82. என்பனவும் அவற்றின்பாற் படும்

பக்கம் கஉகூ

8. உணர்த்துதல்

10. (இ - ள்.) தெரியும் நிலைமையை உடைய அஃறிணையிடத்து ஒருமையினும் பன்மையினும் இயறலையுடைய பெயர்கள் யாது தெரியு நிலைமை எனின், ஒருமையும் பன்மையுமாகிய பால்கள்

29. (எ - டு.) சாத்தன் வந்தான், சாத்தன் வந்தது என வரும். 'நினையுங்காலை' என்றதனான் தத்தம் சினைப் பெயரும், பன்மைச் சினைப் பெயரும், ஒருமைச் சினைப் பெயரும் எனப்பட்ட அந்நான்கும் என்று சொல்லும் சினைப் பெயரது நிலைமையை என்றவாறு. வினையானை யன்றித் தத்தம்

பக்கம் கூ௦

13. பலரை உணர்த்தாது என்று வரைந் தோதப்பட்ட செய்யும் என் சொல்

15. தோற்ற நிற்றலும்

23. ஆராய்ந்ததனுன் வியங்கோளானும் உயர்திணை

பக்கம் கூக

15. வாளாது தாமெனவும், தானெனவும்

16. விதந்தோதப்பட்ட வல்லாத பிறவும் பெயர்களிடத்து

பக்கம் கூஉ

10. இவ்வாறு இவ்வகைப் பட்டமையின்

12. அவ்வகைப் படா ஒழிந்த பெயர்கள் ஐந்தும் அவ்வோதிய வாய்பாட்டவேயாகும்

22. உணர்த்துதல்

26. இயற்பெயரது நிலைமை (எ - று.)

பக்கம் கூ௩

3. உணர்த்துதல்

7. நிலைமை (எ - று.)

14. சினை முதற் பெயரினையும் நான்கு

15. உணர்த்துதல்

18-19. எனப்பட்ட அந்நான்கும் என்ப, சினைமுதற்(பெயர் எ - று.)

23. முறைப் பெயரினையும் இரண்டு

24. உணர்த்துதல்

26-27. அவ்விரண்டும் என்ப முறைப்பெயரது நிலைமை (எ - று.)

பக்கம் கூச

3. திணைக்கு உரியவாறு உணர்த்துதல்

12. எனவும் வரும்

13. வந்தாள் எனவும், குறளி

16. வந்தாள் எனவும்

17. தாய் வந்தாள் எனவும் வரும்

27. அஃறிணையுள் ஒன்றற்கும்

பக்கம் கூரு

12. உணர்த்துதல்

18-19. என மூன்று வகைப்படும்

28-29. ஈண்டு ஒன்றே பலவே என்றதனை அஃறிணை ஆண் ஒன்றனையும் பெண் ஒன்றனையுமாகக் கொள்க

பக்கம் கூசு

3. உணர்த்துதல்

10. வந்தாள் என வரும். ஒன்று என்பதனை அஃறிணை ஆண்பால் மேலும் பெண்பால் மேலும் கொள்க. ஒருவர் என்பதனை உயர்திணை இருபால் மேலும்

கொள்க. ஒருமைச் சினைப் பெயர்

17. உணர்த்துதல்

27. உணர்த்துதல்

30. (எ - டு.) தான் வந்தான், தான் வந்தாள், தான் வந்தது என வரும்

பக்கம் கஙஎ

6. உணர்த்துதல்

8. நிலைமையுடைய

10-11. (எ-டு.) எல்லாம் வந்தார், எல்லாம் வந்தன, எல்லாம் வந்திர் எனவரும்

12-13. வாளா பன்மை என்றமையின் இரண்டிடத்து ஆண்மையும், பெண்மையும் கொள்க

பக்கம் கஙஅ

2. உயர்திணைக்கேஉரித்தாகாது முன்னிலைக் கண்ணும்

3-4. இன்னுழி வரவன்றி உயர்திணைப் பெயராம் என்றவாறு போலும் என்பது

8-9. திணைக்குரியவாமாறு உணர்த்துதல் நுதலிற்று

11. தெரிவில

14. தத்தம் மரபின் வினை

15. என்றமையின், இவையும்

19. நீ வந்தாய் எனத் திணை

24. உணர்த்துதல்

26. (இ - ள்.) அவ் விரண்டனுள்ளும்

பக்கம் கஙகூ

9-10. கொள்க. இத்துணையும் பெயர் ஆராய்ச்சியெனக் கொள்க

15. உணர்த்துதல்

22. என்பது ஒரு சொல்லுதற் கண்ணேயோ எனின்

25. ஆண்டுச் சொல்லாற்படுவது

30. பாலதிகாரத்தே சொல்லாதது என்னை எனின்

பக்கம் கசய

14. மேற்கூறிய நீயிர்

15. உணர்த்துதல்

17. (இ - ள்.) நீயிர், நீ என்றும் ஒருவர் என்றும் நின்ற இவை இரண்டும் நீயிர் நீ என்பன உயர்திணைக் குரித்து

26-27. இனிக் காட்டுக்கண் பொழுதுபோகா நின்றுழி ஒருவர் புகுந்தார்

34. கொள்ளப்பட்டது என்பது

கல்லாடனார் விளக்கவுரை

★

பண்டித வித்துவான்
சைவப்புலவர், சித்தாந்த நன்மணி
கு. சுந்தரமூர்த்தி

தொல்காப்பியம் சொல்லதிகாரம்

கல்லாடனார் விளக்கவுரை

பண்டித வித்துவான், சைவப்புலவர், சித்தாந்த நன்மணி

கு. சுந்தரமூர்த்தி அவர்கள்

க. கிளவியாக்கம்

முதல் நூற்பா

சொல் இலக்கணத்தை எட்டு வகையான் உணர்த்தினர் என்னும் கருத்து இளம்பூரணர் உரையைத் தழுவியதாகும்.

"சொல்லிற்கு இலக்கணம் ஆமாறு என்னையோ வெனின்" என்று தொடங்கும் பகுதி பிழைபட உள்ளது. "இவற்றுள் வழு என்பது சொல்லிற்கு இலக்கணம் ஆமாறு என்னையோ எனின்" என்று அவ்வினா தொடங்கின் திருத்தமாக இருக்கும். இப்பகுதிக்கு விளக்கம் வருமாறு:

சொல்லிலக்கணத்தை எட்டுவகையாக ஆராய்ந்துள்ளார் ஆசிரியர். அவையாவன: திணை, பால், வழு, வேற்றுமை, தொகை, இடம், காலம், வழக்கு என்பன. இவற்றுள் வழு ஒழிந்த ஏழும் சொற்கள் பெற்றுவர வேண்டுவன. வழுவென்ற ஒன்று சொற்கள் பெற்றுவர வேண்டாதது. அன்னதாகவும், வழு என்பதும் சொல்லிலக்கணம் ஆம் என்பது என்னை? என்பதே ஈண்டைய வினா. ஒன்றற்கு இலக்கணம் கூறுங்கால் அது பெற்றிருக்க வேண்டுவனவற்றையும் கூறலாம்; அது பெறாதிருக்க வேண்டுவனவற்றையும் கூறலாம். இவையிரண்டும் அதற்குரிய இலக்கணம் என்றே கருதல் வேண்டும். வினைக்கு இலக்கணம் கூறுங்கால் இவ்விரண்டையும் வைத்தே ஆசிரியர் கூறுகின்றார்.

> "வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
> நினையுங் காலைக் காலமொடு தோன்றும்"

என்றவிடத்து வேற்றுமை கொள்ளாது என்பது இன்மை முகத்தான் கூறிய இலக்கணம் ஆகும்; காலமொடு தோன்றும் என்புழி உண்மை முகத்தான் கூறிய இலக்கணம் ஆகும். அது போலவே ஈண்டும் சொற்கள் திணை பால் முதலிய ஏழனையும் பெற்றுவர வேண்டும் என அதற்கு உண்மை முகத்தானும், வழுவை நீக்கி

வரவேண்டும் என அதற்கு இன்மை முகத்தானும் விதி கூறியுள்ளார் என்பது.

எழுத்தோடு சொல்லிற்குரிய வேற்றுமையை இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் கூறியவாறே இவ்வுரையாசிரியரும் கூறியுள்ளார்.

"சொற்கள் பொருள்கள்மேல் ஆமாறு உணர்த்தினமையாற் கிளவியாக்கம் ஆயிற்று" என்னும் கருத்து இளம்பூரணர், தெய்வச் சிலையார் ஆகியோர்க்குக் கருத்தாகும். சேனவரையரும், நச்சினார்க் கினியரும் "வழுக்களைந்து சொற்களை ஆக்கிக் கொண்டமையால் கிளவியாக்கம் ஆயிற்று எனக் கூறி, இக் கருத்தினை இரண்டாவது கருத்தாக ஏற்றுக் கொண்டனர்.

"கிளவி என்பது சொல்;" என்று தொடங்கும் பகுதியில் சில தொடர்கள் விடுபட்டிருக்க வேண்டுமெனத் தெரிகிறது. அப்பகுதி கீழ்வருமாறு இருத்தல் வேண்டும்.

"கிளவி என்பது சொல்; ஆக்கம் என்பது சொற்கள் பொருள்கள் மேலாமாறு. சொற்கள் பொருள்கள் மேலாமாறு உணர்த்தினமையின் கிளவியாக்கமென்னும் பெயர்த்து. ஒருவன் மேலாமாறு இது, ஒருத்தி மேலாமாறு இது, பலர் மேலாமாறு இது, ஒன்றன் மேலாமாறு இது, பலவற்றின் மேலாமாறு இது, வழுவாமாறு இது, வழுவமையுமாறு இது எனப் பொருள்கண் மேலாமாறு உணர்த்தினமையின் கிளவியாக்கமென்னும் பெயர்த்தாயிற்று. மற்று, ஏனையோத்துக்களுள்ளும் பொருள்கள் மேலாமாறேயன்றே உணர்த்தினது; பொருளல்லவற்றின் மேலாமாறுணர்த்திய தில்லை யெனின், ஏனையோத்துக்களுட் பொருட்கண் மேலாய் நின்றவற் றிலக்கண முணர்த்தினார்; ஈண்டு அவைதம்மை ஆமாறு உணர்த்தினார் என்பது."

சொல்லதிகாரத்தினுள் உள்ள ஒன்பது ஒத்துக்களுள் பின்னைய ஐந்தியல்கள் நீங்கலாக முன்னைய நான்கியல்களும் உணர்த்த வந்த பொருண்மை எது என்பதில் உரையாசிரியர்களிடையே கருத்து வேற்றுமையுள்ளது.

இந்நான்கியல்களில் கிளவியாக்கம் என்பது பெயர் வினை இடை உரி என்ற நான்கு சொற்களுக்கும் உரிய பொது இலக்கணம் கூறும் இயலாகும் என்பது தெய்வச்சிலையார் ஒழிந்த ஏனைய உரையாசி ரியர்கள் அனைவரின் கருத்தாகும். தெய்வச்சிலையார் இவ்வியல் அல்வழியிலக்கணம் உணர்த்த வந்தது என்பர். அடுத்து இருப்பன வேற்றுமை இயல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு என்னும் மூன்று இயல்களாகும். இவை முறையே வேற்றுமை இலக்கணத் தையும், அதனது மயக்கத்தையும், சிறப்பில்லாத விளிவேற்றுமை

யையும் உணர்த்த எழுந்தனவாகும். நான்கு சொற்களுக்கும் உரிய பொது இலக்கணத்தைக் கிளவியாக்கத்தில் உணர்த்திய ஆசிரியர், தொடர்ந்து அந்நால்வகைச் சொற்களையும் எடுத்துக்கொண்டு, முறையே அவ்வவற்றின் சிறப்பிலக்கணத்தைச் சொல்ல முற்பட்டிருக்கவேண்டும். அங்ஙனமின்றி வேற்றுமை யிலக்கணம் கூறும் இம்மூன்றியல்களையும் இடை வைத்தது ஏன்? என்பது பற்றித் தெய்வச்சிலையார் ஒழிந்த நான்கு உரையாசிரியர்களும் ஆராய்ந்துள்ளனர்.

முதல் உரையாசிரியராகிய இளம்பூரணர், இம்மூன்றியல்கள், பின்னர் இருக்கும் பெயரியல் ஒன்று ஆக நான்கு இயல்களுமே பெயரிலக்கணம் உணர்த்த வந்தது என்றும், பெயரது இலக்கணங்களில் அது வேற்றுமை ஏற்று வரும் என்பதும் ஒன்று ஆதலின், அதனைக் கூற வந்தவர் இயைபு பட்டமையால் அவ் வேற்றுமை யிலக்கணத்தையும் இடையில் கூறினர் என்றும் கூறுவர். கல்லாடரும் இவர் கருத்தினரேயாவர்.

ஆனால் சேனாவரையர் இக்கருத்தினை மறுத்து வேறு காரணம் கூறுவர். அவர்தம் மறுப்பும் கருத்தும் வருமாறு:

"பொது விலக்கணமுணர்த்திச்சிறப்பிலக்கணம் உணர்த்துதல் முறையாகலின், முதற்கண்ணதாகிய பெயர்ச்சொற்குப் பயனிலை கோடலும் உருபேற்றலும் காலந்தோன்றாமையுமாகிய இலக்கண முணர்த்துவார் இயைபு பட்டமையான் வேற்றுமையிலக்கணம் உணர்த்தினாரெனை மேலோத்தினோடு இவ்வோத்திடை இயைபு கூறினாரால் உரையாசிரியரெனின், அற்றன்று; இவ்வோத்துப் பெயரிலக்கணம் நுதலி யெடுத்துக் கொள்ளப்பட்டதாயின், உருபேற்றலும் பயனிலைகோடலும் காலந்தோன்றாமையுமாகிய பெயரிலக்கணம் முன்னோதி, இயைபு படுதலான் வேற்றுமையுணர்த்தும் கருத்தினராயின் அவற்றையும் இன்ன விலக்கணத்தன என உணர்த்திப், பின்னும் எடுத்துக்கொண்ட பெயரிலக்கணமேபற்றி யோதிப் பெயரியலென ஓரோத்தான் முடியற்பாற்றன்றே; அவ்வாறன்றி வேற்றுமை யிலக்கணமே முன்கூறி "அன்றியனைத்தும் பெயர்ப் பயனிலையே" (சொல்-67) எனவும், 'ஈறு பெயர்க்காகும் இயற்கைய என்ப" (சொல்-70) எனவும் வேற்றுமை யிலக்கணம் கூறி, அச் சூத்திரத்தாற் பயனிலை கோடலும், உருபு ஏற்றலும் பெயாக் இலக்கணமென்பது உய்த்துணர வைத்துப், பின்னும் வேற்றுமை இலக்கணமே உணர்த்தி, இதனை வேற்றுமை யோத்தென்றும், அவற்றது மயக்க முணர்த்திய ஒத்தை வேற்றுமை மயங்கியலென்றும், சிறப்பில்லா விளி வேற்றுமை உணர்த்திய ஒத்தை விளிமர பென்றும், நுதலியதனாற் பெயர் கொடுத்து, மூன்றோத்

தாக வைத்துப் பெயரியலென வேறோரோத்திற்குப் பெயர் கொடுத்தமையானும், "எல்லாச் சொல்லும் பொருள் குறித் தனவே" என்பது முதலாகிய ஐந்து சூத்திரமும் பெயரிலக்கணம் உணர்த்தும் ஒத்தின் முன் வையாது இடை வைத்தல் பொருந்தா மையானும், இவ்வோத்துப் பெயரிலக்கணம் நுதலி எடுத்துக் கொள்ளப்பட்டதன்று, வேற்றுமை இலக்கணம் நுதலியெழுந்த தெனவேபடும்; அதனான் அவர்க்கது கருத்தன்றென்க."

"நான்கு சொற்கும் பொதுவிலக்கணம் உணர்த்தினர், அதற் கிடையீடின்றி அவற்றது சிறப்பிலக்கணம் உணர்த்துதல் முறைமை யாயினும், வேற்றுமையிலக்கணம் உணர்த்துதற்கு வேறிடமின் மையானும், பொது இலக்கணமாதல் ஒப்புமையானும், உருபேற்றல் பெயர்க்கு இலக்கணமாகலின் வேற்றுமை யுணர்த்திப் பெயருணர்த்தல் முறையாகலானும், கிளவியாக்கத்திற்கும் பெய ரியற்கும் இடை வேற்றுமை இலக்கணம் உணர்த்திய எடுத்துக் கொண்டார் என்பது சேனாவரையர் கருத்தாகும். நச்சினார்க் கினியரும் இக்கருத்தினரே ஆவர்.

தெய்வச்சிலையார், அல்வழி இலக்கணத்தைக் கிளவியாக்கத் திலும், வேற்றுமை யிலக்கணத்தை அதனையடுத்த மூன்று இயல் களிலும், அடுத்துப் பெயர் வினை இடை உரிகளின் இலக்கணங் களை அவ்வவ்வியல்களிலும்கூறி, இவற்றுள் எஞ்சிய இலக்கணத்தை எச்சவியலிலும் கூறினார் என்பர்.

உரிச்சொல் வகைக்குக் காட்டிய எடுத்துக் காட்டில் "செய்யார் தேஎந் தோமரல் கலிப்ப" என்பது "நெருமரல்கலிப்ப" என்றிருப்பின் நன்று.

ஒரு சொல் மற்றொரு சொல்லொடு தொடரும் பொழுது மூன்று வகையாகத் தொடரும் அவையாவன:-(1) தொகை நிலை வகை. (2) எண்ணுநிலை வகை. (3) பயனிலை வகை.

(1) **தொகைநிலை வகை**:- 'யானைக் கோடு' என்பது இதற்கு எடுத்துக் காட்டு. இத்தொடர் யானையது கோடு என விரிதலின் ஆறும் வேற்றுமைத் தொகையாகும். எனவே யானை யென்ற சொல்லிற்கும், கோடு என்ற சொல்லிற்குமுள்ள தொடர்பு (ஆறும் வேற்றுமை) தொகைநிலைத்தொடர் ஆகும்.

(2) **எண்ணுநிலை வகை** :- 'நிலனும் நீரும்' என்பது இதற்கு எடுத்துக் காட்டாம். இது நிலனும் நீரும் என எண்ணுதற்கண் வந்துள்ளது. எனவே நிலன் என்ற சொல்லுக்கும் நீர் என்ற சொல்லுக்கும் உள்ள தொடர்பு (எண்ணுதற்கண் வந்துள்ளமை யின்) எண்ணுநிலை வகையாகும்.

(3) பயனிலை வகை :- "சாத்தன் உண்டான்" என்பது இதற்கு எடுத்துக் காட்டாம். சாத்தன் என்னும் எழுவாயை முடிக்க வந்த சொல் உண்டான் என்பதாம். எனவே அதற்கு அது பயனிலையாம். ஆதலின் சாத்தன் என்ற சொல்லிற்கும் உண்டான் என்ற சொல்லிற்கும் உள்ள தொடர்பு பயனிலை வகையால் வந்ததாகும்.

இவற்றுள் உயர்திணை என்பது தொகைநிலைவகையான் வந்ததாகும். அத் தொகை நிலையினுள்ளும் இது இறந்தகால வினைத் தொகையாகும் என்பது கல்லாடர் கருத்தாகும். இதுவே இளம்பூரணர்க்கும், நச்சினார்க்கினியர்க்கும் கருத்தாகும்.

தெய்வச்சிலையார் இது பண்புத் தொகையென்று கூறி வினைத் தொகையுமாம் என்பர். நச்சினார்க்கினியர் பண்புத் தொகை என்ற கருத்தை மறுப்பர். சங்கர நமச்சிவாயர் வினைத் தொகை என்ற கருத்தை மறுத்துப் பண்புத் தொகை என்ற கருத்தே பொருத்தம் என்பர். இத்திறமெல்லாம் அவரவர் உரை நோக்கி யறிக. இவற்றுள் சங்கரநமச்சிவாயர் கருத்தே வலியுடையதாகும்.

"என்மனார்" என்பதுபற்றி இவர் கூறும் சொல் முடிபு இளம்பூரணர் கருத்தைத் தழுவியதாகும். இறையனார் களவியலுரைகாரரும் இக்கருத்தினரே ஆவர். எனினும் இக் கருத்தைச் சேனாவரையரும் தெய்வச்சிலையாரும் வன்மையாக மறுப்பர். அவர்களின் மறுப்புக்கள் வருமாறு :-

"என்ப என்னும் முற்றுச் சொல்லினது பகரம் குறைத்து மன்னும் ஆரும் என இரண்டு இடைச் சொல் பெய்து விரித்தார் என்று உரையாசிரியர் கூறினாரால் எனின், 'என்மனார்' என்பது இடர்ப்பட்டுழிச் சிறுபான்மை வராது, நூலுள்ளும் சான்றோர் செய்யுளுள்ளும் பயின்று வருதலானும், "இசை நிறை" என்பது மறுத்துப் பொருள் கூறுகின்றார் பின்னும் இசைநிறை என்றல் மேற்கோள் மலைவாதலானும், அவர்க்கது கருத்தன்றென்க. மாணாக்கர்க்கு உணர்வு பெருகல் வேண்டி வெளிப்படக் கூறாது உய்த்துணர வைத்தல் அவர்க்கு இயல்பாகலான் செய்யுள் முடிபென்பது கூறாராயினார்" என்பர் சேனாவரையர்.

"என்மனார்" என என்பவென்னும் முற்றுச் சொல் திரிந்து நின்றது. குறைக்கும் வழிக் குறைத்தல் என்பதனான் பகரம் குறைத்து, விரிக்கும் வழி விரித்தல் என்பதனான் மன்னும் ஆருமென இரண்டிடைச் சொற்பெய்து 'என்மனார்' என்றாயிற்று எனப் பொருளுரைப்பவால் எனின், பகரங் குறைக்கின்றது செய்

யுளின்பம் வேண்டியன்றே ஆண்டுக் குறைத்க்வழிப் பின்னும் இரண்டெழுத்து விரிக்கல் வேண்டுமாயிற் குறைத்ததனுற் பயனின் மையின் இவ்வாறு எழுதும் உரை குற்றமென்க." என்பர் தெய்வச் சிலையார்.

'என்மனார்' என்பது செய்யுள் முடிபு எய்தி நின்றதோர் ஆரீற்று எதிர்கால முற்றுச் சொல் எனச் சேனாவரையரும், ஆரீற்று நிகழ்கால முற்று வினைத்திரி சொல் என நச்சினார்க்கினியரும், இது எதிர்கால முற்றுச் சொல் எனினும் ஈண்டு இறந்த காலங்குறித்து நின்றது எனத் தெய்வச்சிலையாரும் கூறுவர்.

'அவரல' என்பதற்கு 'அவரின் நீங்கிய' என இவர் உரை வகுத்திருப்பதால் அது நீக்கப் பொருண்மைக்கண் வந்த ஐந்தாம் வேற்றுமைத் தொகை ஆயிற்று.

அஃறிணை என்மனார் அவரல பிறவே' என்பதில் பிற வென்ற சொல்லின் இன்றியமையாமையை விளக்குகின்றார் கல்லாடர். அஃறிணையுள் உயிருடையன உயிரில்லனவாகிய பகுப்புள; அவற்றில் ஆண் பெண் பகுப்புள்ளனவும் உள. அவற்றையெல்லாம் தழுவு தற்கே 'பிற' என்ற சொல்லை ஆசிரியர் பெய்தார் என்று கூறுகிறார்.

உ ஆம் நூற்பா

'ஆடூஉவறி சொல் மகடூஉவறிசொல்' என்புழி சொல் ஆடூஉ வையும் மகடூஉவையும் அறிதற்கு உரியவல்ல வாகலின், அவற்றை யறிதற்கு ஏற்புடைய சாத்தன் என்ற ஒரு சொல்லை வரவழைத்துக் கொள்ள வேண்டும் என்றனர் கல்லாடர்.

நச்சினார்க்கினியரும் ஆடூஉவறி சொல் என்பதற்கு ஒருவன் ஆண்மகனை யறியும் சொல் எனப் பொருள் கொள்வர்.

தெய்வச்சிலையார் ஆடூஉவறி சொல் என்பது 'ஆண்மகனை யறியும் சொல்' என்றும், 'அறிவார்க்குக் கருவியாகிய சொல் அறி சொல்லாயிற்று' என்றும் விளக்கம் காண்பர்.

சிவணி - கூடி. ஆடூஉவறி சொல்லும், மகடூஉவறி சொல்லும், பல்லோர் அறியும் சொல்லோடு கூடி மூப்பாற் சொல்லாகின்றன. அவை மூன்றும் உயர்திணையனவாம் என்பது கருத்து.

சொற்பொருள் உரைக்குங்கால் சிவணி என்பதற்குக் 'கூடி' என உரைகொண்ட கல்லாடர், பின்னர் விளக்கம் தரும்பொழுது 'கூட' எனப் பொருள் உரைக்கின்றார். எனவே 'சிவணி' என்பதைச் 'சிவண' எனத் திரித்துப் பொருள் காண்பது இவர் கருத்து என்று

அறியலாம். நச்சினார்க்கினியர் உரையில் 'சிவணி என்பதைச் சிவண எனத் திரிப்பாரும் உளர்' என்றொரு தொடர் காணப்படுகின்றது. அவருக்குப் பிற்பட்டவர் இவ்வுரையாசிரியர் ஆதலின், இக் குறிப்பு இவரைக் குறிக்கும் என்றல் கூடாதாம். எனினும் 'சிவண' எனத் திரித்துப் பொருள் காணும் முறைமை நச்சினார்க்கினியர் காலத்திற்கு முன்னமேயே இருந்தது எனத் தெளிதல் தக்கதாம். அம் முறையைப் பின்பற்றியே கல்லாடரும் கொண்டு, கூறினாராதல் வேண்டும்.

சிவணி என்பதைச் செய்தென்னும் வினையெச்சமாகக் கொள்பவர் சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் ஆவர். இங்ஙனம் உரைப்பாரும் உளர் என்ற அளவிலேயே இவ்வுரையாசிரியர் நிற்பத் தெய்வச்சிலையார் இச்கருத்தினை மறுத்தும் உரைத்தனர். அம் மறுப்பு வருமாறு:—

"சிவணி என்பது வினையெச்சம் அன்று; ஒடுவின் பொருண்மை தோன்ற வந்தது; தாயொடு கூடி மூவர் என்றாற் போல."

"இதனால் சொல்லியது" என்ற பகுதிக்கு விளக்கம் வருமாறு:—,

முதல் நூற்பாவில் சொல் உயர்திணைச் சொல், அஃறிணைச் சொல் என இருவகைப்படும் என்றார். இந்நூற்பாவில் அவ்வுயர் திணைச் சொல் மூவகைப்படும் எனக் கூறியிருக்க வேண்டும். அங்ஙனம் கூறாது, ஆடூஉவறி சொல், மகடூஉவறி சொல், பலரறி சொல் ஆகிய மூன்றும் உயர்திணையின் பாற்படும் என்கின்றார். எனவே இந்நூற்பா, உயர்திணையில் எத்தனை பகுதியுண்டு என்பதை விளக்குமுகமாக அமைந்துள்ளதே யன்றி, உயர்திணைச் சொல் எத்தனை வகைப்படும் என்பதை விளக்க வந்ததாக இல்லை. இங்ஙனம் கூறின் முன் நூற்பாவோடு இந்நூற்பா பொருட் பொருத்தம் அற்றதாய் ஆகிவிடும். ஆதலின் அம்மூப்பாலும் உயர்திணையினவாம் என்றாரேனும், உத்தியால் மேற்கூறிய உயர் திணைச் சொல் மூன்று கூறுபடும் என்பது கருத்தாகக் கொள்ள வேண்டும் என்பதாம்.

சேனாவரையரும் "உயர்திணைச் சொல் உணர்த்தி அதனது பாகுபாடு கூறுகின்றார் ஆகலின், "அம்மூப்பாற் சொல் உயர் திணையவ்வே" என்றாராயினும், உயர்திணைச் சொல் மூன்று பாகு பாடுபடும் என்பது கருத்தாகக் கொள்க" என இக்கருத்தினைச் சுருங்கக் கூறினர்.

௪ ஆம் நூற்பா

இந் நூற்பாவில், 'என்னுதலிற்றோ எனின்' என்று தொடங்கும் பகுதியுள், 'மன்பதையுள்' என்ற சொல்லை நீக்கி 'வகையுள்' என்ற சொல்லை அமைத்துக் கொள்ளுதல் நன்றாகும்.

நச்சினார்க்கினியரும் இந் நூற்பாவின் கருத்தினை விளக்கும் பொழுது "இஃது ஐயம் அறுக்கின்றது; மேல் தொகையுள் ஒழிந்த தெய்வத்தையும் வகையுள் ஒழிந்த பேடியையும் இவ்வாறும் என்றலின்." எனக் கூறுமாறு அறிக.

ஈண்டுத் தொகை என்றது திணையையும் வகை என்றது பாலையும் குறிக்கும். மேல் "ஆயிருதிணையின் இசைக்குமன சொல்லே" என்ற தொகையுள் அடங்காத தெய்வத்தை (தேவரை) உயர்திணையிலும், பாலுள் அடங்காத பேடியைப் பெண்பாலிலும் அடக்குதல் இந் நூற்பாவின் கருத்தாகும்.

'உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே' என்பதால் மக்களும் 'தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும், உயர்திணை மருங்கில் பால்பிரிந் திசைக்கும்' என்பதால் தெய்வமும் (தேவரும்) உயர் திணையாம் என்பது பெறப்படுகின்றது. இவ்வளவே கொள்வர் சேனாவரையரும் தெய்வச்சிலையாரும். எனினும் இளம்பூரணர், நச்சினார்க்கினியர், கல்லாடர் ஆகிய மூவரும் "அந்தந் தமக்கிலவே" என்ற மிகையினால் 'நரகரும்' உயர்திணையுள் அடங்குவர் எனக் கூறினர். இக்கருத்தே பற்றி நன்னூலாரும், "மக்கள் தேவர் நரகர் உயர்திணை" என்றனர். எனினும் நரகரை உயர்திணையுள் அடக்குதல் பொருந்தாது என்பர் தெய்வச்சிலையார். அம்மறுப்பு வருமாறு:—

"தேவரும் மக்களும் விலங்குமாகிய கதிப் பொருண்மை கூறி, நரக கதிப் பொருண்மை கூறாதது என்னையெனின், அக்கதி மேனிகழ்வதோர் வழக்கின்மையின் கூறாராயினர். நரகன் வந்தான், நரகி வந்தாள், நரகர் வந்தார் என வழங்குபவாலெனின் அக்கதியுள் தோன்றுவார் ஆணும் பெண்ணுமாகிப் போகம் நுகர்வார் என்னும் இலக்கணம் இன்மையான், மக்களில் தூய்மையில்லாதாரை உலகத்தார் வழங்குமாறு அவையென்க. 'நரகர் துயருழப்பர்' என அக்கதிமேல் தோற்றுவார் (தம்) மேலும் வருமாலெனின், அவ்வாறு வருவன பால் கூறப்படுதலின்றி ஆணும் பெண்ணும் வரையறுக்கப்படாத பொருளை உயிர்த் தன்மையைக் குறித்து உயர்திணைப் பன்மையான் வழங்கினாரென்க."

நிரைய பாலர், நரகர் என்பன ஒரு பொருளன.

"சுட்டிய" என்பது செய்திய என்னும் வினையெச்சம் என்பதும், "பெயர்நிலைக்கிளவி" என்பது ஆகுபெயராய் முறையே

பேடியையும், தெய்வத்தையும் குறிக்கும் என்பதும் இளம்பூரணர் கருத்தெனச் சேனாவரையர் உரையால் தெரிகிறது. ஆனால் இளம்பூரணத்தில் இக்குறிப்பில்லை. இவர்தம் கருத்தே நச்சினார்க்கினியருக்கும், இவ்வுரையாசிரியராகிய கல்லாடருக்கும் கருத்தாக உள்ளது. இதனைச் சேனாவரையர் வன்மையாக மறுத்துரைப்பர். அம்மறுப்பு வருமாறு:

"சுட்டியவென்பது செய்யியவென்னும் வினையெச்சமென்றும், ஆண்மை திரிதல் சொற்கு இன்மையிற் பெயர்நிலைக் கிளவி என்பது ஆகுபெயராய்ப் பொருள்மேல் நின்றதென்றும் உரையாசிரியர் கூறினாரால் எனின்:- ஆண்மை திரிதல் பெண்மைத் தன்மை எய்துதற் பொருட்டன்றிப் பேடிக்கு இயல்பாகலிற் பெண்மை சுட்ட வேண்டி ஆண்மை திரிந்த வென்றல் பொருந்தாமையானும், பொருளே கூறலுற்றாராயின் ஆசிரியர் பேடியுந் தெய்வமும் எனத் தாம் கருதிய பொருள் இனிது விளங்கச் சுருங்கிய வாய்பாட்டாற் சூத்திரிப்பராகலானும், அவர்க்கது கருத்தன்மையான், உரையாசிரியர்க்கும் அது கருத்தன்றென்க.'

௫ ஆம் நூற்பா

உண்டான் என்ற வினைச்சொல்லில் நான்கு எழுத்துக்கள் உள்ளன. எனினும் ஆண்பாலை யுணர்த்துதற்கு னகர வொற்றே கருவியாக உள்ளது. ஏனைய மூன்றெழுத்துக்களும் உண்டாள் எனப் பெண்பாலை யுணர்த்தும் வழியும், உண்டார் எனப் பலர்பாலை யுணர்த்தும் வழியும் வருகின்றன. ஆதலின் ஆசிரியர் னகர வொற்றினையே விதந்து "னஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல்" என்றார்.

இளம்பூரணர், நச்சினார்க்கினியர் ஆகிய இருவருக்கும் இதுவே கருத்தாம்,

௬ ஆம் நூற்பா

"இனி முற்சூத்திரத்துரையில் விரித்தாங்கு....... ஈண்டும் விரித்துரைத்துக் கொள்க" என்று உரையில் உள்ளது. அங்ஙனம் விரித்துரைக்குமாறு:

உண்டாள் என்புழி நான்கு எழுத்துக்கூடிப் பெண்பால் உணர்த்திற்றே யாயினும், பிறவெழுத்துக்கள் பிறபாலுணர்த்தும் வழியும் வருதலான் ளகர வொற்றையே தலைமை பற்றி மகடூஉ அறிசொல் என்றார்.

௭ ஆம் நூற்பா

பலர்பாலுக்குரிய மூன்று ஈறுகளையும் இம்முறையே கூறற்குரிய காரணத்தைச் சேனாவரையரே முதன்முதல் விளக்கினார்.

அக்கருத்தினையே நச்சினார்க்கினியரும் இவ்வுரையாசிரியரும் தழுவினர்.

பலர்பால் ஈறாக வருதற்குத் தன்மைப் பன்மைவினை முற்றிற்குரிய ஈறான அம், ஆம் என்பனவும் உரியவேனும், அவை உயர்திணையேயன்றி அஃறிணையையும் உளப்படுத்துதற்கு உரிமையுடையன வாதலின் அவற்றை விலக்கி உயர்திணைப் பன்மையையே உளப்படுத்துதற்கு உரியதான இம்மூன்று ஈறுகளையே கூறினர்.

தன்மைச் சொல் அஃறிணையையும் உளப்படுத்துதற்குரித்து என்பதைத்,

> "தன்மைச் சொல்லே அஃறிணைக் கிளவியென்று
> எண்ணுவழி மருங்கின் விரவுதல் வரையார்" (கிளவி—43)

என்பதனாலும் அறிக.

'பலரறி சொற்கு ர், ப, மார் ஆகிய மூன்று ஈறுகளும் நேரத் தோன்றும்' எனக் கூட்டி வினைமுடிவு செய்யவேண்டும் என்பது இவ்வுரையாசிரியர் கருத்து. இக்கருத்து இளம்பூரணருரையைத் தழுவியதாகும்.

இங்ஙனமன்றி நேரத் தோன்றும் பலரறிசொல் என்பதனை எழுவாயாகக் கொண்டு, மாரைக்கிளவி யுளப்பட மூன்றும் என்பதனைப் பயனிலையாகக் கொள்ளின் அது பொருந்தாதாம். அதற்குரிய காரணத்தை விளக்குகின்றார் கல்லாடர்.

(1) நேரத்தோன்றும் பலரறிசொல் இம்மூன்றும் எனில், நேரத் தோன்றாதனவும் உளபோலும் என்றும் அவற்றையும் இனி ஆசிரியர் கூறுவார்போலும் என்றும் அருத்தாபத்தியால் கொள்ளக் கிடக்கும்; அங்ஙனம் கருதுதல் ஆசிரியர் கருத்தன்றாதலின், அது பொருந்தாது.

(2) 'நேரத் தோன்றும்' என்றதொடரில் தோன்றும் என்பது செய்யும் என்னும் வாய்பாட்டு முற்றாகும். ஆதலின் அதனைப் பலரறி சொற்கு அடையாக்குதல் தவறாகும்.

அருத்தாபத்தி:—சொல்லியவற்றிலிருந்து சொல்லாதவற்றை உணர்வது.

இவ்வியல் 5 ஆம் நூற்பா முதல் 9 ஆம் நூற்பா வரை கூறப்படும் ஈறுகளை, மேல் பத்தாம் நூற்பாவினால் தொகுத்துக் கூறுவர் ஆசிரியர். அவ்விடத்து இவ்வீறுகளனைத்தும் வினைச்சொல்லின் ஈறுகளாக வரும் என்றும் கூறுவர். அங்ஙனம் பின்னர்க் கூற இருப்பவர் ஈண்டும் 'பகர இறுதி' என்று கூறுவதேன் என்பது

ஈண்டைய வினவாகும். இதற்குக் கல்லாடர் கூறும் காரணம் வருமாறு :

மேல் பத்தாம் நூற்பாவில் 'இருதிணை மருங்கின் ஈற்றில் நின்றிசைக்கும் பதினோரெழுத்தும்' என்புழி 'ஈற்றில்' என்று கூறுவது வினைச்சொல்லில் இறுதி வரும் என்பதைக் குறிப்பதாகும்.

ஈண்டுப் பகர இறுதி என்பது பகர உயிர்மெய்யாகிய எழுத்தில் இறுதி நிற்கும் '.அ' என்ற எழுத்தைக் குறிப்பதற்காகும் என்பது. அந்த அகரம் உயர்திணைப் பலர்பாலை உணர்த்தும் வழிப் பகர ஒற்றின்மேல் ஏறியே வரும் என்பதும், அப்பகரத்தில் ஒற்று முன்னும் உயிர் பின்னுமாய் நிற்றல் பற்றி அந்த அகரத்தைக் குறிக்கப் பகர இறுதி என்றார் என்பதும் கல்லாடர் தரும் காரணமாகும்.

நச்சினார்க்கினியர் அகரத்தொடு புணர்ந்த பகரம் அல்லது உயர்திணைப் பன்மையை உணர்த்தாது என்றற்கு, ஈண்டுப் பகரம் என்றார் என்பர். தெய்வச்சிலையார் பகரம் என்னாது இறுதி என்றது பகரம் ஒற்றாக வரின் மொழிக்கு ஈறாகாமையின் உயிரீறு என்பது தோற்றுதற்கு என்பர்.

மார் ஈறும் ஆர் ஈற்றில் (அஃதாவது ரகர ஈற்றில்) அடங்காதோ? வேறு கூறுவது ஏன்? என்னும் வினவை எழுப்பிக் கொண்டு சேனவரையரும், நச்சினார்க்கினியரும், தெய்வச்சிலையாரும் விடை கூறுவர். இவர்களுள் முன்னைய இருவரும் ஒரு கருத்தினர். பின்னையவர் வேறு கருத்தினர். இத்திறமெல்லாம் அவரவர் உரை நோக்கி யறிக.

அ ஆம் நூற்பா

த, ற, ட என்பனவற்றை நெடுங் கணக்கு முறைப்படி கூறின் ட, த, ற எனல் வேண்டும். அங்ஙனம் கூறாது த, ற, ட என்று கூறியதற்குரிய காரணத்தைச் சேனவரையரே முதன்முதல் ஆய்ந்துள்ளார். அதனையே இவ்வுரையாசிரியரும் தழுவுகின்றார்.

கிடக்கை முறை - நெடுங்கணக்கு முறை.

க ஆம் நூற்பா

பலவின் பாலுக்குரிய ஈறுகளாகிய அ, ஆ, வ ஆகிய மூன்றையும் இம்முறையே கூறுதற்குரிய காரணத்தை எவரும் ஆய்ந்திலர் இவ்வுரையாசிரியர் அதனை ஆராய்ந்தது சிறப்புடைத்தாம்.

வகரத்தை அகரத்துள் அடக்காது வேறு கூறினமைக்குரிய காரணத்தை இளம்பூரணர் நீங்கலாக ஏனைய உரையாசிரியர்கள்

அனைவரும் கூறியுள்ளனர். அவ்வனைவரும் குறிக்கும் காரணம் ஒன்றேயாகும்.

வருவ செல்வ என்னும் சொற்களே யன்றி வருகுவ செல்குவ என்னும் சொற்களும் உள. அவற்றை வகர ஈறென்றலன்றி அகர ஈறு என்றல் பொருந்தாமையின், வகர ஈறென்றறொன்றும் வேண்டல் இன்றியமையாததாம். இதனைச் செவ்விதாகத் தெய்வச்சிலையார் விளக்குவர். அது வருமாறு :-

" உண்கு என நின்ற எதிர்காலச் சொல் பன்மையுணர்த்தும் அகரம் ஏறிய வழி உண்க! என வியங்கோட் பொருண்மைப்படும் ஆகலின், ஆங்கு உண்குவ என வகர உயிர்மெய் கொடுக்க வேண்டுதலின் வகர மென வேறு ஓதல்வேண்டும் என்க."

௧உ ஆம் நூற்பா

மேல் 'பெண்மை சுட்டிய' என்றதனுள் பேடியை முப் பாலானும் சொல்லுக என்னும் விதியுள், ஒரு கூற்றை விலக்கி யது என்பது ஆண்பாலாகச் சொல்லுதலை விலக்கியதைக் குறிப்ப தாகும். எனவே பேடி என்னும் சொல்லை மகடூஉ வினையோ அன்றிப் பலர்பால் வினையோ கொடுத்து முடிக்க வேண்டும் என்பது கருத்தாயிற்று. எனினும் 'இடன்' என்ற மிகுதியால் இதனை ஆடூஉ வினை கொடுத்து முடித்தலும் சிறுபான்மை யுண்டு என்று கருதினர் இவ்வுரையாசிரியர்.

இளம்பூரணர், தெய்வச்சிலையார் ஆகிய இருவருக்கும் இக் கருத்து ஏற்புடையதாகும். சேனாவரையர், நச்சினார்க்கினியர் ஆகிய இருவருக்கும் இக்கருத்து உடன்பாடன்று.

இந்நூற்பா, முன்னர் " பெண்மை சுட்டிய " (கிளவி - 4) என்னும் நூற்பாவின் பின் கூறப்பட்டிருத்தல் வேண்டும்; என்னை? அந்நூற்பாவில் கூறிய பேடி என்னும் பெயரை எவ்வினை கொடுத்து முடித்தல் வேண்டும் என்று இந்நூற்பா கூறலின். ஆயினும் இதனை ஆண்டு வையாது ஈண்டுக் கூறியதற்குக் காரணம் இது வழூ வமைதியாதல் பற்றியாம். பேடி என்பது பெண்ணிலக்கணமோ அன்றி ஆணிலக்கணமோ ஒன்றும் நிரம்பாதாகும். அதனை உயர் திணைப் பெண் பாலிலும், பலர் பாலிலும், சிறுபான்மை ஆண் பாலிலும் வைத்து வினை கொடுத்தல் வழூவேயாம். எனினும் இதனை வழூவமைதியாகக் கொள்க என்கின்றார்.

௧௩ ஆம் நூற்பா

செப்பு, வினாவெதிர் வினாதல், ஏவல், மறுத்தல், உற்றது உரைத்தல், உறுவது கூறல், உடம்படுதல் என அறுவகைப்படும்

என இளம்பூரணரும்; செவ்வன் இறையும், இறை பயப்பதுமென இருவகைப்படும் எனச் சேனாவரையரும், நச்சினார்க்கினியரும்; துணிந்து கூறல், கூறிட்டு மொழிதல், வினாவி விடுத்தல், வாய் வாளாதிருத்தல் என நான்கு வகைப்படும் எனத் தெய்வச்சிலை யாரும் கூறுவர்.

கல்லாடர் செப்பு, மறுத்தலும், உடன்படுதலும் என இரு வகைப்படும் என்று கூறி, அவரே 'நம் நாடு யாது?' என்றால் 'பாண்டி நாடு' என விடையிறுப்புழி, இவற்றுள் ஒன்றாக அது அடங்காமையின் ஒருவாற்றான் அடக்கிக் கொள்ளல் வேண்டும் என்றும் கூறுகின்றார். அங்ஙனம் அமைத்துக் கொள்ளின் 'உடன் படுதல்' என்ற வகையுள்தான் இதனை அடக்கிக் கொள்ள வேண்டும்; எனினும் இது பொருந்துவதன்றாம்.

செப்பு வழுவாக ஏழு வகைகளைப் பிரித்துக் கொண்டு, அவற்றுள் இறுதி யொன்று நீங்கலாக மற்ற ஆறும் வழுவமைதி என்று கொள்ளப்படும் என்றும், இறுதியொன்றும் வழுவுடையது என்றும் கூறியிருப்பது பாராட்டுதற்குரியதாகும். இக்கருத்து இளம்பூரணர் உரையைத் தழுவியதாகும்.

கல்லாடர் கூறியனவாய சொல் தொகுத்திறுத்தலும், சொல் லாதிறுத்தலும், பிறிதொன்று கூறுதலும் ஆகிய மூன்றனுள், சொல் தொகுத்திறுத்தலை இந்நூற்பாவில் செப்பின் வகையாக இளம்பூரணர் ஏற்றுக்கொள்ளாவிடினும், "எப்பொருளாயினும்" என்னும் நூற்பாவிற்குக் கருத்துரை கூறுங்கால், இச்சூத்திரம் என் னுதலிற்றோ எனின், மறித்துச் சொல் பல்காமைத் தொகுத்து இறுக் கும் இலக்கணம் இஃதென்பது உணர்த்துதல் நுதலிற்று என்று கூறுவதால், இதுவும் அவருக்கு உடன்பாடாதல் தெளியலாம். இவர் சொல்லாதிறுத்தல் என்று கூறுவது தெய்வச்சிலையார் கூறிய வாய்வாளாதிருத்தல் என்பதோ டொப்பதாகும். பிறிதொன்று கூறல் வழு என்பது எல்லா உரையாசிரியர்களுக்கும் உடன் பாடாகும்.

செப்பு என்பது ஒருவன் தன்னை வினயதற்கு விடை தருவது என்றும், வினாவாவது அறிய வேண்டுவனவற்றை அறிவுறுத்து வது என்றும் விளக்கம் காண்பர் சேனாவரையர்.

செப்பு அறுவகைப்படும் என்பது பொருந்ாது எனக் கூறுவர் சேனாவரையர். அதனை அவர் உரையானறிக.

வினா ஐந்து வகைப்படும் என இவர் கூறியது இளம்பூரணர் கருத்தைத் தழுவியதாகும்.

வினா, அறியான் வினா, ஐய வினா, அறிபொருள் வினா என மூவகைப்படும் என்றும், தாம் காட்டிய அறிபொருள் வினாவில் இளம்பூரணர் காட்டும் அறிவொப்புக் காண்டல், அவனறிவுதான் காண்டல், மெய்யவற்குக் காட்டல் என்ற மூன்றும் அடங்கும் என்றும் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் கூறுவர்.

'வினா வெதிர் வினாவல்' 'வினாவும் செப்பே' என்ற வழிக் கொள்ளப்படும்' என்ற வாக்கியத்தின் முன்னர் 'அவற்றுள்' என்றொரு சொல் இருப்பின் நன்று.

'வினாவிற்கமையா வழுவல்லது அமையும் வழூஉ என்ப தொன்றில்லை' என்பதற்கு விளக்கம்:- செப்பில் வழுவும் வழு வமைதியும் உண்டு; ஆனால் வினா வழுவிய விடத்து வினாவழூஉ எனத் தள்ளத் தகுமேயன்றி, வழுவிய விடத்து அமைதி கொள்ளும். வழுவமைதி இல்லை என்பதாகும்.

இக்கருத்து "செப்பே வழிஇயினும்" என்னும் நூற்பாவில் 'வினா வழீஇயினவிடத்து அமையாது' என இளம்பூரணர் கூறிய கருத்தைத் தழுவியதாகும். இதனைச் சேனாவரையர் மறுப்பர். அம்மறுப்பு வருமாறு:—

"வினா வழீஇயினவிடத்து அமையாதென்று உரையாசிரியர் கூறினால் எனின்:—அற்றன்று; 'யாதென வரூஉம் வினாவின் கிளவி' (சொல் - ௩௨) எனவும், 'வன்புற வரூஉம் வினாவுடை வினைச் சொல்' (சொல் - உசஅ) எனவும் முன்னர் வழுவமைப் பராகலான், அது போலியுரை யென்க."

செப்பு வினா இரண்டனுள் செப்பினை முற்கூறியதற்குரிய காரணத்தை நச்சினார்க்கினியரும் தெய்வச்சிலையாரும் கூறுவர். அக்கருத்துக்களைத் தழுவியே கல்லாடரும் கூறுகின்றனர் எனினும், இவர் அவர்களினும் சற்று விரிவாகக் கூறுகின்றார். அக்காரணங்கள் நான்கு ஆகும்.

(1) செப்பு ஆசிரியன் கண்ணது என்பது. ஆசிரியன் மாணவனுக்குப் பாடம் பயிற்றுவிக்கும் பொழுது இருவரும் ஒருவர்க்கொருவர் வினவியும் விடையிறுத்துக் கொண்டும் இருப்ப ரேனும், மாணவன் அறியாதும், ஐயப்பட்டும் கேட்கும் வினாக்களுக்கு ஆசிரியனே விடையிறுத்துத் தெருட்டும் பொறுப்புடையவன். ஆதலின் அப்பொறுப்பும் சிறப்பும் நோக்கி, செப்பு ஆசிரியன் கண்ணது என்றார்.

(2) 'வினாவினை அறிவிப்பது அது ஆகலானும்' என்பது. ஒன்றுமே அறியாதவன் எதனையும் வினவுதற்குரியனல்லன் ஆதலின்

அங்ஙனம் வினவுதற்கேற்ற செய்தியுடைமையைத் தோற்றுவிப்பதும் செப்பே ஆதலான் இங்ஙனம் கூறினர்.

(3) 'வினாவின்றியும் செப்பு நிகழ்தலானும்' என்பது. கங்கையாடிப் போந்தேன் சோறுதம்மின் என இரவலாளன் இரக்கக் காண்கின்றோம். அதுயாரும் வினவ அதற்கு எழுந்த விடையன்று. ஆதலின் வினாவின்றியும் செப்பு நிகழும் என அதன் சிறப்பை விளக்குகின்றார். இங்ஙனம் கூறவே செப்பின்றி வினா எழாது என்பதும் போதரும்.

(4) 'வழூஉப் பன்மை அதன் கண்ணதாகலான்' என்பது. செப்பில் வழுவமைதியாக ஆறுவகைகளும், வழூவாக ஒன்றும் உள. ஆனால் இப்பன்மை வினாவிற்கு இல்லை.

இவற்றால் செப்பே முன் கூறற்காம் சிறப்புடையது என அறியலாம்.

கச ஆம் நூற்பா

ஒருவன் ஒன்றனை வினவ அதனைக் கேட்டான் அதற்கு விடை கூறுமுகமாகத் தானும் அவனை வினவுவான் போல் கூறினும் அதுவும் செப்பின்பாற்படும் என்பது இந்நூற்பாவின் கருத்தாகும்.

இங்ஙனம் கூறுதலை வினாவெதிர் வினாதல் என்பர். 'சாத்தா சோறு உண்ணுயோ' என்றற்கு 'உண்ணேன்' அல்லது 'உண்பேன்' எனக் கூறாது 'உண்ணேனோ' என வினாவாய்பாட்டால் கூறினும்' உண்பேன் என்னும் கருத்தில் அவ்வினா அமைதலின் அதுவும் செப்பாயிற்று.

கரு ஆம் நூற்பா

இந்நூற்பாவிற்குரிய உரை இளம்பூரணர் உரையைத் தழுவியதாகும்.

கசு ஆம் நூற்பா

இந்நூற்பாவிற்குரிய உரை இளம்பூரணர் உரையைத் தழுவியதாகும். இதற்கு விளக்கம் யாம் கழகவழிப் பதிப்பித்துள்ள தொல்காப்பியச் சொல்லதிகார இளம்பூரண விளக்கவுரையிற் காண்க. (பக்கம்—252, 253)

'அப் பொருளாகும் என்றதற்குப் பொருள்' என்று தொடங்கும் வாக்கியத்தின் இறுதியில் 'அவ்வம் முதற்கு அவ்வம் முதலும் என்பது கொள்ளப்படும்' என்றிருப்பின் நன்று.

கஎ ஆம் நூற்பா

இந்நூற்பா உரை பெரிதும் இளம்பூரணர் உரையைத் தழுவியதாகும்.

பகுதிக் கிளவி - பக்கச் சொல். பக்கம் - சார்பு. எனவே சொல் தனக்குரிய பொருளை நேரே காட்டாது சார்பான பொருளைக் காட்டுவது என்பது பொருளாகும். துஞ்சினர் என்பதற்கு நேர் பொருள் தூங்கினர் என்பதாகும். அதன் சார்பான பொருள் இறந்தார் என்பதாகும். அதுவே பக்கச் சொல் எனப்படும்.

தகுதியாவது ஒரு பொருளை அறிதற்குரிய சொல் இருப்பினும், அச் சொல் தகுதியன்றெனக் கருதி வேறொரு சொல்லால் கூறுவதாகும். அது மங்கலம், இடக்கரடக்கல், குழூஉக் குறிநிலை வழக்கு என மூவகைப்படும்.

(1) மங்கல மரபினால் கூறுவதாவது, மங்கலமில்லாத சொல்லை விடுத்து மங்கலமுடைய சொற்களைக் கூறுவதாம்.

(2) இடக்கரடக்கிக் கூறுதலாவது, பெரியோரிடத்து வழங்கத் தகாத சொல்லை வழங்க வேண்டிய இன்றியமையாமை நேரின், அச் சொல்லினை மறைத்து வேறொரு சொல்லால் சொல்வதாம். இதனையே, "அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல்" என்னும் நூற்பாவால் ஆசிரியர் விளக்குவர்.

(3) குழூஉக் குறிநிலை வழக்காவது, ஒவ்வொரு குழுவினுள்ளார் யாதானும் ஒரு காரணத்தால் ஒரு பொருளைக் குறித்தற்கு உலகறிந்த சொற்களை விடுத்துத் தமக்குள் தாம் படைத்துக் கொண்ட பிறிதொரு சொல்லால் அப்பொருளைச் சொல்வதாகும். அறுவை வாணிகம், மாட்டு வாணிகம் ஆகியன நிகழ்வுழி இவ்வழக்கு இன்றும் இருத்தலைக் காணலாம்.

இம்மூவகை வழக்கும் இப்பொருளையறிதற்கு இச் சொல்லால் கூறுதல் தகுதியன்று; வேறோர் சொல்லால் கூறுதல் தகுதி எனக் கருதிக் கூறுதலின் தகுதி வழக்காயின.

வழக்காவது, காரணமின்றி வழக்கினும் செய்யுளினும் வழங்குதல் பற்றியே கொள்ளப்படுவதாகும் அது, இலக்கணமுடையது, மரூஉ என இருவகைப்படும்.

(1) இலக்கண நெறியால் கூறப்படுவது இலக்கண வழக்காகும்.

(2) மரூஉ, இலக்கணத்தோடு பொருந்தியதும், பொருந்தாததும் என இருவகைப்படும்.

(அ) ஒரு சொல் தன் நிலையினின்று மாறி நிற்பினும் இலக்கணம் வல்லாரால் ஏற்றுக் கொண்டிருப்பின் அஃது இலக்கணத்தோடு பொருந்திய மரூஉ எனப்படும்.

(ஆ) அங்ஙனம் அன்றி வருவது இலக்கணத்தோடு பொருந்தாத மரூஉவாம்.

இவ்விரண்டு மரூஉவையும் முறையே இலக்கணப் போலி என்றும், மரூஉ என்றும் குறிப்பர். இவ்வுரைகளைத் தழுவியே நன்னூலாரும்,

“இலக்கணம் உடையது இலக்கணப் போலி
மரூஉமென் றாகும் மூவகை இயல்பும்
இடக்கர் அடக்கல் மங்கலம் குழூஉக்குறி
எனுமுத் தகுதியோடு ஆறாம் வழக்கியல்” (பெய—10)

எனக் கூறுவாராயினர்.

இளம்பூரணர் கூறிய குழூவின் வந்த குறிநிலை வழக்குச் சான்றோர் செய்யுட்கண் வாராமையானும், இடக்கர் அடக்கலை எச்சவியலினும், மரூஉ முடிபை எழுத்ததிகாரத்தினும் கூறப்பட்டிருத்தலானும் இவை ஈண்டுக் கூறப்படுவதற்கு இயைபில்லை என்பர் சேனாவரையர்.

கருமுகமந்தி - பெண் குறி

செம்பினேற்றை - ஆண் குறி

வண்ணக்கர் - நாணய பரிசோதகர்.

“இவ்வாறு சொற்சிதைவயச் சொல்லுவனவன்றிப் படுபொருள் சிதையச் சொல்லுவனவும்” என்ற தொடரில் ‘படு’ என்பது இல்லாதிருப்பின் நன்று.

வெண்களமர் - வேளாளர்

கருங்களமர் - புலையர்

சிறுவெள்வாய் - ஒரு வகைச் செடி. கரிய நீண்ட மயிர் எனப் பொருள் கூறுவாரும் உளர்.

மீயடுப்பு - நெருப்பு மூட்டும் அடுப்பிற்குப் பக்கத்தில் உள்ள அடுப்பு.

இந்நூற்பாவிற்குத் தெய்வச்சிலையார் மட்டும் வேறு விதமாகப் பொருள் உரைப்பர். அதனை அவர் உரையான் அறிக.

௧௮ ஆம் நூற்பா

ஒரு பொருளைக் குறித்து வரும் அடைமொழிகளுள் இனம் உடையவும் உள; இனம் இல்லாதனவும் உள. இங்ஙனம் இனம் குறியாது வரும் அடைமொழி வழக்காற்றின்கண் வாராது; செய்யுட்கே வருதல் மரபு என்பது இந்நூற்பாவின் கருத்தாகும்.

செஞ்ஞாயிறு என்புழிச் செம்மை என்பது பண்பைக்குறிக்கும் பெயராயவாறும், அது ஞாயிறு என்ற பொருளுக்குக் கொடுத்துச் சொல்லப்பட்டமையின் பண்புகோள் பெயராயவாறும், செஞ்ஞாயிறு எனவே கரு ஞாயிறு முதலாயின இல்லாமையின் அது இனச்சுட்டு ஆகாதவாறும் காண்க.

பண்புகொள் பெயர்—செம்மை; கொடை—அதனை ஞாயிறு என்ற பொருளுக்குக் கொடுத்துச் சொல்லுதல்.

"மாக்கடல் நிவந்தெழு தரு செஞ்ஞாயிற்றுக் கவிணை மாதோ" என்பதே புறநானூற்றுப் பாடம். மூலத்தில் 'தரு' என்ற சொல் விடுபட்டுவிட்டது.

பண்பு கொள் பெயர் வழக்கில் வரின், அப் பண்பினை அப் பெயர் உடையது என்பது கருத்தன்று. அப் பெயருடையாரை உயர்த்துச் சொல்லவே அங்ஙனம் கூறியதாகும். செய்யுளில் அப் பண்புகொள் பெயர் வரின், குறிப்பிட்ட அப்பண்பினை அப்பெயர் உடையதாகவே இருக்கும். இதனையே, 'வழக்கினுள் பண்புகொள் பெயர் வருங்கால்' என்று தொடங்கும் பகுதி விளக்குகின்றது. இப்பகுதியுள் செய்யுளுள் வருங்கால் 'அக்குணம்' என்றிருப்பின் நன்று.

குறள்குளி, குறுந்தகடி என வருமிடத்துக் 'குறுந்தடி' என்றிருப்பதே பொருத்தமாகும்.

கக ஆம் நூற்பா

இந்நூற்பாவிற்குரிய தலைப்பு 'இயற்கைப் பொருளில் மரபு வழாமை' என்றிருக்க வேண்டுவது 'இப்பொருளில் மரபு வழாமை' எனத் தவறாக உள்ளது, திருத்திக்கொள்க.

இந்நூற்பாவிற்கு உரிய உரை சேனாவரையர் உரையைத் தழுவியதாகும்.

இட்டிகை—செங்கல்.

குற்றுச் செய்யப்படுதல்--நிலத்தில் கல், செங்கல், சுண்ணாம்பு முதலியன சேர்த்து அமிழ்த்து இறுகச் செய்தல்.

உ௦ ஆம் நூற்பா

"மேற்கூறிய 'இற்றெனக் கிளத்தல்' இதற்கு அதிகாரத்தான் வருவித்துக்கொள்க' என்றவாக்கியத்தில் 'இதற்கும்' என்றிருத்தல் வேண்டும்.

உ௨ ஆம் நூற்பா

செயற்கைப் பொருள் ஆக்கமும் காரணமும் பெற்று வரும் என்பதும், அவ்வழிக் காரணம் முன்னும், ஆக்கம் பின்னும் வர வேண்டும் என்பதும், உ௦, உ௧ ஆம் நூற்பாக்களின் கருத்தாகும். இந்நூற்பாவால் அவ்வாக்கம் காரணம் இன்றியும் வரலாம் எனக் கூறப்படுகின்றது.

செய்யுட்கு என்றோ வழக்கிற்கு என்றோ எடுத்துச் சிறப்பாகச் சொன்னாலன்றிப், பொதுவாக விதிகளைக் கூறின் அது வழக்கிற் கேயாம் என்பது நூன்மரபு. ஆதலின் இந்நூற்பாவில் 'வழக்கினுள்' என வருவது மிகையாம் என்பது கல்லாடர் கருத்து. இக்கருத்து இளம்பூரணர் உரையை முற்றிலும் தழுவியதாகும்.

உ௩ ஆம் நூற்பா

தொலைவிலிருந்து ஒரு பொருள் தோன்ற அது உயர்திணை என்றுமட்டும் தெரிந்து, ஆண், பெண் என்னும் பால் பாகுபாடு தெரியாதிருப்பின், அதனை எங்ஙனம் சொல்ல வேண்டும் என்பதை இந்நூற்பா விளக்குகின்றது.

உயர்திணையெனத் தெரிந்து ஆண் பெண் பாகுபாடு தெரியாத ஒரு பொருளை அவ்விருபாற்கும் உரிய பொதுச் சொல்லாலேயே சொல்லவேண்டும் என்பது இந்நூற்பாவின் கருத்தாகும்.

ஒருவன் கொல்லோ, ஒருத்தி கொல்லோ என ஐயப்பட்டுழித் 'தோன்றுவான்' என்றோ, அன்றித் தோன்றுவாள்' என்றோ முடித்தல் தவறாதலின், அவ்விருபாற்கும் உரியவாறு 'தோன்றுவார்' என முடித்தல் தக்கதாகும்.

நூற்பாவில் 'ஐயக்கிளவி' என இருப்பினும், அதற்கு ஐயப் பொருள் என்றே பொருள் கொள்ளவேண்டும். ஐயப்படும் பொருள்மேல் சொல்நிகழுமாறு உணர்த்துதலே இந்நூற்பாவின் கருத்தாகலானும், பொருளிற்கே யன்றிச் சொல்லிற்கு ஒருமை பன்மை யின்மையானும், ஈண்டுக் கிளவி என்பது பொருள் மேலதேயாம்.

நூற்பாவில் உயர்திணைக்கோ, அஃறிணைக்கோ எனப் பிரித்துச் சொல்லாது பொதுப்படப் "பால் மயக்குற்ற" என்றே இருத்தலின், இந்நூற்பா உயர்திணை அஃறிணை ஆகிய இருதிணைக்கண்ணும் பால் ஐயம் நிகழின், அவ்வத் திணைப் பன்மைக்கண்ணேயே வைத்துச் சொல்லுக எனப் பொருள் கொண்டனர் சேனாவரையரும் தெய்வச்சிலையாரும்.

அடுத்த நூற்பாவில் "அஃறிணைப் பிரிப்பு" என இருத்தலின் இது உயர்திணைக்கண் வரும் பால் மயக்கத்திற்கே எனக்

கொண்டனர் இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும். கல்லாடரும் இக்கருத்தினரேயாவர்.

இளம்பூரணர் உள்ளிட்ட உரையாசிரியர்கள் அனைவரும் பொதுப்பட ஐயத்திற்கு என உரை கூறக், கல்லாடர் மட்டும் ஐயத்தைக் கண்டவிடத்து ஐயமும், காணா விடத்து ஐயமும் என இருவகையாகப் பிரித்து அதற்குத்தக எடுத்துக்காட்டும் காட்டினர். இந்நுண்மை பாராட்டுதற் குரியதாகும்.

'இவ்வையம் கண்டவிடத்து ஐயமும்' என்று தொடங்கும் பகுதி வழுவாயுள்ளது. அது பின்வருமாறு இருப்பின் நலமாகும்.

இவ்வையம், கண்டவிடத்து ஐயமும், காணாத விடத்து ஐயமும் என இருவகைத்து. காணாதவிடத்து ஐயமும் இவ்வாறு கொள்க. இனிக் காணாதவழி ஒருவனோ ஒருத்தியோ என்பதன்றி, ஒருவனோ பலரோ வென்று ஐயுறும் பான்மயக்கமுங் கொள்க. இது தானறியானுவதல்லது அப்பொருள் இருபாலுமாய் நிற்றலின்லை. பிற மற்று ஒன்றாகிய அப்பொருளைப் பன்மையாற் கூறுதல் வழூஉவன்று; வழூஉவே யெனினும் அமைக எனப் பால் வழூஉ அமைத்தவாறாயிற்று.

இந்நூற்பாவுரை யிறுதியில் 'ஆர்' என்பது ஆண்பாற்கல்லது ஏலாமையானும்' என்ற பகுதி ஆய்தற்குரியது.

உச ஆம் நூற்பா

உயர்திணையோ, அஃறிணையோ என ஐயந்தோன்றிய பொழுது அவ்வையத்திற்குரிய பொதுச் சொல்லாக 'உருவு' என்ற சொல்லையும், அஃறிணையுள் ஒன்றோ பலவோ என ஐயம் தோன்றிய பொழுது அவ்விரண்டிற்கும் பொதுவாகிய பெற்றம் போன்ற சொற்களையும் வைத்துச் சொல்லுக என்பது இந்நூற்பாவின் கருத்தாகும்.

'பிரிப்பு' என்னும் சொல் அங்ஙனம் பிரித்தலையுடைய இயற் பெயருக்கு ஆயினமையின் ஆகுபெயராயிற்று.

அஃறிணையுள் பால்விளங்கும் பெயர்களும் உள; பால் விளங்காத பெயர்களும் உள. பால் விளங்காத பெயர்களை அஃறிணையியற் பெயர் என்ப. நன்னூலார் இதனைப் பால்பகா அஃறிணைப் பெயர் என்பர். இப்பெயர்கள் வினையொடு வந்தல்லது பால்விளங்காதாம். இதனைத் "தெரிநிலையுடைய அஃறிணை யியற் பெயர்--ஒருமையும் பன்மையும் வினையொடு வரினே" என்னும் பெயரியல் நூற்பாவானும் நன்கறியலாம்.

இந்நூற்பாவிற்குரிய உரை இளம்பூரணர் உரையைத் தழுவிய தாகும். நச்சினார்க்கினியருக்கும் இதுவே கருத்தாகும். எனினும் சேனாவரையர் இந்நூற்பாவிற்கும் மேலே நூற்பாவிற்கும் இளம் பூரணர் கூறிய கருத்தினை மறுப்பர். அம்மறுப்பு வருமாறு :

பன்மை கூறல் உயர்திணைப்பால் ஐயத்திற்கு உரித்தென்றும், உருபென மொழிதல் திணை ஐயத்திற்கு உரித்தென்றும், உரை யாசிரியர் கூறினாராலெனின்: அவை அவற்றிற்கே உரியவாயின், அஃறிணைப் பிரிப்பு என்றாற் போல உயர்திணைப்பால் மயக்குற்ற என்றும், திணை ஐயத்து என்றும், விதந்தோதுவர் ஆசிரியர்; அவ்வாறு ஓதாமையானும், நடையுள் அவை பொதுவாய் வருத லானும், அவை போலியுரை யென்க.

இதனையே கல்லாடர் 'திணை ஐயம் அஃறிணைப்பால் ஐயம் என்பன சூத்திரத்துள் இல்லையாயினும், உருவென்றும், அஃறிணைப் பிரிப்பு என்றும் கூறிய வாய்பாட்டான் உய்த்துணர்ந்து கொள்ளப் படும்' எனக் கூறிக் குறிப்பால் மறுத்துச் சென்றனர்.

உசு ஆம் நூற்பா

இந்நூற்பா என்னுதலிற்றோ எனில் வண்ணச் சொல்வதோர் மரபு கூறுதல் நுதலிற்று என்றுளது. அது வண்ணச் சொல்லதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று என்றிருக்க வேண்டும்.

பண்பைக் குறிக்கின்ற சொல்லும், உறுப்பைக் குறிக்கின்ற சொல்லும், அதன் முதற்பொருளைக் குறிக்கின்ற சொல்லும் இயைந்து வரின் அது வண்ணச் சினைச்சொல் என்று பெயர் பெறும். இம்மூன்றும் சேர்ந்து வருங்கால் வழக்கின்கண் இம முறையே வரப்பெறல் வேண்டும் என்பது இந்நூற்பாவின் கருத்தாகும்.

வண்ணம்—பண்பு. சினை—உறுப்பு.

'நடைபெற்று' என்ற மிகையால் 'செய்யுளாயின் இம் முறை மயங்கியும் வரும்' என்றனர். 'முறை' என்ற மிகையால் வழக்கில் முதலோடு இருகுணம் அடுக்கலும், செய்யுளில் சினையொடு இரு குணம் அடுக்கலும் கொள்க என்றனர்.

இக்கருத்துக்கள் அனைத்தும் இளம்பூரணர் உள்ளிட்ட உரை யாசிரியர்கள் அனைவருக்கும் பொருந்துவனவாகும். இக்கருத்துக் களை ஒருங்கு நினைவு கொள்ளுமாறு நன்னூலாரும்,

> "அடைசினை முதல்முறை அடைதலும் ஈரடை
> முதலோ டாதலும் வழக்கியல், ஈரடை
> சினையொடு செறிதலும் மயங்கலும் செய்யுட்கே"

எனக் கூறியிருத்தல் காண்க.

பெரும்பலாக் கோடு, பெருவழுதுணங்காய் என்று தொடங்கும் பகுதி பிழைபட உள்ளது.

பெருவழுதுணங்காய் என்பது பெருமை முதல்மேலே கூறுதலின், சொல்லுவான் கருத்து வேறுயிற்று என்பர் நச்சினார்க்கினியர்.

முறை மயங்காமை என்றதனல் மயங்குமாயின் குறித்த பொருள்மேற் செல்லாது என்க என்று கூறிப் பெருந்தலைப் புல்லார் நல்லார் என்றவழிப் பெருந்தலை என்பது புல்லொடு சார்ந்து வருதலிற் சொல்லுவான் குறிப்பு வேறுயினும் அதன்மேற் செல்லாதாயிற்று என விளக்குவர் தெய்வச்சிலையார்.

வண்ணச் சினைச்சொல் வழக்கினுள் மயங்காது எனவே செய்யுளுள் மயங்கி வரும் என்பதும், அதற்குப் பெருந்தோள் சிறுநுசுப்பின் பேரமர்க்கண் பேதை என்பது எடுத்துக் காட்டாகும் என்பதும் இளம்பூரணர், நச்சினார்க்கினியர், இவ்வுரையாசிரியர் ஆகிய மூவர்க்கும் கருத்தாகும்.

எனினும் இவ்வெடுத்துக்காட்டு மயங்கி வந்ததன்று என்று சேனவரையர் உரைப்பர். அம்மறுப்பு வருமாறு:—

"பெருந்தோள் சிறு நுசுப்பின் பேரமர்க்கண்பேதை என்புழி மூன்றும் வழி முதல் கிடவாது பின்னும் அடையும் சினையும் புணர்த்தமையான் வண்ணச் சினைச்சொல் செய்யுளுள் மயங்கி வந்ததென்று உரையாசிரியர் கூறினாராலெனின்:-மூன்றும் வழிப் புணர்க்கப்படும் பேதையென்னும் முதற்சொல் பேரமர்க்கண் என்னுந் தொகையோடு வேற்றுமைப் பொருள்படத் தொக்கு, அத்தொகை சிறுநுசுப்பு என்னுந் தொகையோடும் அப்பொருள்படத் தொக்கு, ஒரு சொல்லாய், 'பெருந்தோட் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி' என்றாற்போல மூன்றும் வழிப் பிற சொல்லடுத்துப் பேதையென்னும் முதல் கிடந்ததெனவே படுதலின், மயக்கம் இன்மையான் அவர்க்கது கருத்தன்றென்க. அன்றிப் பெருந்தோள் முதலாகிய மூன்றும் பல பெயர் உம்மைத்தொகைபடத் தம்முள்தொக்கு ஒரு சொல்லாய்ப் பின் பேதையென்பதனேடு வேற்றுமைத்தொகைபடத் தொக்கன வெனினும், அவை உம்மைத் தொகைபடத் தொகாது நின்று பேதை யென்பதனேடு வேற்றுமைத் தொகைபட ஒருங்கு தொக்கனவெனினும், தம்முள் இயையாது பேதை என்பதனேடு இயைதலின், ஆண்டும் மயக்க மின்மை அறிக."

இவ்வெடுத்துக் காட்டில் பெருந்தோள் என்பதையடுத்துப் பேதை என்பது நிற்கவேண்டும். அங்ஙனமன்றிப் பின்னும் அடையும் சினையும் புணர்த்தது வண்ணச் சினைச்சொல் இலக்கணத்தில்

பிறழ்ந்து வந்ததேயாம். ஆதலின் சேனாவரையர் இங்ஙனம் சாதிப்பது எத்துணையும் பொருந்துவதன்றாம்.

உ௯ ஆம் நூற்பா

தருசொல், வருசொல் என்பன ஒவ்வொன்றுமே தன்மைக்கும் முன்னிலைக்கும் உரியவாதலின், எடுத்துக்காட்டில் எனக்குத் தரும் காணம், நினக்குத் தருங்காணம்' எனக்கு வருங்காணம், நினக்கு வரும் காணம் என்றிருப்பதே நன்று. இங்ஙனமாதல் இளம்பூரணர் உரையினானும் அறிக.

௩0 ஆம் நூற்பா

இந்நூற்பாவில், 'என்னுதலிற்றோவெனின்' இதற்கும் விதி யொக்கும் என்றவாறு' என உள்ளது. அதற்கு விளக்கம்:

உ௮ ஆம் நூற்பாவில் கூறப்பட்ட நான்கு சொற்களில் தருசொல் வருசொல் ஆகிய இரண்டிற்கும் சிறப்பு வகையான் இட இலக்கணத்தைச் சென்ற நூற்பாவில் கூறினார். இந்நூற்பாவில் ஏனைய செலவுச்சொல், கொடைச்சொல் ஆகிய இரண்டிற்கும் சிறப்புவகையான் இட இலக்கணம் கூறுதல் வேண்டும். அதனை உணர்த்த வந்தது இந்நூற்பா என்பதே கருத்தாகும்.

விதி—சிறப்பு வகையான் இட இலக்கணம் கூறல்.

௩௧ ஆம் நூற்பா

முன்னைய நூற்பாவில் யாது, எவன் என்பன அறியாத பொருளை வினாவிடத்துப் பயன்படும் என்றார். இந்நூற்பாவில் அவற்றுள் யாது என்பதற்குச் சிறப்பு விதி கூறுகின்றார். இங்ஙனம் பின்னரும் கூற இருப்பதால், முன்னைய நூற்பாவில் 'எவன் யாது' எனக் கூறியிருக்கலாம். அங்ஙனமன்றி 'யாது எவன்' என முற்கூறியது முறையற்ற கூற்றாம். இதனால் யாது என்பது அறியாப் பொருளிடத்து ஐயந்திர்தற்கும் வரும் என்பதைப் பெறவேண்டும் என்பார்.

எனவே யாது என்பது அறியாத பொருளை வினவுகின்றதற்கும், அறியாத பொருளின்கண் ஐயந்திர்தற்கும், அறிந்த பொருள்வயின் ஐயந்திர்தற்கும் வரும் என்பது கருத்தாயிற்று.

இம்முறையன்றிக் கூற்றினால் பெறப்படும் கருத்து இளம்பூரணர், நச்சினார்க்கினியர் ஆகியோர் தம் கருத்தைத் தழுவியதாகும்.

"செப்பே வழீஇயினும் வரைநிலை யின்றே" என்பதனால் வினா வழுவுதல் ஆகாது என்றனர் இளம்பூரணர். நச்சினார்க்கினியருக்கும்

இவ்வுரையாசிரியருக்கும் இதுவே கருத்தாம். எனினும் சேனுவரையர் "செப்பும் வினவும் வழாஅல் ஓம்பல்" என்னும் நூற்பா வுரையில், வினவழீஇயினவிடத்து அமையாதென்று உரையாசிரியர் கூறினரால் எனில்; அற்றன்று; 'யாதென வரூஉம் வினவின் கிளவி' எனவும், 'வன்புற வரூஉம் வினவுடை வினைச்சொல்' எனவும், முன்னர் வழுவமைப்பர் ஆகலான், அது போலியுரை யென்க" என மறுத்தனர். அம் மறுப்பை உளங்கொண்டே கல்லாடர், 'இச் சூத்திரத்தாற் கூறியது வழுவமைதியன்றோ எனில்.......வழுவென ஆகாது என உணர்க' எனக் குறிப்பாக மறுத்துள்ளார்.

௩௪ ஆம் நூற்பா

இனைத் தென அறிந்த சினைமுதற் கிளவிக்குக் கொடுக்கும் உம்மை முற்றும்மையாகும். இல்லாப் பொருட்குக் கொடுக்கும் உம்மை எச்ச உம்மையாகும். எனினும் உம்மை பெறுதல் ஒப்புமை நோக்கி 'அன்ன இயற்றே' என ஆசிரியர் மாட்டெறிந்தார். இதனையே சேனுவரையரும் "முற்றும்மையும் எச்சவும்மையுமாகிய வேறுபாடு உடையவேனும், உம்மை பெறுதல் ஒப்புமையான் 'அன்ன இயற்று' என மாட்டெறிந்தார்" என்பர்.

மன்னாப் பொருள் என்பதற்கு 'இல்பொருள்' எனப் பொருள் உரைப்பர், இளம்பூரணர், சேனுவரையர், கல்லாடர் ஆகிய மூவரும்.

நச்சினார்க்கினியரும், தெய்வச்சிலையாரும் மன்னாப் பொருள் என்பதற்கு 'நிலையில்லாத பொருள்' என உரைத்தலே தக்கது என்பர். அவர்கள் உரைக்குமாறு :—

'மன்னுக பெரும நீ நிலமிசை யானே' எனவும், 'மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்' எனவும், 'மன்னாப் பொருட்பிணி முன்னி' எனவும் மன்னுமை நிலையாமையை உணர்த்துதல் அன்றி, இன்மையை யாண்டும் உணர்த்தாமை காண்க என்பர் நச்சினார்க்கினியர்.

'இல்லாப் பொருளென உரைப்பவாலெனின் இல்பொருள் வழக்கின்றென மறுக்க' என்பர் தெய்வச்சிலையார்.

மன்னாப் பொருள் என்பதற்குப் பொருந்தாப் பொருள் என்றும் உரைகாண்பர் தெய்வச்சிலையார். இப்பொருண்மை கொண்டு இவர் உரைக்கும் உரையும் ஈண்டு அறியத்தக்கது. அது வருமாறு :—

"பொருந்தும் பொருளும், பொருந்தாப் பொருளும் உறழ வேண்டும் இடத்தும், பொருந்தும் பொருள் கூறுமிடத்தும் உம்மை கொடுத்துச் சொல்ல வேண்டும் என்றவாறு."

"வேதாகமத் துணிவு ஒருவர்க்கு உணர்த்துமிடத்து, உலகும், உயிரும், பரமும் அனாதி; பதியும், பசுவும், பாசமும் அனாதி என வரும். உலகும் உயிரும் பரமும் பசுவும் பொருந்தும் பொருள் ஆனவாறும்; பாசமும் பதியும் இவற்றோடு பொருந்தாத பொருள் ஆனவாறுங் காண்க. 'உடம்பும் உயிரும் வாடியக் கண்ணும்' எனவும், 'நோயும் இன்பமும்' எனவும் கூறியவாறுங் காண்க. 'மன்னிக் கழிகின்றேன் என்றான் :— மன்னுதல் பொருத்தமும் மன்னுமை பொருந்தாமையும் ஆனவாறுங் காண்க."

௩௫ ஆம் நூற்பா

ஒருவன் ஒரு பொருளைக் கேட்பின் அது தன்னிடத்து இல்லையாயின் 'இல்லை' எனக் கூறலாம். அங்ஙனம் கூறின் கேட்கின்றவன் முன் கேட்ட பொருளுக்கு இனப்பொருளாக ஒன்றைக் கேட்பான். அது உண்டென்றால் உண்டென்றும், இல்லையென்றால் இல்லையென்றும் மீண்டும் கூறல் வேண்டும். இங்ஙனமெல்லாம் சொல் பெருகுதலைக் குறைக்கவேண்டியே ஒருவன் ஒரு பொருளைக் கேட்கும் போது அது தன்னிடத்து இல்லையாயின், அதற்கு இனமான பொருளைக் கூறி இல்லையெனல் வேண்டும் என்பது இந் நூற்பாவின் கருத்து ஆகும்.

'அல்லது' என்பது தன்னுழை உள்ளது அல்லது என்று பொருள்படும். உள்ளது அல்லது - இல்லாதது பிறபொருள் - இனப் பொருள். எனவே இல்லாத பொருளை இல்லையென்றல் வணிகரிடத்துப் பழக்கமில்லையாதலின், அதற்கு இனப்பொருளைச் சொல்லியே இல்லை என்பர்.

(எ - டு.) 'பயறுளவோ வணிகீர்'? என்றவழி 'உழுந்தல்லதில்லை' என்பர்.

ஆசிரியர் பிறிது பொருள் என்றாரேனும் அதற்கு இனப் பொருள் என்பதே கருத்தாகும் என்பர் இளம்பூரணர், நச்சினார்க்கினியர், கல்லாடர் ஆகியோர் எல்லாரும். தெய்வச்சிலையாரும் இதனை வெளிப்படையாகக் கூறாது ஒழியினும், அவர்தம் எடுத்துக்காட்டால் இதுவே கருத்தாதல் தெரியலாம். இவர்கள் அனைவரும் இங்ஙனம் கூறச் சேனாவரையர் மட்டும் பிறிது பொருள் என ஆசிரியர் கூறியிருத்தலின், இனப் பொருள் என்று உரை வகுத்தல் பொருத்தமில்லை என வாதிப்பர். அம்மறுப்பு வருமாறு :—

"பயறுளவோ என்று வினையவழிப் பயறில்லை என்றற்படும் வழுவின்மையானும், உள்ள தல்லதென்றல் கருத்தாயின் ஆசிரியர் அல்லதெனக் குறித்த பொருள் விளங்காமையின் அகப்படச் சூத்திரியாராகலானும், பாம்புணிக் கருங்கல்லும் பயறும் விற்பான்

ஒருவனுழைச் சென்று பயறுளவோ என்றவழிப் பாம்புணிக் கருங்கல் அல்லதில்லை யென்றால் இனப் பொருள் கூறுமையாற் பட்ட இழுக்கின்மையானும், அவை போலியுரை யென்க. அல்ல தூஉம் இனப் பொருள் கூறுக என்பதே கருத்தாயின், அப்பொரு ளல்லா இனப் பொருள் கூறல் என்னாது பிறிது பொருள் கூறல் என்றார் ஆசிரியர், அதனானும் அஃது உரையன்மை உணர்க."

இதனை நச்சினார்க்கினியர் நன்மையாக மறுப்பர். அது வருமாறு :—

"பயற்றான் முடிக்கும் குறை உழந்தான் முடிக்தலன்றிப் பாம்புணிக் கருங்கல்லான் முடிக்தல் ஆகாமையின், 'பயறு உளவோ?' என்றார்க்குப் 'பாம்புணிக் கருங்கல் அல்லது இல்லை' என்றல் பொருந்தாமை உணர்க."

இதுவே வழக்கிற்கும், மரபிற்கும் பொருந்துவதன்றிச் சேனா வரையர் கூறுமாறு கூறல் எத்துணையும் பொருந்துவதன்றாம். அன்றியும், பிற பொருளை கூற வேண்டும் எனக் கூறிய சேனாவரை யரும், இளம்பூரணர் முதலாயினார் காட்டிய இனப் பொருள் கொண்ட எடுத்துக் காட்டினையே காட்டுவதல்லது தம் கருத்திற் கேற்ற எடுத்துக் காட்டினைக் காட்டினார் அல்லர். அதனானும் அஃது உரையன்மை யறியலாம்.

'அல்லது' என்ற சொல்லை மிகையாகக் கொண்டு இவர் உரைக்கும் உரை நச்சினார்க்கினியர் உரையைத் தழுவியதாகும்.

கூசு ஆம் நூற்பா

ஒருவன் ஒரு பொருளை வினவ, அது தன்னிடத்து இல்லை யாயின், அதற்கு இனமாய பொருளைக் கூறி இது வல்லது இல்லை யென்க என்பது சென்ற நூற்பாவின் கருத்து ஆகும். அங்ஙனம் இனப் பொருளில் அல்லது என்னும் சொல்லைவைத்துச் சொல்லாது கேட்பான் கேட்கும் பொருளிலேயே அதனை வைத்துச் சொல்லின், அதனைச் சுட்டிச் சொல்லுக என்பது இந்நூற்பாவின் கருத்தாகும்.

இங்ஙனம் கேட்பான் கேட்கும் பொருளில் இச்சுட்டினைச் சேர்த்துச் சொல்வதற்குப் பயன் கேட்பான் அப்பொருளின் நன்மை தீமையை உணர்ந்து அதனைக் கொள்ளுதற்கும் தவிர் தற்குமேயாம்.

கூஎ ஆம் நூற்பா

சுட்டுக்கள் எவற்றையும் சுட்டலாம். ஆனால் 'இப்பயறு', 'இப்புத்தகம்' எனச் சுட்டினை ஒரு பொருளொடு சுட்டிச் சொல்லின்

அது பொருளொடு புணர்ந்த சுட்டாம். அங்ஙனமன்றி 'இது', 'இவை' என ஒரு பொருளொடு கூட்டாது தனித்துச் சொல்லின் அது பொருளொடு புணராச் சுட்டாம்.

பயறுண்டோ? என்று வினவின் அப்பயறு தன்பால் இருப்பின் 'இப்பயறல்லது இல்லை' எனவும் கூறலாம். அப்பயற்றினைத் தன் கையால் காட்டி 'இதுவல்லது இல்லை' எனவும் கூறலாம். இது வல்லதில்லை என்புழி இது வென்பது பொருளொடு புணராச் சுட்டாயினும், அப்பயற்றினையே காட்டிக் கூறுதலின் இதுவும் பொருளொடு புணர்ந்த சுட்டுப் போலவே கருதப்படும் என்பது இந்நூற்பாவின் கருத்தாம்.

இவையல்லது பயறில்லை என்பது, இப்பயறல்லது வேறு பயறில்லை என்னும் பொருள்பட நின்றது.

இவை என்பதும் பயறு என்பதும் பயறு என்ற ஒரு பொருளையே குறித்தலின் ஒரு பொருள்மேல் இரு பெயர் வந்ததாயிற்று.

இவ்வுரை இளம்பூரணர் கருத்தைத் தழுவியதாகும். இளம்பூரணர், சேனாவரையர், தெய்வச்சிலையார்க்கெல்லாம் இதுவே பொருளாக, நச்சினார்க்கினியர் மட்டுமே வேறு பொருள் கூறுவர். அதனை அவர் உரையான் அறிக.

கக ஆம் நூற்பா

இயற்பெயரும் சுட்டுப் பெயரும் ஒன்றனை ஒன்று கொள்ளாது இரண்டும் வேறு வினை கொள்வதற்கு ஒருங்கு வருமாயின் அவ்வழி இயற்பெயரை முன்னும், சுட்டுப் பெயரைப் பின்னும் கூறல் மரபு என்பது சென்ற நூற்பாவின் கருத்து ஆகும். இவையே செய்யுளாயின் சுட்டுப் பெயர் முன்னும் இயற் பெயர் பின்னும் கிளக்கப் படுதல் மரபாம் என்பது இந்நூற்பாவின் கருத்தாகும்.

(1) "வினைக்கு ஒருங்கு இயலும் காலம் தோன்றின்" என வினையை ஆசிரியர் சிறப்பித்துக் கூறுதலின், அதற்கே இவ்விதி ஏற்புடையதாகும். பெயராக இருந்து இயற்பெயரும் சுட்டுப் பெயரும் ஒன்றையொன்று முடிக்கும் சொல்லாக வரின் யாது முற் கூறினும் அமையும் என்பதாம்.

(2) "இயற் பெயர் வழிய" என்ற மிகையால் இயற் பெயரே யன்றி உயர்திணைப் பெயர், அஃறிணைப் பெயர் ஆகியனவும் கொள்க என்றனர்.

38, 39 ஆகிய இவ்விரு நூற்பாக்களாலும், இவ்வுரைகளாலும் அறியத்தக்க கருத்துக்கள் அனைத்தையுமே ஒருங்கு நினைவு கொள்ளும் முகமாக நன்னூலார்,

"படர்க்கைமுப் பெயரோ டணையில் சுட்டுப்
பெயர்பின் வரும்வினை யெனிற்பெயர்க்கு எங்கும்
மருவும்; வழக்கிடைச் செய்யுட்(கு) எற்புழி"

என அழகாகக் கூறுமாறு காண்க.

மக்கள் தத்தம் பிள்ளைகளுக்கு அவர் பிறந்தபோது இடும் பெயர்கள் இயற் பெயர் எனப்படும். இப் பெயர்கள் காரணமின்றி வழங்குதல் பயனுக வருவனவாகும். இவையே அன்றி மக்கள் தத்தம் விலங்கு, பறவை முதலியவற்றிற்குத் தத்தம் விருப்பம் போல் இட்டு வழங்கும் பெயர்கள் விரவுப் பெயராம்.

"அவனணங்கு நோய் செய்தான்" என்று தொடங்கும் பாடற்கு உரை வருமாறு:—

தலைவியின் உடல் மெலிவு கண்ட தாய், இவட்கு இம் மெலிவு தெய்வத்தாலாயிற்றென்று கருதி, வெறியாட்டு நடத்தினள்; முருகனுக்குச் சேந்தன் என்ற பெயர் உண்டு; ஆதலால், வேலன் சேந்தன் என்ற பெயரைக்கூறி முருகனைப் புகழ்ந்து கூறி வாழ்த்தினன். தலைவன் பெயரும் சேந்தன் என்பதே. (இங்கு இயற் பெயர்.) அதனால் தலைவிக்கு ஒருவகையால் அவளுடைய தலைவன் பெயரைக் கூறி வாழ்த்தியதாயிற்று; அதனால் தலைவி ஒருபால் மகிழ்ச்சி யடைந்தாளாயினும், அப்போது அன்னை கடப்பமாலையைக் கொண்டுவந்து தலைவிக்கு அணிந்தாளாயின், அதனால் என் விளையுமோ என்று ஒரு பால் அச்சமும் உடையளாயினள் என்பது இச் செய்யுளின் கருத்து.

இவ்விளக்கம் திரு. ஆ. பூவராகம்பிள்ளை அவர்களின் விளக்க வுரையிற் கண்டது.

௪0 ஆம் நூற்பா

சுட்டை முதலாகக் கொண்டு காரணத்தை உணர்த்தும் சொல்லை 'சுட்டு முதலாகிய காரணக்கிளவி' என்பர். அது 'அதனால்' என்பதாம். அதுவும் மேலை நூற்பாவில் கூறிய சுட்டுப் பெயர் போல இயற்பெயரின் பின்னே சொல்ல வேண்டுமென்பது இந் நூற்பாவின் கருத்தாகும்.

மேற்கூறிய வகைகளெல்லாம் இதற்கும் ஒக்கும் என்றது சுட்டு முதலாகிய காரணக்கிளவி வழக்காயின் தன்னால் சுட்டப் படும் தொடர்மொழிப் பொருளுக்குப் பின் நிற்றலும், செய்யுளாயின் முன் நிற்றலும் ஆதலைக் குறிக்கும்.

"ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின் கட்சோர்வு"

என்ற விடத்துச் சுட்டு முதலாகிய காரணக்கிளவி முன் வந்தமை காண்க.

இந்நூற்பாவில் சுட்டு முதலாகிய காரணக்கிளவி என இருப் பினும் இதனையும் சுட்டுப் பெயர் என்றே கொண்டனர் இவர். ஆதலின் முன்னைய நூற்பாவிலும் இந்நூற்பாவிலும் சுட்டுப் பெய ராதலும், தன்னால் உணர்த்தப்படும் பெயர்க்குப் பின் நிற்றலும் ஆகிய இலக்கணம் உடைமையின் நூற்பா ஒன்றாகாது இரண்டா தற்குக் காரணம் என்னை என ஆராய்கின்றார் கல்லாடர்.

முன்னைய நூற்பாவில் 'சாத்தன் வந்தான் அவற்குச் சோறிடுக' என்று உள்ளது. எனவே அச்சுட்டு சாத்தன் என்னும் பொருளைக் குறிக்க வந்ததாகும் எனத் தெரிகிறது. இந் நூற்பாவில் சாத்தன் கையெழுதுமாறு வல்லன், அதனால் தன் ஆசிரியன் உவக்கும் என்னும் காட்டு உள்ளது. ஈண்டுள்ள சுட்டு கையெழுதுமாறு இருக்கும் வல்லமையைக் (அஃதாவது பண்பைக்) குறிப்பதாகும். ஆதலின் முன்னையது பொருள்வழி வந்தது; ஈண்டு அப்பொருளது குணத்துவழி வந்தது என்றார்.

இவ்வாய்வும் வேற்றுமையும் இளம்பூரணர் உரையை அப் படியே தழுவியதாகும். பரிமேலழகரும் இக்கருத்தினரேயாவர். திருக்குறள் 642 இன் உரை காண்க. எனினும் இதனைச் சேனா வரையர் மறுப்பர். அம்மறுப்பு வருமாறு:—

"பொருள் பற்றாது பண்பு முதலாயின பற்றி வந்த சுட் டாதலின் வேறு ஓதப்பட்டதென்று உரையாசிரியர் கூறினரா லெனின்:- சாத்தன் வந்தான் அஃதரசற்குத் துப்பாயிற்று எனவும், கிழவன் பிரிந்தான் அதனைக் கிழத்தி யுணர்ந்திலள் எனவும், எழுவாயாயும் ஏனை வேற்றுமையேற்றும் அச்சுட்டுப் பயின்று வருதலால் பண்பு முதலாயினவற்றைச் சுட்டும் சுட்டெனப் பொதுவகையால் கூறாது காரணக் கிளவி என ஒரு சார் வேற்று மைக்குரிய வாய்பாடுபற்றி ஓதுதல் குன்றக் கூறலாகலானும், சுட்டுப் பெயராயின் சுட்டு முதலாகிய காரணக் கிளவி என்றும் சுட்டுப் பெயரியற்கையின் செறியத்தோன்றும் என்றும் கூறுதல் பொருந்தாமையானும், அது போலியுரை யென்க."

சச ஆம் நூற்பா

சிறப்பினாகிய பெயர்நிலைக் கிளவி என ஆசிரியர் பொதுப்பட ஓதினாரே யன்றி எவ்வெச் சிறப்பென ஓதிற்றிலர். இளம்பூரணர் உள்ளிட்ட உரையாசிரியர்கள் எல்லாம் அரசனால் வரும் சிறப்பு, கல்வி, தொழில், குலம் முதலிய இவற்றானாய சிறப்பு என்று விளக்கம் கூறினர். நன்னூலார் இன்னும் சற்று விரித்து,

"திணைநிலம் சாதி குடியே உடைமை
குணம் தொழில் கல்வி சிறப்பாம் பெயரொடு
இயற்பெயர் ஏற்றிடல் பின்வரல் சிறப்பே"

எனக் கூறினர்.

சஉ ஆம் நூற்பா

ஒரு பொருளைக் குறித்துப் பல பெயர்கள் வருமாயின் பெயர் தொறும் வினை முடிபு கொடுக்காமல் இறுதியில் ஒருவினை முடிபே கொடுத்தல் மரபு. அங்ஙனம் அன்றிப் பெயர்தொறும் வினை முடிபு கொடுப்பின் அவையனைத்தும் ஒரு பொருளைக் குறிக்கும் பல பெயர்களாக இல்லாமல் வெவ்வேறு பெயர்களாகக் கருதப் பட்டுவிடும் என்பது இந்நூற்பாவின் கருத்து ஆகும்.

தொழில்—முடிக்குஞ் சொல். தொழில் வேறு கிளத்தல் என்பது பெயர் தொறும் ஒரு வினையே கொடுத்தலும், பெயர் தொறும் வெவ்வேறு வினைகொடுத்தலும் என இருவகையாக விரிக்கப்படும். எந்தை வருக, எம் பெருமான் வருக, மைந்தன் வருக என்றவிடத்துப் பெயர்தொறும் வினையிருப்பினும் அவை யனைத்தும் ஒரே வினையாய் இருத்தலின் அவ்வினைகளையுடைய பெயர்களும் ஒரு பெயரையே குறிக்கும் என்பது நன்கு விளங்கும். இதனை ஆசிரியர் எடுத்தோதாராயினும் "ஞாபகம் கூறல்" என்னும் உத்தியால் கொள்வர் கல்லாடர்.

பெயர் தொறும் வெவ்வேறு வினை கொடுத்தல் 'எந்தை வருக, எம்பெருமான் உண்க, மைந்தன் பருகுக' என்பன போல வருவதாம். இங்ஙனம் பெயர் தொறும் வெவ்வேறு வினைகள் கொடுப்பின், அவ்வினைகளுக்குரிய பெயர்கள் அனைத்தும் ஒருவரையே குறிக்காமையின் அங்ஙனம் கூறல் பொருந்தாதாம்.

இங்ஙனம் 'தொழில் வேறு கிளத்தல்' என்ற தொடரை இரண்டு விதமாக விரித்துப் பொருள் கொண்டமையின் ஞாபகம் கூறலாயிற்று. ஞாபகம் கூறல் - இரட்டுற மொழிந்து இரண்டு சொற்கும் பொருள் கோடல்.

இவ்வுரை இளம்பூரணர் உரையை முற்றிலும் தழுவியதாகும்.

சங ஆம் நூற்பா

தன்மைச் சொல் உயர்திணைக்கே யுரியது. அவ்வுயர் திணைக்கேயுரிய தன்மைச் சொல்லையும் அஃறிணைச் சொல்லையும் எண்ணுமிடத்து விரவி எண்ணுதல் நீக்கப்படாது என்பது இந் நூற்பாவின் கருத்தாகும்.

இது இளம்பூரணர், தெய்வச்சிலையார் ஆகியோர்க்கும் உடன்பாடாகும். உயர்திணைக்கேயுரிய தன்மைச் சொல்லையும் அஃறிணைச் சொல்லையும் சேர்த்து எண்ணி முடிபு கொடுக்குங்கால் தன்மைப் பன்மைச் சொல்லாலேயே முடிக்க வேண்டும் என்பதை இந்நூற்பாவின் கருத்தாக்குவர் சேனாவரையரும், நச்சினார்க்கினியரும்.

இவ்விரு திறத்தாருள் முன்னையோர், இனன் அல்லாதன உடன் எண்ணுதல் வழுவென்றனர். பின்னையோர் இனன் அல்லாதனவற்றை எண்ணி முடிபு கொடுக்குங்கால் அதனை எங்ஙனம் முடிக்கவேண்டும் என்று விளக்கினர்.

இக்கருத்துக்களில் கல்லாடர் முதற்கருத்தையே தழுவினும், பின்னையோரது கருத்தையும் ஏற்றுக் கொள்கின்றார். இதனைச் 'சொல்லொடு சொல் முடித்தலே திணைவழுவெனினும்............ இதன்கண் உணர்வது' என்ற உரைப்பகுதியால் அறியலாம்.

'மருங்கு' என்ற மிகையால் இவ்வுரையாசிரியர் தரும் கருத்து இளம்பூரணர் உரையைத் தழுவியதாகும். எனினும் இதனைத் தெய்வச்சிலையார் குறிப்பாக மறுத்துச் செல்வர். அது வருமாறு:

"நீயும் நின்படைக் கலமுஞ் சாறீர், அவனும் அவன் படைக்கலமும் சாலும் என ஏனையிடத்தும் வருமால் எனின், முன்னிலை வினை இருதிணைக்கும் பொதுவாகலின் னும், படர்க்கை வினைக்கட் 'செய்யும்' என்னும் முற்றுச் சொல் இருதிணைக்கும் பொதுவாய் வருதலானும் அவை ஆண்டு அடங்குமென்க."

சச ஆம் நூற்பா

இந்நூற்பா உரை பிழைபட உள்ளது.

ஒருமை எண்ணினைக் குறிக்கும் சொல் ஒருவர் என்பதாகும். அது ஆண், பெண் என்னும் இருபாற்கும் உரிய சொல்லாதலின் ஒருமை எண்ணின் பொதுச் சொல்லாயிற்று. அதனின்றும் பிரிந்த சொல் ஒருவன், ஒருத்தியாகும். அவை எண்ணு முறைமைக் கண் ஒருவன், ஒருத்தி என எண்ணுவதல்லது இருவன், இருத்தி என எண்ணுதற்குரியனவன்றாம் என்பது இந்நூற்பாவின் கருத்தாகும்.

"ஒருவன் ஒருத்திப்பெயர்மேல் எண்ணில" என நன்னூலாரும் கூறுதல் காண்க.

சரு ஆம் நூற்பா

வியங்கோள் வினையினால் முடிக்கப்படும் பெயர் உயர்திணையும் அஃறிணையுமாக விரவி எண்ணப்பட்டு வரினும் அவற்றை நீக்கார் என்பது இந்நூற்பாவின் கருத்து ஆகும்.

தன்னினம் முடித்தல் என்ற உத்தியால் இவ்வுரையாசிரியர் கூறும் கருத்து நச்சினார்க்கினியர் உரையைத் தழுவி உரைத்திருப்பதாகும்.

வியங்கோள் இருதிணைக்கும் பொதுவாயினும், ஆவும் ஆயனும் செல்க என்புழி ஆவினை முடிக்கவந்த 'செல்க' என்பதே ஒருங்கு ஆயனுக்கும் உரியதாதல் பொருந்தாமையின், இது வழுவமைதியாம் என்றும், ஈண்டும் இனன் அல்லன உடன் எண்ணப்படுதலில் வழுவில்லை; முடிக்கும் சொல் கொள்ளுதலிலேயே வழுவாம் என்றும் சேனாவரையர் கூறி, இளம்பூரணர் கருத்தினை மறுப்பர். அதனை அவர் உரையானறிக.

சஎ ஆம் நூற்பா

வேறுவினைப் பொதுச் சொல்லாவன அடிசில், அணிகலம், இயமரம் என்பன. அடிசில் என்பது உண்பன, தின்பன, பருகுவன, நக்குவன என்னும் வினைகளுக்குப் பொதுவாதலானும், இயமரம் என்பது ஊதுவன, எழுப்புவன என்னும் வினைகளுக்குப் பொதுவாதலானும், இவை வேறுவினைப் பொதுச் சொல்லாயின.

இங்ஙனம் வேறு வேறு வினைகளுக்குரிய பொதுச் சொற்களுக்கு வினை கொடுக்குங்கால் பொதுவினையே கொடுக்க வேண்டும். எனவே அடிசில் அயின்றார், அணிகலன் அணிந்தார், இயமரம் இயம்பினார் என அவை பொதுவினையால் கூறப்படும் என்பதாம்.

இது சென்ற நூற்பாவின் கருத்தாகும். இங்ஙனம் வேறு வேறு வினையையுடைய சொற்களை (அதாவது குழல், யாழ் என்பன போல்வனவற்றை) எண்ணி அவற்றிற்கு முடிக்கும் சொல் கொடுக்கும் பொழுதும் மேற்கண்டவாறு பொதுச்சொற்களையே முடிபாகக் கொடுக்க வேண்டும் என்பது இந்நூற்பாவின் கருத்தாகும்.

இவ்விரு நூற்பாக்களின் கருத்தையும் இணைத்தே நன்னூலாரும்,

"வேறுவினைப் பல்பொருள் தழுவிய பொதுச்சொலும்
வேறுஅவற்று எண்ணும்ஓர் பொதுவினை வேண்டும்"

எனக் கூறினர்.

சஅ ஆம் நூற்பா

பலபொருட்கும் பொதுவாகியதொரு இடத்தையோ பொருளையோ பொதுச்சொல்லால் கூறாது சிறப்புச் சொல்லால் கூறின் அது 'ஒருபெயர்ப் பொதுச்சொல்' என்பர். அத்தகைய சிறப்புச் சொல் தலைமை பற்றியோ அல்லது பன்மை பற்றியோ கொடுக்கப்

படும். இந்நெறி இருதிணைக்கும் ஒக்கும் என்பது இந்நூற்பாவின் கருத்து.

௫0 ஆம் நூற்பா

இந்நூற்பாவிற்குரிய உரை இளம்பூரணர் உரையை முற்றிலும் தழுவியதாகும்.

உயர்திணைக்கண்ணும் அஃறிணைக்கண்ணும் ஆண் பெண் இரு பாற்குமுரிய பொதுச்சொற்கள், தத்தம் பால் பொதுமையி னின்றும் நீங்கிச் சிறப்பாக ஒவ்வொரு பாலுக்கே உரியதாய் வருதலும் உண்டு. இந்நிலை சிலவற்றிற்குப் பெயரினானும், சிலவற் றிற்கு வினையினானும் வரும். இதனையே 'ஒன்றொழி பொதுச்சொல்' என நன்னூலாரும் கூறுவர்.

இந்நூற்பாவிற்குத் தெய்வச்சிலையார் இவர்களனைவரினும் மாறு படப் பொருள் காண்பர். அதனை அவர் உரையானறிக.

௫௧ ஆம் நூற்பா

உயர்திணைப் பெயரையும் அஃறிணைப் பெயரையும் விரவி எண்ணி அவற்றை முடிக்கின்ற பொழுது செய்யுளுள் பெரும் பாலும் அஃறிணை வினைமுடிபே கொடுக்கப்படும் என்பது இந்நூற் பாவின் கருத்தாகும்.

பலவயினானும்—பலவிடத்தும். அஃதாவது பெரும்பாலும் என்பது பொருளாகும். எனவே சிறுபான்மை இவ்விருதிணைப் பெயர்களையும் விரவி எண்ணி அவற்றிற்கு உயர்திணை முடிபு கொடுத்தலும் உண்டு என்பர் சேனாவரையரும் தெய்வச்சிலையாரும்.

ஆயினும் இளம்பூரணர் இங்ஙனம் கொள்ளாது, பெரும் பாலும் அஃறிணை முடிபின எனவே சிறுபான்மை உயர்திணைப் பெயர்களையே எண்ணி, அவற்றை அஃறிணை முடிபால் முடிக்கினும் இழுக்கில்லை என்றனர். இதனையே இவ்வுரையாசிரியராகிய கல்லாடரும் தழுவினர்.

நச்சினார்க்கினியர் இவ்விருவகைக் கருத்தினையும் ஏற்றனர்.

உயர்திணைப்பெயர்களையே எண்ணி அஃறிணையான் முடிதலும் உண்டு என்ற கருத்தைச் சேனாவரையர் மறுப்பர். அதனை நச்சினார்க்கினியர் மறுத்துரைப்பர். இத்திறம் எல்லாம் அவரவர் உரைநோக்கி அறிக.

ஆனால் கல்லாடர் உயர்திணைப் பெயர்களையும் அஃறிணைப் பெயர்களையும் எண்ணிச், சிறுபான்மை உயர்திணை முடிபால் முடி

தலும் உண்டு என்னும் கருத்தை மறுத்துரைக்கின்றார். அம்மறுப்பு வருமாறு :

சிலவயினென் திணை விரவி எண்ணி உயர்திணையால் முடிவனவும் கொள்ளாமோ எனில், சான்றோர் செய்யுட்கு அவ்வாறு வருவனவாய் இன்மையிற் கொள்ளாம் என்பது.

இவர் இங்ஙனம் மறுப்பினும், சான்றோர் செய்யுட்கண் இங்ஙனம் வருவனவாகச் சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் உதாரணங்கள் காட்டியுள்ளனர். அவை வருமாறு:

(1) "பார்ப்பார் அறவோர் பசுப்பத் தினிப்பெண்டிர்
மூத்தோர் குழவி யெனுமிவரைக் கைவிட்டு"
(சிலப்—வஞ்சினமாலை).

(2) "பார்ப்பார் தவரே சுமந்தார் பிணிப்பட்டார்
மூத்தார் இளையார் பசுப்பெண்டி ரென்றிவர்கட்
காற்ற வழிவிலங்கி னாரே பிறப்பிடைப்
போற்றி யெனப்படு வார்." (ஆசாரக்கோவை—64)

எனவே கல்லாடர் மறுப்புப் பொருத்தமின்றாம்.

௩௩ ஆம் நூற்பா

பலபொருள் தரும் ஒரு சொல்லைத் தனித்துச் சொல்லின் அது இன்ன பொருளில் வருகின்றது என நன்கு விளங்காது. ஆதலின் அதனை அதற்குத் தக்க வினையோ இனப் பொருளோ அன்றிச் சார்புப் பொருள் வந்தவிடத்துத் தான் இப்பொருளில் வருகின்றது எனத் தெரிந்து கொள்ள முடியும் என்பது இந்நூற்பாவின் கருத்தாகும்.

உரையிற் கோடலால் இவர் கூறும் கருத்து நச்சினார்க்கினியர் உரையைத் தழுவியதாகும்.

௩௪ ஆம் நூற்பா

இந்நூற்பா உரை நச்சினார்க்கினியர் உரையை அப்படியே தழுவியதாகும.

இந்நூற்பாவிற்கு இளம்பூரணரும், சேனாவரையரும் ஒரு விதமாகவும், நச்சினார்க்கினியரும் இவ்வுரையாசிரியரும் ஒரு விதமாகவும், தெய்வச்சிலையார் ஒரு விதமாகவும் பொருள் உரைப்பர்.

சேனாவரையர் இந்நூற்பாவினை அடுத்த நூற்பாவோடு இணைத்து ஒரே நூற்பாவாகக் கொள்ளினும், உரையில் இளம்பூரணர் உரையோடு மாறுபட்டிலர். இவர்கள் உரைக்குமாறு :—

பல பொருள் தரும் ஒரு சொல்லிற்குச் சிறப்பு வினை கொடாது பொதுவினை கொடுப்பின், அப்பல பொருள் ஒரு சொல், இன்ன பொருளைக் குறித்தற்கு வந்தது எனத் தெரியாது; அப்பல பொருட்கும் பொதுவாகவே கருதப்படும் என்பது இந் நூற்பாவின் கருத்தாகும். இங்ஙனம் வினை கொடுத்தும் இன்ன தெனத் தெரிந்து கொள்ள இயலாத பலபொருள் ஒரு சொல்லினை, அது இன்ன பொருளில் வருகின்றது என வெளிப்படையாகவே விதந்து சொல்ல வேண்டும் என்பது அடுத்த நூற்பாவின் கருத்து ஆகும்.

வினை வேறுபடும் பல பொருள் ஒரு சொல் சிறப்பு வினையின்றிப் பொது வினையொடு பொருந்திவரினும் ஒரு நிலைமையில் பொருள் விளங்கும் என்பது நச்சினார்க்கினியரும், கல்லாடரும் கருதும் உரையாகும்.

மா வீழ்ந்தது என்பதில் வீழ்ந்தது என்பது விலங்கு, வண்டு, மலர், மரம் ஆகியவற்றிற்கும் பொருந்துமாகலின் இது பொது வினையாம். இங்ஙனம் கூறின் மா என்பது எதனைக் குறிக்கின்றது என விளங்கவில்லை. எனினும் இவர்கள் இருவரும் ஒருவாற்றான் பொருள் விளங்கி நிற்கும் என்கின்றனர்.

ஒரு மரம் பட்டோ, அன்றி அசைவுற்றோ இருக்கும் நிலைமை நன்கு தெரிந்த சூழ்நிலையில், மா வீழ்ந்தது என்பானாயின், அம்மாவும், வீழ்ந்தது என்னும் வினையும் பொதுப்பட இருப்பினும், மா என்பது மரம் என்பது நன்கு விளங்கும். கல்லாடரும் இதனையே வினை வேறு படாஅப் பல பொருள் ஒரு சொல்லும், ஒரு நிலைமைக்கண் வினை வேறு படூஉம் பல பொருள் ஒரு சொல் போல உணர நிற்கும் என விளக்கினார்.

ஒரு நிலைமை - சொல்லுவானும் கேட்பானும் தாம் சொல்லு கின்ற பொருளின் சூழ்நிலையை நன்கு அறிந்திருக்கும் நிலைமை.

இனித் தெய்வச்சிலையார், வினை வேறுபடும் பல பொருள் ஒரு சொல் சிறப்பு வினையின்றிப் பொது வினையொடு பொருந்தி வரின் அதனைப் பொருள் விளங்கும் பிறிதொரு சொல்லோடு கூட்டிக் கூறப் பொருள் விளங்கும் என இந் நூற்பாவிற்குப் பொருள் கூறினர்.

ஒன்றுதல் - பிறிதொரு சொல்லோடு ஒன்றுதல் என்பது இவர் கருத்து. எனினும் இதுவே கருத்தாக அடுத்த நூற்பாவிற் கும் இவர் பொருள் கூறுதலின் இது அத்துணைப் பொருத்தம் உடைத்தன்றாம்.

நச்சினார்க்கினியரும் கல்லாடரும் கூறுவது நூற்பாவிற்கு வலிந்து பொருள் கொள்வதாகவே காணப்படுகின்றது.

எனவே, இளம்பூரணரும், சேனாவரையரும் கூறும் பொருளே இந்நூற்பாவிற்குப் பொருந்துவதாகும்.

௫௬ ஆம் நூற்பா

பல பொருள் ஒரு சொல்லை நான்கு வகையாக விளக்கிக் காட்டுகின்றார் கல்லாடர். அவையாவன :—

(1) பல பொருள் ஒரு சொல் வேறுபடு வினையினாலும், இனத்தினாலும், பொருட் சார்பினாலும் வேறுபடும் என்பது. (௫௩ ஆம் நூற்பாவின் கருத்து.)

(2) பல பொருள் ஒரு சொல் வேறுபடு வினையின்றிப் பொது வினையானும் பொருள் உணரப்பட்டு நிற்கும் என்பது. (௫௪ ஆம் நூற்பாவின் கருத்து.)

(3) அங்ஙனம் பொதுவினையால் கூறின் கருமச் சிதைவு ஏற்படுமேல் கிளந்து சொல்ல வேண்டும் என்பது. (௫௫ ஆம் நூற்பாவின் கருத்து.)

(4) கருமச் சிதைவு இல்வழிக் கிளந்து சொல்லாது பொது வினையாலும் சொல்லலாம் என்பது. (இது ௫௫ ஆம் நூற்பாவில் 'வினையுங்காலை' என்றதனான் பெறப்பட்டது.)

இங்ஙனம் பகுத்துக் கூறப்படும் உரைப் பகுதி சிறிது பிறழ உள்ளது.

இந்நூற்பாவுரை நச்சினார்க்கினியர் உரையை அப்படியே தழுவியதாகும்.

௫௭ ஆம் நூற்பா

உலகினுள் எல்லோருக்கும் ஒப்ப முடிந்ததொரு பொருளை ஒருவன் மாறுபடக் கூறுவானாயின் அம்மாறுபாட்டிற்குரிய காரணத்தை விளங்கச் சொல்ல வேண்டும் என்பது இந்நூற்பாவின் கருத்தாகும்.

"பல்லார் தோள் தோய்ந்து வருதலால்" என்று தொடங்கும் பாடல் இதற்கு எடுத்துக்காட்டாகும். இப் பாடலில் தலைவனுடைய மாலை புலால் நாற்றம் நாறுகின்றது என்றும், மைந்தன் சூடி இருக்கும் எருக்கமாலை இனிய நறுநாற்றம் உடையதாய் இருக்கின்றதென்றும் கூறப்பட்டுள்ளது. தார் புலால் நாறுவதும், எருக்கு இனிதாய் நாறுதலும் உலகினர்க்கு ஒவ்வாத கருத்தாம். தலைவன் தார், புலால் நாறுதற்குக் காரணம் பரத்தையருடைய தோளைத் தோய்ந்து வருவதாகும். எருக்கங் கண்ணி நறிதாதற்குக் காரணம் தலைவன் செய்த தீமையைத் தனது முகிழ்நகை முகத்தால் தணிச்

கும் தன் புதல்வன்மேல் வைத்த காதலாகும். இங்ஙனம் இப் பாடலில் காரணத்தை விளங்கச் சொல்லியிருத்தல் காண்க.

ஒரு பொருளினது வேறுபாடு குறித்தோன் அதற்குரிய காரணத்தை விளங்கச் சொல்லுதல் மரபு என்றலின் இது மரபு வழுக் காத்தவாறாயிற்று.

௫௭ ஆம் நூற்பா

கெழீயிலி - பிறரொடு தொடர்பில்லாதவன்; நல்வினையில்லாதவன் எனினும் அமையும். அஃது அன்னதாதல் 'வீழப்படுவர் கெழீஇயிலர்' என்பதனானும் அறிக.

௫௯ ஆம் நூற்பா

இந்நூற்பாவிற்குரிய பொருளில் 'எனவே மேற்கூறிய குடிமை ஆண்மை என்னும் தொடக்கத்தனவற்றிற்கு இயல்பு' என்றிருத்தல் வேண்டும். குடிமை என்ற சொல் விடப்பட்டுள்ளது.

௬௧ ஆம் நூற்பா

அருத்தாபத்தி - சொல்லியது கொண்டு சொல்லாதவற்றை உணர்தல்.

எடுத்த மொழி - அடை மொழி.

எடுத்த மொழி தன் பொருளை உணர்த்தலேயன்றித் தனக்கு இனமான பொருளையும் உணர்த்தும் என்பது இந்நூற்பாவின் கருத்தாம்.

(எ - டு) 'மேலைச் சேரிக் கோழி அலைத்தது' எனச் சொல்லியது கொண்டு, 'கீழைச் சேரிக் கோழி அலைப்புண்டது' எனச் சொல்லாதவற்றை உணர்த்தலின் அருத்தாபத்தியாயிற்று. இதன் கண் மேலைச் சேரி என்பது கீழைச் சேரி என்பதையும், அலைத்தது என்பது அலைப்புண்டது என்பதையும் உணர்த்தின. அலைத்தது - வென்றது. அலைப்புண்டது - தோற்றது.

இது இளம்பூரணர் உரையை முற்றிலும் தழுவியதாகும். இதனைச் சேனாவரையர் மறுப்பர். அம்மறுப்பு வருமாறு :—

"அஃதேல், மேற்சேரிக் கோழி யலைத்தது எனக் கீழ்ச்சேரிக் கோழி யலைப்புண்டது எனவும், குடங்கொண்டான் வீழ்ந்தான் எனக் குடம் வீழ்ந்தது எனவும், இவை இனஞ்செப்பு மென்றும், ஆ வாழ்க அந்தணர் வாழ்க என்பன இனஞ் செப்பா வென்றும் உரையாசிரியர் கூறினாராலெனின்: அற்றன்று; கீழ்ச்சேரிக் கோழி யலைப்புண்டாலன்றி மேற்சேரிக் கோழி யலைத்தல் அமை

யாமையானும், குடம் வீழ்தலின்றிக் குடங்கொண்டான் வீழ்தல் அமையாமையானும், கீழ்ச்சேரிக் கோழி யலைப்புண்டலும் குடம் வீழ்தலும் சொல்லானன்றி இன்றியமையாமையாகிய பொருளாற்ற லால் பெறப்படுமாகலான் ஈண்டைக் கெய்தா, இது சொல்லா ராய்ச்சியாகலான் என்பது. இன்னோரன்ன சொல்லாற்றலால் பெறப்பட்டனவெனின்: புகையுண்டென்ற வழி எரியுண்மை பெறு தலுஞ் சொல்லாற்றலால் பெறப்பட்டதா மென்பது. இனி ஆ வாழ்க அந்தணர் வாழ்க என்புழிச் சொல்லுவான் ஒழிந்த விலங்கும் ஒழிந்த மக்களுஞ் சாகவென்னுங் கருத்தின னாயின் இவையும் இனஞ்செப்புவனவன்றோவென்பது, அதனான் அவை போலியுரை யென்க.

இதனை நச்சினார்க்கினியர் மறுத்தவாறு இவ்வுரையாசிரியரும் மறுக்கின்றார். அம்மறுப்பிற்கு விளக்கம்:

(1) ஆ வாழ்க அந்தணர் வாழ்க என்புழி ஒழிந்த மக்களும், விலங்கும் சாக என்னுங் கருத்தினனாயின் அவையும் இனஞ் செப்பு மன்றோ என உரைத்தனர் சேனாவரையர். மனித உள்ளம் படைத்த எவரும் இங்ஙனம் கூறார் ஆதலின் சொல்லுவார்க்கு இது கருத் தன்றாம் என மறுத்தனர்.

(2) ஒன்றற்குரிய அடைமொழி இனம் செப்புவதற்கும் செப்பாததற்கும் ஒரு வரையறை உண்டு. அடைமொழி கொடுக்கப் பட்ட பொருளுக்கு இனம் ஒன்றேயாக இருப்பின் அப்பொழுது இனம் சுட்டும்; இனம் பல இருப்பின் அது இனம் சுட்டாது. 'பல் தாழிசைக் கொச்சகம்' என்புழி அதற்கு இனம் ஒன்றே யாதலின் அது சில்தாழிசைக் கொச்சகம் ஒன்றுளது என்பதைச் சுட்டி நிற்கும். ஆனால் 'பஃறொடை வெண்பா' என்புழி அதற்கு இனம் பலவாதலின் அப்பஃறொடை என்பது இனம் குறிக்காது. ஆதலின் அந்தணர், ஆ என்புழி இவற்றிற்கு இனம் பலவாதலின் இவை இனஞ்சுட்டாதனவேயாம் என்பது.

நச்சினார்க்கினியர் மறுப்பு வருமாறு: "ஆ வாழ்க! அந்தணர் வாழ்க! என்பன, இனஞ் செப்பாதன. அருத்தாபத்தி இனஞ் செப்புமாறு, தன்னோடு மறுதலைப் பட்டு நிற்பது ஒன்று உள்வழி ஆயிற்று. மறுதலைப் பாடு பல உள்வழிச் செப்பாது. ஆவிற்கு மறுதலை எருமை, ஒட்டகம் எனப்பல உள; அந்தணர்க்கு மறுதலை, அரசர், வணிகர், வேளாளர் எனப் பிறரும் உளர். அங்ஙனம் பல மறுதலை உள்வழிச் செப்பாது"

௬உ ஆம் நூற்பா

சினைக் கிளவிகள் தம் வினையால் முடிவதும், தம் முதல் வினையால் முடிவதும் என இருமுடிபு உடையன. அவற்றுள்

தம் வினையால் முடிதலாவது அஃறிணை வினையால் முடிவதாகும். தம்வினைமுதல் வினையால் முடிதலாவது உயர்திணை வினையால் முடிவதாகும்.

கண், முலை, தோள் என்பன பன்மைப் பெயர்கள்; அவை தம் வினை (அஃறிணைவினை)யால் முடிகின்ற பொழுது 'கண் நல்லன' எனப் பன்மையால் முடியும்: அவை தம் முதல் வினையொடு முடியின் 'கண் நல்லள்' என ஒருமை வினையால் முடியும் என்பது இந்நூற்பாவின் கருத்தாகும்.

இங்குக் கூறப்பட்ட சினைகள், உயர்திணைச் சினைகளே எனினும் சினைப்பெயர்கள் எல்லாம் அஃறிணைப் பெயர்களாதலால் அவை உயர்திணையொடு முடிதல் வழுவாயினும் அமைகவெனத் திணைவழு வமைத்தவாறு.

மூக்கு, கொப்பூழ் என்னும் ஒருமைச் சினைப் பெயர்கள் தம் வினையால் முடியும்பொழுது மூக்கு நல்லது, கொப்பூழ் நல்லது என அஃறிணை வினையால் முடியும். அங்ஙனமன்றி அவை தம் முதல் வினையால் முடியும்பொழுது மூக்கு நல்லள், கொப்பூழ் நல்லள் என உயர்திணை வினையால் முடியும். இதுவும் திணைவழுவேயாம். இங்ஙனம் நாம் எழுதிய கருத்திற்குக் கல்லாடர் விதி கூறுகின்றார். காலம், உலகம் என்னும் நூற்பா முதல் இந்நூற்பா வரை திணை வழுக்காப்பதாக உள்ளன. இவற்றிடையே 'எடுத்த மொழியினம் செப்பலும் உரித்தே' என்னும் நூற்பா இருப்பது பொருந்துவ தன்றாம். எனினும் இங்ஙனம் இடனின்றி வைத்தமையால் பன்மை சுட்டிய பெயர்க்கேயன்றி ஒருமை சுட்டிய பெயர்களுக்கும் இவ் விதியே கொள்க என்பர்.

இவ்வுரை முற்றிலும் இளம்பூரணர் உரையைத் தழுவியதாகும்.

உ. வேற்றுமை இயல்

௬௩ ஆம் நூற்பா

பெயர்ப்பொருளைச் செயப்படுபொருள் முதலாக வேற்றுமை செய்தலின், வேற்றுமை என்பது காரணப் பெயராகும் என்பது இளம்பூரணர் உள்ளிட்ட உரையாசிரியர்கள் அனைவர்க்கும் கருத்தாம். இதனையே சிறிது விளக்கிக் கூறினர் தெய்வச் சிலையார். அவர் கருத்தினையே இவ்வுரையாசிரியரும் தழுவினர்.

"பொருள் வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை" என நன்னூலாரும் கூறுதல் காண்க.

எழுவாயும் வேற்றுமையாயது ஏன்? என்பது பற்றி இவர் தரும் விளக்கம் சேனவரையர் உரையைத் தழுவியதாகும்.

பெயர் முதலிய நால்வகைச் சொற்களுக்கும் உரிய பொது இலக்கணத்தைக் கிளவியாக்கத்தில் உணர்த்தினர். இனி அந் நால்வகைச் சொற்களுள் முதற் சொல்லாகிய பெயரது இலக் கணத்தை இவ் வேற்றுமை யியல் முதலாகப் பெயரியல் ஈறாக உள்ள நான்கு இயல்களிலும் உணர்த்துகின்றார், என பேலோத்திேைடு இவ்வோத்திடை இயைபு கூறினர் உரையாசிரியர். அதனையே தழுவி இவரும் கூறுகின்றார். இதுபற்றிய கருத்துவேற்றுமைகளை முதல் நூற்பாவின் இறுதியில் நன்கு விளக்கியுள்ளோம். ஆண்டுக் காண்க.

வேற்றுமை யியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு ஆகிய மூன்றியல்களிலும் வேற்றுமை யிலக்கணமே கூறப்பட்டிருக்க, இவையும் பெயரது இலக்கணம் என்பது எங்ஙனம் பொருந்தும் என்பதை இவ்வுரையாசிரியர் நன்கு விளக்கியுள்ளார். இந்நுண்மை பாராட்டுதற்குரியதாகும்; பிறர் உரையில் காணப்படாததுமாகும்.

கூச ஆம் நூற்பா

வேற்றுமை எட்டென்பதே கருத்தாயின் அதனை ஒருங்கு ஒரே நூற்பாவால் கூறாது வேறு கூறியதேன்? என்னும் வினா எழும். இதுபற்றி உரையாசிரியர்களிடையே கருத்து வேற்றுமை யுள்ளது.

வேற்றுமை எட்டனுள் முன்னைய ஏழும் சிறப்புடையன, பின்னையது சிறப்பில்லது ஆதலின் வேறு கூறப்பட்டது என்பர் இளம்பூரணர். என்னை சிறப்பின்மை எனின்: பெயர்களுள் சில விளியேற்றும், சில விளியேலாதும் வருதலுண்மையேயாம் என்பது. கல்லாடரும் இக்கருத்தினரேயாவர்.

சேனவரையர் 'வேற்றுமைதாமே ஏழெனமொழிப' என்னும் முன்னைய நூற்பாவால் பிறர்மதங் கூறி இந்நூற்பாவால் தம்துணிபு உரைத்தார் என்பர். பிறர்மதமாவது வடநூலாருள் ஒரு சாரார் வேற்றுமை ஏழென்பது பற்றியாம்.

"எழியன் முறையது எதிர்முக வேற்றுமை
வேறெனை விளம்பான் பெயரது விகாரம்என்று
ஓதிய புலவனும் உளன்ஒரு வகையான்
இந்திரன் எட்டாம் வேற்றுமை என்றனன்"

என்னும் நூற்பாவால் இவ்வுண்மை யறியலாம்.

௬௫ ஆம் நூற்பா

இந்நூற்பாவின் உரைவிளக்கத்தில் அப்பெயர் பெயர்; அம்முறை முறை என்றிருக்க வேண்டும். முறை என்ற சொல் விடுபட்டுள்ளது.

வேற்றுமைகளைப் பெயர் முதலாக விளிஈறாகக் கூறுதற்குரிய காரணத்தை ஆராயும் இவ்வுரையாசிரியர் முதலும் இறுதியும் உள்ள வேற்றுமைகளுக்கு மட்டும் காரணம் கூறி, இடையிலுள்ளன இம்முறையே நிற்றற்குக் காரணம் இல்லை என்றும், முன்னூலுள் ஓதியமுறையே இவ்வாசிரியரும் கூறினர் எனவும் கூறினர்.

எனினும் நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், சிவஞான முனிவர் ஆகிய மூவரும் இம்முறை நிற்றற்குரிய காரணத்தை விளங்க உரைத்தனர். அவை வருமாறு:-

நச்சினார்க்கினியர், 'இதனை (பெயரை) முற்கூறியது என்னை எனின், சாத்தன் குடத்தைக் கையால் வனைந்து கொற்றற்குக் கொடுத்தான் என வினை முதல் நின்று ஏனையவற்றை நிகழ்த்துதல் வேண்டுதலின், எனச் சுருங்க இம்முறை வைப்பினைப் பற்றிக் கூறுவர்.

தெய்வச்சிலையார், பெயரை முதல்வேற்றுமை என்னாது, எட்டு வேற்றுமையுள்ளும் யாதானும் ஒன்றை முதல் வேற்றுமை எனினும் அமையும் எனின், ஒருவன் ஒன்றை ஒன்றனையியற்றி ஒருவற்குக் கொடுப்ப; அவன் அதனை அவனினின்றும் தனது ஆக்கி ஓரிடத்து வைத்தான் கொற்றா என்ற வழி, செய்கின்றான் முதல் வேற்றுமையாகி இம்முறையே கிடத்தலின் அமையாது என்க.

அஃதேல், யாற்றினது கரைக்கண் நின்ற மரத்தை அறச்சாலையியற்றுதற்கு ஊரினின்றும் வந்து மழுவினானே வெட்டினான் சாத்தன் என்ற வழி, எழுவாயாகிய பெயர் ஏழாவதுமாய் நின்றதால் எனின், சொல்லுவான் குறிப்பினான் முதல் வேற்றுமையாயிற்று என்பது கருத்து.

யாதானும் ஒரு தொழிலும் செய்வான் உள்வழி அல்லது நிகழாமையின் அது செய்து முடிக்கும் கருத்தா முன் வைக்கப்பட்டான். அவன் ஒரு பொருளைச் செய்து முடிக்குங்கால் செய்யத்தகுவது இது எனக் குறிக்க வேண்டுதலின் செயப்படுபொருள் இரண்டாவது ஆயிற்று. அவ்வாறு அப்பொருளைச் செய்து முடிக்குங்கால் அதற்காங் கருவி தேடுமாதலின் அக்கருவி மூன்றாவதாயிற்று. அவ்வாறு செய்து முடித்த பொருளைத்தான் பயன் கோடலேயன்றிப் பிறர்க்குங் கொடுக்கும் ஆதலின் அதனை ஏற்று

நிற்பது நான்காவது ஆயிற்று. அவ்வாறு கொடுப்புழி அவன் கையினின்றும் அப்பொருள் நீங்கி நிற்பது ஐந்தாவது ஆயிற்று. அவ்வாறு நீங்கின பொருளைத் தனதென்று கிழமை செய்தலின் அக்கிழமை ஆறாவது ஆயிற்று. ஈண்டுக் கூறப்பட்ட எல்லாவற்றிற் கும் இடமும் காலமும் பொதுவாகி நிற்றலின், அவை ஏழாவது ஆயின. இவையிற்றோடு ஒத்த இயல்பிற்று அன்று எதிர்முகம் ஆக்குதற் பொருட்டு ஆகலின், விளி என்பது எல்லாவற்றினும் பிற்கூறப்பட்டது.

"சிவஞான முனிவரும்", நன்னூல் விருத்தியில் இம்முறை வைப்பிற்குரிய காரணத்தை அவ்வந் நூற்பாக்களில் தந்து போகின்றார். அவை வருமாறு :

இவ் வேற்றுமை (2 ஆம் வேற்றுமை) தன் பெயர்ப் பொருளை மேற் போந்த (முதல் வேற்றுமை) கருத்தனாலாகிய காரியம் ஆக்கு தலின் இரண்டாம் வேற்றுமை எனப்பட்டது.

இரண்டாம் வேற்றுமைப் பொருளாகிய காரியத்திற்கு வேண்டும் கருவிப் பொருளைத் தருதலில் இது மூன்றாம் வேற்றுமை எனப்பட்டது.

ஒருவன் ஒரு காரியத்தை ஒரு கருவியாற் செய்தல் தனக் கேனும் பிறர்க்கேனும் உதவுதற் பொருட்டன்றி வீண் காரியம் செய்யானாதலின் இஃது இம் முறையானே நான்காம் வேற்றுமை எனப்பட்டது.

எல்லாப் பொருளையும் இதனின் இற்று இது என விகற்பித் துணர்தற்கு வருவன ஐந்தாம் வேற்றுமை யுருபாம். ஆகவே நான்காம் வேற்றுமைப் பொருளாகிய கொள்வோனையும் கொடைப் பொருளையும் இவ்வாறு விகற்பித்துணர்ந்தல்லது கொடுத்தல் கூடாமையின் இஃது ஐந்தாம் வேற்றுமை எனப்பட்டது.

மேற்போந்த கொள்வோனையும், கொடைப் பொருளையும் இதனின் இற்றுஇதுவென விகற்பித்துணர்ந்து கொடுத்தல் இவ்விரு கிழமைப் பெயருடையோர் செயல் என்பது தோன்ற இஃது ஆறும் வேற்றுமை எனப் பட்டது.

இது(ஏழாம் வேற்றுமை)பெயர்ப் பொருளை மேற்போந்த இரு கிழமைப் பொருள்கட்கும் இடமாக வேற்றுமை செய்தலின் ஏழாம் வேற்றுமை எனப்பட்டது.

இம் மூவர் தம் கருத்திலும் தெய்வச்சிலையார் கருத்தே ஏற்ற முடையதாய் நிற்றல் காண்க.

௧௬ ஆம் நூற்பா

இந் நூற்பாவில் "தோன்று நிலை" என்பதற்கு உரையாசிரியர்களனைவரும் ஒவ்வொரு விதமாக உரை கொள்கின்றனர்.

'பெயர் தோன்று நிலை' என்பதற்குப் பெயர் தோன்றிய துணையாய் நிற்றல் என்றும், தோன்றி துணையாய் நிற்கும் நிலைமையாவது உருபும் விளியும் ஏலாது பிறிதொன்றனோடு தொகாது நிற்கும் நிலைமை என்றும் விளக்கினர் சேனாவரையர்.

இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் தோன்று நிலையாவது அடுத்த நூற்பாவில் கூற இருக்கும் அறுவகைப் பயனிலைகளையும் பெயர்கள் தோன்ற நிற்கும் நிலைமையாம் என்பர். கல்லாடரும் இக் கருத்தினரே யாவர்.

இவற்றுள் சேனாவரையர் கூறியவாறே நன்னூலாரும் "எழுவாயுருபு திரிபில் பெயரே" எனக் கூறினர். தொல்காப்பியத்தில் உள்ள தோன்று நிலை என்ற சொற்றொடரை விளக்குவதே இத் 'திரிபில் பெயர்' என்ற சொற்றொடராகும்.

இவ்வுரைகளில் சேனாவரையர் தரும் விளக்கமே பொருந்துவதாகும்.

௧௭ ஆம் நூற்பா

பொருண்மை சுட்டல்—பொருளின் தன்மையைச் சுட்டல். பொருள் வேறு; பொருண்மை வேறு. பொருள் என்பது ஒரு பொருளைக் குறிக்கும். பொருண்மை என்பது அங்ஙனம் சேர்ந்த பல பொருள்களின் தன்மையைக் குறிக்கும்.

(எ-டு.) ஆ வுண்டு என்புழி ஆ அழிதன் மாலையது; அதனது சாதித் தன்மை அழியாதது. அதனையே ஈண்டுப் பொருண்மை என்றார்.

இந் நூற்பாவின் உரையனைத்தும் நச்சினார்க்கினியர் உரையை அப்படியே தழுவியதாகும்.

௧௮ ஆம் நூற்பா

இந் நூற்பாவில் உரைப்பகுதி விடப்பட்டுள்ளது. அதனைப் பின் வரும் எடுத்துக் காட்டால் நன்கறியலாம். எனவே இந் நூற்பாவிற்குப் பின்வருமாறு உரையிருத்தல் பொருந்துவதாகும்.

இரண்டு பெயர்ச் சொல் முதலாக உளவாகிய தொகைச் சொற்களும் உள; உண்மையால் ஒரு வினையும் பெயரும் முதலாக உளவாகிய தொகைச் சொற்களும் உள. இவ்விருதிறத்துத்

தொகைச் சொற்களும் மேற்கூறப்பட்ட பயனிலை கோடற்கண் உரியவாம் என்பது.

பெயரினாகிய தொகைக்கு எடுத்துக்காட்டுத் தருவதில், வீழ்ந்தது, பெரிது என்பதற்கிடையில் 'யாது' என்ற சொல் இருக்க வேண்டும். வினையினாகிய தொகையில் இது இருப்பது காண்க. இவ்வறுவகை எடுத்துக் காட்டுக்களும் முறையே பொருண்மை சுட்டல் முதலியவற்றிற்கு உரியனவாம்.

தொகைச் சொற்கள் எல்லாம் பயனிலை கொண்டு வரும். எனவே அவை எழுவாய் ஆதலும் வேண்டும். அதனை "எல்லாத் தொகையும்" என்னும் நூற்பாவால் பெறுதும் என்றனர். இதுவே இளம்பூரணர்க்கும் கருத்தாகும். எனினும் இதனைச் சேனாவரையர் மறுப்பர். அது வருமாறு:-

" 'பெயரினாகிய தொகையும்' என்ற உம்மையான் வினையினாகிய வினைத்தொகை தழுவப்பட்டதென்றும், 'எல்லாத் தொகையும் ஒருசொல் நடைய' என்பதனால் தொகைச் சொல்லெல்லாம் எழுவாய் வேற்றுமையாதல் பெறப்படுதலின், ஈண்டு அவ்வுமுரிய அப்பாலான என்றது தொகைச் சொற்குப் பயனிலை கோடல் மாத்திரம் எய்துவித்தற்கென்றும், உரையாசிரியர் கூறினாராலெனின் :- அற்றன்று ; வினைத் தொகைக்கு நிலைமொழி வினையென்பது உரையாசிரியர்க்குக் கருத்தன்மை "வினையின் தொகுதி காலத்தியலும்" என்னுஞ் சூத்திரத்திற் சொல்லுதும். இனி "எல்லாத் தொகையும் ஒருசொல் நடைய" என்பதற்கு ஒருசொல் நடையவாம் என்பதல்லது எழுவாய் வேற்றுமையாம் என்னுங் கருத்தின்மையானும், அக் கருத்துண்டாயின் அவையும் எழுவாய் வேற்றுமையாய் நின்று 'அன்றியனைத்தும் பெயர்ப்பயனிலையே' என்றதனால் பயனிலை யெய்துமாகலின் அவ்வுமுரிய அப்பாலான வென்றல் கூறியது கூறிற்றுமாகலானும், அதுவும் உரையாசிரியர் கருத்தன்றென்க."

கக ஆம் நூற்பா

தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடத்துப் பெயர்களும், பயனிலை கொண்டு வருதலாம் இலக்கணத்தில் திரியாவாம் என்பது, இந்நூற்பாவின் கருத்து ஆகும். எனவே எவ்விடத்துப் பெயர்களும் உருபேற்றலாம் இலக்கணத்தில் திரிந்தும் வரலாம் (அதாவது உருபேலாப் பெயர்களும் உளவாம்) என்பதே இந் நூற்பாவின் போந்த கருத்தாகும் என்பது இளம்பூரணர் கருத்தாகும். இதுவே கல்லாடருக்கும் கருத்தாகும்.

பயனிலை கொள்ளுங்கால் எல்லாப் பெயர்களும் வெளிப்படத் தோன்றி நிற்றல் நேரிதாம். அன்றிச் சில பெயர்கள் வெளிப்படாது

நிற்றலும் உண்டு. அவ்வ தோன்று எழுவாய் என்று பெயர்பெறும் என்பது, இந்நூற்பாவின் கருத்து என்பர் சேனாவரையரும், தெய்வச்சிலையாரும்.

நச்சினார்க்கினியர் இவ்விரு கருத்தையும் ஏற்றனர்.

உரையில் மேற்காட்டின என்ற சொல்லிற்கு முன்னர் 'உதாரணம்' என்ற சொல்லைத் தலைப்பெய்து வாசித்துக் கொள்ளல் வேண்டும்.

'இவ்விதி மேல் பெற்றுமன்றோ எனின் மேல் பெற்றதனையே ஈண்டும் விதந்து' என்றிருத்தல் வேண்டும்.

நீயிர் என்பது பெயர்: என்று தொடங்கும் பகுதி பிழைபட உள்ளது. அது கீழ்வருமாறு இருப்பின் நன்று.

நீயிர் என்பது பெயர்; நீயிரை என உருபேலாது. இது நும் என்னும் பெயரது அல்வழிப் புணர்ச்சித் திரிபு என்பது. உம்மை என உருபேற்குமால் எனின், பிற சந்தித் திரிபுபோல நிலைமொழி நிலைதோற்ற நில்லாது திரிந்தபின் பிறிதோர் பெயர் நிலைமைப்பட நிற்றலின் வேறோர் பெயர் என வேண்டியது போலும். இதனகத்து விகற்பமெல்லாம் உரையிற் கொள்க. இங்நிகரன ஒருருபும் ஏலாதன. அவ்வாய்க் கொண்டான் என்பது, அவ்வாய்க்கட் கொண்டான் என ஏழாம் உருபேலாதது."

இந்நூற்பாவிற்கு இளம்பூரணர் கூறிய கருத்தை வன்மையாக மறுப்பர் சேனாவரையர் அது வருமாறு:

"எவ்வயிற் பெயரும் பயனிலை கோடல் செவ்விதென, உரு பேற்றல் செவ்விதன்றுமென வுரைத்து அவ்வாய் நீயிரென்பன உருபேலாவென்று காட்டினரால் உரையாசிரியரெனின்: அவ்வாய் என்பது இடைச் சொல்லாய் ஆண்டென்னும் பொருள்பட நின்ற வழி உருபேயன்றிப் பயனிலையும் ஏலாதாம். இனி அல்வழிக்கண் நும் என்பது திரிந்து நீயிர் என நின்ற திரிபைப் பெயரெனக் கொண்டு உருபேலாது என்றாராயின், நீயென்பதன் திரிபாகிய நின் என்பதனையும் பெயராகக் கொண்டு பயனிலை கொள்ளாதென்றும் கூறல் வேண்டும்; அன்றி நும்மின் திரிபாகிய நீயி ரென்பதனை 'எல்லா நீயிர் நீயெனக் கிளந்து' என இயற்கைப் பெயரோடு ஒருங்கு வைத்தது நீயிர் என்னுந்திரிபே இயல்பாக வேற்றுமைக் கண் நும்மெனத் திரியினும் அமையும் என்னுங் கருத்தினரா யன்றே, அதனால் இயல்பாகக் கொள்ளப்பட்ட நிலைமைக்கண் நீயிர் என்பதனை உருபேலாது என்றாராயின் நும்மெனத் திரிந்து உரு பேற்றதனை உருபேலாதென்றல் பொருந்தாதாம். அதனான் அது போலியுரை யென்க."

எ0 ஆம் நூற்பா

பெயர்கள் உருபு ஏற்குங்கால் அவ்வுருபு யாண்டுநிற்கும் எனில், அவற்றின் இறுதியில் நிற்கும் என்பது இந்நூற்பாவின் கருத்தாகும்.

"ஏற்கும் எவ்வகைப் பெயர்க்குமீ றாய்ப் பொருள்
வேற்றுமை செய்வன எட்டேவேற்றுமை"

என நன்னூலாரும் கூறுதல் காண்க.

எக ஆம் நூற்பா

இந்நூற்பாவுரை நச்சினார்க்கினியர் உரையை முற்றிலும் தழுவிய தாகும்.

செயப்படு பொருள் தன்கண் தொழில் நிகழ்ந்ததும், தன்கண் நிகழாததும் என இருவகைப்படும் என்பதும், கருத்து உள்வழிச் செயப்படு பொருளாதலும், கருத்தில்வழிச் செயப்படு பொருளாதலும் என இருவகைப்படும் என்பதும் நச்சினார்க்கினியர் உரையைத் தழுவி உரைப்பதாகும்.

எஉ ஆம் நூற்பா

இந்நூற்பா உரை நச்சினார்க்கினியர் உரையைத் தழுவியதாகும்.

அதனின் இயறல், இன்னன் என்பனவற்றிற்கு இவர்தரும் எடுத்துக்காட்டுக்கள் இளம்பூரணர உரையைத் தழுவியதாகும். இதனைச் சேனாவரையர் மறுப்பர். அதனை அவர் உரையான் அறிக.

எங, எச ஆம் நூற்பா

இந்நூற்பாக்களுக்குரிய உரையில் ஆங்காங்குச் சில வரிகளும், சில எடுத்துக்காட்டுக்களும் விடப்பட்டுள்ளன எனத் தெரிகிறது.

அதற் பொருட்டாதல் என்ற பகுதிக்கு எடுத்துக்காட்டுக் காட்டப்படவில்லை.

எக ஆம் நூற்பா

தண்மைக்கு எடுத்துக்காட்டு இல்லை. இந்நூற்பா உரையும் ஆங்காங்குச் சிறிது சிதைந்துள்ளது.

அக ஆம் நூற்பா

ஒற்றிக்கலம்—போக்கிய பத்திரம்.

அரு ஆம் நூற்பா

தட்டுப்புடை—நெல்கொழிக்கும் இடம். ஒருவகை விளையாட்டு என்பாரும் உளர்.

இந்நூற்பா உரையிலும் ஆங்காங்கு எழுத்துச் சிதைவு உள்ளன.

புறம் என்பதற்கு எடுத்துக்காட்டு இல்லை.

அச ஆம் நூற்பா

பெயரின் இறுதியில் வரும் உருபுகள் விரிந்து வருதலேயன்றி மறைந்தும் வரும். அங்ஙனம் மறைந்த உருபுகளை விரிக்குங்கால் அவ்விறுதியிலிருந்தே விரிக்கப்படும் என்பது இந்நூற்பாவின் கருத்தாம்.

இந்நூற்பா உரை இளம்பூரணர் உரையைத் தழுவியதாகும்.

இந்நூற்பாவின் இறுதிப்பகுதி பிழைபட உள்ளது. பின்வருமாறு இருப்பின் நன்று.

"இது 'கூறிய முறையின்' என்றதனால் அடங்காதோ எனின், அஃது உருபுநிற்கும் இடம் கூறியது; அங்ஙனம் நின்ற உருபு விகாரப்பட்டுத் தொக்குநின்று பின் விரியும் வழியும் பிறாண்டும் விரியாது, முன்கூறிய ஈற்றின்கண்ணே விரியும் என முற்கூறிய அதனையே திரிபுபடுவழிக் கூறியது எனக் கொள்க."

இதற்கு விளக்கம் வருமாறு:—இக்கருத்து "ஈறு பெயர்க் காகும்" என்ற விடத்துப் பெறப்படுவதாய் இருக்க, ஈண்டுக் கூறுவானேன் என்னும் வினாவை எழுப்பிக் கொண்டு அவரே விடையும் தருகின்றார். ஈறு பெயர்க்காகும் என்ற விடத்து உருபுகள் பெயரிறுதியில் வருமெனப் பெறப்படுமேயன்றி அவ்வுருபுகள் பெயர் இறுதியில் மறைந்து வருமென்றோ, அங்ஙனம் மறைந்து நின்ற உருபுகள் மறைந்த இடத்திலிருந்தே விரியும் என்றோ பொருள் படாதாம். ஆதலின் இதனை வேறாகச் சொல்ல வேண்டும் என்பது இவர் கருத்து.

அரு ஆம் நூற்பா

இந்நூற்பா உரை இளம்பூரணர் உரையைத் தழுவியதாகும்.

வேற்றுமைத் தொகையை விரிக்கின்ற பொழுது அவ்வுருபுகள் விரிதலேயன்றி அவ்வுருபிற்குப் பொருந்திய சில சொற்களும் விரிதலுண்டு, என்பது இந்நூற்பாவின் கருத்தாகும்.

ங. வேற்றுமை மயங்கியல்

அசு ஆம் நூற்பா

வேற்றுமை மயங்கியல் எனப் பெயர் வந்ததற்குக் காரணமாக இவர் கூறும் விளக்கம் பாராட்டுதற்குரியது.

இரண்டாவதற்கு ஓதிய பொருண்மைகளுள் சார்பு என்பதும் ஒன்று. அது கருமச் சார்பும், கருமம் அல்லாச் சார்பும் என இருவகைப்படும். கருமச்சார்பாவது ஒன்றனை ஒன்று உடலால் பொருந்துவதாகும். கருமம் அல்லாச் சார்பாவது மனத்தால் சார்வதாகும். முன்னையது காட்சிக்குப் புலனாகும். பின்னையது கருத்திற்குப் புலனாகும்.

கருமம் அல்லாச் சார்பிற்கு இரண்டாம் வேற்றுமையேயன்றி ஏழாம் வேற்றுமையும் உரிமை உடைத்து என்பது இந்நூற்பாவின் கருத்தாகும்.

க0 ஆம் நூற்பா

இந்நூற்பாவினையும் மேலை நூற்பாவினையும் இணைத்தே நன்னூலாரும்,

"முதலை ஐயுறிற் சினையைக் கண்ணுறும்
அதுமுதற் காயிற் சினைக்கை யாகும்"

எனக் கூறினர்.

கஉ ஆம் நூற்பா

இந்நூற்பாவினையும் முன்னைய நூற்பாவினையும் இணைத்தே நன்னூலாரும்,

"முதலிவை சினையிவை எனவே றுளவில
உரைப்போர் குறிப்பின அற்றே பிண்டமும்"

எனக் கூறினர்.

கங ஆம் நூற்பா

ஒரு பொருளோடு ஒரு பொருளை இயைத்துக் கூறும் வழி வரும் ஒடுச் சொல் அவ்விரு பொருளில் உயர்பொருள் யாதோ அப்பொருட் கண்ணேயே வைத்துச் சொல்லப்படும் என்பது இந்நூற்பாவின் கருத்தாகும். இதுவே, இளம்பூரணர் முதலிய உரையாசிரியர்களுக்கும் கருத்தாம். எனினும் தெய்வச்சிலையார் வேறு விதமாகப் பொருள் காண்பர். அதனை அவர் உரையான் அறிக.

'நாயொடு நம்பி வந்தான்' என்புழி நாய் இழிவேனும், நன்றியறிதல் பண்பால் அது சிறப்புடைமையின் அதன் வழி ஒடுக் கொடுக்கப்பட்டது என்பர். "யானை அனையவர் நட்பு ஒரீஇ நாயனையார் கேண்மை கெழீஇக் கொளல் வேண்டும்" எனப் பிறரும் நாயினை இப்பண்புபற்றிச் சிறப்பித்துக் கூறுமாறு காண்க.

கடு ஆம் நூற்பா

இரண்டாம் வேற்றுமைக்கு ஓதப்பட்ட நோக்கப் பொருண்மை நோக்கிய நோக்கம், நோக்கல் நோக்கம் என இருவகைப்படும். நோக்கிய நோக்கம் என்பது கண்ணால் நோக்குதலாம். நோக்கல் நோக்கம் என்பது மனத்தால் நோக்குதலாம்.

இங்ஙனம் நோக்கு அல் நோக்கமாகிய பொருண்மை தனக்குரிய இரண்டாம் வேற்றுமையில் வருதலேயன்றி, மூன்றாம் வேற்றுமைக் கண்ணும், ஐந்தாம் வேற்றுமைக் கண்ணும் வரும் ஏதுப் பொருளி லும் வரும் என்பது இந்நூற்பாவின் கருத்தாகும்.

இந்நூற்பா உரையில் 'பொறியால் நோக்கப்படுதலன்றி' என இருக்கற்பாலது பெற்றியான் நோக்கப்படுதலன்றி என உள்ளது. இது பிழையாகும்.

கசு ஆம் நூற்பா

ஆறன் உருபு அஃறிணைக்கே உரியதாகலின் நம்பியது மகன் என விரித்தல் இழுக்காம். எனவே நம்பி மகன் என்றவிடத்து நம்பிக்கு மகன் என்றே விரிக்க வேண்டும்.

இங்ஙனம் அதுவென்பது அஃறிணைக்கே உரியதாதல் பற்றி இதனைப் 'பால் தோன்றி நிற்கும் உருபு' என்றார் கல்லாடர். ஆறாம் வேற்றுமையை ஏற்றுநின்ற சொல் பெயராகவும் நிற்கும்; வினைக் குறிப்பாகவும் நிற்கும். சேனாவரையருக்கும் இது உடன்பாடாகும். இதனையே இவ்வுரையாசிரியர் நயத்தால் கொள்கின்றார்.

இந்நயத்தானே என்று தொடங்கும் வாக்கியம் பிழைபட உள்ளது. இவ்வாக்கியம் 'இந்நயத்தானே வினைக்குறிப்பு நீர்மைபட நிற்கும் வழியுண்டேனும் கொள்க' என்று இருப்பின் நன்று.

கஎ ஆம் நூற்பா

இதன் உரையில் புள்ளி வைக்கப்பட்டிருப்பது வேண்டு வதன்று. 'வினையையுடைய பெயர்க்கண்' என்று தொடங்குவதே இதன் பொருள் ஆகும்.

'புலி கொல் யானை' என்ற தொடரில் கொல் என்பது ஒரு கால் புலியோடியைந்தும், ஒரு கால் யானையோடியைந்தும் வருதலின் அது தடுமாறு தொழிற் பெயராயிற்று.

புலியைக் கொன்ற யானை என இரண்டனுருபை வைத்து விரிப்புழிப் புலி செயப்படுபொருளாய், யானை வினைமுதலாய் நிற்கும். புலியாற் கொல்லப்பட்ட யானை என மூன்றனுருபை வைத்து விரிப்புழிப் புலி வினைமுதலாய், யானை செயப்படு பொருளாய் நிற்கும்.

இவ்விரண்டுருபிற்கும் ஏற்பப் புலி கொல் யானை என்ற தொடர் அமைந்துள்ளது. இத்தொடரை விரிப்புழிப் பொருள் விளங்குவது போலத், தொக்குழிப் பொருள் விளங்கவில்லையே எனில் அது விளங்குமாறு அடுத்த நூற்பாவில் கூறுகின்றார் ஆசிரியர்.

கஅ ஆம் நூற்பா

'புலி கொல் யானை' என்ற தொடரை இரண்டாம் வேற்றுமையிலோ அல்லது மூன்றும் வேற்றுமையிலோ வைத்து விரித்துச் சொல்லுகின்ற பொழுதே அதன் பொருள் நன்கு விளங்குகின்றது. அவ்வவ் வேற்றுமைகளை வைத்து விரியாது 'புலி கொல் யானை' எனத் தொகையாக நிற்புழி அதன் பொருளை எங்ஙனம் அறிய முடியும்? என்பதை விளக்குகின்றது இந்நூற்பா.

இங்ஙனம் வரும் தொடரின் இறுதியில் அதன் பொருளை விளக்கும் ஒரு சொல் வரும். அதனைக் கொண்டு பொருள் விளங்கிக் கொள்ளலாம் என்பது இந்நூற்பாவின் கருத்து. அங்ஙனம் பொருள் விளக்க வரும் சொல்லை 'மெய்யறி பனுவல்' என்பர். பனுவல் என்பது ஈண்டுச் சொல்லின் மேற்று.

(எ – டு.) 'புலிகொல் யானைக்கோடு வந்தது; புலிகொல் யானை ஓடுகின்றது' என்பவற்றில் முறையே 'கோடு' என்பதும், 'ஓடுகின்றது' என்பதும் மெய்யறி பனுவலாம்.

'கோடு' என்பதால் அத்தொடர் மூன்றனுருபை விரித்தற்கு ஏற்புடையது ஆதலும், அதனால் புலி வினை முதல் என்றும், யானை செயப்படுபொருள் என்றும் பொருள் விளங்கி நிற்றலும் காண்க. ஓடுகின்றது என்பதால் அத்தொடர் இரண்டனுருபு விரித்தற்கு ஏற்புடையதாதலும், புலி செயப்படுபொருள் என்றும், யானை வினை முதல் என்றும் பொருள் விளங்கி நிற்றலும் காண்க.

கக ஆம் நூற்பா

'புலி போற்றிவா' என்புழிப் 'புலியைப் போற்றிவா' எனவும் 'புலியாற் போற்றிவா' எனவும் விரிப்பினும் அமையும். 'புலியைப் போற்றி வா என்றால் புலியைப் பாதுகாத்துவா என்பது பொருளாம். 'புலியால் போற்றிவா' என்றால் புலியினால் உனக்கு வரும் தீங்கினைப் பாதுகாத்துவா என்பது பொருளாம்.

௧0௧ ஆம் நூற்பா

'நாகர் பலி' என்பதை 'நாகர்க்குப் பலி' என விரித்தலேயன்றி 'நாகரது பலி' என விரிப்பினும் அமையும் என்பதாம். நாகர்க்குக் கொடுத்தலை விரும்பி மேற்கொண்டவழித் திரிபின்றி அஃது

அவர்க்கு உடைமையாதலின் கிழமைப் பொருட்கு உரிய உருபால் கூறினும் அமையும் எனச் சேனாவரையர் விளக்கம் காண்பர்.

கொடை யெதிர்தல் என்ற சொல்பற்றிய விளக்கம் இளம் பூரணர் உரையைத் தழுவியதாகும்.

க0உ ஆம் நூற்பா

இந்நூற்பா உரை இளம்பூரணர் உரையைத் தழுவியதாகும்.

க0௩ ஆம் நூற்பா

ஒவ்வோர் உருபும் ஒவ்வொரு வினையைக் கொண்டு முடிதலே இயற்கை. அங்ஙனமின்றி ஓர் உருபே தொடர்ந்து அடுக்கி ஒரு வினையான் முடிதலும், பல உருபுகள் தொடர்ந்து அடுக்கி ஒரு வினையான் முடிதலும் உண்டு என்பது இந்நூற்பாவின் கருத்து ஆகும்.

எனினும் இளம்பூரணர், இவ்வுரையாசிரியர், சேனாவரையர் ஆகிய மூவரும் 'உருபு தொடர்ந்தடுக்கி' என்பதற்குப் பல உருபு களும் தொடர்ந்தடுக்கி என்றே பொருள் கொண்டனர். ஆயினும் சேனாவரையர் ஓர் உருபு தொடர்ந்து அடுக்குதற்கே உதாரணம் காட்டினர்.

நச்சினார்க்கினியரும், தெய்வச்சிலையாரும் 'உருபு தொடர்ந் தடுக்கி' எனப் பொதுப்படக் கூறியிருப்பதால், ஓர் உருபு அடுக்கி, வருதலும், பல உருபு அடுக்கி வருதலும் எனப் பொருள் கண்டனர்.

இளம்பூரணர் காட்டிய உதாரணங்களையே இவ்வுரையாசி ரியரும் காட்டுகின்றார். இதனைச் சேனாவரையர் மறுப்பர். அதனை நச்சினார்க்கினியர் மறுப்பர். இத்திறமெல்லாம் அவரவர் உரை நோக்கி அறிக.

இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமைவரை ஒவ்வோர் உருபும் தொடர்ந்து அடுக்கி வருதற்குத் தெய்வச் சிலையார் தக்க எடுத்துக்காட்டுக்கள் காட்டுவர். அவ்வெடுத்துக் காட்டுக்களையும். அவற்றின் சுவை இயல்பையும் கழக பதிப் புத் தெய்வச்சிலையார் உரையில், ஆராய்ச்சி முன்னுரையிலும் விளக்கவுரையிலும் விரித்து யாம் எழுதியுள்ளோம். ஆண்டுக் காண்க.

க0௪ ஆம் நூற்பா

ஆறு உருபுகளும் அவ்வத் தொடர்க்கண் இறுதியிலும் இடையிலும் விரிந்து நிற்றலை நீக்கார் என்பது இந்நூற்பாவின் கருத்தாகும்.

இளம்பூரணர் உள்ளிட்ட உரையாசிரியர்கள் அனைவருக்கும் இதுவே கருத்தாகும். தெய்வச்சிலையார் கருத்து வேறு. அதனை யாம் எழுதிய தெய்வச்சிலையார் விளக்கவுரையில் காண்க.

மற்று இது என்று தொடங்கும் பகுதி பிழைபட உள்ளது.

"மற்று இது 'ஈறு பெயர்க்காகும்' என்ற வழி அடங்கிற்று பிற எனின், அஃது ஒரு சொற்கண் உருபு நிற்குமாற்றிற்குச் சொல்லியது; இஃது இருசொற்கண் உருபு நிற்குமாற்றிற்குச் சொல்லியது என உணர்க' என்றிருப்பின் நன்று.

௪0௧ ஆம் நூற்பா

ஆறும் வேற்றுமை யுருபு தன்னை ஒழிந்த உருபுகளை ஏற்று வருதலும் ஆறுருபுகளும் வெளிப்பட நிற்றலேயன்றித் தொக்கு வருதலும் வழக்கின் கண்ணேயுள என்பது இந்நூற்பாவின் கருத்தாகும்.

இது தெய்வச்சிலையார் நீங்கலாக உள்ள ஏனைய உரையாசிரியர்களுக்கெல்லாம் கருத்தாகும். ஆறும் வேற்றுமை யுருபு தன்னையொழிந்த உருபுகளை ஏற்று வரும் என்ற கருத்தைத் தெய்வச்சிலையாரும், சிவஞான முனிவரும் வன்மையாக மறுப்பர். அம் மறுப்புக்கள் வருமாறு:

தெய்வச்சிலையார் மறுப்பு:

"பிறிது பிறிதேற்றல் என்பதற்கு ஆறனுருபு ஏனையுருபேற்கும் எனப் பொருளுரைத்துச் சாத்தனதனை, சாத்தனதனொடு என உதாரணங் காட்டுபவாலெனின், அவ்வாறுவரும் அதுவென்பது உருபுநிலை யொழிந்து பொருளாய் நிற்றலானும், சாத்தனதனைக் கொணர்ந்தான் என்றவழி இடைநின்ற அது என்பது உருபாயிற் சாத்தனைக் கொணர்ந்தான் என்னும் பொருள் படல்வேண்டும்; அவ்வாறு பொருள்படாது உடைப்பொருளையே காட்டுதலானும்; அஃறிணை பொருமை அது என்னும் பெயர்த்தாதலானும், சாத்தன் பொத்தகத்தைக் கொணர்ந்தான் என்றாற் போல்வதல்லது, உரு பேற்றதென்றல் அமையாதென்க."

சிவஞான முனிவர் மறுப்பு:

"இனி இச்சூத்திரத்திற்கு இவ்வாறு பொருள் கொள்ளாது பெயரேயன்றி ஆறும் வேற்றுமை யுருபும் அவ்வுருபுகளை யேற்கு மெனப் பொருள் கொண்டு, சாத்தனது, சாத்தனதை, சாத்தனதால், சாத்தனதற்கு, சாத்தனதனின், சாத்தனதனது, சாத்தனதன்கண் சாத்தனதே என உதாரணங் காட்டுவாருமுளர். உருபேற்றல்

பெயர்க்கேயுரிய இலக்கண மன்றி வினை முதலியவற்றிற்குரிய இலக்கணமன்றுமாதலானும் "பெயர்வழித் தம்பொருள் தரவரு முருபே" என்றும், "ஏற்கும் எவ்வகைப் பெயர்க்கும் ஈறாய்" என்றும் வரையறை கூறிப் போந்தமையானும், ஈண்டிடைச் சொல்லுருபேற்கு மெனின் மாறுகொளக் கூறலாமாதலானும் சாத்தனதை, சாத்தனதால் என்புழிச் சாத்தனது என்பது குழையது கோட்டது என்றாற் போலத் துவ்விகுதியும் அகரச் சாரியையும் பெற்று உருபேற்றுநின்ற வினைக்குறிப்புப் பெயராமாத லானும், அன்றியும் உருபேற்புழிப் பெயர்போலத் தனித்து நின்றுருபேற்றல் வேண்டுமாதலானும், அதனை அதனால் என உருபேற்குமெனிற் சுட்டுப்பெயர் உருபேற்றதாமன்றி உருபு உருபேற்றதன்றுமாதலானும் அது பொருந்தா தென்க."

இந்நூற்பாவுரை ஆங்காங்குச் சிதைந்துளது. அவை பின் வருமாறு இருப்பின் நன்று. 'பிறிது பிறிதேற்றற்கு உதாரணம்' என்று தொடங்கும் பாரா :

"பிறிது பிறிதேற்றற்கு உதாரணம் சாத்தனதனை, சாத்தனதனொடு என ஏழாவதன்கண்ணும் ஒட்டுக. சாத்தனதுவது எனத் தன்னுருபு தன்னை ஏலாது."

"பிறிது பிறிதேற்கும் என ஏற்பது ஆறாவதென்பதும், அது தன்னை யொழிய ஏற்குமென்பதூஉம் பெறுமாறு என்னை எனின். முன்னர் உருபேற்பது பெயரென்று கூறினமையின் பிறிதெனவே அது அல்லாதென்பது பெற்றாம்."

"அஃதேயெனின் பிறசொற்களும் பிறிதெனப்படுமால் எனின் உரையிற் கோடலென்பதனான் இதுவேயாயிற்றென்பது."

கO அ ஆம் நூற்பா

ஒரு தொடர் யாதாயினும் ஓர் உருபு கொடுத்துச் சொல்லப் பட்டதாயினும், அவ்வுருபு ஏற்ற சொல்லும், அவ்வுருபு நோக்கிய சொல்லும் (நிறுத்த சொல்லும் குறித்து வருமொழியும்) தம்முள் பொருள் இயையாதவழிப் பொருள் இயையு மாற்றிற்கே அவ் வுருபைத் திரித்துக்கொள்ள வேண்டும் என்பது இந்நூற்பாவின் கருத்தாகும்.

இந்நூற்பாவிற்குத் தெய்வச்சிலையார் உரை வேறு. அது பொருந்தாமையை அதன் விளக்கவுரையில் காட்டியுள்ளேம். ஆண்டுக் காண்க.

கOக ஆம் நூற்பா

வேற்றுமையுருபு ஏற்ற சொற்களை உடன்பாட்டிற் சொல் லுங்கால் அவ்வேற்றுமைப் பொருண்மை எங்ஙனம் திரிபு படா

திருக்கின்றவோ, அங்ஙனமே அச்சொற்களை எதிர்மறுத்துச் சொல்லினும் திரியாது வரும் என்பது இந் நூற்பாவின் கருத்தாம்.

எனினும் குடத்தை வனைந்தான் என உடன்பாட்டுச் சொல்லால் கூறப்படுகின்ற பொழுது செயப்படு பொருளாதல் விளங்குமாறு போல, குடத்தை வனையான் என எதிர்மறுத்துக் கூறும் பொழுது அப்பொருள்படுவதில்லை. எனினும் இதனை ஆசிரியர் ஆணையாற் கோள்க என்றனர் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும்.

கக0, ககக ஆம் நூற்பாக்கள்

இவ்விரு நூற்பாக்களையும் இணைத்தே நன்னூலாரும்,

"ஐ ஆன் குச் செய்யுட் கவ்வு மாகும்
ஆகா அஃறிணைக்கு ஆன் அல் லாதன"

எனக் கூறினர்.

தொல்காப்பியத்தில் ஐ, ஆன், கு என வேற்றுமைகளை முறையே வையாது கு, ஐ, ஆன் என வைத்தற்குரிய காரணத்தைச் சேனாவரையர் மட்டுமே தம் மதி நுட்பத்தால் விளக்குவர். அவ்வுரை வருமாறு :-

"குகரமும் ஐகாரமும் ஈறுகெட அகரத்தொடு சிவணலுடைமையான் ஐ, ஆன், கு என முறையிற் கூறாது கு, ஐ என அவற்றை இயைய வைத்தார். இயைய வைக்கின்றவர் ஐகாரம் முன் வைக்கவெனின், முறை அதுவாயினும் செய்யுளின்பம் நோக்கிக் குகரம் முன் வைத்தாரென்பது."

இவ்வாய்வுரை யின்றேல் நன்னூலார் தம் நூலில் இவ்வுருபுகளை முறையாகக் கூறியிருப்பவும், தொல்காப்பியர் முறையின்றிக் கூறியது என்னை? என வினவுவார்க்கு விடைகூற இயலாதாகும். இவ் வாய்வுரை பெரிதும் பாராட்டுதற்குரியதாகும்.

ககஉ ஆம் நூற்பா

'இனி அன்ன பிறவும் என்றதனால்' என்ற உரைப்பகுதி, 'இனி அன்ன பிறவும் என்பதற்கு உதாரணம் :-' என்றிருத்தல் வேண்டும்.

ககங ஆம் நூற்பா

'வழக்கினுளவேல்' என்பதற்கு முன் (எ-டு.) என்றிருத்தல் வேண்டும். அப்பகுதியும் 'வழக்கினுளவேல் கண்டு கொள்க காணாமையின் காட்டாமாயினும்' என்றிருத்தல் தக்கதாம்.

ககச ஆம் நூற்பா

வினை முதலிய எட்டொடு தோன்றியும் அல்லது அவற்றுள் சில குறைந்தும் வருவது வினைச்சொல் என இதுவும் அடுத்த நூற்பாவும் கூறுதலின், இவ்விரு நூற்பாக்களும் வினைச்சொல் இலக்கணம் உணர்த்தின என்பர் கல்லாடர். நன்னூலாரும் இக் கருத்தே பற்றிச்,

> "செய்பவன் கருவி நிலஞ்செயல் காலம்
> செய்பொருள் ஆறும் தருவது வினையே"

எனக் கூறினர்.

வனைந்தான் என்றவழி, வனைதற்றொழிலும், வனைந்த கருத்தாகவும், வனையப்பட்ட குடமும், வனைதற்கு இடமாகிய நிலமும், அத்தொழில் நிகழும் காலமும், அதற்குக் கருவியாகிய திகிரி முதலாயினவும், வனையப்பட்ட இடத்தைக் கொள்வானும், வனைந்ததனான் ஆய பயனுமாகிய எட்டும் பற்றி அத்தொழில் நிகழ்தலின் இவை தொழில் முதனிலையாயிற்று.

இவை வினைச்சொல் இலக்கணமேனும், இவ்வெட்டும் பற்றி வேற்றுமை உருபுகள் வருதலின் இவற்றை ஈண்டுக் கூறுவாராயினார். இவ்வெட்டும் பற்றி வேற்றுமையுருபு வருதலை நச்சினார்க்கினியர் விளக்குகிறார். அது வருமாறு:-

"வனைந்தான் என்பதன்கண் செய்வது எழுவாயாயும், வினையும் செயப்படு பொருளும் இரண்டாவதாயும், வினைமுதலும் கருவியும் மூன்றாவதாயும், ஒருவன் ஏற்றுக் கொண்டவழி "இன்னதற்கு இது பயன்" நான்காவதாயும், நிலமுங்காலமும் ஏழாவதாயுஞ் சேர்ந்தன. இன்னும், வனைந்தவன் கொடுத்த குடம் அவன் கையினின்று நீங்குதல் ஐந்தாவதாயும், அதனை ஒருவன் ஏற்றுக் கொண்ட வழி அஃது அவன் உடைமையாதல் ஆறாவதாயும் சேருமாறு உணர்க. கருவிக்கண் அடங்கும் ஏதுவும் ஐந்தாவதற்கு வரும்."

ககரு ஆம் நூற்பா

ஆகுபெயரும் அன்மொழித் தொகையும் ஒன்றேயாம் என்பது சேனாவரையர் கருத்தாகும். இதுவே இவ்வுரையாசிரியர்க்கும் கருத்தாம். எனினும் இது பொருந்தாமையைத் தொல்காப்பிய முதற் சூத்திர விருத்தியான் அறிக.

வினை முதல் உரைக்கும் கிளவிக்குத் தொல்காப்பியம், கபிலம் என்பன காட்டல் இளம்பூரணர் கருத்தாகும். இதனைச் சேனாவரையர் மறுப்பர். அதனை அவர் உரையான் அறிக.

கக அ ஆம் நூற்பா

இந்நூற்பாவிற்கு இளம்பூரணர் மூன்றுவிதமாக உரைகாண் கின்றார். அவை வருமாறு :-

(1) மேற்கூறிய ஆகுபெயர்கள் ஈறுதிரிந்து வேறுபட்டு வருதலும் உண்டு. அவற்றையும் போற்றுக என்பது. (எ-டு.) தொல்காப்பியனால் செய்யப்பட்ட நூலிற்குத் 'தொல்காப்பியன்' என்றே பெயர் இருத்தல் வேண்டும். அங்ஙனமன்றித் 'தொல் காப்பியம்' என்று இருப்பது ஈறு திரிந்ததாயிற்று.

(2) மேற்கூறிய ஆகுபெயர்கள் அறுவகை வேற்றுமையோடும் இயைபுடையனவாய் வரும். அதனைப் போற்றிக் கொள்க என்பது. (எ-டு.) 'தெங்குதின்றான்' என்புழித் தெங்கினது காயைத் தின்றான் என விரிதலின், இஃது ஆறாம் வேற்றுமைக் கும் இரண்டாம் வேற்றுமைக்கும் இயைபுடைத்தாயிற்று.

(3) மேற்கூறிய ஆகுபெயர்கள் தத்தம் பொருள் வயின் தம்மொடு சிவணலும், ஒப்பில் வழியாற் பிறிது பொருள் சுட்டலும் ஆகிய இவ்விரண்டு இயல்பினை உடைய, இவ்வேறுபாட்டினைப் போற்றி உணர்க என்பது.

இம்மூன்றனுள் இரண்டாவது உரையை நச்சினார்க்கினியரும், இவ்வுரையாசிரியரும் தழுவினர். மூன்றாவது உரையைச் சேனா வரையர் தழுவினர். தெய்வச்சிலையார் இவ்விரு உரையையும் தழுவினர்.

இந்நூற்பாவின் இறுதியில் உள்ள பகுதி பிழைபட உள்ளது. அது பின்வருமாறு இருப்பின் நன்று.

"இதனாற் சொல்லியது முன் ஒப்பில் வழியால் பிறிது பொருள் சுட்டலுமாம் என்றமையின், அப்பிறிது பொருள் சுட்டியவாறு பாகுபாடு பெறுங்கொல்லோ எனின், இவ் வாறு வேற்றுமைப் பொருள் இயைபு உள்வழி ஆவது; பிறவழி ஆகாது என்று கூறியவாறு."

கஉ0 ஆம் நூற்பா

இந்நூற்பாவின் கருத்துரையும், பொருளும் மயங்கியுள்ளன. அது பின் வருமாறு இருப்பின் நன்று.

"என் - எனின், மேற்கூறிய ஆகுபெயர்க்குப் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஆகு பெயர்க்கண் மேல் எடுத்தோதின வல்லாதன வேறு பல தோன்றினும் அவ்வெடுத் தோதப்பட்டவற்றின் இயல் பினானே உணர்ந்து கொள்க எ - று."

ச. விளிமரபு

கஉக ஆம் நூற்பா

இந்நூற்பா உரையிறுதியிலிருக்கும் பகுதி பிழைபட இருப்ப தாகத் தெரிகிறது. அது பின் வருமாறு இருப்பின் நன்று :—

'தெளிய' என்றதனால், விளிதன்னை எழுவாயின் வேறுபாட தன்றி வேறோர் வேற்றுமை ஆகாது என்பாரும் உளர் என்பதும், எனினும் இவ்வாசிரியர் வேறுஒர் வேற்றுமையாக நேர்ந்தார் என்பதும் பெறப்பட்டது.

கஉஉ ஆம் நூற்பா

இந்நூற்பாவின் இறுதியில் 'சொற்கிடையாது எனினும்' என்றிருப்பது 'சொற்கிடை அது எனினும்' என்றிருத்தல் தக்க தாகும்.

கஉகூ ஆம் நூற்பா

இவ்வியலில் கூ முதல் கூஉ ஆம் நூற்பாவரை உயர்திணைப் பெயர்கள் விளி ஏற்குமாறும், கூகூ ஆம் நூற்பாவால் விரவுப் பெயர் விளி ஏற்குமாறும், கூச ஆம் நூற்பாவால் அஃறிணைப் பெயர் விளி யேற்குமாறும் கூறப்பட்டன என்பது இளம்பூரணர் கருத்து. இம் முறைப்படி இந்நூற்பா உயர்திணையதிகாரத்து உள்ளதாகும். இதுவேயன்றி 'அன்னை' என்னும் முறைப் பெயரும் (சூ ஆம் நூற்பா), ளகார ஈற்று முறைப் பெயரும் (கூ௦ ஆம் நூற்பா) இவ்வதிகாரத்திலேயே உள்ளன. இங்குக் கூறப்படும் முறைப் பெயர்களோ விரவுப் பெயர்கள் ஆகும். முறைப் பெயர் எல்லாம் விரவுப் பெயர் என்பது தொல்காப்பியர் கருத்து. எனவே உயர் திணை அதிகாரத்தில் முறைப் பெயர்கள் விளியேற்குமாறு கூறியது பொருந்துமா? என இளம்பூரணர் ஆராய்கின்றார். அதற்கு அவர் கூறும் அமைதி வருமாறு.—

உயர்திணைப் பெயர்கள் விளியேற்குமாறு (கூ முதல் கூஉ ஆம் நூற்பா வரை) கூறிய ஆசிரியர், விரவுப் பெயர் விளியேற்குமாறு (கூகூ ஆம் நூற்பாவால்) கூறுகின்றார். உயர்திணைப் பெயர்கள் எல்லாம் எவ்வெவ்வாறு விளியேற்றனவோ, அவ்வாறே விரவுப் பெயர்களும் விளியேற்கும் என மாட்டெறிந்து அதனை ஒரே நூற்பாவால் (கூச ஆம் நூற்பாவால்) கூறி முடிக்க இருக்கின்றார் ஆசிரியர். ஆயினும் 'அன்னை' என்னும் முறைப் பெயர் ஆகாரம் பெற்றும், மகன், மகள் என்னும் முறைப் பெயர்கள் ஏகாரம் பெற்றும் விளியேற்பதற்கேற்ப உயர்திணை அதிகாரத்தில் ஒன்றும் கூறப்படவில்லை. ஆதலின் அம்மாட்டேற்றிற்கு ஏலாத இம்முறைப்

பெயர்களை இவ்வுயர்திணை அதிகாரத்திலேயே கூறி, எஞ்சிய விரவுப் பெயர்களை அச்சூத்திரத்தான் (௩௪ ஆம் நூற்பா) மாட்டெறி வாராயினர் என்றார்.

இவர் கருத்தின்படி "கிளந்த இறுதி அஃறிணை விரவுப் பெயர்" என்பது விரவுப் பெயரையே குறிக்கும். நச்சினார்க்கினியரும் கல்லாடரும் இவர் கூறியவாறே அமைதி கூறினர்.

எனினும் சேனாவரையர் கருத்து வேறாகும். அஃறிணைப் பெயரின் வேறாக அஃறிணை விரவுப் பெயர் என ஆசிரியர் ஓதுதலின், உயர்திணைப் பெயரின் வேறாக உயர்திணை விரவுப் பெயர் ஒன்று உண்டு என்பதும் அவர் கருத்தாயிற்று. அம்முறைப்படி இங்குக் கூறப்பட்ட முறைப் பெயர்களெல்லாம் உயர்திணை விரவுப் பெயர்களாகும். உயர்திணை விரவுப் பெயர்களை, உயர்திணைக்கண் அடக்கிக் கூறுதல் ஆசிரியர் கருத்தாகலின், உயர்திணை அதிகாரத்து முறைப் பெயர்கள் விளியேற்குமாறு கூறினார் என்பது அவர் தரும் அமைதியாகும்.

இனி இளம்பூரணர் கருத்தையும் சேனாவரையர் மறுத்தனர். அது வருமாறு :—

(1) இளம்பூரணர் கருத்தே தொல்காப்பியருக்கும் கருத்தாய் இருக்குமாயின், உயர்திணைப் பெயர் விளியேற்குமாறு கூறியதை அடுத்து,

> "கிளந்த இறுதி விரவுப் பெயரே
> விளம்பிய நெறிய விளிக்குங் காலை"

என்னும் நூற்பா இருக்கவேண்டும். இதனை அடுத்து இம்மாட்டேற்றிற்கு ஏலாத 'அன்னை' என்னும் பெயர் விளியேற்குமாற்றை,

> "முறைப்பெயர் மருங்கின் ஐயென் இறுதி
> ஆவொடு வருதற் குரியவு முளவே"

என்றும், இதனை அடுத்து னகர, ளகர ஈற்று முறைப் பெயர்கள் விளியேற்கு மாற்றைப்,

> "புள்ளி யிறுதி ஏயொடு வருமே"

என்றும் சுருங்கிய சொல்லால் விரித்துப் பொருள் விளங்கச் சொல்லியிருப்பர். அவ்வாறு சொல்லவில்லை.

(2) அன்றியும், உயர்திணை அதிகாரத்து முறைப் பெயர்கள் விளியேற்கு மாற்றிற்குக் (இளம்பூரணர்) காரணம் கூறினரே

அன்றித் "தாம், நீயிர் என்னும் முறைப் பெயர்கள் விளிபேலா" என இவ்விடத்துக் கூறியதற்குக் காரணம் கூறவில்லை. (ஆனால் இதற்குக் கல்லாடர் காரணம் கூறியுள்ளார்.)

எனவே ஆசிரியர் தொல்காப்பியனாருக்கு உயர்திணை விரவுப் பெயர் ஒன்று உண்டென்பதும், அதனை உயர்திணை அதிகாரத்தில் அடக்குதல் கருத்தென்பதும் பெற்றாம் என்பர்.

இந்நூற்பா உரையின் இறுதிப் பகுதியில் 'மற்றிவை' என்ற சொல்லை அடுத்து 'விரவுப் பெயர் அன்றோ எனின்' என்ற தொடரைத் தலைப்பெய்து கொள்க. இன்றேல் பொருள் விளங்காது.

க௪0 ஆம் நூற்பா

இந்நூற்பாவுரை சிதைந்துள்ளது. அது பின் வருமாறு இருத்தல் தக்கது.

(இ - ள்.) தான் என்னும் ஆன் ஈற்றுப் பெயரும், சுட்டெழுத்தை முதலாகவுடைய அன் ஈற்றுப் பெயர்களும், யான் என்னும் ஆன் ஈற்றுப் பெயரும், வினைப் பொருண்மை உணர்த்தும் அன் ஈற்றுப் பெயரும், அவ்வினைத்துப் பெயரும், மேற்கூறியவாற் வாற்றான் ஆயினும் பிறவாற்றான் ஆயினும் விளிகோடல் இல.

க௪க ஆம் நூற்பா

இந்நூற்பா உரையில் 'விளிபேலாது' என ஒருமை வாசகம் பட நிற்பது 'ஏலா' எனப் பன்மை வாசகம்பட நிற்பின் நன்று.

க௫௩ ஆம் நூற்பா

இந்நூற்பா உரையில் 'சுட்டெழுத்து முதற்பெயரும்' என்றிருப்பது, 'சுட்டு முதற்பெயரும்' என்றிருப்பின் நன்று.

க௫௬ ஆம் நூற்பா

இந்நூற்பாவில் 'மேல் உயர்திணைப் பெயர்க்கண்' என்று தொடங்கும் பகுதியே இந்நூற்பாவின் பொருளாகும்.

ரு. பெயரியல்

க௫அ ஆம் நூற்பா

உரையில், "மேல் ஒத்தினோடு இதற்கியைபு என்னை எனின், மேல் பெயரிலக்கணம் உணர்த்தி, அவ்விலக்கணமுடைய அவ்வியற் பெயர் இவையென்று அவற்றது பகுதி உணர்த்திய எடுத்துக் கொண்டார் என்பது" என்றிருப்பின் நன்று.

கஅக ஆம் நூற்பா

சொற்கள் தன்னையும் உணர்த்தும், பொருளையும் உணர்த்தும் என்பது இந்நூற்பாவின் கருத்தாகும்.

இந்நூற்பா உரையில் இறுதிப்பகுதி பிழைபட உள்ளது எனினும் அதன் கருத்து ஒருவாறு விளங்குகின்றது. அது வருமாறு:

'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்னும் நூற்பாவால் சொற்கள் எல்லாம் பொருளுணர்த்தும் என்னும் கருத்துப் பெறப்பட்டு விட்டது. எனவே இந்நூற்பாவில் சொற்கள் தன்னை யும் உணர்த்தும் என்று கூறுவதே அமைவுடையதாகும். அங்ஙனமாக இந்நூற்பாவிலும் சொற்கள் பொருளையும் உணர்த்தும் எனக் கூறுவதேன்? என்பதே நண்டைய ஆய்வாகும்.

இங்ஙனம் நாம் நினைப்பதுபோல் சொற்கள் பொருளுணர்த்தும் என்பதை முதல் நூற்பாவிலும், சொற்கள் தன்னையும் உணர்த்தும் என்பதை இந்நூற்பாவிலும் கூறியிருப்பின், முன்னே சொன்ன கருத்தினும், பின்னே கூறும் கருத்து வலியுடையது ஆதலின், சொற்கள் பொருள் உணர்த்துவதைக் காட்டிலும், தன்னையுணர்த்தும் என்பதே சிறப்புடையது என்பது பட்டு மாறுபட்ட கருத்தை உண்டாக்கிவிடும். ஆதலின் ஆசிரியர் முன்னைய நூற்பாவில் பெறப்பட்ட கருத்தினையே வலியுறுத்திச், சொற்கள் பொருளையும் தன்னையும் உணர்த்துமாற்றை ஒருங்கு ஓதினர் என்பது.

'முற்கூறியதிற் பிற்கூறியது வலியுடைத்து' என்ற தொடர்,

'ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று'

என்ற திருக்குறளில், பரிமேலழகர் உரையிலும் காணப்படுகின்றது.

கசு ஆம் நூற்பா

ஒருபாற்குரிய தொழில்கள் ஏனைப்பாற்கும் உரியவாம் என்பது இந்நூற்பாவின் கருத்தாகும். நஞ்சுண்டான் சாம் என்றவழி நஞ்சுண்டல் சாதற்கு காரணம் என்பான் ஒருபால் மேல் வைத்துக் கூறினன் ஆயினும், அஃது ஒழிந்த நான்கு பாற்கும் சாதல் எய்தினமையை உணர்த்தினவாறு காண்க.

இக்கருத்தினைச் சேனாவரையர் மறுப்பர். எனினும் நச்சினார்க்கினியர் அதனை மறுத்து இவ்வுரையே சிறப்புடையது என்பர்.

எனினும் சேனாவரையரும், தெய்வச்சிலையாரும் கூறும் உரையே சிறப்புடைத்து. இதனை யாம் எழுதிய தெய்வச்சிலையார் விளக்கவுரையில் நன்கு விளக்கியுள்ளேம். ஆண்டுக் காண்க.

௧௧௭ ஆம் நூற்பா

இந்நூற்பாவுரையில் நானுவரை 'பிறந்தாள்' என்றிருப்பது 'நானுவரை பிறந்தஆண் தன்மையளாகி' என்று இருப்பின் நன்று.

௧௧௮ ஆம் நூற்பா

இந்நூற்பாவுரையில் "என்னுதலிற்றோ எனின், இதுவும் உயர் திணை பொருசார் பெயர்களை உணர்த்துதல் நுதலிற்று" என்றிருப்பின் நன்று.

௧௭௪ ஆம் நூற்பா

கள்ளொடு பொருந்தாத அஃறிணை இயற்பெயர்களைப் "பால் பகா அஃறிணைப் பெயர்" என நன்னூலார் கூறுவர். இவை'கள்' என்னும் ஈற்றோடு பொருந்தாத பொழுது ஒருமை, பன்மை என்னும் இருபாற்கும் பொதுவாம்; அதனோடு பொருந்திய வழி பன்மைச் சொல்லினையே கொண்டு முடியும்.

"பால்பகா அஃறிணைப் பெயர்கள் பாற்பொதுமைய" (பெயரியல்-24)

என நன்னூலாரும் இக்கருத்தினை விளக்கிக் கூறுதல் காண்க.

௧௭௯ ஆம் நூற்பா

திகழுஉ நின்ற—திகழ் காலத்தை புணர நின்ற; பலர் வரை கிளவி—படர்க்கை ஐம்பாலுள் பலர்பால் நீங்கலாக ஏனைய நாற்பால் களையும் உணர்த்தும் சொல். அது செய்யும் என்னும் முற்றும்.

"பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையிற்
செல்லா தாகும் செய்யுமென் முற்றே"

என்ற நன்னூலும் காண்க.

விரவுப் பெயர்கள் உயர்திணை, அஃறிணை இரண்டற்கும் பொது வாகலின், அதனது பால் அறிய வேண்டின், அப்பால் அறிதற்குரிய வினைகளைக் கொண்டே அறிய இயலும் என்பது சென்ற கழிநூற்பாவின் கருத்து. இந்நூற்பாவில் அவ்வினைகளான் அன்றிச், 'செய்யும்' என்னும் முற்றானும் இவ்விரவுப் பெயர்களில் உயர்திணை ஒருமை அறிய முடியும் என்பது கூறப்படுகின்றது.

௧௮௰ ஆம் நூற்பா

பெண்மை சுட்டிய பெயர் உயர்திணைப் பெண்மை, அஃறிணைப் பெண்மையையும்; ஆண்மை சுட்டிய பெயர் உயர்திணை ஆண்மை,

அஃறிணை ஆண்மையையும்; ஒருமை சுட்டிய பெயர் உயர்திணை ஒருமை, அஃறிணை ஒருமையையும் உணர்த்துதல் போலப், பன்மை சுட்டிய பெயரும் உயர்திணைப் பன்மை, அஃறிணைப்பன்மை ஆகிய இரண்டினையும் உணர்த்துவதே முறையாகும். நன்னூலாரும்,

> "அவற்றுள்,
> ஒன்றே இருதிணைத் தன்பால் ஏற்கும்"

என்னும் நூற்பாவால் இக்கருத்தே கொண்டனர். ஆனால் தொல்காப்பியரோ, பன்மை சுட்டிய பெயர் என்பது உயர்திணை ஆண் ஒருமை, பெண் ஒருமை, அஃறிணைப்பன்மை ஆகிய மூன்று பாலையும் உணர்த்தும் எனக் கூறுகின்றார். இங்ஙனம் ஆசிரியர் கூறுதற்கு உண்மையான காரணம் யாதெனத் தெரிந்திலது.

சிவஞான முனிவர் பன்மை சுட்டிய பெயர் என்பது தன் பால் ஏற்றலோடு (உயர்திணைப்பன்மை, அஃறிணைப்பன்மை) இம் முப்பாலினையும் ஏற்றுவரும் என்றும், 'என்றிப்பாற்கும்' என்னும் உம்மை எச்சவும்மை என்றும் கூறி ஒருவாறு அமைதி கூறினார்.

ஆனால், தொல்காப்பிய உரையாசிரியர்கள் அனைவரும் தன் பால் ஏற்றுவரும் என்னும் கருத்தினைக் கொள்ளாது ஆசிரியர் தொல்காப்பியர் கூறிய மூன்று பாலையுமே பன்மை சுட்டிய பெயர் குறிக்குமென்றும், 'என்றிப்பாற்கும்' என்னும் உம்மை முற்றும்மை என்றும் கொண்டனர்.

சேனாவரையர் பன்மையே அன்றி ஒருமையையும் சுட்டுதல் பொருந்துமா? என்னும் வினாவைத் தாமே எழுப்பிக்கொண்டு, வடமொழி இலக்கணம்பற்றி ஒருவாறு அமைதியும் கண்டனர். அதனை அவர் உரையான் அறிக.

நன்னூலார் கருத்தே பொருத்தமுடையதாகத் தெரிகின்றது.

கசுO ஆம் நூற்பா

எல்லாம் என்னும் சொல் தன்மைப் பன்மைக்கு வரும்போது, உயர்திணைக்கு மட்டுமே வரும் என்பது இந்நூற்பாவின் கருத்தாகும்.

இக்கருத்திற்கு 'உயர்திணை மருங்கின் தன்னுள்ளுறுத்த பன்மைக்கல்லது ஆக்க மில்லை' என நூற்பாவினை மொழி மாற்றிக் கொள்ளவேண்டும்.

இக்கருத்து இளம்பூரணர் கருத்தைத் தழுவியதாகும்.

இதனைச் சேனாவரையர் மறுப்பர். அதனை அவர் உரையான் அறிக.

௧௧௪, ௧௧௫ ஆம் நூற்பாக்கள்

இவ்விரு நூற்பாவானும் ஒருவர் என்னும் பெயரது இயல்பு விளக்கப்படுகின்றது. ஒருவர் என்பது உயர்திணை ஆண், பெண் என்னும் இரு பாற்கும் உரியதாய்ப் பலர்பாலுக்கு உரிய வினையொடு முடியும் என்பது இவ்விரு நூற்பாவானும் கூறப்பட்ட கருத்தாகும். இக்கருத்தினையே நன்னூலாரும்,

> "ஒருவர் என்பது உயர்இரு பாற்றாய்ப்
> பன்மை வினைகொளும் பாங்கிற்று என்ப" (பெய—32)

என மிக அழகாகக் கூறினார்.

ஒருவர் என்னும் பெயர் உயர்திணைக்கு உரியதாகும். எனினும் இவ்விலக்கணம் விரவுப் பெயர் இலக்கணம் உணர்த்தும் அதிகாரத்திடையுள்ளது. இங்ஙனம் இருத்தற்கு உரிய காரணத்தைச் சேனாவரையர் மட்டுமே ஆய்ந்து, அமைதி கூறியுள்ளார். அது வருமாறு:—

"இவ்விரு நூற்பாக்களும் நீயிர், நீ என்னும் விரவுப் பெயர்களது இலக்கணம் கூறும் அதிகாரத்திடை உள்ளன. நீயிர், நீ என்பன இன்ன திணையென அறிய இயலா என்பதை இவ்வியல் ௱௪ ஆம் நூற்பாவானும், அவை இன்ன திணையென அறிய வேண்டின், சொல்லுவான் குறிப்பின் வழியே நின்று அறிதல் வேண்டும் என்பதை இவ்வியல் ௱௬ ஆம் நூற்பாவானும் அறிகின்றோம். இவ்விரு நூற்பாக்களும் ௱௭, ௱௮ ஆம் நூற்பாக்களாக அவ்விரு நூற்பாக்களிடையே உள்ளன. எனவே இவ்வொருவர் என்பதும் உயர்திணை ஆண், பெண் என்ற இரு பால்களுள் இன்ன பால் எனத் தெரிய இயலா என்பதும், இவற்றைச் சொல்லுவான் கருத்தின் வழியே நின்று தெரிதல் வேண்டும் என்பதும், அறிவிப்பதற்காக இவ்விரவுப் பெயர்களிடையே ஒருவர் என்னும் பெயரது இலக்கணத்தை வைத்தார் என்பது."

இது மிகவும் பொருத்தம் உடையதாகும்.

௧௧௭ ஆம் நூற்பா

'பெண் மகன்' என்பது பண்டைக்காலத்துப் பெண்பாலைக் குறித்து வந்த சொல்லாகும். இதனை ஆசிரியர் தொல்காப்பியனார்,

> "பெண்மை அடுத்த மகனென் கிளவியும்"

என மேற் குறித்தார்.

பொருளால் பெண் பாலைக் குறித்துச் சொல்லால் ஆண்பாற் சொல்லாகத் தோன்றலின் இதனை,

"மஃடூஉ மருங்கில் பால்திரி கிளவி"

என ஆசிரியர் குறித்தனர்.

இப் பெண்மகன் என்னும் சொல் வினைச் சொல்லோடு தொடருங்கால் 'வந்தாள்' எனப் பெண்பாற் சொல்லோடு தொடரும் என்பது இந்நூற்பாவின் கருத்து ஆகும்.

௧௯௯, உ00 ஆம் நூற்பாக்கள்

கடுவன், முதுமகன் என்பன உயர்திணை ஆண்பாற்குரிய னகர ஈற்றினைக் கொண்டிருப்பினும், பொருளால் குரங்கு என்னும் அஃறிணைப் பொருளையே உணர்த்தலின் இவை விரவுப் பெயராயின. ஆயினும் இவை அஃறிணைப் பொருளையே குறிக்கும். இங்ஙனம் ஈற்றான் உயர்திணையையும், பொருளால் அஃறிணையையும் உணர்த்தும் கருப் பொருள்களும் உள என்பதாம். இது ௧௯௯ ஆம் நூற்பாவின் கருத்தாம்.

இனிச் சொல்லால் அஃறிணையாயும், பொருளால் உயர்திணையாயும் வரும் கருப் பொருள்களும் சிலவுள என்பது 200 ஆம் நூற்பாவின் கருத்தாகும். காளை, விடலை என்பன சொல்லால் அஃறிணை போன்று இருப்பினும், இவை பாலை நிலத்திற்குரிய மக்களைக் குறித்தலின் இவையும் விரவுப் பெயராயின. எனினும் இவை உயர்திணையையே உணர்த்தும் என்பதாம்.

திணையொடு பழகிய பெயர் :—ஒவ்வொரு திணைக்கே உரிமையுடைய மக்கட் பெயர். கன்னி, விடலை, காளை, மீளி என்பன பாலை நிலத்து மக்கட்கே உரிய பெயர்கள்.

மகிழ்நன், ஊரன் என்பன மருத நில மக்கட்கே உரிய பெயர்கள்.

இங்ஙனமே பிற பிற நிலத்து மக்கட் பெயர்களும் அவ்வத் திணைக்கே உரியவாயிருத்தலின் இவையெல்லாம் 'திணையொடு பழகிய பெயர்கள்' எனப்பட்டன.

உ00 ஆம் நூற்பாவில் உள்ள எடுத்துக்காட்டும், இறுதிப் பகுதியும் சிதைந்து உள்ளது. ஆதலின் பொருள் விளக்கம் இல்லை.

௬. வினையியல்

உ0௧ ஆம் நூற்பா

இந்நூற்பா உரையில் 'மேற்கூறிய முறையின்' என்று தொடங்கும் பகுதி சிதைந்து உள்ளது. ஆதலின் பொருள் விளங்கவில்லை.

'நினையுங்காலை' என்றதனால் இவர் கூறும் கருத்து நச்சினார்க்கினியர் உரையைத் தழுவியதாகும்.

வினைச் சொல்லுள் வெளிப்படக் காலம் விளக்காதனவும் உள; அவையும் ஆராயுங்கால் காலமுடைய என்றற்கு 'நினையுங்காலை' என்றார் என்பர் சேனாவரையர்.

உ0௪ ஆம் நூற்பா

தெரிநிலை வினை, குறிப்பு வினை என்றலே முறைமை. அங்ஙனமாகவும் இந்நூற்பாவில் 'குறிப்பினும் வினையினும்' எனக் கூறியது என்னை? எனின்; மேலை நூற்பாவில்,

"அம்முக் காலமும் குறிப்பொடு கொள்ளும்
மெய்ந்நிலை யுடைய தோன்ற லாறே"

எனக் கூறியிருத்தலின் அவ்வியைபு பற்றி ஈண்டு அதனை முற்கூறினார் என்றார். இது சேனாவரையர் உரையைத் தழுவியதாகும்.

வினையியல் முதல் நூற்பாவில் வினைச் சொற்கள் காலமொடு வரும் என்று கூறப்பட்டுள்ளது. ஆதலின் ஈண்டும்,

"குறிப்பினும் வினையினும் நெறிப்படத் தோன்றிக்
காலமொடு வரூஉம் வினைச்சொல் எல்லாம்"

எனக் காலமொடு வருதலைக் கூறவேண்டுவதில்லை. அங்ஙனமாகவும் மீண்டும் கூறினார், குறிப்புச் சொல்லும் காலத்தைத் தோற்றுவிக்கும் என்பதற்கு என்றார். இப்பகுதி நச்சினார்க்கினியர் உரையைத் தழுவியதாகும்

உ0௫ ஆம் நூற்பா

இந்நூற்பா உரை ஆங்காங்குச் சிதைந்தும் விடுபட்டும் உள்ளது.

உ0௬ ஆம் நூற்பா

இந்நூற்பா உரை நச்சினார்க்கினியர் உரையை முற்றிலும் தழுவியதாகும்.

உ0௭ ஆம் நூற்பா

வினை முற்றுக்கள் எல்லாம் பெயர் கொண்டு முடிதலே இயல்பு. இதனை எச்சவியல் ௬௪ ஆம் நூற்பாவால் ஆசிரியர் நன்கு விளக்குவர். வினைமுற்றுக்கள் பெயர் கொண்டு முடியும் பொழுது முற்றென்று பெயர் பெறும்; அவை வினை கொண்டு முடிகின்ற பொழுது எச்சம் என்று பெயர் பெறும். இவற்றிற்கு விதி விலக்காக

இருப்பன மூன்று. அவை: 1. செய்கு 2. செய்கும் 3. மார். இவை வினை கொண்டு முடியினும் முற்றென்றே பெயர் பெறும். இவற்றுள் செய்கு, மார் என்பனவே தொல்காப்பியரால் எடுத்துக் கூறப் பட்டன. செய்கும் என்பது இளம்பூரணர், கல்லாடர் உள்ளிட்ட எல்லா உரையாசிரியர்களாலும் கொள்ளப்பட்டுள்ளது. நன்னூ லாரும் இக்கருத்தினை,

"செய்கென் ஒருமையும் செய்குமென் பன்மையும்
வினையொடு முடியினும் விளம்பிய முற்றே" (வினை—14)

என்னும் நூற்பாவில் ஏற்றுக் கூறுதல் காண்க.

செய்கு, செய்கும் என்பன வினைகொண்டு முடிதலினும் பெயர் கொண்டு முடிதலே வலியுடைத்தென இளம்பூரணர் கருதினர். ஆனால் சேனாவரையரும், நச்சினார்க்கினியரும், கல்லாடரும் இம் முற்றுக்கள் வினைகொண்டு முடிதலே பெரும்பான்மை என்றும், பெயர் கொண்டு முடிதல் சிறுபான்மை என்றும் கூறினர்.

ஏனைய முற்றுக்கள் எல்லாம் பெயர்கொண்டு முடியுங்கால் முற்றென்றும், வினைகொண்டு முடியுங்கால் எச்சம் என்றும் பெயர்பெற, இவைமட்டும் வினைகொண்டு முடியினும் முற்றே ஆதற்குக் காரணம் என்ன என்பதைச் சேனாவரையர் விளங்க உரைப்பர்.

அது வருமாறு:

(1) காண்கு வந்தேன் என்பதில் காண்கு என்பது செய்கு என் எச்சமாகும். இது காண வந்தேன் என எதிர்காலப் பொருளை உணர்த்தும். இது வினைமுதல் வினையே கொண்டு முடியும். இது வந்தேன் என்னும் வினைகொண்டு முடிந்தமையின் எச்சமாயிற் றெனின், காணவந்தேன் எனச் செயவென் எச்சமாகவே திரிக்க வேண்டும். 'காண்கு' என்பதைக் 'காண' எனத் திரிப்பதில் கால வழு இல்லையேனும் 'காண்கு' என்பது தன்வினைமுதல் வினையே கொண்டு முடியக் 'காண' என்பது தன் வினைமுதல் வினையையும், பிற வினையையும் கொண்டு முடிதலின் வழுவாம். இதனை வேறு வகையாகத் திரித்தற்கும் இயலாது. ஆதலின் இது முற்றென்றே பெயர் பெறும்.

(2) ஏனைய முற்றுக்கள் எல்லாம் பெயர் கொண்டு முடிதல் பெரும்பான்மையாதலின், வினைகொண்டு முடியின் எச்சமாயிற் றென்றனர். ஆனால் செய்கென் கிளவி முதலியனவோ வினை கொண்டு முடிதலே பெரும்பான்மையாதலின் அதனையே இலக்கண மாகக் கொண்டு முற்றென்று கருதினர்.

(3) அகத்தியனாரும்,

"முற்றுச் சொற்றாம் வினையொடு முடியினும்
முற்றுச்சொ லென்னு முறைமையில் திரியா."

என நூற்பா யாத்ததும் இக்கருத்தினை வலியுறுத்தும்.

உகஉ ஆம் நூற்பா

இந்நூற்பா உரை ஆங்காங்குச் சிதைந்துளது.

இந்நூற்பாவிற்குப் பொருள் உரைப்புழிச் சேனாவரையரையும், விளக்கம் தருவழி இளம்பூரணரையும் பின்பற்றியுள்ளார் இவ்வுரையாசிரியர். இவ்விருவர் கருத்துக்களும் வேறானவை ஆதலின் இங்ஙனம் உரைகொள்ளுதல் தவறாகும். தெய்வச்சிலையார் கருத்து இவ்விருவரினும் வேறானதாகும்.

"தன்மைப் பன்மைச் சொற்கள் ஆராயுமிடத்து அவை திரிபுடைய என உரைகாண்பர் இளம்பூரணர். இவர் கருத்தின்படி 'எண்ணியல்மருங்கின்' என்பது 'ஆராயுமிடத்து' என்று பொருள் படும்.

யாதோ திரிபு எனின், அம், ஆம் என்னும் இரண்டும் தன்னொடு முன்னின்றாரை உளப்படுக்கும்; எம், ஏம் என்பன இரண்டும் தன்னொடு படர்க்கையாரை உளப்படுக்கும்; உம்மொடு வரூஉம் கடதறக்கள் முன்னின்றாரையும் படர்க்கையாரையும் உளப்படுக்கும் என்பது.

பன்மையை உணர்த்தும் தன்மைச்சொற்கள் எண்ணியலும் வழி அஃறிணையை உளப்படுத்தித் திரிவனவும் உள என உரை காண்பர் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும்.

தெய்வச்சிலையார் தன்மைப் பன்மைச்சொல் எண்ணியலும் வழி திரிபவை உண்டு என உரை காண்பர். எனவே எண்ணின்கண் வருகின்ற தன்மைப் பன்மைச் சொற்கள் திரிந்து வருதலும் உண்டு என்பது இவர் கருத்தாகும்.

யாம் இருவேம் என்பதனுள் இருவேம் என்பது எண்ணின் வருகின்ற தன்மைப் பன்மைச் சொல்லாம். இஃது இங்ஙனமன்றி இருவர் எனத் திரிந்து வருதலும் உண்டு என எடுத்துக்காட்டினர் தெய்வச்சிலையார்.

அம் ஆம் என்பன முன்னிலையாரையும் எம் ஏம் என்பன படர்க்கையாரையும், உம் ஊர்ந்து வரும் கடதறக்கள் இவ்விரு வகையாரையும் உளப்படுத்தித் தன்மைப் பன்மையாய் வரும் என இளம்பூரணர் கூறிய பொருண்மை மிகச் சிறப்புடையதேனும்

திரிபவை உள என்பதற்கு ஏற்ற பொருளாகக் கொள்ளுதல் பொருந்துவதன்றாம்.

இனிச் சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் 'திரிபவை உள' என்ற சொற்குப் பொருள் விரித்தது நன்றேனும் நூற்பாவிற்குப் பொருள் கூறுமிடத்துத் தன்மைச்சொல் என்னுமிடத்து அஃறிணையை உளப்படுத்தித் திரிவதும் உண்டு எனக் கூறுகின்றனர். இந்நூற்பாவில் அஃறிணையை உளப்படுத்தி எனப் பொருள் காணுதற் கேற்ற சொற்கிடக்கை இன்மையானும், இவர்கள் இந்நூற்பாவிற்குக் கூறும் பொருண்மை,

"தன்மைச் சொல்லே அஃறிணைக் கிளவி
என்னுவழி மருங்கின் விரவுதல் வரையார்" (கிளவியாக்கம்-43)

என்பதால் பெறப்பட்டிருத்தலானும், அவர்கள் கூறிய உரையும் பொருந்துவதன்றாம். எனவே இந்நூற்பாவிற்குத் தெய்வச்சிலையார் கூறிய உரையே பொருந்துவதாகும்.

உகரு ஆம் நூற்பா

"யாஅன் வினாவினைக் குறிப்புயர் முப்பால்"

என்பது இதனை ஒத்த நன்னூல் நூற்பாவாகும்.

உகசு ஆம் நூற்பா

இந்நூற்பாவானும் மேலைய நூற்பாவானும் வினைக்கண் வரும் ஆன், ஆள, ஆர், ஆய் என்னும் ஈறுகள் செய்யுளுள் ஓகாரமாய்த் திரிதலும் உண்டு என்னும் கருத்துப் பெறப்படுகின்றது. இங்ஙனமே இந்நான்கு ஈறுகளும் பெயர்க்கண் வரும்பொழுதும் இங்ஙனம் திரியும் என்றார் (பெயரியல் சக ஆம் நூற்பா) ஆசிரியர்.

இவ்விரிடத்தும் கூறிய கருத்துக்களைத் தொகுத்தே நன்னூலாரும்,

"பெயர்வினை யிடத்து னளரய ஈற்றயல்
ஆஓ வாகலும் செய்யுளுள் உரித்தே"

என மிக அழகாகக் கூறினர்.

உஉக ஆம் நூற்பா

"எவனென் வினாவினைக் குறிப்புஇழி இருபால்"

என நன்னூலாரும் இந்நூற்பாவின் கருத்தைக் கூறுமாறு காண்க.

உஉஉ ஆம் நூற்பா

இந்நூற்பாவில் 'உடைமைப் பொருட்பெயர் முதலா' என்று தொடங்கும் பகுதி சிதைந்தும் பிழைபடவும் உள்ளது.

உஉ௪ ஆம் நூற்பா

இருதிணைச் சொற்கும் ஓரன்ன உரிமையவாய இவ்வெட்டுச் சொற்களையும் இம்முறையே வைத்தற்குரிய காரணத்தைச் சேனாவரையரும் கூறுவர். அவர் கூறுமாறு:

''முற்றாதலும், பல வாய்பாட்டால் பயின்று வருதலும் உடைமையான் முன்னிலை வினையை முன் வைத்தார். ஏவற் பொருண்மை முன்னிலை வினைக்கண்ணும் உண்மையிற் பொருளியைபுடைத்தாகலானும், இடங் குறித்து முற்றாய் வருதல் ஒப்புமையானும் அதன் பின் வியங்கோள் வைத்தார். அதன்பின் முற்றுதல் ஒப்புமையான் இன்மை செப்பல், வேறென்கிளவி, செய்ம்மன என்பனவற்றை வைத்தல் முறைமையாயினும், முற்றின்கண் வினையெச்சம் உண்மையானும், ஈற்றுப் பன்மையொடு பயின்று வருதலானும், வினையெச்சம் வைத்தார். இன்மைபற்றி வரும் வினையெச்சமும் உண்மையான் அதனோடியைய இன்மைசெப்பல் வைத்தார். வினைக் குறிப்பாதல் ஒப்புமையானும், செய்ம்மனவிற் பயிற்சியுடைமையானும் அதன் பின் வேறென்கிளவி வைத்தார். முற்றுதல் ஒப்புமையான் அதன், பின் செய்ம்மன வைத்தார். முற்று நிலைமையும் உடைத்தாகலின் அதன்பின் செய்யு மென்பது வைத்தார். பெயர் எச்சமாதல் ஒப்புமையான் அதன்பின் செய்த என்பது வைத்தார். இவ்வாறு இயைபுபற்றி வைத்தமையான், ''அம்முறை நின்ற'' என்றார்.

உஉ௫ ஆம் நூற்பா

முன்னிலை ஈறுகளாக இவர் கூறும் ௩ட, வா முதலிய ஈறுகள் இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் காட்டியனவாகும்.

சேனாவரையரும், தெய்வச்சிலையாரும் இவையெல்லாம் ஆய் விகுதி குன்றியன என்பர். நன்னூலார் இவற்றை ஒருங்கு தொகுத்துக் கொள்ளுமாறு,

> " நடவா மடிசீ விடுகூ வேவை
> தொப்போ வௌவுரிஞ் உண்பொருந் திருந்தின்
> தேய்பார் செல்வவ் வாழ்கேள் அஃகென்று
> எய்திய இருபான் மூன்றாம் ஈற்றவும்
> செய்யென் ஏவல் வினைப்பகாப் பதமே " (பதவியல் - 10)

எனக் கூறினர்.

உஉ௬ ஆம் நூற்பா

வியங்கோள் முன்னிலை, தன்மைக்கண் வாரா எனவே, படர்க்கைக்கண் மட்டுமே வருமென்பது பெற்றாம். இக் கருத்தைத் தெய்வச்சிலையார் மட்டுமே உடன்படுகின்றனர். ஆனால் பிற

உரையாசிரியர்கள் எல்லாம் வியங்கோள் முன்னிலை தன்மைக்கண் பெரும்பாலும் வாராது எனவே சிறுபான்மை அவ்விரிடத்தும் வருமென்றும், படர்க்கைக்கண் பயின்று வருமென்றும் கூறினர். நன்னூலாரும்,

> "கயவோடு ரவ்வொற்று ஈற்ற வியங்கோள்
> இயலும் இடம்பால் எங்கும் என்ப."

என மூன்றிடத்திற்கு வருமாறு கூறினார்.

ஏனையவற்றிற்கு ஈறு கூறினாற்போல வியங்கோளுக்குரிய ஈறு கூறாராயினர் எனினும், சேனாவரையர் க, ய, அல் ஆகிய மூன்று ஈறுகளும் வியங்கோளுக்குரிய ஈறுகள் என்பர்.

நச்சினார்க்கினியர் க, ய, அல், ஆல், அர், மார், உம், ஐ என்னும் ஈறுகள் வியங்கோளுக்குரிய ஈறுகள் என்பர். கல்லாடரும் இக்கருத்தினரே.

இளம்பூரணர் 'க' என்ற ஓர் ஈறு மட்டுமே வியங்கோளுக்கு உரியதாகக் கொண்டனர்.

தெய்வச்சிலையாரும் 'க' என்ற ஓர் ஈறுமே கொண்டு அது இ, ய, அர், அல் எனத் திரிந்தும் வியங்கோளாக வருமென்று கூறினர். அது விதித்தற் பொருளிலும், வேண்டிக் கோடற் பொருளிலும் வருமென்று கூறினர் தெய்வச்சிலையார்.

இந்நூற்பா உரையில் இறுதி இருபாராக்களும் சிதைந்துள்ளன.

உகூ0 ஆம் நூற்பா

இவ்வொன்பது வினையெச்சங்களும் இம் முறையே வைத்தற்குரிய காரணத்தை இவ்வுரையாசிரியர் மட்டுமே ஆய்ந்து எழுதுகின்றார். இத்தன்மை பாராட்டுதற்குரியது.

இளம்பூரணர் செய்தென் எச்சம் முன்வைத்தற்குரிய காரணத்தை மட்டும் விளக்கினர்.

உகூக ஆம் நூற்பா

ஒவ்வொரு வினையெச்சமும் ஒவ்வொரு வினைமுற்றைக் கொண்டு முடிவதே முறை. அங்ஙனமன்றி அவ்வெச்சங்கள் அடுக்கி நின்று, அவற்றுள் இறுதி எச்சம் கொண்டு முடியும் வினைமுற்றையே, எஞ்சிய எச்சங்களும் கொண்டு முடிதலும் உண்டு என்பது இந் நூற்பாவின் கருத்தாகும்.

"உண்டு பருகூஉத் தின்குபு வந்தான்" என்பதில் செய்து, செய்யூ, செய்பு என்ற பல இனத்து எச்சம் அடுக்கி வந்தது. இவ்வுதாரணம் சேனாவரையத்துள் கண்டது.

இங்ஙனமே பல உருபு தொடர்ந்து அடுக்கி நின்ற வழி அவற்றுள் இறுதியுருபு கொண்டு முடியும் சொல்லே ஏனையுரு பிற்கும் முடிபாம் என வேற்றுமை மயங்கியலுள் (19-ஆம் நூற்பா) கூறினார் ஆசிரியர்.

இவ்விரு கருத்தினையும் இணைத்தே நன்னூலாரும்,

"உருபுபல அடுக்கினும் வினைவேறு அடுக்கினும்
ஒருதம் எச்சம் ஈறுற முடியும்."

எனக் கூறுவாராயினர்.

உகக ஆம் நூற்பா

எச்சச் சொற்களுக்கும், அவற்றைக் கொண்டு முடியும் பெயர் வினைகளுக்கும் இடையே பொருந்தும் பிற சொற்கள் வருதலும் உள எனபது இந்நூற்பாவின் கருத்தாகும்.

நன்னூலார் இதனை 'இடைப்பிறவரல்' என்பர். இவ்வுரை யாசிரியர் இதனை இடைக்கிடைப்பு என்றனர்.

உசஉ ஆம் நூற்பா

"முக்கா லத்தினும் ஒத்தியல் பொருளைச்
செப்புவர் நிகழும் காலத் தானே"

என்பது இதனையொத்த நன்னூல் நூற்பாவாகும்.

உசச ஆம் நூற்பா

உலகத்தாரால் சிறந்ததென்று மதிக்கப் பட்டதொரு வினை யினது பயனை ஒருவனொடு கூட்டிச் சொல்லுங்கால், அவ்வினை முடியாத நிலைமைக்கண் சொல்லுதலின், அதனை எதிர்காலச் சொல்லாலேயே சொல்லல் வேண்டும். அங்ஙனமின்றி நிகழ்காலச் சொல்லில் சொல்லுவது வழுவாம்; எனினும் அமைக எனக் கால வழு அமைக்கின்றது இந்நூற்பா.

தவஞ் செய்தல் சிறந்த வினையில் மிக்கது ஆகல் போலத், தாயைக் கோறலும் தீவினையில் மிக்கது ஆதலின் 'தாயைக் கோற லும்' ஈண்டு எடுத்துக் காட்டு ஆயிற்று.

'தவஞ் செய்தான் சுவர்க்கம் புகுவான்' என்றே சொல்ல வேண்டும். அங்ஙனமின்றிப் 'புகும்' என நிகழ்காலச் சொல்லில்

சொல்லுதலின் வழுவாயிற்று. எனினும் அமைக எனக் காலவழு அமைத்தவாறு.

எ. இடையியல்

உருக ஆம் நூற்பா

> "சொல்லெனப் படுப பெயரே வினையென்று
> ஆயிரண் டென்ப அறிந்திசி னோரே."

> "இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும்
> அவற்றுவழி மருங்கிற் றோன்றும் என்ப."

இவை பெயரியலில் உள்ள நூற்பாக்களாகும். இவ்விரு நூற்பாக்களையும் ஒருங்கு வைத்திருப்பதால் நிரல் நிறையாகப் பொருள் கொள்ளவும் நினையலாம், அங்ஙனம் கொள்ளின் இடைச்சொல் பெயரையும், உரிச்சொல் வினையையும் சார்ந்துவரும் எனக் கூறநேரும்: ஆதலின் இடைச் சொல் பெயரையும் வினையையும் சார்ந்து வரும் என்பதைத் தனித்துக் கூறவேண்டும். அதனையே இந் நூற்பாவில் ஆசிரியர் கூறுகின்றார் என்பது இவ்வுரையாசிரியர் கருத்தாகும்.

உருஉ ஆம் நூற்பா

புணரியல் நிலையிடைப் பொருள் நிலைக்கு உதவுவன ஆவன சாரியைகளாகும். அவை தாம் சார்ந்த மொழிகளை உயர்திணை என்றும், அஃறிணை என்றும் வேற்றுமை செய்தலின் பொருள் நிலைக்கு உதவுவன ஆயின. எல்லாவற்றையும் என்புழி வற்றுச் சாரியை நிலைமொழிப் பொருள் அஃறிணைப் பொருள் என்பது பட வருதலும், எல்லா நம்மையும் என்புழி நம்முச் சாரியை அப் பொருள் தன்மைப் பன்மைப்பட வருதலும் காண்க

வினைச் சொற்களை முடிக்குமிடத்துக் காலம் காட்டும் இடைச் சொற்களாக வருவன இடைநிலைகளாகும். வினைச் சொற்களை முடிக்குமிடத்துப் பால் காட்டும் சொற்களாக வருவன விகுதிகளாகும்.

சாரியைகள், இடைநிலைகள், விகுதிகள், வேற்றுமையுருபுகள், அசைநிலை, இசைநிறை, மன் தில் முதலாய தத்தம் குறிப்பிற் பொருள் செய்குநவாய இடைச்சொற்கள், ஒத்தல் என்னும் வாய்பாடு தன்கண் இல்லாத அன்ன, ஏய்ப்ப போன்ற உவமவுருபுகள் ஆகியனவெல்லாம் இடைச்சொற்கள் எனப்படும் என்பது இந் நூற்பாவின் கருத்தாகும்

இவற்றுள் சாரியைகளை எழுத்ததிகாரத்தும், இடைநிலைகள், விகுதிகள் ஆகியவற்றை வினையியலிலும், வேற்றுமையுருபுகளை வேற்றுமையியலிலும் கூறியுள்ளார் ஆசிரியர். உவம உருபுகளைப் பின்னர்ப் பொருளதிகாரத்தில் உவம இயலில் கூற இருக்கின்றார். இடை நின்ற அசைநிலை, இசை நிறை, தத்தம் குறிப்பில் பொருள் செய்குந ஆகிய மூன்றையுமே இவ்வதிகாரத்துக் கூறுகின்றார்.

இம்மூன்றனுள்ளும் பொருள் உணர்த்துவனவாய தத்தம் குறிப்பிற் பொருள் செய்குநவற்றை இறுதியாகவும், பொருள் உணர்த்தாத அசை நிலை, இசை நிறைகளை முன்னும் கூறிய தற்கு உரிய காரணத்தை இந் நூற்பா உரையில் இறுதியாக ஆராய் கின்றார் இவ்வுரையாசிரியர். இந்தண்மை பிறர் உரைகளில் காணப் படாததாகும். எனினும் இவ்வுரைப் பகுதி சிதைந்துள்ளது, பொருள் விளங்கவில்லை

உ௬0 ஆம் நூற்பா

இந் நூற்பா உரை சிதைந்துள்ளது. எனினும் இவ்வுரை நச்சினார்க்கினியர் உரையைத் தழுவியதாய் இருத்தலின், அவர் தந்துள்ள உரையையும் எடுத்துக் காட்டினையும் அங்ஙனமே தருகின்றோம்.

(இ - ள்.) வினைச் சொல்லின் பொருண்மையும் குறிப்பாய் வரும் உரிச்சொல்லின் பொருண்மையும், பண்பின்கண் வரும் உரிச்சொல்லின் பொருண்மையும், எண்ணுப் பொருண்மையும், பெயர்ப் பொருண்மையோடே கூடி அவ்வாறு பொருண்மையும் தான் இடை நின்று கருதிப் பின்வரும் சொல்லோடு இயைவிக்கும் நிலைமையை யுடைத்து என என்னும் சொல் எ-று.

(எ-டு.)

> கார் வரும் எனக் கருதி நொந்தாள்
> துண் ணெனத் துடித்தது மனம்
> ஒல்லென ஒலித்தது
> வெள்ளென விளர்த்தது
> நிலனென நீரெனத் தீயென வளியென
> அழுக் காறென வொரு பாவி (குறள் - 168.)

என வரும்.

நெடுநீர்க் குட்டத்துத் துடும் எனப் பாய்ந்து என்பதும் இசை. புறம் - 243.

கல்லாடனார் விளக்கவுரை முற்றும்.

தொல்காப்பியம்
சொல்லதிகாரம்

பழைய உரை

[உரையாசிரியர் பெயர், ஊர், காலம்
முதலியன தெரியவில்லை]

ஆராய்ச்சி முன்னுரை

[பண்டித வித்துவான் சைவப்புலவர் சித்தாந்த நன்மணி
கு. சுந்தர மூர்த்தி
தமிழ்ப் பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்]

என்னை அப் பா அஞ்சல் என்பவர்
இன்றிநின் றெய்த்த லைந்தேன்
மின்னைஒப் பாய்விட் டிடுதிகண்
டாய்உவ மிக்கில் மெய்யே
உன்னைஒப் பாய்மன்னும் உத்தர
கோசமங் கைக்கரசே!
அன்னைஒப் பாய் எனக் கத்தன்ஒப்
பாய்என் னரும் பொருளே.

தமிழுக்கு வாய்த்த பேறு

தமிழுக்கு வாய்த்த அரிய நூல்களில் தொல்காப்பியமும் திருக்குறளும் தலைசிறந்தனவாகும். இலக்கண இலக்கியங்கட்கு இவை யிரண்டும் கண் போன்றன. கண்மணிகளிற் சிறந்த நன் மணிகள் என விளங்கும் இவ்விரு நூல்களும் ஓசையுடைமை, ஆழ முடைத்தாதல், நவின்றோர்க்கினிமை, நன்மொழி புணர்த்தல் ஆகிய அழகு நலங்கள் மிக்கு விளங்குவன. ஆகையினால்தான் இவ்விரு நூல்களையும் பயில்வோரெல்லாம் ஒரு முறை இரு முறையல்ல; பன்முறையும் பயில்வாராயினர். ஏன்? ஒவ்வொருவரும் தாம் தாம் நவில்தொறும் நவில்தொறும் ஏற்படும் இனிய நலங்களைக் காண உரைகாண வேண்டும் என்ற உயரிய வேட்கையையும் பெற்றனர். ஆதலால்தான் இவ்விரு நூல்களுக்கும் உரைகளும் பல ஆயின.

சொல்லதிகாரத்திற்கு வாய்த்த பேறு

தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், பேராசிரியர், தெய்வச்சிலையார், கல்லாடர் ஆகிய அறுவரும் உரை எழுதியுள்ளனர். இவர்களன்றி வேறு பிறரும் உரை செய்திருக்கலாம் என இவர்கள் உரையில் ஆங்காங் குள்ள குறிப்புக்களால் தெரிய வருகின்றது. இவ்வறுவருள் பேராசிரி யர் நீங்கலாக ஏனைய ஐவரும் தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு உரை எழுதியுள்ளனர். இற்றைக்குக் காணும் நிலையில் தொல்காப்

பிய எழுத்ததிகாரத்திற்கு இளம்பூரணர், நச்சினார்க்கினியர் உரைகளும், பொருளதிகாரத்திற்கு இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பேராசிரியர் உரைகளும் உள்ளன. ஆனால் சொல்லதிகாரத்திற்கோ ஐவர் உரைகள் உள்ளன. அம்மட்டோ! பெயர் தெரியாத பழைய உரையொன்றும் இதுபோழ்து கிடைத்துள்ளது. இப்பேறு சொல்லதிகாரத்திற்கே வாய்த்த பேறாகும்.

பழைய உரை

இவ்வுரை சொல்லதிகாரம் முழுமைக்கும் கிடைத்திலது. முதல் மூன்றியல்களாய கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல் ஆகிய மூன்றியல்களுக்கு மட்டுமே கிடைத்துள்ளது. அதிலும் வேற்றுமை மயங்கியலில் உள்ள இறுதி இரு நூற்பாக்களுக்குக் கூட உரை காணவில்லை.

உரையாசிரியர்

இவ்வுரையாசிரியர் பெயர் தெரிந்திலது. தொல்காப்பிய உரையாசிரியர்களில் ஏனையோருக்கெல்லாம் வாழ்க்கை வரலாறு முற்றிலும் கிடைத்திலதேனும் பெயரேனும் நன்கு தெரிந்தது. இவ்வுரையாசிரியரைப் பொறுத்த மட்டில் அப்பெயர்தானும் அறிய இயலாது போயிற்று. இவ்வுரை பழைமையாயுள்ள உரை எனத் தெரிதலின், இவ் உரை இயற்றியோரையும் பழைய உரையாசிரியர் என்றே அழைக்க வேண்டியுள்ளது. இவரைப் பற்றி வேறு பிற செய்திகள் ஏதும் தெரிந்தில. உரையும் முழுமையும் கிடைத்திலாமையால் உரையிலிருந்து கூட இவ்வுரையாசிரியரைப் பற்றி ஏதும் மிகுதியாகத் தெரிந்து கொள்ள முடியாத நிலையிலிருக்கிறது. எனினும் ஒரு சில குறிப்புக்கள் உரையிலிருந்து அறியத்தக்கன வாயுள்ளன. அவற்றை மட்டும் கீழே தருகின்றோம்.

நாடு

'செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்' என்னும் நூற்பாவில், செப்பும் வினாவும் வழுவாது வருமாற்றிற்கு இளம்பூரணர் நும் நாடு யாது? என்றால் தமிழ் நாடு என்றல் என்றெடுத்துக் காட்டினர். ஆனால் இவ்வுரையாசிரியர் 'நும் நாடு யாது? என்றக்கால் பாண்டிநாடு என்பது' என எடுத்துக் காட்டுகின்றார். கல்லாடரும் இங்ஙனமே எடுத்துக் காட்டியுள்ளனர். இதனால் இவ்வுரையாசிரியர் பாண்டி நாட்டவரோ என ஐயுற ஏதுவாயிருக்கின்றது.

சமயம்

ஐந்தாம் வேற்றுமைக்குரிய வாய்பாடுகளில் 'நாற்றம்' என்பதும் ஒன்று. அதற்கு இளம்பூரணர் 'இதனின் நாறும் இது'

என எடுத்துக்காட்டினர். சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் நாற்றம் என்பதை நறு நாற்றம் தீ நாற்றம் எனப்பிரித்து 'இதனின் நாறும் இது' என எடுத்துக்காட்டுக் காட்டினர். இவ்வுரையாசிரியர் மட்டும் நாற்றம் என்பதற்குப் 'பூதி நாற்றமும் என்பு நாற்றமும் முதலாயின' என எடுத்துக்காட்டி விளக்கினர். இவை முறையே நறு நாற்றத்திற்கும் தீநாற்றத்திற்கும் உரிய எடுத்துக்காட்டுக்கள் ஆகும். பூதி - திருநீறு. எனவே நறுநாற்றத்திற்கு இவர் திருநீற்றின் நறுமணத்தை எடுத்துக் காட்டியிருத்தலின் இவர் சமயம் சைவசமயமோ என ஊகிக்க இடனுண்டு.

காலம்

இவ்வுரையாசிரியர் இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் உரைகளைப் பல இடங்களில் ஏற்றும், ஒரோ வழி மறுத்தும் செல்கின்றார். இவற்றையெல்லாம் ஆங்காங்கு அடிக்குறிப்பிலும் காட்டியுள்ளோம். அன்றியும் இளம்பூரணர், சேனாவரையர் ஆகியோர்களின் பெயர்களை வேற்றுமையியல் 22 ஆம் நூற்பாவில் எடுத்துக் கூறியுள்ளார். இவ்வாற்றான் இவர் சேனாவரையர், நச்சினார்க்கினியர் ஆகிய இருவர்க்கும் பிற்பட்டவர் என்பது நன்கு புலனாகின்றது. இக்கழகவழிப் பதிப்பித்துள்ள தொல்காப்பியச் சொல்லதிகாரம் நச்சினார்க்கினியர் உரையில் நச்சினார்க்கினியர் காலம் கி.பி. 14 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என யாம் வரைந்து கிறுவியுள்ளோம். எனவே இவர் தம் காலமும் கி. பி. 14 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி அல்லது கி. பி. 15 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி எனத் துணியலாம்.

உரைநலம்

இவ்வுரை ஏனைய உரையாசிரியர்கள் உரையுடன் ஒப்பவைத்து எண்ணும் பான்மையில் உள்ளது. சுருங்கச் சொல்லல் என்னும் அழகு இவ்வுரைக்கே அமைந்த ஒன்றாகும். நூற்பாக்களுக்கு உள்ள உரை எல்லாம் பொழிப்புரையாகவே அமைந்துள்ளது. என்னுதலிற்றோ எனில் இன்னது நுதலிற்று எனக் கூறும் கருத்துரை சேனாவரையர் உரையில் இலதாதல் போல இவ்வுரையிலும் இல்லா திருக்கின்றது. இவ்வுரை இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் உரைகளையே பெரும்பாலும் தழுவிச் செல்கின்றது. இவர்கள் உரைகளை அப்படியே தழுவிச் செல்வதும் உண்டு. சிற்சில இடங்களில் அவர்கள் உரையில் வேண்டுவதை மட்டும் எடுத்துக் கொண்டு, ஏனைய பகுதிகளை விட்டு விடுவதும் உண்டு. இன்னும் ஓரிரு இடங்களில் ஒரே நூற்பாவிற்கு ஒன்றற்கு மேற்பட்ட உரையாசிரியர்களின் கருத்துக்களை எடுத்துத் தழுவிச் செல்வதும் உண்டு. எடுத்துக்காட்டாக முதல் நூற்பா உரையில்

முற்பகுதி நச்சினார்க்கினியரையும், இடைப்பகுதி இளம்பூரணரையும், இறுதிப்பகுதி சேனாவரையரையும் தழுவிச் செல்லுதலை அவ்வுரையால் அறிக. திருவள்ளுவனார் எல்லா நூல்களிலும் நல்லன எடுத்துக் கொண்டு எல்லார்க்கும் பொதுப்படக் கூறும் இயல்பினர். இவ்வுரையாசிரியரும் அவ்வியல் பினரேயாதல் இவர்தம் உரையால் தெரிகின்றது.

புதுமையான எடுத்துக்காட்டுக்கள்

இவ்வுரையாசிரியர் நூற்பாக்களுக்கு உரை தருவதினும், எடுத்துக் காட்டுத் தருவதில் அதிகக் கவனம் உடையவர். இவ்வுரையைப் பிறர் உரைகளோடு ஒப்பிட்டுக் காண்பார்க்கு இவ்வுண்மை நன்கு விளங்கும். அன்றியும் இவ்வுரையாசிரியரே ஒவ்வோர் இயலுக்கும் உரை எழுதி முடிந்ததும் 'கிளவியாக்க உதாரணம் முற்றும்' 'வேற்றுமையியல் உதாரணம் முற்றும்' எனக் கூறிச் செல்கின்றார். இதனால் இவருக்கு எடுத்துக் காட்டுத் தருவதில் உள்ள ஆர்வம் நன்கு புலனாகின்றதன்றோ!

இவ்வார்வத்தால் சிற்சில நூற்பாக்களுக்கு இவர் உரை தருவதின்றி, எடுத்துக் காட்டு மட்டுமே தந்து போதலும் உண்டு. எடுத்துக் காட்டாக 6, 9, 29, 39 ஆம் நூற்பாக்களைக் காண்க.

இங்ஙனம் காட்டும் எடுத்துக்காட்டுக்களில் பிறர் உரைகளில் காணாத பல புதிய எடுத்துக்காட்டுக்களையும் காண்கின்றோம். அவற்றை மட்டும் கீழே குறிப்பாம்.

(1) 'செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்'

என்னும் நூற்பாவில் வினாவழுவிற்குப் பிறரெல்லாம் தரும் எடுத்துக் காட்டு வேறு; இவ்வுரையாசிரியர் தரும் எடுத்துக்காட்டு வேறு.

இளம்பூரணர் ஒரு விரல்காட்டி நெடிதோ குறிதோ என்பது வினாவழு என்றனர்.

சேனாவரையர் கறக்கின்ற எருமை பாலோ சினையோ என்பது வினாவழுவாம்; ஒரு பொருள் காட்டி இது குறிதோ நெடிதோ என்பதும் அது என்று கூறினர்.

தெய்வச்சிலையார் இளம்பூரணர் காட்டிய எடுத்துக் காட்டுடன் ஆகாயப் பூ நன்றோ தீதோ என்றலும் ஆம் என்றனர்.

கல்லாடர் இளம்பூரணர் காட்டுமாறே காட்டினர்.

இவ்வுரையாசிரியரோ ஓர் அருமையான எடுத்துக் காட்டுத் தந்து அதற்கு விளக்கமும் தருகின்றார். அது வருமாறு:—இனி வினாவழு வருமாறு:— கருவூரோடு காவிரிப்பூம் பட்டினத்திடை

என்னுண்டு? என்பது. காதமே அறிய லுறுவது எனில் எனைத்துக் காதம் உண்டு? எனற்பாற்று; *அவ்விடைப் பொருளே அறிய லுறுவது எனில் என்னுள? எனற்பாற்று. அவ்வாறு சொல்லாமையால் வழுவாயிற்று. ஆகையால் இத் தொடக்கத்தன விளுவற்க என்பர்.

(2) 'செப்பினும் வினவினும் சினைமுதற் கிளவிக்கு
அப்பொரு ளாகும் உறழ்துணைப் பொருளே'

என்னும் நூற்பாவில் முதலும் சினையும் பிறழ்ந்த சில பாடல்களை எடுத்துக்காட்டி இவை பிறழ்ந்தன வேனும் பிறழ்வல்ல எனக் கூறுகின்றார். அப்பாடல்கள் வருமாறு:—

(அ) உப்பக்கம் நோக்கி புபகேசி தோள்மணந்தான்
உத்தர மாமதுரைக் கச்சென்ப—இப்பக்கம்
மாதாநு பங்கி மறுவில் புலச்செந்நாப்
போதார் புனற்கூடற் கச்சு. (திருவள்ளுவ மாலை—12)

(ஆ) நறுநீல நெய்தலுங் கொட்டியுந் தீண்டிப்
பிறநாட்டுப் பெண்டிர் முடிநாறும் பாரி
அறநாட்டுப் பெண்டிர் அடி.

(இ) ஃறற்றா னிருந்த உயர்சினை கொன்றான்
தேற்றா வொழுக்கம் படுவனகொல்—மாற்றார்
உறமுரண் சாய்த்தான் உயர்குடந்தை யாட்டி
சிறு மருங்குல் செற்ற முலை.

(3) 'பால்மயக் குற்ற ஐயக் கிளவி
தானறி பொருள்வயின் பன்மை கூறல்'

என்னும் நூற்பாவில் முதற்கண் உரையும் காட்டும் தந்து விளக்கியவர், பின்பு 'இதற்கு வேறும் ஓர் உதாரணம் காட்டுதும்' எனக் கூறி ஓர் எடுத்துக்காட்டினைத் தருகின்றார். அது வருமாறு:— ஒரு மக்கட்டலை ஒரு காட்டுள் கிடந்தது கண்டு பெண்தலை ஆண்தலை என்றுணராதான், பெண்டாட்டி தலை கொல்லோ, ஆண்மகன் தலை கொல்லோ இஃதோ கிடந்த மக்கட்டலை என்க.

(4) 'உருவென மொழியினும் அஃறிணைப் பிரிப்பினும்
இருவீற்றும் உரித்தே சுட்டுங் காலை'

என்னும் நூற்பாவில் குற்றிகொல்லோ மகன்கொல்லோ தோன்றுகின்ற உரு என்ற எடுத்துக்காட்டினை எல்லா உரையாசிரியர்களும் எடுத்துக் காட்டுகின்றனர். எனினும் இவ்வுரையாசிரியர் அவ்வெடுத்துக்காட்டு உருவாகும் சூழ்நிலையையும் நன்கு விளக்குகின்றார். அது வருமாறு:— 'மும் முழங்கையளைப் போல ஒக்கமும், அதற்குத்தக்க பிழம்பும் மம்மர் மாலைப்பொழுது கண்டு

* அவ்விடை - அவ்விடத்து.

ஐயுற்றுழ் குற்றி கொல்லோ மகன்கொல்லோ தோன்றுகின்ற உரு, என்று இரு திணைக்கும் பொதுவாகச் சொல்லுக' என்பது.

இதன் பொருளை அடிக்குறிப்பில் விளக்கியுள்ளோம். ஆண்டுக் காண்க.

(5) 'இனைத்தென அறிந்த சினைமுதற் கிளவிக்கு
வினைப்படு தொகுதியின் உம்மை வேண்டும்'

என்னும் நூற்பாவில் பிறர் உரையில் காணாத இரு எடுத்துக் காட்டுக்களை இவ்வுரையாசிரியர் காட்டி அவற்றிற்கு அமைதியும் கூறுகின்றார். அது வருமாறு:—

'எருமை நாற்கால் நீர்க்கீழ் வரும்'

எனவும்,

கண்களியாற் சென்றமைப்பக் கைநாஞ்சின் மேலசைஇ
ஒண்குழையோன் றூல்கி யெருத்தலைப்ப—ஒண்சுடர்ப்பூண்
சேர்மலர்த் தாரைவர் நீர்மை புடைத்தரோ
தேர்மணிப்பூண் வெள்ளை நிலை.

எனவும் இவை உம்மை இல்லையால் எனில் செய்யுளாதலின் தொக்கது என்க.

(6) 'ஒருபொருள் குறித்த வேறுபெயர்க் கிளவி
தொழில்வேறு கிளப்பின் ஒன்றிடன் இலவே'

என்னும் நூற்பாவில்,

தேமலர் அங்கண் திருவே புகுதுக
மாமலர்க் கண்ணி மணாளன் புகுதுக
காமன் புகுதுக காளை புகுதுக
நாம எழில்விஞ்சை நம்பி புகுதுக

என இவ்வுரையாசிரியர் காட்டும் எடுத்துக்காட்டுப் பிறர் உரையில் காணாததாகும்.

(7) 'பலவயி னானும் எண்ணுத் திணை விரவுப்பெயர்
அஃறிணை முடிபின செய்யு ளுள்ளே'

என்னும் நூற்பாவில் பல புதிய எடுத்துக்காட்டுக்கள் இவர் உரையில் காணப்படுகின்றன. அவை வருமாறு:—

(அ) 'எருதும் உழவனும் வந்தார் ஒருகுடநீர்
தாராய்நீ ஆயர் மகள்'

(ஆ) 'மூர்க்கனும் முதலையும் கொண்டது விடார்'

(இ) 'வேந்தன் பெரும்பதி மண்ணுள் மக்கள்
ஈங்கிவர் மூவர் இதற்குரி யோரே'

(ஈ) 'வண்டார் ஓதி நீயும் நல்லை
தண்டார் மார்பின் இவனும் நல்லன்
ஒலிப்பாட் டின்இவ் வூரும் நன்றே
தீயோர் யாவரும் இல்லை'

(8) 'ஓம்படைக் கிளவிக்கு ஐயும் ஆனும்
தாம்பிரி விலவே தொகைவரு காலை'

என்னும் நூற்பாவில் புலிபோற்றிவா என்ற தொடரையே பிறரெல்லாம் எடுத்துக் காட்டியிருப்ப, இவ்வுரையாசிரியர் மட்டும்,

'புலிபோற்றி வாவாழி ஐய ஒலிகூந்தல்
நின்னல தியாரும் இலள்'

என்றொரு பாடலை எடுத்துக் காட்டுகின்றார்.

(9) 'வினையே செய்வது செயப்படு பொருளே'

என்று தொடங்கும் நூற்பாவில் ஒரு புதிய தொடர் ஒன்று எடுத்துக் காட்டப்படுகின்றது. ஆயினும் அது விளங்கவில்லை. அது வருமாறு:— "அட்டான் என்புழி சாத்தன் சோற்றைக் குழிசையால் பார்ப்பார்க்கு மச்சின் றெற்கொண்டு கூரையுள் —என்பது விளங்கும்."

மறுப்பு நலம்

இவ்வுரையாசிரியர் பிறரை மறுக்குங்கால், பெயர்கூறி மறுப்பதில்லை. தெய்வச்சிலையாரும் இத்தகையவரேயாவர். அங்ஙனம் மறுக்கும்பொழுதும் சுருக்கமாகவும் குறிப்பாகவுமே மறுப்பர். இவர்தம் மறுப்பு நான்கிடங்களில் உள்ளன. அவற்றுள் மூன்றிடங்கள் (35, 56, 83 ஆம் நூற்பாக்களில் உள்ளன) சேனாவரையரை மறுக்கும் இடமாகும். இன்னொரு மறுப்பு 25 ஆம் நூற்பாவில் உள்ளது. இது வன்மையாகக் காணப்படுகின்றது.

உரை நிலை

சேனாவரையர் இளம்பூரணரை வன்மையாக மறுத்துச் செல்லும் இடங்கள் பல உள. அங்ஙனம் அவர் வன்மையாக மறுப்பினும், அவ்விடங்களிலெல்லாம் இவ்வுரையாசிரியர் சேனாவரையரைத் தழுவாது இளம்பூரணரையே தழுவிச் செல்கின்றார். அவ்விடங்களில் சேனாவரையரை மறுப்பதும் இல்லை. இது இவர் தம் பண்பு.

எடுத்துக்காட்டாக 'என்மனார்' என்பது பற்றிய சொல் முடிபு, 'ஆயிரு திணையின்' என்ற தொடரை விரித்துச் செல்லும் நிலை, வேற்றுமையியல் முதலே பெயர் இலக்கணம் தொடங்கிச்

செல்கின்றது என்ற கூற்று, செப்பு, வினா, தகுதி, வழக்கு ஆகிய இவற்றைப் பகுத்து விளக்கும் நிலை ஆகிய இடங்களைக் காண்க.

ஒவ்வோர் இயல்களும் தொடங்குங்கால் அவ்வவற்றிற்கான விளக்கத்தைத் தரும் பழக்கம் இவரிடம் இல்லை. வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல் ஆகிய இயல்களைக் காண்க.

வெண்களமர், கருங்களமர் என்ற சொற்கள் சேனாவரையர் முதலியோர் உரைகளில் இருப்பினும் அவற்றிற்கான விளக்கம் ஆண்டில்லை. இவ்வுரையாசிரியரே அச் சொற்களின் பொருள்களை நன்கு விளக்குகின்றார். இதனை 17ஆம் நூற்பா உரையில் காண்க.

பாடபேதங்கள்

(அ) 'ரஃகான் ஒற்றும் பகர இறுதியும்' என்று தொடங்கும் நூற்பாவில் பிறரெல்லாம் 'உளப்பட' எனப் பாடங் கொள்ள, இவர் மட்டும் 'உட்பட' எனப் பாடங்கொள்கின்றார்.

(ஆ) 'உருவென மொழியினும் அஃறிணைப் பிரிப்பினும்' என்று தொடங்கும் நூற்பாவில் 'உருபென' எனச் சேனாவரையரும் தெய்வச்சிலையாரும் பாடங்கொள்ள, இளம்பூரணர், நச்சினார்க்கினியர், கல்லாடர் ஆகிய மூவரும் 'உருவென' எனப் பாடங்கொண்டனர். இவ்வுரையாசிரியரும் இதனையே தழுவினர். இதுவே சிறப்புடைத்தாம்.

(இ) 'பிண்டப் பெயரும் ஆயியல் திரியா' என்று தொடங்கும் நூற்பாவில் பிறரெல்லாம் 'மரீஇய மரபே' எனப் பாடங்கொள்ள இவ்வுரையாசிரியர் மட்டும் 'மரீஇய பண்பே' எனப் பாடங்கொள்கின்றார்.

(ஈ) 110ஆம் நூற்பாவில் 'அவற்றுள்' என்ற தனிச்சொல்லை இளம்பூரணர் ஒருவர் மட்டுமே கொண்டுள்ளனர். இவரும் அவரையே தழுவினர்.

(உ) 'வினையே செய்வது செயப்படு பொருளே' என்று தொடங்கும் நூற்பாவில் இளம்பூரணர் மட்டுமே 'அனைமரபினவே' எனப் பாடங் கொண்டுள்ளார். ஏனையோரெல்லாம் அனையமரபினவே எனப் பாடங்கொண்டனர். இவ்வுரையாசிரியர் இளம்பூரணர் கொண்ட பாடத்தையே கொண்டனர்.

இவ்வுரையிலிருந்து அறியப்படும் புதிய நூற்பாக்கள் :—

(அ) 'செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்' என்னும் நூற்பாவில் வினா ஐந்து வகைப்படும் எனப் பகுத்துக் கூறினர் இளம்பூரணர். கல்லாடரும் இதனையே தழுவி அதற்கு ஒரு நூற்பாவும் காட்டினர். அந்நூற்பா வருமாறு:—

'அறியான் வினுதல் அறிவொப்புக் காண்டல்
ஐயம் அறுத்தல் அவனறிவு தான்கோடல்
மெய்யவற்குக் காட்டலொடு ஐவகை வினுவே.

இவ்வுரையாசிரியரும் இதேபோன்று ஒரு நூற்பா காட்டுகின்றுர். எனினும் அது சிறிது வேறுபட்டுள்ளது. அது வருமாறு:—

'அறியான் வினுதல் அறிவொப்புக் காண்டல்
ஐயம் அறுத்தல் அவனறிவு தான்காண்டல்
மெய்ய வற்குக் காட்டலோ(டு) ஐந்து'

(ஆ) ஆறும் வேற்றுமையில் தற்கிழமை ஐந்து வகைப்படும் என இளம்பூரணர் முதலியோர் கூறினர். அதனையே இவ்வுரை யாசிரியரும் கூறினும், அதற்கு மேற்கோளாக அகத்தியச் சூத்திரம் ஒன்றை எடுத்துக் காட்டுகின்றுர். அது பிறர் உரையில் காணுத தாகும். அது வருமாறு:—

'ஒன்றுபல குழீஇயதும் வேறுபல குழீஇயதும்
ஒன்றியற் கிழமையும் உறுப்பின் கிழமையும்
மெய்திரிந் தாகிய தும்என ஐம்பால்
உரிமையும் அதன்தற் கிழமை.' (அகத்தியம்)

பதிப்பு நலன்

இத்தகைய பெருஞ்சிறப்பு அமைந்த இப்பழைய உரைதானும் முழுதுங் கிடைத்திலாமை ஒரு பெருங்குறையேயாகும். மூன்றியல் களுக்கு மட்டும் கிடைத்துள்ள இச் சுருங்கிய உரையிலேயே இத் துணைச் சிறப்புக்கள் இருக்குமாயின், இவ்வதிகாரம் முழுமைக்கும் உள்ள உரை கிடைத்திருப்பின் எத்துணைச் சிறப்புக்களை நாம் இன்னும் அறிந்திருக்க முடியும்! என எண்ணுங்கால் நெஞ்சம் திடுக் கிடுகின்றது. மொழித்துறையில் இறங்கி வேலை செய்கின்றவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்துதவுவார் இன்மையானும், அதன் வழி வருகின்றவர்களும் தம் முன்னோர்களைத் தக்கவாறு போற்றும் பான்மையிலர் ஆதலானும் இத்தகைய சீரிய உரைகள் யாவும் வளரவும் வாழவும் வழியில்லாமல் போயின. இனியேனும் அத்தகைய குறைகள் நீங்கித் தமிழ்ச் சமுதாயம் தாம் வாழவும் பிறரை வாழவைக்கவும் முற்படுமாக! திருவருள் முன்னிற்க.

தமிழ் நூல்களுள் இறந்தனபோக எஞ்சியவற்றையேனும் காக்கவேண்டும் என்ற எண்ணத்தாலும், கிடைத்தவை சிறிதேனும், அவற்றையும் பாதுகாக்காவிடில் நாளடைவில் அவையும் மறைந்து ஒழிந்துவிடும் என்ற எண்ணத்தாலும், கிடைத்தவரையேனும் பதிப்பித்து விடுதல் நன்றென்று கருதிற்று நமது சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம். அதன் ஆட்சியாளராக விளங்குபவர்களும்,

எனது அன்பிற்குரியவர்களுமான திருவாளர். வ. சுப்பையா பிள்ளை அவர்களின் சீரிய முயற்சியே இவ்வுரை வெளிவருதற்குக் காரணமாயிற்று.

தொல்காப்பியச் சொல்லதிகார உரைக்கோவை என்ற பெயரில், சொல்லதிகாரத்திற்கு உள்ள உரைகளை யெல்லாம் தொகுத்து அதன் முற்பகுதியை மட்டும் திரு. ஆபிரகாம் அருளப்பன், திரு. வி. ஐ. சுப்பிரமணியம் ஆகிய பேரறிஞர்கள் வெளியிட்டுள்ளார்கள். அவ்வுரைக் கோவையிலேயே இப்பழைய உரை முதன் முதல் வெளிவந்தது. அப்பேரறிஞர் இருவர்க்கும் தமிழகம் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

தொல்காப்பிய உரைகளனைத்தையும் திருந்திய முறையில் பதிப்பித்து வெளியிட்டுவரும் கழக ஆட்சியாளர். திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்கள் இதனையும் கல்லாடர் உரையுடன் இணைத்துப் பதிப்பிக்க விரும்பினார்கள். அவர்களின் விருப்பத்திற்கிணங்க இவ்வுரை இதுபொழுது வெளிவருகின்றது.

நூற்பாக்களுக்கு ஏற்பத் தக்க தலைப்புக்கள் கொடுத்தும், தக்க அடிக்குறிப்பு, இன்றியமையாத விளக்கங்கள், பாடபேதங்கள் ஆகியன கொடுத்தும், உரையின் மாண்பினை யறியத் தக்கதோர் ஆராய்ச்சி முன்னுரை கொடுத்தும் சீரிய முறையில் பதிப்பிக்க உரை வரைந்தளித்தேன்.

நன்றியுரை

இதுகாறும் தமிழ்மக்களின் கவனத்திற்குக் கொண்டுவரப் படாத இப்பழைய உரையைப் பதிப்பித்துதவும் கழகத்தினார்க்கும், சிறப்பாக இக்கழகத்தின் ஆட்சியாளரான திருவாளர் வ. சுப்பையா பிள்ளை அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நூல் வெளிவருவதற்கு அயராது படியெடுத்துத் தந்துதவியவரும், உழைப்பதில் தளர்ச்சியின்மையும், பிறர்க்குதவுவதில் மனங்கோணாமையும் உடையவரும், திருப்பனந்தாள் கயிலை சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியருமான திரு. புலவர். மா. விசுவநாதம் அவர்களுக்கு என்றென்றும் என் நன்றி உரியதாகும்.

யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையான் யாவர்க்கும் கீழாம் எளியேனை இத்தகைய சீரிய பணிகளிலெல்லாம் ஈடுபடுத்தி ஆட்கொண்டருளுதற்கு என் செய்யவல்லேன்! சொல்லுவதறியேன் வாழி!

உ

திருச்சிற்றம்பலம்

தொல்காப்பியம்

சொல்லதிகாரம்

பழைய உரை

க. கிளவியாக்கம்

இவ்வதிகாரம் என்ன பெயர்த்தோ எனின், சொல்லதிகாரம் என்னும் பெயர்த்து. சொல்லதிகாரம் என்பது இடுகுறியோ காரணக் குறியோ எனின் காரணக்குறி : என்னை ? சொல் உணர்த்தினமையாற் பெற்றும் என்க. அதிகாரமாவது முறைமை என்றவாறும்.

*இனிச் சொல் என்ற பொருண்மை என்னை எனின், ஓசை என்றவாறும். "ஓசையைச் சொல் என்றீரால், கடலொலியும், சங்கொலியும், விண்ணொலியும் சொல்லாகாதோ" எனின், இசை எனினும் அரவம் எனினும், கிளவி எனினும், மொழி எனினும், எழுத்தொடு புணர்ந்து பொருள் அறிவுறுக்கும் ஓசை மேல் நிற்கும், முற்கும் வீளையும் இலதையும் என்னும் தொடக்கத்தனவோ எனின், அவை எழுத்தொடு புணராமையின் சொல் ஆகா. அவையும் பொருள் அறிவுறுக்கும் என அறிக.

இனி, எழுத்தோடு புணர்ந்த ஓசையே சொல் எனப்படுவது என்றறிக. அச்சொல் எழுத்தினான் ஆகி வருதலான், ஆக்குவதை முன் உணர்த்தி, ஆக்கப்பட்டதனைப் பின் உணர்த்தினார். வரி எழுத்தும் சொல்லாம். பிறவாமையின் சொன்முன் வைக்கற்பாலீர் எனின், அகரம் என்றவிடத்து நான்கு சொல்லின் ஒன்று மூன்று சொல்லின்.......... என்பது இயற்றிற்கும்.

†இனி, அச்சொல் எனைத்துவகையான் உணர்த்தினாரோ எனின், எட்டுவகையான் உணர்த்தினார். அவ்வெட்டு வகைப்பட்ட இலக்கணமும் உணர்ந்தான் சொல்லுணர்ந்தான் ஆம். அவ்வெட்டு வகையும் யாதோவெனின், இரண்டு திணை வகுத்து, அத்திணைக்கண் ஐந்து பால் வகுத்து எழுவகை வழூஉ வகுத்து, எட்டு வேற்றுமை வகுத்து, ஆறு வகைப்பட்ட தொகை வகுத்து, மூன்று இடம் வகுத்து, மூன்று காலம் வகுத்து, இரண்டு இடம் வகுத்தலான் இவை சொல்லாராய்ந்த எட்டிலக்கணமும் ஆவன.

---

* இப்பகுதி நச்சினார்க்கினியர் உரையைத் தழுவியதாகும்.

† இப்பகுதி இளம்பூரணர் உரையைத் தழுவியதாகும்.

அவற்றுள், இரண்டு திணை என்பன : உயர்திணை, அஃறிணை.

ஐந்து பாலென்பன : ஒருவன், ஒருத்தி, பலர், ஒன்று, பல.

ஏழ்வழுஉவாவன : திணைவழூஉ, பால்வழூஉ, இடவழூஉ, காலவழூஉ, மரபு வழூஉ, செப்புவழூஉ, வினாவழூஉ.

எண்வகை வேற்றுமையாவன : எழுவாய் வேற்றுமை முதலாக விளி வேற்றுமை ஈறாக ஓதப்பட்டன.

அறுவகைப்பட்ட தொகையாவன : வேற்றுமைத் தொகை, உவமைத் தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித் தொகை என்பன.

மூன்று இடம் என்பன : தன்மை, முன்னிலை, படர்க்கை.

மூன்று காலம் என்பன: இறந்தகாலம், எதிர்காலம், நிகழ்காலம்.

இரண்டு இடம் என்பன : வழக்கிடம், செய்யுளிடம் என இவ்வாறு சொல்லுப.

இவ்வெட்டன் புடை பெயர்ச்சியே கிளவியாக்கம் முதலாக எச்சவியல் இறுதியாகக் கிடந்த ஒன்பது ஓத்தினுள்ளும் ஆராயப்பட்டது எனக் கொள்க.

*இனி, கிளவியாக்கம் என்பது இடுகுறியோ, காரணக் குறியோ எனின், காரணக்குறி. என்னை காரணம் எனின், கிளவி என்பது சொல்; ஆக்கம் என்பது அமைத்துக் கோடல்; சொற்களை அமைத்துக் கொள்ளப் பட்டமையின் கிளவியாக்கம் என்னும் பெயர் பெற்றது; அரிசி ஆக்கிக் கொண்டார் என்பது போல. மற்றரிசி ஆக்குமிடத்து நொய்யும் நுறுங்கும் களைந்து கொள்ளப்படுவது போல ஈங்கும் களைந்து கொள்ளப்படும் சொல் உளவோ எனின், உள. அவை வழீஇயின சொற்களைந்து வழூவாதன கொள்ளப்பட்டது இவ்வோத்தினுள் என்பது.

இன்னமும் ஒன்று : கிளவி என்பது சொல். ஆக்கம் என்பது சொற்களைப் பொருள் மேலாமாறு உணர்த்தினமையின் சொல்லாக்கம் என்று பெயர் பெற்றது. என்னை ? ஒருவன் மேலாமாறு இது, ஒருத்தி மேலாமாறு இது, பலர் மேலாமாறு இது, ஒன்றமேலாமாறு இது, பலவற்றின் மேலாமாறு இது, வழுவாமாறு இது, வழுவமையுமாறு இது, எனப் பொருட்கண் மேலாமாறு உணர்த்தினமையின் கிளவியாக்கம் என்று பெயர் பெற்று மற்று ஏனை ஓத்தின் உணரும் பொருள் மேலாய் நின்ற வாறு இலக்கணம் உணர்த்தினார். ஈண்டும் அவை தம்மையே ஒன்பது ஓத்தினால் உணர்த்தினார் என்பது.

†இனிப் பெயர் முதலாகிய நான்கு வகைப்பட்ட சொல்லிற்கு இவ்வோத்தினுள் பொது இலக்கணம் உணர்த்தினார். பெயர்ச் சொல்லது இலக்கணம் வேற்றுமை ஓத்தினுள்ளும், வேற்றுமை மயங்கியலுள்ளும், விளிமரபினுள்ளும் உணர்த்திப் பெயர் முதல் உரி ஈறாக அவற்றது இலக்கணம் அடைவே விரித்துணர்த்தி, எஞ்சி நின்ற சொற்களை எச்ச

* கிளவியாக்கம் என்ற சொல்லிற்கு இவர் தரும் விளக்கம் சேனாவரையர் உரையைத் தழுவியதாகும்.

† இக்கருத்து இளம்பூரணர் உரையைத் தழுவியதாம். இதனைச் சேனாவரையர் மறுப்பர். அதனை அவர் உரையானறிக.

வியலான் உணர்த்தினர் என்க. இவ்வகையான் எல்லாம் உணர்த்தினர் ஆகலின் ஒன்பது ஒத்தும் வேண்டிற்று என்க.

திணை இரண்டு எனல்

க. உயர்திணை என்மனார் மக்கள் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே
ஆயிரு திணையின் *இசைக்குமன சொல்லே.

என்பது, மக்கள் என்று சுட்டப்படும் பொருளை உயர்திணை என்று சொல்லுப ஆசிரியர். மக்கள் அல்லாத பிற பொருளை அஃறிணை என்று சொல்லுப ஆசிரியர். அவ்விரு திணையினையும் சொல்லும் சொல்லும் உயர்திணைச் சொல்லும் அஃறிணைச் சொல்லுமாம்.

எனவே சொல்லும் பொருளும் வரையறுக்கப்பட்டது.

உயர்திணை என்றது பிறப்பினிற் சிறப்பெய்துதற்கு மக்கள் நிலைமை மிக்க சார்வாகலான்.

†என்மனார் என்பது என்ப என்னும் முற்றுச்சொல் 'குறைக்கும் வழிக் குறைத்தல்' என்பதனால் பகரத்தைக் குறைத்து 'விரிக்கும்வழி விரித்தல்' என்பதனால் மன்னும், ஆரும் எவபன இரண்டு இடைச் சொற் பெய்து விரித்தார்.

'என்றார்' என்பதனை 'என்மனார்' என எதிர் காலத்தாற் சொல்லி யது என்னை ?

"இறப்பே எதிர்வே ஆயிரு காலமும்
சிறப்பத் தோன்றும் மயங்குமொழிக் கிளவி"

என்பதாகலாற் கூறினார்.

இசைக்கும் என்பது செய்யும் என்னும் முற்றுச் சொல். 'மன் என்ற இடைச்சொல் 'மன' என ஈறு திரிந்தது. 'மன்' என்று பாடம் ஓதுவாரும் உளர். உயர்ந்ததிணை எனும் இறந்தகால வினைத்தொகை உயர் திணை எனத் தொக்கது.

'ஆசிரியர்' என்பது இச்சூத்திரத்து இல்லை எனின், என்ப என்னும் முற்றுச் சொல்லே பெறும். முற்றுச்சொல் எச்சப் பெயர் கொண்டு முடியும் என்பதாகலான்.

‡அவ்விரு திணையினை என இரண்டாவது விரித்து உரைக்க. (க)

---

* இசைக்குமன் எனப் பாடங் கொள்வாரும் உண்டு.

† என்மனார் என்பது பற்றிய விளக்கம் இளம்பூரணர் உரையைத் தழுவியதாகும். இதனைச் சேனாவரையரும், தெய்வச்சிலையாரும் வன்மையாக மறுப்பர். அதனை அவரவர் உரையானறிக.

‡ இக்கருத்து இளம்பூரணர் உரையைத் தழுவியதாகும். எனினும் ஆயிருதிணையின் கண்ணும் என ஏழாவது விரித்தலே பொருத்தம் உடையது என்பர் சேனாவரையர்.

உயர்திணைக்குரிய மூன்று பால்கள்

உ. ஆடூஉ அறி சொல் மகடூஉ அறி சொல்
பல்லோர் அறியும் சொல்லொடு சிவணி
அம்முப் பாற்சொல் உயர்திணை அவ்வே.

(எ - து.) ஆண்மகனையும் பெண்டாட்டியையும் அவ்விருவரது பன்மையாகிய பல்லோரையும் அறிவிக்கும் சொல்லொடு பொருந்திய அம்மூன்று கூற்றுச் சொல்லும் உயர்திணையை அறிவிக்கும் சொல்லாம்.

'அவ்வே' என ஆறுவதன் பன்மையாகக் கொள்க. (உ)

அஃறிணைக்குரிய இரண்டு பால்கள்

௩. ஒன்றறி சொல்லே பலவறி சொல்லென்(று)
ஆயிரு பாற்சொல் அஃறிணை யவ்வே.

(எ - து.) ஆண் பெண்ணாகிய ஒன்றனையும், அவ்விரண்டினது பன்மையாகிய பலவற்றையும் அறிவிக்கும் சொல்லொடு பொருந்திய அவ்விரண்டு கூற்றுச் சொல்லும் அஃறிணையை அறிவிக்கும் சொல்லாம்.

'உயர்திணையவ்வே'. 'அஃறிணையவ்வே' என்பது உயர்திணை என அம்முப்பாற் சொல் அஃறிணை என ஆயிருபாற் சொல் என.

ஏ ஈற்றசை. (௩)

பேடியும் தெய்வமும் உயர்திணையுள் அடங்கும் எனல்

௪. பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்
ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்
தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்
இவ்வென அறியும் அந்தம் தமக்கிலவே
உயர்திணை மருங்கிற் பால்பிரிந் திசைக்கும்.

(எ - து.) பெண்மைத் தன்மை எய்திய, உயர்திணையிடத்து ஆண்மை நீங்கிய பெயர்ப் பொருளும், தெய்வஞ் சுட்டிய பெயர்ப் பொருளும் பாலறிய நிற்கும் ஈற்றெழுத்து இத்தன்மையன எனத் தமக்கு உடையவல்ல; உயர்திணை முப்பாலினையும் விளக்கும் எழுத்தினையே ஈறாக இசைக்கும்.

(எடுத்துக்காட்டு) பேடி வந்தான், பேடி வந்தாள், பேடியர் வந்தார். வாசுதேவன் வந்தான், திருவினுள் வந்தாள், முப்பத்து மூவரும் வந்தார் என வரும்.

'உயர்திணை மருங்கின்' என்பதனை 'ஆண்மை சுட்டிய' என்று மொழி மாற்றி உரைக்க.

*'அந்தம் தமக்கிலவே' என்றதனால், நரகன் வந்தான், நரகி வந்தாள், நரகர் வந்தார் எனத் தேவரும், மக்களும் அல்லாத நரகர்க்கும் அம் முடிவு கொள்க. (ச)

உயர்திணை ஆண் பால் ஈறு

ரு. னஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல்.

(எ - து.) னகர வொற்றே ஆண்மகனை அறிவிக்கும் சொல்.

(எ - டு.) உண்டான், உண்ணாநின்றான், உண்பான் என மூன்று கால வினையானும்; கரியன், செய்யன் எனக் காலந் தோன்றாத வினைக் குறிப்பானும் அறிக. (ரு)

உயர்திணைப் பெண் பால் ஈறு

சு. ளஃகான் ஒற்றே மகடூஉ அறிசொல்

(எ - டு.) உண்டாள், உண்ணாநின்றாள், உண்பாள் என்னும் மூன்று கால வினையானும், கரியள், செய்யள் என்னும் வினைக்குறிப்பானும் உணர்க. (சு)

உயர்திணைப் பலர் பால் ஈறு

எ. ரஃகான் ஒற்றும் பகர இறுதியும்
†மாரைக் கிளவி ‡யுட்பட மூன்றும்
நேரத் தோன்றும் பலரறி சொல்லே.

(எ - டு.) உண்டார், உண்ணாநின்றார், உண்பார் என்னும் மூன்று காலவினையானும்; கரியார், செய்யார் என்னும் வினைக்குறிப்பானும்; உண்ப, தின்ப, கொண்மார் வந்தார் என எதிர்காலமுற்றுச் சொல்லானும் அறிக. (எ)

---

* இக்கருத்து இளம்பூரணர் உரையைத் தழுவியதாகும். எனினும் நரகரை உயர்திணையாகக் கூறல் பொருத்தமற்றது என்றனர் தெய்வச் சிலையார்.

† மார் ஈற்றினை ரகர வொற்றில் அடக்காது வேறு கூறியதற்குரிய காரணத்தைச் சேனாவரையர் விளக்க உரைப்பர். அதனை அவர் உரையான் அறிக.

‡ 'உளப்பட' எனப் பாடம் கொள்வர் பிற உரையாசிரியர்கள்.

அஃறிணை ஒன்றன் பால் ஈறு

௮. *ஒன்றறி கிளவி தறட ஊர்ந்த
குற்றிய லுகரத் திறுதி யாகும்.

(எ - டு.) உண்டது, உண்ணாநின்றது, உண்பது; கரிது, செய்து எனக் காலம் மூன்றானும், வினைக்குறிப்பானும்; கூயிற்று, தாயிற்று; கோடின்று, குளம்பின்று, உகிரின்று, மயிரின்று என இறந்த காலத்தானும், வினைக் குறிப்பானும்; குண்டுகட்டு, கொடுந்தாட்டு என்ற வினைக்குறிப்பானும், தறடக்களை ஊர்ந்து வந்த குற்றியலுகரத்தான் ஒன்றறி சொல் என்று அறிக. (௮)

அஃறிணைப் பலவின்பால் ஈறு

௯. †அ ஆ வ என வரூஉம் இறுதி
அப்பால் மூன்றே பலவறி சொல்லே.

(எ - டு.) உண்டன, உண்ணாநின்றன, உண்பன; கரிய, செய்ய எனக் காலங்களானும், வினைக்குறிப்பானும்; உண்ணா, தின்னா என்னும் முற்றுச் சொல்லானும்; உண்குவ, தின்குவ என எதிர்காலத்தானும் ஆக அ, ஆ, வ என்னும் அம்மூன்று சொல்லானும் பன்மையானும் உணரப்படும் என்று அறிக. (௯)

மேல் கூறப்பட்ட ஈறுகள் வினைக்கண் வந்து பால் விளக்கும் என்றல்

௧௦. இருதிணை மருங்கின் ஐம்பால் அறிய
ஈற்றுநின் றிசைக்கும் பதினோ ரெழுத்துந்
தோற்றந் தாமே வினையொடு வருமே.

(எ - து.) உயர்திணையிடத்தும், அஃறிணையிடத்தும், ஒருவன், ஒருத்தி, பலர், ஒன்று, பல என்னும் ஐந்து பாலும் அறிய இறுதியில் நின்றுணர்த்தும் பதினோரெழுத்தும் புலப்படுமிடத்து வினையொடு நடக்கும்.

அவையாவன :— னகாரமும், ளகாரமும், ரகாரமும், பகாரமும் ஆகும். தவ்வும், றவ்வும், டவ்வும், அவ்வும், ஆவும், வவ்வும் என

---

* நெடுங்கணக்கில் உள்ளவாறு டதற என்னாது, தறட என்று உரைத்தற்குரிய காரணத்தைச் சேனாவரையர் விளங்க உரைப்பர். அதனை அவர் உரையான் அறிக. நன்னூலாரும்

'துறுடக் குற்றிய லுகர ஈற்ற
ஒன்றன் படர்க்கை டுக்குறிப் பிணும்'

என இம்முறையிலேயே வைத்துக் கூறுமாறு காண்க.

† இவ்வீறுகளை இம்முறையே வைத்தற்குரிய காரணத்தைக் கல்லாடர் நன்கு விளக்குவர். அதனை அவர் உரையானறிக.

இவை முன் சொன்ன சூத்திரங்களின் வினையொடு நடக்குமாறு கண்டு கொள்க. (௧௦)

பாலறி கிளவிகள் மயங்கக் கூடா எனல்

௧௧. வினையில் தோன்றும் பாலறி கிளவியும்
பெயரில் தோன்றும் பாலறி கிளவியும்
மயங்கல் கூடா தம்மர பினவே.

(எ - து.) வினையினாற் பாலறியப்படும்பொருளும், பெயரினாற் பாலறியப்படும் பொருளும் மயங்குதலைப் பொருந்தா. அவை தத்தம் இலக்கணத்தனவாயே வரும்.

(எ - டு.) உண்டான் அவன், உண்டாள் அவள், உண்டார் அவர், உண்டது அது, உண்டன அவை என இவை வினை நிற்ப, பெயர் மேல் தத்தம் மரபினான் வந்தன.

அவன் உண்டான், அவள் உண்டாள், அவர் உண்டார், அது உண்டது, அவை உண்டன என இவை பெயர் நிற்ப, வினைமேல் தத்தம் மரபினான் வந்தன.

இனி, மயங்கல் கூடா எனவே அவற்று மயக்கம் உண்டென்பது சொல்லப்பட்டதாம். அம் மயக்கம் எழுவகைப்படும்.

அவையாவன :— ...... திணைமயங்கி வந்தழி வழுவென்று கொள்க. (௧௧)

ஆண்மை விட்டு அல்லது அவாவுவ பெண்பால் எனல்

௧௨. *ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி
ஆண்மை அறிசொற்(கு) ஆகிடன் இன்றே.

(எ - து) ஆண்மையில் திரிந்து பெண்மை நோக்கி நின்ற பெயர்ப்பொருள் ஆண்மை அறிவிக்கும் ஈற்றெழுத்தினாற் சொல்லுதற்கு ஏலாதாம்; எனவே பெண்பாலானும் பன்மைப்பாலானும் சொல்லுக என்பதாம்.

(எ - டு.) பேடி வந்தாள், பேடியர் வந்தார் என வரும்.

'ஆகிடன் இன்றே' என்றமையால் சிறுபான்மை பேடி வந்தான் என ஆண் பாலும் கொள்க. (௧௨)

விடையையும் வினாவையும் வழுவாமல் போற்றுக எனல்.

௧௩. செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்.

* ஆண்மைவிட்டு அல்லது அவாவுவ பெண்பால்' என நன்னூலாரும் இந்நூற்பாவின் கருத்தைச் சுருங்க விளக்குமாறு காண்க.

(எ - து.) செப்பினையும் வினாவினையும் வழுவாமற் போற்றிச் சொல்லுக.

அவை வருமாறு:—* நுங் நாடு யாது? என்றக்கால் பாண்டி நாடு என்பது. இது வினாவானும் சொல்லானும் வழுவாது வந்தது.

'வழாஅல் ஓம்பல்' எனவே, †செப்பு ஆறு வகைப்படும்; வினாவெதிர் வினாதலும், ஏவலும், மறுத்தலும், உற்றதுரைத்தலும், ‡உறுவது கூறலும், உடம்படுதலும் என.

அவற்றுள்; வினாவெதிர் வினாதலாவது: சாத்தா சோறுண்ணாயோ? என்றால் உண்ணேனோ? என்பது.

ஏவலாவது: சாத்தா சோறுண்ணாயோ? என நீ உண் என்பது.

மறுத்தலாவது: சாத்தா சோறுண்ணாயோ? என உண்ணேன் என்பது.

உற்றது உரைத்தலாவது: சாத்தா சோறு உண்ணாயோ? என வயிறு குத்தும் என்பது.

உடம்படுதலாவது: சாத்தா சோறு உண்ணாயோ? என உண்பேன் என்பது.

அவற்றுள் மறுத்தலும், உடம்படுதலும் செப்பிலக்கணமாகக் கொள்க.

வழுவாமற் செல்லுக எனவே வழுவாதலும் உண்டு. அது வருமாறு:-

'கருவூர்க்கு வழி எதோ?' எனப் 'பருநூல் பன்னிரண்டு தொடி' என்பது. இது வினாவிற்கு இறைபட வாராமையின் வழுவாயிற்று. இத்தொடக்கத்தன சொல்லற்க.

இனி, முன்னை இலேசினால் வினா ஐந்து வகைப்படும்:

"அறியான் வினாதல் அறிவொப்புக் காண்டல்
ஐயம் அறுத்தல் அவனறிவு தான்காண்டல்
மெய்யவற்குக் காட்டலோ டைந்து."

அவற்றுள், அறியான் வினாதலாவது: இச்சூத்திரத்திற்குப் பொருள் என்னையோ? என்பது.

அறிவொப்புக் காண்டலாவது: இச்சூத்திரத்திற்குப் பொருள் யானறிந்தாங்கே அறிந்தான் கொல்லோ! என்று அறிதற்கு வினாதல்.

* 'நுங்நாடு யாது என்றக்கால் தமிழ்நாடு என்பது' என உதாரணம் காட்டுவர் இளம்பூரணர்.

† உறுவது கூறலுக்கு உதாரணம் காட்டப்படவில்லை.

‡ செப்பு, வினா ஆகிய இவற்றைப் பகுத்துக் கூறும் முறைமை இளம்பூரணர் உரையைத் தழுவியதாகும். இளம்பூரணர் கருத்தைச் சேனாவரையர் மறுப்பர். அதனை அவர் உரையானறிக.

ஐயமறுத்தலாவது: இச்சூத்திரப் பொருள் கேட்டுத் துணியாது நின்றான், அறிந்தானை வினவியறிதல்.

அவனறிவு தான் காண்டலாவது: இவன் இச்சூத்திரத்திற்குப் பொருந்துமாறு உரைத்தல் காண்பல், என்று அவன் உணர்வின் பகுதி தான் ஆராய்வான் வினுதல்.

மெய்யவற்குக் காட்டலாவது: இவன் இச்சூத்திரத்தின் பொருளைத் திரியக் கொண்டான் என்பதனைத் தானறிந்தான் ஆனவன் பிழைத்து உரைத்தக்கால், அப் பிழையைத் தெருட்டித் தான் நன்கு உரைப்பான் வினுதல்.

இவை ஐந்தும் வினவுதலேயாம்.

இனி, *வினு வழு வருமாறு: 'கருவூரோடு காவிரிப்பூம் பட்டினத் திடை என் உண்டு' என்பது. காதமே அறியலுறுவது எனின், 'எனைத் துக்காதம் உண்டு' எனற்பாற்று. அவ்விடைப் பொருளை அறியலுறுவ தெனின், 'என்னுள' எனற்பாற்று. அவ்வாறு சொல்லாமையின் வழு வாயிற்று. ஆகையால் இத் தொடக்கத்தன விலுவற்க. (௧௫)

விஞவெதிர் வினுதலும் செப்பின் பாற்படும் எனல்

௧௬. வினவும் செப்பே வினவெதிர் வரினே.

(எ - து.) வினவும் செப்பாகும் அதற்கு இறைபடவரின்.

(எ - டு.) 'சாத்தா கருவூர்க்குச் செல்லாயோ?' என்று விஞவினுற் குச் 'செல்லேனே' என்று வினவவே 'செல்வேன்' என்னும் பொருள் பட்டமையின் வழுவே ஆயினும் செப்பாயிற்று. இது வழுவமைதி. (௧௬)

செப்பு வழுவினும் அமையும் எனல்

௧௭. செப்பே வழீஇயினும் வரைநிலை யின்றே
அப்பொருள் புணர்ந்த கிளவி யான.

(எ - து.) சூத்திரம். செப்புதல் வழீஇயினவிடத்து மாற்றப் படாது, பொருளோடு புணர்ந்த சொல்லாயின்.

(எ - டு.) 'சாத்தா கருவூர்க்குச் செல்லாயோ?' எனக் கால் முட் குத்திற்று, தலை நோகின்றது என்ற வழியும்; 'சாத்தா கருவூர்க்குச் செல்லாயோ?' எனக் கடனுடையார் வளைப்பர், பகைவர் எறிவர் எனச் சொல்லுதலும்; 'சாத்தா கருவூர்க்குச் செல்லாயோ?' என நீ செல் என்பதும் வழுவே ஆயினும், உற்றதுரைத்தலும், உறுவது கூற லும், ஏவலுமாய் வந்து 'செல்லேன்' என்னும் பொருள்பட்டமையின் அமைக.

இதுவும் வழுவமைதி. (௧௭)

* வினு வழுவிற்கு இவர் காட்டும் எடுத்துக்காட்டு பிறர் உரையில் காணுததாகும்.

சினை முதற் கிளவிக்கண் செப்பும் வினாவும் அமையுமாறு

௧௬. செப்பினும் வினாவினும் சினைமுதற் கிளவிக்(கு)
அப்பொரு ளாகும் உறழ்துணைப் பொருளே.

(எ - து.) செப்புமிடத்தும், வினாவு மிடத்தும் சினைக்கிளவிக்கும் முதற்கிளவிக்கும் முதலொடு முதலும், சினையொடு சினையும் பொருஉக.

(எ - டு.) கொற்றன் மயிர் நல்லவோ ?, சாத்தன் மயிர் நல்லவோ? என்று வினாவினவிடத்துக் கொற்றன் மயிரிற் சாத்தன் மயிர் நல்ல; சாத்தன் மயிரிற் கொற்றன் மயிர் நல்ல என்று செப்புக.

இந்நங்கை முலை நல்லவோ?, அந்நங்கை முலை நல்லவோ? என்று வினாவினவிடத்து இந் நங்கை முலையின் அந் நங்கை முலை நல்ல; அந் நங்கை முலையின் இந் நங்கை முலை நல்ல என்று செப்புக.

கண், பல் என்னும் தொடக்கத்தனவும் அவை. இவை சினையொடு பொரீஇயவாறு.

இனிக் 'கொற்றன் நல்லனோ, சாத்தன் நல்லனோ' என்று வினாவினவிடத்துக் கொற்றனிற் சாத்தன் நல்லன், சாத்தனிற் கொற்றன் நல்லன் என்று செப்புக. அரசர் முதலாயினாரையும் இத்தன்மை கொள்க.

இனி, 'அப் பொருளாகும் உறழ்துணைப் பொருள்' என்றமையால், இந்நங்கை கண் நல்லவோ, அந்நங்கை முலை நல்லவோ என்றும், எம்மூர் அரசன் நல்லனோ. உம்மூர்க் கோலிகன் நல்லனோ என்றும் சினையும் முதலும் பிறழப் பொருஉவற்க.

1. *"உப்பக்க நோக்கி யுபகேசி தோள்மணந்தான்
உத்தர மாமதுரைக் கச்சென்ப—இப்பக்கம்
மாதாநு பங்கி மறுவில் புலச்செந்நாப்
போதார் புனற்கூடற் கச்சு." (திருவள்ளுவ மாலை-12)

மாதாநுபங்கி யாவார் திருவள்ளுவ தேவர்.

2. "நறுநீல நெய்தலுங் கொட்டியுந் தீண்டிப்
பிறநாட்டுப் பெண்டிர் முடிநாறும் பாரி
யுறநாட்டுப் பெண்டிர் அடி."

3. "மேற்றா னிருந்த வுயர்சினை கொன்றானின்
தேற்றா வொழுக்கம் படுவனகொல்—மாற்றார்
உறுமுரண் சாய்த்தான் உயர்குடந்தை யாட்டி
சிறுமருங்குல் செற்ற முலை."

---

* இது முதலிய மூன்று எடுத்துக் காட்டுக்களும் பிறர் உரையில் காணாதன வாகும்.

என்னும் பாட்டுக்கள் முதலும் சினையும் பிறழ்ந்தனவாயினும் பிறழ்வல்ல என்று இத்துணையன பொருஉக.

இந் நங்கை கண் நல்லவோ, கயல் நல்லவோ எனவும், புலிபோலப் பாய்ந்தான் எனவும், மழை வண்கை எனவும், துடிபோல் நடு எனவும், வேய் போலுந் தோள் எனவும், பொன் போலும் மேனி, முத்துப் போலும் பல் எனவும் வந்தனவால் எனின், அன்னவை பிறழ்வல்ல. என்னை?

> "வினைபயன் மெய்யுரு என்ற நான்கே
> வகைபெற வந்த உவமத் தோற்றம்"

என்பதனால் உறழ்க.

'அப் பொருளாகும்' என்றதனால் எண்ணுமிடத்து முத்தும், பவளமும், மணியும், பொன்னும் என்று எண்ணுக; முத்தும், கருவிளம்பரலும், மணியும், கானங் கோழியும் பொன்னும் என்று எண்ணற்க. (௧௬)

தகுதியும் வழக்கும் அமையுமாறு

௧௭. தகுதியும் வழக்குந் தழீஇயின ஒழுகும்
பகுதிக் கிளவி வரைநிலை யிலவே.

(எ - து.) *தகுதிபற்றியும், வழக்குப் பற்றியும் பொருந்தி நடக்கும் இலக்கணப் பகுதிச்சொல் கடியப்படா.

தகுதி இரண்டு வகைப்படும் :- மங்கல மரபினாற் கூறுதலும், இடக்கர் அடக்கிக் கூறுதலும் என.

செத்தாரைத் துஞ்சினார் என்றலும், சுடுகாட்டை நன்காடு என்றலும், ஓலையைத் திருமுகம் என்றலும், விளக்குப் பெருகிற்று என்றலும் இத்தொடக்கத்தன மங்கலமரபு.

கண்கழீஇ வருதும், கால்மேல் நீர் பெய்து வருதும், அந்தி தொழுது வருதும், கைக்குறியராய் இருந்தார், பொறையுயிர்த்தார் என்னுந் தொடக்கத்தன இடக்கரடக்கு.

இனி, வழக்காவது நான்கு வகைப்படும். அவை, இலக்கண வழக்கு, இலக்கணத்தோடு பொருந்திய மரூஉ வழக்கு, மரூஉ வழக்கு, குழூவின் வந்த குறுநில வழக்கு எனா.

அவற்றுள் நிலம், நீர், தீ, வளி, ஆகாயம், சோறு, கூழ், பால் பாளிதம், மக்கள், மரம், தெங்கு, கமுகு இத்தொடக்கத்தன இலக்கண வழக்கு.

'இல்முன்' என்பதனை 'முன்றில்' என்றும், 'கண்மீ' என்பதனை 'மீகண்' என்றும், 'யாவர்' என்பதனை 'யார்' என்றும் வருதல் இலக்கணத்தோடு பொருந்திய மரூஉ வழக்கு

---

* இந் நூற்பாவிற்கு இவர் கூறும் உரை இளம்பூரணர் உரையைத்தழுவியதாகும். இவ்வுரையைச் சேனாவரையர் மறுப்பர். அதனை அவர் உரையானறிக.

'அருமருந்தன்னான்' என்பதனை 'அருமந்தான்' என்றும், 'பொது வில்' என்பதனைப் 'பொதியில்' என்றும், 'மலையமானாடு' எனபதனை 'மலாடு' என்றும், 'சோழநாடு' என்பதனை 'சோணாடு' என்றும் சொல்லுதல் மரூஉ வழக்கு.

பொற்கொல்லர் பொன்னைப் 'பறி' என்றலும், வண்ணக்கர் காணத்தை 'நீலம்' என்றலும், யானைப்பாகர் ஆடையைக் 'கூறை' என்றலும் இழிசினர் சோற்றைச் 'சொன்றி' என்றலும் குழூவின் வந்த குறுநில வழக்கு.

இனி, ஒரு சாரார் குழுவின் வந்த குறுநில வழக்கும், இடக்கரடக்கலும், மங்கல மரபினாற் கூறுதலும் என்ற இம் மூன்றையும் தக்கவாறு சொல்லுதலான் தகுதி என்றாக்கி, ஒழிந்தவற்றையெல்லாம் வழக்காறு என்ப.

இனி, அவர் வழக்காறு சொல்லும்படி:- கரிது, வெளிது என்கையும்; கிழக்கு, மேற்கு என்கையும்; சிறிது, பெரிது என்கையும்; கருமை செம்மையாகிய பண்பினலன்றி வெள்ளாளரை வெண்களமர் என்றும், புலையரைக் கருங்களமர் என்றும், சாதிபற்றி வெள்ளாடு என்றும் சொல்லுதல் வழுவன்று; செவ்வழக்கு என்ப; 'தழீஇயின ஒழுகும்' என்றமையால் என்ப. (௧௭)

இனச் சுட்டில்லாப் பண்பு கொள் பெயர் செய்யுட்கே வரும் எனல்

௧௮. இனச்சுட் டில்லாப் பண்புகொள் பெயர்க்
வழக்கா றல்ல செய்யு ளாறே. [கொடை

(எ - து.) இனத்தைச் சுட்டாது பண்பு கொண்டு நின்ற பெயர்ச் சொற்கள் வழக்கு நெறியல்ல, செய்யுள் நெறியாம்.

(எ - டு.) 'செஞ்ஞாயிற்றுக் கவின்,' 'வெண்கோட்டியானை,' 'நெடு வெண் திங்கள்.' 'வெண் முத்தம்' எனச் செய்யுளுள் வரும்.

இனிக் குறுஞ்சூலி, நெடுந்தடி, குறுமூக்கி, குறும்பூழ் என்பனவும் இனஞ்சுட்டாது வழக்கினில் வந்தனவால் எனின், அவை அவற்றின் பேரே; இனஞ்சுட்டாது வந்தன அல்ல என்று மறுக்க. (௧௮)

இயற்கைப் பொருட்கண் கூறப்படும் மரபு

௧௯. இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்.

(எ - து.) உலகத்தியல்பாகி வாராநின்ற பொருள்களைச் சொல்லுமிடத்து இத்தன்மைத்து என்றே சொல்லுக.

(எ - டு.) நிலம் வலிது, நீர் தண்ணிது, தீ வெய்து, வளி உளரும், உயிர் உணரும், என இவ்வாறு சொல்லுவது.

இனி, நிலம் வலிதாயிற்று, நீர் தண்ணிதாயிற்று என்று சொல்லற்க. மற்று 'நிலம் வலிதாயிற்று' என்றும் சொல்லுபவால் எனின், அஃது

இயல்பன்று; சேற்று நிலம் மிதித்து வன்னிலம் மிதிக்கையால் விகாரம் என்பது. (௧௯)

செயற்கைப் பொருட்கண் கூறப்படும் மரபு

௨௦. செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறல்.

(எ - று.) செயற்கையாகிய பொருள்களை எல்லாம் ஆக்கங் கொடுத்துச் சொல்லுக.

(எ - டு.) மயிர் நல்ல வாயின. பைங்கூழ் நல்லவாயின எனச் சொல்லுக. ஆயின என்பது ஆக்கம். (௨௦)

மேலதற் கோர் புறனடை

௨௧. ஆக்கந் தானே காரண முதற்றே.

(எ - று.) அவ்வாக்கந் தன்னைச் சொல்லுமிடத்துக் காரணம் முன் வைத்து ஆக்கத்தைப் பின்வைத்துச் சொல்லுக.

(எ - டு.) 'கடுவுங் கைபிழி எண்ணெயும் பெற்றமையான் மயிர் நல்லவாயின' எனவும், 'எருப்பெய்து இளங்களைகட்டு நீர்கால் யாத்தமையால் பைங்கூழ் நல்லனவாயின' எனவும் சொல்லுக. கடுவுங் கைபிழி எண்ணெயும் காரணம்; மயிர் நல்ல ஆயினது என்பது ஆக்கம். (௨௧)

எய்தியது விலக்கல்

௨௨. ஆக்கக் கிளவி காரணம் இன்றியும்
போக்கின் றென்ப வழக்கி னுள்ளே.

(எ - று.) ஆக்கமொடு புணர்ந்த பொருளைக் காரணம் இன்றியும் சொல்லுதல் வழக்கினுள் குற்றம் இல்லை.

(எ - டு.) மயிர் நல்ல வாயின, பைங்கூழ் நல்லவாயின எனக் காரணம் இன்றியே வந்தன.

உம்மையால் காரணங் கொடுத்துச் சொல்லுதல் வலியுடைத்து.

*இனிப், போக்கின்று என்ப வழக்கினுள்ளே' என்ற விதப்பால் செய்யுளகத்தாயிற் காரணமும் ஆக்கமும் கொடுத்துச் சொல்லுக என்பதாம்.

வரலாறு:—

வெண்பா

"வருமழைய வாய்கொள்ளும் வாடாச்சீர் வண்கைக்
கருமுருகன் சூடிய கண்ணி—திருநுதலாய்
இல்லறன் குரற்கூந்தற் பெய்தமையாற் பண்டைத்தஞ்
சாயல ஆயின தோள்."

* இவ்வுரையும் எடுத்துக்காட்டும் சேனாவரையர் உரையைத் தழுவியதாகும்.

இதனுள் 'கருமுருகன் சூடிய கண்ணி பெய்தமையான்' என்பது காரணம். 'பண்டைத்தஞ் சாயலவாயின தோள்' என்பது ஆக்கம். ஆதலால் இது காரணமும் ஆக்கமும் கொடுத்து வந்தது. அவை இரண்டும் உடன் வரவும், ஒன்று வரவும் பெறும். (உஉ)

உயர்திணைப்பால் ஐயத்தின்கண் சொல் நிகழுமாறு

உங. பால்மயக் குற்ற ஐயக் கிளவி
தானறி பொருள்வயிற் பன்மை கூறல்

*(எ - து.) ஒருவன் திணையறிந்து பால் மயக்கு உற்றவழி ஐயப்பொருளைத் தான் உயர்திணை என்பதறிந்தான் அதனை அத்திணைப் பன்மைமேல் வைத்துச் சொல்லுக.

(எ - டு.) சேய்த்தாய்த் தோன்றுவதோர் மக்கட் பிழம்பு கண்டு மக்கள் என்பது உணர்ந்து, ஆண்பால் பெண்பால் உணராதவழிப் பெண்டாட்டி கொல்லோ, ஆண்மகன் கொல்லோ தோன்றுகின்றவர் எனப் பன்மையாற் சொல்லுக; அஃது இருபாற்கும் உரித்து ஆதலான்.

'திணையின்' என்னாது 'தானறி பொருள்வயின்' எனப் பொதுப்படக் கூறிய அதனால், ஒருவன் கொல்லோ, பலர் கொல்லோ கறவை யுய்த்த கள்வர்; ஒருத்தி கொல்லோ பலர் கொல்லோ குருக்கத்தி நீழல் வண்டல் அயர்ந்தார் எனத் திணையோடு ஆண்மை பெண்மை துணிந்த பன்மையொருமைப் பால் ஐயமும் கொள்க.

†இதற்கு வேறும் ஓர் உதாரணம் காட்டுதும்: ஒரு மக்கட்டலை ஓடு காட்டுள் கிடந்தது கண்டு, பெண்தலை, ஆண்தலை என்று உணராதான், பெண்டாட்டி தலை கொல்லோ, ஆண்மகன் தலை கொல்லோ இஃதோ கிடந்த மக்கட்டலை என்க.

மக்கள் என்பது இருபாற்கும் பொதுவாகலான் ஐயப்படுமிடத்து ஒருபாற்கு உரிய சொல்லாற் சொல்லாது ஒழிக. பன்மையாற் சொல்லுக.

‡"ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்
ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்
வழக்கி னாகிய வுயர்சொற் கிளவி
இலக்கண மருங்கிற் சொல்லா றல்ல"

என வழு அமைக்கும் ஆகலால் என்ப. மயக்குற்றதனைக் கிளவிமேல் வையாது ஒருவன் மயக்குற்ற விடத்து என்க. (உங)

* இவ்வுரை நச்சினார்க்கினியர் உரையைத் தழுவியதாகும்.

† இவ்வெடுத்துக் காட்டு பிறர் உரையிற் காணாதது.

‡ சில பிரதிகளில் இப்பகுதியில்லை.

திணை ஐயத்தின்கண்ணும், அஃறிணைப்பால் ஐயத்தின் கண்ணும் சொல் நிகழுமாறு

௨௪. *உருவென மொழியினும் அஃறிணைப் பிரிப்
இருவீற்றும் உரித்தே சுட்டுங் காலை. [பினும்

(எ - து.) திணை ஐயந் தோன்றியவழி உருவென்று சொல்லுதலும், அஃறிணையை ஒன்று பல என்று பிரித்துச் சொல்லுதலும் இவையும் மேலதே போலப் பொதுவினானே சொல்லுதலாம்.

'இருவீற்றும் உரித்தே சுட்டுங்காலை' என்பது உயர்திணைக்கும், அஃறிணைக்கும், ஒருமைக்கும், பன்மைக்கும் உரித்தான பொதுச் சொல்லாற் சொல்லுக, சுட்டிச் சொல்லுமிடத்து.

(எ - டு.) †மும் முழங் கையரைப் போல ஒக்கமும், அதற்குத்தக்க பிழம்பும் மம்மர்மாலைப் பொழுதுகண்டு ஐயுற்றான், குற்றி கொல்லோ மகன் கொல்லோ தோன்றுகின்ற உரு' என்று இருதிணைக்கும் பொதுவாகச் சொல்லுக.

'உருவினும்' என்றது 'உருவென மொழியினும்' என்றதனான், உருவின் பொருளவாகிய வடிவு எனினும், பிண்டம் எனினும், பிழம்பு எனினும் ஒக்கும்.

தோன்றுவான், தோன்றுவாள், தோன்றுவது என்று சொல்லற்க.

இனி, அஃறிணைப்பால் ஐயத்துக்கண் சொல் நிகழுமாறு :—ஒருவன் செய் புக்குத் தின்ற பெற்றச்சுவடு பலவாய்க் கிடந்தன கண்டான்; ஒன்று பல சுவடுபடத் திரிந்து தின்னினும், பல ஒருங்கு புக்குத் தின்னினும் சுவடு பலவாகும்; ஆதலான் ஐயுற்று நின்றவழி, ஒன்று கொல்லோ பல கொல்லோ செய்புக்க பெற்றம் என்க.

பெற்றம் என்பது இருபாற்கும் உரித்து ஆகலின். புக்கது, புக்கன என்னற்க.

'உருவென மொழியினும்' என்பதற்குத் திணை ஐயம் என்பது ஒப்பினாற் கொள்க. (௨௪)

* 'உருபென' என்பது சேனாவரையர், தெய்வச்சிலையார் ஆகியோரது பாடம். எனினும் 'உருவென' என்ற பாடமே சிறப்புடைத்தாம். இதனை இக் கழக வழி வெளிவந்த தெய்வச்சிலையார் விளக்கவுரையிற் காண்க.

† ஒரு முழம் $1\frac{1}{2}$ அடி ஆகும்; மும்முழம் $1\frac{1}{2} \times 3 = 4\frac{1}{2}$ அடி ஆகும் எனவே இத்தொடர் மக்களைக் குறிப்பதாகும். குற்றிகொல்லோ மகன் கொல்லோ தோன்றுகின்ற உரு' என்ற எடுத்துக்காட்டுப் பழமையானது. எனினும் இங்ஙனம் ஐயந்தோன்றுகின்ற சூழ்நிலையை இவ்வுரையாசிரியர் காட்டியிருப்பது பாராட்டுதற் குரியதாகும்.

ஐயுற்ற பொருள் துணிந்தவழிச் சொல் நிகழுமாறு

௨௫. தன்மை சுட்டலும் உரித்தென மொழிப
அன்மைக் கிளவி வேறிடத் தான.

(எ - து.) உண்மைத் தன்மையான பொருளைச் சுட்டல் உரித்தாம் என்பர், அன்மைச் சொல்லைத் துணிந்த பொருள் மேல் வைத்துச் சொல்லின்.

(எ - டு) வேற்றிடந் துணிந்த பொருள் ஆண்மகன் கொல்லோ, பெண்டாட்டி கொல்லோ என்று ஐயுற்றால், ஆண்மகன் என்று துணிந்து சொல்லுமிடத்துப் பெண்டாட்டியல்லள் ஆண்மகன் என்க.

இனிப் பெண்டாட்டி என்று துணிந்தவழி ஆண்மகனல்லன் பெண்டாட்டி என்க. இது உயர்திணைப்பால் ஐயம்.

குற்றி மகன் எனத் திணை ஐயந்தோன்றியவழி மகனன்று குற்றி என்றும், குற்றியல்லன் மகன் என்றும் சொல்லுக.

அஃறிணைப்பால் ஐயத்துக்கண் ஒன்றல்ல பல என்றும், பல அன்று ஒன்று என்றும் சொல்லுக.

ஐயப்பட்டுத் துணிந்துழி எல்லாம் துணி பொருளிடத்து அன்மைச் சொல்லை வைத்துச் சொல்லுக.

இவ்வாறு சொல்லுங்கால் ஐந்தாம் உருபு புலப்படாது நீக்கத்தின் கண்ணே நிற்கும் என்று கொள்க.

யாதோ நின்றவாறு எனின், பெண்டாட்டி யல்லள் என்புழிப் பெண்டாட்டியின் அல்லள் என்றும், குற்றியல்லன் என்புழிக் குற்றியின் அல்லன் என்றும், ஒன்றின் அல்ல என்றும் இவ்வாறு மற்றையனவும் அறிக.

இனி, ஒருசார் அன்மைச் சொல்லை ஐயப் பொருளின்கண் வைத்துச் சொல்லுப.*

சொல்லுமாறு:—பெண்டாட்டி அல்லள் ஆண்மகன் என்றும், ஆண்மகன் அல்லன் பெண்டாட்டி என்றும், ஒன்றன்று பல என்றும், பல அல்ல ஒன்று என்றும் சொல்லுப. அவர் சொன்முறை அறியார்; ஆதலான் அஃது உரையன்மை அறிக.

இது அம்மூன்றிடத்தும் துணிவு தோன்றி வழிச் சொல் நிகழ்வுமாறு கூறிற்று. (௨௫)

வண்ணச் சினைச் சொல் பற்றிய மரபு

௨௬. அடைசினை முதலென முறைமூன்றும் மயங்காமை
நடைபெற் றியலும் வண்ணச் சினைச்சொல்.

* தெய்வச்சிலையார்.

*(எ - து.) வண்ணச் சினைச்சொல்லாவது அடையும், சினையும், முதலும் மூன்றும் மயங்காமை அடைவே வழக்குப் பெற்று நடக்கும்.

அடை - ஒரு பொருளது குணம். சினை - உறுப்பு. முதல்- அவ்விரண்டையும் உடைய பொருள்.

(எ - டு) பெருந்தலைச் சாத்தன், பெருந்தோள் பூண்ணை, நெட்டிலைத் தெங்கு, செங்கண்வரால், செங்கால் நாரை என வரும்.

அடை சினை முதல் என மூன்றும் என்றது 'முறை' என்றதனுன் அம் முறையின்றி நடத்தலும் உடைய, அவை வழக்கினுள் குணம் இரண்டடுக்கி முதலொடு வருதலும், செய்யுளுள் குணம் இரண்டடுக்கிச் சினையொடு வருதலும் என. அவை வருமாறு :--

இளம் பெருங் கூற்றன், சிறுகருஞ் சாத்தன்—இது வழக்கு.
சிறுபைந்தூவிச் செங்கால் பேடை—இது செய்யுள்.

"முதலொடு குணம்இரண் டடுக்குதல் வழக்கியல்
சினையோ டடுக்குதல் செய்யு ளாறே."

இது புறச் சூத்திரம்.

அதனுன் அவ்விலேசு கொள்க. (உ௬)

பால்திணை வழுவமைதி

உஎ. ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்
ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்
வழக்கின் ஆகிய உயர்சொற் கிளவி
இலக்கண மருங்கிற் சொல்லா றல்ல.

(எ - து.) உயர்திணை ஒருவரைப் பன்மையாற் சொல்லுதலும், அஃறிணை ஒன்றனைப் பன்மையாற் சொல்லுதலும் என இவை வழக்கினகத்து உயர்த்துச் சொல்லப்படும்; இலக்கண முறைமையாற் சொல்லுமிடத்து நெறியல்ல.

(எ - டு.) ஒருவனையும் 'தாம் வந்தார்' என்ப. ஒருத்தியையும் 'தாம் வந்தார்' என்ப. ஒன்றனையும் 'தாம் வந்தார்' என்ப. இது வழுவே ஆயினும் அமைக.

அன்றியும் யாம் வந்தேம், நீயிர் வந்தீர், இவர் வந்தார் என ஒருவனையும் ஒன்றனையும் உயர்த்திச் சொல்லியவாறு 'தாம் வந்தார் தொண்டனர்' என்பது உயர் சொல் குறிப்பு நிலையாயின், இழிபு விளக்கிற்று.

* இவ்வுரை இளம்பூரணர் உரையைத் தழுவியதாகும்.

'இலக்கண மருங்கிற் சொல்லா றல்ல' என்றதனால்* உயர்பிலும் இழிபிலும் உவப்பிலும் சிறப்பிலும் உயர்திணையை அஃறிணைபோலச் சொல்லுதலும், அஃறிணையை உயர்திணைபோலச் சொல்லுதலும் வழக்கினுள் வரும்.

குரிசில் வந்தது என்பது உவப்பு.

பொருநன் வந்தது என்பது இழிபு.

ஒருத்தியை என்பாளை வந்தது என்றும், ஓர் எருத்தினை ஏற்று வந்தார் என்றும், ஒரு பசுவினை என் அன்னை வந்தாள் என்றும் சொல்லுதல் உவப்பு.

சாத்தனுர் வந்தார், கபிலனுர் வந்தார் எனச் சிறப்பு.

இவற்றிற் கிளைபாக் குலக்கல் காண்க. (உஎ)

இடம் உணர்த்தும் சொற்கள்

உஅ. †செலவினும் வரவினும் தரவினும் கொடையினும்
நிலைபெறத் தோன்றும் அந்நாற் சொல்லும்
தன்மை முன்னிலை படர்க்கை யென்னும்
அம்மூ விடத்தும் உரிய என்ப.

(இ - ள்.) செல்லும், வரும், தரும், கொடுக்கும் என நிலை பெறுதல் உடைய நான்கு சொல்லும் தன்மை முன்னிலை படர்க்கை என்னும் அம் மூன்றிடத்திற்கும் உரிய.

(எ - டு.) முன்னர்க் காட்டுதும். (உஅ)

தன்மை முன்னிலைக் குரிய சொற்கள்

உகூ. அவற்றுள்,
தருசொல் வருசொல் ஆயிரு கிளவியும்
தன்மை முன்னிலை ஆயி ரிடத்த.

‡(எ - டு.) எனக்குத் தருங்காணம், நினக்குத் தருங்காணம், எனக்கு வருங் காணம், நினக்கு வருங்காணம் என வரும். (உகூ)

---

* நன்னூலாரும்,
உவப்பினும் உயர்வினும் சிறப்பினும் செறலினும்
இழிப்பினும் பால்திணை இழுக்கினும் இயல்பே
எனக் கூறுதல் காண்க.

† இந் நூற்பா முதலாக உள்ள மூன்று நூற்பாக்களையும் தெய்வச் சிலையார் ஒரு நூற்பாவாகக் கொள்வர்.

‡ இந் நூற்பாவிற்கும், அடுத்த நூற்பாவிற்கும் தரும் எடுத்துக் காட்டுக்கள் இளம்பூரணர் உரையைத் தழுவி எழுதிக் காட்டுவனவாகும்.

படர்க்கைக்குரிய சொற்கள்

௩௦. ஏனை யிரண்டும் ஏனை யிடத்த.

(இ - ள்.) செல்லும், கொடுக்கும் என்பன படர்க்கை யிடத்தன.

(எ - டு.) அவர்க்குச் செல்லும் காணம், அவர்க்குக் கொடுக்கும் காணம் என வரும்.

'அந்நாற் சொல்லும், தன்மை முன்னிலை படர்க்கை என்னும், அம்மூவிடத்தும் உரிய என்ப' என்றாருள், அவை மயங்கி வரவும் பெறும்.

"[illegible] கொட்டுவோனை [illegible] வாராது" (அகம் - 86)

"புனல்தரு பசுங்காய் தின்றதன் தப்பற்கு" (குறு - 292)

எனவும்,

*"[illegible]
[illegible]
[illegible]
[illegible]."

எனவும் மயங்குமாறு அறிக. [illegible] என முன்னிலைக்கு ஆக்க. (௩௦)

யாது, எவன், என்னும் சொற்கள் அறியாப் பொருளை வினவுமிடத்து வரும் எனல்

**௩௧. யாதெவன் என்னும் ஆயிரு கிளவியும்
அறியாப் பொருள்வயிற் செறியத் தோன்றும்.**

(இ - ள்.) யாது, எவன் என்னும் இரண்டு சொல்லும் தன்னால் அறியப்படாத பொருட்கண் வினாவாய்த் தோன்றும்.

(எ - டு.) நுங்கூடு யாது? இப்பண்டியுள்ளது எவன்? மடியுள்ளது யாது? மடியுள்ளது எவன்? கையுள்ளது யாது? கையுள்ளது எவன்? என வரும்.

இச் சொற்குப் பொருள் யாது? இச் சொற்குப் பொருள் எவன்? எனவும் வரும். 'எவன்' என்பது இக்காலத்து என் என்றும், என்னை என்றும் திரிந்து நடக்கும்.

'செறிய' என்றதனான் யாவன், யாவள், யாவர், யாது, யாவை எனவும்; யாங்கு, யாண்டு, எப்பொருள் என இவையும் இன்னோரன்ன பிறவும் அறியப்படாதன அவ்விடத்துத் தோன்றும் என்பது கொள்க. (௩௧)

---

* யாப்பருங்கல விருத்தி சூ - 57 உரை மேற்கோள். இப்பாடலை [illegible] கட்டுரையுள்ளனர்.

அவற்றுள் யாது என்னும் சொல் அறிந்த பொருள்வயின் ஐயந் தீர்த்தற்கும் வரும் எனல்

௩௨. அவற்றுள்,
யாதென வரூஉம் வினாவின் கிளவி
அறிந்த பொருள்வயின் ஐயந் தீர் தற்குத்
தெரிந்த கிளவி யாதலும் உரித்தே.

(இ - ள்.) யாது என்னும் வினாச் சொல் அறியாப் பொருளை வினாவுதலேயன்றி அறிந்த பொருட்கண் ஐயந்தீர்த்தற்கு ஆராய்ந்த சொல்லாதலும் உரித்து.

(எ - டு.) நம் எருது ஐந்தனுள் கெட்ட எருது யாது? என வரும்.

'தெரிந்த கிளவியாதலும் உரித்து' என்றதனால், நமருள் யாவன் போயினான் என ஐந்திணையும் ஒட்டுக,

'கடிசொல் லில்லை' (எச்ச - 56) என்பதனால், நமருள் எவன் போயினான், அவற்றுள் எவ்வெருது கெட்டது என்பனவும் கொள்க.
(௩௨)

இனைத்தென் றறிபொருள் உம்மையொடுவரும் எனல்

௩௩. இனைத்தென அறிந்த சினைமுதற் கிளவிக்கு
வினைப்படு தொகுதியின் உம்மை வேண்டும்.

(இ - ள்) இத்தனை யென்று வரையறுக்கப்பட்டு நின்ற சினைக்கிளவிக்கும், முதற் கிளவிக்கும் வினைப்படுத்துச் சொல்லுமிடத்து இறுதி உம்மை கொடுத்துச் சொல்லுக.

(எ - டு.) நம்பி கண்ணிரண்டும் கொந்தன, நங்கை முலையிரண்டும் வீங்கின; சினைக்கிளவி உம்மை பெற்றவாறு.

தமிழ் நாட்டு மூவேந்தரும் வந்தார், முப்பத்து மூவரும் வந்தார், நமர் நால்வரும் வந்தார்; முதற் கிளவி உம்மை பெற்றவாறு.

அன்றியும்,

"பன்னிரு கையும் பாற்பட இயற்றி" (திருமுருகு)

எனவும்,

"மூரசு முழங்கு தானை மூவருங் கூடி" (பொருந - 54)

எனவும், ௨ டும்.

*"எருமை நாற்கால் நீர்க்கீழ் வரும்"

எனவும்,

* இவ்வெடுத்துக் காட்டுக்கள் பிறர் உரையிற் காணாதவை.

"இருதோள் தோழர் பற்ற"

எனவும்,

*கண்கனியாற் சென்றமைப்பக் கைகாஞ்சின் மேலசைஇ
ஒண்குழையொன் றொல்கி யெருத்தலைப்ப—வொண்சுடர்ப்பூ
ணோர்மலர்த் தாமரைவா னீர்மை யுடைத்தரோ
தேர்மணிப்பூண் வெள்ளை நிலை.

எனவும், இவை உம்மை இல்லையால் எனின், செய்யுளாதலின் தொக்கது என்க. (௧௩)

இல்லாப் பொருளும் உம்மொடு வரும் எனல்

௧௪. மன்னாப் பொருளும் அன்ன இயற்றே.

(இ - ள்.) மன்னாப் பொருள் - இல்லாப் பொருள்.

(எ - டு.) பவழக் கோட்டு நீலயானை சாதவாகனன் கோயிலுள்ளும் இல்லை. முயற்கோடும், யாமை மயிர்க் கம்பளமும், †அம்பிப் பித்தும், முன்னூசிக் குடரும் சக்கரவர்த்தி கோயிலுள்ளும் இல்லை எனவும்; என் அங்கையுளும் மயிரில்லை, இக் கழுதைக்கும் கோடில்லை எனவும் உம்மை கொடுத்துச் சொல்லுக. உம்மை கொடாது சொல்லிற் பிறண்டு உண்டு எனச் செல்லும்.

பிறண்டு - வேறிடம். உம்மை - எச்ச உம்மை. (௧௪)

தன்கண் இல்லாத பொருளை இல்லை என்னும் பொழுது சொல்லும் முறைமை

௧௫. எப்பொரு ளாயினும் அல்ல தில்லெனின்
அப்பொருள் அல்லாப் பிறிதுபொருள் கூறல்.

†(இ - ள்.) எவ்வகைப்பட்ட பொருளாயினும், தன்னுழை உள்ளதல்லதனை இல்லை என்று சொல்லின், அவன் கூறிய பொருளல்லாப் பிறிது பொருள் கூறி இல்லை என்க.

தன்னுழை யுள்ளதன் உண்மை கூறி இல்லை என்பது இதன் கருத்து.

(எ - டு.) பயறுளவோ வணிகீர் என்றக்கால் உழுந்தல்லது இல்லை, கொள்ளல்லது இல்லை என்றும்; நூறு விற்கும் பட்டாடை உளவோ என்றார்க்கு, ஐம்பது விற்கும் கோசிகம் அல்லது இல்லை என்றும் சொல்லுக.

இது அஃறிணை ஒருமைப் பாற்கு உரித்தேனும் 'எப்பொருளாயினும்' என்றமையால், இருதிணை ஐம்பாற் கண்ணும் அல்லது என்னும் சொற் கொடுத்துச் சொல்லுக.

---

* இவ் வெடுத்துக்காட்டுகள் பிறர் உரையிற் காணப்படுவன.

† இவ்வுரை நச்சினார்க்கினியர் உரையைத் தழுவியதாகும்.

வரலாறு: அவன் அல்லது இல்லை; அவளல்லது, அவரல்லது, அது வல்லது, அவையல்லது. 'இல்லை' என்று சொல்லுக.

> "காணும் கட்டும் இல்லோர்த் தேரின்
> யானல்ல தில்லை யிவ்வுலகத் தானே"

எனச் சான்றோர் செய்யுளுட் பயின்று வருமாறும் காண்க.

*'பயறுளவோ' என்றார்க்கு அதற்கினமாகிய உழுந்தான் முடித்த லன்றி, அதற்கினமாகப் பாம்புண்ணிக் கருங்கல்லான் முடியற்க. (௩௫)

மேலதற் கோர் புறனடை

௩௬. அப்பொருள் கூறின் சுட்டிக் கூறல்.

(இ - ள்) வேறொரு பொருள் கூறாது வினாயின பொருளையே கூறில் தன் முன்னர்க் கிடந்த பொருளைச் சுட்டிச் சொல்லுக.

(எ - டு.) இப்பயறல்லது இல்லை என்க.

வினாயின பயறு இன்மையும், நிலைமையும் உணர்த்து, கோடற்கும், தவிர்தற்குமாக இவ்வாறே கூறுக.

'தன்னின முடித்தல்' என்பதனுள், பெரும் பயறல்லது இல்லை; பசும் பயறல்லது இல்லை எனக் கிளந்து கூறுதலும் கொள்க. (௩௬)

பொருளொடு புணராச் சுட்டுப் பெயர் அமையும் வகை

௩௭. †பொருளொடு புணராச் சுட்டுப்பெய ராயினும்
பொருள்வேறு படாஅ தொன்றா கும்மே.

(எ - டு.) 'இஃதொருத்தன்' என்ற வழி, இஃது என்று அஃறிணைப் பொருளை உணர்த்திய சுட்டு 'இவனொருத்தன்' என உயர்திணைப் பொருளை உணர்த்தி நின்றவாறு காண்க.

இன்னும் ஓர் கருத்து: பெயர்ப் பொருளொடு புணரா ஆயினும் சுட்டுப் பொருள் வேறுபடாது ஒன்றாகும்: இதன் கருத்து சில பொருட் பெயர் சில சுட்டுப் பொருளை உணர்த்தாவாயினும், தாஞ் சுட்டுவதோர் பொருளிடத்து வேறுபட நில்லாமல் பொருளையே உணர்த்தி நிற்கும்.

(எ - டு.) "கொய்தளிர்த் தண்டலைக் கூத்தப் பெருஞ்சேந்தன்
வைகலும் ஏறும் வயக்களிறே—கைதொழுவல்
காலேக வண்ணனைக் கண்ணாரக் காணவெஞ்
சாலேகம் சார நட."

---

* இம் மறுப்பு சேனாவரையரை மறுப்பதாகும்.

† இச் சூற்பாவிற்கு இவர் கூறும் உரை நச்சினார்க்கினியர் உரையைத் தழுவியதாகும். இச் சூற்பாவிற்குக் கூறப்படும் ஈருரைகளில், முதல் உரையை எடுத்துக் காட்டின் மூலமாகவே விளக்குகிறார். இரண்டாம் உரையை எடுத்துக் காட்டுடன் விளக்குகின்றார்.

இதனுள் உன்னை எனவும், அவனை எனவும் சுட்டிக் கூறுதல் காண்க. (௧௭)

இயற் பெயரும், சுட்டுப் பெயரும் ஒருங்கு வரும் வழி அவை அமையும் வகை

௧௮. *இயற்பெயர்க் கிளவியும் சுட்டுப்பெயர்க் கிளவியும்
வினைக்கொருங் கியலும் காலந் தோன்றின்
சுட்டுப்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்
இயற்பெயர் வழிய என்மனார் புலவர்.

(இ - ள்.) இயற் பெயரும் சுட்டுப் பெயருமாகிய இரண்டும் ஒன்றனை ஒன்று கொள்ளாது, இரண்டும் பிறிதுவினை கோடற்கு ஒருங்கு நிகழும் காலம் தோன்றுமாயிற் சுட்டுப்பெயரை முற்படச் சொல்லார்; இயற் பெயர்க்குப் பின்னாகச் சொல்லுவர்

(எ - டு.) சாத்தன் வந்தான் அவற்குச் சோறு கொடுக்க, சாந்து கொடுக்க; சாத்தி வந்தாள் அவட்குச் சாந்து கொடுக்க. பூக்கொடுக்க.

'ஒருங்கியலும்' என்றதனால், ஒரு பொருளை உணர்த்துதல் கொள்க.

'இயற் பெயர் வழிய' என்றதனால். விரவுப் பெயர் அன்றி உயர் திணைப் பெயர்க்கும், அஃறிணைப் பெயர்க்கும் சுட்டுப் பெயர் பின் வருதல் கொள்க.

(எ - டு.) நம்பி வந்தான் அவற்குச் சோறு கொடுக்க; நங்கை வந்தாள் அவட்குப் பூக்கொடுக்க; எருது வந்தது அதற்குப் புல்லிடுக; நாய் வந்தது அதற்குச் சோறிடுக; குதிரை வந்தது அதற்கு முதிரை கொடுக்க எனவரும்.

'வினைக் கொருங்கியலும்' என்றதனால், பெயர்க்குச் சுட்டாயினும், இயற் பெயராயினும் ஒன்று முற் கூறினும் அமையும்.

சாத்தன் அவன்; அவன் சாத்தன் எனவரும். (௧௮)

அவ்விரு பெயரும் செய்யுளில் வரும் முறைமை

௧௯. †முற்படக் கிளத்தல் செய்யுளுள் உரித்தே.

(எ - டு.) "அவனணங்கு நோய்செய்தான் ஆயிழாய் வேலன்
வெறிமனைவந் தாடும் விழவின் -- நெறிமயங்கிச்
சேர்ந்தான் பேர் வாழ்த்தி -- முகனமர்ந்
தன்னை யலர்கடப்பந் தாரணியில் என்னைகொல்
பின்னை யதன்கண் விளைவு."

இதனுள் 'அவன்' என்பது சுட்டுப் பெயர்; 'சேந்தன்' என்பது இயற் பெயர். (௧௯)

---

* இந் நூற்பாவிற்கு இவர் கூறும் உரை சேனாவரையர், நச்சினார்க் கினியர் ஆகியோர் உரையோடொத்த் தழுவியதாகும்.

† இந்நூற்பாவிற்கு உரையின்றி, எடுத்துக்காட்டு மட்டுமே உள்ளது.

இயற் பெயரும் சுட்டு முதலாகிய காரணக்கிளவியும் ஒருங்கு வரும் வழி அவை அமையும் வகை

௪௦. சுட்டுமுத லாகிய காரணக் கிளவியும்
சுட்டுப்பெயர் இயற்கையிற் செறியத் தோன்றும்.

(எ - டு.) சுட்டுப் பெயர் இயற் பெயரின் பின் வைக்கப்பட்டது போலச் சுட்டு முதலாகிய காரணச் சொல்லையும், இயற்பெயரின் பின் வைத்துச் சொல்லுக.

(எ - டு.) சாத்தன் கையெழுதுமாறு வல்லன் அதனால் தம் ஆசிரியன் உவக்கும்; சாத்தி சாந்தரைக்குமாறு வல்லள் அதனால் கொண்டான் உவக்கும் என வரும்.

சுட்டு முதலாகிய காரணக்கிளவி; இது வினைக் கொருங்கியலும் வழி வரும் என்று கொள்ளுக. (௪௦)

இயற் பெயரும் சிறப்புப் பெயரும் ஒருங்கு வரும் வழி அவை அமையும் வகை

௪௧. சிறப்பி னாகிய பெயர்நிலைக் கிளவிக்கும்
இயற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்.

(எ - து.) சிறப்பினாகிய பெயர்க்கு முன் இயற்பெயரை வைத்துச் சொல்லார்.

உம்மையால் தவம், கல்வி, குடிப்பிறப்பு முதலியனவும் கொள்க.

(எ - டு.) ஏனாதி நல்லுதடன், வரிசியான் சாத்தன், படைத் தலைவன் தீரன்; சேரமான் சேரலாதன், சோழன் நலங்கிள்ளி, பாண்டியன் மாறன்; முனிவன் அகத்தியன், தெய்வப்புலவன் திருவள்ளுவன்; பார்ப்பான் கண்ணன், வேளாளன் கொற்றன், வண்ணான் சாத்தன், கோலிகன் சாத்தன், தச்சன் கொற்றன், கொல்லன் செய்யான், நாவிதன் மாறன் என வரும். (௪௧)

ஒரு பொருள் குறித்த வேறு சொற்களுக்கு வினை முடிபு கொடுக்குமாறு

௪௨. ஒருபொருள் குறித்த வேறுபெயர்க் கிளவி
தொழில்வேறு கிளப்பின் ஒன்றிடன் இலவே.

(எ - து.) ஒரு பொருள் கருதி வந்த பல சொற்களுக்கு ஒரு தொழிலே முடிபாகக் கூறுது, பெயர்தோறும் வேறு தொழில் கொடுப்பின் ஒரு பொருளவாய் ஒன்றுதல் இலவாம்.

(எ - டு.) ஆசிரியன் பேருர்கிழான் செயிற்றியன் இளங்கண்ணன் சாத்தன் வந்தான் என்று சொல்லுக.

இனி, ஆசிரியன் வந்தான், பெருமிழான் இருந்தான், செயிற்றியன் கிடந்தான், கண்ணன் போனான், சாத்தன் நின்றான் என்னற்க.

அன்றியும் ஆசிரியன் வந்தான், பெருமிழான் வந்தான் எனப் பெயர் தோறும் ஒரு வினை கொடுப்பினும் வேறு வேறு பொருளாம்.

இனி, இத்தன்மையன கொள்க.

"எந்தை வருக எம்மான் வருக
மைந்தன் வருக மணாளன் வருக
பைந்தொடிப் பணைத்தோட் கிழவன் வருக"

எனக் காதல் பற்றிப் பலகால் ஒரு தொழில் வந்தன கொள்க.

அன்றியும், இனித் 'தொழில் வேறுகிளப்பின் ஒன்றிடன் இலவே' என்பதனால், வேறு தொழில் கொடாது ஒரு தொழிலே கொடுப்பின் ஒன்றிடனும் எனப் பெயர் தோறும் ஒரு வினை கொடுத்துத் துதியிடத்துச் சொல்லுக.

*(எ - டு.) "தேமலர் அங்கட் டிருவே புகுதுக
மாமலர்க் கண்ணி மணாளன் புகுதுக
காமன் புகுதக காளை புகுதுக
காம வெழில்விஞ்சை நம்பி புகுதுக"

என்பன கொள்க. (௪௨)

தன்மைச் சொல்லும், அஃறிணைச் சொல்லும் எண்ணுமிடத்து
அவை விரவிவருதலை நீக்கார் எனல்

௪௩. †தன்மைச் சொல்லே அஃறிணைக் கிளவியென்
றெண்ணுவழி மருங்கின் விரவுதல் வரையார்.

(இ - து.) தன்மைச் சொல்லும் அஃறிணைச் சொல்லும் அவை எண்ணும் இடத்து விராய் வருதலை நீக்கார்.

(எ - டு.) 'யானும்' என் எஃகமும் சாறும்; 'அவனுடைய யானைக்கும் சேனைக்கும் போர்' என வரும்.

இது இருதிணையும் விராய் எண்ணி அஃறிணை உயர்திணையோடு முடிந்தது.

'எண்ணுவழி மருங்கு' என்றதனால், நீயும் நின் படைக்கலமும் சாறிர், அவனும் தன்களிறும் சாரும் என முன்னிலையினும், படர்க்கையினும் கொள்க. (௪௩)

* இவ்வெடுத்துக்காட்டு பிறர் உரையிற் காணாதது.

† இச்சூற்பாவிற்கு இவர் கூறும் உரை இளம்பூரணர் உரையைத் தழுவியதாகும்.

ஒருவன், ஒருத்திப்பெயர் மேல் எண்ணில எனல்

௪௪. ஒருமை எண்ணின் பொதுப்பிரி பாற்சொல்
ஒருமைக் கல்லது எண்ணுமுறை நில்லாது.

(எ - து) ஒருமை எண்ணினை உணர்த்தும் ஒருவர் என்னும் பொதுமையினின்றும் பிரிந்து பால் உணர்த்தும் சொல்லாகிய ஒருவன் ஒருத்தி என்னும் சொல் ஒருமைக் கல்லது இருமை முதலிய எண்களின் ஓடாது.

பொதுவாவது—ஒருவர்; அது இருபாற்கும் பொது. அது பிரியாக்கால் ஒருவர், இருவர், மூவர், நால்வர் என எவ்வளவும் எண் ஓடுமாறு காண்க. அப்பொது பிரிந்து ஒருவன் என நிற்பின் இருவன், மூவன் என ஆகாது.

இவ்வாறு கூறியது, னகர ஈறும், இகர ஈறும் எண்ணுதற்கு இயைபு இன்மையானும், ரகர ஈறு இயைபுடைமையானும் என்க. (௪௪)

வியங்கோள் எண்ணுப் பெயரும் திணை விரவி வரும் எனல்

௪௫. வியங்கோள் எண்ணுப்பெயர் திணைவிரவு வரையார்.

(எ - து.) வியங்கோளொடு தொடரும் எண்ணுப் பெயர் இருதிணையும் விராய் வருதலை நீக்கார்.

(எ - டு.) 'ஆவும் ஆயனும் செல்க'; 'யானையும் பாகனும் வருக' என வரும்.

உம்மை - எண்ணும்மை. (௪௫)

வேறு வினைப் பொதுச் சொல்

௪௬. வேறுவினைப் பொதுச்சொல் *ஒருவினை கிளவார்.

(எ - து.) வெவ்வேறு வினையையுடைய பல பொருட்குப் பொதுவாகிய சொல்லை யாதானும் ஒரு வினையால் கூறார்.

ஒருவினையால் கூறார் எனவே எல்லாவற்றையும் உள்ளடக்கி நிற்கும் பொதுவினையால் கூறுவர் என்பதாம்.

(எ - டு.) 'அடிசில்' என்பது உண்பன, தின்பன, நக்குவன, பருகுவனவற்றிற்கும் பொது.

'அணி' என்பது கட்டுவன, கவிப்பன, செறிப்பன, பூண்பனவற்றிற்கும் பொது.

---

* ஒருஉ வினை கிளவார் என்ற பாடமும் இருப்பதாக இளம்பூரணர் உரையிலிருந்து தெரிகிறது.

'இயம்' என்பது கொட்டுவன, ஊதுவன, எழுஉவனவற்றிற்கும் பொது.

'படை' என்பது எய்வன, எறிவன, குத்துவனவற்றிற்கும் பொது.

ஆதலின் அடிசில் உண்டார், அடிசில் கைதொட்டார் எனவும்; அணி அணிந்தார், மெய்ப்படுத்தார் எனவும்; இயம் இயம்பினார், படுத்தார் எனவும், படை வழங்கினார், தொட்டார் எனவும் பொது வினையால் கூறுக.

அல்லது, அடிசில் குடித்தார், பருகினார் என்றும்; அணிகவித்தார், கட்டினார் என்றும்; இயம் கொட்டினார், ஊதினார் என்றும்; படை எய்தார், குத்தினார் என்றும் ஒன்றன் தொழிலாற் கூறற்க.

* "அறுசுவை அடிசில் அணியிழை தருதலின்
உறுவயி றார ஓம்பாது தின்றென"

என வேறுவினையால் வந்ததால் எனின், அது இழித்தற்கண் வந்தது என்க. (சசு)

இதுவுமது

சஎ. †எண்ணுங் காலும் அதுவதன் மரபே.

(எ - து.) வேறுவினைப் பொதுச் சொற்களைப் பொதுச் சொல்லால் கூறாது, பிரித்து எண்ணுமிடத்தும் ஒரு வினையாற் கிளவாது பொதுவினையாற் கிளக்க.

(எ - டு.) சோறும் கறியும் நன்றென்று உண்டார்: யாழும் குழலும் பறையும் இயம்பினார் என்க; தின்றார், ஊதினார் என்னற்க.

"ஊன்துவை கறிசோ றுண்டு வருந்து" (புறநா-14)

என்புழி எல்லாவற்றிற்கும் ‡'உண்டு' எனப் பொதுவினை வந்தவாறு காண்க. (சஎ)

இரட்டைக் கிளவி அமையும் வகை

சஅ. இரட்டைக் கிளவி §இரட்டிற்பிரிந் திசையா.

* இவ்வெடுத்துக்காட்டும் விளக்கமும் நச்சினார்க்கினியர் உரையைத் தழுவியதாகும்.

† எண்ணுங்காலை எனப் பாடங் கொள்வர் தெய்வச்சிலையார்.

‡ உண்டு என்பது பொதுவினையா? அன்றிச் சினைவினையா? என்பது பற்றி உரையாசிரியர்களிடையே கருத்து வேறுபாடுளது. இதுபற்றி யாம் இக் கழக வழி வெளிவந்துள்ள தெய்வச்சிலையார் உரை விளக்கத்தில் நன்கு விளக்கியுள்ளோம். (தெய்வச்சிலையார் - விளக்கவுரை பக் - 2,1) ஆண்டுக் காண்க.

§ இரட்டுப் பிரிந்திசையா '—என்பது இளம்பூரணர் பாடம். இந் நூற்பாவினை இங்ஙனமே எடுத்து மொழிந்தனர் நன்னூலாரும். (நன் பொது - 45)

*(எ - து.) இரட்டித்து நின்று பொருள் உணர்த்தும் சொற்கள் இரட்டித்து நிற்றலிற் பிரிந்து நில்லா.

அவை வருங்கால் இசையும், குறிப்பும், பண்பும் பற்றி வரும்.

(எ - டு.) 'சுருசுருத்தது', 'மொடு மொடுத்தது' என்பன இசை.

'கொறு கொறுத்தார்', 'மொறு மொறுத்தார்' என்பன குறிப்பு.

'குறு குறுத்தது', 'கறுகறுத்தது' என்பன பண்பு.

இவை குறுத்தது குறுத்தது என ஒரு சொல் முழுதும் வாராமையின் அடுக்கன்று. இவை மக்கள் இரட்டையும், விலங்கு இரட்டையும் போல் அன்றிப் பூ இரட்டையும், காய் இரட்டையும், இலை இரட்டையும் போல ஒற்றுமையும், வேற்றுமையும் உடையவாய் வரும். (௪௮)

ஒருபெயர்ப் பொதுச் சொல்லைச் சொல்லும் முறைமை

௩௯. ஒருபெயர்ப் பொதுச்சொல் உள்பொருள் ஒழியத்
தெரிபுவேறு கிளத்தல் தலைமையும் பன்மையும்
†உயர்திணை மருங்கினும் அஃறிணை மருங்கினும்.

(எ - து.) ஒரு பெயர்பட நின்ற பொதுச் சொற்களைச் சொல்லுங்கால், ஆண்டுள்ள பொருள் எல்லாம் எடுத்துச் சொல்லாது, உயர்திணையிடத்தும், அஃறிணையிடத்தும் தெரிந்து வேறாகத் தலைமையானும் பன்மையானும் கூறுக.

ஒரு பெயர்ப் பொதுச் சொல்லாவது; ஒரு பெயருமாய்ப் பொதுச்சொல்லுமாய் வருவது. அது சேரி, நாடு, தோட்டம், காடு என்பன.

(எ - டு.) சேரி, நாடு உயர்திணைப் பொதுச் சொல்.

தோட்டம், காடு அஃறிணைப் பொதுச் சொல்.

சேரி என்பது பலரும் இருப்பது. அதனுள் சில பார்ப்பனக்குடியுளவேல், அதனைப் பார்ப்பனச் சேரி என்பர்; பார்ப்பாரது தலைமை பற்றி. இது உயர்திணைக்கண் தலைமைபற்றி வந்தது.

எயினர் நாடு, குறிஞர் நாடு என்பன, பிறரும் ஆண்டுறைவார் உளராயினும் எயினர், குறிஞர் பலராதலால் உயர்திணைக்கண் பன்மைபற்றி வந்தன.

தோட்டம் என்பது பல பொருளும் தொக்கது. அதனுள் பிற புல்லும் மரனும் உளவேனும், கமுகாயினும் தெங்காயினும் சிலவுளவாகலிற் கமுகந் தோட்டம், தெங்கந் தோட்டம் என்பன, அஃறிணைக்கண் தலைமைபற்றி வந்தன.

---

* இவ்வுரையும் காட்டும் நச்சினார்க்கினியர் உரையைத் தழுவியதாகும்.

† இவ் வரியை அடுத்த நூற்பாவின் முதலடியாகக் கொள்வர் தெய்வச்சிலையார்.

ஒடுவங்காடு, காரைக்காடு என்பன, பிறபுல்லும் மரனும் உள வேனும் ஒடுவை, காரை பலவாதலால் அஃறிணைக்கண் பன்மையாற் பெயர் பெற்றன என்று அறிக.

பார்ப்பார் பலராயினும், கமுகு பலவாயினும், தலைமையானும், பன்மையானும் பெற்ற பெயர் என்க.

'ஒன்றின முடித்தலான்' அரசர் பெருந்தெரு, வயிரக் கடகம், ஆவுரிஞ்சு குற்றி என்பனவும் பொதுச் சொல் எனக் கொள்க. (சக)

ஒன்றொழி பொதுச் சொல்

கூo. பெயரினும் தொழிலினும் பிரிபவை எல்லாம்
மயங்கல் கூடா வழக்குவழிப் பட்டன.

(எ - து.) உயர்திணைக் கண்ணும் அஃறிணைக் கண்ணும், பெயரினானும் தொழிலினானும் பிரிந்துவரும் அவை எல்லாம் வழுவாகா; வழக்கு வழிப்பட்டன வாகலான்.

உயர்திணை அஃறிணை என்பன மேல்நின்ற அதிகாரத்தாற் கொள்க.

அவை மயங்காது வழங்கும் இடத்துப் பெண்ணொழி மிகு சொல்லும், ஆணொழி மிகு சொல்லும் என்று இரண்டு வகைப்படும்.

(எ - டு.) 'வடுகர் ஐயாயிரவர் மக்களையுடையர்' என்றக்கால், மக்கள் என்பது பொதுவாயினும், இது பெயரிற் பிரிந்த பெண்ணொழி மிகுசொல்.

'பெருந்தேவி கருவுயிர்த்த கட்டிற்கீழ் நால்வர் மக்கள் உளர்' என்றால் இது பெயரிற் பிரிந்த ஆணொழி மிகு சொல்.

'அரசர் ஆயிரவர் மக்களொடு *தாவடி போயினார்; இன்று இச் சேரியாரும் அச்சேரியாரும் பொருப'. இவை தொழிலிற் பிரிந்த பெண்ணொழி மிகு சொல்.

'இன்று இவ்வூரார் எல்லாந் தைந்நீராடுப'; 'குறுங்கானம் போப' இவை தொழிலிற் பிரிந்த ஆணொழி மிகு சொல்.

உயர்திணைக்கண் பெயரானும், தொழிலானும் ஆண் பெண் பிரிந்தவாறு காண்க.

'நம்மரசன் ஆயிரம் யானையை உடையன்' என இது பெயரிற் பிரிந்த பெண்ணொழி மிகு சொல்.

'யானை - பொது.

'நம்பி நூறு எருமை உடையன்' என்றக்கால் இது பெயரிற் பிரிந்த ஆணொழி மிகு சொல்.

* தாவடி - போர்.

எருமை - பொது.

'இன்று இவ்வூர் பெற்றம் எல்லாம் உழவொழிந்தன' என இது தொழிலிற் பிரிந்த பெண்ணொழி மிகு சொல்.

'இன்று இவ்வூர் பெற்றம் எல்லாம் அறத்திற்குக் கறக்கும்' எனல் தொழிலிற் பிரிந்த ஆணொழி மிகு சொல்.

பெற்றம் - பொது.

அஃறிணைக்கண் பெயரானும், தொழிலானும், ஆண், பெண் பிரிந்தவாறு காண்க.

இனி 'எல்லாம்' என்றதனால், இவர் பெரிதும் சொல்லுமாறு வல்லர், இவர் பெரிதும் கால் கொண்டோடுவர், இவர் மிகவும் சோறுண்பர் எனத் தொழில் மிகுதி உணர்த்துவனவும் கொள்க.

மற்றையார் சொல்லுமாறு அறியார்; கை கொண்டோடுவர், புற்றின் பார் என்பது சொல்லியதன்று; மிகுதி உரைத்தவாறு காண்க. (௫0)

திணை விராய் எண்ணப்பட்ட பெயர்கள் முடிபு கொள்ளுமாறு

௫க. பலவயி னானும் எண்ணுத்திணை விரவுப் பெயர்
அஃறிணை முடிபின செய்யு ளுள்ளே.

(எ - து.) பல இடத்தினும் உயர்திணையும், அஃறிணையும் தம்முள் விராய் எண்ணப்படும் பொருள் செய்யுளிடத்து அஃறிணைச் சொல் கொண்டு முடியும்.

(எ - டு.) "வடுகர் அருவாளர் வான்கரு நாடர்
சுடுகாடு பேயெருமை யென்றிவை ஆறும்
குறுகார் அறிவுடை யார்"

எனவரும்.

'பலவயினானும்' என்றதனால், சிலவயினால் திணை விரவாது உயர்திணையான் எண்ணி அஃறிணையான் முடிவனவும், திணைவிராய் எண்ணி உயர்திணையான் முடிவனவும் கொள்க.

(எ - டு.) "பாணன் பறையன் துடியன் கடம்பனென்(று)
இந்நான் கல்லது குடியும் இல்லை." (புறம்—335)

இது திணை விரவாது வந்து அஃறிணையான் முடிந்தது.

(1) "பார்ப்பார் தவரே சுமந்தார் பிணிப்பட்டார்
மூத்தார் இளையார் பசுப் பெண்டிர் என்றிவர்கட்(கு)
ஆற்ற வழிவிலங்கி னாரே பிறப்பிடைப்
போற்றி எனப்படு வார்." (ஆசாரக்—64)

(2) *"எருதும் உழவனும் வந்தார் ஒருகுடநீர்
தாராய் (நீ) ஆயர் மகள்"

* இது முதலாக உள்ள ஐந்து எடுத்துக்காட்டுகளும் பிறர் உரையில் காணாதன.

(3) "மூர்க்கனும் முதலையும் கொண்டது விடார்"

(4) 'நங்கையும் கிளியும் உண்டார்'

(5) "வேந்தன் பெரும்பதி மண்ணுள் மக்கள்
ஈங்கிவர் மூவர் இதற்குரி யோரே"

(6) "வண்டா ரோதி நீயு நல்லை
தண்டார் மார்பின் இவனும் நல்லன்
ஒலிப்பாட் டினிவ்வூரும் நன்றே
தீயோர் யாவரும் இல்லை"

என இவை திணைவிராய் எண்ணி உயர்திணையான் முடிந்தவாறு காண்க. (௫௧)

பல பொருள் ஒரு சொல்

௫௨. வினைவேறு படூஉம் பலபொருள் ஒருசொல்
வினைவேறு படாஅப் பலபொருள் ஒருசொலென்
றாயிரு வகைய பலபொருள் ஒருசொல்.

(எ - து.) வினை வேறுபடும் பலபொருள் ஒரு சொல்லும், வினைவேறு படாப் பல பொருள் ஒரு சொல்லும் என இரண்டு வகைப்படும் பல பொருளொரு சொல்.

(எ - டு) அவை; மா, வாள், கோல், கன்று, தளிர், பூ, காய், பழம் என்னும் தொடக்கத்தன. (௫௨)

வினை வேறுபடூஉம் பல பொருள் ஒரு சொல்

௫௩. அவற்றுள்,
வினைவேறு படூஉம் பலபொருள் ஒருசொல்
வேறுபடு வினையினும் இனத்தினும் சார்பினும்
தேறத் தோன்றும் பொருள்தெரி நிலையே.

(எ - து.) வினைவேறு படூஉம் பலபொருள் ஒரு சொல்லை அறியும் இடத்து, வேறுபட்ட வினையினானும் இனத்தினானும் சார்பினானும் பொருள் தெரிநிலை தெளியத் தோன்றும்.

(எ - டு.) மா தளிர்த்தது, பூத்தது, காய்த்தது என்றவிடத்து மா மரத்தின் மேலும்; மாவோடும், மாப் பாயும் என்றவிடத்து விலங்கின் மேலும் செல்லும். இவை வினையான் அறியப்பட்டன.

இனி, 'மாவும் மரையும் புலம்படர்ந்தன;' 'மாவும் நாயும் ஓடின' என்றால் இனத்தால் அறியப்பட்டன.

'மாவும் மருதும் ஓங்கின' என்றால் இதுவும் இனத்தால் அறியப் பட்டது.

வில் பற்றி நின்று *'கோறு' என்ற இடத்துக் கணைக்கோல் மேலும், குதிரையேறி யிருந்து 'கோறு' என்ற இடத்து மத்திகைக்கோல் மேலும், பலகை பற்றி நின்று †'வாடா' என்ற இடத்துக் கண்டகவாள் மேலும் செல்லும். இவை சார்பால் அறியப்பட்டன எனக் கொள்க.
(௫௩)

மேலதற்கோர் புறனடை

௫௪. ‡ஒன்றுவினை மருங்கின் ஒன்றித் தோன்றும்.

(எ - து.) மேற் சொன்ன மூன்று வகையானும் அன்றிப் பொதுவினையாலும், வினை பொருந்தும் இடத்திற் பொருந்தித் தோன்றுவனவும் உள.

மாவீழ்ந்தது என்ற இடத்து, இன்னமா என்று அறிய லாகாது. வீழ்தல் தொழில் எல்லாவற்றிற்கும் பொதுவேயா யினும், இவ்விடத்து இக்காலத்து இவன் சொல்லுகின்றது இம் மாவினை என ஒன்றினை உணர்த்தி நின்றவாறு காண்க.

இதன் கருத்து :—வினை வேறுபடும் பலபொருள் ஒருசொல், ஒரு கால் வினை வேறுபடாப் பல பொருள் ஒரு சொல் போலவும் நிற்கும் என்பது.
(௫௪)

வினை வேறுபடா அப் பல பொருள் ஒரு சொல்

௫௫. வினைவேறு படாஅப் பலபொருள் ஒருசொல்
நினையுங் காலைக் கிளந்தாங் கியலும்.

(எ - து) வினை வேறுபடாப் பலபொருள் ஒரு சொல் ஆராயும் காலத்து இது எனக் கிளக்கப்பட்ட ஆராய்ச்சியுடைய இடத்து நடக்கும்.

(எ - டு.) பல கன்று ஓரிடத்து உள்வழிக் கன்று நீரூட்டுக என்றக் கால், எல்லாவற்றிற்கும் நீரூட்டும் வினை பொதுவாகலான், கன்று நீர் ஊட்டுக என்று பொதுவாகச் சொல்லாது, ஆன் கன்றை நீரூட்டுக; எருமைக் கன்றை நீரூட்டுக எனக் கிளந்து சொல்லுக.

மரக்கன்று பல நின்றுழியும் இன்ன கன்றுக்கு நீரூட்டுக எனக் கிளந்து கூறுக.

'நினையும் காலை' என்றதனால், ஆராய்ச்சி இல்லாத இடத்துக் கிளவாது சொல்லுக.

---

* கோல் + தா = கோறு.

† வாள் + தா = வாடா.

‡ சேனாவரையர் இந்நூற்பாவினை அடுத்த நூற்பாவோடு இணைத்து ஒரே நூற்பாவாகக் கொள்வர். இந்நூற்பா உரை நச்சினார்க்கினியர் உரையைத் தழுவியதாகும்.

(எ - டு) "கன்றுற்றுப் படுத்த புன்றலைச் சிறுஅர்" (குறுந் - 241) எனக் கிளவாது கூறியவாறு காண்க. (௫௫)

சொல்லுதற் கண் வரும் மரபு

௫௬. குறித்தோன் கூற்றம் தெரித்துமொழி கிளவி.

(எ - து.) தான் ஒரு பொருளைக் கருதிச் சொல்லுமேல் அதனை இற்றென்று தெரித்துச் சொல்லுக.

(எ - டு.) "அரிதாரச் சாந்தம் கலந்தது போல
உருகெழத் தோன்றி வருமே—முருகுறழும்
அன்பன் மலைப்பெய்த நீர்"

எனத் தெரித்து மொழி.

"கலந்தது போல வருமே இலங்கருவி
அன்பன் மலைப்பெய்த நீர்"

என்று கூறற்க.

அன்றியும்,

"பல்லார்தோள் தோய்ந்து வருதலால் பாய்புனல்
நல்வய லூரநின் தார்புலால்—புல்லெருக்க
மாசில் மணிப்பூண்எம் மைந்தன் மலைந்தமையால்
காதற்றாய் நாறும் எமக்கு"

எனவும் தெரித்து மொழிந்தவாறு.

"ஒல்லேங் குவளைப் புலாஅல் மகன்மார்பிற்
புல்லெருக்கங் கண்ணி நறிது"

*என்று கூறற்க; கூறில் வழுவாம். (௫௬)

உயர்திணைப் பெயர்களில் சில அஃறிணை முடிபு கொள்ளும் எனல்

௫௭. குடிமை ஆண்மை இளமை மூப்பே
அடிமை வன்மை விருந்தே குழுவே
பெண்மை அரசே மகவே குழவி
தன்மை திரிபெயர் உறுப்பின் கிளவி
காதல் சிறப்பே செறற்சொல் விறற்சொலென்
றுவறு மூன்றும் உளப்படத் தொகைஇ
அன்ன பிறவும் அவற்றொடு சிவணி
முன்னத்தின் உணரும் கிளவி எல்லாம்

* இங்ஙனம் கூறினும் வழுவில்லை எனச் சாதிப்பர் சேனாவரையர். அவரையே இவ்வுரையாசிரியர் குறிப்பாக மறுத்துச் செல்கின்றார்.

உயர்திணை மருங்கின் நிலையின ஆயினும்
அஃறிணை மருங்கிற் கிளந்தாங் கியலும்.

(எ - து.) குடிமை முதல் விறற்சொல் ஈறாகச் சொல்லப்பட்ட பதினெட்டும் உட்பட, அவை போல்வன பிறவும் அவற்றொடு தொக்குக் குறிப்பினான் உயர்திணைப் பொருளை உணர்த்தும் சொற்கள் எல்லாம், உயர்திணை முப்பாற்கண்ணும் நிலை பெற்றன; ஆயினும் அஃறிணைப் பொருளை உணர்த்தி நின்றாற்போல அஃறிணை முடிபே கொள்ளும்.

(எ - டு.) இவர்க்குக் குடிமை நன்று, குடிமை தீது.

'இவர்க்கு' என்பதனை யாண்டும் ஓட்டிக் கொள்க.

ஆண்மை நன்று, தீது;
இளமை நன்று, தீது.
மூப்பு நன்று, தீது.
அடிமை நன்று, தீது.
வன்மை நன்று, தீது.
விருந்து வந்தது, போயிற்று.
குழு நன்று, பிரிந்தது.
பெண்மை நன்று, தீது.
அரசு வந்தது, போயிற்று.
மக நன்று, தீது.
குழவி அழுதது, கிடந்தது.

இனித் தன்மைத் திரிபெயர் :—

அலி வந்தது, போயிற்று.

இனி உறுப்பின் கிளவி :—

குருடு வந்தது, போயிற்று.
கூன் வந்தது, போயிற்று.

இனிக் காதல் கிளவி : —

என் காதல் வந்தது, போயிற்று.
என் பாவை வந்தது போயிற்று.

இனிச் சிறப்பு :—

என் யானை வந்தது, போயிற்று.

இனிச் *செறற் சொல் : —

கெழீயிலி வந்தது, போயிற்று.

* செறற் சொல்—செறுதலைப் புலப்படுக்கும் சொல். செறுதல்-கோபித்தல். கெழீயிலி—பிறரொடு தொடர்பில்லாதவன்.

இனி விறற் சொல் :—

பெரு விறல் வந்தது, போயிற்று.

என வரும்.

இவை உயர்திணையாயினவாறு என்னை? குடிமை என்ற இடத்து ஒருவன் மேலானும், ஒருத்தி மேலானும், பலர் மேலானும் நிற்கும். ஒழிந்தனவும் இவ்வாறே காண்க.

இனி 'அன்ன பிறவும்' என்றதனல், பேடி வந்தது, வேந்து வந்தது, வேள் வந்தது, குருசில் வந்தது, *பொறியறை வந்தது, புரோசு வந்தது, உலகு வந்தது எனவும் கொள்க. (௫௭)

இதுவுமது

௫௮. காலம் உலகம் உயிரே உடம்பே
பால்வரை தெய்வம் வினையே பூதம்
ஞாயிறு திங்கள் சொல்என வரூஉம்
ஆயீ ரைந்தொடு பிறவும் அன்ன
ஆவயின் வரூஉம் கிளவி எல்லாம்
பால்பிரிந் திசையா உயர்திணை மேன.

(எ - து.) காலம் முதலாகச் சொல் ஈறுகச் சொல்லப்பட்ட பத்தும், அத்தன்மையன பிறவுமாகிய சொல் எல்லாம் உயர்திணையே எனினும், உயர்திணையிடத்துப் பால் பிரிந்திசையா; அஃறிணைக்கண் இசைக்கும்.

(எ - டு.) இவற்குக் காலம் ஆயிற்று.

வினை நன்று, தீது.
இவனைப் பூதம் புடைத்தது.
ஞாயிறு எழுந்தது, பட்டது.
திங்கள் எழுந்தது, பட்டது.
சொல் நன்று, தீது.

'பிறவும்' என்றதனல்,

வெள்ளி எழுந்தது, பட்டது;
வியாழம் எழுந்தது, பட்டது;
செவ்வாய் எழுந்தது, பட்டது;

என்பன எல்லாம் கொள்க.

---

* பொறியறை — நல்வினையில்லாதவன்.

*மேற் சூத்திரத்துள் 'அன்ன பிறவும்' என்றதனால், ஈங்கு மீண்டும் சூத்திரம் சொல்லியது என்னை? எனின்; மேற் சூத்திரத்துள் சொல்லின எல்லாம் மக்கள் மேலன. இதனுள் சொல்லின எல்லாம் தெய்வங்கள் மேலன என்பது.

காலம் என்பது கூற்றத்தை.

உலகு—உலக முடையான்.

உயிர் என்பதனையும் தெய்வம் என்ப.

உடம்பு : ஐம்பெரும் பூதங்களின் இயன்றமையின் தெய்வம் என்ப.

பால்வரை தெய்வம் : எல்லார்க்கும் இன்ப துன்பங்களை அவ்வவர் விதிவழியிற் பயப்பதோர் தெய்வம்.

வினை : வினையைப் படைப்பானையன்றி இருவினையையும் தெய்வம் என்ப.

பூதம் என்பது ஓர் தெய்வம்.

ஞாயிறு, திங்கள் என்பனவும் அவை.

†சொல் : சொல்லின் கிழத்தியை. என இவ்வாறு கொள்க.

இனி, இன்னும் ஓர் கருத்து :- மேல் உயர்திணையாய் அஃறிணையான் முடிபு எற்றமை காட்டினார்; இதனால் உயர்திணையான தேவரையும், மக்களையும் உள்ளடக்கி, அஃறிணையான் முடிபு எய்தினமை காட்டினார் என்க.

உலகமும், உயிரும், உடம்பும் மக்கட்பண்பு, அல்லன தெய்வம் எனக் கொள்க.

பால் பிரிந்திசையா உயர்திணை மேன : உயர்திணை மேற் பால் பிரிந்து இசையா என்க. (௫௮)

'குடிமை ஆண்மை' என்னும் நூற்பாவிற்குப் புறனடை

௫௯. நின்றாங்(கு) இசைத்தல் இவண் இயல் பின்றே.

(எ - று.) ஈறு திரியாது நின்றாங்கு நின்று உயர்திணையாய் இசைத்தல், காலம் உலகம் முதலிய சொற்களிடத்து இயல்பில்லை.

---

* இங்ஙனம் கூறப்படும் வேறுபாடு இளம்பூரணர் காலத்திற்கு முன்னமேயே இருந்தது என அவர் உரையால் தெரிகின்றது. ஆயினும் அதனை அவர் மறுப்பர். அம்மறுப்பு வருமாறு :- "இச்சூத்திரம் தெய்வம் சுட்டிய பொருள் அஃறிணையால் முடிபேற்றல் கூறினர் என்ப ஒருசாரார். அற்றன்று; ஈண்டுத் தெய்வமும் உள; மக்களும் உளர்."

† சொல் என்பது சொல்லின் கிழத்தியைக் குறிக்கும் எனப் பொருள் கொண்டனர் இளம்பூரணர் உள்ளிட்ட உரையாசிரியர்கள் அனைவரும். தெய்வச்சிலையார் மட்டும் வேறுவிதமாகப் பொருளுரைப்பர். அது வருமாறு :- சொல் என்பது எழுத்தினான் இயன்று பொருள் உணர்வது. அச் சொல்லினால் இயன்ற மந்திரம் விடம் முதலாயின தீர்த்தலின் தெய்வம் ஆயிற்று. இந்நூல் செய்தான் வைதிக முனிவன் ஆதலின் சொல் என்பது வேதம் என்று கொள்ளப்படும்.

எனவே குடிமை முதலிய சொற்களிடத்து நின்றுங்கிசைத்தல் இயல்பாம் என்பதாம்.

(எ - டு.) குடிமை நல்லன், ஆண்மை நல்லன், இளமை நல்லன், மூப்புத் தீயன் என ஒட்டிக் கொள்க.

இச் சூத்திரம் "குடிமை ஆண்மை" என்னும் சூத்திரத்துக்குப் புறநடை என்றறிக. (௫௯)

'காலம் உலகம்' என்னும் நூற்பாவிற்குப் புறநடை

௬௦. *இசைத்தலும் உரிய வேறிடத் தான.

(எ - து) காலம் முதலிய சொற்கள் உயர்திணையாய் இசைத்தலும் உரிய ; ஈறு திரிந்து வாய்பாடு வேறுபட்ட விடத்து.

வேறிடமாவது—ஈறுதிரிதல்.

(எ - டு.) காலம் என்பது மகர ஈறு. அது காலன் எனத் திரிந்தது. பிறவும் ஏற்குமாறு திரித்துச் சொல்லுக.

காலன் கொண்டான், உலகு காப்பான், உயிர்க்கிழவன் போயினான் என ஒட்டுக.

இச் சூத்திரம் "காலம் உலகம்" என்பதற்குப் புறநடை. (௬௦)

அடை மொழி இனம் செப்பல்

௬௧. எடுத்த மொழிஇனஞ் செப்பலும் உரித்தே.

இது அருத்தாபத்தி கூறுகின்றது.

(எ - து.) இனமாகிய பொருட்கண் ஒன்றை விதந்து கூறிய வழி அச்சொல் தனக்கு இனமாகிய பிறபொருளைக் குறிப்பால் உணர்த்தலும் உரித்து.

எடுத்த மொழி - விதந்த சொல்.

(எ - டு.) 'அறஞ் செய்தான் துறக்கம் புகும்' என்றவழி, 'மறஞ் செய்தான் நிரயம் புகும்' என்பது உணர்த்திற்று.

†'இழிபு அறிந்து உண்பான், இன்பம் எய்தும்' எனக்- 'கழிபேர் இரையான் இன்பம் எய்தான்' என்பது உணர்த்திற்று.

‡'குடங்கொண்டான் வீழ்ந்தான்' எனக், 'குடம் வீழ்ந்தது' சொல்லாமல் முடிந்தது.

---

* "வகுத்தான் வகுத்த வகையல்லால், கோடி தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது" என்னும் திருக்குறள் உரையில் பரிமேலழகர் இந்நூற்பாவினை மேற்கோளாக எடுத்துக் காட்டுவர்.

† 'இழிவறிந் துண்பான்கண் இன்பம்போல் நிற்கும் கழிபேரிரையான்கண் நோய்' எனத் திருவள்ளுவரும் கூறுமாறு காண்க.

‡ இது இளம்பூரணர் உரையைத் தழுவியதாகும்.

பிறவும் அன்ன.

'இனஞ் செப்பலும் உரித்தே' என்னும் உம்மையாற், செப்பாமையும் உரித்து.

ஆ வாழ்க; அந்தணர் வாழ்க என்றால் ஒழிந்தனவும், ஒழிந்தாரும் சாக என்பது அன்று எனக் கொள்க. (சுக)

பன்மைச் சொற்கள் ஒருமையால் முடிதல்

சுஉ. கண்ணுந் தோளும் முலையும் பிறவும்
பன்மை சுட்டிய சினைநிலைக் கிளவி
பன்மை கூறுங் கடப்பா டிலவே
தம்வினைக் கியலும் எழுத்தலங் கடையே.

(எ - து.) கண்ணும், தோளும், முலையும், அவை போல்வன பிறவும் பன்மையைக் குறித்து நின்ற சினை நிலைமையை உணர்த்திய சொற்கள், தமக்கு உரிய பன்மை வினைக்கு ஏற்ற அகர ஈற்றால் கூறக் கருதாது, தம் முதல் வினைக்கு ஏற்ற ஒருமை ஈற்றானும், பன்மை ஈற்றானும் கூறக் கருதிய வழித் தமக்கு உரிய பன்மையாற் கூறப்படும் முறைமை யுடைய அல்ல.

(எ - டு.) கண் நல்லன், கண் நல்லள், கண் நல்லர்;
தோள் நல்லன், தோள் நல்லள், தோள் நல்லர்;
முலை நல்லன்(?) முலை நல்லள், முலை நல்லர்:

எனவும்;

கண் நொந்தான், முலை நொந்தாள் எனவும் வரும்.

'பிறவும்' என்றதனால், புருவம், காது, கால் முதலியன கொள்க.

'பன்மை கூறும் கடப்பாடில' என்றதனால் ஒருமைக்கும் கொள்க.

(எ - டு.) மூக்கு நல்லள், கொப்பூழ் நல்லள் என்க.

'தம்வினைக்கு இயலும் எழுத்தலங் கடையே' என்றதனால், தம் முதலுக்கு இயலும் எழுத்தான் முடியும் என்பதாம்.

இச்சூத்திரம் அஃறிணை உயர்திணையான் முடியுமாறு கூறித் திணை வழு அமைத்தது.

'தன்வினை முடித்தல்' என்பதனால், கோடு கூரிது, குளம்பு கூரிது, குதிரை எனத் திணைவழுவின்றி அஃறிணைப் பன்மைச் சினைப்பெயர் நின்று முதல் வினையாகிய ஒருமையான் முடிவனவும் கொள்க. (சுஉ)

முதலாவது கிளவியாக்க உதாரணம் முற்றும்.

உ. வேற்றுமை *இயல்

வேற்றுமை ஏழெனல்

சூ௩. †வேற்றுமை தாமே ஏழென மொழிப.

(எ - து) வேற்றுமை என்று சொல்லப்படுவன ஏழு வகைய.

வேற்றுமையாவது : சொற்களை வேற்றுமை செய்வது.

ஏழு வகையாவது : சாத்தன் உண்டான் என்ற இடத்து எழுவாயும், சாத்தன் சோற்றை உண்டான் என்ற இடத்து இரண்டாவதும், சாத்தன் கொற்றனொடு வந்தான் என மூன்றாவதும், சாத்தற்குக் கொடுத்தான் என நாலாவதும், சாத்தனின் வலியன் என்ற இடத்து ஐந்தாவதும், சாத்தனது ஆடை என்ற இடத்து ஆறாவதும், சாத்தன் இருந்தான் முற்றத்துக்கண் என ஏழாவதும் ஆம்.

இப்படியாக வேற்றுமைப்படு பொருள் கொண்டு வருதலால் வேற்றுமை ஏழெனப்பட்டது. (க)

விளியொடு கூட்ட வேற்றுமை எட்டு எனல்

சூ௪. விளிகொள் வதன்கண் விளியோ டெட்டே.

(எ - து.) விளி ஏற்கும் பெயரோடு வேற்றுமை எட்டாம்.

'விளிகொள் வதன்கண்' என்றதனால் விளி ஏலாதனவும் உள. அவை விளிமரபிற் காண்க. (உ)

வேற்றுமைகளின் பெயரும் முறையும்

சூ௫. அவைதாம்,
பெயர் ஐ ஒடு கு
இன் அது கண்விளி என்னும் ஈற்ற.

(எ - து.) எட்டு வேற்றுமையும், விளிவேற்றுமையை இறுதியாக உடைய பெயரும், ஐயும், ஒடுவும், குவ்வும், இன்னும், அதுவும், கண்ணும் ஆம். (௩)

---

* 'மரபு' எனவும் பாடம்.

† இதனையும் அடுத்த நூற்பாவினையும் இணைத்து ஒரே நூற்பாவாகக் கொள்வார் தெய்வச் சிலையார்.

எழுவாய் வேற்றுமை

சூசா. அவற்றுள்,
எழுவாய் வேற்றுமை பெயர்தோன்று நிலையே.

(எ - து.) எழுவாய் வேற்றுமை உருபும், விளியும் ஏலாது, பெயராகவே தோன்று நிலைமையதுவாம்.

(எ - டு.) ஆ என வரும். (ச)

எழுவாய் பயனிலை ஏற்குமாறு

சூஎ. பொருண்மை சுட்டல் வியங்கொள வருதல்
வினை நிலை யுரைத்தல் வினாவிற் கேற்றல்
பண்புகொள வருதல் பெயர்கொள வருதலென்
றன்றி யனைத்தும் பெயர்ப்பய னிலையே.

(எ - து.) எழுவாய் வேற்றுமை பொருண்மை சுட்டல் முதலாகிய ஆறுவகைப்பட்ட பயனிலையையும் ஏற்கும்.

(எ - டு.)	பொருண்மை சுட்டல் ;	ஆவுண்டு என்பது
	வியங்கொள வருதல் :	ஆ செல்க என்பது
	'வினைநிலை உரைத்தல் :	ஆ கிடந்தது என்பது
	வினாவிற்கு ஏற்றல் :	ஆ வோ என்பது
	பண்பு கொள வருதல்:	ஆ கரிது என்பது
	பெயர் கொள வருவல்:	ஆ ஒன்று, பல என்பது.

'பொருள்' என்னது 'பொருண்மை' என்றதனால், ஆ என்னும் பொருள் கெட்டதேனும், அவ் ஆவினது சாதித்தன்மை எக்காலத்தும் கெடாது நிற்கும் என்பது கொள்க. (ரு)

பெயரினாகிய தொகையும் பயனிலை கொள்ளும் எனல்

சூஅ. பெயரி னாகிய தொகையுமா ருளவே
அவ்வும் உரிய அப்பா லான.

(எ - து.) பெயரும் பெயரும் தொக்க தொகையும் உள. அவையும் உரிய அவ் எழுவாய் வேற்றுமையாய்ப் பயனிலை கோடற்கு.

(எ - டு.) யானைக் கோடு; உண்டு - செல்க, வீழ்ந்தது, கோடோ, பரிது, பல என வரும்.

'உம்மையால்' வினையொடு பெயர் தொக்கதூஉம் எழுவாய் வேற்றுமையாய்ப் பயனிலை கொள்ளும்.

(எ - டு.) கொல் யானை உண்டு - செல்க என ஒட்டிக் கொள்க.

*அன்றியும், 'தொகையுமாருளவே' என்றதனால், அறுவகைப்பட்ட தொகைச் சொல்லும் எழுவாய் வேற்றுமையாய்ப் பயனிலை கொள்ளும் என்க.

(எ - டு.) யானைக்கோடு கிடந்தது, மதிமுகம் வியர்த்தது, கொல் யானை நின்றது, கருங்குதிரை ஓடிற்று, உவாப் பதினான்கு கழிந்தது, பொற்றொடி வந்தாள் என வரும். (௬)

பெயர்கள் அனைத்தும் பயனிலை கொண்டுவரும் எனல்

௬௯. எவ்வயிற் பெயரும் வெளிப்படத் தோன்றி
அவ்வியல் நிலையல் செவ்வி தென்ப.

(எ - து.) தன்மை முன்னிலை, படர்க்கை என்னும் மூன்றிடத்துப் பெயரும் விளங்கத் தோன்றி, எழுவாய் வேற்றுமையாய்ப் பயனிலை கோடல் செவ்விது என்ப.

முன் எழுவாய் வேற்றுமைப்பெயர் இன்னது என்று வரைந்தது இன்மையின், அம் மூன்றிடத்துப் பெயருமே எழுவாய் வேற்றுமைப் பெயர் என்று உணர்த்தியவாறு காண்க. (எ)

உருபுகள் நிற்கும் இடம்

௭௦. கூறிய முறையின் உருபுநிலை திரியா(து)
ஈறுபெயர்க் காகும் இயற்கைய என்ப.

(எ - து.) மேல் ஐ, ஒடு, கு, இன், அது, கண், என்று கூறிய முறையை உடைய உருபுகள் தத்தம் நிலை திரியாது பெயர்க்கு ஈறும் இயல்பை உடைய என்ப.

(எ - டு.) சாத்தனை, சாத்தனொடு, சாத்தற்கு, சாத்தனின், சாத்தனது, சாத்தன்கண் எனவரும். (அ)

பெயர்ச் சொற்கள் காலந் தோன்றா எனல்

௭௧. பெயர்நிலைக் கிளவி காலந் தோன்றா
தொழில்நிலை யொட்டும் ஒன்றலங் கடையே.

(எ - து.) பெயரது நிலையிலே நிற்றலுடைய சொல், காலம், தோன்றாது; ஒரு பொருளது புடைபெயர்ச்சியாய்க் காலம் தோன்றுதற்குப் பொருந்தும் தொழிற் பெயர் அல்லாத இடத்து.

* இக்கருத்து சேனாவரையர் உரையைத் தழுவியதாகும்.

ஒட்டும் - பொருந்தும்.

(எ - டு.) சாத்தன் என்றது காலம் தோன்றாது, உண்டான் எனக் காலம் தோன்றி நின்றது தொழிற் பெயர்.

இனி 'ஒட்டும் ஒன்றலங் கடையே' என்றதனால் தொழிற் பெயராய்ச் சொல்லும் காலம் தோன்றாதனவும் உள.

அவை : உண்டல், தின்றல், பூசல், வேட்டை என்பன. அவை தொழிலது புடைபெயர்ச்சி மாத்திரம் உணர்த்துவதல்லது காலம் தோன்றா.

இனி எல்லாத் தொழிற் பெயரும் காலம் தோன்றும் என்பதுபடச் சொல்லுதல் குற்றம்.

இனி, உண்டான், தின்றான் என்புழித் தொழில்நிலை ஒட்டுவன காலம் தோன்றி நிற்றலும் கண்டு கொள்க. (கூ)

இரண்டாம் வேற்றுமை

எஉ. *இரண்டா குவதே,
ஐ யெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
எவ்வழி வரினும் வினையேவினைக் குறிப்(பு)
அவ்விரு முதலிற் றோன்றும் அதுவே.

(எ - து) பெயர், ஐ, ஒடு, கு என்னும் சூத்திரத்து ஐ எனப் பெயர் பெற்ற வேற்றுமைச் சொல் இரண்டாவதாம். அஃது யாண்டு வரினும் வினையும் வினைக்குறிப்புமாகிய இரண்டு முதற் கண்ணும் தோன்றும் அவை பொருளாக என்றவாறு.

(எ - டு.) குடத்தை வனைந்தான், குழையை உடையன் எனவரும்.

'பெயரிய' என்பது பெயரென்பது முதனிலையாக முடிந்ததோர் பெயரெச்சம். தன்மை உணர்த்துவனவும் பெயர் எனப்படுதலின் 'எனப் பெயரிய' என்றார்.

வினையே வினைக்குறிப்பு என்றாராயினும், அவற்றின் செயப்படு பொருளே கொள்ளப்படும்.

செயப்படு பொருளாவது : ஒரு வினை செய்யும் தொழிலினை உறுவது.

'அவ்விரு முதலின் தோன்றும்' என்ற அதனான், முதலாதற்கும். வேற்றுமைப் பொருளாதற்கும் ஏற்பன அவையே யாகலின், முதல்

* இதனையும் அடுத்த நூற்பாவினையும் இணைத்து ஒரே நூற்பாவாகக் கொள்வர் இளம்பூரணர். இந்நூற்பா உரை முற்பகுதி சேனாவரையர் உரையையும், பிற்பகுதி நச்சினார்க்கினியர் உரையையும் தழுவிச் செல்கின்றது.

காரணம், அவை முதலாதற்கு ஏற்றவாறு என்னை? எனின், செயப்படுபொருள் முதலாயின தொழிற்குக் காரணமாகலான், 'ஆயெட்டென்ப தொழில் முதனிலையே' என்னும் அவற்றை முதனிலை என்று கூறுப ஆகலான்.

அஃதேல் செயப்படு பொருளாவது தொழில் பயனுறுவதாகலான் குழை முதலாயினவற்றிற்கு அவ்விலக்கணம் ஏலாமையிற் செயப்படு பொருள் அன்மையான் வினைக்குறிப்பு எனல் வேண்டா; எனின், அற்றன்று.

''அம்முக் காலமுங் குறிப்பொடு கொள்ளும்
மெய்ந்நிலை யுடைய''

என்றாராகலிற் குறிப்புச் சொல் காலமொடு தோன்றித் தொழிற் சொல்லாதலும், குழை முதலாயின தொழிற்பயன் உறுதலும் ஆசிரியரது துணிவு ஆதலின் அவையும் செயப்படு பொருளாம் என்பது.

ஆயின், 'செயப்படு பொருட்கண் தோன்றும்' என அமையும்; 'வினையே வினைக்குறிப்பு' எனல் வேண்டா எனின்; தெரிநிலை வினைச் செயப்படுபொருளையே கூறினரோ, குறிப்பு வினைச்செயப்படு பொருளும் அடங்கப் பொதுவகையாற் கூறினரோ என்று ஐயம் அகலாமையின் 'வினையே வினைக்குறிப்பு' எனல் வேண்டும் என்பது.

வினை, வினைக்குறிப்பு என்பன ஈண்டு ஆகுபெயர்.

'எவ்வழி வரினும்' என்றதனால், புகழை நிறுத்தான், புகழை நிறுத்தல், புகழையுடையன், புகழை யுடைமை என இரண்டாவது பெயரொடு தொடர்ந்த வழியும் வினைச் செயப்படுபொருளும், குறிப்புச் செயப்படு பொருளும்பற்றிய நிற்கும்.

செயப்படு பொருள், இயற்றப்படுவதும், வேறுபடுக்கப்படுவதும், எய்தப்படுவதும் என மூன்றும்.

இயற்றப் படுதலாவது: முன் இல்லதனை உண்டாக்குவது.

வேறுபடுத்தல் : முன் உள்ளதனைத் திரித்தல்.

எய்தப்படுவது : தொழிற்பயன் உறுந்துணையாய் நிற்றல்.

இவ்வுருபை முடித்தற்கு, மேற் காப்பு முதலிய வாய்பாடு பற்றி வரும் பொருள்களை இம்மூன்று கூற்றானும் பகுக்கின்றார், வினைமாத்திரையும், வினைப்பெயருமாகப் பகுப்பர்.

ஈண்டுக் குடத்தை வனைந்தான் என்றலும், மேல்வரும் இயற்றப்படும் பொருளை.

அது எயிலை இழைத்தான் எனவரும். என்றது, எயிலைஇழைத்தலைச் செய்தான் என்னும் பொருட்டு.

இழை என்னும் வினைமாத்திரை உணர்த்தும் பெயர்நிலை, முன்னர் இழைத்தல் என்னும் பெயரைத் தோற்றுவித்து, இழைத்தலை என உருபையும் ஏற்பித்துச், செய்தான் என வினையொழிந்த காரணங்கள் ஏழானும் நிகழும் காரியத்தினையும் தோற்றுவித்து நிற்றலின் இழை

என்னும் முதல்நிலைப் பெயரை வேற்றுமைப் பொருளாக எடுத்து ஓதினார். இப் பொருட்கண் தோன்றிய செய்தான் என்னும் காரியத்துடன் அல்லது, எயிலை என்னும் இரண்டாவது முடியாமை உணர்க.

இவ்வாறே மேல் இச்சூத்திரத்தில் ஒழிந்த பொருள்களையும் விரிக்க.

இனி, வினைக்குறிப்பிற்கும் குழையையுடையன் என்புழி, உடையம் எனக் கருதல் வினை. அக்கருத்தை நிகழ்த்துகின்றான் வினைமுதல். அக் குழை அவன் கருத்து நிகழ்த்தப்படு பொருளாய்க் கிடக்கின்ற தன்மை, செயப்படுபொருள். இவ்வாறே ஒழிந்தனவும் குறிப்பால் காண்க. (சo)

இரண்டாம் வேற்றுமைப் பொருண்மைக்குரிய வாய்பாடுகள்

எரு. காப்பின் ஒப்பின் ஊர்தியின் இழையின்
ஓப்பின் புகழின் பழியின் என்று
பெறலின் இழவின் காதலின் வெகுளியின்
செறலின் உவத்தலின் கற்பின் என்று
அறுத்தலின் குறைத்தலின் தொகுத்தலின் பிரித்தலின்
நிறுத்தலின் அளவின் எண்ணின் என்று
ஆக்கலின் சார்தலின் செலவின் கன்றலின்
நோக்கலின் அஞ்சலின் சிதைப்பின் என்று
அன்ன பிறவும் அம்முதற் பொருள
என்ன கிளவியும் அதன்பால என்மனார்.

(எ - து.) செயப்படு பொருள் மூன்றனையும் பற்றிவரும் வாய்பாடுகளை விரிக்கின்றார்.

காப்பு முதலாகச் சிதைப்பு ஈறாகச் சொல்லப்பட்ட இருபத்தெட்டுப் பொருளும், அவை போல்வன பிறவுமாகிய அச் செயப்படுபொருள் மேல் வரும் எல்லாச் சொல்லும், அவ் விரண்டாம் வேற்றுமைப் பால என்று சொல்லுவர் புலவர்.

'என்று' எண்ணிடைச் சொல். 'இன்' எல்லாம் புணரியல் நிலையிடைப் பொருணிலைக் குதவுதலால் எண்ணின்கண் வந்தன.

'அம் முதல்' என்பது மேற்கூறப்பட்ட செயப்படு பொருள்.

(எ - டு.) எயிலை இழைத்தான், என 'இயற்றப்படுவது'. இஃது ஒரு தன்மைத்து ஆகலின் ஒரு வாய்பாடே கூறினார்.

கிளியை ஒப்பும்; பொருளை இழக்கும். இவற்றிற்கு வேறுபாடு:— ஓர் தொழில் உறுவிக்கப்பட்டுத் தானே போதலும், தொழிற் பயனுற்ற மாத்திரையாய் ஒருவன் கொண்டு போதலும்.

நாணை யறுக்கும்; மரத்தைக் குறைக்கும். இவற்றிற்கு வேறுபாடு :—சிறிது இழவாமல் வேறு படுத்தலும், சிறிது இழக்க வேறு படுத்தலும், பெருமையைச் சுருக்குதலும்.

நெல்லைத் தொகுக்கும்; தேவியைப் பிரிக்கும். இவற்றிற்கு வேறுபாடு :—விரிந்தது தொகுத்தலும், தொகுத்தது விரித்தலும்.

அறத்தை ஆக்கும், நாட்டைச் சிதைக்கும், இவற்றிற்கு வேறுபாடு : —மிகுத்தலும், கெடுத்தலும்.

இவ்வெட்டும் 'வேறுபடுக்கப்படுவன'

ஊரைக் காக்கும்

தந்தையை ஒக்கும்

தேரை ஊரும்

குருசிலைப் புகழும்

நாட்டைப் பழிக்கும்

புதல்வனைப் பெறும்

மனைவியைக் காதலிக்கும்

பகைவரை வெகுளும்

செற்றாரைச் செறும்

நட்டாரை உவக்கும்

நூலைக் கற்கும்

பொன்னை நிறுக்கும்

அரிசியை அளக்கும்

அடைக்காயை எண்ணும்

ஊரைச் சாரும்

நெறியைச் செல்லும்

சூதினைக் கன்றும்

கருணையை நோக்கும்

கள்ளரை அஞ்சும்

எனப் பத்தொன்பதும் 'எய்தப்படுவன'. இவைதாம் தொழிலுறுவனவும், தொழிற் பயனுறுவனவுமாய் வரும் வேறுபாடும் உணர்க.

வெகுளலும், செறலும் கொலைப்பொருளாம் வழி 'வேறுபடுக்கப் படுவனவாம்.'

செறல் - வெகுளியது காரியம்.

உவத்தல் - காதலது காரியம்.

வேறுபடுக்கப்படுவதும், எய்தப்படுவதும் பல இலக்கணத்த ஆதலின், பல வாய்பாட்டான் விரித்துக் கூறினர்,

'அன்ன பிறவும்' என்றதனன், பகைவரைப் பணிந்தான், சோற்றை அட்டான், குழையை உடையன், பொருளை இலன் என்னும் தொடக்கத்தன கொள்க.

இயற்றப்படுதல் முதலாகிய வேறுபாடு குறிப்புவினைச் செயப்படு பொருட்கண் ஏற்பன கொள்க. (கக).

மூன்றும் வேற்றுமை

எச. *மூன்று குவதே,
ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
வினைமுதல் கருவி அனைமுதற் றதுவே.

(எ - து.) மேல் ஒடு எனப் பெயர் கொடுத்து ஓதிய வேற்றுமைச் சொல் மூன்றுவதாம். அது வினைமுதலும் கருவியுமாகிய இரண்டு காரணத்தையும் பொருளாக உடைத்து.

மேல், 'அதனின் இயறல்' முதலியன ஆன் உருபிற்கு ஏற்ப உடம்பொடு புணர்த்துச் சூத்திரம் செய்தலின் அவற்றிற்கு முன்னர்க் கொண்ட ஒடு என்பதற்கும், ஆன் என்பதற்கும் வினை முதல் கருவி கொள்க.

ஆன் ஆலாய்த் திரிந்து நிற்கும்.

வினை முதல் கருத்தா என்றலும் ஒன்று.

கருத்தா நின்று, தன்னை ஒழிந்த கருவி முதலாகிய காரணங்கள் ஏழனையும் காரியத்தின்கண் நிகழ்த்துவது.

வினை முதல்; அது இயற்றும் வினை முதலும், ஏவும் வினை முதலும் என இருவகைப்படும்.

(எ - டு.) 'கொடியொடு துவக்குண்டான்' என்பது இயற்றும் வினை முதல். அது, கொடி தன்னோடு துடக்குதலைச் செய்யப்பட்டான் சாத்தன் என்னும் பொருட்டு.

கொடியினது நெகிழ்ச்சி ஈண்டுக் கருவி. கொடி சாத்தனைத் தொழில் உறுவிக்குங்கால், தான் அவனை நீங்கா உடனிகழ்ச்சியை விளக்கிற்று ஒடு என் உருபு.

'அரசனன் இயற்றப்பட்ட தேவகுலம்.' என்பது ஏவும் வினை முதல்.

இனிக், கருவி, காரணம், நிமித்தம் என்பன தம்முள் வேறுபாடு உடையவேனும் ஒத்த பொருட்டு. அக்காரணம் முதற் காரணமும், துணைக் காரணமும் என இருவகைப்படும்.

* இதனையும் அடுத்த நூற்பாவினையும் இணைத்து ஒரே நூற்பாவாகக் கொள்வர் இளம்பூரணர். இந் நூற்பாவிற்குரிய உரை நச்சினார்க்கினியர் உரையைத் தழுவியதாகும்.

முதற்காரணமாவது : காரியத்தோடு ஒற்றுமை உடையது.

துணைக்காரணமாவது : அம் முதற் காரணத்திற்குத் துணையாகிய வினை முதலிய எட்டும்.

கருவியாவது : வினைமுதல் தொழில் பயனைச் செயப்படு பொருட் கண் உய்ப்பது.

அதுவும் இயற்றுதற்குக் கருவியாகிய காரகக் கருவியும், ஞாபகக் கருவியும் என இருவகைப்படும்.

'ஊசியொடு குயின்ற தூசும் பட்டும்' என்பது காரகக் கருவி.

அது ஊசி கொண்டு சாத்தன் குயிலுதலைச் செய்யப்பட்ட தூசும், பட்டும் என்னும் பொருட்டு ; சாத்தன் தொழிற் பயனை ஊசி, தூசிலும் பட்டிலும் நிகழ்த்திற்று.

'மண்ணான் இயன்ற குடம்' என்பது முதற்காரணம். இதுவும் காரகக் கருவி.

'உணர்வினான் உணராதான்;' புகையினால் எரி உள்ளது உணர்ந்தான், இவை ஞாபகக் கருவி.

இவற்றிற்கு உணர்வு முதற்காரணம்.

காரகமாவது :—தொழிலை இயற்றுவிப்பது.

ஞாபகமாவது :—அறிவிப்பது.

இனி, ஆன் :—அகத்தியனால் தமிழ் உரைக்கப்பட்டது, வேலான் எறிந்தான் என வரும்.

வினை முதல் கருவிக்கண் ஒடு என் உருபு இக்காலத்து அருகியல்லது வாராது.

ஒடு :— "உலகத்தோடு ஒட்ட ஒழுகல்;" (குறள்—140)

"காவோ டறக்குளந் தொட்டானும்;" (திரிகடுகம்—70)

"நாவீற் றிருந்த புலமா மகளோடு நன்பொன்
பூவீற் றிருந்த" (சீவக—30)

எனவும் வரும். (கஉ)

மூன்றாவதன் பொருள் பற்றி வரும் வாய்பாடுகள்

எ௩. அதனின் இயறல் அதற்றகு கிளவி
அதன்வினைப் படுதல் அதனின் ஆதல்
அதனிற் கோடல் அதனொடு மயங்கல்
அதனொ(டு) இயைந்த ஒருவினைக் கிளவி
அதனொ(டு) இயைந்த வேறுவினைக் கிளவி

அதனொ(டு) இயைந்த ஒப்பல் ஒப்புரை
இன்னான் ஏது ஈங்கென வரூஉம்
அன்ன பிறவும் அதன்பால என்மனார்.

(எ - டு.) (1) அதனின் இயறல்: மண்ணான் இயன்ற குடம்.

(2) அதற்றகு கிளவி: வாயால் தக்கது வாய்ச்சி, அறிவான் அமைந்த சான்றோர்.

இவை கருவிப் பாற்படும்.

(3) அதன் வினைப்படுதல்: நாயால் கோட்பட்டான், சாத்தனான் முடியும் இக் கருமம்.

இவை வினைமுதற்பாற்படும்.

(4) அதனினாதல் என்பது: வாணிகத்தான் ஆயினான்.

(5) அதனிற் கோடல்: காணத்தாற் கொண்ட அரிசி.

இவையும் கருவிப் பாற்படும்.

இவை ஐந்து பொருளும் 'ஒடு' உருபிற்கும் சிறுபான்மை உரிய வாயினும், பெரும்பான்மை பற்றி 'ஆன்' உருபிற்கே உரிய போலக் கூறினார்.

(1) அதனொடு மயங்கல்: எள்ளொடு விராய அரிசி.

(2) அதனொடு இயைந்த ஒருவினைக் கிளவி: ஆசிரியனொடு வந்தான் மாணாக்கன்; வருதல் தொழில் இருவர்க்கும் ஒத்தலின் ஒருவினைக் கிளவி ஆயிற்று.

(3) அதனொடு இயைந்த வேறுவினைக் கிளவி: மலையொடு பொருத மால்யானை. மலைக்கு வினை இன்மையின் இது வேறுவினைக் கிளவி ஆயிற்று.

(4) அதனொடு இயைந்த ஒப்பல் ஒப்புரை: பொன்னொடு இரும் பனையர், நின்னொடு பிறர்; ஒப்பில்லதனை ஒப்பாகக் கூறுதலின் ஒப்பல் ஒப்புரை ஆயிற்று.

இந்நான்கற்கும் உடனிகழ்தல் தொழில் பொது என்பதூஉம், அவை ஒடு எனும் உருபிற்கே உரிய என்பதூஉம் உணர்த்திய அதனோடியைதல் நான்கற்கும் கூறினார்.

*இன்னானேது: இன்னும் ஆனும் ஏதுவின்கண் வரும். முயற்சியிற் பிறத்தலான் ஒலி நிலையாது; தவத்தான் பெற்றான் வீடு.

அதனினாதல் காரக ஏது முன் கூறப்பட்டமையான், இது ஞாபக ஏதுவாம்.

---

* இது சேனாவரையர் காட்டிய எடுத்துக் காட்டாகும்.

ஐந்தாவதற்குரிய இன் உருபு ஈண்டுச் சொல்லியது, இன்னும் ஆனும் ஏதுப்பொருண்மைக்கு உரியன என்று வரையறை செய்தற் பொருட்டு. இன்னான் என்பது உம்மைத் தொகை.

*இன்னான் என்பது; கண்ணாற் கொத்தை அவன், காலான் முடவன் அவன் என்றுமாம்.

சினை வினை முதற்கேறியவாறு.

என என்பதனை மாற்றி, ஏது என்பதன்பின் கொடுத்து 'இங்கு வரூஉம் அன்ன பிறவும்' என அமைக்க.

"உறழ் மணியான் உயர்மருப்பின"

"பெண்டகையால் பேரமர்க் கட்டு"

இவை ஆன் ஒடு உருபு ஆயிற்று.

"மனத்தொடு வாய்மை மொழியில்."

இது ஒடு ஆன் ஆயிற்று.

'அன்ன பிறவும்' என்றதனால்,

"தூங்கு கையான் ஓங்கு நடைய"

"மதியொடு ஒக்கும் முகம்"

"சூலொடு கழுதை பாரஞ் சுமந்தது."

இது கட்புலன் ஆகா ஒருவினை ஒடு என்று அறிக. (௧௩)

நான்காம் வேற்றுமை

௭௪. †நான்கா குவதே,
குஎனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
எப்பொரு ளாயினும் ‡கொள்ளுமற் றதுவே.

(இ - ள்.) மேல் கு எனப் பெயர் கொடுத்து ஓதப்பட்ட வேற்றுமைக் கிளவி நான்காவதாம். அஃது யாதானும் ஒரு பொருளாயினும் அதனைத் தான் ஏற்று நிற்கும் என்றவாறு.

(எ - டு.) 'அந்தணர்க்கு ஆவைக் கொடுத்தான்' என வரும்.

'மாணாக்கற்கு நூற்பொருளை உரைத்தான்' எனக் கொடைப் பொருளவாகிய சொல்லான் அன்றிப், பிற வாய்பாட்டாற் கூறப்படுவனவும், 'மாணாக்கற்கு அறிவு கொடுத்தான்' எனக் கொடுப்பான் பொருளாய்க் கொள்வான்கட் செல்லாது ஆண்டுத் தோன்றும் பொருளும் அடங்குவதற்கு 'எப்பொரு ளாயினும்' என்றார். (௧௪)

---

* இது இளம்பூரணர் காட்டிய எடுத்துக்காட்டாகும்.

† இந்நூற்பாவிற்குரிய உரையும் விளக்கமும் சேனாவரையர் உரையைத் தழுவியதாகும்.

‡ 'கொள்ளு மதுவே' என்பது பிற உரையாசிரியர்கள் கொண்ட பாடம்.

நான்காவதன் பொருள் பற்றி வரும் வாய்பாடுகள்

௭௭. *அதற்குவினை யுடைமையின் அதற்குடம் படுதலின்
அதற்குப்படு பொருளின் அதுவாகு கிளவியின்
அதற்கியாப் புடைமையின் அதற்பொருட் டாகலின்
நட்பின் பகையின் காதலின் சிறப்பினென்
றப்பொருட் கிளவியும் அதன்பால என்மனார்.

(எ - டு.) அதற்குவினை உடைமையின்: கரும்பிற்கு வேலி; மயிர்க்கு எண்ணெய்; மேனிக்கு மஞ்சள்; உயிர்க்கு உண்டி என்பன.

வினை - ஈண்டு உபகாரம்.

அதற்கு உடம்படுதலின்: சாத்தற்கு மகள் உடம்பட்டார்; சான்றோர் கொலைக்கு உடன்பட்டார் என்பன.

அதற்குப் படு பொருளின்: சாத்தற்குக் கூறு கொற்றன்; கொற்றற்குக் கூறு தேவன் என்பன.

பொதுவாகிய பொருளைப் பகுக்குங்கால் ஒருவற்குப் படும் பொருள் என அறிக.

அதுவாகு கிளவியின்: †கடி சூத்திரத்திற்குப் பொன்.

பொன் கடி சூத்திரமாய்த் திரியும் ஆதலின் அதுவாகு கிளவி என்றார். கிளவி—பொருள்.

அதற்கியாப் புடைமையின் :கைக்கியாப்புடையது கடகம் என்பது.

அதற் பொருட்டாகலின், கூழிற்குக் குற்றேவல் செய்யும்; வரிசைக்கு உழும் என்பன.

நட்பின் : அவற்கு நட்டான்; அவற்குத் தமன் என்பன.

பகையின் : அவற்குப் பகை; அவற்கு மாற்றான் என்பன.

காதலின் : நட்டாற்குக் காதலன்; புதல்வற்கு அன்புறும் என்பன.

சிறப்பின் : வடுகரசர்க்குச் சிறந்தார் சோழிய அரசர்; கற்பார்க்குச் சிறந்தது செவி என்பன.

'அப் பொருள்' என்றது அதன் பொருள்; அது அன்னபிறவும் என்ற வாறும். அது இவ் வாடையும் அந்நூலால் இயன்றது என்றது போலக் கொள்க.

'அப்பொருட் கிளவியும்' என்றதனால், பிணிக்கு மருந்து; நட்டாற்குத் தோற்றலை நாணாதோன்'; அவற்குத் தக்கான் இவன் ; உற்றாற்குரியர்

---

* இந் நூற்பாவிற்குரிய உரையும் விளக்கமும் சேனாவரையர் உரையைத் தழுவியதாகும்.

† கடிசூத்திரம்—அரை ஞாண்.

பொற்றொடி மகளிர்; இச் சொற்குப் பொருளிது; அவற்குச் சோறு உண்டு; நினக்கு வலி வாள்; மக்கட்குப்பகை பாம்பு; இவ்வூர்க்கு அவ்வூர் காதம்; மனைக்குப்பாழ் வாணுதல் இன்மை என்பன கொள்க. (கஔ)

ஐந்தாம் வேற்றுமை

எஅ. *ஐந்தா குவதே,
இன் எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
இதனின் இற்றிது என்னும் அதுவே.

(எ - து.) மேல் இன் எனப் பெயர் கொடுத்து ஓதப்பட்ட வேற்றுமைக் கிளவி ஐந்தாவதாம். அஃது இப்பொருளின் இத்தன்மைத்து இப்பொருள் என்னும் பொருண்மையை உணர்த்தும்.

ஐந்தாவது பொருவும், எல்லையும், நீக்கமும், ஏதுவும் என்னும் நான்கு பொருண்மைத்து.

அவற்றுள் 'பொரு' இருவகைப்படும்; உறழ் பொருவும், உவமைப் பொருவும் என.

உறழ்தல் - ஒன்றின் ஒன்றை மிகுத்தல்.

'ஏதுவும்' இருவகைப்படும்; ஞாபக ஏதுவும், காரக ஏதுவும் என.

அவற்றுள் ஞாபக ஏதுப் பொருண்மை மேலே கூறப்பட்டது, காரக ஏதுப் பொருண்மை அச்சம், ஆக்கம் என்பனவற்றாற் பெறப்படும்.

'நீக்கப்' பொருண்மை தீர்தல், பற்று விடுதல் என்பனவற்றாற் பெறப்படும்.

ஏனை இரண்டும் இதனின் இற்றிது என்பதனாற் கொள்ளப்படும், அவ் விரண்டினையும் அஃது இருமுறையான் உணர்த்தும் ஆகலான்.

'எல்லைப்' பொருள்: கருவூரின் கிழக்கு இவ்வூர்; இதனின் வடங்கு இது என வரும்.

கிழக்கு, வடங்கு என்பன, அவை வினைக்குறிப்பல்ல வேனும், இற்றென்னும் பொருள்பட நிற்றலின், இற்று என்றலையாம்.

பொருவுப் பொருட்கு உதாரணம் முன்னர்க் காட்டுதும். (கசு)

---

* இந்நூற்பாவிற்குரிய உரையும் விளக்கமும் சேனாவரையர் உரையைத் தழுவியதாகும். இந்நூற்பாவையும் அடுத்த நூற்பாவினையும் இணைத்து ஒரே நூற்பாவாகக் கொள்வர் இளம்பூரணர்.

ஐந்தாவதன் பொருண்மைக் குரிய வாய்பாடுகள்

௭௯. வண்ணம் வடிவே அளவே சுவையே
தண்மை வெம்மை அச்சம் என்று
நன்மை தீமை சிறுமை பெருமை
வன்மை மென்மை கடுமை என்று
முதுமை இளமை இறத்தல் இழித்தல்
புதுமை பழமை ஆக்கம் என்று
இன்மை உடைமை நாற்றம் தீர்தல்
புதுமை சிறுமை பற்றுவிடுதல் என்
றன்ன பிறவும் அதன்பால என்மனார்.

(**எ - து.**) வண்ணம் முதலாகப் பற்றுவிடுதல் ஈறுகச் சொல்லப்பட்டனவும், அவை போல்வன பிறவும் ஐந்தாம் வேற்றுமைத் திறத்தனவாம் என்று கூறுவர்.

வண்ணம் : வெண்மை, கருமை முதலாயின.

வடிவு : வட்டம், சதுரம் முதலாயின.

அளவு : நெடுமை, குறுமை முதலாயின.

சுவை : கைப்பு, புளிப்பு முதலாயின.

நாற்றம் : பூதி நாற்றம், என்பு நாற்றம் முதலாயின.

(எ - டு.) 'காக்கையிற் கரிது களம்பழம்' என்புழி இதனின் என்பது காக்கையின்; இற்றென்பது கரிது: இது என்பது களம் பழம்.

இதனின் வட்டம் இது,
இதனின் நெடிது இது,
இதனின் தீவிது இது,
இதனின் தண்ணிது இது,
இதனின் வெய்ய திது,
இதனின் நன் றிது,
இதனின் தீது இது,
இதனின் சிறிது இது,
இதனின் பெரிது இது,
இதனின் வலிது இது,
இதனின் மெலிது இது,

இதனின் கடிது இது,
இதனின் முதிது இது,
இதனின் இளைது இது,
இதனின் சிறந்தது இது,
இதனின் இழிந்தது இது,
இதனிற் புதிது இது,
இதனிற் பழைது இது,
இவனின் இலன் இவன்,
இவனின் உடையன் இவன்,
இதனின் நாறும் இது,
இதனிற் பல இவை,
இதனிற் சில இவை,

இவற்றிற்கு இருவகைப் பொருளும் விரிக்க.

அச்சம்: கள்ளரின் அஞ்சும்.

ஆக்கம்: வாணிகத்தான் ஆயினான்.

தீர்தல்: ஊரின் தீர்ந்தான், *தலையின் இழிந்த மயிரனையர்.

பற்று விடுதல்: காமத்திற் பற்று விட்டான் என வரும்.

'அன்ன பிறவும்' என்றதனால், அவனின் அளியன் இவன், அதனிற் சேயது இது, இகழ்ச்சியிற் கெட்டான், †மகிழ்ச்சியின் மைந்துற்றான் என்பன போல்வன கொள்க.

அவற்றுள் பொருஉப் பொருள் பெருஞ் சிறப்பிற்று ஆகலான் முன் வைத்துப் பல வாய்பாட்டான் விரித்தார். (௭௯)

ஆறும் வேற்றுமை

௮௦. ‡ஆறு குவதே,
அதுஎனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
தன்னினும் பிறிதினும் இதன திதுவெனும்
அன்ன கிளவிக் கிழமைத் ததுவே.

---

* 'தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை (குறள்-964.)

† இகழ்ச்சியிற் கெட்டாரை யுள்ளுக தாந்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போது' (குறள்-539.)

‡ இதனையும் அடுத்த நூற்பாவினையும் இணைத்து ஒரே நூற்பாவாகக் கொள்வர் இளம்பூரணர்.

(எ - து.) மேல் அது என்று பெயர் கொடுத்து ஓதப்பட்ட வேற்றுமைச்சொல் ஆறுவதாம். அது ஒரு பொருளினது உடைமைப் பொருளாய் நிற்கும் தன்னோடு ஒற்றுமையுடைய பொருளானும், ஒரு பொருளினது உடைமைப் பொருளாய் நிற்கும் தன்னின் வேறாகிய பொருளானும், இப்பொருளினுடையது இப்பொருள் என்பதுபட நிற்கும் அன்ன கிளவியால் தோன்றும் கிழமையைப் பொருளாக வுடைத்து.

'தன்னினும் பிறிதினுமாகிய கிழமைத்து' என்னாது 'இதனது இது எனும் அன்ன கிளவிக் கிழமைத்து' என்றது என்னை? எனின்; பொருட் கிழமையும், பண்புக் கிழமையும், தொழிற் கிழமையும் அவை போல்வன பிறவும் எனக்கிழமைதாம் பல. அவற்றுள் ஒன்று சுட்டாது 'இதனது இது' என்னும் சொல்லால் தோன்றும் கிழமை மாத்திரம் சுட்டும் என்றற்கு 'இதனதிது வெனும் அன்ன கிளவிக் கிழமைத்து' என்றார்.

ஒருமை மாத்திரம் அன்றி 'இதனது இவை' என்னும் பன்மை யுருபுத் தொடரும் அடங்குதற்கு 'அன்ன கிளவி' என்றார்.

(எ - டு.) சாத்தனது ஆடை, தனது வெள்வேல், வானவன் கொல்லி மிசை என வரும்.

தற்கிழமை ஐந்து வகைப்படும். அவை,

"ஒன்றுபல குழீஇயதும் வேறுபல குழீஇயதும்
ஒன்றியற் கிழமையும் உறுப்பின் கிழமையும்
மெய்திரிந் தாகிய துமென ஐம்பால்
உரிமையும் அதன் தற்கிழமை"

என்பது அகத்தியம் ஆகலின்.

இனிப், பிறிதின் கிழமை மூவகைப்படும்: பொருளின் கிழமையும், நிலத்தின் கிழமையும், காலத்தின் கிழமையும் என.

இவற்றிற்கு உதாரணம் முன்னர்க் காட்டுதும். (௧௮)

ஆறுவதன் பொருள் பற்றி வரும் வாய்பாடுகள்

௮௧. *இயற்கையின் உடைமையின் முறைமையின் கிழமையின்
செயற்கையின் முதுமையின் வினையின் என்று
கருவியின் துணையின் கலத்தின் முதலின்
ஒருவழி உறுப்பின் குழுவின் என்று

* இந்நூற்பாவிற்குரிய எடுத்துக் காட்டுக்களும் விளக்கமும் சேனாவரையர் உரையைத் தழுவியதாகும்.

தெரிந்துமொழிச் செய்தியின் நிலையின் வாழ்ச்சியின்
திரிந்து வேறுபடும் பிறவும் அன்ன
கூறிய மருங்கில் தோன்றுங் கிளவி
ஆறன் பால என்மனார் புலவர்.

(எ - டு.) குழுவின்: 'எள்ளது குப்பை'; இது ஒன்றுபல குழீஇய தற்கிழமை.

'படையது குழாம்'; இது வேறு பல குழீஇய தற்கிழமை. இது யானை தேர் குதிரை காலாள் ஆதலால் வேறாயிற்று.

இயற்கை: சாத்தனது இயற்கை, நிலத்தது அகலம் என்பன ஒன்றியற் கிழமை.

நிலை: சாத்தனது நிலைமை, சாத்தனது இல்லாண்மை என்பன நிலைக்கிழமை. இவையும் ஒன்றியற் கிழமை.

உறுப்பு: யானையது கோடு, புலியது உகிர் என்பன உறுப்பின் கிழமை.

உறுப்பாவது ஒரு பொருளின் ஏகதேசம் என்பது அறிவித்தற்கு 'ஒருவழி யுறுப்பு' என்றார்.

செயற்கை: சாத்தனது செயற்கை, சாத்தனது கற்றறிவு என்பன செயற்கைக் கிழமை. அது தன்மை திரிந்து வேறோர் தன்மையாதல்.

முதுமை: அரசனது முதுமை, அரசனது முதிர்வு என்பன முதுமைக் கிழமை.

முதுமை என்பது பிறிதோர் காரணம் பற்றாது, காலம் பற்றி ஒரு தலையாகப் பொருட்கண் தோன்றும் பருவம் ஆதலிற் செயற்கையுள் அடக்காது வேறு கூறினார்.

வினை: சாத்தனது தொழில், சாத்தனது செலவு என்பன வினைக் கிழமை.

இவை மெய் திரிந்தாகிய தற்கிழமை.

உடைமை: சாத்தனது உடைமை, சாத்தனது தோட்டம் என்பன உடைமைக் கிழமை.

முறைமை: மறியது தாய், மறியது தந்தை என்பன முறைமைக் கிழமை.

கருவி: இசையது கருவி, வனைகலத்தது திகிரி என்பன கருவிக் கிழமை.

துணை: அவனது துணை, அவனது இணங்கு என்பன துணைக் கிழமை.

கலம்: கலமாவது ஒலை. நிலத்தது ஒற்றிக்கலம், சாத்தனது விலைத் தீட்டு என்பன கலக்கிழமை.

முதல்: ஒற்றியது முதல், ஒற்றியது பொருள் என்பன முதற்கிழமை.

தெரிந்து மொழிச் செய்தி: கபிலரது பாட்டு. தெரிந்து மொழியால் செயப்படுதலின் தெரிந்து மொழிச் செய்தி ஆயிற்று.

பரணரது பாட்டியல் என்பது செய்திக் கிழமை. இவை பாரியது பாட்டு எனவும் நிற்றலின் இருபொருட்கும் உரியவாம்.

இவை பொருட் பிறிதின் கிழமை.

கிழமை: முருகனது குறிஞ்சி நிலம், வெள்ளியது ஆட்சி என்பன கிழமைக்கிழமை. இவை முறையே நிலப் பிறிதின் கிழமையும், காலப் பிறிதின் கிழமையும்.

வாழ்ச்சி: காட்டது யானை; இது பொருட் பிறிதின் கிழமை. யானையது காடு; இது நிலப் பிறிதின் கிழமை. இவ் வாழ்ச்சி வாழ்தலை உணர்த்துங்கால் தற்கிழமையுமாம்.

'திரிந்து வேறுபடூஉம் அன்ன பிறவும்' என்றதனான், எள் சாந்து, கோட்டு நூறு என்பன முழுவதூஉம் திரிந்தன.

சாத்தனது தேர்ப் புரவி, தொகையது விரி, பொருளது கேடு, சொல்லது பொருள், இவை சிறிது திரிந்தன.

இவ்வாய்பாடுகள் மேற் சொல்லப்பட்ட தற்கிழமை, பிறிதின் கிழமை என்பனவற்றை விரித்தவாறு அறிக. (௭௧)

ஏழாம் வேற்றுமை

௮௨. *ஏழா குவதே,
கண்ணெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
வினைசெய் இடத்தின் நிலத்தின் காலத்தின்
அனைவகைக் குறிப்பில் தோன்றும் அதுவே.

(இ - ள்.) கண் என்று பெயர் கொடுத்து ஓதப்பட்ட வேற்றுமைச் சொல் ஏழாவதாம். அது வினை செய்யா நிற்றலாகிய இடத்தின் கண்ணும், வினை நிகழாது வரையறை யுடையதோர் இடத்தின் கண்ணும், வினை நிகழாது வரையறைப்பட்டு நிற்கும் காலமாகிய இடத்தின் கண்ணும், என மூவகைக் குறிப்பின் கண்ணும் தோன்றும்.

எனவே ஏழாவது இடப் பொருட்டு ஆயிற்று.

(எ - டு.) தட்டுப் புடைக்கண் வந்தான், மாடத்தின்கண் இருந்தான், கூதிர்க்கண் வந்தான் எனவரும்.

---

* இதனையும் அடுத்த நூற்பாவினையும் இணைத்து ஒரே நூற்பாவாகக் கொள்வர் இளம்பூரணர்.

இவை இடமும், இடத்தின் நிகழ்பொருளும் வேறாய் வந்தன.

'குன்றத்துக்கண் குவடு,; இது அவ்விரண்டும் ஒன்றாய் வந்தது.

'குறிப்பில் தோன்றும்' என்றவற்றை இடம் எனக் கருதியவழி, அவ்வேற்றுமை தோன்றும் இடமாகக் குறிக்கப்படாத வழி அப்பெயர்க் கண் அவ்வேற்றுமை தோன்றாது என்பதாம். (௨0)

ஏழாம் வேற்றுமை உருபுகள்

௮௩. கண்கால் புறம்அகம் உள்உழை கீழ்மேல்
பின்சார் அயல்புடை தேவகை எனாஅ
முன்இடை கடைதலை வலம்இடம் எனாஅ
அன்ன பிறவும் அதன்பால என்மனார்.

(எ - து.) கண் என்னும் பொருளும், கால் முதலாகப் புடை ஈறாக ஓதப்பட்ட வுருபுகளும, தேவகை என்னும் திசைக் கூற்றுப் பொருண்மையும், முன் முதலாக இடம் ஈறாக ஓதப்பட்ட உருபு களும், அவை போல்வன பிறவுருபுகளும் அவ்வேழாவதன் கூற்றன என்று கூறுவர் புலவர்.

சிறந்த 'கண்' என் உருபு முற்கூறி, மீட்டும் கண் என்பதனைச் சிறப்பில்லா உருபுகளோடு எடுத்து ஓதினார்; 'கண்ணகன் ஞாலம்' என்புழி அக்கண், ஞாலந்தன்னையே உணர்த்தி, ஓரிடத்தினை வரையறுத்து உணர்த்தாது நிற்பதோர் இடைச் சொல் என்பது உணர்த்துதற்கு.

'தேவகை' என்னும் பொருள் வரையறைப்படாது சொல்லுவான் குறிப்பிற்றாய் நிற்றலின் நிலத்துள் அடக்கார் ஆயினர்.

அவ் விரண்டு பொருட்கும் வேறோர் சூத்திரம் செய்யாது, இவ்வுருபுகளுடனே ஓதினார், சூத்திரம் சுருங்குதற்கு.

இச் சூத்திரத்தாற் கூறிய உருபுகள், ஓரிடத்தின் ஏக தேசத்தினை வரையறுத்து உணர்த்தும் வழி ஆறாவதனை உணர்த்தியும், ஓரிடத்தினை வரையறுத்து உணர்த்தாது, கண் என்பது போல இடம் என முழுதுணர்வு செல நின்றுழி ஏழாவதனையே உணர்த்தியும் நிற்கும் சிறப்பின்மை கருதி வேறாக எடுத்தோதினார்.

(எ - டு.) ஊர்க்கால் இருந்தான்,
ஊர்ப்புறத்து இருந்தான்,
மாடத்தகத்து இருந்தான்,
ஊருள் இருந்தான்,

சான்றோருழைச் சென்றான்,
மாடத்துக் கீழ் இருந்தான்,
மாடத்து மேல் இருந்தான்,
ஏர்ப்பின் சென்றான்,
காட்டுச் சார் ஓடுங் களிறு,
ஊரயல் இருந்தான்,
ஊர்ப்புடை இருந்தான்,
வடக்கண் வேங்கடம்,
தெற்கண் குமரி,
கீழ்க்கண் கடல்,
மேற்கண் மலை,
தேர்முன் சென்றான்,
சான்றோர் இடை இருந்தான்,
கோயிற் கடைச் சென்றான்,
தந்தை தலைச் சென்றான்,
கைவலத்துள்ளது கொடுக்கும்,
கையிடத்துப் பொருள்.

அன்ன பிறவால் வருவன:— குடத்திலே விளக்கு, ஊரிலே இருந்தான், 'கிழவோள் தேத்து', கிழவி மாட்டு எனவும்; பொருட்கண் உணர்வு, மலர்க்கண் நாற்றம், ஆகாயத்துக்கண் பருந்து எனவும் வரும்.

இன்னும். மணியின்கண் ஒளி, கையின்கண் விரல், நிறத்தின் கண் எழில், ஆடற்கண் அழகு எனக் கிழமையும், சினையும், பண்பும், வினைப்பெயரும் பற்றி வரும்.

*இனிக், கண், கால் முதலான உருபை விளக்குதற்கு அவ்வுருபின் பொருளாய் நின்று கண்ணெனுருபு விரித்துக் கொண்டு நின்ற 'தேரின் கண்' என்னும் பொருளாவது, கண் என்னும் இடைச் சொல்லான் உணர்த்தப்படும் இடப் பொருண்மை என்று பொருள் உரைத்தாற் பின் வருகின்ற இடப் பொருண்மையை முன்னும் கூறிற்றாம்; ஆதலிற், கூறியது கூறிற்றேயாம்.

அல்லதூஉம், 'கண்ணகன் ஞாலம்' என்புழிக் கண் என்னும் இடைச் சொல்லான் உணர்த்திலே இடப் பொருண்மை குறிக்கும் இடத்துக் கண்ணின், கண் என் உருபு மீட்டுங் கூறல் வேண்டும்.

அல்லதூஉம், 'கண்ணின்று கூறுதல் ஆற்றான் அவனாயின்' என்புழி என்கணின்று எனத் தோன்றா எழுவாய் நின்று கண் என் உருபு ஏற்று நின்றதாம்.

அல்லதூஉம், 'வடக்கண் வேங்கடம்' என்புழிக் கண் என் உருபு விரித்தலின் ஒழிந்தவற்றிற்கு ஒவ்வாவாம்.

---

* கண்கால் முதலாயின உருபுகளே என்பர் இளம்பூரணர். சேனாவரையர் இக்கருத்தினை மறுப்பர். நச்சினார்க்கினியர் சேனாவரையர் கருத்தினை மறுத்து அவை உருபுகளே என்று நிலைநாட்டியவர். அதனையே இவ்வுரையாசிரியரும் தழுவினர்.

அல்லதூஉம், 'மரத்தின்கீழ்க் கிடந்தவர்', 'மரத்தின் மேல் இருந்த குரங்கு' என்பன முதலியவற்றிற்குக் கண் என் உருபு கொடுத்து உலகம் வழங்காமையும் உணர்க.

ஆதலால் கண், கால், புறம், அகம், உள் என்பன முதலாயின வற்றது பொருள் வேற்றுமை வழக்கு நோக்கி உணர்ந்து கொள்க.

ஆசிரியர் ''கூறிய முறைமையின் உருபு;'' ''இறுதியும் இடையும்'' என்னும் சூத்திரங்களாற், பெயர் இறுதிக்கு முடிக்கும் சொற்கு முன்னுற நிற்பது உருபு என்று கூறினமையானும் பொருளிடை நில்லா மையும் பெற்றும்.

உருபிற்குப் பின்னே அத்துச்சாரியை கொடுத்து முடிந்தது 'பிறி தவண் நிலையலும்' என்பதனுற் கொள்க.

இச் சூத்திரம் ஏழாவதற்கு மூவகைப் பொருட் பாகுபாடன்றி, வேறுபொருட்பாகுபாடு இன்மையின் முன்னையன போலப் பொருளினைப் பகுத்து ஓதாது உருபின் பாகுபாடே கூறியவாறும். (உக)

வேற்றுமை, அன்மொழி ஆகிய இருதொகைகளையும் விரிக்குமாறு

அச. *வேற்றுமைப் பொருளை விரிக்குங் காலை
ஈற்றினின் றியலுந் தொகைவயிற் பிரிந்தே
பல்லா றுகப் பொருள் புணர்ந்(து) இசைக்கும்
எல்லாச் சொல்லும் உரிய என்ப.

(ஏ - து.) வேற்றுமைத் தொகைமைவிரிக்குமாறும், அதற்கு இனமாகிய அன்மொழித்தொகையை விரிக்குமாறும் கூறுகின்றார்.

வேற்றுமைத் தொகைவயின் நின்ற பொருளை, அன்மொழித் தொகைவயின் நின்ற பொருளைவிரிக்கும் காலத்து அவ்வேற்றுமைப் பொருளொடும் அன்மொழிப் பொருளொடும் புணராது பல நெறியாகப் புணர்ந்து ஒலிக்கும் எல்லாச் சொல்லும் விரித்தற்கு உரிய என்று கூறுவர் ஆசிரியர்.

அன்மொழித் தொகை, ஏனைத் தொகைகளின் இறுதியின் நின்றியறலின் 'ஈற்று நின்றியலும்' என்றார்.

(எ - டு) கருங்குழற் பேதை, பொற்றொடியரிவை, மட்குடம் என்னும் வேற்றுமைத் தொகைகள் கருங்குழலையுடைய பேதை பொற் றொடியை அணிந்த அரிவை, மண்ணான் இயன்ற குடம் என விரிந்த வாறும்; தாழ்குழல், பொற்றொடி, மட்காரணம் என்னும் அன்மொழித் தொகைகள் தாழ்குழலையுடையாள், பொற்றொடியை அணிந்தாள், மண் ணாகிய காரணத்தான் இயன்றது என விரிந்தவாறும் காண்க.

---

* இந்நூற்பாவில் முன்னிரண்டடிகளை ஒரு நூற்பாவாகவும் பின் னிரண்டடிகளை ஒரு நூற்பாகவும் கொள்வர் இளம்பூரணர்.

"ஈற்று நின்றியலும் தொகைவயின் வேற்றுமைப் பொருளை விரிக்குங் காலை" எனவும், "ஈற்றில் நின்றியலும் தொகைவயிற் பொருளை விரிக்கும் காலை" எனவும் கூட்டுக.

"சேனாவரையர்" கருத்தும், "உரையாசிரியர்" கருத்தும் இரு திறத்தனவாக மேலே கூறுமாறு காண்க.

"வேற்றுமைப் பொருளை.........உரிய வென்ப"
(என்பது) மேல் வேற்றுமை விரிந்து நிற்குமாறு கூறினார். இதனால் தொக்குழிப்படுமாறு கூறுகின்றார்.

வேற்றுமை தொக்குழி, அவ்வேற்றுமையே அன்றி ஆண்டுப் பிற சொற்களும் உள; அவ்வேற்றுமை போல, வந்து ஒட்டி நிற்பன. அவையெல்லாம், வேற்றுமையே போல ஆண்டே தொகுத்தலும், பின் விரித்தலும் உரிய என்பர்.

(எ - டு.) 'குதிரைத்தேர்' என்புழி குதிரையாற் பூட்டப்பட்ட தேர் என விரியும்.

ஆன் என்பது உருபு. பூட்டப்பட்ட என்பன பிற சொற்கள். அவையும் தொக்கும் விரிந்தும் நின்றன.

'கருப்புவேலி' என்பதும் அது.

'பல்லாறுகப் பொருள் புணர்ந்திசைக்கும்' என்பது, அங்ஙனம், வேற்றுமைப் பொருட்கு ஏற்ப வந்து ஒட்டுவன பலவும் ஒட்டுதற்கு உரிய.

இன்னும் ஓர் கருத்து:— வேற்றுமை தொக்கது விரிக்குமிடத்து ஒருவகைப் பொருளன்றிப் பலவகைப் பொருளும், அச்சொற்பற்றி ஒட்டப்படும் எல்லாச் சொற்கும் உரிய ஆகும்.

(எ - டு.) நீர்நீந்துடும்பு' என்புழி, நீரை நீந்துடும்பு, நீர்க்குள் நீந்துடும்பு, நீரில் நீந்துடும்பு, நீருள் நீந்துடும்பு எனப் பலவகைப் பொருளும்பட நிற்கும், ஒரு தொகை என்பது.

'குரங்கெறி விளங்காய்;' 'இலைமறைகாய்' எனபனவும் பல பொருள்பட விரித்துக் காண்க.

பிறவும் அன்ன. (உஉ)

வேற்றுமை இயல் முற்றும்.

௩. வேற்றுமை மயங்கியல்

இரண்டாம் வேற்றுமை ஏழாம் வேற்றுமையோடு மயங்கல்.

அ௫. கருமம் அல்லாச் சார்பென் கிளவிக்(கு)
உரிமையும் உடைத்தே கண்என் வேற்றுமை.

(எ - து) இரண்டாவது கருமச் சார்பும், கரும மல்லாச் சார்பும் என இரண்டு வகைத்து. அவ்விரண்டினும் கருமச் சார்ச்சி அல்லாது வரும் 'சார்பு' என்னும் பொருண்மைக்கு ஏழாம் வேற்றுமை உரித்தாதலும் உரித்து.

(எ - டு.) 'தூணைச்சார்ந்தான்' என்பது கருமச்சார்பு; அதனை மெய்யுறச் சார்தலால் கருமம் ஆயிற்று. 'அரசரைச் சார்ந்தான்' என்பது கருமமல்லாச் சார்பு; ஆண்டு மெய்யுறுதல் தொழில் அன்மைபாற் கருமம் இல்லையாயிற்று

இனிக் கருமச் சார்ச்சி அல்லாத விடத்து இரண்டாவதும் ஏழாவதும் மயங்கும்.

(எ - டு.) அரசரைச் சார்ந்தான், அரசர்கட் சார்ந்தான் என வரும்.

உம்மையால் இது சிறுபான்மை. (௧)

இதுவுமது

அ௬. சினைநிலைக் கிளவிக்(கு) ஐயும் கண்ணும்
வினைநிலை யொக்கும் என்மனார் புலவர்.

(எ - து.) சினைப் பொருள்மேல் நிற்கும் சொல்லிற்கு இரண்டாவதும், ஏழாவதும் வினை கூறு நிலைமைக்கண் ஒக்கும் என்பர்.

(எ - டு.) கோட்டைக் குறைத்தான், கோட்டின்கட் குறைத்தான் என்பது. (௨)

இதுவுமது

அஎ. கன்றலும் செலவும் ஒன்றுமார் வினையே.

(எ - து.) கன்றற்கும் செலவிற்கும் வருந்தொழில் ஏழாவதற்கும் ஒக்கும்.

(எ - டு.) சூதினைக் கன்றினான், சூதின்கட் கன்றினான்; நெறியைச் சென்றான். நெறிக்கட் சென்றான் என வரும். (௩)

முதல்சினைப் பெயர்களில் வரும் உருபுகள்

அஅ. *முதற்சினைக் கிளவிக்கு அதுஎன் வேற்றுமை
முதற்கண் வரினே சினைக்குஐ வருமே.

(எ - து.) முதற் சொல்லொடு தொடர்ந்த சினைச் சொல்லிற்கு ஆறுவது முதற்கண் வரின், இரண்டாவது சினைக்கண் வரும்.

(எ - டு.) யானையது கோட்டைக் குறைத்தான் என வரும்.

முதல்—யானை; சினை—கோடு. (௪)

இதுவுமது

அக. முதல்முன் ஐவரின் கண்ணென் வேற்றுமை
சினைமுன் வருதல் தெள்ளி(து) என்ப.

(எ - து.) அம்முதற் சினைக்கண் முதல்முன் இரண்டாவது வரின் சினைக்கு ஏழாவது வருதல் தெள்ளிது என்பர்.

(எ - டு.) யானையைக் கோட்டின்கட் குறைத்தான் என வரும்.

'தெள்ளிது' என்றதனால், யானையைக் கோட்டைக் குறைத்தான் என இரண்டாவது தானேயும் வரும் என்பது. (௫)

முதலும் சினையும் சொல்லுவான் குறிப்பின வாதல்

௯௦. முதலும் சினையும் பொருள் வேறுபடாஅ
நுவலும் காலைச் சொற்குறிப் பினவே.

(எ - து.) முதலாயது முதலேயாய்ச் சினையாயது சினையேயாய்ப் பொருள்கள் தம்முள் வேறுபட நில்லா; சொல்லுங்கால் சொல்லுவானது குறிப்பினானே முதல் என்றும், சினை என்றும் வழங்கப்படும்.

(எ - டு.) கோட்டது நுனியைக் குறைத்தான்; கோட்டது நுனிக்கட் குறைத்தான்; கோட்டை நுனியைக் குறைத்தான் என வரும்.

ஒரு முதலினது சினையை முதலாகக் குறித்தவழி அது தான் முதலாய் நிற்கும் என்பது கருத்து. (௬)

பிண்டப் பெயரும் அவ்வியல்பின வாதல்

௯௧. பிண்டப் பெயரும் ஆயியல் திரியா
பண்டியல் மருங்கின் மரீஇய *பண்பே.

* இதனையும் அடுத்த நூற்பாவினையும் இணைத்து ஒரே நூற்பாவாகக் கொள்வர் தெய்வச்சிலையார்.

* 'மரபே' எனப் பாடம் கொள்வர் பிற உரையாசிரியர்கள்.

(எ - து.) பல பொருள் தொகுதியாய்வரும் பிண்டப் பெயரும், முதலும் சினையுமாய் வரும் இயல்பில் திரியா; முன் முதலும் சினையுமாக வழங்கி வாரா நின்ற முறைமை யுடைத்து.

(எ - டு.) குப்பையது தலையைச் சிதறினான்; குப்பையைத் தலைக்கட் சிதறினான்; குப்பையைத் தலையைச் சிதறினான் என வரும்.

இது வேறுபல குழீஇய படை முதலியவற்றிற்கும் ஒக்கும். (எ)

ஒடு உருபு உயர் பொருளுணர்த்தும் பெயர் வழி வரும் எனல்

கூஉ. ஒருவினை ஒடுச்சொல் உயர்பின் வழித்தே.

(எ - து.) இரண்டு பொருட்கு ஒருவினை கொண்டு வரும் மூன்றும் உருபு உயர்புபற்றி வரும்.

(எ - டு.) அரசரொடு வந்தார் சேவகர் என வரும்.

'உயர்பின் வழித்து' என்றதனால், குலத்தானும், தவத்தானும், ஞானத்தானும், கல்வியானும், வீரத்தானும், உபகாரத்தானும் உயர்பு கொள்க.

(எ - டு.) 'நூற்றுவர் மக்களொடு வந்தான் நாடு காப்பான் அரசன்' எனவும்,

'நாயொடு வந்தான் நம்பி' எனவும் வருவன உபகார உணர்ச்சி என்க. (அ)

ஆக்கமொடு புணர்ந்த ஏது மூன்றன் கண்ணும்
ஐந்தன் கண்ணும் வரும் எனல்

கூ௩. மூன்றனும் ஐந்தனும் தோன்றக் கூறிய
ஆக்கமொடு புணர்ந்த ஏதுக் கிளவி
நோக்கோர் அனைய என்மனார் புலவர்.

(எ - து.) மூன்றாம் வேற்றுமைக் கண்ணும், ஐந்தாம் வேற்றுமைக் கண்ணும் விளங்கச் சொல்லப்பட்ட ஆக்கத்தோடு கூடிய ஏதுப் பொருண்மையை நோக்கும் இடத்து அவ்விரண்டும் ஈண்டு ஒத்த பொருளவாம் என்பர்.

(எ - டு.) வாணிகத்தான் ஆயினான்; வாணிகத்தின் ஆயினான் என வரும். (க)

இரண்டாம் வேற்றுமைக் குரிய நோக்கல் நோக்கம், மூன்றன் கண்ணும் ஐந்தன் கண்ணும் மயங்கும் எனல்

கூச. இரண்டன் மருங்கின் நோக்கல் நோக்கம்அவ்
விரண்டன் மருங்கின் ஏதுவும் ஆகும்.

(எ - து.) இரண்டாவதற்குக் கண்ணால் நோக்கும் நோக்கம், மனத்தால் நோக்கும் நோக்கம் என 'நோக்கம்' இரண்டு வகைப் படும். அவ் விரண்டினுள் மனத்தால் நோக்கும் நோக்கிற்கு, மூன்றாவதற்கும் ஐந்தாவதற்கும் உரிய ஏதுப் பொருண்மையுமாம்.

(எ - டு.) வாளுேக்கி வாழும் என்புழி, வாளை நோக்கி வாழும் என இரண்டாவது விரியும். அவ்வழி வாளான் ஆய பயனைக் கருதி வாழும் எனவும், வாளினுய பயனைக் கருதி வாழும் எனவும், மூன்றாவதும் ஐந்தாவதும் ஏதுவின்கண் ஒத்தன.

நோக்கல் நோக்கமாவது, நோக்கல்லாத நோக்கம்; பொறியால் நோக்கும் நோக்கமன்று; மனத்தால் நோக்கும் நோக்கம் என்ப. (௧0)

ஆறாவதன் பொருளில் வரும் உயர்திணைத் தொகையில் நான்கனுருபு விரிதல்

௯௫. *அதுவென் வேற்றுமை உயர்திணைத் தொகைவயின்
அதுவென் உருபுகெடக் குகரம் வருமே.

(எ - து.) ஆறும் உருபும் உயர்திணைக்கண் விரியுழி, அது என்னும் உருபு கெட்டுக் குகரம் வரும்.

(எ - டு.) 'நம்பி மகன்' என்னுந் தொகை 'நம்பியது மகன்' என்னாது 'நம்பிக்கு மகன்' என விரிந்து வரும்.

நம்பியது மகன் எனின், ஆவினது மகன் என்றாற்போல வழுவாமாறு காண்க. (௧௧)

தடுமாறு தொழிற்பெயரில் இரண்டாவதும் மூன்றாவதும் மயங்கும் எனல்

௯௬. தடுமாறு தொழிற்பெயர்க்(கு) இரண்டும் மூன்றும்
கடிநிலை இலவே பொருள்வயி னான.

(எ - து.) தடுமாறு தொழிற் பெயர்க்கு இரண்டாவதன் பொருளும், மூன்றாவதன் பொருளும் கடியப்படா, ஒக்கும்.

(எ - டு.) 'புலி கொல் யானை' என்புழி, புலி செயப்படு பொருளாயவழி இரண்டாவதும், புலி வினை முதலாய வழி மூன்றாவதும் விரியும். அது புலியைக் கொன்ற யானை, புலியால் கொல்லப்பட்ட யானை எனவரும்.

தடுமாறு தொழிற்கு ஒத்த தொழில் இரண்டற்கும் சேறல். (௧௨)

* இந்நூற்பாவினை இவ்வியல் 99 ஆம் நூற்பாவோடு இயைய வைத்துள்ளார் தெய்வச் சிலையார். அதுவே பொருத்தம் உடைத்து.

மேலதற்கோர் புறனடை

௧எ. ஈற்றுப்பெயர் முன்னர் மெய்யறி பனுவலின்
வேற்றுமை தெரிப வுணரு மோரே.

(எ - நு.) தடுமாறு தொழிலொடு புணர்ந்த இருவகைப் பொருளின் இறுதிப் பெயர் முன்னர் வந்த பொருள் வேறுபாடு உணர்த்தும் சொல்லான் அப்பொருள் வேற்றுமை தெரிவர் உணர்வோர்.

மெய்யறி பனுவல் - பொருள் வேறுபாடு உணர்த்தும் சொல். ஈற்றுப்பெயர் - யானை.

(எ - டு) 'புலி கொல் யானைக் கோடு வந்தன' எனில், புலியால் கொல்லப்பட்ட யானை என்பது விளங்கும். 'புலி கொல் யானை ஓடுகின்றது' எனில், யானை புலியைக் கொன்றது என்பது விளங்கும். இது குறிப்பான் உணரப்படுமாறு காண்க. (௧௩)

ஓம்படைப் பொருளில் இரண்டாவதும் மூன்றுவதும் மயங்கும் எனல்

௧அ. ஓம்படைக் கிளவிக்(கு) ஐயும் ஆனும்
தாம்பிரி(வு) இலவே *தொகைவரு காலே.

(எ - நு.) பாதுகாத்தலாகிய பொருண்மைக்கு, இரண்டா வதும் மூன்றுவதும் ஒத்த உரிமைய வேற்றுமைதொக்க இடத்து.

(எ - டு.) 'புலி போற்றிவா' என்புழி, புலியைப் போற்றிவா என்று விரிப்பினும் அமையும்.

"புலிபோற்றி வாவாழி ஐயஒலி கூந்தல்
நின்னல தியாரும் இலள்."

இதனுள்ளும் காண்க. (௧௪)

வாழ்ச்சிக் கிழமையில் ஏழாவதும் வரும் எனல்

௧௯. ஆறன் மருங்கின் வாழ்ச்சிக் கிழமைக்(கு)
ஏழும் ஆகும் உறைநிலத் தான.

(எ - நு.) ஆறும் வேற்றுமைக்கு ஓதிய வாழ்ச்சிக் கிழமைக்கு உறைநிலப் பெயர் நிலைமொழியாய வழி ஏழாவதும் வரும்.

(எ - டு.) காட்டது யானை - காட்டுள் யானை எனவரும்.

---

* தொகவருகாலே' எனப் பாடங்கொண்டனர் நச்சினார்க்கினியர்.

அந்நிலத்து வாழ்தலின் அதனதெனப்படும். அது பற்றுக் கோடாக உண்டாய் அஃதின்றி விடின், வாழ்தல் இல்லாமையின் என்பது. (௧௫)

கொடைப் பொருளில் நான்காவதும் ஆறாவதும் மயங்கும் எனல்

௧௦௦. குத்தொக வரூஉம் கொடையெதிர் கிளவி
அப்பொருள் ஆறற்கு உரித்தும் ஆகும்.

(எ - து.) நான்காம் வேற்றுமைத் தொகைக்குக் கொடையெதிர்ந்து நின்றவழி ஆறாவது கொடுத்துச் சொல்லவும் அமையும்.

(எ - டு.) நாகர் பலி, நாகர்க்குப் பலி என விரியும். நாகரது பலி என்று ஆறாவதாஉமாய் விரியும்.

நாகர் பலி, நாகர்க்கு நேர்ந்த பலி எனவே பிறர்க்கு ஆகாது அவர் உடைமை ஆயிற்றாகலின், ஆறாவதும் உரித்தாய் ஏற்றது.

சாத்தற்கு நேர்ந்த சோறு என்புழி, அது பிறர்க்கும் ஆதலின் ஆண்டு ஆறாவது ஏலாது.

தெய்வமல்லாத சிறந்தாற்கு நேர்ந்ததேல் ஆண்டு ஆறாவது வரினும் அமையும். (௧௬)

அச்சப் பொருளில் ஐந்தாவதும் இரண்டாவதும் மயங்கல்

௧௦௧. அச்சக் கிளவிக்(கு) ஐந்தும் இரண்டும்
எச்சம் இலவே பொருள்வயி னான.

(எ - து.) அச்சப் பொருளுக்கு ஐந்தாவதும், இரண்டாவதும் ஒத்த கிழமைய, வேற்றுமை தொக அவற்றின் பொருள் நின்றவழி.

(எ - டு.) 'புலி யஞ்சும்' என்பது புலியின் அஞ்சும், புலியை அஞ்சும் என இரண்டும் ஏற்று விரியும்.

எச்சமில: மிகுதி, குறைவுபடாது இரண்டும் ஒக்கும்.

'கள்ளரின் அஞ்சும்' என்பது, அவரினும் மிக அஞ்சும் என்பதாஉம் படும்: அது கொள்ளற்க. 'கள்ளரினுய ஏதம் அஞ்சும்' என்பது கொள்க. (௧௭)

வேற்றுமை மயக்கம் வழக்கில் பிழையாது வரும் எனல்

௧௦௨. அன்ன பிறவுந் தொன்னெறி பிழையா(து)
உருபினும் பொருளினும் மெய்தடு மாறி
இருவயின் நிலையும் வேற்றுமை எல்லாந்
திரிபிடன் இலவே தெரியு மோர்க்கே.

(எ - து.) மேல் மயக்கம் கூறப்பட்ட வேற்றுமையே அன்றி அவை போல்வன பிறவும், தொன்று தொட்டு வரும் வழக்கிற் பிழையாது உருபானும் பொருளானும், ஒன்றன் நிலைக்களத்து ஒன்று சென்று பிறிதொன்றன் பொருளும் தன் பொருளுமாகிய ஈரிடத்தும் நிலைபெறும் வேற்றுமை யெல்லாம் திரிபுடைய அல்ல தெரிந்துணர்வோர்க்கு.

(எ - டு.) 'புலி போற்றிவா' என்பது புலியைப் போற்றிவா என இரண்டாவதன் உருபும், அதன் பொருளும் சென்றது.

'புலியானுய ஏதம் போற்றிவா' என மூன்றாவதன் உருபும் அதன் பொருளும் சென்றது.

'நம்பிக்கு மகன்' என்புழி உருபே சென்றது, அவ்வுருபின் பொருள் சென்றது இல்லை எனின்; "உருபினும் பொருளினும் மெய்தடுமாறி" என்றதனால், உருபு சென்றவழி அவ்வுருபின் பொருளும் செல்லும் என்றே கொள்க.

"பிறவும்" என்றதனால், நோயின் நீங்கினான், நோயை நீங்கினான், சாத்தனை வெகுண்டான் எனவும், 'முறைக்குத்து குத்தினான்' என்பது முறையிற் குத்தினான், முறையாற் குத்தினான் என விரியும்.

கடலொடு காடொட்டாது, கடலைக் காடொட்டாது; தந்தையொடு சூளுற்றான், தந்தையைச் சூளுற்றான் என்றும்.

இவை யெல்லாம், தம் உருபினானும், பொருளினானும் உடன்சென்று தடுமாறி, ஒன்றன் நிலைக்களத்து ஒன்று சென்றவாறு உணர்க. (௧௮)

உருபு தொடர்ந்தடுக்கியவழிப் படுவதோர் மரபு

௧௦௩. உருபுதொடர்ந் தடுக்கிய வேற்றுமைக் கிளவி
ஒருசொல் நடைய பொருள்செல் மருங்கே.

(எ - து.) பல உருபு தொடர்ந்து அடுக்கிய வேற்றுமைச் சொற்கள், இறுதியுருபு முடிந்த முடிபே தமக்கும் முடிபாகவுடைய பொருள் செல்லுமிடத்து.

*(எ - டு.) 'யானையது கோட்டை நுனிக்கட் குறைத்தான்' எனவரும்.

'உருபு தொடர்ந்தடுக்கிய' என்றதனால், †ஓருருபு தொடர்ந்தடுக்கலும் கொள்க.

---

* இவ்வெடுத்துக் காட்டு இளம்பூரணர் காட்டியதாகும். இதனைச் சேனாவரையர் மறுப்பர். அதனை நச்சினார்க்கினியர் மறுப்பர். இத்திற மெல்லாம் அவரவர் உரை நோக்கியறிக.

† ஓருருபே தொடர்ந்து அடுக்கலுக்குத் தெய்வச்சிலையார் தக்க எடுத்துக்காட்டுக்கள் காட்டியுள்ளார். அவற்றை யாம் இக்கழகவழிப் பதிப்பித்துள்ள தெய்வச்சிலையார் உரையில் காண்க. (தெய்வச்.-பக்.-63, 64)

(எ - டு.) "என்னொடும் நின்னொடும் சூழாது"

எனவும்,

"அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்"

எனவும் வரும். (௧௯)

வேற்றுமை உருபுகள் விரிந்து நிற்கும் இடம்

௧௦௪. இறுதியும் இடையும் எல்லா உருபும்
நெறிபடு பொருள்வயின் நிலவுதல் வரையார்.

(எ - து.) இறுதிக்கண்ணும், இடைக்கண்ணும் ஆறு உருபும் தமக்கு ஒதிய பொருட்கண் விரிந்து நிற்றலை நீக்கார்.

(எ - டு.) கடந்தான் நிலத்தை, வந்தான் சாத்தனொடு, கொடுத்தான் சாத்தற்கு வலியன் சாத்தனின், ஆடை சாத்தனது, இருந்தான் குன்றத்துக்கண் என இறுதிக்கண் வந்தவாறு.

நிலத்தைக் கடந்தான், சாத்தனொடு வந்தான், சாத்தற்குக் கொடுத்தான், சாத்தனின் வலியன், சாத்தனது ஆடை, குன்றத்துக் கண் இருந்தான் என்பன இடைக்கண் நின்றவாறு. (௨௦)

ஆறனுருபு பிற உருபுகளை ஏற்றலும், ஆறுருபுகளும் தொக்கு வருதலும்

௧௦௫. பிறிதுபிறி(து) ஏற்றலும் உருபுதொக வருதலும்
நெறிபட வழங்கிய வழிமருங் கென்ப.

(எ - து.) ஓர் உருபு ஓர் உருபினை ஏற்றலும், ஆறு உருபும் தொக்கு நிற்றலும் நெறிபட வழங்கிய வழக்கைச் சார்ந்தது என்பர்.

ஓர் உருபு ஓர் உருபை ஏற்கும் உருபு ஆறும் உருபு; மற்றையன ஏலா. அஃது உருபு ஏற்புழித்தன்னை ஒழிய அல்லன வற்றை ஏற்கும்.

(எ - டு.) சாத்தனதனை, சாத்தனதனொடு, சாத்தனதற்கு, சாத்தனதனின், சாத்தனதன் கண் எனவரும்.

நிலங்கடந்தான், தாய்மூவர், கருப்பு வேலி, வரைவீழருவி, சாத்தன் கை, குன்றக் கூகை எனத் தொக்கு வந்தன.

சாத்தன் தனது எனத் தன்னை ஏற்றலும் உரையிற் கொள்க. (௨௧)

எய்தியது விலக்கியது

௧௦௬. ஐயும் கண்ணும் அல்லாப் பொருள்வயின்
மெய்யுருபு தொகா இறுதி யான.

(எ - து.) இரண்டாவது வேற்றுமைப் பொருளும், ஏழாவது வேற்றுமைப் பொருளும் அல்லாத பிற பொருள்மேல் நின்ற உருபு, தொடர்மொழி இறுதிக்கண் தொக்கு நில்லா.

எனவே அவ்விரண்டு உருபும் இறுதிக்கண் தொக்கும் விரிந்தும் நிற்கும். அல்லாதன இறுதிக்கண் விரிந்தே நிற்கும்.

(எ - டு.) கடந்தான் நிலம், கடந்தான் நிலத்தை; இருந்தான் குன்றத்து, இருந்தான் குன்றத்துக்கண் என இருவகையும் ஆயிற்று.

வந்தான் சாத்தனொடு, கொடுத்தான் சாத்தற்கு, வலியன் சாத்தனின், ஆடை சாத்தனது என விரிந்து நின்றவாறு. (௨௨)

உருபு மயக்கம்

௧0௭. *யாதன் உருபிற் கூறிற் றாயினும்
பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும்.

(எ - து.) ஒரு சொல் யாதானும் ஓர் உருபினாற் கூறப்பட்டதாயினும், அவ்வுருபிற்குப் பொருள் இயையாத வழிப்பொருள் செல்லும் பக்கத்துப்பொருந்தும் வேற்றுமையைச் சாரும்.

(எ - டு.) "கிளையரி நாணல் கிழங்கு மணற்கீன்ற
முளையோ ரன்ன முள்எயிற்றுத் துவர்வாய்"

என்புழி நான்காவது கொள்ளாது 'மணலுள் ஈன்றது' என ஏழாவது கொள்க.

†"கொக்கினுக் கொழிந்த தீம்பழம்" (நற் - 280)

என்புழி, 'கொக்கினின்றும்' என ஐந்தாவதன் பொருளாயிற்று.

பிறவும் வந்த வழிக் காண்க. (௨௩)

வேற்றுமைப் பொருள் எதிர்மறைக்கண்ணும் திரியாமை

௧0௮. எதிர்மறுத்து மொழியினும் தத்தம் மரபிற்
பொருள்நிலை திரியா வேற்றுமைச் சொல்லே.

(எ - து.) விதிமுகத்தான் கூறுது எதிர்மறுத்துக் கூறினும், தத்தம் இலக்கணத்தான் வரும், பொருள்நிலை திரியா; வேற்றுமை உருபுகள்.

(எ - டு.) 'மரத்தைக் குறைத்தான்' என்புழி, மரத்தைக் குறையான் எனவும், 'வேலான் எறிவான்' என்புழி, வேலான் எறியான் என்றும் வரும்.

மற்றையவற்றையும் இவ்வாறே மறுத்து ஒட்டிக் கொள்க. (௨௪)

* இந்நூற்பாவினை நன்னூலார் அப்படியே கொண்டெடுத்து மொழிந்துள்ளனர். (நன். பெயரியல் - 60)

† இவ்வெடுத்துக் காட்டு நச்சினார்க்கினியர் உரையில் கண்டது.

உருபுகளுட் சில செய்யுளுள் திரியும் எனல்

க0கூ. குஐ ஆன்என வரூஉம் இறுதி
அவ்வொடுஞ் சிவணும் செய்யு ளுள்ளே.

(எ - து.) கு, ஐ, ஆன் என வரூஉம் மூன்று உருபும் தொடர் இறுதிக்கண் நின்றவழி அகரத்தொடு பொருந்தி நிற்ற லுடைய செய்யுளுள்.

(எ - டு.) "கடிநிலை யின்றே ஆசிரி யர்க்க"

எனவும்,

"காவ லோனக் களிறஞ் சும்மே"
"களிறும் அஞ்சும் காவ லோன"

எனவும்,

"புரைதீர் கேள்விப் புலவ ரான"

எனவும் கு, ஐ, ஆன் மூன்றும் அகரமாய் வந்தவாறு காண்க. (உ௯)

எய்தியது விலக்கல்

கக0. *அவற்றுள்,
அ எனப் பிறத்தல் அஃறிணை மருங்கில்
குவ்வும் ஐயும் †இலவென மொழிப.

(எ - து.) அஃறிணை இடத்துக் குவ்வும், ஐயும் அகரத் தோடே ஆகா; மற்றையதற்கு அஃறிணைக் கண்ணும், உயர் திணைக் கண்ணும் அகரம் எய்தும்.

(எ - டு.) உள்ளம் போல வுற்றுழி யுதவும்
புள்ளியற் கலிமா வுடைமை யான."

புள்ளிதான் என அஃறிணைக்கண் நான்காவதோடு வந்தவாறு காண்க. (உ௬)

நான்கனுருபு ஏனையுருபுகளோடு மயங்கல்

ககக. இதன திதுவிற் றென்னும் கிளவியும்
அதனைக் கொள்ளும் பொருள்வயி னானும்
அதனாற் செயற்படற் கொத்த கிளவியும்

---

* அவற்றுள் என்ற தனிச் சொல் சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், கல்லாடர் ஆகியோர் கொண்ட பாடங்களில் இல்லை. இளம்பூரணர் மட்டுமே இங்ஙனம் பாடங் கொண்டுள்ளனர்.

† 'இல்லென' எனப் பாடம் கொள்வர் இளம்பூரணரும் தெய்வச் சிலையாரும்.

முறைக்கொண் டெழுந்த பெயர்ச்சொற் கிளவி
பால்வரை கிளவியும் பண்பின் ஆக்கமும் [யும்
காலத்தின் அறியும் வேற்றுமைக் கிளவியும்
பற்றுவிடு கிளவியும் தீர்ந்துமொழிக் கிளவியும்
அன்ன பிறவும் நான்கன் உருபில்
தொன்னெறி மரபின தோன்ற லாறே.

(எ - து.) இதன திது இற்று என்பது முதலாகத் தீர்ந்து மொழிக் கிளவி ஈருக வரும், ஏனை உருபுகளோடு நான்கன் உருபு மயங்குமாறு சொல்லியது.

இதனதிது இற்று என்பது: யானையது கோடு கூரிது என்பது இதனுள், இதன் என்பது யானை; அதுஇது என்பது கோடு; இற்றென்பது கூரிது என்க.

இனி, யானையது கோடு கூரிது என்புழி யானைக்குக் கோடு கூரிது எனறும், அவனைக்கொள்ளும் இவ்வணி என்புழி அவட்குக் கொள்ளும் இவ்வணி என்றும்;

அதனைற் செயப்படற் கொத்த கிளவியும்: 'அவனைற் செயத்தகும் அக் காரியம்' என்புழி 'அவற்குச் செயத்தகும் காரியம்' என்றும்; 'வாயாற் றக்கது வாய்ச்சி' என்புழி 'வாய்க்குத் தக்கது வாய்ச்சி' என்றும்;

முறைக் கொண்டெழுந்த பெயர்ச் சொல் கிளவியும்: 'ஆவினது கன்று' என்புழி 'ஆவிற்குக் கன்று' என்றும்;

பால்வரை கிளவியும்: 'கருவூரின் கிழக்கு' என்புழி, 'கருவூருக்குக் கிழக்கு' என்றும்;

பண்பின் ஆக்கமும்: 'சாத்தனின் நெடியன்' என்புழி 'சாத்தற்கு நெடியன்' என்றும்;

காலத்தின் அறியும் வேற்றுமைக் கிளவியும்: 'மாரியின் வந்தான்' என்புழி 'மாரிக்கு வந்தான்' என்றும்;

பற்றுவிடு கிளவியும்: 'ஊரிற் பற்றுவிட்டான்' என்புழி 'ஊருக்குப் பற்று விட்டான்' என்றும்;

தீர்ந்து மொழிக் கிளவியும்: 'ஊரில் தீர்ந்தான்' என்புழி 'ஊருக்குத் தீர்ந்தான்' என்றும் நான்காம் உருபு வந்தவாறு காண்க.

'அன்ன பிறவும்' என்றதனல், ஊருட் சேயன்; காட்டுள் அணியன்; ஊரிற்பெரிது கருவூர்; ஊருள் உற்றது செய்யான் என்புழி நான்காவது கொடுத்துச் சொல்லுக. (உஎ)

ஏனைய உருபுகளும் தம்முள் மயங்கும் எனல்

கக௨. ஏனை யுருபும் அன்ன மரபின
மான மிலவே சொன்முறை யான.

(எ - று.) நான்காம் உருபு அல்லாத பிற உருபும் ஒன்றன் பொருள் சிதையாமல் மயங்குதல் குற்றமில்லை வழக்கு முறையால்.

(எ - டு.) நாலது குற்றங் கூறினான், நாலைக் குற்றங் கூறினான்; அவட்குக் குற்றேவல் செய்யும், அவளது குற்றேவல் செய்யும் என ஒன்றன் பொருட்கண் ஒன்று வந்தவாறு காண்க. (௨௮)

தொழில் முதனிலை

௧௧௩. வினையே செய்வது செயப்படு பொருளே
நிலனே காலம் கருவி யென்ற
இன்னதற்(கு) இதுபய னாக வென்னும்
அன்ன மரபின் இரண்டொடுந் தொகைஇ
ஆயெட் டென்ப தொழில்முதல் நிலையே.

(எ - று.) வினைப் பெயரையும், வினைச் சொல்லையும் தோற்றுவிக்கும், உண், தின், செல், கொல், வனை என்றது முதலாகிய வினையும்; அவ்வினையைச் செய்யும் கருத்தாவும், கருத்தாவாற் செய்யப்படும் பொருளும், அது செய்யும் இடமும், அது செய்யும் காலமும், அது செய்தற்குத் துணையாகிய கருவியும் ஆக ஆறும் இன்னதற்கு இது பயன்படும் என்று சொல்லப்படும் அத்தன்மைத்தாகிய முறைமையினை உடைய இரண்டோடுந் தொக்குக் காரியத்திற்கு முன்னிற்கும் காரணம், அவ் வெட்டு என்று சொல்லுவர் ஆசிரியர்.

'வனைந்தான்' என்றவழி, வனை என்னும் வினையும், வனைதற்குக் கருத்தாவும், வனையப்பட்ட குடமும், வனைதற்கு இடமாகிய நிலமும், அத்தொழில் நிகழுங் காலமும், அதற்குக் கருவியாகிய திகிரி முதலியனவும், அதனைக் கைக்கொள்வானும், அதனைக் கொண்டதனாற் பெறும் பயனுமாக எட்டுக் காரணத்தானும் தொழில் நிகழ்ந்தவாறு காண்க.

ஒழிந்தவற்றிற்கும் இவ்வாறு விரிக்க:

இதனை வினையியலுள் கூறாது ஈண்டுக் கூறியது, தொழில் வருங்கால் வேற்றுமையோடல்லது வாராது என்றற்கு.

அவை வருமாறு :— 'அட்டான்' என்புழி, 'சாத்தன் சோற்றைக் குழிசியாற் பார்ப்பார்க்கு *மச்சி நெற் கொண்டு கூரையுள்' என்பது விளங்கும். இதனுள் எழுவாயும், இரண்டாவதும், மூன்றாவதும், நாலாவதும் ஐந்தாவதும், ஏழாவதும் வந்தவாறு காண்க. சோறு பார்ப்பாரது ஆதலின ஆறாவதூஉம் வந்தது. பிறவும் அன்ன. (௨௯)

* 'மச்சி' இதன் பொருள் விளங்கவில்லை.

மேலதற் கோர் புறனடை

௧௧௪. அவைதாம்,
*வழக்கியல் மருங்கிற் குன்றுவ குன்றும்.

(எ - து.) மேற் சொல்லப்பட்ட எட்டும் உடன் விளங்காது, வழக்கின்கட் சில தொழிற்கண் குன்றத்தகுவன குன்றி வரும்.

(எ - டு.) கொடி யாடிற்று.

இதனுள் செயப்படு பொருளும், இன்னதற்கு இது பயன் என்பதூஉம் குறைந்து வந்தது.

பிறவும் அன்ன. வழங்கியல் என்பதும் பாடம். (௩0)

ஆகுபெயரின் இலக்கணம்

௧௧௫. முதலிற் கூறும் சினையறி கிளவியும்
சினையிற் கூறும் முதலறி கிளவியும்
பிறந்தவழிக் கூறலும் பண்புகொள் பெயரும்
இயன்றது மொழிதலும் இருபெய ரொட்டும்
வினைமுதல் உரைக்கும் கிளவியொடு தொகைஇ
*அனைமர பினவே ஆகுபெயர்க் கிளவி.

(எ - து.) முதலிற் கூறும் சினையறி கிளவி முதலாக, வினை முதல் உரைக்கும் கிளவி ஈறாகக் கூறின ஏழும் ஆகுபெயர்ச் சொல் மரபின.

(எ - டு.) முதலிற் கூறும் சினையறி கிளவி: கடுத்தின்றான், புளித் தின்றான் என்பன.

சினையிற் கூறும் முதலறி கிளவி: இலை நட்டு வாழும், பூ நட்டு வாழும் என்பன.

இலைக் கொடி, பூ மரம் நட்டு வாழ்வானை என்று அறிக.

பிறந்தவழிக் கூறல்: 'குழிப்பாடி.'

குழிப்பாடி என்னும் ஊரிற் பிறத்தலாற் குழிப்பாடி என்று ஆடைக்குப் பெயராயிற்று.

பண்பு கொள் பெயர்: நீலம், சிவப்பு என்பன.

பண்பொடு பொருந்தலாற் பொருட்கு அதுவே பெயராயிற்று.

* 'அனைய மரபினவே, எனப் பாடங்கொண்டனர் இளம்பூரணர் அல்லாத ஏனைய உரையாசிரியர்கள் அனைவரும்.

இயன்றது மொழிதல்: எறி, குத்து, வெட்டு என்பன.

அவை பட்ட இடத்தையும் வடு முதலியவற்றுற் செய்கைப் பெயரா வாகச் சொல்லுதல்.

இருபெயரொட்டு: பொற்றொடி. பொன்னும் தொடியும் ஆகிய இரண்டும் அல்லாத தொடியாளை விளக்குமாகலின்.

வினைமுதல் உரைக்குங் கிளவி: தொல்காப்பியம், கபிலம், இவ்வாடை சேணிகன், கோலிகன்.

என்பன.

ஆகுபெயர் என்பது ஒன்றன் பெயர் ஒன்றற்காய் நிற்றல். (௩௧)

இதுவுமது

௧௧௬. அவைதாம்,
தத்தம் பொருள்வயிற் றம்மொடு சிவணலும்
ஒப்பில் வழியால் பிறிதுபொருள் சுட்டலும்
அப்பண் பினவே நுவலுங் காலே.

(எ - து.) மேற்கூறப்பட்ட ஆகுபெயர்கள் தாம், தம் பொருளின் நீங்காது நின்று தம் பொருளின் வேறல்லாத பொருளோடு புணர்தலும், பொருத்தமல்லாத கூற்றால் நின்று பிறிது பொருளை உணர்த்தலும் ஆகிய அவ்விரண்டிலக்கணத்தையுடைய சொல்லுமிடத்து.

கடு, புளி, என்பன: தத்தம் பொருள்வயின் தம்மொடு சிவணல்.

குழிப்பாடி, நீலம், கோலிகன் என்பன: ஒப்பில் வழியாற் பிறிது பொருள் சுட்டல். (௩௨)

ஆகுபெயரும் வேற்றுமை ஏற்றுவரும் எனல்

௧௧௭. *வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும்.

(எ - து.) அவ் வாகுபெயர்கள் ஐ முதலிய அறுவகை வேற்றுமைப் பொருண்மையிடத்தும் இயைபு உடைமையைப் பாதுகாத்தறியல் வேண்டும் ஆசிரியன்.† (௩௩)

---

* இந் நூற்பாவினை மேலைநூற்பாவின் இறுதியடியாக இணைத்துப் பாடங்கொள்வர் சேனாவரையரும் தெய்வச்சிலையாரும்.

† இதற்குப் பின்னுள்ள பகுதி கிடைக்கப்பெறவில்லை.

சொல்லதிகாரம் பழைய உரை

சூத்திர முதற்குறிப்பு அகரவரிசை

[எண் : பக்கஎண்]

[illegible]

R. 95, 147, 163 (4)

B. 55 '[illegible]

B. 75 [illegible]..

B-132 [illegible]..